தமிழ் வெளியீட்டுக் கழக வரிசை எண்–67

மகாத்மா காந்தி

(வாழ்க்கை வரலாறும்
உலகத்திற்கு விடுத்த செய்தியும்)

ஆசிரியர் :
லூயி ஃபிஷர்

தமிழாக்கம் :
சரஸ்வதி தங்கையன், எம்.ஏ., எல்.டி.

தமிழ் வெளியீட்டுக் கழகம்
தமிழ்நாடு–அரசாங்கம்

First Edition—February, 1965

B.T.P. No. 67

Gandhi

Louis Fischer

Translation

Saraswathi Thangayyan

© Bureau of Tamil Publications

Price Rs. 3-25

This translation of 'Gandhi' by Louis Fischer is published by arrangement with Mr. Louis Fischer.

Printed at

Kabeer Printing Works,

Madras-5.

அணிந்துரை

(திரு. எம். பக்தவத்ஸலம், தமிழக முதலமைச்சர்)

தமிழ்நாடு அரசாங்கம், சில ஆண்டுகளுக்கு முன்னர்க் கல்லூரித் தமிழ்க் குழுவொன்றை நிறுவி அதன்மூலம் கல்லூரி மாணவர்கட்குத் தேவையான பல தமிழ் நூல்களை வெளியிட்டுவந்தது. தமிழை ஆட்சி மொழியாக அரசாங்கம் ஏற்றுக்கொண்டபிறகு, தமிழ் மொழிக்கு ஆக்கம் தேடுகின்ற முறையில், இன்னும் மகத்தான அளவில் தமிழ் நூல்கள் வெளிவரவேண்டும் என்ற கருத்தில் தமிழ் வெளியீட்டுக் கழகம் 1962-ல் நிறுவப்பெற்றது.

உலகின் பிற பகுதிகளிலுள்ள மக்களின் அறிவு வளர்ச்சிக்குக் குறையாமல் தமிழ் மக்களும் அறிவு வளர்ச்சி பெறவேண்டுமானல், பிற மொழியிலுள்ள நூல்களைப் படிக்க முடியாதவர்கள் தமிழின்மூலமே எல்லாவற்றையும் கற்கக்கூடிய சூழ்நிலை ஏற்படவேண்டும். இந்த எண்ணத்தின் அடிப்படையிலேயே தமிழ் வெளியீட்டுக் கழகம் கல்லூரி மாணவர்க்குரிய நூல்களை வெளியிடுவதுடன், பொதுமக்களுக்கும் பயன்படுகின்ற முறையில் வரலாறு, அரசியல், உளவியல், பொருளாதாரம், புவியியல், விஞ்ஞானக் கலைகள் ஆகிய பல துறைகளிலும் பல்வேறு நூல்களை வெளியிட முனைந்துள்ளது.

அத்தகைய முயற்சிகளுள் ஒன்ருக மகாத்மா காந்தி என்ற இந் நூல் தமிழ் வெளியீட்டுக் கழகத்தின் 67ஆவது வெளியீடாக வருகிறது.

கல்லூரித் தமிழ்க் குழுவின் சார்பில் வெளியான 35 நூல்களையும் சேர்த்து, இதுவரை 102 நூல்கள் தமிழ் வெளியீட்டுக் கழகத்தால் வெளியிடப்பெற்றுள்ளன. இந் நூல்களை வாங்கிப் படிப்பதன்மூலம் தமிழ் மக்கள் மேலும் வளர்ச்சி பெறுவார்கள் என்று நம்புகிறேன்.

எம். பக்தவத்ஸலம்

முன்னுரை

‘ ஒன்ருக நல்லது கொல்லாமை, மற்றதன்
பின்சாரப் பொய்யாமை நன்று ’

என்பது வள்ளுவர் வாக்கு. காந்தியடிகளின் கொள்கைகளும் அவையே யாகும். அவர் நடத்திய சுதந்திரப் போரில் உபயோகித்த ஆயுதங்கள் அஹிம்சையும், பொய்யாமையுமேயாகும். அவர் கண்ட வெற்றியோ மகத்தானது.

காந்தி, செயலாற்றுவதில் அறநெறி முறைகளையே கையாண்டார். வெற்றியைவிடச் செயலாற்றும் விதமே முக்கியம். நல்ல முறையைக் கையாண்டு சிறந்த வெற்றி பெறவேண்டும். தோல்வியேயாயினும் செய்யும் முறை பழிப்புக்கு இடந்தரக்கூடாது. இவ்வாறு அவர் வினைத் தூய்மையையே முக்கியமாகக் கருதினுர்.

‘ கடிந்த கடிந்தொரார் செய்தார்க்கு அவைதாம்
முடிந்தாலும் பீழை தரும் ’

என்பதும் வள்ளுவர் வாசகம்.

இம் மகானின் வரலாற்றைப் பலர் விரிவாக எழுதியிருக்கின்றனர். அவரே தமது வாழ்க்கை வரலாற்றை எழுதியிருக்கிறார். நான் மொழி பெயர்க்கத் துணிந்த இந் நூல் அமெரிக்கராகிய திரு. லூயி ஃபிஷர் அவர்களால் எழுதப்பெற்றது. வழக்கமாக ஒருவருடைய வாழ்க்கை வரலாறு பிறப்பிலிருந்து ஆரம்பிக்கும். ஆனுல், இந் நூல் ஆசிரியர் காந்தியடிகளின் வரலாற்றை அவர் தகனக் கிரியையிலிருந்து தொடங்கி மிக அழகாகச் சித்திரிக்கிருர். காந்தி அடிகள் எப்பொழுதும் ‘ ஹே, ராமா ’ என்று உச்சரித்துக்கொண்டிருந்ததால் அவர் ஒரு தீவிர வைஷ்ணவர் என்று பலர் கருதினர். ஆனுல், அவர் பரந்த சமய நோக்கம் உள்ளவர் என்பதைக் கிறிஸ்தவராகிய லூயி ஃபிஷர் தெளி வாக எடுத்துக் காட்டியிருக்கிருர். ஆசிரியர் அண்மையில் எழுதிய ‘Essential Gandhi’ என்னும் நூலில், ‘ கடந்த பத்தொன்பது நூற் ருண்டுகளில் தோன்றியவர்களில் காந்திதான் பெரியவர் ’ என்று கூறி யுள்ளார். ஆங்கிலம் தெரியாத நம் மக்களும் இந் நூலில் காந்தியடிக ளின் வரலாற்றை அறிந்து பயனடையுமாறு இந்நூலைத் தமிழில் ஆக்கி யுள்ளேன்.

சரஸ்வதி தங்கையன்

பொருளடக்கம்

அத்தியாயம் பக்கம்

மடல் I

வாழ்க்கை வரலாறும் உலகிற்கு அவர் விடுத்த செய்தியும்

1. உலகத்தின் கண்ணீர் ... 1
2. தெளிவில்லாத பையன் ... 3
3. லண்டனில் காந்தி ... 9
4. வருங்காலத்தை உருவாக்கிய இரு நிகழ்ச்சிகள் ... 17
5. நிறத்துவேஷம் ... 21
6. தாக்குதலின்போதும் தைரியம் ... 24
7. மாற்றம் ... 28
8. ஆத்ம சக்தி அல்லது சத்தியாக்கிரகம் ... 37
9. சிறந்த வெற்றி ... 45

மடல் II

இந்தியாவில் காந்தி

10. நன்ருகக் கவனித்தல் ... 58
11. மகாத்மா காந்தியும் பிரிட்டிஷாரும் ... 66
12. படுகொலை ... 75
13. சிறைக்குச் செல்லுதல் ... 81
14. காந்தி உண்ணுவிரதம் இருக்கிருர் ... 90
15. மாஸ்கோவுக்கு மறுமொழி ... 100
16. உப்புச் சத்தியாக்கிரகம் ... 118
17. அரை நிர்வாணப் பக்கிரி ... 130
18. குறைவான உடைகளுடன் லண்டனில் காந்தி தோன்றினர் ... 132
19. கடவுளின் குழந்தைகள் ... 137
20. மந்திரவாதி ... 149
21. சொந்த விஷயம் ... 159
22. இயேசு கிறிஸ்துவும் மகாத்மா காந்தியும் ... 166

அத்தியாயம்		பக்கம்
23. வின்ஸ்டன் சர்ச்சிலும் மகாத்மா காந்தியும்	...	171
24. காந்தியுடன் நான் கழித்த ஒரு வாரம்	...	176
25. ஏமாற்றமும் அழற்சியும்	...	187
26. ஜின்னுவும் காந்தியும்	...	191

மடல் III

வெற்றியும் சோகமும்

27. மனிதனிடம் தெய்வீகத்தைக் காண முயல்வது	...	198
28. பிரிவினைக்கு முன்	...	210
29. கூறியது கூறல்	...	218
30. இரு நாடுகளின் தோற்றம்	...	220
31. காந்தி அவருடைய தோட்டத்தில் களைபறித்தல்	...	226
32. வெறுப்புக்கிடையே அன்பு	...	228
33. சாகத் துணிந்தவருக்கே வெற்றி	...	235
34. பிரார்த்தனைக்கு முன் மரணம்	...	241

மடல் I

வாழ்க்கை வரலாறும் உலகிற்கு அவர் விடுத்த செய்தியும்

1. உலகத்தின் கண்ணீர்

புது டில்லியை அடுத்த யமுனை நதிக்கரையில் ஏறத்தாழப் பத்து லட்சம் மக்கள் வெயிலைப் பொருட்படுத்தாமல், ஒரு சவ ஊர்வலம் இடுகாட்டிற்குச் செல்லுவதைக் காண்பதற்காகக் காத்துநின்றனர். பெண்களின் வெள்ளைப்புடவை, ஆண்களின் வெள்ளையுடுப்பு, குல்லாய்கள், தலைப்பாகைகள் ஆகியவற்றின் வெள்ளை நிறமே எங்கும் மிகுதியாகக் காணப்பட்டது.

ஆற்றின் கரையையொட்டிச் சில கஜ தூரத்தில் கல், செங்கல், மண் ஆகியவற்றால் ஒரு புதிய தகன மேடை கட்டப்பட்டிருந்தது. எட்டடிச் சதுரத்தில் இரண்டடி உயரத்தில் கட்டப்பெற்ற அம் மேடையில் வாசனைத் திரவியங்கள் கலந்த சந்தனக் கட்டைகள் அடுக்கப் பெற்றிருந்தன. அந்தச் சிதையில், வடபக்கம் தலையை வைத்து, மகாத்மா காந்தியின் பூதவுடல் கிடத்தப்பட்டிருந்தது; இதே நிலையில் தான் பகவான் புத்தரும் பரிநிர்வாணம் எய்தினார்.

சரியாக மாலை 4¾ மணிக்கு மகாத்மாவின் மூன்றாவது மகனாகிய ராம்தாஸ் சிதைக்குத் தீ மூட்டினார். கட்டைகள் பற்றியெரிந்தன; அந்த மாபெரும் கூட்டம் பெருமூச்செறிந்தது; மகளிர் அழுதனர்; ஆண்கள் வெதும்பினர்; மரக்கட்டைகள் ஒலியெழுப்பிக் கொழுந்துவிட் டெரியத்தொடங்கி, ஒரே முழுநெருப்பாகப் பற்றியது.

எங்கும் ஒரே அமைதி. காந்தியின் சடலம் சாம்பலாகிக்கொண் டிருந்தது.

இதற்கு முதல் நாள், அதாவது, 1948ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 30ஆம் நாள் இந்தியாவின் தலைவரான மோகன்தாஸ் கரம்சந்த் காந்தியை ஓர் இளைஞன் சுட்டுக்கொன்றுவிட்டான்.

'காந்தியை நான் நேரில் கண்டதில்லை; அவருடைய மொழியும் எனக்குத் தெரியாது; அவருடைய நாட்டில் நான் கால் வைத்ததுகூட இல்லை; என்றாலும், என்னுடைய நெருக்கமான ஓர் உறவினரை இழந்தால் ஏற்படக்கூடியதைப்போன்ற துன்பத்தை அடைகின்றேன். இந்த அபூர்வ மனிதரின் மரணத்தால் உலகம் முழுவதுமே பெருந் துயரக் கடலில் ஆழ்ந்துவிட்டது' என்று லியோன் பிளம் என்ற ஃபிரெஞ்சு நாட்டு முன்னாள் முதலமைச்சர் கூறினார்.

அதுவரையில் இருந்ததுபோலவேதான் காந்தி இறக்கும்பொழுதும் இருந்தார்; பொன், பொருள், பட்டம், அதிகாரப்பதவி, பல்கலைக் கழகப்பட்டம், விஞ்ஞானக் கண்டுபிடிப்பால் ஏற்படும் புகழ் ஆகிய யாதொன்றும் இல்லாமல் ஒரு சாதாரணக் குடிமகனாகவே இருந்தார்; என்றாலும் சோவியத் அரசாங்கத்தைத் தவிர, ஏனைய அரசாங்கங்களின் தலைவர்கள், எல்லா மதங்களின் தலைமை குருமார்கள் ஆகிய அனைவரும், ஒருமுழத் துண்டுடன் 78 ஆண்டுகள் வாழ்ந்த இந்த மாநிற மனிதருக்கு இறுதி மரியாதை செலுத்தினர். ஜனாதிபதி ட்ரூமன், பிரிட்டிஷ் அரசர், ஃபிரெஞ்சு ஜனாதிபதி, காண்டர்பெரி ஆர்ச்பிஷப், போப் பையஸ், லண்டன் நகரத் தலைமை ராபி, திபேத்தின் தலாய்லாமா ஆகியோருட்பட மூவாயிரத்திற்கும் மேற்பட்ட பிறநாட்டுப் பெருமக்கள் தாமே இந்தியாவுக்கு அனுதாபச்செய்தி அனுப்பினர். ஐக்கிய நாடு களின் பாதுகாப்புச்சபை காந்தியடிகளுக்கு இறுதி மரியாதை செலுத்து வதற்காகத் தன்னுடைய நடவடிக்கைகளை நிறுத்திவைத்தது. பிரிட்ட னின் பிரதிநிதி பிலிப் நோயல்பேக்கர் 'திக்கற்றவர்க்கும், துணை யற்றவர்க்கும், வாழ்வில் அனைத்தையும் இழந்தவர்க்கும் உறுதுணையாக வாழ்ந்தவர் ஆவார்' என்று காந்தியைப்பற்றிப் புகழ்ந்துபேசினார். மேலும், அவர் 'காந்திஜியின் மாபெரும் சாதனை இனித்தான் நடை பெறப்போகின்றது' என்றும் கூறினார். பாதுகாப்புச்சபையில் சமாதானத்தின்மாட்டு காந்திஜி கொண்டிருந்த எல்லையற்ற ஈடுபாட்டை யும் அவருடைய ஆன்மீக குணங்களையும் பிற பிரதிநிதிகள் வாயாரப் புகழ்ந்தனர்.

ஐக்கியநாடுகள்சபை தன் கொடியை அரைக் கம்பத்தில் அன்று பறக்கவிட்டது.

ஆம்! மனித சமுதாயமே தன் கொடியை அரைக் கம்பத்திற்கு இறக்கியது.

மகாத்மாவின் மறைவைக்குறித்துத் துக்கம் கொண்டாடிய பலர் அவருடைய பண்பாடுகளை நன்கு அறிந்திருந்தனர். ஐக்கிய அமெரிக்கா

வின் செனட்டர் ஆகிய ஆர்தர் எச். வாண்டன்பெர்க் ‘காந்தி, பணிவு, சத்தியம் ஆகியவற்றை மாபெரும் சாம்ராஜ்யங்களைவிட வலிமையுடையனவாகச் செய்துவிட்டார்’ என்று கூறினர். பிரிட்டிஷ் அரசியல் நிபுணராகிய சர் ஸ்டாஃபோர்டு கிரிப்ஸ், ‘உலோகாயதப் பொருள்களைவிட ஆன்மீக பலம் எவ்வளவு சக்திவாய்ந்ததென்பதைப் பிறர் நம்பும் முறையிலும் ஆணித்தரமாகவும் எடுத்துக்காட்டிய இவரைப்போன்ற மற்ெருரு மனிதரை இதற்கு முன்னரும் சமீபகாலத்திய வரலாற்றிலும் நான் அறிந்ததில்லை’ என்று கூறினர். ஐக்கிய அமெரிக்காவின் உள் துறைச் செயலாளராகிய ஜெனரல் ஜார்ஜ் C. மார்ஷெல், உலக மக்களின் துயரத்தை எடுத்துக்கூறமுடியாமல் சொற்கள் தடுமாறும் நிலையில் ‘மனித சமுதாயத்தின் மனச்சான்றின் எதிரொலி ஆவார் மகாத்மா’ என்று கூறினர்.

கொலையாளியின் மூன்று குண்டுகளுக்கு இரையாகி, காந்திஜி வீழ்ந்தபோது மக்களினத்தின் மனச்சான்று தன் பிரதிநிதியை இழந்துவிட்டது என்ற உண்மையை ஆண், பெண், குழந்தைகள் உள்ளிட்ட அனைவரும் அறிந்தனர்; அன்றி உணர்ந்தனர். ஓர் ஏழை மனிதர் இறந்ததால் மக்கள் சமுதாயமே வறுமையுற்றது. கருணை, நேர்மை, பணிவு, அஹிம்சை என்ற கருவிகளைமட்டும் வைத்துக்கொண்டு உள் நாட்டிலும் வெளிநாட்டிலும் மாபெரும் பகைவர்களை எதிர்த்துவென்ற அவரைப்போன்றோர் அவருக்கு முன்பும் தோன்றியதில்லை; பின்னரும் தோன்றவில்லை. அக் கருவிகளைக் கொண்டுமட்டும் பல்வேறு வெற்றிகளைப் பெற்றுர் அவர். புதுமையான வழிகளைக் கையாண்டு, புதுமையான வெற்றிகளைப்பெற்ற ஒரு சிறப்பே காந்தியடிகளின் வரலாறு ஆகும்.

2. தெளிவில்லாத பையன்

மூவாயிரம் ஆண்டுகளுக்குமுன் காந்தி இந்தியாவில் வாழ்ந்திருந்தால் அவருடைய பிறப்பு, வளர்ப்பு எல்லாம் புராணமாக எழுதப்பட்டிருக்கும். அவரது இளமையும் வாலிபமும் அதிசயக் கதைகளாகக் கூறப்பட்டிருக்கும். ஆனல், பத்தொன்பதாம் நூற்றுண்டில் வாழ்ந்ததால் அவர் சாதாரண மனிதர் என்றும், அவருடைய குழந்தைப் பருவத்தில் சிறப்பு ஒன்றும் இல்லை என்றும், படிப்பில் சாதாரண மானவர் என்றும், தமது வேலையில் திறமையற்றவர் என்றும் தெரிகிறது. ‘விளையும் பயிர் முளையிலே தெரியும்’ என்றபடி மோகன்தாஸ் சிறுவராக இருந்தபொழுதே மகாத்மாவிற்குரிய ஒழுக்கங்களை மேற்கொண்டிருந்தார் என்றும் பிற்காலத்தில் அவர் மகாத்மாவாக விளங்குவார் என்றும் ஒருவரும் அப்பொழுது கூறியிருக்க முடியாது. அவருக்கு அப்பொழுது திறமையோ அறிவுக்கூர்மையோ இருந்ததாகத் தெரியவில்லை.

1869ஆம் ஆண்டு அக்டோபர் இரண்டாம் தேதி மோகன்தாஸ் கரம் சந்த் காந்தி போர்பந்தரில் (Porbandar) பிறந்தார். போர்பந்தர் மேற்கு இந்தியாவில் கத்தியவார் (Kathiawar) தீபகற்பத்தில் உள்ள ஒரு சிறிய கடற்கரைப்பட்டினம். கத்தியவார் தீபகற்பம், பம்பாய்க்கும் கராச்சிக்கும் நடுவில் இருக்கிறது. கத்தியவார் அக் காலத்தில் ஐரோப்பிய நாகரிகத்திற்கு அப்பாற்பட்டிருந்தது. அது பல பட்டினங் களாகப் பிரிக்கப்பட்டுச் சிற்றரசர்களால் ஆளப்பட்டுவந்தது. அச் சிற் றரசர்கள் மக்களிடம் ஏகாதிபத்தியக்காரர்கள்போல் நடந்துவந்தாலும் பிரிட்டிஷாருக்கு நடுங்கியவர்களாக இருந்தார்கள். 1872ஆம் ஆண்டு மக்கள் கணக்கெடுப்பின்படி போர்பந்தரில் 72,077 மக்கள் வாழ்ந் தனர். ராஜ்கோட்டின் (Rajkot) ஜனத்தொகை 36,700. வாங்கனேர் (Wankaner) ஜனத்தொகை 28,750. வெவ்வேறு காலங்களில் காந்தியின் தந்தை கரம்சந்த் காந்தி இம் மூன்று சமஸ்தானங்களிலும் அரசர் அல்லது ராணு எனப்படும் தலைவருக்கு முதன் மந்திரியாக இருந்திருக்கிருர்.

காந்தி பிற்காலத்தில் எழுதியபொழுது தம்முடைய தந்தை 'படிப்பு இல்லாதவர்; ஆனல், அனுபவம் மிக்கவர். சரித்திரம், பூகோளம் ஆகியவைபற்றி அறியாதவர். ஆனல், நேர்மையானவர்; பாரபட்ச மில்லாதவர் என்று குடும்பத்திலும் வெளியிலும் பெயர் வாங்கியவர். தம் உறவினரிடம் அதிகப் பற்றுள்ளவர்; தீரமானவர்; சத்தியசீலர்; தயாள குணமுள்ளவர். ஆனல், சிறிது முன்கோபி' என்று குறிப்பிட்டுள்ளார்.

அரசியல்வாதியாகிய கரம்சந்த், தெய்வபக்தியுள்ள, படிப்பில்லாத புத்லிபாய் (Putlibai) என்ற இந்துப்பெண்ணை மணந்தார். மோகன் தாஸ் அவர்களுடைய நாலாவது பிள்ளை; கடைசிப் பிள்ளை. அவருக்குத் தமது தாயின் தெய்வபக்தியும் தவ ஒழுக்கமும்தான் எப்பொழுதும் நினைவுக்கு வரும். அந்த அம்மையார் தினம் கோவிலுக்குச் சென்று சுவாமி தரிசனம் செய்துவிட்டுவருவார். அன்றுட பூஜையை முடிக்காமல் உணவருந்தமாட்டார். நீண்ட கால விரதங்கள் இருக்கவும் அவ் வம்மையார் சலிப்படைந்ததில்லை. கிறிஸ்தவர்களின் 'லெந்து' என்னும் நாற்பது நாள் விரதத்தைப்போன்ற சாதுர்மாஸ்ய விரதம் வருஷந்தோறும் மாரிக்காலத்தில் வரும். அவ் விரதத்தை நான்கு மாதங்கள் அனுசரிக்கவேண்டும். அக் காலத்தில் ஒரு நாளைக்கு ஒரு வேளை உணவுக்குமேல் உட்கொள்ளுவது இல்லை. அது போதாதென்று ஒரு சாதுர்மாத விரதத்தின்போது அவர் ஒன்றுவிட்டு ஒருநாள் உபவாசமும் இருந்துவந்தார்.

அக் குடும்பம் நல்ல நிலையில் இருந்தது. கரம்சந்த் கழுத்தில் தங்கச்சங்கிலி அணிந்திருந்தார். அவருக்குப் போர்பந்தர், ராஜ்கோட், குதியாளு முதலிய இடங்களில் வீடுகள் இருந்தன. மோகன்தாஸின்

சகோதரர் கையில் கனத்த தங்கக்காப்பு அணிந்திருந்தார். மோகன் தாஸுக்குத் தனியாக ஒரு தாதியும் இருந்தாள். 'கான்செட்டிஞ' என்ற கையிசைக் கருவியும் அவருக்கு வாங்கிக்கொடுத்திருந்தார்கள். அவர் போர்பந்தர் பள்ளியில் படிக்கும்போது பெருக்கல் வாய்பாட்டைப் புரிந்துகொள்ள மிகவும் சிரமப்பட்டார். 'அப்பொழுது நான் மந்த புத்தியுள்ளவனுக இருந்தேன். எனக்கு ஞாபகசக்தி மோசமாக இருந்தது' என்று ஆரம்பப்பள்ளி மாணவனுக இருந்ததுபற்றிக் காந்தியே கூறுகிருர். ஓர் ஆண்டுக்குப் பிறகு அவர் குடும்பம் ராஜ்கோட்டுக்கு வந்தது. அப்போது 'நடுத்தர மாணவராக' ஆனுல், காலந்தவருதவராக இருந்தார். இளமையில் மிகவும் கூச்சமுள்ளவராகவே இருந்திருக்கிருர். 'என் புத்தகங்களும் என் பாடங்களுமே எனக்கு உற்ற தோழர்கள்' என்று பெரியவரானபின் அவர் சொன்னுர். பள்ளி முடிந்ததும் வீட்டிற்கு ஓடி வந்துவிடுவார். எவருடனும் பேசத் தைரியமும் இல்லே; விருப்பமும் கிடையாது. வழியில் யாராவது பரிகாசம் செய்துவிடுவார்களோ என்று பயப்படுவார்.

சிறிது வயதானதும் தம்முடன் சேர்ந்தவர்களோடு பழகினுர். அவர்களோடு தெருக்களிலும் கடற்கரையிலும் விளேயாடினுர். பம்பரம் சுற்றுவதும் ரப்பர் பலூன் ஊதி விளேயாடுவதும் அவருடைய பொழுது போக்கு. அவர் அமைதியாகவும் பணிவாகவும் இருந்தார். 'பெரியவர்களின் கட்டளேகளேத் தவருமல் நிறைவேற்றுவேனே தவிர, அவர்களுடைய குற்றங் குறைகளேக் கவனிக்கவேமாட்டேன்' என்று சொல்லியிருக்கிருர். இருந்தபோதிலும், அவர் பன்னிரண்டாவது வயதில் மறைவாகப் புகைபிடிக்கத்தொடங்கினுர். பெற்ருேரிடத்தும் தமையன்மாரிடத்தும் 'சிகரெட்' வாங்கப் பணம் திருடவும் தொடங்கினுர்.

ஒரு சமயம் காந்தியும் அவரது வாலிப உறவினரும் பெற்ருேரின் கண்டிப்பிலிருந்து தப்புவதற்குத் தற்கொலே செய்துகொள்வதே வழி என்று தீர்மானித்தனர். ஊமத்தைவிதைகள் விஷமுள்ளவையென அறிந்து, அவ் விதைகளுடன் கோவிலில் போய்ச் சாவது என்று முடிவு செய்துகொண்டு கோவிலுக்குச் சென்றனர். இறுதி நிமிஷத்தில் இருவருக்கும் சாவதற்குத் துணிவு இல்லே. தன்மானத்திற்காகக் கடைசியில் ஆளுக்கு இரண்டு மூன்று விதைகளே விழுங்கிவிட்டு வீட்டிற்குத் திரும்பினர்.

இவர் இளம் வயதிலேயே முக்கியமான விஷயங்களேக் கவனிக்கும்படி நேரிட்டது. பதின்மூன்று வயதுப் பள்ளி மாணவனுக இருக்கும்போதே அவருக்குத் திருமணம் முடிந்தது. மணப்பெண்ணுகிய கஸ்தூரிபாவுக்கும் பதின்மூன்று வயதுதான். அவர்கள் பெற்ருேர்கள் திருமணத்தை ஒழுங்குபண்ணினுர்கள். திருமண ஏற்பாடுகள்

எல்லாம் முடிந்தபின்புதான் மணமக்களுக்கு அச் செய்தி தெரிவிக்கப் பட்டது. 'முதல் இரவில் நான் எப்படி எல்லாம் நடந்துகொள்ள வேண்டும் என்பதைப்பற்றி என் அண்ணன் மனைவியார் எனக்கு முழு போதனையும் செய்து வைத்திருந்தார்' என்று அந்தச் சம்பவம் நடந்து நாற்பது ஆண்டுகளுக்குப்பிறகு காந்தி எழுதியிருக்கிறார். 'என் மனைவிக்குச் சொல்லிக்கொடுத்தது யார் என்று எனக்குத் தெரியாது. இருவருக்கும் நடுக்கம்தான். அண்ணன் மனைவி சொல்லிக்கொடுத்தது அதிகம் பயன்படவில்லை. இத்தகைய காரியங் களில் சாதாரணமாக எந்தவிதமான போதனையும் தேவையில்லை ; முன் பிறவியின் அனுபவங்களே போதும்.'

'இரு சூதுவாதற்ற குழந்தைகள் முற்பிறவியின் அனுபவத்தைத் துணையாகக்கொண்டு தம்மையுமறியாமல் வாழ்க்கைக்கடலில் இறங் கினர்' என்று பால்ய விவாகத்தைக் கண்டித்து எழுதினார். இந்தியா வில் பெரிய குடும்பங்களாக—பெற்றோர், அவர்களுடைய மக்கள், பேரப்பிள்ளைகள் என்று—சில வேளைகளில் முப்பது பேருக்கு மேல் ஒன்றாகச்சேர்ந்து ஒரு வீட்டில் வாழும் வழக்கம் இருந்தது. அக் காலத்தில் காந்தி, கஸ்தூரிபாபோன்ற இளம் புது மணமக்களுக்குத் தட்டுமுட்டுச் சாமான்கள், தனி அறை வேண்டுமென்ற கவலை வேண்டிய தில்லை. ஆகையால் சிறு வயதிலே திருமணம் முடிப்பது சாத்தியமாக இருந்தது. (பிற்காலத்தில் திருமண வயது பிரிட்டிஷ் அரசாங்கத்தால் சட்டமூலம் உயர்த்தப்பட்டது.)

'கணவன் என்ற அதிகாரத்தை நான் உடனே மேற்கொண்டு விட்டேன்.' என்று காந்தி பெரியவரானபோது நினைத்துப்பார்த்துச் சொன்னார். 'என் அனுமதியின்றி கஸ்தூரிபா வெளியே போகக் கூடாது என்று கட்டுப்பாடு விதித்தேன். ஆகையால் பதின்மூன்று வயது கஸ்தூரிபா தெருவில் விளையாடப்போக பதின்மூன்று வயதான கணவனின் அனுமதியைக் கேட்கவேண்டும். பெரும்பாலும் 'கூடாது' என்ற பதிலே வரும். ஏனெனில் மனைவிமேல் அவருக்குப் பொறாமை. கஸ்தூரிபாவும் தாம் விரும்பியபோது, தாம் விரும்பிய இடங்களுக்குப் பிடிவாதமாகச் சென்றுகொண்டிருந்தார். அதனால் அவர் கணவருக்கு ஆத்திரமும் அதிகரித்தது. இதன் விளைவாகத் தம்பதிகள் இருவரும், ஒருவருக்கொருவர் பல நாட்கள் பேசாமல் இருந்து விடுவதும் உண்டு.

'அக் காலத்தில் நான் திருடர்கள், பாம்புகள், பிசாசுகள் முதலிய வைகளுக்குப் பயந்தேன். இரவில் வீட்டைவிட்டு வெளியே செல்ல மாட்டேன். என் மனைவிக்கு அந்தப் பயம் கிடையாது. ஆகையால், என்னைப்பற்றி எனக்கே வெட்கமாயிருந்தது' என்று காந்தி பிற் காலத்தில் கூறியிருக்கிறார். காந்தி குள்ளமாகவும் மெலிவாகவும் இருந்தார். மேல் வகுப்புகளில் தேகப்பயிற்சியும் கிரிக்கெட் விளையாட்

டும் கட்டாயமாக்கப்பட்டிருந்தன; ஆனால், அவருக்கு அவைகளில் விருப்பம் இல்லை. 'திறந்த வெளியில் நெடுந்தொலைவு நடப்பது ஆரோக்கியத்துக்கு நல்லது என்று நான் புத்தகங்களில் படித்திருந்தேன். இதனால் அப்பழக்கத்தை ஏற்படுத்திக்கொண்டேன். இதன் பயனாக என் உடலும் நன்கு வலுப்பெற்றது' என்றார்.

அவர் தம்மைவிடப் பலமுள்ள பெரிய மாணவர்களைப் பார்த்துப் பொறாமைப்பட்டார். ஷேக் மெகதாப் (Sheik Mehtab) என்னும் முஸ்லிம் பையன் வேகமாக நீண்டதூரம் ஓடுவான். அற்புதமாய் நீளத்தையும் உயரத்தையும் தாண்டுவான். அவற்றைப்பார்த்து காந்தி பொறாமைப்படுவதுண்டு. ஷேக் மெகதாப் தான் உயிருள்ள பாம்பைக் கையில் பிடிக்கமுடியும் என்றும் திருடனுக்கும் பிசாசுக்கும் தான் பயப்படுவது இல்லை என்றும் கூறும்போது காந்தி பிரமித்துப் போனார். ஷேக் மெகதாபின் வீரத்திற்குக் காரணம் புலால் உண்டது தான் என்று அடிகள் நினைத்தார். காந்தியின் மதக்கோட்பாட்டின்படி அவர் புலால் உண்ணக்கூடாது. ஆதலால் அவர் அதைக் கையால் தொட்டதே இல்லை.

பிரிட்டிஷ் ஆட்சி கத்தியவாரில் மறைமுகமாக நடந்தாலும், காந்தியின் பள்ளித் தோழர்கள் பிரிட்டிஷ் ஆட்சியை எதிர்க்கத்தொடங்கினர். அவர்களுடைய திறமையைப் போற்றவும் செய்தார்கள். இது சம்பந்தமாகப் பின்வரும் கருத்துள்ள பாட்டையும் பாடினார்கள். 'பிரமாண்டமான ஆங்கிலேயனைப் பார். சின்னஞ் சிறு இந்தியனை அவன் ஆளுகிறான். காரணம் அவன் புலால் உண்பதால் ஐந்துமுழ உயரம் இருக்கிறான்.'

பிரிட்டிஷாரை விரட்டவேண்டுமென்ற எண்ணத்தாலோ அல்லது பலசாலியாகவும் தைரியசாலியாகவும் ஆகவேண்டுமென்ற எண்ணத்தாலோ காந்தி ஷேக் மெகதாபின் வலையில் விழுந்தார். ஆற்றங்கரையில் மறைவான ஓர் இடத்திற்குப்போய் ஷேக் கொண்டுவந்த ஆட்டிறைச்சியை மென்று மென்று இறுதியில் காந்தி விழுங்கிவிட்டார். அதன் காரணமாக ஆரோக்கியக் குறைவு ஏற்பட்டது. அன்று இரவு தூங்கும்போது, உயிருள்ள ஓர் ஆடு தம் வயிற்றுக்குள்ளிருந்து கத்துவதுபோல அடிக்கடி கனாக்கண்டார். ஆனாலும், மாமிசம் உண்பது ஒரு கடமை என்று கருதினார். ஓராண்டுக்காலமாக இப்படி இரகசியமாக ஷேக்குடன் புலால் சாப்பிட்டுவந்தார். மறைத்துச் சாப்பிடும் இச்செய்கை அவரை உறுத்திக்கொண்டே இருந்தது. ஆகையால் பெற்றோர் காலத்திற்குப்பின் புலாலைப் பகிரங்கமாகச் சாப்பிடலாம் என்று அப் பழக்கத்தை விட்டுவிட்டார். மதத்தின்மேல் ஏற்பட்ட வெறுப்பின் காரணமாகவே காந்தி புலால் உண்ணத் தொடங்கினார். கோவிலிலுள்ள பகட்டும் ஆடம்பரமும் அவருக்குப்

பிடிக்கவில்லை. அவருக்குக் கடவுளிடம் நம்பிக்கை இல்லை என்று அவரே ஒப்புக்கொண்டார். உலகத்தை ஆக்கியது யார்? அதை நடத்துபவர் யார்? என்ற வினுக்களுக்கு ஒருவரும் அவருக்குச் சரியான விடை அளிக்கவில்லை. அவர் படித்த வேதப் புத்தகங்களிலும் அதைப்பற்றி ஒன்றும் கூறப்படவில்லை. அதனுல் அவர் மனம் 'நாஸ்திகக்' கோட்பாட்டை நோக்கித் திரும்புவதுபோல் இருந்தது. காந்தியின் தந்தைக்கு முஸ்லிம், பார்ஸி, ஜைன சமயங்களைச் சேர்ந்த நண்பர்கள் உண்டு. அவர்கள் அவர் தந்தையுடன் தங்கள் மதங்களைப் பற்றிப் பேசினர். காந்தி எப்பொழுதும் அவர்கள் கூறுவனவற்றை மதித்துச் சிரத்தையுடன் கேட்டார். சீர்திருத்தப்பட்ட இந்து மதமே ஜைனம். எவ்வுயிரையும் கொல்லக்கூடாது என்பது அதன் சித்தாந்தம். ஜைனசமயத் துறவிகள் சுவாசிக்கும்போது தெரியாமல் ஏதாவது சிறு பூச்சியை நுகர்ந்துகொல்வதைத் தவிர்க்க மூக்கில் ஒரு வலை கட்டியிருப்பார்கள். நடக்கின்றபொழுது ஏதாவது பூச்சி புழுக்களின்மீது கால்களை வைத்து நசுக்கிக் கொன்றுவிடக்கூடாது என்று அவர்கள் இருட்டியபின் வெளியே நடக்கவும்மாட்டார்கள். கத்தியவாரில் ஜைன மதம் பரவலாக வேரூன்றி இருந்தது. எப்பொழுதுமே சகிப்புத் தன்மையுள்ள காந்தி இத் தருணத்தில் புத்த மதத்திலும் ஜைன மதத்திலுமுள்ள நல்ல அம்சங்களைக் கிரகித்துக்கொண்டார்.

காந்தியின் தந்தை 1885ஆம் ஆண்டில் இறந்தார். பல வருடங்கள் அவர் நோய்வாய்ப்பட்டிருந்ததால் குடும்ப வருமானமும் குறைந்துவிட்டது. சொத்து ஒன்றும் இல்லையென்றே சொல்லலாம். காந்தியின் தொழில்பற்றிய கேள்வி எழுந்தது. காந்திக்கு மருத்துவம் படிப்பதில் ஆசை. 'பிணங்களை அறுத்துச்சோதிப்பது வைணவர்களாகிய நமக்குத் தகாது' என்று தந்தை சொன்னுர் என்று அவருடைய சகோதரர் அதை ஆட்சேபித்தார். வழக்கறிஞர் வேலைக்குப் படிப்பதே நல்லது என்ருர். காந்தியின் தாத்தாவும், தந்தையும், சிறியதந்தையும் போர்பந்தரில் திவானுக இருந்திருக்கின்றனர். அவ் வேலை ஏறக்குறைய அவர்கள் பாரம்பரியமாகிவிட்டது. அதனுல் காந்தி வக்கீல் தொழில் பயின்றுவந்தால் அவ் வேலை உறுதியாகக் கிடைக்கும். ஆனுல், காந்திக்குச் சட்டப்பரீட்சையில் தாம் தேறமுடியுமோ என்று பயம். ஜோஷிஜி (Joshiji) என்னும் அவர்களுடைய குடும்ப நண்பர், காந்தி இங்கிலாந்திற்குப்போய் மூன்று ஆண்டுகள் பாரிஸ்டர் வேலைக்குப் படித்துவிட்டால் தொழிலிலும் அரசியலிலும் வெற்றியடையலாம் என்று சொன்னுர். அயல்நாட்டில் இருக்கவேண்டும் என்பதை நினைத்ததும் காந்திக்கு அச்சமாக இருந்தது. 'இந்தப் பாரிஸ்டர் வாழ்க்கைக்கும் ஐரோப்பியர் வாழ்க்கைக்கும் எவ்விதமான வேற்றுமையும் இல்லை. வெட்கமில்லாமல் ஆங்கிலேயரைப்போல் உடை உடுத்துகிருர்கள். இங்கிலாந்து போவதற்கு உன் தாயார் சம்மதித்தால் நானும் அனுமதி

கொடுக்கிறேன்' என்று காந்தியின் சிறிய தந்தையார் கூறினர். அவருடைய அன்னையாரோ அவர் தூர தேசத்திலிருக்கும்போது அவரை எப்படி நம்புவது என்று சந்தேகப்பட்டார். மது, மாமிசம், பெண் ஆகியவைகளைத் தொடுவதில்லை என்று அவரிடம் காந்தி சத்தியம் செய்துகொடுத்தார். பேச்சர்ஜி சுவாமி (Becharji Swami) என்னும் ஜைனசந்நியாசியும் காந்திக்கு இவ் விஷயத்தில் உதவிபுரிந்தார். பின்பு அவர் அன்னை, இங்கிலாந்து போய்வர அவருக்கு அனுமதி கொடுத்தார்.

பணத்தைப்பற்றிய பிரச்சினையும் எழுந்தது. மோகன்தாஸ் காந்தியின் அண்ணன் ஒரு வழக்கறிஞர். அவர் தம் தம்பிக்குப் பணம் தருவதாக வாக்களித்தார். இருவரும் பம்பாய்க்குச் சென்றனர். அங்கிருந்து காந்தி இங்கிலாந்திற்குக் கப்பல் ஏறவேண்டும். அப்பொழுது புதிய தொல்லைகள் ஏற்பட்டன. காந்தியின் குடும்பத்தினர் மோத் பனியா (Modh Bania) வணிக வகுப்பைச் சேர்ந்தவர்கள். (இதுவரை அந்த வகுப்பைச் சேர்ந்தவர்கள் இங்கிலாந்துக்குப் போனதில்லை.) அவர்கள் காந்தியின் பிரயாணத்தைப்பற்றிக் கேள்விப்பட்டதும், பம்பாயிலுள்ள அந்த வகுப்பினர், இந்து மத தர்மங்களைக் கைவிடாமல் அங்கே வசிப்பது சாத்தியமில்லை என்று காந்தியின் பயணத்தை ஆட்சேபித்தனர். அவர்களது பொதுக்கூட்டமொன்றில் காந்தி தாம் எப்படியும் இங்கிலாந்துக்குப் போகப்போவதாகச் சொன்னர். உடனே சாதி நாட்டாண்மைக்காரர், 'இன்று முதல் இப்பையனைச் சாதிப்பிரஷ்டம் செய்யப்பட்டவனுக நடத்தவேண்டும்' என்று கட்டளையிட்டார்.

உறுதியை இழக்காமல், காந்தி உடனே கப்பலுக்கு டிக்கெட் வாங்கினர். கழுத்துப்பட்டை, குட்டை, சட்டைகளும் சவுதாம்டன் போய்ச் சேரும் வரை மூன்று வாரங்களுக்கு வேண்டிய உணவு முதலியவற்றையும் தயாரித்தார். அந்த உணவுப்பொருள்களில் பெரும்பகுதி பழங்களும் இனிப்புப்பண்டங்களுமே இடம்பெற்றன. அவர் தமது பத்தொன்பதாவது பிறந்த நாளுக்கு ஒரு மாதத்திற்கு முன்பு அதாவது 1888ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் நாலாம் தேதி பம்பாயிலிருந்து கப்பலில் புறப்பட்டார். இதற்குச் சில மாதங்களுக்கு முன்புதான் கஸ்தூரிபாய்க்கு ஓர் ஆண் குழந்தை பிறந்திருந்தது. அக் குழந்தைக்கு ஹரிலால் (Harilal) என்பது பெயராகும்.

3. லண்டனில் காந்தி

காந்தி லண்டன் வந்துசேர்ந்த சில நாட்களில் தன்னை ஒரு படம் எடுத்துக்கொண்டார். அதில் அவரது கருமையான அடர்ந்த உரோமம் வலப் பக்கத்தில் வகிடு எடுக்கப்பட்டு வாரிவிடப்பட்டிருந்தது. பெரிய

காதுகள். பருத்த கூர்மையான நாசி. கண்களில் ஆச்சரியமும், பயமும், ஏக்கமும் காணப்படுகின்ற பார்வை. அவை எதையோ தேடுகின்றனபோலத் தெரிகின்றன. உதடுகள் நன்ருகத் தெரிகின்றன. அவை ஆசை, துயரம், தற்காத்துக்கொள்ளும்நிலை முதலிய உணர்ச்சிகளை வெளியிடுகின்றன. திக்கு திசை தெரியாதவர் போலவும் என்ன செய்வதென்று விழிப்பவர்போலவும் அல்லது அடிபடுவதற்குப் பயப்படுபவர்போலவும் தோன்றுமாறு செய்தது எனலாம். தம் உள்ளத்தில் எழும் பிரச்சினைகளைச்சமாளிக்க அஞ்சுவதுபோலவும், மனத்தில் எழும் தீய எண்ணங்களை வெல்லமுடியுமா என்று நினைப்பதுபோலவும், தாம் வாழ்க்கையில் முன்னுக்கு வரமுடியுமா என்று அஞ்சுவதுபோலவும் அவர் முகம் அமைந்திருக்கிறது.

பிரிட்டிஷ் வாழ்க்கை காந்திக்கு மிகப் புதிது. அதற்குத் தகுந்தாற்போல் நடக்க அவர் எடுத்துக்கொண்ட முயற்சியின் வெற்றியையும் தோல்வியையும் அவருடைய சுயசரிதையில் குறிப்பிட்டிருக்கிருர். பளபளவெனப் பிரகாசிக்கும் உயரமான பட்டுத்தொப்பியும், கஞ்சி போட்டுத் தேய்த்த விறைப்பான காலரும், கோடுபோட்ட நிஜாரும், காலையில் அணியும் கோட்டும் பட்டுச்சட்டையும், தோலினுல் செய்யப்பட்ட கையுறைகளும், வெள்ளிப்பூண் கட்டிய பிரம்பு ஒன்றும் காந்தி வாங்கினுர். மாலையில் உலாவப்போகும்போது போட்டுக்கொள்வதற்காகச் சொல்லித்தைத்த உடுப்பு ஒன்று பாண்ட் தெருவில் (Bond Street) வாங்குவதில் பத்துப் பவுன் செலவுசெய்தார். நடனம் பயிலுவதற்கு மூன்று பவுன் கட்டணம் செலுத்திஞர். பியானோ வாத்திய இசையைப் பின்பற்ற முடியவில்லையென ஒப்புக்கொண்டார். தாளத்திற்கேற்ப நடனமாடவும் முடியவில்லை. மேல்நாட்டுச் சங்கீதத்தை ரசிக்கத் தெரிந்துகொள்வதற்காகப் பிடில் வாசிக்கக் கற்றுக்கொள்ள வேண்டுமென்று நினைத்து அவர் ஒரு பிடிலும் வாங்கி, ஆசிரியர் ஒருவரையும் அமர்த்திஞர். ஆனுல், விரைவில் அப் பிடிலை விற்றுவிட்டார். பெரிய பேச்சாளர் ஆகவேண்டுமென்று அவர் எடுத்துக்கொண்ட முயற்சியும் இதைப்போலவே விரைவில் கைவிடப்பட்டது.

காந்தி எப்பொழுதும் சூழ்நிலைக்கு ஒப்ப வாழவிரும்பினுர். பல வருஷங்களுக்குப் பின்னுல், அரையில் துண்டு கட்டுவதையே தமது உடையாகத் தேர்ந்தெடுத்ததும் இதே காரணத்திஞல்தான். பல லட்சக்கணக்கான இந்திய விவசாயிகள் துண்டைத் தவிர வேறென்றும் உடுப்பதில்லை. லண்டனில் இருக்கும்போது ஆங்கிலர் வாழ்க்கையின் உயிர்நாடி என்று தாம் தவருகக் கருதிய வாழ்க்கைத்தரத்தோடு தம் வாழ்க்கைத்தரத்தையும் உயர்த்திக்கொள்ளலாம் என்று எண்ணிய காந்தி, ஆங்கிலேயருடைய வாழ்க்கையை அப்படியே மேற்கொண்டார். ஆனுல், அதே சமயத்தில் அவர் தம் கொள்கைக்காக எவ்வளவு எதிர்ப்பையும் சமாளிக்கக்கூடியவராக இருந்தார். அவருக்குத்

தெரிந்த ஆங்கிலேயர் அவரை மாமிசம் சாப்பிடும்படி வற்புறுத்தினர். ஆனால், அவர் தம் அன்னைக்குக் கொடுத்திருந்த வாக்குறுதியை மீற மறுத்துவிட்டார். சொல்லப்புகின் அவர் ஒரு தீவிர சைவரானார். முட்டையும் முட்டை கலந்துசெய்யப்பட்ட கேக், புட்டிங் முதலிய வற்றையுங்கூட நிறுத்திவிட்டார். முட்டைகளும் உயிருள்ள பிராணிகள் என்று கருதிய காரணத்தினால் அவர் ருசித்து உண்ணத் தொடங்கிய பல உணவுகளையும் கைவிடநேர்ந்தது. ஆனால், கொடுத்த வாக்கை நிறைவேற்றுவதில் ஏற்பட்ட மகிழ்ச்சியில், புலால்உணவு அருந்தாததினால் ஏற்பட்ட சங்கடங்கள் மறைந்தன.

அவர் சமைக்கவும் கற்றுக்கொண்டார். காரட் சூப் அவரது விசேஷ உணவு. இந்தியாவிலுள்ள அவர் வீட்டிலிருந்து கடல் மார்க்கமாகக் கப்பலில் மிட்டாய், ஊறுகாய், கறிமசாலை, வந்துகொண்டிருந்தன. பின் இப்படித் தருவிப்பதை நிறுத்திக்கொண்டார். மசாலையின்றி வேக வைத்த கீரையையும் காய்களையும் ருசித்துச் சாப்பிடத்தொடங்கினார். 'ருசி எல்லாம் எண்ணத்தில்தான் இருக்கிறதேயன்றி நாவில் இல்லை என்பதை இதுபோன்ற பல பரீட்சைகளால் நான் தெரிந்துகொண்டேன்' என்று பிற்காலத்தில் அவர் குறிப்பிட்டிருக்கிறார். இவ்விதமாக, காந்தி தமது வாழ்க்கையில் பல மாறுதல்களைச்செய்து தமது சத்தியசோதனையை ஆரம்பித்தார்.

மற்றும் பல மாறுதல்களும் நடந்து கொண்டிருந்தன. 'நாஸ்திகம் என்ற சகாரா (Sahara) பாலைவனத்தைத்' தாண்டிவிட்டார். அவர், பிளாவட்ஸ்கி அம்மையாரையும் (Madam H. P. Blavatsky) அன்னி பெசன்ட் அம்மையாரையும் (Mrs. Annie Besant) சந்தித்தார். அவர்கள் எழுதிய 'பிரம்மஞான'த்தைப்பற்றிய புத்தகங்களைப் படித்தார். ஆனால், மனம் மாறவில்லை; அவர் இந்து சமயத்தையே விரும்பினார். பைபிள் விற்கும் ஓர் ஆங்கிலேயர் அவரைப் பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடுகளைப் படிக்கச்சொன்னார். லேவியராகமம், எண்ணாகமம் இரண்டும் படிக்க அவருக்கு வெறுப்பாக இருந்தது. அதற்குமேல் அவர் படிக்கவில்லை. மகாத்மா ஆனபின் நீதிமொழிகள், சங்கீதங்கள், பிரசங்கி முதலியவற்றைப் படித்தார். புதிய ஏற்பாடு அவருக்கு உகந்ததாக இருந்தது. மலைப்பிரசங்கங்கள் அவர் உள்ளத்தைக் கவர்ந்தன. 'தீமையோடு எதிர்த்து நிற்கவேண்டாம். ஒருவர் உன்னை வலது கன்னத்தில் அடித்தால் அவனுக்கு மறு கன்னத்தையும் காட்டு. சாந்த குணமுள்ளவர்கள் பாக்கியவான்கள்—பலவிதத் தீமையான மொழிகளையும் உங்கள் பேரில் பொய்யாய்ச் சொல்வார்களானால் பாக்கியவான்களாயிருப்பீர்கள்—நீ உன் பகைவனோடு விரைவில் உறவுகொள்; மனிதர்களுடைய தவறுகளை நீ மன்னிப்பாயாக. பூமியில் உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்துவைக்கவேண்டாம். உங்கள் பொக்கிஷம் எங்கே இருக்கிறதோ அங்கே உங்கள் மனமும் இருக்கும்' என்னும்

கிறிஸ்துவின் வாய்மொழிகள் பின்னுல் மகாத்மாவாகப்போகும் அவருக்கு இன்பத்தை ஊட்டியதுடன், வாழ்நாள்முழுவதும் நிலை பெற்றிருந்த ஒரு பெரும் மனப்புரட்சியையும் ஏற்படுத்தின. அவை இந்துக்களின் தெய்வீக நூலாகிய 'பகவத் கீதையை' (Bhagavad Gita) அவருக்கு நினைவூட்டின. லண்டனில் சட்டக்கல்லூரியில் அவர் இரண்டாவது வருடம் படிக்கும்வரை அவர் கீதையைப் படித்ததில்லை என்று வெட்கத்தோடு ஒப்புக்கொண்டார். 'யங் இந்தியா' (Young India) என்னும் வாரப்பத்திரிகையில் 1925ஆம் ஆண்டு ஆகஸ்டு 6ஆம் தேதி அவர் 'வாழ்க்கையில் தெளியமுடியாத ஐயங்கள் தோன்றும்பொழுதும் ஏமாற்றங்கள் எதிர்ப்படும்பொழுதும் நம்பிக்கையின் ஓர் ஒளிக்கதிர்கூடக் காட்சியளிக்காதபொழுதும் கீதையினிடம் திரும்புகிறேன். அதிலுள்ள கவிதை எனக்கு அமைதியைத் தருகின்றது. மாபெரும் துயரங்களின் இடையே மூழ்கியிருக்கும் நான் உடனே புன்முறுவல் பூக்கமுடிகின்றது' என்று எழுதியுள்ளார். பல ஆண்டுகளாக மகாத்மாவின் காரியதரிசியாக இருந்த மகாதேவ் தேசாய் (Mahadev Desai) 'காந்தி தம் வாழ்க்கையின் ஒவ்வொரு விநாடியும் கீதையின் உபதேசத்தின்படி நடக்க முயற்சி எடுத்துக்கொண்டார்' என்று கூறினர். தமக்குப் பகவத்கீதை ஓர் ஆன்மிக அகராதி என்ருர் காந்தி.

கீதை எழுநூறு சுலோகங்களைக்கொண்ட ஒரு தேவாரமாகும். இது யோகத்தைப்பற்றிய விளக்கத்தையும் பயிற்சியையும் கூறுகின்றது. யாரோ ஒருவரால் கி.மு. ஐந்தாம் நூற்ருண்டிற்கும் இரண்டாம் நூற்ருண்டிற்கும் இடையில் எழுதப்பட்டது என்று அறிஞர்கள் கூறுகிருர்கள். இது கிருஷ்ண பரமாத்மாவுக்கும் அர்ச்சுனனுக்கும் போர்க்களத்தில் நடந்த உரையாடலைக் குறிக்கின்றது. இந்து தத்துவ ஆராய்ச்சி நிபுணராகிய சர் சர்வபள்ளி ராதாகிருஷ்ணன் (Sir Sarvapalli Radhakrishnan), 'விஷ்ணுவின் அவதாரமே கிருஷ்ணன்' என்று கூறுகிருர். கிருஷ்ணனது வரலாறு சரித்திரத்தில் பரம்பரையாய் வந்த கட்டுக்கதைகளும் சரித்திர காலத்திற்கு முந்திய மங்கலான உண்மை நிகழ்ச்சிகளும் நிறைந்தது. ஓர் இந்திய அரசனின் சகோதரியின் கர்ப்பத்தில் கடவுள் அவதாரம் செய்ததாகவும் மனிதனுடைய உதவியின்றிக் கிருஷ்ணன் பிறந்ததாகவும் கதை. அரசன் தனக்குப் பகைவன் தோன்றக்கூடாது என்ற நோக்கத்துடன் சகோதரிக்குப் பிறக்கும் எல்லா சிசுக்களையும் கொன்றுவிடும்படி கட்டளையிட்டான். தெய்வத்தின் உதவியால் கிருஷ்ணன் ஓர் இடையன் வீட்டிற்கு அவனுடைய மகளுக்குப்பதிலாக அனுப்பப்பட்டார். அரசன் அவரைக் கொல்ல எடுத்துக்கொண்ட பெரு முயற்சிகள் யாவும் வீணுயின. ஒரு தடவை மழைபெய்யும்போது கிருஷ்ணன் தம்முடைய சுண்டுவிரலினுல் ஒரு மலையைத் தூக்கிக் குடையாக ஏழு நாட்கள்

பகலும் இரவும் வைத்திருந்தார். மக்களையும் மிருகங்களையும் காப்பாற்றிய அவருடைய தெய்வீகத்தை அறியாத கிராமத்து இளம் பெண்கள் அவரிடம் மையல் கொண்டு, அவருடன் நடனம் ஆடினர். கிருஷ்ணன் வயது வந்ததும், கொடுங்கோல் மன்னனாகிய தமது மாமனைக்கொன்று உலகப் புகழ்பெற்றார். இறுதியில் கிருஷ்ணன் காட்டில் யோக நித்திரையிலிருக்கும்போது, ஒரு வேடன் அவரை மான் என நினைத்துக் குதிக்காலில் அம்பு எய்தான். வேடன் அவர் அருகே வந்துபார்த்ததும் தன் தவற்றுக்காக வருந்தினான். கிருஷ்ணனோ புன் சிரிப்புடன் அவனுக்கு ஆசிவழங்கிவிட்டு உயிர்துறந்தார்.

கிருஷ்ணன் ஆயுதமின்றி அர்ச்சுனனுக்குச் சாரதியாகப் பணி ஆற்றியதிலிருந்து கீதை ஆரம்பிக்கின்றது. போர்க்களத்தில் அர்ச்சுனனின் தாயத்தார் அணிவகுத்து நிற்கின்றனர். அர்ச்சுனனுக்கோ போர் புரிய விருப்பம் இல்லை. அவன் கிருஷ்ணனைப் பார்த்து, 'கேசவா! விபரீதமான சகுனங்களைக் காண்கிறேன். சுற்றத்தாரைக் கொல்வதால் நன்மை ஒன்றுமில்லை. போரில் நான் வெற்றியை விரும்பவில்லை. ஓ கிருஷ்ணா! நான் அரசுரிமையையோ அல்லது சுகபோகங்களையோ விரும்பவில்லை. ஏனெனில் சுகபோகங்களால் என்ன பயன்? அன்றி உயிர்வாழ்வதில்தான் பயன் என்ன? ஓ கோவிந்தா!' என்று கூறுகின்றான். கேசவன், கோவிந்தன் (Kesava, Govinda) என்பவை கிருஷ்ணபரமாத்மாவிற்குரிய வேறு பெயர்களாகும்.

உறவினரைக்கொல்லும் வெறுப்பில் அர்ச்சுனன், தான் போரிடப் போவதில்லை என்று கூறிவிடுகிறான். கிருஷ்ணனோ அர்ச்சுனனைக் கண்டித்து வாதிடுகின்றார். 'துயரப்படத்தகாதவர்களின் பொருட்டு நீ துயரப்படுகிறாய். விவேகமில்லாததும் அவசியமில்லாததுமான வாசகங்களைக் கூறுகின்றாய். அறிஞர், இருக்கிறவர்களுக்காகவோ அல்லது இறந்தவர்களுக்காகவோ வருத்தப்படமாட்டார்கள். இதற்குமுன் எக்காலத்திலும் நான் இல்லாதிருந்ததில்லை. இந்த அரசர்களும் நீயும் அவ்வாறே. இனி நாம் என்றைக்கும் இல்லாமற்போகவும் மாட்டோம்.' 'சாவைப்பற்றிப் பொருட்படுத்த வேண்டியதில்லை. ஆத்மா அழியாதது. மனிதனுடைய ஆயுதங்களால் ஆத்மாவை அழிக்கமுடியாது.'

ஆத்மாவை 'இது' என்று குறிப்பிட்டு, கிருஷ்ணன் மேலும் கூறுகிறார்.

'ஆத்மா பிறப்பதில்லை. ஆகவே இறப்பதுமில்லை. ஒருமுறை பிறந்து, இருந்து, பிறகு இல்லாமற்போவதும் இல்லை. இது பிறப்பற்றது; என்றும் உள்ளது; அழியாதது; மிகவும் புராதனமானது. உடலைக்கொல்லும்போது, இது கொல்லப்படுவதில்லை. மனிதர் பழைய உடையைக் களைந்து புதியவற்றை அணிவதுபோல் உயிரும் பழைய உடம்பை நீக்கிப் புதிய உடலுக்குள் நுழைகின்றது.'

மறுபிறவியைப்பற்றிய இந்துக்கொள்கையின் சுருக்கம் இதுவே யாகும். கிருஷ்ணன் பின்னும் தொடர்ந்து கூறுகின்றார். 'ஆயுதங்கள் இதை வெட்டா; தீ எரிக்காது; நீர் நனைக்காது; காற்று உலர்த்தாது. பிறந்தவன் இறப்பது திண்ணம். இறந்தவன் மறுபடியும் பிறப்பது நிச்சயம். ஆகவே, விலக்கமுடியாத ஒன்றிற்காகக் கவலைப்படுவதால் என்ன பயன்?' என்று பார்த்தனைக் கேட்டார்.

மேலும், அர்ச்சுனன், இந்துக்களில் போர்வீரர் ஜாதியாகிய க்ஷத்திரிய குலத்தைச் சேர்ந்தவன். அதனால் யுத்தம் செய்யவேண்டியது அவனுடைய கடமை என்று கிருஷ்ணன் வற்புறுத்துகின்றார்.

வைதீக இந்துக்கள் கீதைக்குக் கொடுத்த இந்தப் பொருள் விளக்கம் மகாத்மாவுக்குப் பிடிக்கவில்லை. 1888—1889-ல் காந்தி கீதையை முதல் தடவையாக லண்டனில் படித்தபோது அது ஓர் உருவகம் என்று அறிந்து, ஆத்மா போர்க்களம் என்றும் தீமையை எதிர்த்துப்போராடும் உயரிய பண்பின் உணர்ச்சிகளே அர்ச்சுனன் என்றும் பொருள் கொண்டார். உடல் அழிவது மரணம் இல்லை; ஆகையால், போர்செய்வதற்குத் தயங்கவேண்டியதில்லை என்று கிருஷ்ணன் சொல்லியும், அர்ச்சுனனுக்குத் தெளிவு ஏற்படவில்லை. போர்செய்வதால் என்ன லாபம் என்று அர்ச்சுனன் கேட்டதற்குக் கிருஷ்ண பரமாத்மா கூறுகின்றார்.

'பார்த்தா! மூன்று உலகங்களிலும் நான் செய்யவேண்டியது ஒன்றுமில்லை. இதுவரை நான் பெறாததும் இனிப் பெறவேண்டியதும் யாதுமில்லை. ஆனாலும் நான் செயலில் ஈடுபட்டிருக்கிறேன்.'

நல்ல காரியங்களில் பலனை எதிர்பாராது செயலாற்றுவதே சிறந்த குறிக்கோள் என்கிறார். மேலும் சொல்லுகிறார்.

'இன்பமும் துன்பமும், லாபமும் நஷ்டமும், வெற்றியும் தோல்வியும் சமமே என்று பாவித்துப் போரிடுவாயாக! உன்னைப் பாவம் வந்துசேராது.' யோகத்தின் ஒரு தன்மையே சுயநலம் கருதாது செயல்படுவதுதான் என்று சொல்லி, கிருஷ்ணன் தொடர்ந்துகூறினார். 'தனஞ்சயா! பற்றுதலின்றிச் செயலாற்று. யோகம் செய்யும்போது வழுவாத மனத்துடனும் வெற்றி தோல்வியினால் கலங்காத மனத்துடனும் இரு. மனது கலங்காமல் ஒரேநிலையில் இருப்பதே யோகம். யார் துன்பத்திலும் வருந்தாமல் இருக்கிறார்களோ, யார் துன்பத்தைநீக்கி இன்பத்தை விழையாமல் இருக்கிறார்களோ, யார் பயம், கோபம், காமம் முதலியவற்றினின்றும் விடுபட்டிருக்கிறார்களோ அவர்கள்தாம் ஞான யோகிகளாவர். யான், எனது என்னும் செருக்குகளை நீக்குகிறவன் அமைதியை அடைகிறான்' என்று அறிவுறுத்தினார்.

ஞானயோகி, கர்மயோகி என்று இருவகை யோகிகள் உளர். செயல்களில் ஈடுபடுபவர் கர்மயோகி. மகாத்மா காந்தி அத்தகைய கர்மயோகி ஆவார். அவர் கீதையைப்பற்றி எழுதும்போது பின்வருமாறு கூறுகிறார். 'கர்மயோகி யாரைக்கண்டும் பொறுமைகொள்ளாதவன்; அவன் இரக்கத்தின் ஊற்று; 'நான்' என்னும் செருக்கற்றவன்; சுயநலமற்றவன்; வெப்பத்தைக் கருதுவதுபோல் தட்பத்தையும் இன்பத்தைப் போல் துன்பத்தையும் ஒன்றாகக் கருதுபவன்; குற்றங்களை மன்னிப்பவன்; 'போதும்' என்ற மனமுடையவன்; உறுதி உடையவன்; மனத்தையும் ஆத்மாவையும் கடவுளுக்கு அர்ப்பணித்தவன்; பிறருக்கு அஞ்சாதவன்; பிறரை அச்சுறுத்தாதவன்; இன்பத்திலும் துன்பத்திலும் நிலைதவறாதவன்; மாசற்ற மனதுடையவன்; செயலாற்றுவதில் திறமையுடையவன், எனினும் செயல்களால் பாதிக்கப்படாதவன்; பலனின் நன்மை தீமையைப்பற்றிச் சிந்தியாதவன்; பற்றற்றவன்; தோழனையும் பகைவனையும் வேறுபாடு இல்லாமல் நடத்துபவன்; பிறர் தன்னிடம் வைக்கும் மரியாதையையோ மரியாதைக் குறைவையோ பொருட்படுத்தாதவன்; பிறர் புகழ்வதால் கர்வம் அடையாதவன்; பழியினால் மனம் உடையாதவன்; மௌனத்தையும் தனிமையையும் விரும்புகிறவன்; தெளிந்த அறிவுடையவன். இவ்வகைக் குணங்கள் உலகப்பற்றுக்கு முரணானவை.'

இவற்றை 'விருப்பமின்மை' என்னும் ஒரே சொல்லில் காந்தி விளக்கினார்.

பற்றின்மையால் தன் காரியத்தில் சிரத்தையின்மையும் அக்கறையின்மையும் ஒரு நாட்டின் காரியத்தில் வறுமையும் முன்னேற்றமின்மையும் ஏற்படுகின்றன என்று கூறுவர். ஆனால், காந்தி அதற்கு மாறாகப் பற்றின்றிச் செயலாற்றுவதே வெற்றிக்குச் சிறந்த வழி என்று கூறினார். 'எவன் செய்யும் பயனையே கருதிக்கொண்டிருக்கிறானோ அவன் கடமையைச் செய்யும்போதே தவறுகிறான். பொறுமையை இழந்து, சினத்துக்கு ஆளாகி, தகாத செயல்களில் இறங்குகிறான். பயனைக்கருதிச்செயலாற்றுகிறவன் ஐம்புலன்களுக்கு அடங்கியவன். அவனது கவனம் எப்பொழுதும் பல்வேறு செயல்களில் ஈடுபடுகிறது. மனச்சாட்சியைப் புறக்கணிக்கிறான். அவனுக்கு எல்லாம் நல்லதாகத் தோன்றுகிறது. எண்ணிய காரியத்தை முடிக்க எந்த முறையையும் கையாளுகின்றான். நல்லது, கெட்டதுபற்றி எண்ணுவதில்லை.'

ஒருவன் பற்றினை அறவே விட்டுவிடமுடிந்தால் அவன் மனத்தில் அமைதி ஏற்படுகிறது. தீயநெறிகளில் இறங்காமல் நிலையான பயன்களை அவன் எய்தமுடியும்; உலோகாயதப் பொருள்களிலும் வெற்றிகாண முடியும். பற்றற்றவனுக்கு உயர்ந்ததொரு மெய்யானபொருள் கிட்டும். கிருஷ்ணபரமாத்மா 'என்னை வந்துசேரும் யோகிகள் அல்லது மகாத்

மாக்கள் மிக உயர்ந்தநிலையை அடைகிறார்கள். இன்பதுன்பம் கலந்ததும் நிலையற்றதுமான பிறவியை அவர்கள் மறுபடியும் எய்துவதில்லை' என்று மொழிந்துள்ளமை இங்குக் கருதத்தக்கது.

இறைவனுடன் இரண்டறக் கலத்தலே யோகிகள் அடையும் சிறந்த பேறு. அவர்கள் மறுமுறையும் பிறப்பதில்லை. மறுமுறையும் பிறவாத நிலை எய்தவேண்டும் என்ற ஆசையைக் காந்தி பலமுறை தமது வாழ்நாளில் வெளியிட்டிருக்கிறார்.

மகாத்மாக்கள் பிறப்பது அரிது; 'வேண்டாமை' என்ற குறிக்கோளை இந்தியாவிலோ அல்லது வேறுநாட்டிலோ யாரும் எளிதில் அடைவதில்லை. அதற்கு முயல்வதும் இல்லை. ஆனால், ஓர் இந்து இளைஞன் பகவத்கீதையை வீட்டிலும் கோவிலிலும் மாதம் முழுவதும் பன்முறை பாராயணம் செய்வதால், வாழ்க்கையில் புகும்பொழுது இவ்வாழ்க்கையின் அடிப்படை யாது என்பதுபற்றித் தன்னையுமறியாமல் சிந்திக்குமாறு கீதை இடும் கட்டளையை உணரத்தொடங்குகிறான். அவ்விதமே காந்தியும் சிந்தித்தார். அதன் பயனாக, அவருடைய எதிர் காலம் முழுவதும் மாறத்தொடங்கிற்று.

காந்திக்குப் பகவத்கீதையிலுள்ள பற்றும் சைவ உணவிலுள்ள ஆர்வமும் அவருக்கு இந்தியாவின்மீதுள்ள பற்றுதலைக் காட்டுகின்றன. அவர் சூழ்நிலைக்கேற்ப வாழவிழைந்தார். இங்கிலாந்திலிருக்கும்போது தீவிரமான சைவர்களோடு பழகினார். 'அவர்கள் எப்பொழுதும் உணவைப்பற்றியும் நோயைப்பற்றியுமே பேசிக்கொண்டிருக்கும் பழக்கத்தை உடையவர்கள்' என்று பின்பு ஒருமுறை குறிப்பிட்டார். அங்குப் படித்த படிப்பு தொழில் முன்னேற்றத்திற்குத் தேவையானது; ஆனால், வேறொன்றுக்கும் பயனற்றது என்று கருதினார். தமது சுயசரிதையில் படிப்பைப்பற்றி அதிகமாகக் குறிப்பிடவில்லை. அவர் லண்டன் சர்வகலாசாலையில் சேர்ந்துபடித்தார். ஃபிரெஞ்சு, லத்தீன், பௌதீகம், ரசாயனம் முதலியவற்றைப் படித்தார். ஆங்கில அறிவைப் பெருக்கிக் கொண்டார். பொதுச்சட்டத்தையும் ரோமன்சட்டத்தையும் கற்றார். 1891ஆம் ஆண்டு ஜூன் 10ஆம் தேதி அவரைப் பாரிஸ்டர் பட்டியலில் சேர்த்துக்கொண்டனர். ஜூன் 11ஆம் தேதி ஹைகோர்ட்டில் பாரிஸ்டராகப் பதிவுசெய்துகொண்டார். இங்கிலாந்தில் மேலும் ஒருநாள்கூட வீணாக்காது 12ஆம் தேதியே அவர் பம்பாய்க்குக் கப்பல் ஏறினார்.

கல்லூரிப் படிப்பிற்குப் பின்புதான் காந்தியின் உண்மையான வாழ்க்கை ஆரம்பமானது. 1924ஆம் ஆண்டு செப்டம்பர் 4ஆம் தேதி 'யங் இந்தியாவில்' 'நான் வாழ்க்கையை ஆரம்பித்த காலம் நான் கல்லூரியில் படித்த காலத்திற்குப் பிற்பட்டது' என்று அவர் எழுதியிருக்கிறார். அவர் இங்கிலாந்தில் கழித்த இரண்டு வருடங்களும் எட்டு மாதங்களும் மிக முக்கியமான காலம். அந்த இளம் வயதில் ஏற்பட்ட

நிகழ்ச்சிகள் அப்பொழுது அவருடைய மனத்தில் நன்ருகப் பதிந்திருக்கவேண்டும். ஆனுல், அந் நிகழ்ச்சிகளின் முக்கியத்துவம் மிகக் குறைவானது என்றே சொல்லவேண்டும். ஏனெனில், மற்ற மாணவர்களைப் போலல்லாமல் காந்தி செயலில் ஈடுபடுபவர். அதனுல் அவருக்கு அனுபவ அறிவும், தன்னம்பிக்கையும், மதிப்பும் உண்டாயின. புத்தகங்களும் சமூக நிலையும் ஓரளவு அவருடைய வாழ்க்கையை மாற்றின. பின்னுல் சரித்திரப் புகழ்பெற்று உருவான காந்தியின் குணுதிசயங்கள், அவர் லண்டனில் மாணவராக இருக்கும்போது சிறிதும் காணப்படவில்லை. உலகியல் அறிவு இல்லாது, பத்தொன்பதாவது வயதில் லண்டனுக்குப் படிக்கவந்த காந்தியிடம் ஒன்றும் எதிர்பார்த்திருக்க முடியாது. இந்தியப் பொதுவாழ்க்கையில் ஈடுபடும்வரை, அவரது திறமைகளும் குணுதிசயங்களும் மறைந்துகிடந்தன. 1891-ல் பாரிஸ்டராக இங்கிலாந்திலிருந்தபோது காந்தி ஒரு சாதாரண மனிதர். செயலாற்றுவதில் திறமை இல்லாதவர். பார்வைக்குக் கம்பீரமற்றவர். ஆனுல், 20ஆம் நூற்ருண்டில் அவர் இந்தியாவிற்கு வந்து பொது வாழ்க்கையில் கலந்துகொண்ட பிறகு, அவருடைய அளவற்ற வைராக்கியமும், ஊக்கமும், உள்ளறிவும், தன்னம்பிக்கையும், எடுத்துக்கொண்ட காரியத்தைச் செய்துமுடிப்பதிலுள்ள அளவுகடந்த ஈடுபாடும் உலகத்தாருக்குத் தெரியவந்தது. எனவே, இங்கிலாந்தில் படித்துக்கொண்டிருந்தபோது காந்தியிடம் காணப்பட்ட திறமை வேறு, இந்தியாவில் அரசியல் வாழ்க்கையில் காந்தியிடம் வெளிப்பட்ட திறமை வேறு.

4. வருங்காலத்தை உருவாக்கிய இரு நிகழ்ச்சிகள்

காந்தி இந்தியாவிற்குத் திரும்பியபோது, அவர் மகன் ஹரிலாலுக்கு நான்கு வயது. அவர் இங்கிலாந்திலிருந்தபோது அவர் தாய் இறந்து போனுர். அவருக்குத் தாயின்மீது இருந்த எல்லையற்ற அன்பு எல்லோருக்கும் தெரியுமாதலால், அவர் லண்டனில் இருந்தபோது அந்த துக்கச் செய்தியை அவருக்கு அறிவிக்கவில்லை. அவர் மனைவி கஸ்தூரிபா மிகவும் அழகாக இருந்தார். காந்தி அவரைப் பார்த்து முன்னைவிட அதிகப் பொருமைப்பட்டார். ஒரு சமயம் ராஜ்கோட்டிலிருந்து போர்பந்தரிலுள்ள அவருடைய தந்தையின் வீட்டிற்கு அனுப்பிவிடும் அளவுக்கு அவரோடு சண்டையிட்டார்.

ராஜ்கோட்டிலும் பம்பாயிலும் தமது வக்கீல் தொழிலில் தோல்வியே அடைந்தார். பம்பாயில் 30 ரூபாய் வருமானமுள்ள ஒரு வழக்கு அவரிடம் வந்தது. கூச்சத்தினுல் காந்திக்குக் கோர்ட்டில் வாய்திறந்து பேசமுடியவில்லை. அந்த வழக்கை உடனிருந்த ஒருவரை விசாரிக்கச்

சொல்லிவிட்டு வீடு வந்துசேர்ந்தார். போர்பந்தர் ராணுசாகிபுக்குச் சட்ட சம்பந்தமான வேலைகள் செய்துகொடுத்துவந்தார். அவருடைய தமையனார் லட்சுமிதாஸ் (Laxmidas) என்பவர் தம்முடைய மூதாதையர்களைப்போலவே போர்பந்தர் அரசருக்குக் காரியதரிசியாகவும் ஆலோசகராகவும் இருந்துவந்தார். விரைவில் திவான் பதவியும் கிடைக்கும்போல் இருந்தது. ஆனால், காந்தி அங்குள்ள பிரிட்டிஷ் அரசியல் ஏஜென்டைப் பகைத்துக்கொண்டார். லட்சுமிதாஸின் விதி அவர் கையில் இருந்தது. அந்த பிரிட்டிஷ் ஏஜென்டை மோகனதாஸ் காந்தி லண்டனிலிருந்தபோது தற்செயலாகச் சந்தித்திருக்கிறார். ஆகையால், தமக்காக அவரிடம் சிபார்சு செய்யும்படி லட்சுமிதாஸ் தம் தம்பியிடம் கேட்டார். தம்பி காந்திக்கோ இது தவறான செயலாகத் தோன்றிற்று. இறுதியில் அண்ணனின் வேண்டுகோளுக்கிணங்கி சிபார்சுசெய்தார். அதற்கு ஏஜென்ட் 'லட்சுமிதாஸுக்கு ஏதாவது தவறு இழைக்கப்பட்டிருந்தால் அவர் முறைப்படி மனுச் செய்துகொள்ளலாம்' என்று சொன்னார். தமது கதையை காந்தி அந்த ஏஜென்டிடம் பேசிக்கொண்டே இருந்தார். ஏஜென்டு அவரை வெளியே போகச்சொன்னார். ஆனால், காந்தி மறுபடியும் பேசத்தொடங்கிய பொழுது, சேவகன் உள்ளே நுழைந்து, காந்தியின் தோள்மேல் கையை வைத்து அவரை வெளியே தள்ளினான்.

'இந் நிகழ்ச்சியால் உண்டான அதிர்ச்சி என் வாழ்க்கையின் போக்கையே மாற்றிவிட்டது' என்று காந்தி அவரது சுயசரிதையில் கூறியிருக்கிறார். தமது வாழ்க்கையில் என்ன செய்யக்கூடாது என்பதைப்பற்றிய எண்ணங்கள் முதல் தடவையாக அவர் மனத்தில் தோன்றின. அற்பத்தனமான சூழ்ச்சி, அரண்மனையின் ஆடம்பரம், அடிமைத்தனம், முகஸ்துதி முதலியவற்றைக்கண்டு காந்தி வெறுப்படைந்தார். இச் சம்பவம் அந்த வெறுப்பை அதிகரிக்கச்செய்தது. பிறரைப் புகழ்ந்துபேசித் தம் வாழ்க்கையை நடத்த விரும்பவில்லை அவர். ஏனெனில், அது மனிதனுடைய ஒழுக்கத்தைக் கெடுக்கிறது. ஆகவே அதிலிருந்து விடுதலை அடையப் பெரிதும் விரும்பினார்.

அச் சமயம் போர்பந்தரைச் சேர்ந்த ஒரு முஸ்லிம் கம்பெனியார், காந்தியை அவர்களுடைய வழக்கறிஞராக ஒரு வருடத்திற்குத் தென் ஆப்பிரிக்காவிற்குப் போகும்படி கேட்டனர். காந்தியும் போவதாக ஒப்புக்கொண்டார். எப்படியாவது இந்தியாவிலிருந்து வெளியே போய்விடவேண்டுமென்று விரும்பினார். அவர் லண்டனிலிருந்து திரும்பிவந்து ஏறக்குறைய இரண்டு வருடங்கள் ஆகிவிட்டன. அவர் வாழ்க்கை ஒரு தோல்வியாகிவிட்டது. 'என் அதிர்ஷ்டம் தென் ஆப்பிரிக்காவில் எப்படி இருக்கிறது என்று பார்க்கலாம்' என்றார்.

தென் ஆப்பிரிக்காவிற்கு வந்து சில நாட்களில் அவர் தோல்வியிலும் வெளியேற்றத்திலும் முடிந்த வேறொரு நிகழ்ச்சியில் சிக்கிக்

கொண்டார். இம் முறை அவருடைய வாழ்க்கையில் நல்ல மாறுதல் ஏற்பட்டது.

டிரான்ஸ்வாலின் (Transvaal) தலைநகரான பிரிடோரியா (Pretoria)வுக்கு ஒரு வழக்குக்காக காந்தி செல்லவேண்டியிருந்தது. முதல் வகுப்பு டிக்கெட்டுடன் முதல் வகுப்பு வண்டியில் இரவு பயணம் செய்தார். ரயில் நேட்டாலின் (Netal) தலைநகராகிய மாரிட்ஸ்பர்க்கை (Maritzburg) அடைந்ததும் ஒரு வெள்ளைக்காரன் அப் பெட்டிக்குள் வந்து காந்தியை மேலும் கீழுமாகப் பார்த்தான். அவரைக் 'கறுப்பு மனிதர்' என்று கண்டுபிடித்ததும், வெளியே சென்று சிறிது நேரத்தில் இரண்டு ரயில்வே அதிகாரிகளுடன் திரும்பிவந்தான். அவர்கள் காந்தியைச் சாமான்கள் ஏற்றிச்செல்லும் வண்டிக்குப் போகும்படி கட்டளையிட்டனர். காந்தி தம்மிடம் முதல் வகுப்பு டிக்கெட் இருக்கிறது என்று சொல்லியும், அவர்கள் கட்டாயமாக அவர் சாமான் வண்டிக்குத் தான் போகவேண்டும் என்றனர். காந்தி இறங்க மறுத்தார். அவர்கள் போலீஸ்காரனை அழைத்துவந்தனர். அவன் காந்தியின் கையைப் பிடித்து இழுத்து வெளியே தள்ளினான். அவர் பெட்டி, படுக்கைகளை வெளியே இறக்கிப்போட்டனர்.

இது நடந்து பல ஆண்டுகளுக்குப் பிறகு, இந்தியாவில் டாக்டர் ஜான் ஆர். மாட் (Dr. John R. Mott) என்னும் கிறிஸ்தவப்பாதிரி பார் காந்தியிடம் பேசிக்கொண்டிருந்தபோது, 'உங்கள் வாழ்க்கையில் ஆக்கவகையில் மிகச் சிறந்த அனுபவம் எது?' என்று கேட்டார். அதற்குக் காந்தி மாரிட்ஸ்பர்க் ஸ்டேஷனில் அன்றிரவு நடந்த இந்தக் கதையைச் சொன்னார்.

காந்தி மூன்றுவது வகுப்புப் பெட்டியில் பிரயாணம் செய்திருக்க லாம். ஆனால், அவரோ பிரயாணிகள் தங்குமிடத்தில் போய் உட்கார்ந்து கொண்டார். சாமான்களும் மேல்கோட்டும் ரயில்வே அதிகாரிகள் வசமிருந்தன. மலைப்பிரதேசங்களில் குளிர் மிகக் கடுமையாக இருக்கும். காந்தி அவருடைய சாமான்களை அதிகாரிகளிடம் கேட்கவில்லை. ஆகவே, இரவு முழுவதும் குளிரில் நடுங்கிக்கொண்டும் சிந்தனையில் ஆழ்ந்தும் இருந்தார்.

இவ் விரு நிகழ்ச்சிகளும் அவருடைய வாழ்க்கையை உருவாக்கின என்று சொல்லலாம். ஆனால், அவர் இந் நிகழ்ச்சிகளை உருவாக்கினார் என்பதும் உண்மை. மற்ற இந்தியர்களோ இப்படி வெளியேற்றப்பட்ட போது மூன்றுவது வகுப்பு வண்டியில் பிரயாணம் செய்திருக்கின்றனர். 'கல்சுவர்மீது உங்கள் தலையை முட்டிக்கொள்ள முடியாது' என்று மற்ற இந்தியர்கள், மறுநாள் காலையில் காந்தியிடம் சொல்லி அவரைத் தேற்றினர். ஆனாலும் மாரிட்ஸ்பர்க்கில் அவருக்கு அநீதி இழைக்கப் பட்டபோது அவர் மனம் தளரவில்லை. அந்த அநீதியை எதிர்த்து

அதற்குரிய தண்டனையையும் ஏற்றுக்கொண்டார். அப்போதுதான் நிறத்துவேஷத்தை ஒழிக்கவேண்டுமென்று உறுதி செய்துகொண்டார். ஒரு பக்கம் பிடிவாதம், மற்றொரு பக்கம் சொந்தத் தொல்லைகள். அதனால், இந்த நிறத்துவேஷத்தை எதிர்த்துப் போராடவேண்டிய நெருக்கடி உண்டாயிற்று. ஆகையால், தென் ஆப்பிரிக்காவில் வழக்கறிஞராக ஒரு வருடம் இருப்பதற்குப்பதில் 1893 முதல் 1914 வரை இருபத்தொரு வருடங்கள் தங்கினார். அக் காலத்தில் அவருடைய அறிவும் ஒழுக்கமும் தென் ஆப்பிரிக்கா முழுவதும் பிரசித்தி பெற்றன. அவர் வழக்குகளில் வெற்றிகண்டார். தலைவராகவும் விளங்கினார். இறுதியில் சுதந்திரத்திற்கு வெற்றியும் தேடித்தந்தார்.

மாரிட்ஸ்பர்க் ரயில் நிலையத்தில் காத்திருந்த அந்தக் குளிரான இரவில் இருபத்துநான்கு வயதுள்ள இந்திய வழக்கறிஞராகிய காந்தி, தாவீதாகிய (David) தாம், இனவேற்றுமையாகிய கோலியாத்துடன் (Goliath) போரிடுவதாக நினைத்துக்கொண்டார். ஏன் காந்தி தம்மை அவ்வாறு கருதினார்? மாரிட்ஸ்பர்க்கிலுள்ள காந்தியை உலகப் பெரியவராக்கியது எது? எல்லோரும் இருக்கும்போது, தீமையை எதிர்க்க வேண்டும் என்ற எண்ணம் காந்திக்கு மாத்திரம் ஏன் ஏற்படவேண்டும்? தம்மாட்டு இல்லாத உடல் உறுதியை, உள்ளத்தே தோன்றும் நேர்மை உணர்வுறுதிமூலம் நிரப்ப நினைத்தாரா? தம் வாழ்வில் அதுவரை ஒன்றும் சாதிக்காத காரணத்தால் குறைந்த கட்டுப்பாடுகளையும் மிகுந்த பேராசையையும் கொண்டிருந்தாரா? தம் வலிமையை உணராது இருந்து அத் திறமையைச் சமூகசேவைக்குப் பயன்படுத்தினால் அது வெளிப்படும் என்று நினைத்தாரா? அது விதியா? பரம்பரைக் குணமா? பகவத் கீதை காட்டிய வழியா? அல்லது நம்மால் சொல்ல முடியாத வேறு ஏதாவது நிகழ்ச்சியா? இவையெல்லாம் காரணமாயிருக்கலாம். அதோடு தன்மானம், அறத்தின்பாற்பட்ட சினம், தன்னால் ஒன்றும் செய்ய முடியவில்லையே என்கிற மன எழுச்சி அவரைத் தலைவராவதற்குத் தூண்டியிருக்கலாம். போர்பந்தரிலுள்ள பிரிட்டிஷ் ஏஜென்டும் மாரிட்ஸ்பர்க்கிலுள்ள வெள்ளைப்போலீஸ்காரனும் இந்தியாவின் பலக்குறைவிற்கும் அவருடைய பலக்குறைவிற்கும் சிறந்த அடையாளங்களாக அமைந்தனர்; அவர் அதனை வெறுத்தார். வருந்தும்போதும் அமைதியை இழக்கும்போதும் காந்தி செயலில் இறங்குவார். தீமைகளின் எதிரே எதிர்த்துப்போராடாமல் அவரால் இருத்தல் இயலாது. ஒன்றும் செய்யமுடியாமல் தலையை ஆட்டுவதும் கையை உதறுவதும் அவருக்கு மனநிறைவைக் கொடுக்காது. செயலற்று இருப்பதை அவர் வெறுத்தார். செயலற்று இருப்பது அவரது குணாதிசயம் அல்ல. எப்போதும் தீமையை எதிர்ப்பதுதான் அவரது இயல்பு.

5. நிறத்துவேஷம்

மாரிட்ஸ்பர்க் நிகழ்ச்சி நடந்து ஒரு வாரத்திற்குள் காந்தி பிரிட்டோரியாவிலுள்ள இந்தியர்களை அழைத்து ஒரு கூட்டம் நடத்தினார். வெள்ளையர்களுடைய நிறத்துவேஷத்தைப்பற்றிப் பேசினார். அப்பொழுதுதான் காந்தி முதன் முதலாகப் பொதுக்கூட்டத்தில் பேசினார். ஒரு காரியத்தில் அவருக்கிருந்த ஆர்வம் அவரது அவைக் கூச்சத்தையும் அகற்றியது. இக் கூட்டத்திற்குப் பெரிதும் முஸ்லிம் வர்த்தகர்கள் வந்திருந்தனர். அந்த ஆரம்பகாலத்திலேயே அவருடைய பேச்சில் தலைமைக்குரிய பண்புகள் இருந்தன. காந்தி, அவர்களை வியாபாரத்தில் வாய்மையைக் கடைப்பிடிக்கும்படியும், சுகாதார முறைகளைக் கைக்கொள்ளும்படியும், வகுப்பு, மத பேதங்களை விட்டொழிக்கும்படியும் கேட்டுக்கொண்டார். இறுதியாக எல்லாரும் ஆங்கிலம் படிக்க வேண்டிய அவசியத்தையும் எடுத்துரைத்தார். தென் ஆப்பிரிக்காவில் இந்தியர்கள் நன்ருக நடத்தப்பட வேண்டுமென்பதே அவர் நோக்கம். அதற்குத் துணையாய் இருக்கவேண்டியது இந்தியர்களே. ஆகையால், அவர்கள் முதலாவது தங்கள் தீய பழக்க வழக்கங்களை ஒழித்துவிட்டுத் திருந்தவேண்டும். காந்தி, அரசியல் நன்மைகள் அடைவதைவிட அந்த நன்மைகளை அடையத் துணையாக இருக்கும் மக்களையே திருத்த விரும்பினார். 'மனிதன் உயராமல் மனிதனின் அந்தஸ்து உயர்வதினால் என்ன லாபம்? காந்தியின் நோக்கம் எல்லாம் ஒரு கருவியை நல்ல கருவியாக்குவதுதான். அவர் மனிதனை உயர்த்துவதில்தான் மிகவும் அக்கறை காட்டினார். 'ஒரு வகுப்பினரை இழிவுபடுத்துவதால் மற்ற வகுப்பினர் எப்படி உயர்வர்?' என்பது எனக்கு விளங்கவில்லை என்று காந்தி தம் சுயசரிதையில் கூறுகின்றார். அதற்கு விடை அவருக்குத் தெரியும். சிலர் மற்றவர்களைக் கைதூக்கிவிடுவதால் பெரியவர்களாகிறார்கள். சிலர் மற்றவர்களை இழிவுபடுத்தித் துன்புறுத்துவதால் பெரியவர்களாகிறார்கள். உபகாரிக்கும் துஷ்டனுக்கும் இதுதான் வேறுபாடு. மகாத்மாவுக்கும் சர்வாதிகாரிக்கும் உள்ள வேற்றுமையும் இதுவேயாகும்.

சிறுபான்மையராலும் சரி, பெரும்பான்மையராலும் சரி, ஒரு வகுப்பினர் மற்ற வகுப்பினரைத் துன்புறுத்துவதற்குக் காரணம் வேறுபாடுகளை ஏற்றுக்கொள்ளக்கூடிய சகிப்புத்தன்மை இன்மையும் தன்னம்பிக்கையற்ற அச்சமும் ஆகும். போட்டி நிறைந்த இவ்வுலகத்தில் பெரும்பாலோர் தம்முடன் போட்டியிடுபவர்களையும், தம்மோடு ஒத்துவராதவர்களையும், தம் கருத்தை ஏற்றுக்கொள்ளாதவர்களையும், எதிரிகளையும் வெறுக்கின்றனர். சிறுபான்மையோரின் நன்மைகளைப் பாதுகாக்க விரும்பும் பலரும் சிறுபான்மையோரின் நற்பண்புகளைப் பெரும்பான்மையோருக்கு எடுத்துக்காட்டி ஒருவகையான 'வாணிபம்'

செய்ய முற்படுகின்றனர். காந்தியும் அதே தவற்றைச் செய்தார். டிரான்ஸ்வால் குடியரசின் ஆசிய இலாகாவின் தலைவராகிய லயனல் கர்ட்டிஸைக் (Lionel Curtis) காந்தி பார்க்கப்போனார். அந்த இலாகா இந்தியர்களுடைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காகப் புதிதாக ஏற்படுத்தப்பட்டது. இந்தியர்களுடைய உழைப்பு, சிக்கனம், பொறுமை முதலிய நல்ல பண்புகளைப்பற்றிக் கர்ட்டிஸுக்கு காந்தி எடுத்துக்கூறினார்.

'விஷயம் தெரிந்தவர்களுக்கு நீர் போதிக்கிறீர். இங்குள்ள ஐரோப்பியர் இந்தியர்களுக்குப் பயப்படுவது அவர்களுடைய நல்ல குணங்களுக்காகவே. கெட்ட குணங்களுக்காக அல்ல' என்று அவர் பதிலளித்தார். வேறு சில இடங்களில் சிறுபான்மையோர் பாரபட்சமாக நடத்தப்படுவதற்குக் காரணம் அவர்களின் குணக்கேடு என்று கூறப் படுகிறது. ஆகையால், ஒரு வகுப்பினர் பாரபட்சமாக நடத்தப் படுவதற்குக் காரணம் அவர்களின் குற்றமோ குணமோ காரணமாகச் சொல்லமுடியாது. பாரபட்சத்தை ஒழிக்கப் பாரபட்சத்தை அனுசரிப்ப வர்களையே திருத்தவேண்டும். காந்தி அந்தப் பணியையும் ஏற்றுக் கொண்டார்.

தென் ஆப்பிரிக்காவிலுள்ள வெள்ளையர்கள் எண்ணிக்கையில் பெரும்பான்மையான நீக்ரோக்களிடமிருந்தும் இந்தியர்களிட மிருந்தும் தங்களைப் பாதுகாத்துக்கொள்வது அவசியம் என்பதை உணர்ந்தனர். ஐரோப்பியர் அங்ஙனம் நினைத்ததை காந்தியும் கண்டு கொண்டார். 1896-ல் நேட்டால் மாகாணத்தில், 4,00,000 நீக்ரோக் களும், 51,000 இந்தியர்களும், 50,000 வெள்ளையர்களும் வசித்தனர். நன்னம்பிக்கைமுனை (Cape of Good Hope) காலனியில் 9,00,000 நீக்ரோக்கள், 10,000 இந்தியர்கள், 4,00,000 வெள்ளையர்கள் இருந்த னர். டிரான்ஸ்வாலில் 6,50,000 நீக்ரோக்கள், 5,000 இந்தியர்கள், 1,20,000 வெள்ளையர்கள் இருந்தனர். 1914-ல் 50 லட்சம் நீக்ரோக் களும், 12½ லட்சம் வெள்ளையரும் இருந்தனர். நீக்ரோக்களின் தலைமைப்பதவியை இந்தியர்கள் ஏற்றுக்கொண்டுவிடுவார்களோ என்ற அச்சம் வெள்ளையர்களுக்கு இருந்திருக்கலாம் அல்லது நீக்ரோக்களை விட எண்ணிக்கையில் குறைந்தவர்களாகவும் குடியேறியவர்களாகவும் இந்தியர்கள் இருந்ததால் வெள்ளையர்களின் கொடுமைக்கு எளிதாக இலக்காகி இருக்கலாம்.

1860ஆம் ஆண்டில் தென் ஆப்பிரிக்காவிற்கு இந்தியர் ஒப்பந்தக் கூலியாட்களாக வெள்ளையருக்குச் சொந்தமான கரும்பு, தேயிலை, காப்பித் தோட்டங்களில் வேலைசெய்ய வந்து இறங்கினர். அத் தோட்டங்களில் வேலைசெய்ய நீக்ரோக்களுக்கு விருப்பமில்லை. இந்தியர் ஐந்து வருடக் குத்தகையில் வேலைக்குவந்தனர். சில சமயங்

களில் சுதந்திர வேலையாட்களாகப் பின்னும் ஐந்து வருடங்கள் தங்கியிருந்தனர். இரண்டுவிதக் கூலியாட்களுக்கும் இந்தியாவிற்குச் செல்லும் கப்பல் கட்டணத்தை ஒப்பந்தக்காரரே கொடுத்தனர். ஐந்து வருட ஒப்பந்தத்தில் வந்த இந்தியரில் பலர், தென் ஆப்பிரிக்காவில் சுதந்திரக் கூலியாட்களாகத் தங்கினர். பொருளாதார நிலைமை இந்தியாவைவிட அங்கு நன்ருக இருந்தது. இந்தியர் தங்களுடைய திறமையினுலும், உழைப்பினுலும், சிக்கனத்தினுலும் பணம் சேர்க்கத் தொடங்கினர். வரவர இந்தியரின் எண்ணிக்கையும் அவர்கள் செல்வமும் அதிகரித்ததைப் பார்த்து அஞ்சிய வெள்ளையர் 1894ஆம் ஆண்டு சட்டமுறைகளை மாற்றினுர்கள். அந்த வருடத்திலிருந்து தென் ஞப்பிரிக்காவிற்கு வந்த ஒப்பந்தக் கூலியாட்கள் ஐந்து வருடங்கள் முடிந்ததும் இந்தியாவிற்குத் திரும்பவேண்டும்; அல்லது ஆயுள் முழுவதும் அடிமைக் கூலியாக அங்கு இருக்கவேண்டும் என்று சட்டமியற்றினர். ஆனுல், அதில் தப்புவதற்கு ஒரு திட்டம் இருந்தது. சுதந்திரத் தொழிலாளியாக அவன் அங்குத் தங்கியிருக்க விரும்பினுல் வருடத்திற்கு மூன்று பவுன் வரி தனக்கும் தன்னைச் சார்ந்த ஒவ்வொருவருக்கும் தனித்தனியாகச் செலுத்தவேண்டும். இந்த வரிச்சுமை கடுமையாக இருந்ததினுல், இந்தியர் நாடு திரும்பவேண்டும் அல்லது வாழ்நாள் முழுவதும் அங்கே அடிமையாக இருக்கவேண்டுமென்ற நிலைமை ஏற்பட்டது.

இந்தியாவிலிருந்து தென் ஆப்பிரிக்காவிற்குச் சுதந்திரமாகக் குடியேறிய சிலர் சிறு வியாபாரிகளாகவும், கைவினைஞராகவும், பெரிய வர்த்தகர்களாகவும், காந்திபோன்ற சிலர் தொழில் வல்லுநராகவும் இருந்தனர். சிலர் ஏராளமாகச் சொத்துச் சேர்த்தனர். சில இந்தியர்கள் கப்பல் கம்பெனிகள்கூட வைத்திருந்தனர். இந்தச் சுதந்திர இந்தியர்கள் எல்லாம் பிரிட்டிஷ் ராணி விக்டோரியாவின் (Queen Victoria) குடிமக்கள். சொத்துத்தகுதி இருந்த 250 சுதந்திர இந்தியர்களுக்கு ஓட்டுரிமை இருந்தது. 1894ஆம் ஆண்டில் நேட்டால் சட்டசபை, ஒரு சட்டத்தின்மூலம் ஆசியவாசிகளுக்கு வோட்டுரிமை இல்லை என்று தெளிவாய் அறிவித்துவிட்டது.

இந்தியருக்கு இன்னும் பல வசதிக்குறைவுகள் இருந்தன. நேட்டாலில் இரவு 9 மணிக்குப் பிறகு அனுமதிச்சீட்டு இல்லாமல் வீட்டைவிட்டு வெளியே செல்லக்கூடாது. போயர்கள் (Boyers) அல்லது டச்சுக் குடியேற்றக்காரர்களால் ஏற்படுத்தப்பட்ட ஆரஞ்சு ஃபிரீ ஸ்டேட்டில் (Orange Free State) இந்தியர் சொத்து வைத்திருக்கக்கூடாது. வியாபாரத்திலோ, பண்ணையிலோ ஈடுபடக்கூடாது. ஜுலுலாந்தின் கிரௌன் காலனியில் (Crown Colony) நிலம் வாங்கக்கூடாது. சொந்தமாகவும் நிலம் வைத்திருக்கக்கூடாது. டிரான்ஸ்வாலில் கூட இந்தியர்கள் சொந்த நிலம் வைத்திருக்க உரிமை இல்லை.

அத்துடன் அங்கு வசிப்பதற்கு மூன்று பவுன் கட்டணம் கட்டவேண்டும். அதுவும் ஒதுக்கப்பட்ட சேரிகளில்தான் வசிக்கவேண்டும். கேப் காலனியிலுள்ள (Cape Colony) சில சமூகத்தார் இந்தியர்களை நடைபாதைகளில்கூட நடக்க அனுமதிப்பதில்லை. அந்த நிபந்தனைகள் இல்லாத இடங்களிலும்கூட இந்தியர் உதைத்துத் தள்ளப்படுவதைத் தவிர்க்க நடைபாதைகளில் செல்லுவதில்லை. காந்தியும் ஒரு தடவை அவ்வாறு உதைத்துத் தள்ளப்பட்டிருக்கிறார். எனினும், சட்டப் புத்தகங்கள் இந்தியரைத்தான், 'அரைக் காட்டுமிராண்டி ஆசிய வாசிகள்' என்று குறிப்பிட்டு இருக்கின்றன.

காந்தி தாய்நாடு சென்றிருந்தபோது, 1896ஆம் ஆண்டு அக்டோபர் 26ஆம் தேதி சென்னையில் நடந்த ஒரு பொதுக்கூட்டத்தில் 'வெள்ளையர் நம்மை மிருகங்களைப்போல நடத்துகிறார்கள்' என்று கூறியிருக்கிறார்.

1899 முதல் 1902 வரை போயர் யுத்தம் டச்சுக் குடியேற்றக்காரருக்கும் பிரிட்டிஷாருக்கும் இடையே நடந்தது. அதில் பிரிட்டிஷார் வெற்றிபெற்றனர். சண்டைக்குப்பிறகு இரு கட்சியினரும் மூன்றாவது கட்சியினராகிய இந்தியர்களைத் துன்புறுத்துவதில் தங்களுடைய காயத்துக்கு மருந்து தேடினர். தென் ஆப்பிரிக்காவில் இந்தியப் பிரச்சினை ஓர் அரசியல் கால்பந்தாயிற்று. ஜேன் கிறிஸ்டியன் ஸ்மட்ஸ் (Jan Christiaan Smuts) என்பவர் ஒரு போயர்; வழக்கறிஞர்; தளபதி. போயர் தோல்விக்குப்பின், அவர் ஆப்பிரிக்காவின் நிதி, பாதுகாப்பு மந்திரியானார். 1906ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் ஒரு தேர்தல் பேச்சில், 'ஆசியப் புற்றுநோய் தென் ஆப்பிரிக்காவின் முக்கிய பாகங்களை அரிக்கத்தொடங்கிவிட்டது. அதை உறுதியுடன் களைந்தெறியவேண்டும்' என்றார். அவரைப்போன்றே போயர் தளபதியாக இருந்த பிரதம மந்திரியான ஜெனரல் லூயிஸ் போதா (General Louis Botha) சர்க்காரின் இந்தியக் கொள்கையை அதிதீவிரமாக்கினார். 1907ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ஒரு தேர்தல்கூட்டத்தில், 'என்னுடைய கட்சி பதவிக்கு வந்தால், நாங்கள் கூலிகளை இங்கிருந்து நான்கு வருடங்களில் துரத்திவிடுவோம்' என்றார். கூலி என்பது இந்தியரைக் குறித்து உபயோகிக்கப்பட்ட ஒரு நிந்தனைச்சொல்.

ஒரு லட்சம் இந்திய மக்களின் வாழ்க்கை ஆபத்திலிருந்தது. காந்திக்கு அவர்களைக் காப்பாற்றமுடியும் என்ற நம்பிக்கை உதித்தது.

6. தாக்குதலின்போதும் தைரியம்

காந்தி, வெள்ளையர் நிறத்துவேஷத்தை நீக்கிவிட முடியும் என்று எதிர்பார்க்கவில்லை. 1918ஆம் ஆண்டு ஜூன் 2ஆம் தேதி 'டைம்ஸ் ஆஃப் இந்தியா.' (Times of India) பத்திரிகையில், 'நிறத்துவேஷத்

தைச் சட்டத்தினுல் அகற்றமுடியாது. பொறுமையான உழைப்பினுலும் அறிவினுலும்தான் அதை நீக்கமுடியும்' என்று எழுதியிருக்கிறுர். அதை விரைவில் அகற்றிவிட முடியுமென்றும் அவர் கருதவில்லே. 'இந்தியர் இத் துவேஷத்தினுல் சங்கடப்படுகிருர்கள். ஆனுல், அமைதியாகச் சகித்துக்கொண்டிருக்கிருர்கள்' என்ருர். 'அந்தத் துவேஷத்தைச் சட்டமாக்கி வளர்த்ததினுல்தான்' அவருக்குத் தென்ஆப்பிரிக்கரோடு பூசல் ஏற்பட்டது. சட்டங்களாவது நேர்மையாக இருக்கவேண்டுமென்று அவர் வேண்டிக்கொண்டார். அந்தச் சட்டங்கள் நியாயமாக வழங்கப்படும் என்று அவர் எதிர்பார்க்கவில்லே. வெள்ளேயருக்கு விசேஷ சலுகைகள் இருக்குமென்பது அவர் எதிர்பார்த்ததே. ஆனுல், சட்டப்படி சமத்துவம் கிடைத்தால் போதுமென்று காந்தி எண்ணினுர். அதன்பின் அதன் சிக்கலான போக்கிலே வாழ்க்கை உருவாகட்டும். நல்ல குடிமக்கள் சரியான முறையில் அதை நடத்துவார்கள் என்று அவர் நம்பினுர். அப்படியின்றி, செயலற்று இந்தியர் அந்த இழிவை ஏற்றுக்கொண்டால் அவர்கள் கௌரவத்தை இழப்பதோடு, ஆத்மீக நிலேயிலும் தாழ்ந்துவிடுவார்கள். அந்த இழிவை இந்தியர்மேல் சுமத்திய வெள்ளேயருக்கும் அதேநிலே காலப்போக்கில் ஏற்படும் என்று காந்தி கருதினுர்.

காந்தி தம் குடும்பத்தையும் தாய்நாட்டையும் விட்டுவந்து மூன்று வருடங்கள் ஆகிவிட்டன. நிறவேறுபாட்டை அகற்ற இன்னும் நீண்ட காலம் தென்னுப்பிரிக்காவில் இருக்கவேண்டும் என்பதை உணர்ந்தார். ஆகவே, தம்முடைய மனைவி கஸ்தூரிபாவையும் இரு மைந்தரையும் ஆப்பிரிக்காவிற்கு அழைத்துவர 1896ஆம் ஆண்டு இந்தியாவிற்குத் திரும்பினுர். காந்தியின் மூத்த மகன் ஹரிலாலுக்கு அப்பொழுது எட்டு வயது. இரண்டாவது மகன் மணிலால் 1892ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 28ஆம் தேதி பிறந்தார். தென் ஆப்பிரிக்காவிலுள்ள இந்திய சகோதரர்களின் நிலேமையை இந்தியர்களுக்கு விளக்கிச்சொல்ல இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டார். இவருடைய முயற்சிகளெல்லாம் தென் ஆப்பிரிக்காவிற்குத் தெரிவிக்கப்பட்டது. அவருக்கு விரோதமாகப் பலர் கிளம்பினர். அவருடைய கப்பல் டர்பன் (Durban) துறைமுகத்தை அடைந்தபோது, இந்தியரை ஏற்றிவந்த இன்னெரு கப்பலும் அங்கு வந்துசேர்ந்தது. இரண்டு கப்பல்களிலும் சேர்ந்து 800 இந்தியர் இருந்தனர். உதவாக்கரை இந்தியரைத் தென் ஆப்பிரிக்காவிற்குக் கொண்டுவந்து நிரப்புவதாக காந்திமீது குற்றஞ் சாட்டப்பட்டது. உண்மையில் அவர்கள் வருகைக்கும் காந்திக்கும் ஒரு சம்பந்தமும் கிடையாது. அவ் விரு கப்பல்களும் அவைகளிலுள்ள இந்தியரோடு இந்தியா திரும்பவேண்டுமென்று வெள்ளேயர் கட்டளேயிட்டனர். இறுதியில் அவர்கள் இந்தியரைத் தென் ஆப்பிரிக்காவில் இறக்கிவிடச் சம்மதித்தபோது ஓர் எதிர்ப்புக்கூட்டம் காந்தியைத் தாக்கியது. அவர் மீது கல், செங்கல், முட்டை முதலியவற்றை வீசினர். அவர் தலேப்

பாகையைச் சிலர் கிழித்தெறிந்தனர். அவரை அடித்து உதைத்தனர். காந்தி வேதனையினால் மயக்கமுற்றார். ஆனால், பக்கத்திலுள்ள ஒரு வீட்டின் இரும்புக்கிராதியைப் பிடித்துக்கொண்டதினால் கீழே விழ வில்லை. அப்பொழுதும் வெள்ளையர் அவர் முகத்தில் கையால் குத்தி னர்; அடித்தனர். அச்சமயம் தற்செயலாக அவ்வூர் போலீஸ் சூப்பரின் டெண்டின் மனைவி திருமதி அலெக்ஸாந்தர் (Mrs. Alexander) அப் பக்கம் வந்தார். கஷ்டநிலையில் உள்ள காந்திக்கும் வெறிபிடித்த கூட் டத்திற்கும் நடுவில் நின்றுகொண்டார். அடிபட்டு இரத்தம் ஒழுக காந்தி, இந்திய நண்பர் ஒருவர் வீட்டிற்கு எடுத்துச்செல்லப்பட்டார். அங்கேதான் அவருடைய மனைவியும் இருபிள்ளைகளும் அனுப்பப்பட் டிருந்தனர். வெறிபிடித்த கூட்டம் அந்த வீட்டைச் சூழ்ந்துகொண்டு காந்தி, அவர்களுக்குச் சரணடையவேண்டுமென்றது. அப்பொழுது திரு. அலெக்ஸாந்தர் வெளியே வந்தார். அந்தக் கூட்டத்திற்கு காந்தி யின் இரத்தம் வேண்டும். ‘நாங்கள் அவரை எரித்துவிடுவோம்’ என்று கூட்டத்தினர் இரைந்தனர். கோபம் சிறிது தணிந்து இடையிடையே, ‘புளித்த ஆப்பிள் மரத்தின்மேல் கிழட்டு காந்தியைத் தொங்கவிடு வோம்’ என்ற பாட்டைப்பாடினார்கள். சிலர் காந்தி இருந்த வீட்டிற் குத் தீ வைக்க ஆயத்தம் பண்ணினர். போலீஸ் சூப்பரின்டெண்ட் நிலைமையைக்கண்டு பீதிஅடைந்து இரண்டு துப்பறியும் போலீஸ்காரர் களை ரகசியமாக வீட்டிற்குள் அனுப்பினார். அவர்களில் ஒருவர் உடையை காந்தி அணிந்துகொண்டார். அவ் விரு போலீஸ்காரர்களும் உடம்பில் கறுப்புச்சாயம் பூசிக்கொண்டு இந்தியர்போல உடுத்துக் கொண்டனர். இவ்வாறு மாறுவேஷத்தில் வீட்டின் பின்பக்கமாகத் தப் பிச்சென்று, குறுக்குச் சந்துகளின் வழியாகப் போலீஸ் நிலையத்தை அடைந்தனர். நிலைமை சீராகும்வரை காந்தி போலீஸ் பாதுகாப்பில் மூன்று நாட்கள் இருந்தார்.

காந்திக்கு ஏற்பட்ட இந்த மானக்கேடும் விசாரணையில்லாத தண் டனையும்பற்றிய செய்தியை லண்டனிலுள்ளவர்கள் கேள்வியுற்றனர். அப்போது பிரிட்டிஷ் குடியேற்ற நாடுகளின் மந்திரியாயிருந்த ஜோஸஃப் சேம்பர்லின் (Joseph Chamberlain) காந்தியைத் தாக்கிய வர்கள்மீது வழக்குத் தொடருமாறு நேட்டால் அரசாங்கத்திற்குத் தெரி வித்தார். காந்திக்கு அவரைத் தாக்கியவர்களில் பலரை அடையாளம் தெரியும். ஆனால், காந்தி அவர்களுக்கு விரோதமாக வழக்குத்தொடர மறுத்துவிட்டார். ‘இது அவர்கள் தவறு இல்லை. சமூகமும் நேட்டால் அரசாங்கமுமே இதற்குப் பொறுப்பு என்று,’ சொன்னார். ‘இது எனக்கு ஓர் ஆத்மீக விஷயம். நான் தன்னடக்கத்தைக் கைக்கொள்ளப் போகிறேன்’ என்று கூறினார்.

இரண்டு வருடங்களுக்குப்பிறகு காந்தி போயர் யுத்தத்தில் பிரிட் டிஷ் கட்சிக்கு உதவிசெய்ய முன்வந்தார். போர்முனையில் டோலி

தூக்கவும் ஆஸ்பத்திரியில் சிப்பந்திகளாக வேலைசெய்யவும் இந்தியர் அடங்கிய ஒரு படையைத் திரட்டினர். நேட்டால் அரசாங்கம் அவருடைய சேவையை நிராகரித்தது. இருந்தபோதிலும் காந்தியும் மற்ற இந்தியரும் தங்கள் சொந்தச்செலவில் நோயாளிகளுக்குத் தொண்டு செய்யும் பயிற்சியைப்பெற்றனர். மறுபடியும் நேட்டால் அரசாங்கம் இந்தியர்களின் உதவிகளை ஏற்க மறுத்தது. யுத்தத்தில் போயர்கள் முன்னேறிக்கொண்டுவந்தனர். போர்க்களத்தில் இறந்தவர்களின் சடலங்கள் குவிந்தன. காயம்பட்டவர்களுக்குப் போதுமான பராமரிப்பு இல்லை. இறுதியில் நேட்டால் அரசாங்கம் இந்திய முதலுதவிப்படையை அமைக்கஅனுமதித்தது. 300 சுதந்திர இந்தியரும் ஒப்பந்தக்காரரிடம் அனுமதிபெற்ற 800 ஒப்பந்தத் தொழிலாளரும் அப் படையில் சேர்ந்தனர். தென் ஆப்பிரிக்காவும் இங்கிலாந்தும் அவர்கள் சேவையைப் பாராட்டின. இந்தியர் துப்பாக்கிமுனையில் காட்டிய வீரத்தைப் பற்றிக் கேள்விபட்டபோது அவர்களுக்கு இந்தியர்மீது வியப்பு அதிகரித்தது.

'இல்லஸ்ட்ரேட்டட் ஸ்டார்' (Illustrated Star) என்னும் ஜோஹன்ஸ்பர்க் பத்திரிகையின் 1911ஆம் ஆண்டு ஜூலைமாத இதழில் திரு. வீயர் ஸ்டென்ட் (Mr. Vere Stent) என்னும் பிரிட்டிஷ் பத்திரிகை ஆசிரியர் 1900ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ஸ்பையன் காப் (Spion Kop) என்ற இடத்தில் நடந்த ரத்தவெறிபிடித்த போரைப் பற்றி ஒரு கட்டுரை எழுதியிருக்கிறார். பிரிட்டிஷ் ஜெனரல் புல்லர் (Buller) தலைமையிலிருந்த படை பின்வாங்கநேரிட்டது. காயம் அடைந்தவர்களைக்காப்பாற்ற வந்து உதவும்படி அவர் இந்தியர்களுக்கு ஓர் அவசரச்செய்தி அனுப்பினார். போர்க்களத்திற்கு காந்தி தம் தொண்டர்களை அழைத்துச்சென்றார். எதிரிகளின் துப்பாக்கிக் குண்டுகளுக்கு நடுவில் அவர்கள் பலநாட்கள் வேலைசெய்தனர். காயமடைந்த போர்வீரர்களைப் படைத்தளத்தின் ஆஸ்பத்திரிக்குத் தூக்கிச் சென்றனர். 'காந்தியைவிட வலிமைமிக்கவரெல்லாம் முந்தின இரவு முழுவதும் செய்த வேலையால் துவண்டு விழுந்துவிட்டபோதும், காந்தி மட்டும் அதிகாலையில், சாலை ஓரத்தில் உட்கார்ந்துகொண்டு வழக்கமாகக் கொடுக்கப்படும் பிஸ்கட்டைச் சாப்பிட்டுக்கொண்டிருந்தார். இந்தக் காட்சியை நான் காணநேர்ந்தது. ஜெனரல் புல்லருடைய படையைச் சேர்ந்த ஒவ்வொருவரும் உற்சாகமின்றி சோர்ந்துபோயிருந்தனர். எதைக் கண்டாலும் எரிச்சல்பட்டுக்கொண்டிருந்தனர். ஆனால், காந்திமட்டுமே இன்பதுன்பங்களை உணராதவரைப்போல் உற்சாகத்துடன் காணப்பட்டார். அவருடைய பேச்சில் நம்பிக்கை தொனித்தது. கண்களில் கருணை பொழிந்தது' என்று வீயர் ஸ்டென்ட் குறிப்பிட்டிருக்கிறார். காந்தி எல்லோருக்கும் நன்மையே செய்துவந்தார். அவர் காக்கி உடை அணிந்திருந்தார். பிரகாசமான அகல விளிம்புள்ள இடை

யன்பட்டையைக் கையில் அணிந்திருந்தார். மீசை கீழ்நோக்கி வளைந்திருந்தது. இந்தியப்படை கலைக்கப்பட்டபோது, அச் செய்தியைப்பற்றி அறிக்கைகளில் குறிப்பிட்டுப் பாராட்டினார்கள். காந்திக்கும் அவருடைய பல தோழர்களுக்கும் போர்ப்பதக்கங்கள் வழங்கப்பட்டன.

போயர் யுத்தத்தில் இந்தியர் காட்டிய மனோதிடம், தென் ஆப்பிரிக்க வெள்ளையரின் நேர்மை உணர்ச்சிக்கு வழிகோலும், கறுப்புநிற ஆசியாக்காரர்மீது அவர்களுக்கிருந்த தவறான எண்ணமும் குறையுமென காந்தி நம்பினார். ஆனால், அதற்கு நேர்மாறாக நடந்தது. 1906ஆம் ஆண்டின் முற்பகுதியில் ஜுலு கலகம் ஏற்பட்டது. 24 பேர் அடங்கிய மருத்துவக்குழுவுடன் காந்தி பிரிட்டிஷ்படையுடன் சேர்ந்துகொண்டார். டோலி தூக்குவது, முதல்சிகிச்சை புரிவது முதலிய சேவைகளை இந்தியத் தொண்டர்கள் செய்தனர். 'பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் உலகநலனுக்காக ஏற்பட்டது' என்ற நம்பிக்கையில் காந்தி தாமாகவே அதற்குப் படைதிரட்டினதாகக் கூறினார். பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தினிடம் உண்மையான விசுவாசம் வைத்திருந்தார்.

தென் ஆப்பிரிக்காவில் இருந்த இந்த நாட்களிலும் இடையிடையே இந்தியாவிற்குச் சென்ற நாட்களிலும் காந்தியிடம் சளைக்காத உற்சாகமும், நேர்மைக்குப் புறம்பான காரியங்களைக் காணும்போது சீற்றம்கொள்ளும் தன்மையும், பிறர் நம்பிக்கையைத் தூண்டும் நாணயமும், எளியவர்களிடமும் பெரியவர்களிடமும் எளிதில் பழகும் சாமர்த்தியமும் காணப்பட்டன. சரித்திரப் புகழ்பெற்ற காந்தி ஆவதற்குரிய அடையாளம் இன்னும் வெளியே தெரியவில்லை. இப்போதுதான் அது உருவாகிக்கொண்டிருந்தது.

7. மாற்றம்

தென் ஆப்பிரிக்காவில் காந்தி ஐரோப்பிய சூட்டும், விறைப்பான வெள்ளைச் சிறகு காலரும் சட்டையும், பகட்டான கோடுபோட்ட கழுத்துப்பட்டையும், பளபளப்பான செருப்பும் அணிந்திருந்தார். டர்பன் நகரில் நாகரிகமான பகுதியில் ஓர் ஆங்கிலேய மோஸ்தர் பங்களாவை அமர்த்தியிருந்தார். அங்கு அவர் வழக்கறிஞராக இருந்து வருடத்திற்கு ஐந்து முதல் ஆறு ஆயிரம் பவுன் வரை சம்பாதித்தார். அவரது வாழ்க்கை ஐரோப்பியப் பழக்கவழக்கங்களை மேற்கொண்ட ஓர் இந்தியரின் வாழ்க்கைபோலிருந்தது.

ஆனால், அவருக்குச் சில விசித்திரமான கொள்கைகள் உண்டு. ஆப்பிரிக்காவில் 1897ஆம் வருடம் அவருடைய மூன்றுவது மகன் ராம்தாஸ் (Ramdas) பிறந்தபோது அப் பிள்ளையை வளர்க்கும் பொறுப்பை அவரே மேற்கொண்டார். 'தாய்க்கு ஆலோசனை' என்ற

நூலை காந்தி படித்திருந்தார். அதனால் 1900ஆம் ஆண்டு மே திங்கள் 22ஆம் தேதி அவரது நாலாவது குழந்தை பிறந்தபோது பிரசவத்தை அவரே கவனித்துக்கொண்டார். அதைப்பற்றி அவர், 'நான் பயப் படவே இல்லை' என்று சொன்னார்.

கஸ்தூரிபாவுக்கு வீட்டிலே காந்தி பெருந்தொல்லையாக இருந் திருப்பார். சமையலிலும் குழந்தை வளர்ப்பிலும் தலையிட்டதோ டல்லாமல் அடிக்கடி பல விருந்தாளிகளை வீட்டிற்கு அழைத்து வந்தார். அவர்களுக்காகத் தோட்டி செய்யும் வேலையைத் தாம் செய் வதுமன்றி, கஸ்தூரிபாவையும் செய்யும்படி வற்புறுத்தினார். காந்தியின் வீட்டில் ஓடும் குழாய் நீர் கிடையாது. ஒவ்வோர் அறையிலும் சிறுநீர் கழிக்கும் கலயம் உண்டு. இந்தியாவில் அசுத்தமான வேலைகள் செய்வதற்குத் தீண்டாதார் வகுப்பைச்சேர்ந்த தோட்டிகள் உண்டு. காந்தியோ தம் வீட்டில் அவ் வேலையைச் செய்ய தீண்டாதாரை நியமிக்க மறுத்துவிட்டார். அவரும் கஸ்தூரிபாவும் சில சமயங்களில் பெரிய பிள்ளைகளும் அப் பாத்திரங்களை அப்புறப்படுத்திவந்தனர். காந்தி வற்புறுத்தினார்; கஸ்தூரிபாவுக்கும் அதைச் செய்வதைத் தவிர வேறு வழியில்லை. காந்தியின் சட்டக் காரியாலயத்தில் வேலைசெய்த தீண்டாதார் வகுப்பைச்சேர்ந்த குமாஸ்தா ஒருவர் அவர் வீட்டிலேயே தங்கியிருந்தார். இந்துக்கள் தீண்டாதாருக்கு இழைத்த கொடுமைகளி லிருந்து தப்புவதற்காக அவர் கிறிஸ்தவ மதத்தைத் தழுவினார். வைதீகம் நிறைந்த கஸ்தூரிபா அந்த குமாஸ்தாவைத் தீண்டாத வராகவே கருதினார். அதனால் கஸ்தூரிபா அவருடைய பாத்திரத்தைக் கழுவாமல் விட்டார். உண்மையில் அந்தக் கலயம் கழுவும் வேலை முழுவதையுமே அவர் வெறுத்தார். எதற்காகத் தாமும் தம் கண வரும் பிள்ளைகளும் இத்தகைய அசுத்தமான வேலைகளைச் செய்ய வேண்டுமென்று நினைத்தார். ஆனால், காந்தி, அது கஸ்தூரிபாவின் கல்வி வளர்ச்சியில் ஒரு பாகம் என்று கருதினார். சில வேளைகளில் அவர் அழுது கண்கள் சிவந்திருக்கும்; அது காந்திக்குக் கோபத்தை உண்டுபண்ணும். அந்த வேலையைச் செய்தால்மட்டும் போதாது; செய்வதை மகிழ்ச்சியோடும் செய்யவேண்டுமென்பார். ஒரு தடவை கஸ்தூரிபா அழுது கண்ணீர் சிந்துவதைப் பார்த்ததும், 'என்னுடைய வீட்டில் இத் தவறுகள் நடைபெற அனுமதியேன்' என்று இரைந்தார். 'உங்கள் வீட்டில் நீங்களே இருந்துகொண்டு என்னைப்போக அனுமதியுங்கள்' என்றார் கஸ்தூரிபா.

காந்தி அவர் கையைப் பிடித்து இழுத்துக்கொண்டு வாசலுக்குப் போய்க் கதவைத் திறந்து வெளியே தள்ளப்போனார். கஸ்தூரிபா, 'உங்களுக்கு வெட்கம் இல்லையா? நான் எங்குப் போவேன்? எனக்குப் பெற்றோரோ, வேறு உறவினரோ இங்கு இல்லையே' என்று சொல்லி ஏங்கிஏங்கி அழுதார். 'கதவை அடைத்துவிட்டு, நிதானமாக

இருங்கள். மற்றவர்கள் நம்மை வேடிக்கை பார்க்கும்படி செய்யா தீர்கள்' என்றார்.

இந்தச் சொற்கள் காந்தியை அவர் நிலைக்குக் கொண்டுவந்தன. அவருக்கு முரட்டுக்குணம் உண்டு. மகாத்மாவிற்குரிய சாந்த குணத்தை அவர் நெடுநாளைய பயிற்சிக்குப்பிறகே பெற்றார். அவர் நிதானமான ஆசையற்ற யோகியாய் எளிதில் ஆகிவிடவில்லை. அவர் தம்மைத் தாமே திருத்திக்கொண்டார். தம்முடைய குறைகளை உணர்ந்து, தீய எண்ணங்களை ஒழித்து, நல்லவராக மாற்றிக்கொள்ள தீவிர முயற்சி செய்தார். ஒரே வாழ்க்கையில் இரண்டாவது பிறவி எய்தியதற்கு இவர் நல்ல உதாரணம். இந்த மாறுதல் தென் ஆப்பிரிக்காவில் ஏற்பட்டது. அதன் விளைவாக, அவர் புது மனிதரானார்.

1896ஆம் ஆண்டில் காந்தி இந்தியாவிற்குத் திரும்புமுன் தென் ஆப்பிரிக்காவிலுள்ள இந்தியர்கள் அளித்த பரிசுகளை எவ்விதத் தடு மாற்றமுமின்றிப் பெற்றுக்கொண்டார். ஆனால், 1901ஆம் ஆண்டு அவர் பம்பாய்க்குப் புறப்படும்போது விலையுயர்ந்த ஆபரணங்கள் அவருக்குப் பரிசாகக் கொடுக்கப்பட்டன. கஸ்தூரிபாவுக்கு ஒரு தங்கச்சங்கிலியும் கொடுக்கப்பட்டது. அன்று இரவு காந்தியால் தூங்கமுடியவில்லை. வைரம், முத்து, தங்க நகைக் குவியல்களைப் பாதுகாப்பதா அல்லது அவற்றைத் துறந்து சுதந்திரத்தை அடைவதா என்று தீவிரமாகச் சிந்தித்தார். இறுதியில் அவைகளைத் தாம் வைத்துக்கொள்ளக்கூடாது என்று தீர்மானித்தார். கஸ்தூரிபா இந்த முடிவை எவ்வளவு எதிர்த் தும் பயனில்லை. தென் ஆப்பிரிக்க இந்தியருக்கு ஒரு நிதி ஏற்படுத்த அவை பயன்பட்டன.

1901ஆம் ஆண்டு பம்பாயில் ஓர் அமெரிக்க இன்ஷூரன்ஸ் ஏஜென்ட் காந்தியிடம் ஒரு பாலிஸி விற்க வந்தார். அவரைப்பற்றி 'நல்ல முகப்பொலிவும் இனிமையாகப் பேசும் திறமையும் உள்ளவர்' என்று காந்தி கூறுகிறார். அவர் காந்தியின் வருங்கால நலனைப்பற்றி நெடுங்காலம் பழகிய நண்பரைப்போல விவாதித்தார். 'அமெரிக்காவில் உங்கள் அந்தஸ்தில் உள்ளவர்கள் எல்லோரும் இன்ஷூர் செய்திருக் கிறார்கள். வாழ்க்கை அநித்தியமானது' என்று சொன்னார். பின் காந்தியின் மதப்பற்றை அறிந்து, 'நீர் இன்ஷூர் செய்துகொள்வது சமயக் கடமையும் ஆகும்' என்று கூறினார். காந்தி இன்ஷூரன்ஸ் கம்பெனியில் நம்பிக்கை வைப்பதைவிடக் கடவுளிடம் நம்பிக்கை வைப்பதுமேல் என்று சொல்லக்கூடியவர். ஆனால், அந்த அமெரிக்கரது பேச்சுவன்மை அவருடைய நம்பிக்கையைத் தளர்த்தியது. அவர் ஐயாயிரம் டாலருக்கு (ரூ. 10,000) ஒரு பாலிஸி எடுத்துக்கொண்டார்.

இரண்டு வருடங்கள் கழித்து காந்தி தென் ஆப்பிரிக்காவிற்குத் திரும்பியபோது அவர் மனப்போக்கு மாறியது. காலைக்கடன் கழிக்க அவருக்கு 35 நிமிடங்களும், குளிப்பதற்கு 20 நிமிடங்களும், பழைய இந்திய வழக்கப்படி பற்குச்சிகொண்டு பல் விளக்க 15 நிமிடங்களும் ஆகும். அவர் பல் தேய்த்துக்கொண்டே பகவத் கீதையை மனப்பாடம் செய்வார். பகவத் கீதையில் கூறியுள்ள 'உடைமையற்றிருக்க வேண்டும்' என்ற உபதேசத்தின் உண்மைக் கருத்தையுணர்ந்தார். அதனால் இன்ஷூரன்ஸ் கட்டணம் கட்டுவதை நிறுத்தினார். குடும்பத்தைக் 'கடவுள் காப்பாற்றுவார்' என்று நம்பினார். அவருக்குள் மனமாற்றம் ஏற்பட்டுக்கொண்டிருந்தது.

இதே சமயத்தில் காந்தி, ஹென்றி எஸ். எல். போலக் (Henry S. L. Polak) என்னும் பிரிட்டிஷ் சைவ உணவுக்காரரிடம் பழக நேர்ந்தது. போலக் 'டிரான்ஸ்வால் கிரிட்டிக்' (Transvaal critic) என்ற பத்திரிகையின் உதவி ஆசிரியர். ஒரு நாள் மாலை, ரயிலில் படிப்பதற்காக காந்திக்கு போலக் ஒரு நூலைக் கொடுத்தார். அது கட்டுரையாளரும் கலைவிமர்சகருமாகிய ஜான் ரஸ்கின் (John Ruskin) எழுதிய 'கடையனுக்கும் கதி மோட்சம்' (Unto This Last) என்ற நூல். இரவு முழுவதும் காந்தி அதைப் படித்துக்கொண்டிருந்தார். 'இந் நூல் என் வாழ்க்கையில் ஒரு மாறுதலை உண்டு பண்ணியது' என்று காந்தி 1946ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் எழுதியிருக்கிறார். அந்த நூலைப் படித்ததின் பயனாக காந்தி உடனே ஒரு பண்ணையில் போய் எளிய வாழ்க்கை நடத்தவேண்டுமென்று தீர்மானித்தார். அந் நூலின் எந்தப் பகுதியும் அவ்வாறு தூண்டி இருக்கவே முடியாது. இயற்கையோடு ஒன்றி வாழ்வதற்கு காந்தியின் மனம் பக்குவமாக இருந்ததால் ரஸ்கின் எழுதிய கருத்துகள் அவருடைய தீர்மானத்தைச் செயலாக்க உதவின. தாம் விரும்பும் கருத்துகளைத் தாம் படிக்கும் நூல்களில் ஏற்றிக்காண்பது பழக்கம். கலைத்திறம் படைத்த வாசகராக இருந்த காரணத்தால் தாம் கற்ற நூல்களில் உள்ள கருத்துகள் தமக்குப் பிடித்தமானவையாக இருப்பின் தம்மை அந் நூலின் துணை ஆசிரியர் என்றும் கருதத் தொடங்கினார். 'நான் விரும்பாததை மறப்பதும் விரும்புவதைச் செயலில் கொண்டுவருவதும் எனக்கு வழக்கமாகிவிட்டது' என்று ஒரு தடவை காந்தி கூறினார்.

ரஸ்கின் நூலில் காந்தி தம்முடைய கொள்கைகளைக்கண்டார். உடனே நேட்டாலிலுள்ள, 'ஃபோனிக்ஸ்' (Phoenix) பக்கத்தில் ஆயிரம் பவுனுக்கு 100 ஏக்கர் நிலத்தை வாங்கினார். பல மாதங்களுக்கு முன்பே ஆரம்பித்திருந்த 'இந்தியன் ஒபினியன்' என்ற வாரப் பத்திரிகையின் பதிப்பகத்தையும் அச்சகங்களையும் அங்கு மாற்றினார். இதுவரை காந்தியின் குடும்பமும் ஜோஹன்ஸ்பர்க்கில் இருந்தது. அங்கு அவருக்கு நல்ல வருவாய் வந்தது. இப்போது அவருடைய

குடும்பம் ஃபோனிக்ஸ் பண்ணைக்கு வந்தது. அப் பண்ணையில் அச்சடிக்கவும் மா, ஆரஞ்சு மரங்கள் பயிரிடவும் எல்லோரும் உதவினர்.

வாழ்க்கையை ஆடம்பரமில்லாமலும் அடக்கமாகவும் நடத்துவதில் காந்தி மேன்மேலும் ஈடுபாடு கொண்டார். சமயம் நேரும்போதெல்லாம் தம்முடைய தாயைப்போல விரதம் இருந்தார். மற்ற நாட்களில் பழங்கள், கொட்டைப் பருப்புகளாலாகிய எளிய உணவை இரண்டு வேளை உண்டார். உணவில் மசாலை, உப்பு, காரம் சேர்த்துப் பக்குவம் செய்வதையும் நிறுத்திவிட்டார். மனிதனுடைய உடலை ஓம்பி, அவனுடைய அறிவையும் ஆத்ம சக்தியையும் பெருக்குவதற்கு ஏற்ற உணவு எது என்கிற ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தார். அந்த ஆராய்ச்சி அவர் ஆயுள் முழுவதும் தொடர்ந்து நடைபெற்றது. உண்டு, உடுத்து, மழை வெயிலுக்கு ஒதுங்கி, தேகத்தைக் கொழுக்கச் செய்வதற்காகமட்டும் நாம் வாழவில்லை என்று காந்தி உணர்ந்திருந்தார். 'உயிர் வாழ்வதற்காக நாம் உடலுக்கு உணவு, உடை, உறைவிடம் கொடுக்கிறோம். உடலுக்குரியவை கிடைத்தபின் வாழ்க்கை ஆரம்பமாகிறது; ஆனாலும் எத்தனைபேர் ஆடம்பரமான வாழ்க்கைக்காக வாழ்வையே பாழாக்கிக்கொள்கிறார்கள். அந்தோ! அரண்மனையானாலும் வெறும் மண்குடிசையானாலும் ஆத்மா தாற்காலிகமாக வசிக்க ஓர் இடம் தேவை; அவ்வளவே. பார்க்கப்போனால் இவற்றில் மண்குடிசையே மேலானது; ஏனென்றால் உழைப்பில் பெரும்பகுதியை உடலைக் காப்பதிலேயே செலவிட்டால் ஆத்மீகவளர்ச்சி குன்றிப் போகும். வாழ்க்கையில் நிறைவின்மை ஏற்பட்டு அதிருப்தி தோன்றும்.'

இன்பங்களை ஒருவன் துறப்பதை 'மாஸோக்கிஸம்' (Masochism) என்று ஓர் ஐரோப்பியர் கூறுகிறார். கிறிஸ்தவ மதத்திலும் துறவு உண்டு. எல்லாச் சமயப் பெரியார்களும் தன்னலத்தைத் துறந்தவர்களே. துறவைத் துறவுக்காகவோ அல்லது உடலைத் துன்புறுத்துவதற்காகவோ கைக்கொள்ளுவதை காந்தி ஏற்றுக்கொள்ளவில்லை. 'ஈரமான படுக்கையில் தூங்க ஒரு தாய் சாதாரணமாக விரும்பமாட்டாள். ஆனால், தன் பிள்ளை உலர்ந்த படுக்கையில் தூங்குவதற்காகத் தான் மகிழ்ச்சியுடன் ஈரப் படுக்கையில் தூங்குவாள்' என்று அவர் ஒரு கடிதத்தில் எழுதினார். காந்தியின் துறவு அன்பை அடிப்படையாகக் கொண்டது. தம்மைச் சேர்ந்தவர்களின் நலமும் தம் நலமே என்று எண்ணி உலகில் பலர் மகிழ்ச்சியடைகிறார்கள். ஒரு ஞானியானவன், தன்னுள் தான் அமிழ்ந்துவிடாமல் தன்னிலிருந்து விடுபட்டு, தன்னை மறந்து பிறருள் மூழ்கிவிடுகிறான். இப்படிப்பட்ட சந்தர்ப்பங்கள் ஒரு ஞானியின் வாழ்வில் பலமுறை ஏற்படுவதுண்டு. பிறர் வாழ்வில் தம் வாழ்வை ஐக்கியப்படுத்திக்கொள்ளும் இவ் வொருமை உணர்ச்சி

'எனது, உனது' என்பவற்றின் இடையே தோன்றும் கடல்போன்ற வேற்றுமையை ஓரளவு குறைத்து வலிமையையும் மகிழ்ச்சியையும் அளிக்கிறது. 'மகாத்மா' என்ற உச்சநிலையைக் காந்தி அடைந்தபோது தம்மைப் பின்பற்றுகிறவர்களிடம் அவ்வித ஐக்கிய உணர்ச்சியைக் காண்பித்தார். காந்தியைப்பற்றி இந்தியாவில் காட்டும் படங்களில், காந்தி 'நான்' என்கிற செருக்கை ஒழித்துப் பிறருடன் ஒன்றாகக் கலந்துவிடுவதையே காண்கிறோம். அதற்கு மாறாக அவரைவிடச் சிறியவர்கள் ஆடம்பரமாகவும் ஆரவாரமாகவும் விளங்குவதைக் காண்கிறோம். இதுதான் அவருடைய உயர்வுக்கும் செல்வாக்குக்கும் காரணம். தம்மைச் சுற்றியுள்ளவர்களுடன் அவர் 'நான், அவர்கள்' என்ற வேறுபாடின்றி அவர்களுடன் கூடிப் பணியாற்றினார். இந்த அற்புதம் அதைப்பார்த்த அவருடைய நண்பர்களிடத்தும் விரோதிகளிடத்தும் உணர்ச்சிவேகத்தை உண்டுபண்ணியது. அவர்களுடைய எதிர்ப்பையும் ஒழித்தது. அவர் அதைச் சாதித்தமுறை அவர்களுக்குச் சந்தேகத்தை ஏற்படுத்தியது. அவர் செய்ததை அவர்கள் வெறுத்தனர். ஆனால், அவர் செய்ததை அவர்களால் எதிர்க்கமுடியவில்லை.

அவர் சாதித்தவைகளில் ஒன்று காம இச்சையைக் கைவிட்டது. ஜுலு (Zulu) கலகத்தின்போது அவர் ஒரு கிராமத்திலிருந்து மற்றொரு கிராமத்திற்கு மாட்டுவண்டியில் நீண்ட பிரயாணம் செய்ய வேண்டியிருந்தது. அச் சமயத்தில் தமக்குள்ள குறைகளைப்பற்றிச் சிந்தித்து, இறுதியில் காமஇச்சையை விட்டுவிடவேண்டுமென்று முடிவுசெய்தார். இதற்கு முன்னும் இரண்டு தடவை காம இச்சையை அடக்க முயன்றதாகச் சொல்கிறார். கஸ்தூரிபாவும் சம்மதித்தார். அவர்கள் தனித்தனிப் படுக்கையில் தூங்க ஆரம்பித்தனர். நன்றாக உழைத்துக்களைத்த பின்னரே படுக்கைக்குப் போவார். ஆனால், இரு முறையும் அவர் தோல்வியுற்றார்.

ஜுலு நாட்டி (Zululand) லிருக்கும்போது காந்தி இனி மனைவியைக் கூடுவதில்லை என்று சபதம் செய்துகொண்டார். அங்குப் படைகள் கலைக்கப்பட்டவுடன், ஃபோனிக்ஸ் பண்ணைக்குப் போய் கஸ்தூரிபாவிடம் அவரது தீர்மானத்தைக் கூறினார். அவரும் அதை எதிர்க்கவில்லை. 'கஸ்தூரிபா ஒருநாளும் சிற்றின்பத்தைத் தூண்டுபவளாக இருந்ததில்லை' என்று காந்தி எழுதியிருக்கிறார். அவர்தான் அதற்குக் காரணமாயிருந்தார்.

1906ஆம் ஆண்டு காந்தி 37 வயதுடையவராக இருக்கும்போது பிரம்மச்சரிய விரதத்தை மேற்கொண்டார். 1948ஆம் ஆண்டு அவர் இறக்கும்வரை பிரம்மச்சாரியாகவே இருந்தார்.

காந்தி சிற்றின்பத்தைத் துறப்பதற்குக் காரணம் என்னவென்று ஆராய்ந்துபார்ப்பது கடினம். அவருக்கே அதன் காரணம் தெரியாது.

சமூக சேவைக்காக அவருக்கு வந்த அழைப்பின் விளைவு என்று அவர் நினைத்தார். இன்னும் குழந்தைகள் பிறவாமல் தடுப்பதுதான் அவருடைய முக்கிய நோக்கம் என்று அவரே கூறியிருக்கிறார். அவர் ஏன் இன்னும் குழந்தைகள் பிறப்பதைத் தடுக்கவேண்டும்? ஃபோனிக்ஸ் பண்ணை சமூகத்திட்டமாய் மாறிவிட்டது. அதற்கு அநேக முதியோர்களையும் குழந்தைகளையும் அழைத்துக்கொண்டார். அவர்களைப் பராமரிப்பது பொதுச்செலவு, பொதுப்பொறுப்பு; அப்படியிருக்கும்போது ஏன் இன்னும் காந்திக்குச் சொந்தக் குழந்தைகள் இருக்கக்கூடாது?

இளம் வயதில் பாலுறவுமாட்டுத் தோன்றிய குற்ற உணர்ச்சியின் காரணமாகவும் காந்தியின் பிரம்மச்சரிய விரதம் அமைந்திருக்கலாம். நோயுற்றிருந்த அவரது தந்தைக்குக் காந்தி ஓர் இரவில் கால்பிடித்துக் கொண்டிருந்தார். அப்போது சிற்றின்ப உணர்ச்சி ஏற்படவே, அவருடைய சிறிய தந்தையைத் தந்தையின் காலைப் பிடிக்கச் சொல்லி விட்டு அவர் கஸ்தூரிபாவின் படுக்கையறைக்குச் சென்றார். சென்ற சில நிமிடங்களுக்குள் வேலைக்காரன் வந்து கதவைத்தட்டி அவரைக் கூப்பிட்டான். காந்தி தகப்பனாரின் அறைக்குள் போவதற்குள் அவர் இறந்துவிட்டார். 'காமவெறி என் கண்களை மறைக்காமல் இருந்திருந்தால், இறுதி நேரத்தில் என் அன்புத் தந்தையைப் பிரிந்திருந்த கொடுமைக்கு ஆளாகி இருக்கமாட்டேன். தந்தை இறக்கும்தறுவாயிலிருந்த அந்த ஆபத்தான நேரத்திலும் எழுந்த என் இச்சை மிக இழிவானது. அந்தக் கறையை என்னால் என்றும் அழிக்கவோ மறக்கவோ முடியாது' என்று காந்தி 40 வருடங்களுக்குப்பின் அந்நிகழ்ச்சியைப்பற்றி எழுதினார். பிரம்மச்சரியம் கையாளுவதைப்பற்றி அவருக்கு ஏற்பட்ட போராட்டத்திற்கு இதுவும் ஒரு காரணமாக இருந்திருக்கலாம். காந்தி லண்டனில் நடத்திய 33 மாத வாழ்க்கையைக் 'கஸ்தூரிபாவிடமிருந்து நீண்டநாள் விலகியிருந்த சுகமான பிரிவு' என்கிறார். காந்தி தென் ஆப்பிரிக்காவிற்குச் செல்லுமுன், 'நாம் எப்படியும் ஓர் ஆண்டில் மீண்டும் சந்திப்போம்' என்று மனைவியிடம் ஆறுதலுக்காகச் சொன்னார். ஆனால், அவர் தென் ஆப்பிரிக்காவில் 3 ஆண்டுகள் தங்கினார்.

பிரம்மச்சரியத்தைப்பற்றி இந்திய பழங்கதைகளிலும் வாழ்க்கைகளிலும் அடிக்கடி கூறப்பட்டிருக்கிறது. குடும்பத்திற்கும், தம் ஜாதியினருக்கும், நாட்டிற்கும் தாம் செய்யவேண்டிய சந்ததி விருத்திக் கடமையைச் செய்தபின் 45 அல்லது 50 வயதிற்கு மேல் இவ்வாறு பிரம்மச்சரிய விரதத்தைப் படிப்படியாகக் கையாளுவது வழக்கம். ஆனால், காந்தியைப்போல் இளம் வயதில் அவ்விரதம் அனுசரிப்பது வழக்கமில்லை. ஒருவேளை நான்கு பிள்ளைகள் பிறந்ததால் தம் கடமை முடிந்துவிட்டதென நினைத்திருப்பார். தந்தை இறக்கும்தறுவாயில்

தவறு இழைத்ததால் தந்தையாவது பாவம் என்று நினைத்திருக்கலாம். கஸ்தூரிபாவின் உடல்நிலையும் அதற்குக் காரணமாக இருந்திருக்க லாம். இரத்தக்குழாய்ச் சிதைவினால் அவர் ஒருதடவை சாகுந் தறுவாயிலிருந்தார். இரத்தச் சோகையினாலும் பீடிக்கப்பட்டிருந்தார். அதனால் குளோரோபாம் கொடுக்காமலே அறுவைச் சிகிச்சை செய்தனர். அதனால் வேதனை குறைந்தது எனினும் வியாதி குணமடையவில்லை. கஸ்தூரிபா உடல்நலம் குன்றியிருந்ததால் காந்தி அவருடன் சிற்றின்பத் தொடர்பு வைத்துக்கொள்வது தவறு என்று நினைத்திருக்க லாம். வேறொரு பெண்ணுடன் தொடர்பு வைத்துக்கொள்வது மனை விக்குத் துரோகம் என்று அவருக்குத் தோன்றியிருக்கும். கஸ்தூரிபா வுக்குத் துரோகம் செய்யாமலும் அவருடைய உடல் கெடாமலும் இருப் பதற்கும் ஒரே வழி பிரம்மச்சரியம் என்று அவர் நினைத்திருக்கலாம்.

பின்னால் சிந்தித்துப் பார்க்கும்போது பிரம்மச்சரிய விரதத்தால் ஏற்பட்ட விளைவையே தம் நோக்கமாகக் காந்தி கருதினார். ஆத்மீக நன்மையே பிரம்மச்சரியத்தின் விளைவு. 'பிரம்மச்சரியத்தைப் பூரண மாக அனுசரிப்பதே பிரம்மத்தை அதாவது கடவுளை அடைவதற்கு வழி' என்று 1924ஆம் ஆண்டு காந்தி எழுதினார். உடல், மனம், ஆத்மா ஆகியவற்றை மனம், வாக்கு, செயல் ஆகிய எதிலும் எக்காலத் தும், எவ்விடத்தும் அடக்கி ஆளுவதே பிரம்மச்சரியம். அது காம இச்சையை அடக்குவது மாத்திரம் அன்று. அதையும்விட மேம் பட்டது. பிரம்மச்சரியம் என்பது உணவு, உணர்ச்சி, பேச்சு முதலிய வற்றின் அடக்கம். பலாத்காரம், பொய், வெறுப்பு, கோபம் முதலியவை பிரம்மச்சரியத்திற்கு முரணானவை. பிரம்மச்சரிய விரதம், விருப்பு, வெறுப்பு இல்லாத நடுநிலையான தன்மையை உண்டாக்குகிறது. அது பற்றற்ற ஒரு நிலை. உண்மையான பிரம்மச்சாரிகள் பாவமற்றவர்கள்; இறைவனுக்கு அண்மையில் உள்ளவர்கள். அவர்கள் தெய்வத் தன்மையுடையவர்கள். அந்த நிலையை அடைய ஆசைப்பட்டார் காந்தி. அதுவே ஆன்மீக ரஸவாதம் ஆகும்.

வசதிகள், போகங்கள், இன்பங்கள் முதலியவற்றைத் துறப்பது கஷ்டம் இல்லை. பலர் வயிறு நிறைய உணவு, அலமாரி நிறையத் துணிகள், அழகான வீடு இவற்றை விட்டுவிடலாம். ஆனால், 'யாம்', என்னும் செருக்கை அவர்களால் விடமுடியாது. ஏனென்றால், சமுதாய அந்தஸ்து, நாலுபேர் அறியுந்தன்மை, அதிகாரவெறி ஆகிய உலோகாயதப் பொருள்களால் சுற்றப்பெற்று மூச்சுத்திணறுகின்ற நிலையில் உள்ள 'தான்' என்னும் தன்மையைத்தான் அவர்கள் அறிவார்கள். இத்தகைய 'தான்' என்ற தன்மையை விட்டு முற்றிலும் இப் பழைய நிலையிலிருந்து மாறுபட்டதும், உலோகாயதப் பொருள்களி லிருந்து விடுபட்டதும், அவர்களால் அடையமுடியாததும் உண்டோ என்றுகூட ஐயுறப்படுவதுமான ஒரு வாழ்வை அவர்கள் விரும்பாததில்

வியப்பில்லை. தாங்கள் வாழும் சூழ்நிலையால் அம் மாதிரி பற்றற்றதும் செருக்கற்றதுமான நிலையை அடையமுடியாது என்று இவ் உலோகாயத வாழ்விலிருந்து நினைப்பார்கள். எனினும் காணுகின்ற முன்பின் தெரியாத ஒரு வாழ்க்கையில் குதித்து, தம்முடைய உழைத்தை நடத்திச் செல்லக்கூடிய ஓர் உறைவிடத்தை அடையக்கூடுமென்று நம்பினர். அவர் எடுத்துக்கொண்ட முயற்சி எளிதானதன்று; துன்பம் நிறைந்த தாக இருந்திருக்கும். அவருக்குச் சிற்றின்பத்தில் விருப்பம் அதிகம். பிரம்மச்சரியவிரதத்தை மேற்கொண்டபின்னும் பெண்கள் அவரைக் கவர்ந்தனர்; 'தாம் பெருவயிறு படைத்தவரென்றும் தமக்குப் பெரும் பசிப்பிணி உண்டென்றும்' அவரே ஒருமுறை கூறியிருக்கிறார். நன்ருகச் சம்பாதித்தார். முயன்றிருந்தால் பெருஞ்செல்வந்தராக ஆகியிருக்கலாம். தாமாகவே பிரம்மச்சரிய விரதம் ஏற்றுக்கொள்ளுத லும் தாமாகவே உணவு, உடை முதலியவற்றைக் குறைத்துக் கொள்வதும் கஷ்டமாகத்தான் இருந்திருக்கும். ஆனால், அந்தக் கஷ்டங்களை அவர் சகிக்கமுடிந்தது. அவருக்கு அதிக மனஉறுதி யிருந்தது. மனஉறுதி இருப்பின் பற்றுகளை ஒழிப்பது சிரமமன்று. ஏனெனில், துறவு என்பது ஓர் இன்பத்தை ஒழித்து, மற்றொரு பேரின் பத்தை நாடுவதுதான். சிலர் பெரும்பொருளைத் தானம்செய்து மகிழ்ச்சி அடைகிறார்கள். காந்தியோ தம்மையே 'தானம்' செய்து உண்மையான உயரியநிலையை எய்தினர். ஒருவர் எவ்வளவு கொடுக்கிறார் என்பது அவரது நம்பிக்கையின் அளவைப் பொறுத்தது. 'வேறோர் உயரியநிலையை அடைய விழையும்போது உன்பால் உள்ள ஒரு பொருள் உன்னைக் கவரும் தன்மையை இழந்துவிட்டதாக இருந்தாலோ அல்லது மிகுதியாக விரும்பப்படும் அந்த நிலைக்கு அப் பொருள் இடையூறாக இருந்தாலோ அதைத் துறந்துவிடு' என்று காந்தி எழுதியிருக்கிறார்.

சிற்றின்பம் அற்றதும், தூய்மையானதும், முழுஆற்றலுடன் மக்களின் நலனுக்காகத் தொண்டாற்றுவதுமான வாழ்க்கையையே காந்தி விரும்பினர். உலக வாழ்க்கையின் இன்பங்களை நீத்தது, மக்களின் பொதுநன்மைக்குப் பாடுபடும் அவாவை அதிகமாக்கிற்று. சிற்றின்ப ஆசைகளை அடக்கியதும், அவரது 'நான்' என்னும் செருக்குக் குறைந்தது. நிலையில்லாத பணம், புகழ் முதலியவற்ருல் ஏற்படும் இன்பங்களைத் துறந்தபிறகு தம்முடைய உயர்ந்த கொள்கை களுக்காகப் பெரிதும் உழைத்தார். அவருடைய மனத்தில் அடிக்கடி பெரும் உணர்ச்சிப் புயல் வேகமாக அடித்தது. அவ் வுணர்ச்சிப் புயலைக் கட்டுப்படுத்தி அவற்றை மக்களின் பொதுநன்மைக்காகப் பயன்படுத்தினர்.

அவருடைய துறவுத்தன்மை மற்றுமொரு நன்மையைத் தந்தது; மக்களுக்கு அவரிடம் நம்பிக்கை அதிகரித்தது. பல நூற்றாண்டுகளாக

இந்தியர்கள் பிறரால் நசுக்கப்பட்டு வருந்தினவர்கள். தங்களிடமுள்ள மிகக்குறைந்த பொருளைச் சார்ந்தே வாழும்நிலையில் ஆதரவின்றி விடப்பட்டவர்கள். யாரேனும் தாமே பொருள் கொடுப்பின் அவர்மீது இந்தியருக்கு எப்பொழுதும் சந்தேகமே. சுயநலத்திற்காகவும் ஏமாற்றுவதற்காகவும்தான் பொருள்கொடுக்கின்றனர் என்று ஐயுறுகின்றனர். காரணமின்றி ஒருவரும் பொருள் கொடுக்கமாட்டார்கள் என்பது அவர்களது நம்பிக்கை. பல சமயங்களில் பணக்காரரும் அதிகாரிகளும் கொள்ளையடித்ததைப் பார்த்திருக்கின்றனர். ஆகையால் தன்னலமற்றவன் என்று யாரிடமாவது நம்பிக்கை ஏற்பட்டால் அவரிடம் அளவுகடந்த அன்பும் எல்லையற்ற பணிவும் காட்டுவார்கள். அதுதான் காந்திக்கு இந்தியர் செய்த கைம்மாறும்.

மனஉறுதியாலும் தன்னைப் பின்பற்றுகிறவர்களின் எண்ணிக்கை அதிகமானதாலும் காந்தி தென் ஆப்பிரிக்க அரசாங்கத்துடன் கொள்கைகளுக்காகப் போரிட்டார். அடுத்த எட்டு ஆண்டுகள் அவ் அரசாங்கத்துடன் போரிட்டு முடிவில் வெற்றிபெற்றார்.

8. ஆத்ம சக்தி அல்லது சத்தியாக்கிரகம்

தென் ஆப்பிரிக்காவில் காந்தி கூறியதாகப் பின்வருமாறு ஹென்றி போலக் கூறுகிறார். 'நான் அரசியலில் மூழ்கிய ஒரு முனிவர் என்று மக்கள் சொல்கின்றனர். உண்மை என்னவென்றால், நான், மிகக் கஷ்டப்பட்டுத் துறவியாக முயன்றுவரும் ஓர் அரசியல்வாதி' என்றார். உண்மையாகவே காந்தியின் அரசியலையும் அவரது சமயத்தையும் பிரித்துச் சொல்ல முடியாது. 'என்னுடைய தேசபக்தி என்னுடைய சமயத்திற்கு அடிமைப்பட்டது' என்கிறார். காந்தி ஒரு துறவியான போதிலும், தனியே ஒதுக்கமான குகைகளில் வாழாமல், மக்களின் உரிமைக்காக அவர்களுடன் சேர்ந்து போராடவேண்டுமென்று நினைத்தார். காந்தியின் சமயம் அவரை அரசியல்வாதியாக்கியது. அவருடைய அரசியல், சமயத்தினை அடிப்படையாகக் கொண்டிருந்தது.

காந்தி முனிவர்குணம் படைத்த அரசியல்வாதி அல்லது அரசியல் முனிவர் எனலாம். அவர் தமது பற்றின்மையால் உண்டாகிய ஆற்றலினால் தாம் செய்த காரியங்களைச் செம்மையாகச் செய்தார். ஆனாலும் தென்னாப்பிரிக்காவிலும் இந்தியாவிலும் அவர் அடைந்த வெற்றிக்குக் காரணம் அவருக்கே உரித்தான ஓர் இணையற்ற ஆயுதம், அஃது எங்கும், எப்பொழுதும் கண்டும் கேட்டுமிராத ஒன்றாகும். அந்த ஆயுதத்தின் சக்தி அளவற்றது. அந்த அதிசயமான ஆயுதத்திற்கு என்ன பெயரிடுவது என்று தெரியவில்லை. கடைசியாக அதைச் சத்தியாக்கிரகம் என்று அழைத்தார். சத்தியம் என்றால் உண்மை. அன்புக்குச் சமமான

ஒரு சொல். சத்தியம், அன்பு—இவை இரண்டும் ஆத்மாவின் பண்புகள். ஆக்ரகம் என்றால் உறுதி, சக்தி; அதனால் சத்தியாக்கிரகம் என்றால் ஆத்ம சக்தி.

சத்தியாக்கிரகம் என்பது எதிரிகளைத் துன்புறுத்தாது தன்னையே துன்புறுத்தி உண்மையை எடுத்துக்காட்டுவது. எதிரியைப் பொறுமையினாலும் இரக்கத்தினாலும் குற்றம் செய்வதிலிருந்து தடுக்க வேண்டும். எதிரியைக் குற்றம் செய்வதிலிருந்து தடுத்தல், அழித்தல் அன்று. சத்தியாக்கிரகம் போராடும் இரு எதிரிகளுக்குள் நாளடைவில் சமரச மனப்பான்மையை ஏற்படுத்தி, இருவருக்கும் நன்மையை விளைவிக்கும். பலாத்காரம், நிந்தனை, வரம்புகடந்த வன்மைகலந்த பிரசாரம் முதலியவை சமரசத்திற்கு இடையூறுகளாகும்.

தென் ஆப்பிரிக்காவிலுள்ள வெள்ளையர்களையோ, இந்தியாவிலுள்ள பிரிட்டிஷாரையோ காந்தி தோற்கடிக்கவோ அவமதிக்கவோ முயன்றதில்லை. அவர்களுடைய மனத்தை மாற்ற முயன்றார். இயேசு கிறிஸ்து மலைப்பிரசங்கத்தில் கூறியதைத் தாம் நடைமுறையில் பின்பற்றினால் ஜெனரல் ஜேன் கிறிஸ்டியன் ஸ்மட்ஸ் தாமும் ஒரு கிறிஸ்தவர் என்பதை நினைவில் வைத்திருப்பார் என்று காந்தி நம்பினார்.

நம் கண்ணைக் குத்தியவர்கள் கண்ணை நாம் குத்திவிடவேண்டும் என்ற நம் கொள்கை அனைவரையும் குருடாக்கவே பயன்படும். ஆனால், சத்தியாக்கிரகம் என்பது இதற்கு நேர்மாறானதாகும். சத்தியாக்கிரகமோ தீமைக்கு நன்மை செய்யச் சொல்கிறது. இறுதியில் தீயவன் தீமைகளைச் செய்துசெய்து அலுத்துவிடுகிறான். ஆத்திரம் ஊட்டும் சூழ்நிலையில்கூட சாதாரண மனிதர்கள் மிகவும் பெருந்தன்மையுடன் நடந்துகொள்ளமுடியும் என்பதைத் தென் ஆப்பிரிக்காவிலும் இந்தியாவிலும் காந்தி அடிக்கடி எடுத்துக்காட்டியிருக்கிறார்.

1906ஆம் ஆண்டு ஆகஸ்டு 22ஆம் தேதி டிரான்ஸ்வால் அரசாங்கம் ஒரு மசோதா தயாரித்தது. அதன்படி ஆண், பெண், 8 வயதுக்கு மேற்பட்ட குழந்தைகள் உட்பட எல்லா இந்தியரும் பதிவு அத்தாட்சிப் பத்திரமும் விரல்ரேகையும் காட்டவேண்டும். அப்படிக் காட்டாவிடில் அபராதம் அல்லது சிறைத்தண்டனைக்கு உள்ளாவார்கள்; அல்லது டிரான்ஸ்வாலைவிட்டே வெளியேற்றப்படுவார்கள். இச் சட்டம் சம்பந்தமாக சத்தியாக்கிரகத்திற்கு முதல் சோதனை ஏற்பட்டது.

1906ஆம் ஆண்டு செப்டம்பர் 11ஆம் தேதி ஜோஹனஸ்பர்க்கிலுள்ள (Johannesburg) இம்பீரியல் தியேட்டரில் நடந்த பொதுக் கூட்டத்தில் காந்தி, 'இந்தியர்களுக்கு விரோதமாக ஏற்படுத்தப்பட்ட இந்தச் சட்டம் இந்தியரையும் இந்தியாவையும் அவமதிப்பதாகும்'

என்று எடுத்துக்கூறினர். டிரான்ஸ்வால் அரசாங்கம் எல்லா ஒழுங்கு முறைகளையும் கைவிட்டுவிட்டது என்றார். 3,000 இந்திய மக்களை ஒன்றுகூட்டி அச் சட்டத்தை எதிர்ப்போம் என்று வாக்குறுதி கொடுக்கும் படி சொன்னார். அவசியமானல் சிறைசெல்லவும் உயிர்துறக்கவும் ஆயத்தமா யிருக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டார். அந்தப் போராட்டம் அதிக நாட்கள் நீடிக்கலாம் என்று அவர்களுக்கு எச்சரிக்கை செய்தார். 'ஆனால், தைரியமாகவும் நிச்சயமாகவும் நான் ஒன்று சொல்வேன். கொடுத்த வாக்குறுதிக்கு உண்மையாக ஒரு சிலராவது இருக்கும்வரையில் இந்தப் போராட்டத்திற்கு ஒரே ஒரு முடிவுதான் உண்டு. அதுதான் வெற்றி' என்று அழுத்தந்திருத்த மாகக் கூறினர். சத்தியாக்கிரகத்தின் மூலாதாரக் கொள்கைகளில் ஒன்று இது. ஆத்ம சக்தியின் வெற்றி எண்ணிக்கையைப் பொறுத்த தன்று. அவர்களின் மனஉறுதியைப் பொறுத்தது.

1907ஆம் ஆண்டு ஜூலை 31ஆம் தேதி ஆசியா ரெஜிஸ்டிரேஷன் சட்டம் அமுலாகியது. 'நாம் நமக்கு உண்மையாக நடந்து கொண்டோமானல் எந்தத் தீய கொள்கையும் காலக்கிரமத்தில் மாறி விடும்' என்பதை மெய்ப்பிக்கும் வகையில், இந்தியர் தங்கள் பெயர் களைப் பதிவுசெய்யவேண்டாமென்று சொல்லி, காந்தி அவர்களுக்குத் தலைமைதாங்கி இயக்கத்தை ஆரம்பித்தார். அதன் விளைவு அவருக்கு இரண்டு மாதச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. சிறிது நாட் களுக்குள் ஸ்மட்ஸிடமிருந்து அவருடைய தூதர் காந்தியினிடம் வந்தார். இந்தியர் தாமாகவே பதிவுசெய்துகொண்டால் இச் சட்டத்தை ரத்து செய்துவிடுவதாகத் தூதர்மூலம் செய்தி அனுப்பினர். காந்தி ஸ்மட்ஸ் அலுவலகத்திற்குச் சிறைஉடையிலே அழைத்துச் செல்லப்பட்டார். காந்தி அந்த நிபந்தனையை விவாதம் செய்து பின் ஏற்றுக்கொண்டார். அவரும் மற்ற இந்தியரும் விடுதலை செய்யப் பட்டனர்.

ஜோஹனஸ்பர்க்குக்கு காந்தி திரும்பியபோது இந்தியர்களுடைய ஆவேசமான எதிர்ப்பை அவர் சமாளிக்கவேண்டிய நெருக்கடி உண்டா யிற்று. சட்டத்தை ரத்து செய்தபின் பதிவு செய்துகொள்ளலாம். ஆனல், ஸ்மட்ஸ் தம் வாக்குறுதியை மீறிவிட்டால் என்ன செய்வது என்று வினவினர்கள்.

'சத்தியாக்கிரகி, அச்சமற்றவன். அவன் தன் பகைவனை நம்ப ஒருபோதும் அஞ்சமாட்டான். எதிரி அவனை 20 தடவைகள் ஏமாற்றி னலும், சத்தியாக்கிரகி அவனை இருபத்தோராவது தடவையும் நம்பத் தயாராக இருப்பான். ஏனெனில், மனிதனுடைய நல்ல சுபாவத்தில் நம்பிக்கை வைப்பது அவனுடைய தருமத்தின் சாரமாகும்' என்று காந்தி சொன்னர். பின் அவர் தாமாகவே பதிவுசெய்து சமாதானம்

செய்துகொள்வதைப்பற்றி விளக்கினார். 'நிர்ப்பந்தத்திற்குத் தலை வணங்குவது ஒருவருடைய அந்தஸ்தையும் மரியாதையையும் குறைக்கிறது. அரசாங்கத்தின் கஷ்டங்களையும் ஆராயவேண்டும். நிறவெறியுள்ள வெள்ளையரின் ஆதிக்கத்திற்குள் அரசாங்கம் இருக்கிறது. டிரான்ஸ்வாலில் இந்தியர் திருட்டுத்தனமாக நுழைவதைத் தடுப்பதற்காகப் பதிவுமுறை ஏற்படுத்தப்பட்டது. நாம் கள்ளத்தனமாக இந்தியரைக் கொண்டுவந்து அங்குக் குடியேற்றப்போவதில்லை. அப்படி இருக்கும்போது இந்தியர் ஏன் பதிவுசெய்யக்கூடாது? தானாகவே ஒத்துழைப்பது உயர்ந்த குணம்; பெருந்தன்மையானதுமாகும். ஆகையால், நிர்ப்பந்தமாகப் பதிவுசெய்துகொள்ளும்படி இடும் ஆணையை மாற்றுவதால், அப்பொழுது நிலவிய சூழ்நிலையை மாற்றியது.

வடமேற்கு இந்தியாவில் கைபர் கணவாய்க்கு அருகேயுள்ள மலைக்காட்டிலிருந்த ஆஜானுபாகுவான ஒரு பட்டாணியன் இக் கூட்டத்திற்கு வந்திருந்தான். அவன் காந்தி கூறிய மொழிகளைக் கேட்டு, எழுந்துநின்று கூச்சலிட்டான். 'எங்கள் விரல்ரேகையை நாங்களும் பதிக்கமாட்டோம்; மற்றவர்களையும் அவ்வாறு செய்யவிடமாட்டோம். அல்லா சாட்சியாகச் சொல்கிறேன். யார் முதன்முதல் பதிவு செய்கிறானோ அவனைக் கொன்றுவிடுவேன்' என்றான்.

காந்தி, தாம் முதலில் பதிவுசெய்யப் போவதாகச் சொன்னார். 'மரணம் அனைவருக்கும் ஆண்டவன் விதித்துள்ள முடிவாகும். நோயால் அல்லது மற்றக் காரணங்களால் இறப்பதைவிட ஒரு சகோதரனின் கையால் மாள்வது வருந்துவதற்குரியதன்று. அங்ஙனம் இறக்க நேர்ந்து என்னைக் கொன்றவன்பேரில் எனக்கு வெறுப்பும் கோபமும் தோன்றாமலிருந்தால் அதுவே போதும். அஃது எனக்கு நிரந்தர நன்மையை உண்டாக்கும். என்னைக் கொன்றவனும் நான் மாசற்றவன் என்பதைப் பின்னர் உணர்வான்' என்று கூறினார். 42 வருடங்களுக்குப் பிறகு ஒரு சகோதரன் கையாலேயே அவர் கொல்லப்படுவார் என்று அப்பொழுது ஒருவருமே நினைத்திருக்கமாட்டார்கள். ஆறு அடி உயரமும் நல்ல தேகக்கட்டும் உடைய மீர் ஆலம் என்ற அந்தப் பட்டாணியன் தான் சொன்னபடி, காந்தி பதிவு நிலையத்திற்குச் சென்றுகொண்டிருந்தபோது, அவரது தலையில் பலமாக அடித்தான். "நான் 'ஹே ராமா!' என்ற வார்த்தைகளை உச்சரித்துக்கொண்டே மூர்ச்சை அடைந்தேன்" என்று காந்தி எழுதியிருக்கிறார். 1948ஆம் ஆண்டு ஜனவரி 30ஆம் தேதி, இதே வார்த்தைகளை உச்சரித்துக்கொண்டுதான் காந்தி இறந்தார்.

மீர் ஆலமும் மற்றப் பட்டாணியர்களும் கைது செய்யப்பட்டார்கள். 'அவர்கள் செய்வது சரி என்று அவர்கள் நினைத்தார்கள். அவர்கள்

மேல் வழக்குத்தொடர எனக்கு விருப்பம் இல்லை' என்று சொல்லி காந்தி அவர்களுக்கு விடுதலையும் வாங்கிக் கொடுத்தார்.

அத் தாக்குதலிலிருந்து குணமடைந்தபின் காந்தி தம் பெயரைப் பதிவுசெய்துகொண்டார். மற்றவர்களும் அவரைப் பின்பற்றிப் பதிவு செய்துகொண்டனர். ஆனால், ஸ்மட்ஸ், நிர்ப்பந்தப் பதிவுச் சட்டத்தை அவர் வாக்களித்தபடி ரத்துசெய்யவில்லை. அப்போது காந்திக்கு எவ்வளவு சங்கடமாயிருந்திருக்கும்! 'பார்த்தீர்களா! நீங்கள் எதையும் நம்பிவிடும் அப்பாவி என்று நாங்கள் சொல்ல வில்லையா?' என்று இந்தியர்கள் காந்தியைப் பரிகாசம் செய்தனர்.

1908ஆம் ஆண்டு ஆகஸ்டு 16ஆம் தேதி மாலை 4 மணிக்கு ஜோஹனஸ்பர்க்கிலுள்ள ஹமீதியா மசூதியைச் சேர்ந்த மைதானத்தில் ஒரு பொதுக்கூட்டம் நடந்தது. அதற்கு இரண்டாயிரத்துக்கு மேற் பட்ட இந்தியர் வந்திருந்தனர். மெழுகுவர்த்திகள் எரிந்துகொண் டிருந்த ஒரு பெரிய கொப்பரைக்குள் அவர்கள் தங்கள் பதிவுப்பத்திரங் களைப் போட்டனர். லண்டன் 'டெயிலி மெயில்' பத்திரிகையின் நிருபர் அச் சம்பவத்தை, அமெரிக்காவில் 1773-ல் பாஸ்டன் (Boston) நகரில் பிரிட்டிஷ் கப்பலில் உள்ள தேயிலையைச் சமுத்திரத்தில் அள்ளி யெறிந்த சம்பவத்துடன் ஒப்பிட்டு எழுதினர்.

ஜோஹனஸ்பர்க்கிலுள்ள காந்தியின் சட்டக் காரியாலயம் இப் பொழுது சத்தியாக்கிரக இயக்கத்தின் தலைமைக் காரியாலயமாக மாறியது. காந்தி அதிக நேரம் நேட்டாலிலுள்ள ஃபோனிக்ஸ் பண்ணை யில் தங்கியிருந்தார். ஏனென்றால், அவருக்கு நேட்டால் இந்தியரின் ஆதரவு வேண்டியிருந்தது. டிரான்ஸ்வாலில் 13,000 இந்தியர் இருந் தனர். நேட்டாலிலுள்ள இந்தியரின் எண்ணிக்கை இதைவிட அதிகம். அப் பண்ணையில் அவர் மிகவும் சிக்கனமான, தூய, சுகபோகங்கள் அற்ற வாழ்க்கை நடத்தினர். மழை இல்லாத நாட்களில் திறந்த வெளியில் ஒரு மெல்லிய துணியை விரித்துத் தூங்கினர். உலக இன்பங்களை யெல்லாம் துறந்து, வரப்போகும் போராட்டத்தில் கவனத் தைச் செலுத்தினர். 'கயிற்றில் நடப்பவனைவிட அதிகமாக ஒரு சத்தியாக்கிரகி தன் நிலையை ஒரு குறியில் நிறுத்தவேண்டும்' என்று காந்தி எழுதினர். அந்தச் சன்மார்க்கப் போருக்காகக் காந்தி தம்மைப் பழக்கிக்கொண்டார். இந்தியர் டிரான்ஸ்வாலில் குடியேறுவதற்கிருந்த தடையை மீறத் தீர்மானித்தனர். பதிவுப்பத்திரமில்லாமல் சுற்றி வருவதன்மூலம் சிறைத்தண்டனையை ஏற்க ஆயத்தமாயினர்.

உடனே காந்தி மிக எளிமையான அரசியல் நாடகம் ஒன்றை ஆரம்பித்தார். நேட்டாலிலுள்ள இந்தியர் டிரான்ஸ்வால் தடையை மீற அவரிடம் அனுமதி கோரினர். ஆரம்பத்தில் அவர் ஒன்றிரண்டு பேரை அனுமதித்தார். பின் தம் மூத்த 'மகன் ஹரிலால் உட்பட

பலரை அனுமதித்தார். அவர்களை டிரான்ஸ்வால் எல்லையில் சமாதானமாக நின்று, பின் டிரான்ஸ்வாலுக்குள் நுழையச் சொன்னார். அவர்கள் எல்லோரையும் டிரான்ஸ்வால் அரசாங்கம் கைதுசெய்து, மூன்று மாதச் சிறைத்தண்டனையும் விதித்தது. காந்தியும் அவர்களோடு சேர்ந்தார். டிரான்ஸ்வாலிலும் அநேகர் தங்களிடம் பதிவுப் புத்திரம் இல்லை என்று சொல்லி தண்டனையை ஏற்றுக்கொண்டார்கள்.

75 இந்தியருக்குக் காந்தி சமையல்காரரானார். கடுமையான வேலைசெய்ததால் அவருடைய கைகளில் கொப்புளங்கள் கண்டன. குளியலறைகளைச் சுத்தம் செய்வதற்கும் தாமாகவே முன்வந்தார். அச் சமயம் வெளிவந்த ஒரு கட்டுரையில், 'ஒருவன் தன்னுடைய தேசத்திற்காகவும் சமயத்திற்காகவும் சிறைசெல்வதிலும், அங்கு அனுபவிக்கும் கஷ்டங்களிலும் இழிவிலும்தான் மகிழ்ச்சிக்கு வழி இருக்கிறது' என்று காந்தி எழுதினார். கைதியினுடைய ஆத்மா சுதந்திரமாகத்தானிருக்கிறது என்று அவர் சொன்னார். இதே கருத்துகளைத்தான் நியூ இங்கிலாந்து (New England) கலகக்காரரான ஹென்றி டேவிட் தோரோ (Henry David Thoreau) என்பவர் தம்முடைய சிறை அனுபவத்தைப்பற்றிக் கூறும்போது வெளியிட்டிருக்கிறார். 'நான் ஒரு வினாடிகூட அடைபட்டு இருப்பதாக உணரவில்லை. இந்தச் சுவர்களை எழுப்பியதால் கல்லும் மண்ணும் வீணாக்கப்பட்டிருக்கிறது' என்று தோரோ அவருடைய சிறைஅனுபவத்தைப்பற்றி எழுதினார். 'சட்டத்திற்குக் கீழ்ப்படியாமை' என்ற கட்டுரையிலிருந்து காந்தி இந்த வாசகத்தை எழுதிவைத்திருந்தார். தமது இரண்டாவது சிறை வாசத்தில் காந்தி அக் கட்டுரை முழுவதையும் படித்து அது சிறந்த கட்டுரை என்று பாராட்டினார். அவரது அறிவையும் மனத்தையும் அக் கட்டுரை கவர்ந்தது. காந்தியின் செயல்களிலிருந்து அவர் தோரோவின் கருத்துகளை முழுவதும் ஏற்றுக்கொண்டார் என்பது நன்கு விளங்கும். அதைப்போல் தோரோவும் இந்தியக் கருத்துகள் பலவற்றை ஏற்றுக்கொண்டார் என்பது அவரது கருத்துகளிலிருந்து தெரியவரும். தோரோவும் அவருடைய நண்பர் ரால்ப் வால்டோ எமர்சனும் (Ralph Waldo Emerson) பகவத்கீதையையும் இந்துக்களின் புனித நூற்களான உபநிஷத்துகள் சிலவற்றையும் படித்தனர். இவ்வாறு மஸாச்சூஸட்ஸில் (Massachusetts) இருந்த தோரோ, காந்தி பிறந்த இந்தியாவிலிருந்து கருத்துகளைக் கடன் வாங்கினார். தோரோவின் கருத்துகள் தென் ஆப்பிரிக்காவில் போராடிக்கொண்டிருந்த காந்திக்கு அவர் நூல்மூலம் எட்டின. இவ்விதம் இந்தியாவிலிருந்து தாம் வாங்கிய கடனைத் தோரோ காந்திமூலம் திருப்பிக் கொடுத்தார்.

'சட்டத்துக்குக் கீழ்ப்படியாமை' என்னும் கட்டுரையில், 'எனக்கு ஒரே ஒரு கடமைதான் உண்டு. அதை நான் மேற்கொள்வது என்

உரிமை. நான் எதைச் சரியென்று நினைக்கிறேனே, அதை எந்தச் சமயத்திலும் செய்வதே என் கடமை' என்று தோரோ எழுதுகிறர். 'சட்டத்திற்குக் கீழ்ப்படிந்து நடப்பதைவிட தமக்குச் சரியென்று பட்டதைச் செய்வதே என் கடமை' என்று தோரோ எழுதுகிறர். சட்டத்திற்குக் கீழ்ப்படிந்து நடப்பதைவிடத் தமக்குச் சரி என்று பட்டதைச் செய்வதே அதிகக் கண்ணியமானது என்று அவர் உணர்ந்தார். 1869ஆம் ஆண்டு அவர் அடிமை வியாபாரத்தையும் மெக்சிகோ (Mexico) படையெடுப்பையும் எதிர்த்து எழுதினர். 'அடிமை வியாபாரத்தையும் யுத்தத்தையும் எதிர்த்து ஆயிரக்கணக்கான மக்கள் தம் கருத்தினைக் கூறுகின்றனர். ஆனல், அவற்றை ஒழிப்பதற்குச் செய்கையில் ஒன்றும் செய்யவில்லை. தர்மத்தை ஆதரித்துப் பேசுபவர்கள் 999 பேர் இருக்கின்றனர். ஆனல், தரும வழியில் நடப்பவன் ஒருவன்தான் இருக்கிருன் என்று அவர் கூறியுள்ளமை காந்தியின் உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்தது எனலாம்.

காந்தியைப்போல தோரோவும் பெரும்பான்மையோருடைய தவறுகளைத் திருத்த ஒழுக்கமும் உறுதியும் உள்ள சிலரின் திறமை போதும் என்று நம்பினர். 'ஆயிரம்பேர் இல்லை, நூறுபேர்; அதுவும் வேண்டாம். பத்துப்பேர்—உண்மையான பத்தே பத்துப்பேர் மாத்திரம்—ஏன் உண்மையான ஒரே ஒரு மனிதன்—இந்த மஸாசூச்ஸெட்ஸ் ராஜ்யத்தில் இருப்பதாக நான் பெயர்சொல்லிக் கூப்பிடமுடிந்தால் போதும். அமெரிக்காவில் அடிமை வைத்திருக்கும் முறை ஒழிந்து போகும். உண்மையான மனிதன் என்ருல் அடிமை வைத்திருப்பதை விட்டுவிடுவான். அடிமை முறையை ஆதரிக்கும் ராஜ்யத்திற்குத் தன் ஒத்துழைப்பை அளிக்க மறுத்துவிடுவான். அதற்காகச் சிறை செல்வான். முதலில் எவ்வளவு சிறியதாகத் தோன்றினலும் பரவாயில்லை. நன்ருகச் செய்த காரியம் என்றும் நிலைத்துவிடும். ஆனல், நமக்கு வெறும் பேச்சிலேதான் ஆசை இருக்கிறது' என்று தோரோ எழுதினர்.

தோரோ வரிசெலுத்த மறுத்ததற்காகச் சிறையில் அடைக்கப்பட்டார். ஆனல், அவர் நண்பர் அதைச் செலுத்திவிடவே 24 மணி நேரத்தில் அவர் வெளியேவந்தார். எமர்சன் 'அரசியல்' என்னும் கட்டுரையில் 'சட்டம் மனித தருமத்திற்கு முரணனது என்பதற்காக அதை யாரும் மீறினதாக எனக்கு நினைவுக்கு வரவில்லை' என்று எழுதினர். எமர்சன் 1882ஆம் ஆண்டில் இறந்தார். ஆகையால் அவருக்குக் காந்தியைத் தெரியாது. தோரோவின் 'சட்டத்துக்குக் கீழ்ப்படியாமை' என்ற கட்டுரையைக் காந்தி படித்த சமயம், அவர் அதே காரணத்திற்காகச் சிறையில் இருந்தார். பின் அவர் வாழ்நாள் முழுதும் அப்படியே இருந்துவந்தார்.

1909 முதல் 1910 வரை காந்தி டால்ஸ்டாயுடன் (Count Leo Tolstoy) கடிதப்போக்குவரத்து வைத்திருந்தார். காந்தியைப்போல

டால்ஸ்டாயும் மனிதனின் ஆத்மீக சக்தியிலும், சட்டமறுப்பிலும் நம்பிக்கை கொண்டவர். 'ஆண்டவனின் ராஜ்யம் உனக்குள்ளே இருக்கிறது' என்ற நூலில் டால்ஸ்டாய் 'கிறிஸ்தவர்களுக்கு இடையில் அரசாங்கங்கள் ஆபத்தான நிலையில் இருக்கின்றன. அவர்கள் அதிகாரத்தைக் குலைப்பதற்கு எந்தவிதமான முயற்சியும் வேண்டியதில்லை' என்று எழுதியிருக்கிறார். 'கிறிஸ்தவன் என்பவன் தன் அண்டை வீட்டுக்காரனோடு சண்டைக்குப் போகமாட்டான்; அவன் மற்றவர்களைத் தாக்கவுமாட்டான்; பலாத்காரத்தை உபயோகிக்கவும் மாட்டான்; அதற்கு மாறாக எதிர்ப்பு இல்லாமல் துன்பத்தைத் தானே அனுபவிப்பான்; தீமையுடன் எதிர்த்துப்போராடாமல் அன்புவழி நின்று, தீமையிடமிருந்து விடுதலை பெறுவான்; அவை மாத்திரமல்ல, உலகத்தையே தீமையிலிருந்து விடுவிப்பான்' என்று மேலும் டால்ஸ்டாய் கூறுகிறார்.

டால்ஸ்டாய் தமது இறுதிநாட்களில் தேக உழைப்பு, துறவறம், விரதம், கிறிஸ்தவ போதனை முதலியவற்றின்மூலமாக மதத்தையும் ஒழுங்கையும் ஒன்றுசேர்க்க முயன்றார். தோரோவும் ரஸ்கினும் கூட மனிதனுடைய லட்சியத்திற்கும் செய்கைக்கும் நெருங்கிய தொடர்பு ஏற்படுத்த முயன்றனர். அவ் விருவரிடமும் இருந்த கலைப்பண்பு காரணமாக இருவரும் கருத்து, சொல், செயல் மூன்றையும் இணைக்க விரும்பினர்.

டால்ஸ்டாய்க்கும் காந்திக்குமுள்ள ஒற்றுமை வேற்றுமைகளை ரோமெயின் ரோலண்ட் (Romain Rolland) என்பவர் 'காந்திக்கு எல்லாம் இயற்கையானது; மாசற்றது; எளிமையானது. அவருடைய போராட்டங்கள் எல்லாம் சமயப்பண்புகள் கலந்தவை. ஆனால், டால்ஸ்டாய்க்கோவெனில் செருக்குக்கெதிராக செருக்கு நிறைந்த போராட்டம். ஆத்திரத்தோடு ஆத்திரமான போராட்டம். வெறுப்புக்கெதிராக வெறுப்பு நிறைந்த போராட்டம். எல்லாம் பலாத்காரம் நிறைந்தது. அவரது அஹிம்சையும் அப்படியே' என்று எழுதியுள்ளமை இங்குக் குறிப்பிடத்தக்கதாகும்.

டால்ஸ்டாய் மனப்புயலால் பாதிக்கப்பட்டவரைப் போன்றவர். காந்தி அமைதியாகவும், நிலைதவறுமலும் இருப்பவர். காந்தியோடு சேர்ந்தவர்களில் பலர் டால்ஸ்டாயைப் போன்றவர்கள். காந்தி எப்பொழுதும் தமக்குச் சரி என்று தோன்றியதையே செய்தார். கொள்கைக்கும் மனச்சாட்சிக்கும் முரணாக எது செய்தால் அச் சந்தர்ப்பத்திற்குச் சரியாக இருக்குமோ அதைச் செய்ய விரும்புவார். செய்கையில் லாப நஷ்டங்களை எண்ணமாட்டார். பலர் அதைஆமோதிப்பார்கள் என்பதற்காகவும் அதைச்செய்யார். தம் மனச்சான்றின்படி எதையும் செய்ததால் அவருக்குள் மனக்கலக்கம், ஐயம் என்பது கிடையாது.

அதனால் பிறர் தவறு செய்கிறார்கள் என்று கருதினால் அவர்களுடன் பொறுமையுடன் போராடும் சக்தியைப் பெற்றார். வார்த்தைகளையும் கருத்துகளையும் அவற்றின் உண்மையான தத்துவம் எஃது என்பதை ஆராய்ந்து அவற்றை ஏற்றுக்கொண்டார். அதற்கேற்ப ஒழுகினார். பிறகு அவற்றைப் பிறருக்கு எடுத்துரைத்தார். தாம் வாழ்ந்துகாட்டியதையே அவர் போதித்தார்.

மனம், வாக்கு, காயம் மூன்றிற்கும் இடையேயுள்ள முரண்பாடுகளே நம் நாகரிகத்தின் எண்ணற்ற தீமைகளுக்குக் காரணமாயிருக்கின்றன. எல்லா சமஸ்தானங்களிலும், ராஜ்யங்களிலும், கட்சிகளிலும் மனிதர்களிடையேயும் இம் முரண்பாடு காணப்படுகின்றது. ஸ்தாபனங்களிடமும் மனிதர்களிடமும் ஒன்றுக்கொன்று முரணான இரட்டைக் குணாதிசயங்கள் ஏற்படுகின்றன. காந்தி இம் முரண்பாட்டைக்களைந்து, ஒற்றுமையை ஏற்படுத்த முயன்றார். படிப்படியாக அவர் அதைப்பெற்றதும் மகிழ்ச்சியடைந்தார்.

சொல், கொள்கை, செயல் மூன்றும் பிரிக்கமுடியாத ஒன்றே என்று காந்தி ஒழுகினார். அதனால் அவருக்கு அறிவுத் தெளிவு இருந்தது. 'குணம்' என்ற சொல்லுக்கு அதுதான் பொருள். 'உண்மை உன்னை விடுதலைபெறச் செய்யும்' என்றார். உண்மையைப் பேசி தம்மை விடுதலையாக்கிக்கொண்டு காந்தி சிறைக்குச் சென்றார்.

9. சிறந்த வெற்றி

டிரான்ஸ்வாலிலுள்ள ஓர் இந்தியன் நேட்டாலுக்குப் போய், மறுபடியும் டிரான்ஸ்வாலுக்கு வந்தால் குடியேற்றச் சட்டத்தை மீறியதாகும். ஒரு மாதம் முதல் மூன்று மாதங்கள்வரை சிறைவாசம் கிடைக்கும். சில சத்தியாக்கிரகிகள் எட்டுமுறை சிறை சென்றனர். பழைய தண்டனை முடிந்ததும் புதுத் தண்டனை அடையச் சென்றனர். ஒருதடவை 2,500 பேர் சிறையிலிருந்தனர். 6,000 பேர் அம் மாகாணத்தைவிட்டே ஓடிவிட்டனர். அதற்கு ஒரு முடிவு தெரியவில்லை.

1909ஆம் ஆண்டில் போலக் என்பவரை இந்தியாவிற்கு அனுப்பி விட்டுக் காந்தி இங்கிலாந்திற்குச் சென்றார். சாம்ராஜ்யத்தின் ஒரு பகுதியிலுள்ளவர்கள், நிறவெறியைப்பற்றி உணர்ந்தால், அடுத்த பக்கத்திலுள்ளவர்கள் நிறவெறியைப் போக்க உதவி செய்வார்கள் என்று நினைத்தார். இந்தியாவிலுள்ளவர்கள் தென் ஆப்பிரிக்காவிலுள்ள இந்தியர்களுக்கு அனுதாபம் காட்டினால் வைசிராய் இதை லண்டனுக்குத் தெரிவிப்பார். அங்ஙனம் அடிக்கடி லண்டனிலுள்ளவர்களுக்கு வற்புறுத்திச்சொன்னால் ஸ்மட்ஸ் கட்டுக்கு அடங்குவார். இதுதான் காந்தியின் திட்டம். இக் காலத்தில் இதுதான் சிறந்த முறை.

அக் காலத்திலோ இந்த முறையை அப்பொழுதுதான் அனுசரிக்க ஆரம்பித்திருந்தார்.

லிபரல் கட்சியிலுள்ள பல ஆங்கிலேயரின் ஆதரவு காந்திக்குக் கிடைத்தது. காந்தியின் இந்தப் பயணத்தினால் உடனடியாக எவ்வித பலனும் கிடைக்கவில்லை. ஆனால், தென் ஆப்பிரிக்க இந்தியரின் பிரச்சினையைச் சாம்ராஜ்யத்திற்கு ஒரு பெரிய தலைவலியாக்குவதில் அவர் வெற்றிபெற்றார். இறுதி வெற்றிக்கு அப்பொழுது வித்திடப்பெற்றது.

1909ஆம் ஆண்டின் முடிவில் அவர் தென் ஆப்பிரிக்காவிற்குத் திரும்பினார். ஒருவிதமான கூட்டுறவுப் பொது நலப் பண்ணை அமைக்கத் தீர்மானித்தார். அங்கு சத்தியாக்கிரகிகள் ஒருவரோடொருவர் சேர்ந்து எளிய வாழ்க்கை நடத்தப் பயிற்சி அளிக்கப்பட்டனர். இவ் வியக்கத்தில் சிறை சென்றவர்களின் குடும்பத்தினருக்கும் தண்டனைகளுக்கும் இடையேயுள்ள நாட்களில் சத்தியாக்கிரகிகள் தங்குவதற்கும் ஒரு வீடு தேவையாயிருந்தது. சத்தியாக்கிரக இயக்கத்திற்கு இரண்டாவது தலைவராக இருந்த ஹெர்மான் கலன்பாக் (Herman Kallenbach) என்பவர் ஜெர்மன் யூதர். அவர் உயரமாகவும், திடகாத்திரமாகவும், சதுரமான தலையும், அடர்ந்த மீசையும் மூக்கில் பொதிந்த கண்ணாடியும் உடையவர். ஒரு பணக்காரச் சிற்பி; புத்தமதத்தைச் சேர்ந்தவர்; மல்யுத்தத்தில் சிறந்தவர்; புகழ்பெற்ற சாண்டோவின் சீடர்; ஆழ்ந்த உணர்ச்சி உள்ளவர். இளகிய உள்ளம் படைத்தவர். குழந்தையைப் போன்ற எளிமைவாய்ந்தவர் என்று காந்தி அவரை வர்ணித்திருக்கிறார். கலன்பாக் 1,100 ஏக்கர் நிலத்தை லாலி என்னுமிடத்தில் விலைக்கு வாங்கினார். லாலி ஜோஹனஸ்பர்க்கிலிருந்து 21 மைல் தூரத்திலுள்ளது. அந்த நிலத்தைச் சத்தியாக்கிரகிகளுக்கு இலவசமாகக் கொடுத்தார். காந்தி அதற்கு டால்ஸ்டாய் பண்ணை என்று பெயர் வைத்தார். காந்தி, அவருடைய குடும்பத்தினர், கலன்பாக் எல்லோரும் அங்குவந்து வசிக்கத் தொடங்கினர்.

இந்தியாவிலுள்ள ஒரு நண்பருக்குக் காந்தி பின்வருமாறு எழுதினார். 'பண்ணைக்கு வேண்டிய ரொட்டி முழுவதும் நான் செய்கிறேன். ரொட்டி நன்றாகச் செய்யப்பட்டிருக்கிறது என்பது பொதுவான அபிப்பிராயம். நாங்கள் காடிச்சத்து, ரொட்டிக்காரம் ஒன்றும் உபயோகிப்பதில்லை. பண்ணையில் கிடைத்த ஆரஞ்சுப்பழங்களிலிருந்து ஆரஞ்சுப்பாகு செய்திருக்கிறோம். 'காரமல்' காப்பியும் போட அறிந்திருக்கிறேன். அந்தக் காப்பியைச் சிறு குழந்தைகளுக்குக் கூடக் கொடுக்கலாம்.'

கலன்பாக் காந்திக்கு இழுக்கின்ற அறைப்பெட்டிகள், பள்ளிக்கூடப்பெஞ்சுகள், தோல்செருப்புகள் முதலியன செய்யக் கற்றுக் கொடுத்திருந்தார். மேலும் காந்தி தம் மனைவிக்குச் சட்டைகள் தைத்

திருக்கிருர். அதனைக் கஸ்தூரிபா அணிந்துகொண்டதாகவும் அவர் பெருமைப்பட்டதுண்டு. அவர் சமையலறையில் உதவிசெய்தார். பெண்களிடையே சிறு சச்சரவுகள் ஏற்படாதபடி பார்த்துக்கொண்டார். பொது நிர்வாகியாகவும் பணிபுரிந்தார். சில வேளைகளில் கோர்ட்டுக்குப் போவது தவிர்க்கமுடியாதுபோய்விட்டால், காலை இரண்டு மணிக்கே பண்ணையைவிட்டுப் புறப்பட்டு இருபத்தோரு மைல்கள் நடந்துசென்று நகரை அடைந்து, மீண்டும் அதே இரவில் நடந்தே திரும்பிவருவார். ஒருநாள் 50 மைல்கள் நடந்ததாக அவருக்கு நினைவிருப்பதாகப் பிற்காலத்தில் அவர் ஒருமுறை குறிப்பிட்டுள்ளார்.

காந்திக்கு நல்ல உடல்பலம், தூய வாழ்க்கையினுலும் சுகாதாரமான உணவினுலும் ஏற்பட்டதென்று சொல்கிருர். கலன்பாக்கும் காந்தியும் சமைத்த ஆகாரங்களை விலக்கினர். வாழை, பேரீச்சை, எலுமிச்சை, ஆரஞ்சு முதலிய பழங்களையும் நிலக்கடலையையும் ஒலிவ எண்ணெயையும் குறித்தஅளவு சாப்பிட்டுவந்தனர். இந்தியாவில் பசுக்களையும் எருமைகளையும் அதிகமாகப் பால் கறப்பதற்குச் செய்யும் கொடுமைகளைப் பார்த்துவிட்டுப் பால் குடிப்பதை நிறுத்திவிட்டார்.

பண்ணையிலுள்ள மக்கள்தொகை சிறையிலுள்ள சத்தியாக்கிரகிகளின் எண்ணிக்கையைப் பொறுத்தது. சிலவேளைகளில் நூற்றுக்கும் அதிகமிருக்கும். கலன்பாக்கும் காந்தியுடன் சேர்ந்து அங்குள்ள குழந்தைகளுக்குச் சமயம், பூகோளம், சரித்திரம், கணக்கு போன்ற பல பாடங்களைப் போதித்துவந்தார்.

ஆணும் பெண்ணும் சேர்ந்து படிக்கும் விஷயத்தில் காந்தியின் கொள்கைகள் சம்பிரதாயத்திற்கு முரணனது. பையன்களையும் பெண்களையும் ஒரேநேரத்தில் ஊற்றில் குளிக்கும்படி ஊக்குவித்தார். அவர்களில் சிலர் வயதுவந்தவர்கள். பெண்களுக்குக் காவலாக அவர் எப்பொழுதும் கூட இருப்பார். ‘ஒரு தாய் தன் பெண்ணைக் கண்காணிப்பதுபோல என் கண்களும் அப் பெண்களைவிட்டு அகலாமல் கவனித்துக்கொண்டேயிருக்கும்’ என்று அவர் கூறுகிருர். சந்தேகமில்லாமல் ஆண்கள் கண்களும் அப் பெண்களைப் பின்பற்றியிருக்கும். இரவில் வெளித்தாழ்வாரத்தில் இருபாலாரும் தூங்கினர். வாலிபருடைய படுக்கைகள் காந்தியைச் சுற்றியிருந்தன. இரண்டு படுக்கைகளுக்கு இடையில் மூன்றடி தூரம்தானிருந்தது. அவர் அப் பையன்களைத் தாயைப் போல் நேசித்தார் என்பது அந்த இளைஞர்களுக்குத் தெரியும் என்று காந்தி சொன்னர். மேலும் அவர் அவர்களுக்குப் புலன்அடக்கத்தைப் பற்றிச் சொல்லியிருக்கிருர் அல்லவா?

ஒருநாள் ஒரு பெண்ணையும், இரு பையன்களையும்பற்றி ஓர் அவதூருன செய்தி கிளம்பியது. அதிலிருந்து குற்றம் செய்த ஆண்களின் கண்ணை எப்படித் தூய்மைப்படுத்தலாம் என்பதற்குக் காந்தி ஒரு வழி

தேடிக்கொண்டிருந்தார். இரவு முழுவதும் தூங்காமல் இதைப்பற்றி யோசித்துக்கொண்டிருந்தார். காலையில் அவருக்கு யோசனை தோன்றியது. அவர் அந்தப் பெண்ணை மொட்டையடிக்கச் சொன்னார். அவள் அதிர்ச்சியுற்றாள். ஆனால், அவரது உறுதியை அவளால் எதிர்க்கமுடியாது போகவே அவள் இணங்கினாள். அவரே அவளுக்கு மொட்டையடித்துவிட்டார்.

பல வருடங்களுக்குப் பிறகு இச் சம்பவத்தைப்பற்றி அவர் கூறும்போது அவருடைய அப்பாவித்தனத்திற்குக் காரணம் அறியாமையே என்றார். ஆனால், அந்த அறியாமைக்குக் காரணம் என்ன என்று விளங்கவில்லை. 'எனக்கு டால்ஸ்டாய் பண்ணையில் தன்னம்பிக்கையும் தைரியமும் உச்சநிலையில் இருந்தன' என்று கூறி அதன் மர்மத்தை ஓரளவு அகற்றினார். அளவுகடந்த் தன்னம்பிக்கை காரணமாகச் சில சமயங்களில் அவருடைய நண்பர்களின் தயக்கம், அவர்களின் உணர்ச்சிகள், குறைகள் முதலியவற்றைக் காணத் தவறிவிட்டார். பிறருடைய ஆற்றல்பற்றிக் கவலைப்படாமல் தம்பால் உள்ள ஊக்கத்தையே அவர்களிடமும் எதிர்பார்த்தார். பிறர் குறைகளைப்பற்றிக் கவலைப்படாமல் ஒரு காரியத்தில் இறங்கும் இத் தன்னம்பிக்கை மாபெரும் இடையூறுகளையும் தகர்த்துப் பெருஞ்சாதனைகளைப் புரிய உதவுகிறது.

இதற்கிடையில் சத்தியாக்கிரகிகள் சிறைக்குச் செல்வதும் திரும்புவதும் டால்ஸ்டாய் பண்ணையில் சிறிதுகாலம் இருப்பதும் பின்னர் மறுமுறையும் சிறைக்குச்செல்வதும் திரும்புவதுமாகத் தொடர்ந்து நடந்து வந்தது. குறிப்பிடத்தக்கதொன்றும் நடக்கவில்லை. பலருக்கு ஊக்கம் குன்றியது. ஆனால், காந்தியின் ஊக்கம்மாத்திரம் குறையவில்லை. இந்திய தேசிய முன்னணியில் நின்ற தலைவர் கோபால கிருஷ்ண கோகலே (Gopal Krishna Gokhale) 1912ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் தென் ஆப்பிரிக்காவின் நிலைமையைப் பார்க்க அங்கு வந்தார். நம்பத்தகுந்த சத்தியாக்கிரகிகளின் பெயர்ப் பட்டியலைத் தரும்படி கோகலே காந்தியிடம் கேட்டார். காந்தி 66 பெயர்கள் எழுதிக் கொடுத்தார். அவர்களில் 16 பேர்களாவது இறுதிவரை உறுதியாக இருப்பார்கள் என்று சொன்னார். அவர்களை அவர் சமாதானப்படை என்று அழைத்தார். அவர்களின் எண்ணிக்கை எவ்வளவு குறைவானபோதிலும் காந்திக்கு ஊக்கம் குன்றியதில்லை. அரசாங்கம் எப்படியும் ஆத்ம சக்திக்குத் தலைவணங்கும் என்று காந்தி திட்டமாக நம்பினார். அக் காலத்தில் கோகலேவுக்கு இந்தியர்களிடமும் பிரிட்டிஷ் அதிகாரிகளிடமும் அதிகச் செல்வாக்கு இருந்தது. ஜெனரல் போதா (Botha), ஜெனரல் ஸ்மட்ஸ் இவர்களின் நிர்வாகத்திலிருந்த தென் ஆப்பிரிக்காவின் புது ஐக்கிய அரசாங்கம் கோகலேயை நன்றாக வரவேற்று, உபசரித்து, அவர் பல இடங்களையும் சுற்றிப் பார்க்கவேண்டிய வசதிகள் எல்லாம் செய்து கொடுத்தது. இவ்வாறு செய்ததால் கோகலே இந்தியாவிற்குச் சென்று

தென் ஆப்பிரிக்காவைப்பற்றி நல்ல கருத்தினைக் கூறுவார் என்று நினைத்தது. ஒப்பந்தக் கூலியாட்கள்மேல் விதித்திருந்த மூன்று பவுன் வரியையும் நீக்கிவிடுவதாக வாக்களித்தது.

இவ் வாக்குறுதியைக் கோகலே காந்தியிடம் சொன்னதும் காந்தி, 'எனக்கு அதைப்பற்றிச் சந்தேகந்தான். மந்திரிகளை எனக்குத் தெரிந்த அளவுக்கு உமக்குத் தெரியாது' என்றார்.

கோகலேயிடம் அளவற்ற பற்றும் மதிப்புமுள்ளவர் காந்தி. 'கோகலே கங்கைத்தீர்த்தம் போன்றவர். கங்கையாற்றில் குளித்துப் புத்துணர்ச்சி பெறுவதுபோல கோகலேயுடன் பழகுவதும் பேசுவதும்' என்று காந்தி சொல்லியிருக்கிறார். கோகலே தமக்கு அரசியல் குரு என்றும் தமது அறிவுச்சுடரைத் தூண்டியவர் என்றும் காந்தி ஒப்புக் கொண்டிருக்கிறார். ஆனால், எவ்வளவு பெரியவர்களாயிருந்தாலும் சரி, அவர்களது தவறான கருத்துக்களையும் கொள்கைகளையும் காந்தி ஒரு நாளும் ஏற்றுக்கொள்ளமாட்டார். போதா, ஸ்மட்ஸ் வாக்குறுதி தென் ஆப்பிரிக்கா போராட்டத்தின் முடிவுக்கு அறிகுறி என்று கோகலே நினைத்தார். ஆகவே அவர் காந்தியிடம் ஒரு வருடத்திற்குள் அவர் இந்தியாவிற்குத் திரும்பவேண்டுமென்றும் வரத் தவறுவதற்கு எந்த விதமான காரணத்தையும் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை என்றும் கூறினார். ஆனால், காந்தி பிடிவாதமாக இருந்தார். 'நீர் எப்பொழுதும் உம்முடைய விருப்பப்படியே செய்வீர்' என்று கோகலே காந்தியைக் கடிந்துகொண்டார். எனினும், பம்பாய்க்குத் திரும்பியதும், கோகலே 1912ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் டவுன்ஹாலில் நடத்திய கூட்டத்தில் பின்வருமாறு கூறினார். 'தம்மைச் சுற்றியுள்ள சாதாரண மக்களை வீரர்களாகவும் சத்திய சாட்சிகளாகவும் ஆக்கக்கூடிய அதிசயமான ஆத்மீக சக்தி காந்திக்கு இருக்கிறது.' காந்தியின் முன்னிலையில் ஒருவன் தகாத காரியத்தைச் செய்யவோ நினைக்கவோ வெட்கப்படுவான் என்றும் கோகலே கூறினார். கோகலேயைப்போல் பெரிய மனிதர்களைக் காணும்போது காந்தி அவர்களுடன் மரியாதையுடனும், பணிவுடனும், பயத்துடனும் நடந்துகொள்வார். ஆனால், சில சமயங்களில் காந்தியை அந்தப் பெரிய மனிதர்களாலும் புரிந்துகொள்ளமுடியவில்லை. காந்தி சிறிது கூச்சமுடையவரெனினும், தம் சொந்தக் கருத்துகளை ஒரு காலும் விட்டுக்கொடுக்கமாட்டார். அவருக்குத் தம்மிடமுள்ள தன்னம்பிக்கையால் அடக்க சக்தியும் ஊக்கமும் ஏற்பட்டன. அவர் கொண்டிருந்த தன்னம்பிக்கையின் காரணமாக வெளிப்பட்ட பேராற்றலை, அவரைக் குறைகூறுபவர்களாலோ அவரைப் பின்பற்றும் தொண்டர்களாலோ தடுக்கமுடியவில்லை.

காந்தி சொன்னது சரி என்று பின்நடந்த சம்பவங்களால் தெரிய வந்தது. நேட்டாலிலுள்ள ஐரோப்பிய முதலாளிகள் மூன்று பவுன்

வரியை நீக்க அனுமதிக்கவில்லை என்று ஸ்மட்ஸ் சட்டசபையில் கூறி விட்டார். கோகலேவுக்குக் கொடுத்த வாக்குறுதியை இது மீறியதாகும் என்று எல்லோராலும் கருதப்பட்டது. கூட்டங்கூட்டமாக ஒப்பந்த வேலையாட்களும் விடுதலைபெற்ற ஒப்பந்த வேலையாட்களும் சத்தியாக் கிரக இயக்கத்தில் கலந்துகொள்ள முன்வந்தனர்.

வரி, குடியேற்றத்திற்குத் தடை ஆகிய இரண்டு பிரச்சினைகளோடு, மூன்றாவதாகப் புதியதொரு பிரச்சினையும் வந்து சேர்ந்தது. கேப் காலனி (Cape Colony) உயர்நீதிமன்ற நீதிபதி 1913ஆம் ஆண்டு மார்ச்சு 14ஆம் தேதி அளித்த தீர்ப்பில் தென் ஆப்பிரிக்காவில் கிறிஸ்தவச் சடங் குப்படியும் திருமண ரெஜிஸ்டர்படியும் நடந்த திருமணங்கள்தான் சட்டப்படி நடந்த திருமணங்கள் என்று கருதப்படும் என்று கூறப் பட்டது. 'இப்பொழுது நான் உங்கள் மனைவி இல்லையோ?' என்று கஸ்தூரிபா பெரும் ஆச்சரியத்துடனும் பயத்துடனும் கணவரிடம் கேட்டார். ஆகவே இந்து, முஸ்லிம், பார்ஸி முறைப்படி நடந்த திருமணங்கள் சட்டத்திற்குப் புறம்பானவை. இந்தியரின் மனைவிகள், சட்டப்படி வைப்புப்பெண்களேயாவர். ஆகவே, ஏராளமான இந்தியப் பெண்கள் சத்தியாக்கிரகத்தில் பங்கெடுத்துக்கொண்டனர்.

காந்தி சத்தியாக்கிரகப் போருக்குத் திட்டம் வகுத்தார். 'நேட்டால் சகோதரிகளில் சிலர் முதலில் அனுமதியில்லாது டிரான்ஸ்வாலில் நுழைந்து கைதுசெய்யப்படவேண்டும். அவ்வாறே டிரான்ஸ்வால் சகோதரிகள் நேட்டாலில் பிரவேசிக்க வேண்டும். நேட்டால் சகோதரிகள் கைதுசெய்யப்பட்டனர். கோபம் அதிகரித்தது. இன்னும் புது ஆட்கள் சேர்ந்தனர். டிரான்ஸ்வால் சகோதரிகளைக் கைதுசெய்யவில்லை. முன்பு கூறியிருந்தபடி அவர்கள் நியூகாஸில் (Newcastle) நிலக்கரிச் சுரங்கங்களுக்குச் சென்று அங்குள்ள ஒப்பந்தக் கூலிகளை வேலை நிறுத்தம் செய்யச் சொன்னார்கள். அரசாங்கம் அவர்களைக் கைது செய்து ஒவ்வொருவருக்கும் மூன்றுமாதச் சிறைத்தண்டனை விதித்தது. வேலைநிறுத்தம் பரவியது. காந்தியும் நியூகாஸிலுக்குச் சென்றார். வேலைநிறுத்தம் செய்த இந்தியத் தொழிலாளர்களின் வீடுகளுக்கு விளக்கு, நீர் முதலியன அளிப்பதை முதலாளிகள் நிறுத்திவிட்டனர்.

வேலைநிறுத்தம் பலநாட்களுக்கு நீடிக்கும் என்று நினைத்துக் காந்தி, அவர்களுக்குத் தேவையான போர்வைகளையும் உடைகளையும் எடுத்துக்கொண்டு, திறந்த வெளியில் வந்து தங்கும்படி சொன்னார். சில நாட்களில் ஏறக்குறைய 5,000 இந்தியர் திறந்த வெளியில் வசித்து வந்தனர்.

அவர்களை என்ன செய்வது, அவர்களுக்கு எப்படிச் சாப்பாடு கொடுப்பது, அவர்களை எங்கே தங்கவிடுவது என்று காந்திக்குத் தெரியவில்லை. அவர்களை டிரான்ஸ்வாலுக்கு அனுப்பி, பத்திரமாகச்

சிறையில் இருக்கச்செய்யலாம் என்று நினைத்தார். புறப்படுமுன் டிரான்ஸ்வால் அரசாங்கத்திற்குத் தந்தி கொடுத்து, தமது 'சமாதான சேனையை' நேட்டாலிலே கைதுசெய்துவிடலாம் என்று யோசனை கூறினார். அரசாங்கம் அவருக்கு எவ்வித உதவியும் செய்யத் தயாராக இல்லை. ஒரு வாரம் சென்று பிரிட்டோரியாவிலுள்ள (Pretoria) ஸ்மட்ஸுக்குத் தந்தி கொடுத்துப் பார்த்தார். மூன்று பவுன் வரியை நீக்கிவிட்டால் உடனே வேலைக்குப் போகச்சொல்வதாகவும் சொன்னார். ஸ்மட்ஸின் காரியதரிசி, 'ஜெனரல் ஸ்மட்ஸ் உங்களுடன் பேச்சு வார்த்தை வைத்துக்கொள்ளமாட்டார். நீர் உம்முடைய விருப்பப்படி நடந்துகொள்ளலாம்' என்றார்.

காந்தி இப்பொழுது நேட்டாலுக்குச் செல்லவிரும்பினார். அவர் சந்தேகித்ததுபோல் டிரான்ஸ்வால் அரசாங்கம் சத்தியாக்கிரகிகளைச் சிறையில் அடைக்காவிடில் அவர்கள் ஒரு நாளுக்கு இருபது மைல் வீதம் 8 நாட்கள் நடந்து சென்று டால்ஸ்டாய் பண்ணையை அடைய வேண்டும். இவ்வாறு திட்டம் வகுக்கும்போது, (ஒவ்வொரு தங்குமிடத்திற்கும் உணவை அனுப்பவேண்டி இருந்தது) இம் முயற்சியில் ஏற்படும் கஷ்டங்களை எடுத்துச்சொல்லி பலவீனமானவர்களை வீடுகளுக்குத் திரும்பிச் செல்லும்படி கேட்டுக்கொண்டார்.

1913ஆம் வருடம் நவம்பர் மாதம் 6ஆம் தேதி காலை ஆறரை மணிக்குக் காந்தி தம்முடைய படையை எண்ணிப்பார்த்தார். 2,037 ஆண்களும், 127 பெண்களும், 57 குழந்தைகளும் இருந்தனர். 'பிரார்த்தனை செய்துவிட்டு, ஆண்டவன் பெயரைச்சொல்லி, அணிவகுத்துச்செல்ல ஆரம்பித்தோம்' என்று காந்தி எழுதியிருக்கிறார்.

டிரான்ஸ்வால் எல்லையிலுள்ள போலீசார் அவர்களை.டிரான்ஸ்வாலுக்குள் செல்ல அனுமதித்தனர். சில பெண்கள் குழந்தைகளை இடுப்பிலும் முதுகிலும் வைத்திருந்தனர். பலர் வெறுங்காலுடன் நடந்தனர். தமிழ், தெலுங்கு, குஜராத்தி, ஹிந்தி முதலிய பலவிதமான இந்திய மொழிகளைப் பேசுபவர்கள் அக் கூட்டத்தில் இருந்தனர். ஆனால், அவர்கள் எல்லோரும் சமாதானப்படைத் தளபதியாகிய காந்திக்கு உண்மையுள்ளவர்களாக இருந்தார்கள். 'கைதுசெய்யும்போது எதிர்க்கவே கூடாது. போலீஸ் கொடுக்கும் இன்னல்களைப் பொறுக்க வேண்டும். நேர்மையாகவும் தூய்மையாகவும் நடந்துகொள்ள வேண்டும்' என்று காந்தி அவர்களுக்குக் கட்டளை இட்டிருந்தார்.

முதல்நாள் இரவு காந்தி கைதுசெய்யப்பட்டு, ஜாமீனில் விடுதலை செய்யப்பட்டார். ஏனென்றால், மற்றவர்களைக் கவனிப்பது அவருடைய பொறுப்பாக இருந்தது. இரண்டாவது நாள் இரவு கைதுசெய்யப்பட்டுக் கோர்ட்டுக்குப்போய் பின் விடுவிக்கப்பட்டார். நாலாவது இரவு கைதுசெய்யப்பட்டு அங்கே நிறுத்திவைக்கப்பட்டார். அவரில்லாமல் மற்றவர்கள் டால்ஸ்டாய் பண்ணைக்குச் சென்றனர்.

அடுத்த நாள் காலையில் அவர்கள் பால்ஃபோருக்குப் (Balfour) போய்ச் சேர்ந்தார்கள். சத்தியாக்கிரகிகளை மாட்டுமந்தைபோல் அங்குக் காத்திருந்த புகைவண்டிகளில் ஏற்றி நேட்டால் சுரங்கங்களில் கொண்டுவிட்டனர். சுரங்கங்களைச் சுற்றிலும் இரும்புக்கம்பிகள் வளைத்துக் கட்டப்பட்டிருந்தன. அவற்றைக் கம்பெனி ஆட்கள் விசேஷ போலீஸாராக நியமிக்கப்பட்டு பாதுகாத்துவந்தனர். ஆனால், இந்தியத் தொழிலாளர் சுரங்கத்தில் இறங்கி வேலைசெய்ய மறுத்தனர்.

அவர்களுக்கு அனுதாபம் காட்டுவதற்காகப் பல ஒப்பந்தத் தொழிலாளர்கள் தங்கள் வேலையைவிட்டு வெளியே வந்தனர். அரசாங்கம் இவர்கள் வேலைநிறுத்தம் செய்ய உரிமையில்லாத வெறும் அடிமைகள் எனக் கருதி, அவர்களை அடக்கி ஒடுக்கப் போர்வீரர்களை அனுப்பியது. ஓர் இடத்தில் பட்டாளம் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததின் விளைவாகச் சில இந்தியர் கொல்லப்பட்டனர். சிலர் காயமுற்றனர்.

50,000 ஒப்பந்தத் தொழிலாளர்கள் இப்பொழுது வேலைநிறுத்தம் செய்தனர். இச் செய்தி தந்திமூலம் இந்தியாவிற்குத் தெரிவிக்கப் பட்டது. தென்னாப்பிரிக்க அரசாங்கம் கையாளும் முறையைக் கண் டித்து இந்தியாவில் இந்தியர்கள் ஆட்சேபித்தனர். அப்பொழுது இந்தி யாவில் வைசிராயாக இருந்த லார்டு ஹார்டிஞ்சு (Lord Hardinge) பிற அரசாங்கங்களின் நடவடிக்கைகளில் குறுக்கிடக்கூடாது என்ற சம்பிர தாயத்திற்குப் புறம்பாக, தென்னாப்பிரிக்கா அரசாங்கத்தின் நடவடிக்கை யைக் கடுமையாக ஆட்சேபித்துச் சென்னையில் பேசினார். தென் ஆப்பிரிக்காவில் நடந்ததை விசாரிக்க ஒரு குழு நியமிக்கவேண்டு மென்று வற்புறுத்தினார். இந்தியாவுக்கும் லண்டனுக்கும் செய்திகள் பறந்துகொண்டிருந்தன. 1913ஆம் ஆண்டு டிசம்பர் 18ஆம் தேதி காந்தியும் அவரோடு கைதுசெய்யப்பட்ட போலக்கும் கலன்பாக்கும் விடுதலை செய்யப்பட்டனர். 'விடுதலை அடைந்தது குறித்து நாங்கள் ஏமாற்றம் அடைந்தோம்' என்று காந்தி கூறினார். சத்தியாக்கிரக இயக்கத்தைச் சரியானமுறையில் ஒரு தடவை ஆரம்பித்துவிட்டால், அதன்பிறகு தலைவர்கள் தேவை இல்லை என்று அறிவித்தார்.

இதே சமயத்தில் தென் ஆப்பிரிக்க சர்க்கார் இந்தியர்களின் குறை களை விசாரிக்க ஒரு கமிஷன் ஏற்படுத்தியது. 'இந்தக் கமிஷன் சர்க்கார் கொள்கைகளை ஆதரிப்பவர்களையே கொண்டது' என்று காந்தி சுட்டிக்காட்டினார். 'இங்கிலாந்திலும் இந்தியாவிலும் உள்ள அரசாங்கங்களின் கண்களில் மண்ணைத் தூவி ஏமாற்றவே இந்தக் கமிஷனை ஏற்படுத்தி யிருக்கிறார்கள்' என்றார். கமிஷனின் தலைவரான சர் வில்லியம் சாலமன் (Sir William Solomon) நேர்மையுள்ளவர் என்று காந்தி சொன்னார். ஆனால், எவால்ட் எஸ்ஸெலன் (Mr. Ewald Esselen) என்பவர் இந்தியர்மீது கெட்ட எண்ணம்

கொண்டவர். மூன்ருவது அங்கத்தினரான கர்னல் ஜே. எஸ். வைலி (Colonel J. S. Wylie) 1897ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 800 இந்தியர்களடங்கிய இரு கப்பல்கள் டர்பனுக்கு வந்தபோது, இந்தியர்களுக்குச் சொல்லவொண்ணுத் துன்பங்களை இழைத்தவர். அந்தக் கமிஷனில் இந்தியர்களையாவது, இந்தியர்களிடம் அனுதாபம் உள்ளவர்களையாவது சேர்க்கவேண்டுமென்று காந்தி யோசனை கூறினர்.

வரும் கஷ்டங்களை ஆராய்ந்து, காந்தி அரசியல் போருக்கு ஆயத்தமானர். முழங்கால்வரை ஜிப்பா அணிந்து, இடுப்பிலே கட்டியிருந்த வேட்டியைக் கச்சையாகக் கட்டிக்கொண்டு, செருப்புப் போட்டுக்கொண்டு ஒரு கூட்டத்திற்கு வந்தார். சுரங்கத் தொழிலாளர்களின் வேலைநிறுத்தத்தின் போது சுட்டுக்கொல்லப்பட்ட தோழர்களுக்காகத் துக்கங் கொண்டாடுவதற்காகவே மேல்நாட்டு உடையை அகற்றிவிட்டதாகக் கூறினர். 'இன்று குளிர்ந்த கல்லுக்கடியில் நம் நாட்டினர் சிலர் புதைக்கப்பட்டிருக்கின்றனர். அவர்கள் அடைந்த கதியை நீங்களும் அடையத் தயாரா' என்று கூட்டத்திற்கு வந்திருந்தவர்களைக் கேட்டார்.

'தயார், தயார்' என்று கூட்டத்தினர் உறுதி தந்தனர். 'ஒவ்வோர் ஆணும் பெண்ணும் வயதுவந்த ஒவ்வொரு குழந்தையும் தங்களுடைய சம்பளத்தையோ, வியாபாரத்தையோ, குடும்பத்தையோ, உடலையோபற்றிக் கவலைப்படமாட்டார்கள் என்று நம்புகிறேன்' என்று தொடர்ந்து பேசினர். சாதாரண மக்களிடமிருந்து கீதையில் கூறிய தன்னல விட்டொழிப்பைக் காந்தி எதிர்பார்த்தார். அவர் எதிர்பார்த்தது கிடைத்தது. ஏனெனில், அங்குக் கூடியிருந்தவர்கள் எல்லோரும் சமயப்பற்றுள்ள மக்கள் என்பது தெரியவருகிறது. மேலும், 'இந்தப் போராட்டம் மனித உரிமைக்காகத் தொடங்கியது. ஆகையால், இது மதத்திற்காகவும் ஒழுங்கிற்காகவும் நடக்கும் போர்' என்று கூறினர்.

ஸ்மட்ஸ் அந்தக் கமிஷனில் மாறுதல் செய்யாதுபோகவே, காந்தி 1914ஆம் வருடப்பிறப்பன்று, நேட்டாலிலுள்ள டர்பன் நகரத்திலிருந்து அணிவகுத்துச்சென்று, தம்மோடு சேர்ந்த இந்தியருடன் கைதாகப் போவதாக அறிவித்தார். அரசாங்கம் இதைப்பற்றிக் கவலைப்பட்டுக்கொண்டிருக்கும்போது, தென் ஆப்பிரிக்கா ரயில்வேக்களிலுள்ள ஐரோப்பியத் தொழிலாளர்கள் அனைவரும் வேலைநிறுத்தம் செய்துவிட்டனர். காந்தி உடனே அவருடைய யாத்திரையை நிறுத்திவிட்டார். சத்தியாக்கிரகம் எதிரியின் பலவீனத்தைத் தனக்குப் பயன்படுத்திக்கொள்ளாது என்றும் சேரக்கூடாதவர்களுடன் சேர்ந்து உழைக்கக்கூடாது என்றும் விளக்கினர். சத்தியாக்கிரகி எதிரியைத் துன்புறுத்தாமல், சிறுமைப்படுத்தாமல், அவர் மனத்தை நோகச்செய்

யாமல், உண்மையாலும் வீரத்தாலும் தன்னைத்தானே துன்புறுத்திக் கொள்வதாலும் எதிரியின் மனத்தையும் அறிவையும் வெல்லமுடியும் என்று எடுத்துரைத்தார். அவருடைய செய்கையைப் பாராட்டி இந்தியா, இங்கிலாந்து, தென் ஆப்பிரிக்கா முதலிய இடங்களிலிருந்து வாழ்த்துச் செய்திகள் வந்து குவிந்தன. ரயில்வே வேலைநிறுத்தத்தைச் சமாளிப்பதில் ஸ்மட்ஸ் ஈடுபட்டிருந்தாலும், (ஊரடங்குச் சட்டம் அமலில் இருந்தபோதிலும்) காந்தியைத் தம்முடன் பேசும்படி அழைத்திருந் தார். முன்பு ஏமாற்றப்பட்டதைப்பற்றி இந்தியர் காந்தியை எச்சரித்து, 1908-ல் கொடுத்த வாக்குறுதியை உடைத்தெறிந்ததையும் கோகலே வுக்குக் கொடுத்த வாக்கை மீறியதையும் நினைவுபடுத்தினர். 'மன்னிக் கும் குணம் வீரனுக்கு அணிகலம்' என்னும் ஒரு சமஸ்கிருத சுலோ கத்தை இந்தியருக்குக் காந்தி எடுத்துரைத்தார்.

காந்திக்கும் ஸ்மட்ஸுக்கும் உள்ள பேச்சு ஒப்பந்தப் பேச்சாக நீண்டது. ஒருதடவை அவர்கள் சந்தித்தபோது, 'காந்தி, இந்தத் தடவை நமக்குள் எந்தத் தவறான அபிப்பிராயமும் வேண்டாம். மனத் தில் ஒன்றை வைத்துக்கொண்டு வேறொன்று பேசுவது என்பதும் வேண்டாம். எல்லாவற்றையும் வெளிப்படையாகவே பேசிவிடுவோம்' என்று தீர்மானமாக ஸ்மட்ஸ் கூறினார். நட்புமுறையில் அணுகியதால், நிதானமான ஆனால், நிலையான முன்னேற்றத்திற்குத் துணைபுரிந்தது. ஏற்றுக்கொள்ளப்போகின்ற உடன்படிக்கையின் ஒவ்வொரு பகுதியும் சொல்லும் ஆராய்ந்து எழுதப்பட்டது. இறுதியில், 1914ஆம் ஆண்டு ஜூன் 30ஆம் தேதி காந்தியும் ஸ்மட்ஸும் இந்த உடன்பாட்டின் நிபந்தனைகளை உறுதிசெய்யக் கடிதங்களைப் பரிவர்த்தனை செய்து கொண்டனர். பின் கேப்டவுனிலுள்ள யூனியன் பார்லிமெண்டுக்கு இவ் வுடன்படிக்கை, 'இந்தியரின் துன்ப நிவாரணச் சட்டம்' என்னும் பெயருடன் சமர்ப்பிக்கப்பட்டது. ஸ்மட்ஸ் வேண்டிக்கொண்டபடி ஜூலைமாதம் அது விவாதிக்கப்படாமல் மகிழ்ச்சியுடன் சட்டமாக்கப் பட்டது.

இச் சட்டத்தின்படி (1) விடுதலைபெற்ற ஒப்பந்தத் தொழிலாளர்மீது விதிக்கப்பட்டிருந்த மூன்று பவுன் வரி நீக்கப்பட்டது. பழைய பாக்கி களும் ரத்துசெய்யப்பட்டன. (2) இந்து, முஸ்லிம், பார்ஸி மதச் சம்பிரதாயப்படி நடத்தப்பட்ட திருமணங்கள் சட்டப்படி செல்லும் என்று அறிவிக்கப்பட்டது. (3) தென் ஆப்பிரிக்காவில் பிறந்த இந்தியர் கேப் காலனிக்குள் வரலாம். ஆனால், ஒரு மாகாணத்திலிருந்து மற்றொரு மாகாணத்திற்கு இந்தியர்கள் விருப்பப்படி போவது சட்டப்படி தடுக் கப்பட்டது. (4) 1920ஆம் ஆண்டு முதல் இந்தியாவிலிருந்து ஒப்பந்தக் கூலியாட்கள் வருவது நிறுத்தப்படும். சுயேச்சையான இந்தியர் வர லாம். அவர்கள் மனைவிமாரும் இந்தியாவிலிருந்து தென் ஆப்பிரிக்காவி லுள்ள அவர்கள் கணவர்களோடு வந்து சேர்ந்துகொள்ளலாம்.

இந்தப் புதுச் சட்டத்திற்குக் காந்தி 'தென் ஆப்பிரிக்காவின் பெரிய சுதந்திர சாசனம்' என்று பெயர் வைத்தார். இந்த வெற்றிக்காக காந்திக்குப் பல விருந்துகள் அளிக்கப்பட்டன. ஆயினும், இந்தியர் இன்னும் அவரவருடைய மாகாணங்களிலே அடைபட்டுக் கிடப்பார்கள். டிரான்ஸ்வாலில் நிலம் வைத்திருக்க முடியாது. ஓரிடத்திலும் தங்கம் வாங்க முடியாது. இருந்தபோதிலும் இச் சட்டம் நிறச்சமத்துவத்தை ஒப்புக்கொண்டது. நிறவெறியை அகற்றியது. எல்லாவற்றையும்விட அஃது ஆத்ம சக்திக்கு ஒரு வெற்றியாகும். 'இந்தியன் ஒப்பினியன்' (Indian Opinion) பத்திரிகையில் காந்திஅடிகள் 'சத்தியாக்கிரகம் உலகம் எங்கும் பரவிவிடுமாயின், சமூக லட்சியங்களில் இது புரட்சிகரமான மாறுதல்களை உண்டாக்கிவிடும். மேற்கு ஐரோப்பாவில் வளர்ந்து வரும் ராணுவபலமும் எதேச்சாதிகாரமும் ஒழிந்துவிடும்' என்று எழுதினார்.

தென் ஆப்பிரிக்காவில் தம்முடைய தொண்டு முடிவடைந்ததும், காந்தி, ஹெர்மன் கலன்பாக், கஸ்தூரிபாய் முதலியவர்களுடன் 1914 ஆம் ஆண்டு ஜூலை 18ஆம் தேதி இங்கிலாந்திற்குப் புறப்பட்டார். காந்தி களைப்பாக இருந்தபோதிலும் மகிழ்ச்சியுடன் தோன்றினார். அப்பொழுது கஸ்தூரிபா அழகான பூவேலைப்பாடுள்ள ஒரு வெள்ளைப் புடவை' உடுத்தியிருந்தார். தென் ஆப்பிரிக்காவைவிட்டுப் புறப்படுமுன் காந்தி சிறையிலிருக்கும்போது செய்த ஒரு ஜோடி செருப்பை ஸ்மட்ஸுக்கு அன்பளிப்பாக அனுப்பினார். ஸ்மட்ஸ் அதைப் பிரிட்டோரியாவிலுள்ள தம் பண்ணையில் இருக்கும்போது அணிந்திருந்தார். 1939ஆம் ஆண்டில் தமக்கும் காந்திக்கும் உள்ள நட்பின் அறிகுறியாக அவற்றை ஸ்மட்ஸ் இந்தியாவிலுள்ள காந்திக்குத் திருப்பி அனுப்பி வைத்தார். அப்பொழுது 'இந்தச் செருப்புகளை நான் பல வருடங்கள் கோடைக்காலத்தில் அணிந்துவந்திருக்கிறேன். ஆனாலும், இவ்வளவு பெரிய ஒரு மனிதரின் செருப்புகளை அணிய நான் தகுதியற்றவன் என்ற உணர்ச்சியே இருந்துவந்தது' என்று குறிப்பிட்டுள்ளமை இங்குக் கருதத்தக்கது. காந்தியின் திண்மைக்கும் வீரத்திற்கும் ஏற்ற எதிரி ஸ்மட்ஸ் என்பது அவருடைய இத்தகைய நகைச்சுவையும் பெருந்தன்மையும் நிறைந்த அறிக்கை காட்டுகிறது. காந்தி ஸ்மட்ஸை வெற்றிபெறவில்லை. ஸ்மட்ஸையே வெற்றியாகப் பெற்றார். இனிமேல் ஸ்மட்ஸுக்குப் போராடப் பலமில்லை என்ற நிலையில் ஒப்பந்தம் ஏற்படவில்லை. இதற்குமேல் போராட மனமில்லை என்ற நிலையில்தான் உடன்படிக்கை செய்யப்பட்டது. '20,000 இந்தியரைச் சிறையில் போடமுடியாது' என்று அந்தச் சமயத்தில் ஸ்மட்ஸ் கூறினார். அந்தப் போராட்டம் முடிவடைந்தபோது ஸ்மட்ஸ் மகிழ்ச்சி அடைந்தார். 1939-ல் காந்தியின் எழுபதாவது பிறந்ததின நினைவுமலரில் அவர் பின்வருமாறு எழுதினார். அப்பொழுது அவர் உலகப் புகழ்பெற்ற ராஜதந்திரியாக

இருந்தார். 'காந்தியைப் போன்றவர்கள் நம்முடைய அன்றாட வாழ்க்கையில் அலுப்புத்தட்டும்பொழுதும் வாழ்க்கை சாரமற்றுக் காணப்படும்பொழுதும் ஏற்படும் மனநிலையை மாற்றிப் பிறருக்கு உபகாரம் செய்வதில் மனவெறுப்புத் தோன்றாமல் எல்லையற்ற உற்சாகத்தை அளிக்கின்றனர். நான் அவருக்கு அரசியல் விரோதியாக இருக்கவேண்டியிருந்தது என் விதி. அந்தக் காலத்திலும் நான் அவரிடம் பெரு மதிப்பு வைத்திருந்தேன். எந்தச் சூழ்நிலையிலும் மனித இயற்கையை அவர் மறந்ததில்லை. மிகவும் நெருக்கடியான சமயங்களிலும்கூட சாந்தமாகவும் நிதானம் தவறாமலும் இருந்தார். நம்முடைய காலத்தில் பெருவழக்காக இருக்கின்ற மிருகத்தனம், கருணையற்ற பிடிவாதம் ஆகியவற்றுடன் முற்றிலும் மாறுபட்ட முறையில் அவருடைய நடவடிக்கையும் பண்பும் அன்றும் பின்னரும் இருந்துவந்தன.'

அந்த நெருக்கடியான நாட்களில் வாழ்ந்ததைவிட 25 வருடங்களுக்குப்பிறகு அந்த அனுபவத்தைப்பற்றி எழுதுவது எளிது. அதே கட்டுரையில் அவர் பின்வருமாறு தொடர்ந்து எழுதினார். 'அன்று காந்தியின் நடவடிக்கைகள் எனக்குப் பெரும் சோதனையாக இருந்தன என்பதை நான் ஒளிவு மறைவு இன்றி ஒப்புக்கொள்கிறேன். காந்தி ஒரு புதுமுறையைக் கைக்கொண்டார். சட்டத்தைமீறி ஓர் இயக்கத்தை ஆரம்பிப்பதே அவர்முறை. இந்தியர்களில் பலர் சிறை சென்றனர். காந்தியும் சிறை சென்றார். அவருக்கு வேண்டிய ஓய்வையும் நிம்மதியையும் அச் சிறையிலே பெற்றார். அவருடைய திட்டப்படியே எல்லாம் நடந்தன. சட்டத்தையும் ஒழுங்கையும் காக்க எனக்குத்தான் வழக்கமான கஷ்டம் ஏற்பட்டது. பொதுஜன ஆதரவு இல்லாத ஒரு சட்டத்தை அமல் செய்தபோது வீண்பழியும் இறுதியிலே அச் சட்டம் ரத்தானபோது மானக்கேடும் எனக்கு ஏற்பட்டது.'

1914ஆம் ஆண்டு தென் ஆப்பிரிக்கா வெற்றிக்குக் காரணமாயிருந்தவர் மூவர். முதலாவது காந்தி. 1914ஆம் ஆண்டில் ஆக்ஸ்ஃபோர்டு பல்கலைக்கழகப் பேராசிரியர் கில்பர்ட் மர்ரே (Professor Gilbert Murray of Oxford) 'ஹிப்பர்ட் ஜர்னல்' (Hibbert Journal) என்னும் பத்திரிகையில் காந்தியைப் புகழ்ந்து பின்வருமாறு எழுதினார். 'காந்தியோடு போராடுவதில் கவனமாக இருங்கள். அவர் இந்திய போகங்களையோ, சுகத்தையோ, புகழையோ, வாழ்க்கையில் உயர்வதையோபற்றிச் சிறிதும் கவலைப்படாதவர். தமக்குச் சரி என்று தோன்றுவதைச் செய்வதில் உறுதியாக இருப்பவர். அவர் ஓர் அபாயகரமான எதிரி. அவருடைய உடலை நீங்கள் எப்பொழுதும் வென்றுவிடலாம். ஆனால், அவருடைய ஆத்மாவைச் சிறிதும் உங்களால் வெல்லமுடியாது.' இக் கூற்று தென்ஆப்பிரிக்காவில் அடைந்த வெற்றியில் காந்திக்குரிய பங்கை எடுத்துக்காட்டுகிறது. இரண்டாவது, காந்தியைப் பின்பற்றிய இந்திய சத்தியாக்கிரகிகள். அவர்கள்

ஷெல்லியின் (Shelly) கவிதையிலுள்ள வீரர்களைப் போன்றவர்கள். ஷெல்லியின் இந்தக் கவிதையை இந்தியாவில் காந்தி கிறிஸ்தவர்கள் கூட்டமொன்றில் படித்தார். அந்தக் கவிதையின் சுருக்கம் பின் வருமாறு: 'அமைதியும் உறுதியுமாக நில்லுங்கள். அடர்ந்த காடு களைப்போல் வாய்பேசாமல் கைகளைக்கட்டிக்கொண்டு நில்லுங்கள். அமைதியும் உறுதியுந்தான் தோல்வியுருத போரின் ஆயுதங்கள். அதற்குப்பின்னும் கொடுங்கோலர்களுக்குத் தைரியம் இருக்குமானல் தங்கள் குதிரைகளில் ஏறி உங்களிடையே நுழையட்டும்; அடிக்கட்டும்; அறையட்டும்; வெட்டி, குத்தி அங்கவீனப்படுத்தி வீழ்த்தட்டும்; அவர்கள் விரும்பியதை விரும்பியவாறு செய்யட்டும். கைகளை மடக்கிக் கட்டிக்கொண்டு நிலைநிறுத்திய பார்வையுடன் அச்சமின்றி, ஆச்சரிய மின்றி அவர்களைப் பாருங்கள். அவர்கள் ஆத்திரம் தீரும்வரை வீழ்த்துவதைப் பாருங்கள்.' மூன்ருவதாக அவ் வெற்றிக்கு உதவியவர் ஸ்மட்ஸ். அவர் ஒரு சர்வாதிகாரி. 20,000 இந்தியர்களைச் சிறையில் அடைக்கவோ, அல்லது சுட்டுக்கொல்லவோ தயங்கமாட்டார். அவர் காந்திக்குத் தூக்குத்தண்டனை விதித்திருக்கலாம். அப்பொழுது ஜனநாயகமுமில்லை. காந்தியுமில்லை. ஆனுல், காந்தியை ஒழிக்காமல், அவரை ஒரு பெரிய மனிதராக உயர்த்துவதற்கு வழி தேடினர். அதனுல் ஸ்மட்ஸின் பெருமையும் உயர்ந்தது.

மடல் II

இந்தியாவில் காந்தி

1915 ஜனவரி 9ஆம் தேதி முதல் 1946 மார்ச்சு 2ஆம் தேதி வரை

10. நன்ருகக் கவனித்தல்

காந்தியின் ஆத்மீகப் பண்புகள் இந்தியாவில் விரைவில் வெளியாயின. 1915ஆம் ஆண்டு ஜனவரியில் அவர் இந்தியா திரும்பியதும் கூட்டங்களில் எல்லாம் மக்கள், 'மகாத்மாஜி, மகாத்மாஜி' என்று கோஷமிட்டனர். (ஜி என்பது அன்பையும், மரியாதையையும் குறிக்கும் சொல்.) சிறிது காலத்திற்குப்பிறகு மகாத்மா என்னும் பட்டம் 1913 ஆம் ஆண்டு இலக்கியத்திற்காக நோபல் பரிசுபெற்ற ரவீந்திரநாத் தாகூரால் வழங்கப்பட்டது. 'உழவரின் உடையில் மகாத்மா' என்று அக் கவி எழுதினர். அந்தப் பட்டம் அந்த அரசியல் முனிவருக்கு என்றும் நிலேத்துவிட்டது.

இருபதாம் நூற்ருண்டின் முற்பகுதியில் வாழ்ந்த இந்தியர்களில் மகாத்மா காந்தியும் தாகூரும் தலேசிறந்தவர்கள். ஒருவருக்கொருவர் மரியாதை செலுத்தினர். மற்ற நாட்டு மக்களின் குப்பைத்தொட்டிகளில் நிரந்தரமாகக் கந்தைகள் பொறுக்கும் நிலேயிலிருக்கும் இந்தியாவிற்காகத் தாகூர் கண்ணீர்விட்டார். காந்தியும் அதேமாதிரி நினேத்தார். தாகூரும் காந்தியைப்போலவே, 'உலக சமுதாயங்கள் அனேத்தின் ஒற்றுமைக்காகவும்' பிரார்த்தனே செய்தார். இருவரும் தேசியவாதிகள். அகில உலக நோக்குடையவர்கள்; ஒரேவிதமான நட்புணர்ச்சி உடையவர்கள். இறுதிவரை ஆத்ம நண்பர்களாக இருந்தார்கள். ஆனல், இருவரும் சில ஆழ்ந்த வேற்றுமையுடையவர்கள். இருவரும் அடிக்கடி சொற்போரும் புரிந்தனர். காந்தி சிக்கனமுடைய

வர் ; தாகூர் ஊதாரித்தனமுள்ளவர். காந்தி உரோமமில்லாத் தலேயும், முகமும், மெலிந்த உடலும் உடைய துறவி. தாகூர் அடர்ந்த வெளுத்த பிடரி மயிரும் தாடியும் கொண்ட கிரேக்க சிற்பம்போன்ற அழகு வாய்ந்த செல்வர் குடியைச் சேர்ந்த அறிஞர். காந்தி நெல்வயல் ; தாகூர் ரோஜாத்தோட்டம். காந்தி தளபதி ; தாகூர் கட்டியங் கூறுபவர். காந்தி உழைக்கும் கை ; தாகூர் பாடும் குரல். காந்தி சந்தையில் சம்மணம் போட்டு உட்கார்ந்திருப்பார். பல லட்சம் மக்கள் தங்கள் வண்டிகளோடும், கவலேகளோடும், எண்ணங்களோடும் அவருக்குமுன் கூடியிருப்பார்கள். ஆனால், அவர் அசையாமல் இருப்பார். அவருக்குள் அமைதி நிலவும். தங்கக் கோபுரத்திலோ, அல்லது உயர்ந்த மலேயிலோ இருந்தால் அவர் மூச்சுத்திணறிப் போவார் ! 'நான் ஒரு பாட்டைக் கேட்டால், உடனே என் 'சித்தார்' (Sitar) அந்த இசையைப் பிடித்துக்கொள்ளும். நான் அந்தப் பாடக ரின் குழுவில் சேர்ந்துகொள்வேன். ஏனென்ருல் நான் ஒரு பாடகன். ஆனல், கூட்டத்தின் பேரிரைச்சலில் என்னுடைய குரல் அமிழ்ந்து விடும். எனக்குக் கிறுகிறுப்பு ஏற்படும்' என்று தாகூர் கூறுகிருர். 'கஷ்டப்படும் லட்சக்கணக்கான மக்கள் ஒரு பாட்டு கேட்கிருர்கள். அது என்னவென்ருல் வலிமை தரக்கூடிய ஆகாரம்' என்று காந்தி தாகூரிடம் கூறினுர். தாகூர் அவர்களுக்குச் சங்கீதத்தை அளித்தார். சாந்திநிகேதனத்தில் தாகூரின் மாணவர்கள் ஆடிப்பாடினுர்கள். காந்தி அங்குச் சென்றபோது அங்குள்ள ஆசிரியர்களேயும் மாணவர்களேயும் சமையல் செய்யச்சொன்னுர் ; தரையைப் பெருக்கிக் குப்பை கூளங்களே அப்புறப்படுத்தச் சொன்னுர். கழிவுநீர்ப் பாத்திரங்களேயும் அப்புறப் படுத்தச் சொன்னுர். இந்த உழைப்பில் சுயராஜ்யத்திற்குரிய திறவு கோல் அடங்கியிருக்கிறது என்று கூறி, காந்தி சொன்னதைப் பொறுமை யாக ஏற்றுக்கொண்டார் தாகூர். ஆனுல், காந்தி அந்த இடத்தை விட்டுச் சென்றதும் அந்த வேலேகள் நின்றுவிட்டன. காந்தி, தாகூர் இவர்களின் வேறுபாடுகளுக்கு அவர்கள் தோன்றிய மாகாணங்களே காரணமாக இருக்கலாம். (இந்தியாவில் பல்வேறு மொழிகள் வழங்கி வந்த காரணத்தாலும் போக்குவரவு வசதிக்குறைவாலும் மாகாணங்க ளிடையே பிரிவுகள் இருந்தன.) குஜராத் ஏனேய இந்திய மாகாணங் களிலிருந்து பல விஷயங்களில் பிரிந்து இருந்தது. ஆனுல், வங்காளமோ, பல கலேகளும் நாகரிகமும் சந்திக்கும் இடமாக இருந்தது. இக் காலத்திய மேலேநாட்டு இயந்திரசாதன நாகரிகத்தை ஏற்றுக்கொண்டதால் சமய நம்பிக்கையிலிருந்து விடுதலேபெற்ருர். ஆனுல், இந்து மதம் காந்தியின் இரத்த ஓட்டம் ; இந்தியாவின் பழமை அவருக்கு ஓர் உணர்ச்சியின் ஊற்று ; இன்று அவருடைய வாழ்க்கை யைப் பின்னேக்கிப் பார்க்கும்பொழுது, புத்தரைப்போன்று அவரும் இந்து மதத்தின் சீர்திருத்தவாதியாக விளங்கினுர். கடவுள் அவருக்கு இணேபிரியாத தோழர். இந்து மதத்தை ஆதரித்தார். ஆனுல், அதன்

கோணல்களையும் குருட்டு நம்பிக்கையையும் எதிர்த்தார். அதைப் போன்று மேற்கு நாகரிகத்தை மேற்கொள்பவராகவும் அதே சமயத்தில் அதன் குறைகளை எடுத்துச்சொல்பவராகவும் இருந்தார். மேற்கு நாடுகளை விரும்பினார். ஆனால், இந்தியாவின்மீதுள்ள மேல்நாட்டுச் செல்வாக்கை எதிர்த்தார். தாய்நாடாகிய இந்தியாவை நேசித்தார். இருப்பினும், அந்நாட்டின் குறைகளைக் கடுமையாகக் கண்டித்தார். கொள்கைஅளவில் பார்த்தால் பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஐரோப் பாவில் நிலவிய தேசியத்தில் தனியார் சுதந்திரத்தில் ஒரு பகுதியும் வழிவழியாக வந்த பழங்கால இந்தியரின் நாகரிகத்தில், பண்பாட்டில் ஒரு பகுதியுமாக நின்றார்—இவை இரண்டும் காந்தியின் கொள்கைகளை உருவாக்கின. இந்திய சுதந்திர இயக்கத்தில் இவ் விரு சக்திகளும் இணையவேண்டுமென்று காந்தி விரும்பினார். இந்திய சுதந்திர இயக்கம் மேல்நாட்டுச் சிறந்த அரசியல் கருத்துகளையும் தோரோ, எமர்சன், ரஸ்கின், மாஜினி (Mazzini) எத்தியோப்பியக் (Utopian) கொள்கைகள் நிறைந்த [மார்க்ஸ் கொள்கைகள் (Marxist) அல்ல] சோஷலிஸ்டுகள் முதலியோர் கொள்கைகளும் அடங்கியதாக இருக்கவேண்டுமென்று விரும்பினார். இவர்களின் கொள்கைகளிலிருந்து மனிதனை இயந்திரத்தி லிருந்து காப்பாற்ற ஏதுவாகவுள்ள காரணங்களை ஏற்றுக்கொண்டு, அவற்றை இந்துமதக் கருத்துகளோடு பிணைத்தார். சமுதாயத்திற்கு எதிராகத் தனியார் சுதந்திரத்தைப் போற்றுவதே அவர்களின் கொள்கைகள். ஆனால், அதற்கேற்ற ஆதாரம் இந்து சமுதாய வாழ்க்கையில் அமையவில்லை.

காந்தி இன்று புதிய கருத்துகள் நிறைந்த இந்தியனை உருவாக்க விரும்பினார். இது நாளை சுதந்திர இந்தியா அமைப்பதற்கு மாத்திர மன்று. சுதிந்திர இந்தியா என்பது புதிய கருத்துகள் உள்ள சுதந்திர இந்தியர்கள் நிறைந்த நாடு. தாகூரைப்போல அவரும் இந்தியத் தளைகள் இந்தியரால் ஏற்பட்டவை என்று நம்பினார். 'கைதியே, முறிக்க முடியாத இந்த விலங்குச் சங்கிலியைச் செய்தது யார் ?' 'நான் தான் இச் சங்கிலியை மிகக் கவனமாகச் செய்தேன்' என்று கைதியே விடை சொல்கிறமாதிரி தாகூர் எழுதினார்.

இந்திய சுதந்திரத்தைப்பற்றிய சம்பிரதாயமற்ற கருத்துகள் பல வருடங்களுக்கு முன்பே தாமாகவே தோன்றியவை. அவருக்கு இந்தியாவில் முதிர்ந்த அனுபவம் ஏற்படுமுன்பே அவைகளைப்பற்றி அவர் சொல்லியிருக்கிறார். அவை 'இந்து சுயராஜ்' (Hind Swaraj) அல்லது 'இந்தியன் ஹோம் ரூல்' (Indian Home Rule) என்னும் நூலில் 1909ஆம் ஆண்டு வெளியானது. இங்கிலாந்திலிருந்து திரும்பி வந்துகொண்டிருந்த ஒரு கப்பலிலிருந்து காந்தி தமது வலதுகையா லும் இடதுகையாலும் அதை எழுதினார். 1921ஆம் ஆண்டில் ஒரு மாறுதலுமில்லாமல் அது மறுபடியும் பதிப்பிக்கப்பட்டது. 1938ஆம்

வருடத்துப் பதிப்பின் முன்னுரையில் அவர் ‘ அதில் எழுதிய கொள்கைகளை மாற்றக்கூடிய தேவை ஒன்றும் ஏற்படவில்லை’ என்று எழுதியிருக்கிருர். ஆகையால் 76 பக்கங்கள் கொண்ட அப் புத்தகம் அவரது கொள்கைகள் அடங்கியதொன்ருகும்.

‘ இந்தியாவை வாளினுல் வென்று அதை வாளினுல் காப்பாற்றி வருவதாகச் சில ஆங்கிலேயர்கள் சொல்கிருர்கள். இரண்டு கூற்றுகளும் தவறு. இந்தியாவைக் காப்பாற்ற வாள் தேவை இல்லை. நாம் தாம் அவர்களை அனுமதித்திருக்கிருேம். அவர்களுடைய தந்திரமான முறைகளினுல் நம்மை மகிழச்செய்து, அவர்கள் விரும்பியதை நம்மிடமிருந்து பெற்றுக்கொள்ளச்செய்கிருேம். நமக்குள்ளே சண்டையிட்டு அவர்களுக்கு நம்மீதுள்ள பிடியைப் பலப்படுத்துகிருேம்’ என்று காந்தி எழுதினுர்.

பிறகு தாம் செய்யவேண்டிய முயற்சிகள், என்னென்ன கொள்கைகள் அமைந்தவைகளாக இருக்கவேண்டுமென்று திட்டமிட ஆரம்பித்தார். ‘ நாம் நேர்மையாக நடந்தால் இந்தியா விரைவில் சுதந்திரம் அடையும்’ என்று உறுதியாகக் கூறினுர். ஒவ்வோர் ஆங்கிலேயரையும் பகைவர் என்று நாம் விலக்கினுல் சுதந்திரம் அடைவது தாமதப்படும். நாம் அவர்களிடம் நேர்மையாக இருந்தால், அவர்களுடைய ஆதரவு நமக்குக் கிடைக்கும்.’ அவர் பிரிட்டிஷாரை நிந்திக்கவோ, ஏளனமாகப் பேசவோ இல்லை. இருந்தாலும் சுதந்திர இந்தியா, பிரிட்டிஷ் இந்தியா மாதிரி இருக்காது என்று நம்பினுர். விடுதலைக்குப் பின் இந்தியா, ஜப்பானைப்போன்று, ‘ தம் சொந்தக்கடற்படை, தரைப்படை, படாடோபம் முதலியவற்ருேடு விளங்கும். அப்பொழுது இந்தியாவின் குரல் உலகம் முழுவதும் ஒலிக்கும்’ என்று சிலர் விவாதித்தனர். காந்தி, ‘ நீங்கள் பிரிட்டிஷார் இல்லாத பிரிட்டிஷ் ஆட்சியை விரும்புகிறீர்கள். புலி இல்லாத புலியின் இயல்பை விரும்புகிறீர்கள். நீங்கள் இந்தியாவைப் பிரிட்டிஷ்மயமாக்குவீர்கள். நான் விரும்புவது இந்தமாதிரி சுயராஜ்யம் அன்று’ என்ருர்.

லண்டனிலுள்ள இந்தியத் தேசியவாதிகள் இந்தியாவிற்குச் சுதந்திரம் தேடுவதில் அறநெறிகளைப்பற்றியும் வருங்காலச் சமூகக் கொள்கைகளைப்பற்றியும் சிந்திப்பதில் காந்தி ஆழ்ந்து இருந்ததைக் கண்டு, வியந்து வெறுத்தனர். அவர்களுடைய முழுநோக்கமும் இத்தாலியில் மாஜினியும் கரிபால்டியும் (Garibaldi) அந்நியரை விரட்டியடித்ததுபோல இந்தியாவிலிருந்து பிரிட்டிஷாரை விரட்ட வேண்டும் என்பதுதான். ‘இத்தாலியை இத்தாலியர் ஆட்சி செய்வதால் சந்தோஷமாயிருக்கிருர்களென்று நீங்கள் நம்பினுல், நீங்கள் இருளில் வழிதடவிக்கொண்டிருக்கிறீர்கள். மாஜினியின் கொள்கைப்படி சுதந்திரம் என்ருல் இத்தாலிய மக்கள் அனைவருடைய சுதந்திரமும்

அடங்கியது. அதாவது விவசாயிகளுடைய சுதந்திரம் உட்பட. மாஜினியின் கருத்துப்படி இத்தாலி இன்னும் ஒருவகையான அடிமைத் தனத்தில்தான் இருக்கிறது' என்று காந்தி கூறினர். இதே குறிப்பைத் தான் முன்பு சென்னையில் கவர்னராயிருந்த லார்டு ஆம்ப்ட்ஹில்லுக்கு (Lord Ampthill) 1909ஆம் ஆண்டு அக்டோபர் 9ஆம் தேதி கடிதத்தில் காந்தி எழுதினர். 'யார் ஆளுகிருர் என்பதில் எனக்கு அக்கறை இல்லை. அவர் எப்படி ஆளுகிருர் என்பதுதான் முக்கியம். இந்திய ஆட்சியாளர், பிரிட்டிஷ் ஆட்சியாளர்களைவிடச் சிறந்தவர்கள் என்று சொல்வதற்கில்லை. ஓர் இந்திய ராக்ஃபெல்லர் (Rockefeller) ஓர் அமெரிக்க ராக்ஃபெல்லரைவிடச் சிறந்தவர் என்று சொல்ல முடியாது.' காந்தி தேசவிடுதலைக்கும் அப்பால் சமூகவிடுதலை வரை கனவு கண்டார். சுதந்திரம் கிடைப்பதற்கு 38 வருடங்களுக்கு முன்பே சுதந்திர இந்தியாவை இன்று வருத்தும் பிரச்சினைகளை அந்த தீர்க்கதரிசியின் கண்கள் ஊடுருவிப்பார்த்தன. நிர்வாகிகள் எந்த நாட்டைச் சேர்ந்தவர்கள் என்பதைப்பற்றி அவருக்கு அக்கறை இல்லை. நிர்வாகிகள் கையாளும் முறையும் அவர்களது ஒழுங்குமே முக்கியம். சுதந்திரத்தின் சாராம்சம், எழில், தோற்றம், கொடி இவற்றில் அடங்கி யுள்ள உண்மையை ஆராய்வதில் 1915ஆம் ஆண்டிலிருந்து 1948 ஆம் வருடம் ஜனவரி மாதம்வரை கவனம் செலுத்திவந்தார். அதனால் தான் பல சமயங்களில் ஆங்கிலேயருடன் போரிடுவதைத் தாற்காலிக மாக நிறுத்திக்கொண்டு தம் கொள்கைகளைப் பின்பற்றினர்.

இந்தியாவிற்குத் திரும்பிவந்த முதல் வருடமே காந்தி இந்தக் கொள்கைகளை வெளியிட்டார். இந்திய ஊழியர் சங்கத் தலைவரான ஜி. கே. கோகலே அவரை அந்த வருடம் மூடிய வாயினராகவும் திறந்த செவியினராகவும் இருக்கவேண்டுமென்று பணித்தார். ஆனாலும், நன்றியறிதலுள்ள பல இந்தியர் தென்னாப்பிரிக்காவில் காந்தி செய்தவற்றைப் பாராட்டிக் கூட்டங்கள் நடத்தினர்கள். அக் கூட்டங் களில் காந்தி மெல்லிய வசீகரமில்லாத உரையாடல் பாணியில் பேசினர். சிலர் ஏமாற்றம் அடைந்தனர். ஒரு புது வீரனை, ஸ்மட்ஸைத் தோற் கடித்த ஓர் ஆண் சிங்கத்தை அவர்கள் எதிர்பார்த்தனர். அதற்குப் பதில் வேடிக்கையான பெரிய தலைப்பாகையும் தொங்கி ஆடிக்கொண் கொண்டிருந்த அரை வேட்டியும் அணிந்த ஒரு மெல்லிய உருவத்தைக் கண்டனர். அவர் பேசியது சரியாகக்கூடக் கேட்கவில்லை. எல்லா வற்றிற்கும் மேலாக விபரீதமான செய்திகளைச் சொன்னர். அச் சமயத் தில் எடுத்த ஒரு படத்தில் அவர் சம்மணம் போட்டு உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தார். அரை வேட்டியைத் தவிர மற்றபடி நிர்வாணந் தான். மேல்நாட்டு உடை அணிந்த அரசியல்வாதிகள் அவர் பேசுவதை அவரைச் சுற்றி நின்று கேட்டுக்கொண்டிருந்தனர். காந்தி அவர்களை அவ் வுடைகளைக் களைந்து எறியும்படி சொன்னர். பாண்ட்

தெருவின் (Bond Street) சூட்டுகளையும், பம்பாயின் கோட்டுகளையும், நீண்ட கால்சட்டையையும் அணிந்த தலைவர்கள் எப்படிக் குடியானவர்களின் உள்ளங்களைத் தொடமுடியும்? ஆங்கிலத்தில் பேசும் அவர்கள் விவசாயிகளின் ஆதரவை எப்படிப் பெறமுடியும்? என்று கேட்டார்.

'விவசாயிகளா? விவசாயிகளுக்கும் நமக்கும் என்ன தொடர்பு?' என்று அரசியல்வாதிகள் நினைத்திருந்தனர். இந்திய சுயஆட்சி கட்சிக்காரர், தேசியவாதிகள், இந்தியத் தேசியக் காங்கிரஸ்காரர் முதலியோர், பிரிட்டிஷார் தங்கள் அதிகாரத்தில் ஒரு பாகத்தை இந்தியருக்கு விட்டுக்கொடுக்கும்படி வற்புறுத்தலாம் என்று நம்பினர்கள். இதை எண்ணத்தில் கொண்டு அவர்கள் மேல்நாட்டு உடைகளை அணிந்து, தூய ஆங்கிலத்தில் விண்ணப்பங்கள் எழுதி, ஆங்கிலேய அதிகார வர்க்கத்தினரிடம் சமர்ப்பித்தனர். இந்திய சுதந்திரம், ஆங்கிலேய அரசருக்கும் அவருடைய பிரதிநிதிகளுக்கும் விண்ணப்பம் சமர்ப்பித்து அடைந்துவிடமுடியும் என்று அவர்கள் எண்ணினர். ஆனல், கிளர்ச்சி நிறைந்த வங்காளத்தில் உள்ளவர்கள், ஆங்கிலேயரைச் சுட்டுத்தள்ளுவதில் முனைந்துஇருந்தனர்.

பலாத்கார முறைகளைக் கையாளுவதாலோ, அல்லது தாகூர் கூறியதுபோல் பிழையற்ற ஆங்கிலத்தில் விண்ணப்பங்கள் சமர்ப்பிப்பதாலோ சுதந்திரம் பெறமுடியாது என்று காந்தி கூறிவந்தார். 1916ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் காசி இந்து சர்வகலாசாலையைச் சேர்ந்த மத்திய கல்லூரியைத் திறந்துவைக்கும்போது அங்குக் கூடியிருந்த புகழ்பெற்ற பெரியோர், மாணவர்கள் முதலியவர்களிடையே பேசும்போது 'வெறும் கட்டுரைகள் எழுதுவதால் மாத்திரம் சுதந்திரம் பெறமுடியாது. பெரிய சொற்பொழிவுகள் நிகழ்த்துவதாலும் சுதந்திரம் கிடைத்துவிடாது. நம்முடைய நல்ல குணத்தினுல்தான் சுதந்திரம் அடையமுடியும்' என்று காந்தி கூறினர். அவர் பேசிய கூட்டத்தில் ஆபரணங்கள் அணிந்த மகாராஜாக்களும் ராஜாக்களும் இருந்தனர். அவர்கள் வெறும் காட்சிப்பொருளாகத்தான் இருந்தார்கள். 'நீங்கள் உங்கள் ஆபரணங்களைக் கழற்றிவிட்டு, அவற்றை இந்தியநாட்டு மக்களின் சொத்தாகக் கருதி வைத்திருங்கள்' என்றும் அவர்களுக்குச் சொன்னர். ஆனல், அவர்கள் தாம் சொன்னபடி செய்வார்கள் என்று அவர் எதிர்பார்க்கவில்லை. 'குடியானவன்மூலம்தான் நமக்குச் சுதந்திரம் கிடைக்கும். வழக்கறிஞர்கள், டாக்டர்கள் அல்லது பணக்கார நிலச்சுவான்தார்கள்மூலம் அவ் விடுதலை கிடைக்கப்போவதில்லை' என்று காந்தி சொன்னர்.

கிராம முன்னேற்றம்தான் காந்தியின் முதல் விடுதலை. இந்திய மக்களுள் எண்பது சதவீதம் கிராமங்களில் வசித்துவந்தனர். அவர்கள் எளியவர்கள்; கல்வியறிவு இல்லாதவர்கள்; நோயாளிகள்;

ஊக்கமில்லாதவர்கள். வறுமையில் மூழ்கி இருக்கும் இந்தியக் குடியானவர்களுக்குப் பணக்காரர் அல்லது வெளிநாட்டு அரசாங்கம் மூலமாக விமோசனம் அல்லது விடுதலை கிடைப்பது அரிது. அவர்களே அவர்களுடைய ஓயாத உழைப்பால் விடுதலை அடையவேண்டும். 'மனத்துக்கண் மாசிலன் ஆதல்' என்றபடி மக்கள் உள்மனத்தின் விடுதலையைப் பெற்றுவிட்டால் தவிர்க்கமுடியாமல் தாமாக வெளி விடுதலை பெற்றுவிடுவார்கள். ஒருமுறை மக்கள் தன் மதிப்பைப் பெற்றுவிட்டால் மேம்பாடான உயர்ந்த வாழ்வைப் பெறுவதிலேயே கருத்தாக இருப்பார்கள். அதன்பின் எவருமே அவர்களை அடிமைத் தளையில் கட்டுப்படுத்தமுடியாது. இத்தகைய உளஅடிப்படையில் ஏற்படும் மகத்தான மாற்றத்தையே காந்தி வேண்டிநின்றார்.

இந்தியா பெரிய நாடு. ஓர் இடத்திற்கும் மற்றோர் இடத்திற்கும் தூரம் அதிகம்; ஆனால், போக்குவரத்துச் சாதனங்கள் குறைவு. சிலருக்குத்தான் படிக்கத் தெரியும். ரேடியோ வைத்திருப்பவர்களும் சிலரே. ஆகவே, இந்தியர்கள் தங்கள் நாட்டுப் பெரியவர்களின் பேச்சுகளை மிகவும் கவனமாகக் கேட்டனர். 1916ஆம் ஆண்டு கடவுள்பக்தியும் தேசபக்தியும் நிறைந்தவரும், வடிவிலே சிறிய மனிதரும், நன்மைதீமைகளைப்பற்றிக் கவலைப்படாது தைரியமாகப் பேச முன்வந்தவருமான அந்த மகானின்பேச்சைக் கவனமாகக் கேட்டனர். இவர்களுக்காக அந்த மகான் செல்வர்களுக்கு எதிராகப் போராடினார். அப்பொழுது காந்தியைப்பற்றி எல்லோருக்கும் தெரியாது. அகில இந்திய முக்கியத்துவத்தை அவர் இன்னும் பெற வில்லை. ஆனாலும், இந்தப் புது மகாத்மாவின் புகழ் பரவிக்கொண்டு வந்தது. அதிகாரம், உடைமைகள், யானைகள், நகைகள், சேனைகள், போலீஸார், அரண்மனை முதலியவை இந்தியாவைப் பணிய வைக்கின்றன. ஆனால், அன்பே இந்தியாவின் இதயத்தை வென்றது.

இப்பொழுது காந்தி தம்முடைய ஆசிரமத்தில் இருந்தார். பழங் கால இந்தியாவில் ஆசிரமங்கள் துறவிகளுக்கு உறைவிடமாயிருந்தன. அங்கு வசித்த முனிவர்கள் உலகத்தைத் துறந்து, உள்ளும் புறமும் ஒன்றாய் ஆத்ம சிந்தனைசெய்து முக்தியடையும் நாளை எதிர்பார்த்து இருந்தார்கள். ஆனால், காந்தியின் ஆசிரமம் உலகத்தோடு மிக நெருங்கிய தொடர்புகொண்டிருந்தது. சொல்லப்புகின், அந்த ஆசிரமம் இந்தியாவின் உந்திக்கமலம் ஆயிற்று. இந்தியர்கள் அந்த ஆசிரமத்தி லிருந்து வெளியாகும் உண்மைகளை அறிந்து சிந்தித்துப் புது வாழ்க் கையை ஆரம்பித்தனர்.

'சத்தியாக்கிரக ஆசிரமம்' முதலில் கோச்சாராவிலும் பின்பு நிரந்தரமாக சபர்மதியிலும் ஏற்பட்டது. அது மக்கள் நெருக்கமுள்ள அகமதாபாத் நகரத்தை விட்டு விலகி, சபர்மதி ஆற்றின் மறுகரையில்

இருந்தது. அங்கிருந்துகொண்டு மக்களோடு மக்களாக, இம் மண்ணிலேயே வாழ்ந்து, மகாத்மா என்கிற முழுப்பெருமையும் பெற்றார். பரந்த கிளைகளுள்ள மரச்சோலையிலே, தணிந்த, வெள்ளை யடிக்கப்பட்ட குடிசைகளைக் கொண்டது அந்த ஆசிரமம். ஆசிரமத்து வேலிக்குக் கீழே சபர்மதி ஆறு பாய்கிறது. அங்கே பெண்கள் துணி களைக் கற்களின்மேல் துவைப்பார்கள். அத் தண்ணீரில் பசுக்களும் எருமைகளும் நீந்தும். ஆசிரமத்தைச் சுற்றிலும் கிராமக்காட்சி நிறைந்திருந்தது. ஆனாலும், சற்றுத்தொலைவில் தொழிற்சாலைகளின் கோரப் புகைபோக்கிக்குழாய்கள் அங்கங்கே ஓங்கிநின்றன. அவற்றுக் கிடையில் அகமதாபாத் நகரச் சேரிகள் நெருக்கமாகத் துருத்திக் கொண்டிருந்தன. அந்தத் தொழிற்சாலை அதிபதிகள் ஆசிரமத்திற்கு வேண்டிய பணஉதவியை அவ்வப்போது செய்தனர். காந்தியின் அறை, சிறைக்கூடத் தனியறையின் அளவு இருந்தது. அறையின் ஜன்னலில் அதற்கு முன்னிருந்த ஒருவரால் இரும்புக்கம்பிகள் போடப் பட்டிருந்தன. சிறையிலிருந்தபோது தவிர, மற்றக் காலங்களில், அதாவது 16 வருடங்கள் காந்தி அங்கு வசித்தார். சுதந்திர இயக்கத் தின் தீவிரத் தலைவர்களில் சிலர், சபர்மதி ஆசிரமத்தில் காந்தியின் காலடிகளில் தங்கள் அரசியல் வாழ்க்கையைத் தொடங்கினர். அங்கு ஆரம்பத்தில் முப்பதாக இருந்த மக்கள்தொகை இருநூற்று முப்ப தாகப் பெருகியது. ஆசிரமவாசிகள் பழமரங்கள் வைத்து வளர்த்தனர்; நூல் நூற்றனர்; நெய்தனர்; பயிரிட்டனர்; படித்தனர்; சுற்றியுள்ள கிராமங்களுக்குச் சென்று கல்வி கற்றுக்கொடுத்தனர். 1946ஆம் ஆண்டில் நான் அவ்விடத்திற்குப் போனபோது, காந்தி அவ் விடத்தை விட்டு வேறு இடத்திற்குப் போய்ப் பத்து வருடங்கள் ஆகிவிட்டன. ஆனாலும், அங்கு ஒருவகையான அமைதி நிலவியது.

இந்தியா இழந்துவிட்ட பழம்பெருமையை மீண்டும் அடைய வேண்டுமென்று இந்தியரின் இதயம் இன்றுவரை வேதனைப்பட்டுக் கொண்டுதான் இருக்கிறது. அந்த வேதனையைத் தீர்க்கும் மருந்தைக் காந்தி கொண்டுவந்தார். சிங்கத்தின் வாலைத் திருகும் அசட்டு வீரத்தைச் சிலர் விரும்பினர். ஆனால், சிங்கம் போனபின்பும் அந்த எதிர்நிலைச் செயற்பழக்கம் அவர்களை அறியாமலே இருந்துவந்தது. காந்தி அவ்விதமான சோதனைக்கு ஆளாகவில்லை. அதற்கு மாறாக மரங்களுக்கு நடுவில் பிறர்தொல்லை இல்லாமல் பிரார்த்தனையில் அமர்ந்திருந்தார். அவர் வெள்ளைக்காரன்போல் நடிக்கவில்லை. பழங் காலத்து முனிவர்களைப்போலிருந்தார். இந்தியாவைப் பலர் பல முறை போரில் வென்றனர். ஆனால், எப்பொழுதும் தன் கலாசாரத் திற்கு உண்மையாக இருந்தமையால் இந்தியா வெற்றி வீரர்களை வென்றது என்ற உண்மையை இந்தியர்களுக்கு அவர் நினைவூட்டினார்; இந்தியர்களுக்கு மறுபடியும் தன்னம்பிக்கையை ஊட்டினார். காந்தி

என்னும் மந்திரக்கோல் தேசத்தின் விலங்கை உடைக்கும் கோடரி ஆயிற்று.

தேசிய மறுமலர்ச்சிக்காக அல்லும் பகலும் உழைத்த பெரியார் பலர் இந்தியாவில் காந்திக்குமுன் தோன்றியிருக்கின்றனர். அவர்கள் நெடுந்தொலைவிலிருந்து ஒளிகொடுக்கும் கிரகங்கள் போன்றவர்கள். தூரத்திலிருந்து சில உபகிரகங்கள்மீது ஒளிவீசும் நட்சத்திரம் போன்றவர்கள். ஆனால், காந்தியோ பூலோகத்திலே எல்லோரும் பார்க்கும்படி வாழ்ந்துவந்தார். அவருடன் வாழ்ந்த கோடிக்கணக்கான மக்களிடமிருந்து அவருக்கு ஆதரவும் பலமும் ஏற்பட்டது. அப் பலத்தையும் ஆதரவையும் நல்வழியில் பயன்படுத்தினர் காந்தி. அவர் மக்களுக்காக, மக்களிடையே, மக்களின் அன்பைப் பெற்று வாழ்ந்துவந்தார்.

11. மகாத்மா காந்தியும் பிரிட்டிஷாரும்

காந்தி சம்பிரதாயமான இந்துவும் அல்லர்; சம்பிரதாயமான தேசியவாதியும் அல்லர். எந்தச் சித்தாந்தமும் அவரை அதன் பிடியில் சிக்க வைக்கவில்லை. ஒரு குறிப்பிட்ட வழியிலே செல்பவரல்லர். எதையும் தம் மனச்சாட்சிப்படி செய்ய விரும்புவார். அவர் எப்பொழுது, என்ன செய்வார் என்று சொல்லமுடியாது. ஆகவே எல்லோரையும், எப்பொழுதும் திகைக்கவைப்பார். ஆங்கிலேயருக்கு அவரைப் புரிந்து கொள்வது துன்பமாக இருந்தது. 'என்னிடம் முன்னுக்குப்பின் முரண்பாடு காணப்படுகிறதா?' என்று ஒருமுறை காந்தி கேட்டார். முரண்பாடு இல்லாமல் எப்பொழுதும் ஒரேமாதிரியாக இருக்கவேண்டும் என்பது பொருளற்ற வீண்பேச்சு என்றார். கலகக்காரர்போல் இன்று ஒருவிதமாகவும், நாளை வேறுவிதமாகவும் சொல்வதற்கும் செய்வதற்கும் உரிய தைரியம் அவரிடமிருந்தது. 'என்னுடைய நோக்கம் ஒரு குறிப்பிட்ட பிரச்சினையைப்பற்றி முன்னுக்குப்பின் முரணில்லாமல் பேசுவதன்று. குறிப்பிட்ட நேரத்தில் நான் பேசுவது, எனக்குத் தெரிந்தவரை உண்மைக்குஒப்ப இருக்கவேண்டுமென்பதே. ஆகையால் நான் நாளுக்குநாள் புது மெய்யுணர்வு பெறுகிறேன்' என்று எழுதி இருக்கிறார். அவருடைய சமூக தத்துவத்தைப்போல சாத்வீக தத்துவமும் மெதுவாக உருவானது. 1914ஆம் ஆண்டில் தென் ஆப்பிரிக்காவிலிருந்து இந்தியாவிற்கு வரும்வழியில் பிரிட்டிஷ் படையில் சேர்க்க இந்திய மாணவர்கள் அடங்கிய 'ஆம்புலன்ஸ் படை' ஒன்று திரட்டினர். 'யுத்தத்தில் காயமடைந்தவர்களைக் கவனிப்பது, போர்செய்யும் குற்றத்திலிருந்து நீங்குவது ஆகாது' என்று காந்தி ஒப்புக்கொண்டார். பின்னால் இந்தியாவில் அவர் இந்தியர்களைப் பிரிட்டிஷ் யுத்த முயற்சியில் ஈடுபடும்படி வற்புறுத்தினர். 'பிரிட்டிஷ்

சாம்ராஜ்யத்தில் சில லட்சியங்கள் இருக்கின்றன என்று நான் அறிந்திருக்கிறேன். அவைகளை நான் பாராட்டுகிறேன். பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திலுள்ள ஒவ்வொரு குடிமகனுக்கும் அவனுடைய ஆற்றலுக்கும் கண்ணியத்திற்கும் தகுந்தவாறு நடந்துகொள்ள வாய்ப்பு இருக்கிறது என்பது அந்த லட்சியங்களில் ஒன்று. எந்த அரசாங்கம் மிகவும் குறைவாக ஆளுகிறதோ அதுவே சிறந்த அரசாங்கம் என்று நான் பல முறை சொல்லிவந்திருக்கிறேன். பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் நாம் மிகவும் குறைவாக ஆளப்படலாம் என்பதைக் கண்டேன். அதனால் நான் அதனிடம் விசுவாசமுள்ளவனாக இருக்கிறேன்' என்று தம் கொள்கையைப்பற்றி காந்தி எடுத்துரைத்தார். அங்ஙனம் அவர் கூறியதைப் பிறதலைவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை.

1918ஆம் ஆண்டு ஜுலை மாதத்தில் காந்தி பல கிராமங்களுக்கும் நகரங்களுக்கும் சென்று பிரிட்டிஷ் சேனைக்காக ஆள்சேர்த்தார். 'வீரனும் கோழையும் சமபங்காளியாக இருக்கமுடியாது. நாம் கோழைகள் என்று கருதப்படுகிறோம். அக் குற்றச்சாட்டிலிருந்து விடுபடவேண்டுமானால் நாம் ஆயுதங்களை உபயோகிக்கக் கற்றுக் கொள்ளவேண்டும்' என்று காந்தி கூறினார்.

அவரது பேச்சைக் கேட்ட குடியானவர்கள் அவரைக் கேலிசெய்து கேள்விகள் கேட்டனர். 'நீங்கள் அஹிம்சையை உபதேசிப்பவர் ஆயிற்றே. எப்படி ஆயுதங்களை உபயோகிக்கச் சொல்லலாம்?'

'சாம்ராஜ்யத்தின் சமபங்காளியான அந்தஸ்தைப் பெறுவதே நம்முடைய திட்டமான லட்சியம்' என்று காந்தி பதில் இறுத்தார். கனடா, ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து முதலிய நாடுகளின் அந்தஸ்தை இந்தியாவும் அடையவேண்டுமென்று அவர் விரும்பினார். பூரண சுதந்திரம் அடையவேண்டும் என்ற எண்ணம் அப்போது அவருக்குக் கிடையாது. மற்ற முக்கியமான தேசியவாதிகளுக்கும் அவ் வெண்ணம் கிடையாது. 'சாம்ராஜ்யம் அழிய நேரிட்டால், அதோடு நாம் போற்றும் லட்சியங்களும் அழிந்துவிடும்' என்று விவாதித்தார்.

1942ஆம் வருடம் நான் காந்தியைச் சந்தித்தபோது முதல் உலக யுத்தத்தில் அவருடைய கொள்கையைப்பற்றிக் கேட்டேன். 'நான் அப்பொழுதுதான் தென் ஆப்பிரிக்காவிலிருந்து வந்திருந்தேன். இந்தியாவில் நிலவிய விவரங்களைப்பற்றி எனக்கு அதிகமாகத் தெரியாது. என் நிலை என்ன என்பதுபற்றி எனக்கே நிச்சயமில்லாதிருந்தது' என்று காந்தி பதில் சொன்னார். அவருடைய தேசியத்தைப் பொறுத்தமட்டில் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் உள்ளடங்கி இருக்கும் அளவுக்குத் துணிந்துவிட்டது. ஆகலின், பிரிட்டிஷ் படைகளுக்கு ஆள் சேர்க்கும் அளவுக்கு அவருடைய போர்வேண்டாக் கொள்கையும் விட்டுக் கொடுக்கத் துணிந்துவிட்டது. மெய்ம்மை சமய நம்பிக்கையை

வென்றது; அவருடைய போர்வேண்டாக் கொள்கையை அரசியல் புகுந்து கலப்படமாக்கியது. இதுவரை அவருக்கு ஆங்கிலேயரோடு ஒரே ஒருமுறைதான் சச்சரவு நேர்ந்தது.

1916ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் ஐக்கிய மாகாணத்திலுள்ள லட்சுமணபுரியில் இந்திய தேசிய காங்கிரஸின் ஆண்டுக்கூட்டம் நடை பெற்றபோது இந் நிகழ்ச்சி நடந்தது. ‘இந்தியாவிலுள்ள மற்றக் குடியானவர்களைப்போலவே மெலிந்த எளிய குடியானவன் ஒருவன் என்னிடம் வந்தான். என் பெயர் ராஜ்குமார் சுக்லா. நான் சம்பரானிலிருந்து வருகிறேன். எங்கள் ஜில்லாவிற்குத் தாங்கள் வர வேண்டும்’ என்றான். காந்தி அதுவரை அந்த இடத்தின் பெயரைக் கேள்விப்பட்டதில்லை. அஃது இமயமலையின் அடிவாரத்தில் நேபாள ராஜ்யத்திற்கு அருகில் பீஹார் மாகாணத்தில் இருக்கிறது.

சம்பரானிலுள்ள இந்தியக் குடியானவர்களைப் பிரிட்டிஷ் நிலச் சுவான்தார்கள் கடுமையாகத் துன்புறுத்திவந்தனர். காந்தி அவர் களுடைய குறைகளைக் கேட்க வரமாட்டாரா என்று அந்தக் குடியான வன் கேட்டான். காந்தி தமக்கு மற்ற இடங்களில் வேலை இருப்பதாகச் சொன்னார். சுக்லாவும் காந்தி சென்ற இடமெல்லாம் அவருடன் சென்றான். இறுதியில் காந்தி தம் ஆசிரமத்திற்குத் திரும்பினார். சுக்லாவும் காந்தியின் அருகிலே பல வாரங்கள் தங்கினான். ‘தயவு செய்து நீங்கள் வரும் நாளை இப்பொழுதே குறிப்பிட்டு விடுங்கள்’ என்று சுக்லா கெஞ்சினான்.

அந்தக் குடியானவனின் விடாப்பிடியினால் கவரப்பட்ட காந்தி பல மாதங்களுக்குப் பிறகு தம்மைக் கல்கத்தாவில் வந்து சந்திக்கும்படி ஒரு நாளைக் குறிப்பிட்டுக் கூறினார். காந்தி கல்கத்தாவுக்கு வந்த போது அவருடைய மற்ற வேலைகளை முடிக்கும்வரை சுக்லா காத்திருந் தான். பின் இருவரும் சம்பரானுக்குச் சென்றனர்.

மிகச் சிரமப்பட்டு காந்தி எல்லாத் தகவல்களையும் சேகரித்துக் கொண்டார். முதலில் காந்தி பிரிட்டிஷ் தோட்ட முதலாளிகளின் சங்கத் திற்குச் சென்றார். அந்தச் சங்கத்துக் காரியதரிசி வெளியிலுள்ள ஆட் களுக்கு ஒரு தகவலும் கொடுக்கமுடியாது என்று சொன்னார். காந்தி தாம் வெளி ஆள் இல்லை என்று கூறினார். அடுத்தபடியாக காந்தி பிரிட்டிஷ் கமிஷனரைப் பார்த்தார். அவர் காந்தியை உருட்டியும் மிரட்டியும் அவ் விடத்தைவிட்டு வெளியே போகும்படி ஆலோசனை கூறினார். ஆனால், காந்தி அங்கேயே தங்கினார்.

காந்தி சேகரித்த தகவல்களிலிருந்தும் பின்நடந்த நிகழ்ச்சிகளி லிருந்தும் சம்பரானின் நிலைமை எவ்வாறு இருந்தது என்பது தெரிய வருகிறது. பிரிட்டிஷ் நிலக்கிழார்களின் நிலத்தைச் சுமார் பத்து

லட்சம் இந்தியர் சாகுபடி செய்தனர். அந் நிலத்தில் அவர்களுக்கு விருப்பமான நெல், கோதுமை, பார்லி முதலிய எந்தத் தானியமும் பயிர் செய்யலாம். ஆனால், பதினைந்து சதவீதம் அவுரி பயிர் செய்ய வேண்டும். ஆனால், அந்த அவுரிப்பயிர் விளைச்சலை நிலம் முழுவதும் பயிர்செய்யும் குத்தகைக்காக முதலாளிக்குக் கொடுக்கவேண்டும். இருபதாம் நூற்றாண்டின் முதற்பகுதியில் ஜெர்மனியில் சாயத் தொழிலுக்குச் செயற்கை அவுரியைக் கண்டுபிடித்துவிட்டார்கள். அதனால் இயற்கை அவுரி வியாபாரம் உலகச் சந்தையில் படுத்து விட்டது. ஆகவே நிலக்கிழார்கள் குடியானவர்களை அவுரி பயிர்செய்ய வேண்டாமென்று சொல்லி, குத்தகையையும் அதிகப்படுத்திவிட்டனர். குடியானவன் அவுரி சாகுபடியை நிறுத்திவிட்டால் அவனுடைய குத்தகைப்பணத்தை உயர்த்தலாம் என்று ஒரு பழைய ஒப்பந்தம் இருந்தது. அந்த ஒப்பந்தத்தின்படி குத்தகையை உயர்த்தியதாகத் தோட்ட முதலாளிகள் சொன்னார்கள். ஆனால், விவசாயிகள் செயற்கை அவுரியைப்பற்றி அறிந்து, நிலச்சுவான்தார்கள் அவுரியைப் பயிரிட வேண்டாம் என்று கூறியதன் காரணத்தைத் தெரிந்துகொண்டனர். அதனால் அவர்கள் குத்தகை உயர்வை எதிர்த்தனர். நிலக்கிழார்கள் பலாத்கார முறையைக் கைக்கொண்டார்கள்; குடியானவர்களை அடித் தனர்; வீடுகளைக் கொள்ளையிட்டனர்; ஆடுமாடுகளைப் பட்டியில் அடைத்தனர். நிர்ப்பந்தத்தினால் பல குத்தகை உயர்வுக்காக ஒப்பந் தங்கள் எழுதிக்கொடுத்தனர். 1912ஆம் ஆண்டில் இத் தொல்லை ஆரம்பித்தது. குடியானவர்கள் இத் தொல்லை பொறுக்கமுடியாமல் மனக்கசப்பும் வெறுப்பும் கொண்டனர். ஆனால், முதலாளிகளை எதிர்க்கச் சக்தியற்றவர்களாயிருந்தனர். இச் சமயத்தில்தான் சுக்லா, காந்தி சென்ற இடமெல்லாம் பின்சென்று, அவரை 1912ஆம் ஆண்டில் சம்பரானுக்கு அழைத்துவந்தான்.

சம்பரானில் இந்தக் காரியத்தை விசாரிக்க யானையின்மீது காந்தி ஒரு கிராமத்திற்குச் சென்றுகொண்டிருந்தார். வழியில் ஒரு போலீஸ் காரன் அவரை வழிமறித்து நகரத்துக்குத் திரும்பச்செய்தான். நகருக்குத் திரும்பியதும் காந்தி உடனே சம்பரானைவிட்டுப் போய் விடவேண்டுமென்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. காந்தி அந்த உத்தரவைப் பெற்றுக்கொண்டு கையெழுத்திட்டார். ஆனால், அதன் பின்புறம் அந்த உத்தரவை மீறப்போவதாக எழுதிக்கொடுத்தார். அக் குற்றத்திற்காக, அடுத்தநாள் கோர்ட்டிற்கு வரும்படி அவருக்குக் கட்டளைவந்தது.

ஆயிரக்கணக்கான குடியானவர்கள் கோர்ட்டைச் சூழ்ந்திருந்த னர். அவர்கள் ஒரு மகாத்மா தங்களுக்கு உதவிசெய்ய வந்திருப்ப தாகவும் அவருக்கு மேலதிகாரிகளோடு ஏதோ தொல்லை நேர்ந்திருக் கிறது என்றும் கேள்விப்பட்டிருந்தனர். கூட்டத்தைக் கட்டுப்படுத்தப்

போலீஸ்காரர் காந்தியின் உதவியை நாடினர். அவரும் சிநேகபாவத்துடன் ஒத்துழைத்தார். இதுவரையில் கேட்பாரற்று அஞ்சத்தகுந்ததாய் இருந்த அரசாங்கத்தின் எதேச்சாதிகாரம் எதிர்ப்பைக் காணும்பொழுது முழுவதும் போராடக்கூடிய சக்தியைப் பெற்றிருக்கவில்லை என்பதை இச் சம்பவம் தெளிவாக்கியது.

கோர்ட்டுக்குள்ளே காந்தி தம்முடைய குற்றத்தை ஒப்புக்கொண்டார். 'தடை உத்தரவை ஏற்றுக்கொள்ள நான் மறுத்தது, சட்டபூர்வமான அதிகாரத்தில் எனக்கு மரியாதை இல்லாததால் அன்று. சட்டங்களுக்கெல்லாம் மேலான சட்டமாகிய மனச்சாட்சியின் குரலுக்குக் கீழ்ப்படிந்தே இவ்விதம் செய்கிறேன்' என்றார். சட்டத்தை மீறியதற்குரிய தண்டனையைத் தமக்கு அளிக்குமாறு கேட்டார்.

இரண்டுமணி நேர இடைவேளைக்குப்பிறகு தண்டனை விதிப்பதாக மாஜிஸ்டிரேட் சொன்னார். அதுவரை காந்தியை ஜாமீனில் விடுவதாகச் சொன்னார். காந்தி அதற்கு மறுத்துவிட்டார். அவர் ஜாமீன் இல்லாமல் விடுதலை செய்யப்பட்டார். கோர்ட்டு மறுபடியும் கூடியபோது காந்தியின் குற்றத்தீர்ப்பைச் சில நாட்கள் கழித்துச்சொல்வதாகக் கூறி, அதுவரை காந்தி சுதந்திரமாக இருக்க அனுமதி கொடுத்தார். சில நாட்களுக்குப் பிறகு காந்திமீது ஏற்பட்ட வழக்கைத் தள்ளிவிடுமாறு மேலிடத்திலிருந்து உத்தரவு வந்தது. இந்தியாவில் முதல் தடவையாக, சாத்வீகச் சட்டமறுப்பு வெற்றி பெற்றது என்று காந்தி சொன்னார்.

'நான் செய்தது மிகவும் சாதாரணமான காரியம். என்னுடைய நாட்டில் நான் எங்குப் போகவேண்டும், எங்குப் போகக்கூடாது என்று பிரிட்டிஷார் எனக்கு உத்தரவிடமுடியாது என்று கூறினேன்' என்றார். உண்மையில் இது சாதாரண செயல் அன்று.

காந்தி சம்பரானில் ஏழு மாதங்கள் தங்கியிருந்தார். மறுபடியும் இருமுறை வந்து சில நாட்கள் தங்கியிருந்தார். எழுதப்படிக்கத் தெரியாத ஒரு குடியானவனின் தற்செயலான அழைப்பின்பேரில் அங்குச் சில நாட்கள் தங்கியிருக்கவேண்டுமென்று சென்ற காந்தி, தம்முடைய வாழ்க்கையில் ஒரு வருடத்தை அங்குக் கழிக்கவேண்டியதாயிற்று. முடிவில் தோட்டமுதலாளிகள் இனிக் குத்தகையை அதிகரிப்பதில்லை என்றும் ஏற்கெனவே வசூலித்ததில் இருபத்தைந்து சதவீதம் திருப்பிக் கொடுத்துவிடுவதாகவும் ஒப்புக்கொண்டனர். காந்திக்கு அந்தத் தொகை அவ்வளவு முக்கியமன்று. தோட்டமுதலாளிகள் பணத்தில் ஒரு பகுதியைத் திரும்பக் கொடுக்கச் சம்மதித்தது தான் முக்கியம் என்று கருதினர்.

காந்தி அந்த ஜில்லாவிலிருக்கும்போது அங்குள்ள குடியானவர்களைக் கவனிக்க ஒரு டாக்டரையும் அவர்கள் குழந்தைகளுக்குக் கல்வி

கற்றுக்கொடுக்கச் சில ஆசிரியர்களையும் அழைத்துவந்திருந்தார். கஸ்தூரிபாவும் அங்குவந்து அங்குள்ள பெண்களுக்குச் சுகாதாரத்தைப் பற்றி எடுத்துச்சொன்னுர்.

சம்பரான் சம்பவம் காந்தீய முறைப்படி நடத்தப்பட்ட ஒரு போராட்டம்; அது பிரிட்டிஷ் அதிகாரத்தை எதிர்ப்பதற்காக ஆரம்பித்தது அன்று. ஏழைகளின் துன்பத்தை அகற்றுவதற்காக எடுத்துக் கொண்ட முயற்சியாகும். துன்பப்பட்ட லட்சக்கணக்கான ஏழை மக்களின் அன்ருட வாழ்க்கைப் பிரச்சினையிலிருந்து எழுந்ததே காந்தியின் அரசியல். சாதாரணக் கொள்கைகளின்மாட்டு மட்டும் ஈடுபாடு கொள்ளாது, அவர் அன்ருட வாழ்க்கைக்கு அல்லலுறும் மானிட சமுதாயத்தினிடமே தம் அன்பையும் ஆதரவையும் செலுத்தினுர். தம்முடைய பெருங்கொள்கைகளை வாழ்ந்துகாட்டினுரே தவிர பேச்சின்மூலம் அவர் வெளிப்படுத்தவில்லை.

சம்பரானை விட்டுச்செல்லுமுன் காந்தி பீகாரிலுள்ள பிரபல வழக்கறிஞர்கள் அடங்கிய ஒரு சங்கம், குடியானவர்களைத் தோட்ட முதலாளிகளின் தொல்லைகளிலிருந்து காக்க அமைத்தார். அதில் பிற்காலத்தில் சுதந்திர இந்தியாவின் ஜனுதிபதியாக இருந்த ராஜேந்திர பிரசாத்தும் (Rajendra Prasad) ஓர் அங்கத்தினர். இந்திய வழக்கறிஞர்கள், காந்தியின் சீடராகிய சார்ல்ஸ் ஃப்ரீயர் ஆண்ட்ரூஸ் (Charles Freer Andrews) என்னும் ஆங்கிலேய பாதிரியாரின் உதவியை நாடினர். அவரும் அதற்கு இசைந்தார். ஆனுல், இதைக் காந்தி எதிர்த்தார். 'சரிசமம் இல்லாத இரண்டு கட்சிகளுக்குள் நடக்கும் இப் போராட்டத்தில், நம் கட்சியில் ஓர் ஆங்கிலேயர் இருந்தால் உதவியாக இருக்கும் என்று நினைக்கிறீர்கள். இது நம்முடைய பலவீனத்தைக் காட்டுகிறது. நம்முடைய சண்டை நியாயமானது. இந்தச் சண்டையில் வெற்றியடைய உங்களையே நீங்கள் நம்பியிருக்கவேண்டும்' என்று கடிந்துகொண்டார்.

'அவர் எங்களுடைய எண்ணங்களைச் சரியாக அறிந்திருக்கிருர். நாங்கள் ஒன்றும் பதில் பேசவில்லை. காந்தி எங்களுக்கு இவ்வாறு தன்னம்பிக்கையைப்பற்றிய பாடத்தைக் கற்பித்தார்' என்று ராஜேந்திர பிரஸாத் கூறியுள்ளார்.

சம்பரான் சம்பவ காலங்களில், காந்தி இந்தியரின் புனருத்தாரணத்தில் முக்கியமாகக் கவனம் செலுத்தினுர். இச் சந்தர்ப்பத்திற்குத் தக்க பிரிட்டிஷார் தங்களுடைய அரசியலை மாற்றிக்கொள்வார்கள் என்று நம்பினுர். இந்தியர் தங்களது ஒழுங்கு, ஒற்றுமை, கண்ணியம், தன்னம்பிக்கை முதலியவற்ருல் சுதந்திரம் அடைய அதிகத் தகுதியுள்ளவர்கள் என்று காட்டினுல் இங்கிலாந்து இந்தியருக்குச் சுதந்திரம் அளிக்கும். இந் நம்பிக்கைக்கு ஏற்ப 1916ஆம் ஆண்டில் லட்சுமண

புரியில் காங்கிரஸுக்கும் முஸ்லீம் லீகுக்கும் உடன்படிக்கை ஏற்பட்டது. அப்பொழுது முஸ்லிம் லீகின் தலைவராக இருந்த முகமது அலி ஜின்னா (Mohammed Ali Jinnah) 'முஸ்லிம் லீக், காங்கிரஸுடன் சேர்ந்து, இந்தியாவின் முன்னேற்றத்துக்குரிய காரியங்களில் உழைக்கத் தயாராக இருக்கிறது' என்று சொன்னார். இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் அரசியல் விஷயங்களில் உடன்பாடு உண்டானால், பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு அனுப்பிய காங்கிரஸ் மனுக்களில் கேட்டவாறு, இந்தியா, பிரிட்டிஷ் சாம்ராஜ்யங்களிலுள்ள மற்ற நாடுகள்போல, தன்னைத்தானே ஆண்டுகொள்ளும் ஒரு நிலைமை ஏற்படும் என்று பலர் நம்பினார்கள். அதற்கேற்ப அப்பொழுது இந்திய (Secretary of State) மந்திரியாக நியமிக்கப்பட்ட மாண்டேகு (Montagu) என்பவர் 1917ஆம் ஆண்டு ஆகஸ்டு 20ஆம் தேதி 'ஆட்சித் துறையின் ஒவ்வொரு பகுதியிலும் இந்தியர்களை மேலும்மேலும் தொடர்புபடுத்துவதோடல்லாமல் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் ஒரு முக்கிய உறுப்பாக விளங்கப்போகும் இந்தியாவில், சிறுசிறு சுயஆட்சி ஸ்தாபனங்களை நிலைநாட்டுவதன்மூலம் நாளாவட்டத்தில் பொறுப்புள்ள ஆட்சியை ஏற்படுத்துவது பிரிட்டிஷ் அரசாங்கத்தின் நோக்கங்கள்' என்று பிரிட்டிஷ் காமன் சபையில் கூறினார். இங்ஙனம் கூறியது இந்தியாவிற்கு 'டொமினியன் அந்தஸ்து' அளிப்பதற்குக் கொடுத்த ஒரு வாக்குறுதி என்று பொதுவாக நம்பப்பட்டது.

இந்தியாவின் நியாயமான அரசியல் விருப்பங்களை நிறைவேற்ற வேண்டுமென்று விரும்பிய ஒரு பெருங்கூட்டம் இங்கிலாந்தில் இருந்தது. அதே நேரத்தில் இவ்வளவு பரந்த மனப்பான்மை இல்லாதவர்கள், ஐந்து லட்சம் இந்தியர்கள் வீராவேசத்துடன் போர்புரியக் காரணமானதும் அமெரிக்க ஜனாதிபதி உட்ரோ வில்சன் (President Woodrow Wilson) எடுத்துப்போற்றிய சுயநிர்ணயக் கொள்கையை ஆதரித்ததும் ஆன உலகப்போர், கலோனிய மக்கள் போர்முடிந்த உடன் மறுபடியும் சாம்ராஜ்யத்திற்கு அடங்கி வாழாத வகையில் அவர்களைத் தூண்டிவிட்டுவிட்டது என்பதை உணர்ந்தனர்.

சண்டை செய்தும், கொள்ளையடித்தும்வந்த ராபர்ட் கிளைவ் (Robert Clive) காலம் மலையேறிப் பல வருடங்கள் ஆகின்றன. யுத்தம், வஞ்சனை, பித்தலாட்டம், கலகம், அரசியல் இன்னும் எத்தனையோ தீய முறைகளில் கிளைவ் இங்கிலாந்திற்கு இந்தியாவில் ஆதிக்கம் தேடிக்கொடுத்தார். கவர்னர் ஜெனரல் வாரன் ஹேஸ்டிங்ஸும் (Warren Hastings) அதே மாதிரிதான். இங்கிலாந்தில் இவருடைய விசாரணை 1788ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்திலிருந்து 1795ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம்வரை நடந்தது. அந்த விசாரணையில் லஞ்ச ஊழல்களும் மற்றப் பெருந்தவறுகளும் வெளியாயின. அம்மாதிரி கொடுமைகள் நடந்தது அந்தக் காலம். 1857ஆம் ஆண்டு

'சிப்பாய்க்' கலகம் நடந்து அங்கு ஒரு வருடத்திற்குப் பிறகு கிழக்கு இந்திய வர்த்தகக் கம்பெனியின் ஆட்சி ஒழிந்தது. இந்திய அரசாட்சி விக்டோரியா ராணியின் கைக்கு மாறியது. லார்டு கானிங் (Lord Canning) முதல் வைஸ்ராயாக நியமிக்கப்பட்டார். அதற்குப் பிறகு, நல்ல இங்கிலீஷ் ஆட்சியின் பழக்கவழக்கங்கள் இந்தியாவிலும் கொஞ்சம் கொஞ்சமாகப் பரவின.

எனினும் பிறர் பழிக்கும் முறையில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் இந்தியாவில் தோன்றிய வரலாற்றையும் அந்த ஏகாதிபத்தியத்தைத் தொடர்ந்து நிலைநாட்டுவதிலுள்ள சிரமத்தையும் மறக்க முடியவில்லை. 1942ஆம் ஆண்டில் பிரிட்டிஷ் வைஸ்ராயாயிருந்த லார்டு லின்லித்கோ (Lord Linlithgow) என்னிடம் பின்வருமாறு சொன்னார். 'என்ன இருந்தாலும் நாங்கள் இந்தியாவைச் சேனைபலத்தால் வென்றிருக்கிறோம். சிப்பாய்க் கலகத்திற்குப் பிறகு நாங்கள் இந்தியரிடம் ஆயுதங்கள் கொடுக்கத் தயங்குகிறோம்.' 1858ஆம் ஆண்டிலிருந்து 1947ஆம் ஆண்டுவரை பிரிட்டிஷ் ஆட்சியானது அந்நியர் ஆதிக்கமாகவே இருந்தது. ஆங்கிலேயர் இந்தியாவிலிருந்து ஆட்சி செலுத்தினாலும், இந்தியர்களுடைய அன்பையும் ஆதரவையும் பெறவில்லை. பல பிரிட்டிஷ் அதிகாரிகள் இந்தியாவின்மீது பற்றுள்ளவர்கள். அவர்கள் 20 அல்லது 25 வருடங்கள் இந்தியாவில் சேவை செய்தபிறகு, இந்தியாவில் இருப்பதை மிகவும் விரும்பினார்கள். அவர்கள் இங்கிலாந்துக்குத் திரும்பியபோது, அங்குத் தம்மை அந்நியர்போல் கருதினார்கள். சேவை செய்த காலத்தில் இந்தியப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு மிகவும் கஷ்டப்பட்டு உழைத்துத் தங்கள் ஆரோக்கியத்தையும் கெடுத்துக் கொண்டார்கள். இந்தியரின் நன்றியைப் பெறுவதற்குப் பெரிதும் முயன்றனர். ஆனால், அதைப் பெறமுடியவில்லை.

வேறொருவர் வீட்டில் பிரிட்டிஷார் ஆதிக்கம் செலுத்தினர். அவர்கள் அங்கு இருப்பதே வீட்டுக்காரருக்கு இழிவாக இருந்தது. அந்நியருக்காக அந்நியரால் நடத்தப்படும் அந்நிய அரசாங்கமே ஏகாதிபத்தியம். அஃது ஒரு நிரந்தரமான இழிவு அல்லது மானக்கேடு. ஏனென்றால், தங்களைத் தாங்களே ஆண்டுகொள்ளமுடியாத நாட்டு வாழ் மக்களை ஆள வேற்றுநாட்டார் எடுத்துக்கொள்ளும் உரிமையைக் குறிக்கிறது. பிரிட்டிஷார் இந்தியாவையே தேனாறு பாயும் வளமிக்க நாடாக ஆக்கி இருந்தாலும்—இந்தியாவில் சில பாலைவனங்களில் ஏராளமான நீர் பாயும்படி செய்திருக்கிறார்கள் என்பது உண்மை என்றாலும்—அவர்களை இந்தியர் வெறுக்கத்தான் செய்வார்கள். அடக்கி ஆளுதல், விடுதலை அடைய ஓர் ஆத்திரத்தை எழுப்பும். ஆகவே ஏகாதிபத்தியம் தனக்கே ஓர் எதிரியை உண்டாக்கித் தனக்குத்தானே குழிதோண்டிக் கொள்கிறது. ஆகவே நல்ல ஏகாதிபத்தியம் என்பது உலகத்தில் இருக்கமுடியாது.

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்து படித்த இந்தியரின் எண்ணிக்கை அதிகரிக்கத் தொடங்கியது. ஓர் இந்திய மத்தியதர வகுப்பினர் தோன்றினர். வியாபாரத்திலும் தொழில்துறையிலும் முன்னேற்றமடைந்த இந்தியர் மேலும் முன்னேற்றமடைய பல வாய்ப்புகளைத் தேடினர். அந்நிய ஆட்சி நிலவியதால் அதிகாரம் செலுத்த விரும்பும் இந்தியர்களுக்கு வாய்ப்பு இல்லை. 1904 முதல் 1905 ஆண்டுவரை நடந்த யுத்தத்தில் ஜப்பான் ரஷியாவைத் தோற்கடித்தது. கறுப்பர்கள் வெள்ளையரைத் தோற்கடித்தது, அதாவது ஆசிய நாடு ஐரோப்பிய நாட்டைத் தோற்கடித்தது இதுதான் முதல் தடவை. இச் சம்பவம் இங்கிலாந்துக்கு எதிராக இந்திய தேசிய உணர்ச்சியைக் கிளப்பியது.

பிரிட்டிஷ் அரசியல்வாதிகளில் சிலர் இந்திய எதிர்ப்பை இரத்தத் தாலும் ஆயுதங்களாலும் சமாளிக்க விரும்பினர். சிலர் அதைச் சீர்திருத்தங்களால் சமாதானப்படுத்த விரும்பினர். 1885ஆம் ஆண்டு பிரிட்டிஷ் வைசிராயாக இருந்த லார்டு டஃப்ரின் (Lord Dufferin) இந்தியாவில் அரசியல் புயல்காற்று வீசும் என்று முன்னதாகவே உணர்ந்து, இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியை ஆதரித்தார். அங்ஙனம் ஆதரித்தால் அக் கட்சியினர் சட்டரீதியானவகையில் அமளி இல்லாமல் அரசியலை நடத்துவார்கள் என்று எண்ணினர். அவருக்குப்பின் வந்த வைசிராய்களும் அவருடைய கொள்கையை ஆதரித்துவந்தனர். ஆனால்,வன்முறையில் ஆள விரும்பிய எதேச்சாதிகாரிகள் அமைதியான முறைகளை ஆதரிக்கவில்லை.

ஒருபுறம் அரசியல் விவேகத்தாலும் மறுபுறம் அதிகார ஆசை யாலும் இழுக்கப்பட்ட ஆங்கிலவர்க்கம் பல ஆண்டுகளாக, சூழ் நிலைக்குத் தேவைப்பட்ட அளவுக்கும் மேலாக அதிகாரத்தின் வெளித் தோற்றத்தையும் நிலைமை அனுமதிக்கும் அளவுக்கும் குறைவாக உண்மை அதிகாரத்தையும் விட்டுக்கொடுத்து இணங்கிவந்தது. அதிக மாகக் கொடுக்கக்கொடுக்க இந்தியர் அதிகமாகக் கேட்டனர். அதனால் அரசாங்கத்தார் அவர்கள் கேட்டவற்றை எல்லாம் ஆட்சேபித்தனர். அரசியல் விவகாரத்தில் இணக்கங் காட்டாத இந்த மனப்பான்மையை 1920ஆம் ஆண்டு ஹன்டர் ரிப்போர்ட் (Hunter Report) டில்லியி லுள்ள ஜெனரல் டிரேக் பிராக்மானின் (General Drake Brockman) வார்த்தைகளை மேற்கோளாகக் காட்டிக் கூறியது. 'பலாத்காரம் ஒன்றிற்குத்தான் ஆசியவாசி மரியாதை வைத்திருப்பான்.' ஹன்டர் ரிப்போர்ட் என்பது பிரிட்டிஷ் அதிகாரபூர்வமான தஸ்தாவேஜு. பிரிட்டிஷ் நிர்வாகத்தில் இந்த எண்ணம் மிகவும் பரவியிருந்தது. ஃபீல்டு மார்ஷல் லார்டு ராபர்ட்ஸின் (Field Marshal Lord Roberts) அபிப்பிராயமும் அதுவே. 'ஐரோப்பியர் இயல்பாகவே மேம்பட்டவர் என்று அவர்கள் உணர்ந்த அந்த நிலையே இந்தியாவை வெற்றிகொண்

டது. ஒரு சுதேசி எவ்வளவு நன்ருகப் படித்துத் திறமையுடையவனுக இருந்தாலும், எவ்வளவு பலசாலி என்று நிரூபித்தாலும், நாம் அவனுக்கு எவ்வளவு உயர்ந்த பதவி கொடுத்தாலும், பிரிட்டிஷ் உத்தியோகஸ்தர் ஒருவர், அவன் தமக்குச் சமம் என்று கருதமாட்டார் என்பது என் அபிப்பிராயம்.'

இந்தியர் இவை எல்லாம் அறிந்து பிரிட்டிஷ் ஆட்சியை வெறுத்தனர். சர் எட்வின் மான்டேகு (Sir Edwin Montagu) இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சியை 'மரக்கட்டைபோல், இரும்பைப்போல் உணர்ச்சியற்றது; அசைவற்றது; சிறிதும் திருத்தமுடியாதது; மிகப் பழைய காலத்தது; நவீன காலத்தில் இந்த ஆட்சி சிறிதும் பயன்படாது' என்று குறிப்பிட்டுள்ளமை இங்குக் கருதத்தக்கது. தாவரம், உலோகம் இரண்டும் கலந்த, பழங்காலத்துச் செத்துமடிந்த அரசியல், ஊர்ந்துசெல்லும் பிராணி, மாறுதல் அடையத் தகுதியில்லாதது. ஆனுலும், லண்டனிலுள்ள மாறுதலை விரும்பாதவர்களும் டில்லியிலுள்ள அறிவிலிகளும் இந்தச் செத்துமடிந்த பிராணிக்கு உயிர்ப்பிச்சை அளித்துவருகிருர்கள். ஆகவே யுத்தத்தில் பிரிட்டனின் நிலை மிகவும் மோசமாயிருந்தபோது இந்தியாவிற்கு டொமினியன் அந்தஸ்து அளிப்பதாக மான்டேகு மறைமுகமாகக் குறிப்பிட்ட வாக்குறுதி, சண்டை முடிந்து சமாதானம் ஏற்பட்டதும் நிறைவேற்றப்படவில்லை. இந்தியருக்குப் பெரும் ஏமாற்றம் ஏற்பட்டது.

காந்தியும் ஏமாற்றம் அடைந்தார். நிதானத்திற்கும் வெறும் உணர்ச்சிக்கும் இடையே அவருடைய மனத்தில் போராட்டம் நடந்தது. கொள்கைக்காக உயிரையும் கொடுக்கத் தயாராயிருந்தாலும், விட்டுக் கொடுப்பதும் பிறர் சொல்லும் நியாயத்தை ஒப்புக்கொள்வதும் விவேகமானது என்று நினைத்தார். அவர் இயற்கையிலேயே அஹிம்சைப் போர்வீரர். இயல்பாகவே சமாதானப் பிரியர். அவர் பிரிட்டிஷ்காரரோடு ஒத்துழைக்க விரும்பினுர். பழங்காலத்துக் கொள்கைகளை இருபதாம் நூற்றுண்டு ஒழித்துவிடும் என்று நம்பினுர். ஆனுல், டொமினியன் அந்தஸ்து கொடுப்பதைத் தள்ளிவைத்ததும் அதற்குப் பதிலாக யுத்தகால அடக்குமுறைகள் மீண்டும் கையாளப்பட்டதும் இந்தியாவில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கு எதிராகக் கிளர்ச்சி செய்யும்படி மகாத்மாவைத் தூண்டியது.

12. படுகொலை

இந்தியாவின் பல பாகங்களிலும் இரகசிய நீதிஸ்தலங்கள், கிளர்ச்சி, ராஜதுரோகம் முதலிய குற்றங்களுக்காக மக்களுக்குத் தண்டனை விதித்துக்கொண்டிருந்தன. இந்தியர்களில் முக்கிய புகழ் பெற்ற தேசியவாதியாகிய பால கங்காதர திலகர் (Bal Gangadhar

Tilak) சிறையில் அடைக்கப்பட்டார். அன்னி பெசன்டும் (Annie Besant) சிறைப்பட்டார். அன்னி பெசன்ட் அயர்லாந்தில் பிறந்தவர். சொல்வளம் நிறைந்த பேச்சாளர். இந்தியாவிடம் அன்புகொண்டு, இந்தியாவில் வசிக்கவும் அதற்காக உழைக்கவும் அயர்லாந்திலிருந்து இந்தியாவிற்கு வந்தவர். மிகவும் செல்வாக்குள்ள இரண்டு முஸ்லிம் சகோதரர்களாகிய ஷாகத்தும் (Shaukat), முகமது அலியும் (Mohammed Ali) சிறையிலிருந்தனர். இன்னும் ஆயிரக்கணக்கான தேசியவாதிகளும் சிறையிலிருந்தனர். யுத்தகாலத் தணிக்கையால் பத்திரிகைகளுக்கு வாய்ப்பூட்டு போடப்பட்டிருந்தது.

1918ஆம் ஆண்டு நவம்பர் மாதம் உலக யுத்தம் முடிந்ததும் இந்தியர் சாதாரண காலத்தில் பிரிட்டிஷ் ஆட்சியில் தாங்கள் அனுபவித்த சமூக உரிமைகள் திரும்பக் கொடுக்கப்படும் என்று எதிர்பார்த்தனர். ஆனால், 1919ஆம் ஆண்டு மார்ச் மாதம் 18ஆம் தேதி புது டில்லி ஏகாதிபத்திய லெஜிஸ்லேட்டிவ் கவுன்சிலினால் ரவ்லட் சட்டம் அமலுக்கு வந்தது. அதன்படி யுத்தகாலக் கெடுபிடிகள் நீடித்தன. மக்கள் அதைக் கண்டு ஆச்சரியப்பட்டனர்; வேதனையும் அடைந்தனர். 'நியாயமற்றது; சுதந்திரக் கொள்கையைப் பாதிப்பதாய் இருக்கிறது. சமூகத்தின் பாதுகாப்புக்கும் நாட்டின் பாதுகாப்புக்கும் வேண்டிய தனிப்பட்டவரின் ஜீவாதார உரிமைகளையும் பாதிப்பதாக இஃது இருக்கிறது' என்று சொல்லி மகாத்மா அந்தச் சட்டத்திற்கு எதிராகப் பிரசாரம் செய்ய ஆரம்பித்தார். பயனற்றநிலை காந்திக்குக் கோப மூட்டியது. எனினும், சக்தியற்ற தேசமக்களுக்கு மகாத்மா சக்தியின் சின்னமாக விளங்கினார். உருவில் சிறியவராயினும், உள்ளத்தில் பெரியவர். மிகவும் வீரத்துடன் கிளர்ச்சிசெய்தார். அதற்குரிய பலன் கிட்டியது. இந்தியா தன்னுடைய பழைய வலிமையை இழந்து விட்டது என்று இந்தியர் பலர் நினைத்தனர். காந்தி அதன் பலத்தை மறுபடியும் ஊக்கினார். ரவ்லட் சட்டத்திற்கு எதிராக நடத்திய எல்லா எதிர்ப்புகளும் புறக்கணிக்கப்பட்டன. இந்தியர் என்றால் ஒரு மதிப்பும் இல்லை. காந்திக்கும் மதிப்பு இல்லை. என்ன செய்வது?

உணவுப் பரிசோதனைகளின் விளைவாக காந்தி வயிற்றளைச்சலில் கஷ்டப்பட்டார். அதிலிருந்து குணம்பெறுவதற்குச் சென்னை சென்றிருந்தபோது ரவ்லட் சட்டத்தை ஒழிக்க ஒரு வழி தேடிக்கொண்டிருந்தார். அச் சமயம் அவர் சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியாரின் விருந்தினராக இருந்தார். ராஜகோபாலாச்சாரி பின்னால் இந்தியாவின் கவர்னர் ஜெனரலாக இருந்தவர். 'நேற்றிரவு கனவில் ஒரு யோசனை வந்தது. நாடு முழுவதும் பொது வேலைநிறுத்தம் நடத்தவேண்டும் என்று தேசமக்களைக் கேட்டுக்கொள்வது என்பதே அது' என்று ஒருநாள் காலையில் காந்தி, ராஜகோபாலாச்சாரியாரிடம் சொன்னார். ஒருநாள் முழுவதும் பொருளாதார வாழ்க்கை ஸ்தம்பித்துவிடும்.

கடைகள் அடைக்கப்படவேண்டும்; ஆலைகளில் வேலை நடக்கக் கூடாது; கப்பல்களிலிருந்து சரக்குகள் இறக்கப்படக்கூடாது; பாங்குகளை மூடிவிடவேண்டும். இவ்விதமாக வேலைநிறுத்தம் ஏராள மான மக்களைச் செயலில் ஈடுபடச்செய்து, அதன்மூலம் அவர்களுடைய ஒற்றுமை, கட்டுப்பாடு, வலிமை ஆகியவற்றைக் காட்டவேண்டும் என்று நினைத்தார்.

வேலைநிறுத்தம் ஒருநாள், இரண்டு நாட்கள் அல்லது மூன்று நாட் கள் நீடிக்கும். வேலைநிறுத்தம் என்ற ஆரத்திற்குப் பதக்கம்போன்ற சத்தியாக்கிரக இயக்கம் தொடங்கவேண்டும் என்றார். சமூக உரிமை களுக்கு ரவ்லட் சட்டம் கட்டுப்பாடு ஏற்படுத்தியதை எதிர்த்து நீண்ட கால எதிர்ப்பு இருக்கவேண்டும் என்றார். முதல் கட்டமாக அரசாங்கம் தடை விதித்திருந்த அரசியல் சம்பந்தமான பிரசுரங்களை விற்கத் திட்ட மிட்டனர். பம்பாயில் 600 ஆண்களும் பெண்களும் சத்தியாக்கிரக இயக்கத்தில் ஈடுபடுவதாகக் கையெழுத்திட்டதும் காந்தி மகிழ்ச்சி அடைந்தார். இந்தியர் அந்தச் சிறிய எண்ணிக்கையைப் பார்த்துப் பரிகசித்தனர். 'தின்றால்தானே ருசி தெரியும்' என்று காந்தி பதிலிறுத்தார். இதைவிடச் சொற்ப ஆட்களைக்கொண்டு அவர் தென் ஆப்பிரிக்காவில் வெற்றி அடைந்திருக்கின்றார். 'இந்திய அரசாங்கம் போன்ற சக்திவாய்ந்த அரசாங்கமும் நம்முடைய வாக்குறுதிக்கு நாம் உண்மையாக நடந்துகொண்டால் இணங்கியே ஆகவேண்டும்' என்றார். சத்தியாக்கிரகப் போராட்டம் அரசியலில் சமய உணர்ச்சியை இணைக்கும் முயற்சியே. 'பதிலுக்குப் பதில்' என்ற கொள்கையில் இனி தாம் நம்பிக்கை வைக்கக்கூடாது. வெறுப்பை வெறுப்பால் எதிர்க்க வேண்டாம். பலாத்காரத்திற்கு பலாத்காரம் அன்று; தீமைக்கு தீமை அன்று, தீமைக்கு நன்மை செய்' என்று காந்தி வலியுறுத்திக்கூறினார்.

'முடியாதது ஒன்றுமே இல்லை' என்று காந்தி கூறிமுடித்தார். இந்தச் சித்தாந்தம் கடவுளிடமும், மக்களிடமும், தம்மிடமும் காந்திக் குள்ள நம்பிக்கையின் எதிரொலியாகும்.

இந்தப் பொது வேலைநிறுத்தம் பெருமளவில் வெற்றியடைந்தது. காந்தி அதை 'மிகவும் அற்புதமான காட்சி' என்று வர்ணித்தார். ஆனால், அவருக்கு இன்னும் அவருடைய தேசமக்களைப்பற்றிச் சரியாகத் தெரியாது. பலாத்காரத்தில் அவர்களுக்கிருந்த பற்றுதலை அவர் குறைவாகவே மதிப்பிட்டார். பெரிய பட்டணங்களில் வேலை நிறுத்தத்தோடு தீ வைத்தல், தந்திக்கம்பிகளை அறுத்தல் முதலிய தகாத செயல்களும் நடைபெற்றன. அதற்குப் பிராயச்சித்தமாக காந்தி மூன்று நாட்கள் உண்ணாவிரதம் இருந்தார். அவர்களுடன் சேர்ந்தவர் களை 24 மணிநேரம் உண்ணாவிரதம் இருக்கும்படி சொன்னார். பிறகு சிறு ஊர்களிலும் பலாத்காரச் செயல்கள் நடைபெறுவதாகச் செய்தி

வந்தது. 1919ஆம் வருடம் ஏப்ரல் மாதம் 18ஆம் தேதி அவர் திடீரென்று சத்தியாக்கிரக இயக்கம் முழுவதையும் நிறுத்திவிட்டார். மக்களைத் தவருக மதிப்பிட்டுவிட்டது நான் செய்த இமாலயத் தவறு என்று மக்களிடம் கூறினுர். 'இப்பொழுது நிதானித்து இந்த நிலைமையை எப்படி நல்லமுறையில் சமாளிக்கலாம் என்று யோசிக்க வேண்டும்.' குற்றத்தை ஒப்புக்கொள்வதால் மதிப்புக்குறைவு ஏற்படும் என்பதைப்பற்றி அவர் சிறிதும் கவலைப்படவில்லை. தவறு செய்யாதவர்கள் என்று சர்வாதிகாரிகள் தங்களை எண்ணுவதுபோல் காந்தி எண்ணவில்லை. 'மாருக, ஒருவர் தாம் செய்த தவறுகளைக் குழிந்த பூதக்கண்ணுடிகொண்டு பார்த்துப் பெரிதுபடுத்தியும் பிறர் தவறுகளைக் குவிந்த கண்ணுடிகொண்டு சிறிதுபடுத்தியும் பார்க்கவேண்டும். அப்பொழுதுதான் இரண்டையும் நியாயமாக மதிப்பிட முடியும்' என்று அவர் தம்முடைய சுயசரிதையில் எழுதியிருக்கிருர். அவர் தம் தவறுகளை மிகைப்படுத்தியும் ஏனையோர் தவறுகளைச் சிறியதாக்கியும் பேசத் தொடங்கினுர். இவ்வாறு செய்வதால் அவருடைய நற்பண்பு காரணமாக மக்கள்மாட்டுப் பரவியுள்ள செல்வாக்கை இழந்துவிடக்கூடும் என்று கூட சிலர் அறிவுரை கூறினர். 'நற்பண்பு காரணமாக ஏற்படும் செல்வாக்கை யாரும் பிடித்து நிறுத்தி வைத்துக்கொள்ளமுடியாது. தேடாமல் வந்து, பாடுபடாமல் நிலைப்பதாகும் அது' என்பதே காந்தியின் பதில். காந்தியின் சான்ருண்மை அவருக்கு உரியது. எவ்வளவு பெரிய தவறுகள் செய்யினும், அவருடைய சால்பு சிறிதும் குறையவில்லை.

பொது வேலைநிறுத்தத்தின்போது ஏற்பட்ட பலாத்கார நிகழ்ச்சிகளில் மிகவும் மோசமானது பஞ்சாபிலுள்ள அமிர்தசரஸில் நடந்தது. அங்கு 1,50,000 சீக்கியர் வசித்தனர். அவர்கள் நீண்ட தாடியுடன் தலைப்பாகையும் அணிந்து கம்பீரமாயிருப்பார்கள். அமிர்தசரஸ் வேலைநிறுத்தம் பிரிட்டிஷ்காரரர், இந்தியர் இவர்கள் இதயங்களில் எரிந்துகொண்டிருக்கும் அனல் எவ்வளவு ஆபத்தானது என்பதைக் காட்டியது. மார்ச் 30, ஏப்ரல் 6, இந்த இருதினங்களிலும் நடந்த வேலைநிறுத்தம் ஒருவித ஆபத்துமில்லாமல் முடிந்தன என்று சம்பவத்தை விசாரணை செய்த பிரிட்டிஷ் ஹன்டர் கமிஷன் கூறியது. 'ஐரோப்பியர் ஒருவிதத் தொந்தரவும் இல்லாமல் மக்கள் கூட்டங்களுக்கு இடையே நடக்க முடிந்தது,' என்று அக் கமிஷன் கூறியது. ஆகஸ்டு 9ஆம் தேதி அதிகாரிகள் டாக்டர் சாயஃபுதீன் கிச்லு (Dr. Saifuddin Kitchlew) என்ற முஸ்லிமையும், டாக்டர் சத்தியபால் (Dr. Satyapal) என்ற இந்துவையும் மாகாணத்தைவிட்டு வெளியேற்றிவிட்டனர். இருவரும் காங்கிரஸ் கட்சித் தலைவர்கள். இதே டாக்டர் கிச்லுவைத்தான் 1953ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் மாஸ்கோவில் ஸ்டாலின் (Stalin) தம் மரணத்திற்குமுன் வரவேற்றுப் பேசினுர். அந்த இரு அரசியல்

வாதிகளையும் அரசாங்கம் நாடுகடத்தியதால் கோபமுற்ற மக்கள் தெருக்களின் வழியே கூட்டங் கூட்டமாக வீராவேசத்துடன் சென்றனர். அப்பொழுது முக்கியமான மூன்று ஆங்கிலேயர் கொல்லப்பட்டனர்.

இரண்டு நாட்களுக்குப்பின் பிரிகேடியர் ஜெனரல் ரெஜினல்டு இ. எச். டையர் (Brigadier General Reginald E. H. Dyer) அமிர்தசரஸுக்கு அனுப்பப்பட்டார். அவர் இந்தியாவிலே பிறந்தவர். பிரிட்டிஷ் படையைச் சேர்ந்தவர். அவர் ஊர்வலங்களும் கூட்டங் களும் நடத்தக்கூடாதென்று ஏப்ரல் 12ஆம் தேதி ஓர் அறிக்கை விடுத்தார். ஆனால், 'நகரத்தின் பல பகுதிகளில் இந்த அறிக்கை வாசிக்கப்பட்டதாகத் தெரியவில்லை' என்று ஹன்டர் ரிப்போர்ட்டில் குறிக்கப்பட்டிருந்தது.

பிறகு ஹன்டர் ரிப்போர்ட் ஏப்ரல் 13ஆம் தேதி நடந்த ஜாலியன் வாலாபாக் படுகொலையைப்பற்றிக் கூறுகிறது. இச் சம்பவமே பின்வரும் வருடங்களின் சம்பவங்களை உருவாக்கியது. இந்திய சரித் திரத்தில் அழிக்கமுடியாதபடி எழுதப்பெற்றது. மாலை 4-30 மணிக்கு ஜனங்கள் ஒரு பெரிய கூட்டம் நடத்தப்போவதாக, பகல் சுமார் ஒரு மணிக்கு ஜெனரல் டையர் கேள்விப்பட்டார். 'அக் கூட்டம் நடை பெறுவதைத் தடுக்க நீர் ஏன் முயற்சி எடுக்கவில்லை என்று கேட்டதற்கு, நான் அங்கு எவ்வளவு சீக்கிரம் போகமுடியுமோ, அவ்வளவு சீக்கிரம் போனேன். அவ் விஷயத்தை நான் நன்றாக யோசிக்கவேண்டி யிருந்தது என்று பதில் சொன்னார்' என்று ஹன்டர் ரிப்போர்ட்டில் கூறப்பட்டிருக்கிறது.

நாங்கள் விசாரணை செய்தபோது டையர் சொன்னார். 'நான் காரில் வந்துகொண்டிருக்கும்போது என்ன செய்வது என்பதைப்பற்றித் தீர்மானித்தேன். கூட்டம் நடக்கக்கூடாது என்ற என் உத்தரவை மீறினால் நான் உடனே சுடுவேன். அத்தனை பேரையும் கொன்று விடுவது என்று தீர்மானித்துவிட்டேன்' என்று அவர் சாட்சி சொன்னார்.

ஜாலியன் வாலாபாக் ஒரு நீண்ட சதுரமான வெட்டவெளி. அதைச் சுற்றிலும் மதில்கள், மதில்களுக்கு அப்பால் வீடுகள். அதற்குள் போக வர சில வழிகளே இருந்தன. அவையும் நல்ல நிலையில் இல்லை. டையர் நுழைந்த வழியில் இருபுறங்களிலும் மேடுகள். அதற்கு எதிர் புறத்தில் ஏராளமான மக்கள் கூடியிருந்தனர். டையர் தமது படைகளை நிறுத்தியிருந்த இடத்திற்கு 150 கெஜ தூரத்திற்கு அப்பால் ஓர் உயர்ந்த மேடையில் நின்று ஒருவர் மக்களுக்குப் பிரசங்கம் செய்து கொண்டிருந்தார். ரிப்போர்ட்டின் மதிப்பின்படி '10,000 முதல் 20,000 மக்கள் அங்குக் கூடியிருக்கலாம் ; சிலரிடம் கம்புகள் இருந்திருக்கலாம்; மற்றபடி எல்லோரும் நிராயுதபாணிகள்.' துப்பாக்கி தாங்கிய

நேபாளத்து 25 கூர்க்கா வீரர்களுடனும், 25 பலுசிஸ்தானத்து பலுசிஸ் வீரர்களுடனும் கத்திகளுடன் 40 கூர்க்காக்களுடனும் ஆயுத வீரர்கள் ஏற்றிய இரண்டு ராணுவ வண்டிகளுடனும் ஜெனரல் டையர் ஜாலியன் வாலாபாக்குக்குச் சென்றார்.

ஹன்டர் கமிஷன் டையரைப் பின்வருமாறு குறுக்கு விசாரணை நடத்தியது.

கேள்வி : அந்த வழி படைக்கலம் தாங்கிய மோட்டார் செல்லப் போதுமானதாயிருந்திருந்தால் நீர் இயந்திரத் துப்பாக்கியை உபயோகித்திருப்பீரா ?

பதில் : உபயோகித்திருப்பேன் என்று நினைக்கிறேன்.

ஹன்டர் ரிப்போர்ட் தொடர்கிறது.

'அந்த மோட்டார்கள் மிகவும் பெரிதாயிருந்தன. டையர் பார்க்குக்குள் நுழைந்ததும், ஒவ்வொரு பக்கத்திலுமிருந்த மேட்டில் 25 பேரை நிறுத்திவைத்தார். கூட்டம் கலைந்துபோவதற்கு ஒன்றும் எச்சரிக்கை செய்யாமல், சுடுவதற்கு அவர் உத்தரவு கொடுத்தார். மக்கள் அவர் தடை உத்தரவை மீறிக் கூட்டம் நடத்தியதால் அவர்களுக்கு எவ்வித எச்சரிக்கையும் செய்ய அவசியமில்லை என்று கருதினார். 10 நிமிடங்கள் சுட்டனர்.

சுட ஆரம்பித்ததும் கூட்டம் கலைய ஆரம்பித்தது. மொத்தம் 1,650 தடவை சுட்டனர். சரமாரியாகச் சுடாமல் தனித்தனியாகச் சுட்டனர். ஏறக்குறைய 379 பேர் இறந்தனர். அதைப்போன்று மூன்று மடங்கு மக்கள் காயப்பட்டனர். காயப்பட்டவர்களின் எண்ணிக்கை 1,137 ; ஆக 1,516 பேர் 1,650 குண்டுகளால் தாக்கப்பட்டனர். கூட்டம் சரியான இலக்காக அமைந்துவிட்டது. கூட்டம் மைதானத்திலுள்ள தாழ்ந்த மதிலை நோக்கி ஓடியது. அந்த மதில் ஐந்து அடி உயரம். உடனே டையர் அந்தப் பக்கம் குறிபார்த்துச் சுடச்சொன்னார்.' டையர் சாட்சியம் பின்வருமாறு.

கேள்வி : சுடும் திசையை அடிக்கடி மாற்றி, கூட்டம் எங்கு நெருக்கமாக இருந்ததோ அங்குச் சுடச்சொன்னீரா ?

பதில் : ஆம்.

ஜெனரல் டையர் தம்முடைய இராணுவ மேலதிகாரிகளுக்கு ஓர் அறிக்கை அனுப்பியிருக்கிறார். அதை ஹன்டர் ரிப்போர்ட்டிலும் கையாண்டிருக்கின்றனர். 'கூட்டத்தைக் கலைப்பதுமாத்திரம் அப்போதைய பிரச்சினை இல்லை. அங்குக் கூடியிருந்தவர்களுக்கும் அதற்கும் மேலாகப் பஞ்சாபிலுள்ள எல்லா மக்களுக்கும் ஒரு படிப்பினை கற்றுக்கொடுக்கவேண்டியிருந்தது. அளவுக்கு மிஞ்சிக் கடுமையாகச் சுட்டதாகச் சொல்லமுடியாது.

ஜாலியன்வாலாபாக்கில் நடந்த படுகொலையைப்பற்றிக் கூறும் போது, ‘நான் பெரும் நன்மை செய்யப்போவதாகத்தான் எண்ணி னேன்’ என்று அலட்சியமாகக் கூறியிருக்கிறுர். ஆனால், ஹன்டர் அறிக்கை ‘தமது கடமையைப்பற்றி டையர் இவ்வாறு பிறழ உணர்ந் தது, துரதிருஷ்டமானது’ என்று அதைப்பற்றித் தமது முடிவான கருத்தைத் தெரிவித்திருக்கிறது.

13. சிறைக்குச் செல்லுதல்

காந்தி அமிர்தசரஸ் படுகொலைக்கு எதிராகத் தீவிரமான நடவடிக்கை எடுத்தார். ஒத்துழையாமையைக் கைக்கொள்ளவேண் டும்; அதற்காக பிரிட்டிஷ் பொருள்கள், கௌரவப்பட்டங்கள், நியாயஸ்தலங்கள், பள்ளிகள், உத்தியோகங்கள் எல்லாவற்றையும் பகிஷ்கரிக்கவேண்டும். 1919ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் டில்லி யில் நடந்த ஒரு முஸ்லிம் மகாநாட்டில் இக் கொள்கைகளைப்பற்றி எடுத்துரைத்தார்.

1919ஆம்ஆண்டு டிசம்பர் மாதத்தில் அரசாங்கம், காங்கிரஸ் மகாநாட்டின் வருடாந்திரக் கூட்டத்தை, ஜாலியன்வாலாபாக் படுகொலை நிகழ்ந்த இடத்திற்கு அருகில் நடத்த அனுமதித்தது. ஷாகத், முகமது அலி சகோதரர்களைச் சிறையிலிருந்து நேராகக் கூட்டத்தில் வந்துகலந்துகொள்ளும் வகையில் விடுதலை செய்தது. மேலும் ஜாலியன்வாலாபாக்கில் டையர் இழைத்த அநீதிக்கு ஆறுதல் சொல்வதுபோல, பிரிட்டிஷ் சக்கரவர்த்தி, மான்டேகு செம்ஸ்ஃபோர்டு (Montagu—Chelmsford) சீர்திருத்தங்களை அதே மாதத்தில் வெளி யிட்டார். அச் சீர்திருத்தங்களின்படி மாகாணங்களில், சில மந்திரி பதவிகள் இந்தியருக்கு அளிக்கப்படும். ‘ஒரு புது சகாப்தம் ஆரம்ப மாகிறது’ என்று அரசர் விளம்பரம் செய்தார்.

காந்தியும் அவ்வாறே நம்பினுர். அவர் காங்கிரஸ் கூட்டத்தை அதை அங்கீகரிக்கும்படியும், அதைச் செயலில் கொண்டுவர உதவி புரியும்படியும் கேட்டுக்கொண்டார். ஒரு மாதத்திற்கு முன்னுல் கூறி யிருந்த ஒத்துழையாமை இயக்கத்தையும் கைவிட்டார். இப்பொழுது பிரிட்டிஷ் அரசாங்கத்தோடு ஒத்துழைக்கும்படி ஆலோசனை கூறினுர். ‘மற்றவர்களிடம் நம்பிக்கைவைப்பது நல்ல குணம். பலவீனமே அவநம்பிக்கையை உண்டாக்குகிறது’ என்று எடுத்துச்சொன்னுர். இந்தியர் தங்களைப் பலவீனமுள்ளவர்கள் என்று பிறர் கருத விரும்ப மாட்டார்கள் என்று அவருக்குத் தெரியும்.

காந்தியின் செல்வாக்கு வளர்ந்துகொண்டே வந்தது. அவர் மத்தியதர வகுப்பைச் சேர்ந்தவர். இந்திய மத்தியதர வகுப்பினர்,

அரசியலில் அவருடைய கொள்கைகளைப் பின்பற்றினர். மத்தியதர வகுப்புப் பிரதிநிதிகள் பலர் இக் கூட்டத்திலும் பின்வரும் கூட்டங்களிலும் கலந்துகொண்டார்கள். ஏழைகளும் இக் கூட்டத்திற்கு வந்தனர்.

இவ்வாறுகக் காங்கிரஸும், மான்டேகு செம்ஸ்ஃபோர்டு சீர்திருத்தங்களை ஆதரித்து ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது. ஆனால், திலகர், ஜின்னு மற்றும் முக்கிய தேசியவாதிகள் இச் சீர்திருத்தங்களை எதிர்த்தனர். (அவர்கள் கேட்ட டொமினியன் அந்தஸ்துக்கு வெகு தூரத்தில் இருந்தன) யுத்தத்திற்குப் பிறகு பிரிட்டிஷ்காரர் எடுத்துக் கொண்ட நடவடிக்கைகள் பெரும் ஏமாற்றத்தை விளைவித்தன. பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின்மீது இளம் வயதுடைய இந்தியர்களுக்குச் சிறிதும் நம்பிக்கை இல்லை. அப்பொழுது வைஸ்ராயாக இருந்த செம்ஸ்ஃபோர்டு, டையர் குற்றமற்றவர் என்று சொல்லிவிட்டார். ஹன்டர் ரிப்போர்ட், டையரின் நடவடிக்கைகளைக் கண்டனம் செய்தாலும், அம் மாதிரி நிகழ்ச்சிகள் நடவாதிருப்பதற்கான வழிகளைக் கூறவில்லை. இஸ்லாமிய நாடான துருக்கிமீது கடுமையான விதிகளை விதித்ததாலும் துருக்கி சுல்தானைக் 'கலீப்' (Caliph) பதவியிலிருந்து நீக்கினதாலும் இந்திய முஸ்லிம்கள் இங்கிலாந்தின்மீது கோபமாக இருந்தனர்.

காந்தி எப்பொழுதும் இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையே ஒற்றுமை ஏற்படுத்தும் ஆவலுடையவர். இளைஞரின் உற்சாகத்தை எப்பொழுதும் ஊக்குபவர். உயர்ந்த ஒழுக்க நெறியிலிருந்து விலகிச்செல்லும்போது நொந்துகொள்பவர். ஆகவே, காந்தி மறுபடியும் தம்முடைய பழைய கொள்கையாகிய ஒத்துழையாமையைக் கைக்கொண்டார். 1920ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் காங்கிரஸ் மகாநாடு நாகபுரியில் கூடியது. அப்பொழுது முந்தின வருடத்துத் தீர்மானத்தை எதிர்த்து, பிரிட்டிஷாரோடு ஒத்துழைக்கக்கூடாது என்று தீர்மானித்தது. உடனே காந்தி தென் ஆப்பிரிக்காவில் தமக்குக் கிடைத்த இரண்டு பதக்கங்களையும் வைஸ்ராய்க்கு அனுப்பிவிட்டு, 'நெறியற்ற தன்மையைப் பாதுகாப்பதற்காகத் தவற்றுக்கு மேல் தவறு செய்துவரும் அரசாங்கத்தினிடம் எனக்கு அன்போ, மரியாதையோ இருக்கமுடியாது' என்று தாம் எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார்.

பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின்மேலிருந்த பற்றுதல்போய் அதை நிராகரிக்கக்கூடிய அளவுக்குக் காந்தியிடம் ஒரு மாறுதல் ஏற்பட்டது. காந்தியின் வாழ்க்கையிலும் இந்திய சரித்திரத்திலும் அது மிகவும் முக்கியமானது. இம் மாறுதல் ஜாலியன்வாலாபாக்கில் நடந்த படுகொலையினுல் ஏற்பட்டது. எதிலும் சமாதானமாகப் போகவேண்டு

மென்ற காந்தியின் இயற்கையான குணம், பிரிட்டிஷ் நடவடிக்கையால் தேசம் முழுவதும் ஏற்பட்ட கோபத்தினால் முற்றிலும் மாறியது. தாம் தலைமை தாங்கி மக்களுக்கு வழிகாட்டாவிட்டால் அவர்கள் மூர்க்கமான எண்ணங்களின் வசப்பட்டு வழிதவறிவிடுவார்கள் என்ற அச்சத்தினால் தான் காந்தி தமது போக்கைச் சில சமயங்களில் மாற்றிக்கொண்டார். மக்கள் விரும்பும் லட்சியத்தை அடைய வேண்டும் என்பதுதான் காந்தியின் யுத்த தந்திரம் என்றாலும், தாம் சொல்லும் வழிகளையே பின்பற்றவேண்டும் என்று அவர் வற்புறுத்தினார். இந்தியா மட்டும் சாத்வீக முறையில் ஒத்துழையாமையைக் கடைப்பிடித்தால், ஒரு வருடத்தில் சுயஆட்சி கிடைக்கும் என்று 1920ஆம் ஆண்டு டிசம்பரில் நாகபுரியில் நடந்த காங்கிரஸ் மகாசபையில் காந்தி கூறினார்.

காந்தி இச் செய்தியை மக்களுக்கு எடுத்துரைத்தார். மோதிலால் நேரு மிகவும் லாபகரமான தம் வழக்கறிஞர் தொழிலை விட்டுவிட்டார். மதுபானம் குடிப்பதை நிறுத்தினார். ஒத்துழையாமை இயக்கத்தில் முழுமூச்சுடன் ஈடுபட்டார். கல்கத்தா வழக்கறிஞர் சங்கத்தின் தலைவராகிய சி. ஆர். தாஸ், அகமதாபாத் செல்வந்த வழக்கறிஞரான வல்லபாய் பட்டேல், ஜவஹர்லால் நேரு முதலிய நூற்றுக்கணக்கானவர்கள் பிரிட்டிஷ் கோர்ட்டுகளிலிருந்து நிரந்தரமாக விலகினர். பல்கலைக்கழகங்களில் படித்துக்கொண்டிருந்த மாணவர்கள் வகுப்பு அறைகளைவிட்டு வெளியே வந்தனர். ஆசிரியரும் மாணாக்கரும் கிராமங்களுக்குச் சென்று ஒத்துழையாமை இயக்கத்தைப்பற்றி எடுத்துரைத்தனர். வரிகொடாதிருத்தல், மதுபானம் அருந்தாதிருத்தல் ஆகிய இரண்டும்தான் கிராமத்தாருக்கு ஒத்துழையாமையாகும். இதனால் அரசாங்க வருமானத்திற்கு இருவிதமான நஷ்டங்கள் ஏற்பட்டன.

காந்தி ஏழு மாதங்கள் தகிக்கும் வெயிலிலும் நடுங்கும் குளிரிலும் சலியாது சுற்றுப்பயணம் செய்தார். அசுத்தமானதும் நெருக்கடியானதும் உஷ்ணமானதுமான ரயில்வண்டிகளில் பிரயாணம் செய்தார். லட்சத்திற்கு மேற்பட்ட மக்களடங்கிய கூட்டங்களில் பேசினார். ஒலிபெருக்கி இல்லாத அந்த நாட்களில் அவருடைய சத்தத்தைக் கூடியிருந்தவர்கள் அனைவரும் கேட்டிருக்கமுடியாது. காந்தியின் ஆர்வம் தான் அவர்களை எட்டியிருக்கும். மகாத்மாவைத் தரிசிக்கவேண்டுமென்று மக்கள் கூச்சலிட்டனர். அவருடைய தரிசனம் மக்களைப் புனிதமாக்கியது. ஒரு சிறிய ஊரிலுள்ள மக்கள், மகாத்மா காந்தி செல்லும் ரயில்வண்டி அவர்கள் ஊரில் நிற்காவிட்டால், அவர்கள் தண்டவாளங்களின் குறுக்கே படுத்து ரயிலினால் நசுக்கப்பட்டுவிடுவோம் என்று சொல்லியனுப்பினர். அதனால், ரயில்வண்டி அந்தநிலையத்தில் நின்றது. அச் சமயம் காந்தி ஆழ்ந்த நித்திரையிலிருந்து எழும்பி அவர்கள்முன் தோற்றமளித்தார். அதுவரை கொந்தளித்துக்கொண்டிருந்த அக் கூட்

டத்தார், காந்தியைக் கண்டதும் மண்டியிட்டு மனமுருகி அழுதனர். கடுமையான அந்த ஏழுமாதப் பிரயாணத்திலும் காந்தி வழக்கம்போல மூன்றுவேளை ஆகாரம்தான் சாப்பிட்டுவந்தார். பதினறு அவுன்ஸ் வெள்ளாட்டுப்பால், மூன்று துண்டு ரொட்டி, இரண்டு ஆரஞ்சுப் பழங்கள், இருபது பச்சையான அல்லது உலர்ந்த திராட்சைப்பழங்கள் தான் அவரது ஆகாரம். அவ் வுணவு அவருக்குப் போதுமான சக்தி யைக் கொடுத்தது.

ஒத்துழையாமை இயக்கப் பிரசாரத்தில் சமய மறுமலர்ச்சியின் பண்புகளெல்லாம் அடங்கி இருந்தன. அப் பிரயாணத்தின் சில பகுதி களில் அலி சகோதரரும் உடனிருந்தனர். காந்தி மக்களிடத்தில் அந்நியநாட்டுத் துணிகளை உடுத்தக்கூடாது என்று எடுத்துரைத்தார். அதைக்கேட்டு அவர்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தபொழுது, உடுத்தி ருக்கும் வெளிநாட்டு உடைகளை எல்லாம் கழற்றித் தம்முன் குவிக்கச் சொன்னர். கோட்டு, தொப்பி, செருப்பு, ஜட்டி முதலியவை அடங்கிய அக் குவியலுக்குத் தீக்குச்சியைக் கிழித்துக்காட்டினர். வெளிநாட்டி லிருந்துவந்த அந்தப் பொருள்களைத் தீ பொசுக்கிக்கொண்டிருக்கும் பொழுது ஒவ்வொருவரும் தமக்கு வேண்டிய துணியைத் தாமே நூற் றுக்கொள்ள வேண்டுமென்று காந்தி கெஞ்சிக் கேட்டுக்கொண்டார். அவரும் ஒருநாளைக்கு அரைமணிநேரம் நூற்றுவந்தார். தினசரி நூற்பது ஒரு சமயக்கடமை என்று அவர் சொன்னர். அது நூற்ப வரின் மனத்தைக் கடவுளிடம் திருப்பிவிடுகிறது என்றர். அதன்பின் சுதேசித்துணி அணியாத எந்த இந்தியனும் அவர்முன் வரத்துணிய வில்லை.

ஒரே வருடத்தில் சுயராஜ்யம் கிடைக்கும் என்று காந்தி சொன்னர். அவர் கூறிய அந்தச் சுயராஜ்யம் கிடைக்காமலே அந்த வருடம் உருண்டது. பல தேசியவாதிகள் பிரிட்டிஷ் ஆட்சியை எதிர்த்துப் பகிரங்கமாகக் கலகம் செய்யவேண்டுமென்று சொன்னர்கள். காங்கிர ஸுக்குள் பிளவு அதிகரித்தது. நூற்பு, மதுவிலக்கு, வாய்ச்சொல்லால் சர்க்காரை எதிர்த்தல் ஆகிய காந்தியின் கொள்கைகள் ஏளனம் செய் யப்பட்டன. சிறப்பாக வாலிபர் செயலில் இறங்கத் துடியாய்த்துடித் தனர்.

‘இந்தியா பலாத்கார முறையைக் கையாண்டால் தாற்காலிக வெற்றிபெறும். ஆனல், அந்தப் பலாத்கார இந்தியா நான் பெருமைப் படக் கூடியதாயிராது’ என்று காந்தி சொன்னர். பலாத்கார முறையை நிராகரிப்பதில் பிடிவாதமாக இருந்தார். பிடிவாதத்துடன் நின்றுவிட வில்லை. ‘ஏறக்குறைய வெறிபிடித்தநிலை என்றுகூடக் கூறலாம்’ என்று அவரே சொன்னர். ஆனல், காந்தியின் தலைமை இன்றியமையாதது. அதனல், 1921ஆம் ஆண்டு நவம்பர் 4ஆம் தேதி டில்லியில் கூடிய அகில

இந்திய காங்கிரஸ் நிர்வாகக்கமிட்டி சாத்வீகச் சட்டமறுப்புக்குச் சாதக மாக ஒரு தீர்மானம் கொண்டுவந்தது. அதே சமயத்தில் காந்தியின் சம்மதமில்லாமல் சட்டமறுப்புத் தொடங்குவதில்லை என்றும் வாக் களித்தது. ரவீந்திரநாத்தாகூர், 'வெளிநாட்டுத் துணிகளை எரித்த நெருப்பு மக்களின் உள்ளங்களையும் சுடும்' என்று காந்தியை எச்சரித் தார். காந்தி பலாத்காரம் ஏற்படுமோ என்று அஞ்சினர். 1921ஆம் ஆண்டு டிசம்பரிலும் 1922ஆம் ஆண்டு ஜனவரியிலும் 10,000 இந்தி யர்கள் ராஜீய குற்றங்களுக்காகச் சிறையிலிடப்பட்டனர். மோதிலால் நேரு, சி. ஆர். தாஸ், காங்கிரஸ் முன்னணியிலுள்ள மற்றும் நூற்றுக் கணக்கானவர்கள் ஏற்கனவே சிறையிலிருந்தனர். அநேக மாகாணங் களில் குடியானவர்கள், ஒரேசமயத்தில் வரிகொடா இயக்கத்தில் ஈடுபட் டிருந்தனர்.

1921ஆம் ஆண்டு டிசம்பரில் அகமதாபாத்தில் நடந்த வருடாந்திரக் காங்கிரஸ் கூட்டத்தில் காந்தி மீண்டும் ஒருமுறை கிரேட் பிரிட்டனிடம் மிகமிகப் பணிவுடன் முறையிட்டார். 'நீங்கள் என்ன செய்தாலும் சரி; எவ்விதம் அடக்கினாலும் சரி; என்றுவது ஒருநாள் உங்களுக்கு விருப்பம் இல்லாவிடினும், எங்களுக்கு நீங்கள் செய்த கொடுமைகளுக் காக நீங்களாகவே வருந்தும்படி செய்வோம்; மூவாயிரம் லட்சம் இந்தியர்களை உங்களுடைய நிரந்தரப் பகைவர்களாக ஆக்கிக்கொள் ளாமல் பார்த்துக்கொள்ளுங்கள் என்ருர். இங்ஙனம் ஆங்கிலேயருக்கு விடுத்த அறைகூவல் அவர்களிடமிருந்து உதவி கேட்பதாகவும் இருந்தது. அடக்குமுறைகளினால் ஏற்பட்ட ஆத்திரத்தினால் இந்தியர் என்ன செய்வார்களோ என்று காந்தி அஞ்சினர்.

காந்தியும் இந்தியாவும் செயல்படவேண்டிய அவசியம் ஏற்பட்டு விட்டது. அதற்காகவும் தாம் கூறியவை பிரிட்டன் மனத்தில் பதிய வேண்டும் என்பதற்காகவும் காந்தி இப்பொழுது சாத்வீகச் சட்ட மறுப்பைப் பர்தோலியில் ஆரம்பித்தார். பர்தோலியின் ஜனத்தொகை 87,000. அது பம்பாய்க்கு அருகிலுள்ளது. அங்கே அந்த இயக்கத் தைத் தாமே நேரில் பார்வையிட முடியுமென்று காந்தி நினைத்தார். 1922ஆம் ஆண்டு பிப்ரவரி முதல் தேதி, புது வைஸ்ராய் ரீடிங் பிரபு (Lord Reading) வுக்கு அவருடைய திட்டத்தைப்பற்றி அறிவித்தார்.

சட்டமறுப்பு இயக்கத்தைப் பர்தோலியில் மாத்திரம் நடத்தினர். ஏனெனில், நாடு முழுவதும் சட்டமறுப்பு இயக்கம் சமாதானமுறையில் நடக்குமா என்பது அவருக்கே சந்தேகமாயிருந்தது. அன்றியும் இந்தி யருடைய கட்டுப்பாட்டைக்காட்டி, இந்தியர்கள் விவேகமாகப் பயன் படுத்துவார்கள் என்று பிரிட்டிஷார் நினைத்திருக்கும் அளவுக்கும் மேலாக நிறைந்த அளவில் சுதந்திரம் கொடுக்குமாறு அவர்களைத் தூண்டவிரும்பினர்.

பர்தோலி இயக்கம் தொடங்கியவுடன், பர்தோலிக்கு 800 மைல் தூரத்தில் ஐக்கிய மாகாணத்தில் உள்ள செளரி செளரா என்ற சிறு ஊரில் மூன்று நாட்களுக்குமுன் நடந்த கொடுமையைப்பற்றி காந்திக்கு பிப்ரவரி எட்டாம்தேதி செய்திவந்தது. இதைப்பற்றி 'யங் இந்தியா'வில் காந்தி பின்வருமாறு கூறியிருக்கிறார். 'சர்க்காரின் அனுமதியுடன் ஊர்வலம் ஒன்று நடந்தது. அந்த ஊர்வலத்தில் கடைசியில் வந்தவர்களைப் போலீஸார் திட்டினார்கள். அவர்களைத் தடுக்கவும் செய்தார்கள். ஆகையால், அவர்கள் ஊர்வலத்தின் முன்னால் சென்றவர்களை உதவிக்கு அழைத்தனர். ஊர்வலத்தின்முன் சென்றவர்கள் உதவி செய்யத்திரும்பினர். உடனே போலீஸார் சுட ஆரம்பித்தனர். அவர்களிடமிருந்த சிறிது வெடிமருந்து காலியானதும், அவர்கள் போலீஸ் தாணவுக்குள் நுழைந்தனர். கூட்டத்தினர் தாணவுக்குத் தீ வைத்தனர். அங்கிருந்த போலீஸார் உயிர்தப்புவதற்காக வெளியே வந்தனர். அப்படி அவர்கள் வரும்போது கலகக்காரர்கள் அவர்களைக் கண்டதுண்டமாக வெட்டினர். சித்திரவதை செய்யப்பட்ட உடல்களைக் கொழுந்துவிட்டு எரியும் நெருப்பில் போட்டனர்.'

இந்த 22 போலீஸ்காரர்களை மிருகத்தனமாகச் செய்யப்பட்ட கொலை ஒரு கெட்ட சகுனமாக இருந்தது என்று காந்தி கூறினார். 'ஒருவேளை கடவுள் அருளால் சாத்வீகச் சட்டமறுப்பு வெற்றி அடைந்து, அரசாங்கம் அதிகாரத்தை வெற்றிபெற்றவர்களிடம் விட்டிருந்தால் கட்டுப்பாடு இல்லாத மக்கள் கூட்டத்தை அப்பொழுது யாரால் அடக்கமுடியும்? அவர்களுக்குப் பிறர் ஆத்திரம் மூட்டும்போதெல்லாம் ஈவு இரக்கமற்ற கொடுமைகளை அவர்கள் ஓயாமல் செய்துகொண்டேயிருப்பார்களே?' என்று காந்தி கேட்டார். அவரால் அந்தக் கூட்டத்தை அடக்கமுடியும் என்று அவருக்கு நம்பிக்கை இல்லை. எனவே, பர்தோலி சத்தியாக்கிரகத்தை நிறுத்திவிட்டார். இந்தியாவின் எந்தப் பாகத்திலும் சர்க்காரின் அதிகாரத்தை எதிர்க்கக்கூடாது என்று தடைவிதித்தார்.

'நம்முடைய எதிரிகள் நாம் அவமானப்பட்டதில் அல்லது அதைத் தோல்வி என்று கருதினால் அதில் மகிழ்ச்சி அடையட்டும்' என்றார். 'நமது வாக்குறுதிப்படி நடக்காமல் கடவுளுக்கு விரோதமாக நாம் பாவம் செய்வதைவிடக் கோழைகள், பலவீனமுள்ளவர்கள் என்று மற்றவர்களால் குற்றஞ்சாட்டப்படுவது நல்லது. நமக்கு நாமே பொய்யர்களாக இருப்பதைவிட லட்சந்தடவை உலகிற்குப் பொய்யராகத் தோன்றுவது மேல்' என்று கூறினார்.

காந்தி ஒரு வார்த்தை சொல்லியிருந்தால் இந்தியா முழுவதும் கலகம் ஏற்பட்டிருக்கும். பிரிட்டிஷாரை நாட்டைவிட்டே விரட்டிவிட வேண்டுமென்று சொல்லிவந்த தீவிரவாதிகள் இருந்தார்கள். யுத்தத்தினால் ஏற்பட்ட குழப்பம் உலகம் முழுவதும் இன்னும் இருந்து

கொண்டேவந்தது. உலகத்தின் பல பாகங்களில் இங்கிலாந்துக்கு நெருக்கடிகள் ஏற்பட்டன. ஆனால், தேசமக்களின் இரத்தத்தைச் சிந்தி காந்தி சுதந்திரம் பெறத் தயாராயில்லை. பலாத்காரத்தின்மீது உருவாகிய இந்திய சுதந்திரம் பல ஆண்டுகள் பலாத்காரத்தையே மேற்கொள்ளும். அப்பொழுது இந்தியா சுதந்திரம் அடைவது என்பதே சந்தேகத்திற்குரியதாக இருந்தது. எனினும், நல்ல லட்சியத்தை அடைய தீய முறைகளைக் கையாள அவர் விரும்பவில்லை. தீய வழியில் பெற்ற சுதந்திரம் தீயதாகவே முடியும் என்று தம்முடைய முடிவையே தியாகம் செய்தார்.

காந்தி சாத்வீகச் சட்ட மறுப்பை ரத்துசெய்தார். கலகம் கூடாது என்று சத்தியம் செய்து தடுத்தார். போராட்டத்திற்குச் செய்த ஏற்பாடுகள் எல்லாவற்றையும் நிறுத்திவிட்டார். எனினும், ரீடிங் பிரபு காந்தியைக் கைதுசெய்தார்.

இதற்குமுன் லண்டனில் உள்ளவர்களும் பிரிட்டிஷ் மாகாண கவர்னர்களும் காந்தியைக் கைதுசெய்யும்படி ரீடிங் பிரபுவிடம் அறிவித்துக்கொண்டிருந்தனர். ஆனால், 'அவர் அதைத் தள்ளிப் போட்டுக்கொண்டு வந்தார். ரீடிங் பிரபு ஆரம்பத்தில் கப்பலில் செய்தி சொல்லும் வேலையிலிருந்தார். படிப்படியாக பிரதம நீதிபதியாகவும் பின்னர் வாஷிங்டனில் அரசாங்கத் தூதுவராகவும் ஆனவர். இப்பொழுது அவர் இந்தியாவில் வைஸ்ராய். வெறும் பிரசங்கங்கள் செய்ததற்காகவோ, கட்டுரைகள் எழுதியதற்காகவோ ஒருவரைக் கைதுசெய்வது சரியல்ல என்று சட்டப்பயிற்சியும் அனுபவமும் நிறைந்த அவர் கருதினர். 'காந்தி செயலில் ஈடுபட்டால் நான் அவரைக் கைது செய்யத் தயாராக இருக்கிறேன்' என்றார். எனினும், காந்தி செயலில் ஈடுபடமாட்டார் என்று திட்டமாகத் தெரிந்தும், ஒரு கொடிய நிகழ்ச்சி நடக்காது என்று காந்தி அரசாங்க அதிகாரிகளுக்கு வாக்குறுதி கொடுத்திருந்தும், ரீடிங் பிரபு அவரைக் கைதுசெய்தார். 1922ஆம் ஆண்டு மார்ச் 9ஆம் தேதி 'யங் இந்தியா' வாரப்பத்திரிகையில், 'நான் கைது செய்யப்பட்டால்' என்ற தலைப்பில் காந்தி ஒரு கட்டுரை எழுதினர். 'அரசாங்கம் மக்களைப் பலாத்கார முறையில் அடக்கி, இரத்த ஆறுகள் ஓடினாலும் நான் அஞ்சமாட்டேன். ஆனால், மக்கள் என் பெயரைச் சொல்லியோ அல்லது எனக்காகவோ அரசாங்கத்தை நிந்தித்தார்களானால் நான் மிகவும் வருந்துவேன். என்னைக் கைதுசெய்வதனால் மக்கள் மனஅமைதியை இழக்க நேர்ந்தால் அது என்னை அவமானப்படுத்துவதாகும்' என்று அதில் எழுதியிருந்தார். மார்ச் பத்தாம் தேதி காலை பத்தரை மணிக்குக் காந்தி கைதுசெய்யப்பட்டார்.

தம்மைக் கைதுசெய்யுமாறு காந்தி அரசாங்கத்தினருக்குக் கோபமூட்டினர் என்றும், 'யங் இந்தியா'வில் அவர் எழுதிய மூன்று

கட்டுரைகள் ராஜத்துரோகமானவை என்றும் குற்றம் சாட்டப்பட்டார். 1921ஆம் ஆண்டு செப்டம்பர் 19ஆம் தேதி அவர் முதல் கட்டுரையில் பின்வருமாறு எழுதினர். 'போர்வீரராகவோ, சாதாரண நிர்வாக அதிகாரியாகவோ, இந்த அரசாங்கத்தில் பணிபுரிவது பாவம் என்று சொல்ல நான் தயங்கமாட்டேன். ராஜத்துரோகமே காங்கிரஸின் கொள்கையாகிவிட்டது. ஒத்துழையாமை என்பது சமயத்தின் அடிப் படையிலும் அறத்தின் அடிப்படையிலும் நடத்தப்படும் ஓர் இயக்க மாகும். ஆனாலும், அரசாங்கத்தைக் கவிழ்க்கும் நோக்கத்தோடு நடத்தப்படுவதால் சட்டபூர்வமாக ராஜத்துரோகக் குற்றமாகும்'. 1921ஆம் ஆண்டு டிசம்பர் 21ஆம் தேதி இரண்டாவது கட்டுரையை காந்தி வெளியிட்டார். 'ஒத்துழையாமை இயக்கத்தில் ஈடுபட்டிருப்ப வர்கள் அரசாங்கத்தோடு யுத்தம் தொடுத்துக்கொண்டிருக்கிறுர்கள் என்பதை ரீடிங் பிரபு புரிந்து கொள்ளவேண்டும். அரசாங்கத்தை எதிர்த்துப் புரட்சி செய்யப்போவதாக அவர்கள் அறிவித்திருக்கிறுர்கள். எனவே, அவர்களால் அபாயம் நேரிடாதபடி அவர்களை அடக்க ரீடிங் பிரபுவுக்கு உரிமை உண்டு' என்று அதில் காந்தி கூறினுர். மூன்றுவது கட்டுரையை 1922ஆம் ஆண்டு பிப்ரவரி 23 ஆம் தேதி வெளியிட்டார். 'பிரிட்டிஷ் சிங்கம் இரத்தம் தோய்ந்த தன் கூரிய நகங்களை நம் முகத்திற்கு எதிரே ஆட்டிக்கொண்டிருக்கிறபோது, அதனேடு நாம் என்ன சமரசம் நடத்தமுடியும்? அரிசிச்சோறு சாப்பிடும் மெலிந்த தோற்றமுள்ள கோடிக்கணக்கான இந்தியர் இனி ஆயுதமில்லாமலும் பிறர்பாதுகாப்பு இல்லாமலும் தங்கள் விதியைத் தாங்களே நிர்ண யித்துக்கொள்ளத் தீர்மானித்துவிட்டனர். 1920ஆம் ஆண்டு தொடங்கிய இப் போராட்டம் இறுதிவரை நடைபெறும்' என்று காந்தி எழுதினுர்.

மார்ச் 18ஆம் தேதி அகமதாபாத்திலுள்ள அந்தச் சிறிய கோர்ட்டின் அறையில் பெருங்கூட்டம் கூடிற்று. குற்றப்பத்திரிகை வாசிக்கப்பட்டபின்பு அட்வகேட் ஜெனரல், காந்திமீது வழக்குத் தொடர்ந்தார். மகாத்மா எழுந்து நின்று, 'இக் குற்றத்திற்குரிய கடுமை யான தண்டனையை விதிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். அதை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்ள ஆயத்தமாயிருக்கிறேன். சர்க்கார் இயற்றிய சட்டத்தின் ரீதியாகப் பார்த்தால் நான் செய்தது குற்றமே. ஆனல், இந்தக் குற்றத்தைப் புரிவது ஒரு குடிமகனின் மிக உயர்ந்த கடமை என்று எனக்குத் தோன்றுகிறது. அதிக ராஜ விசுவாசமும் அரசாங்கத்துக்கு ஒத்துழைப்பும் காட்டிய ஒரு குடிமகனுக இருந்து விட்டு, இப்பொழுது சிறிதும் விட்டுக்கொடுக்காத ராஜத்துரோகமும் ஒத்துழையாமையும் உள்ள குடிமகனுக எப்படி மாறினேன் என்பதை விளக்கிச்சொல்கிறேன்' என்று கூறி, பின்னர் ஆப்பிரிக்காவில் தம் முடைய அனுபவங்களை விவரித்தார். யுத்தத்தில் பிரிட்டிஷ்கட்சியை ஆதரித்தது, இந்தியாவில் படைகளுக்கு ஆட்கள் திரட்டியது முதலிய

வற்றைக் கூறினார். 'இம் மாதிரி சேவைகளின்மூலம் என் நாட்டினருக்குப் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்துக்குள்ளே சரிசமமான அந்தஸ்தை வாங்கிக் கொடுத்துவிடமுடியும் என்று நம்பினேன்' என்று கூறினார்.

பிறகு 1919ஆம் ஆண்டு தமக்கு ஏற்பட்ட அதிர்ச்சிகளைக் கூறினார். 'ரவ்லட் சட்டங்கள், ஜாலியன்வாலாபாக் படுகொலை, கசையடி, துருக்கி நாட்டு காலிப்புக்குச் செய்யப்பட்ட அநீதி முதலியவற்றால் ஏற்பட்ட அதிர்ச்சிகளுக்குப் பிறகும், மான்டேகு செம்ஸ்ஃபோர்டு சீர்திருத்தங்களை அமலுக்குக் கொண்டுவர பிரிட்டிஷாரோடு ஒத்துழைக்க வேண்டுமென்று என் கூட்டாளிகளோடு போராடினேன். ஆனால், பின்பு என் சொந்த விருப்பத்திற்கு முரணாகவே நான் இந்த முடிவுக்கு வந்தேன். பிரிட்டிஷாரின் தொடர்பு இந்தியாவை எப்பொழுதும் இருந்ததைவிட அரசியலிலும் பொருளாதாரத்திலும் மோசமான நிலைக்குக் கொண்டுவந்திருக்கிறது. பஞ்சம் வந்தால் அதைச் சமாளிக்கக்கூடிய நிலையில் இந்தியா இல்லை. பிரிட்டிஷார் வருவதற்கு முன் இந்தியாவிலுள்ள கோடிக்கணக்கான குடிசைகளில் நூல்நூற்றுத் துணி நெய்தார்கள். அவர்களுக்கு விவசாயத்தில் கிடைத்த சிறு வருவாயை நிறைவுபடுத்த அது உதவியது.' பிரிட்டிஷ் ஆலைச் சரக்குகளினால் குடிசைத் தொழில்கள் நலிந்தன. பல ஆங்கிலேய அதிகாரிகள் இந்தியாவிற்குத் தாங்கள் உதவிசெய்வதாக நினைத்தார்கள். 'ஆனால், அரசாங்கம் சூட்சுமமும் திறமையும் வாய்ந்த பயங்கர முறையையும் பலாத்காரத்தையும் ஒருபுறம் பிரயோகித்து, அக்கிரமத்தை ஒழிக்கவோ அல்லது தம்மைத் தற்காத்துக்கொள்ளவோ உள்ள சக்தியையெல்லாம் மறுபுறம் மக்களிடமிருந்து பறித்துவிட்டிருப்பதால் மக்கள் ஆண்மை இழந்து அரசாங்கத்திடம் விசுவாசமுள்ளவர்கள்போல் பாசாங்கு செய்துகொண்டு இருக்கிறார்கள் என்பதை அவ் அதிகாரிகள் அறியவில்லை. ஆகையால், தீயவற்றோடு ஒத்துழையாமையை ஒரு கௌரவமாகக் கருதுகிறேன்' என்றார். ஆகையால், தமக்குரிய கடுமையான தண்டனையைக் கொடுக்கும்படி கேட்டுக் கொண்டார்.

காந்தி உட்கார்ந்ததும் நீதிபதி புரூம்ஃபீல்டு (Broomfield) அவருக்குத் தலைவணங்கிப் பின் தீர்ப்புக் கூறினார். 'எவ்வளவு பெரியவர்களானாலும், சட்டம் குற்றவாளிகளை மதிப்பதில்லை. எனினும், இதுவரை நான் இம் மாதிரி குற்றவாளிகளை விசாரித்ததில்லை. இனி விசாரிக்கப்போவதும் இல்லை என்கிற உண்மையை மறுக்கமுடியாது. லட்சக்கணக்கான உம்முடைய நாட்டுமக்களுக்கு நீர் ஒரு பெரிய தேசபக்தர், தேசத்தலைவர் என்பதை மறுக்கமுடியாது. அரசியலில் உம்மோடு மாறுபட்டவர்களும்கூட நீர் சிறந்த லட்சியவாதி என்றும், உத்தம குணமுடையவர் என்றும் போற்றுகிறார்கள்' என்று கூறினார்.

இவ்வாறு கூறிக்கொண்டே அவர் காந்திக்கு ஆறு வருடச் சிறைத் தண்டனை விதித்தார். கோர்ட்டு கலைந்ததும் அங்கு வந்திருந்தவர்களில் பெரும்பாலோர் காந்தியின் காலடிகளில் விழுந்து வணங்கினார்கள்; கண்ணீர்விட்டார்கள். காந்தி புன்முறுவலுடன் சிறைக்குச் சென்றார்.

பிரிட்டிஷார் காந்தியை இதற்குப் பின்னும் பன்முறைக் கைசெய்து சிறையிலிட்டனர். ஆனால், விசாரணை செய்து சிறைக்கு அனுப்பியது இதுவே கடைசிமுறை.

14. காந்தி உண்ணாவிரதம் இருக்கிறார்

1924ஆம் ஆண்டு ஜனவரி 12ஆம் தேதி காந்தியை ஏரவாடா (Yeravda) சிறையிலிருந்து பூனாவிலுள்ள சாசூன் (Sassoon) ஆஸ்பத்திரிக்கு விரைவாக எடுத்துச்சென்றார்கள். அறுவை சிகிச்சையில் பிரிட்டிஷ் நிபுணரான கர்னல் மேடாக் (Colonel Maddock) அன்று மாலை காந்திக்கு வால்குடல் அழற்சிக்கு அறுவை சிகிச்சை செய்தார். அது வெற்றிகரமாய் முடிந்தது. காந்தி டாக்டருக்கு மிகவும் நன்றி தெரிவித்தார். ஆனால், அறுவைசெய்த இடத்திற் சீழ்பிடித்த கட்டி உண்டாகியது. அதனால், அவர் பூரண குணம் அடைய நாளாகியது. இவ்வாறு வேதனைப் பட்டுக்கொண்டிருக்கும் கைதியை விடுவிப்பதே பெருந்தன்மையும் விவேகமுமான செயல் என்று அரசாங்கம் எண்ணியது. ஆகவே, 1924ஆம் ஆண்டு பிப்ரவரி 5ஆம் தேதி அரசாங்கம் காந்தியை விடுதலை செய்தது. அறுவை சிகிச்சைக்குப் பின் காந்தி மிகவும் பலவீனமாயிருந்தார். என்றாலும் இரண்டு மாதங்களுக்குப்பிறகு அவருடைய ஆங்கில வாரப் பத்திரிகையாகிய 'யங் இந்தியா'வையும் அவருடைய தாய்மொழியாகிய குஜராத்தியில் வெளிவந்த 'நவஜீவன்' (Navajivan) என்ற பத்திரிகையையும் பதிப்பிக்கத் தொடங்கினார்.

காந்தியின் 22 மாதகாலச் சிறைவாசத்தில் இந்தியாவின் அரசியல் நிலை மிகவும் சீர்கேடடைந்துவிட்டது. அதைப்பற்றிச் சுருக்கமாகக் காந்தி பின்வருமாறு எழுதினார். 'பல வழக்கறிஞர்கள் மறுபடியும் கோர்ட்டுகளில் தொழில்புரியத் தொடங்கினர்; சிலர் அவ்வாறு விட்டு வந்ததற்காக வருந்தினார்கள். அரசாங்கப் பள்ளிகளையும் கல்லூரிகளையும் விட்டுவந்த நூற்றுக் கணக்கான மாணவர்கள், ஆண்களும் பெண்களும் அதற்காக வருந்தி மீண்டும் அவைகளில்போய்ப் படிக்கத் தொடங்கினர்.' பிரிட்டிஷ் அரசாங்கத்தின் ஆட்சிக்கு முட்டுக்கட்டை போடவும், இந்தியர்களைப்பற்றி பிரிட்டிஷாருக்குப் பாடம் கற்பிக்கவும், ஜவஹர்லால்தந்தை மோதிலால் நேரு, சி. ஆர். தாஸ், மற்றும் பல தேசத்தலைவர்கள் முனிசிபல், மாகாண சட்டசபைகளில் பங்கெடுக்க

வேண்டுமென்று தீர்மானித்தனர். காந்தி அதை ஆதரிக்கவில்லை. 1924ஆம் ஆண்டு ஏப்ரல் 10ஆம் தேதி 'யங் இந்தியா'வில் 'இந்தச் சர்க்காரிடம் எனக்கு அடியோடு நம்பிக்கை இல்லை' என்று எழுதினார். ஒத்துழையாமை இயக்கத்திற்கு வேண்டிய தன்னலத் தியாகம் பெரும் பாலோரிடம் இல்லை. மக்களுடைய மனத்தளர்ச்சியை அறிந்த காந்தி அரசாங்கத்திற்கு விரோதமான பகிஷ்கரிப்பில் ஈடுபட மக்கள் தகுதி யில்லை என்று தெரிந்துகொண்டார். அதனால் அவர் வெளிப்பார்வைக்கு அரசியலிலிருந்து விலகிக்கொண்டதுபோல் தோன்றினாலும், அடுத்த சில ஆண்டுகள் இந்திய மக்களை உயர் தகுதியுடையவர்களாக்கும் உண்மையான அரசியல் பணியில் ஈடுபட்டார். 'உள்ளத்தால் இந்திய மக்கள் தூய்மை அடைந்த நிமிடமே இந்தியா விடுதலை பெற்ற நாடாகி விடும்; அதற்கு ஒரு வினாடி முன்புகூட விடுதலை பெற்றதாகாது என் பதே என் நம்பிக்கை; ஒரு வினாடிமுன் கூட விடுதலைபெற முடியாது என்று தமது ஆங்கிலேய நண்பர் C. F. ஆண்ட்ரூஸுக்கு எழுதினார்.

தூய்மைப்படுத்துதல் என்பது அறிவிற்கு எட்டாதபொருள் அன்று. இந்து முஸ்லிம் நட்புபோன்ற கண்ணால் காணக்கூடிய விஷயங்கள் தான் உள்ளத் தூய்மையின் வெளிப்பாடாகும்; இந்து முஸ்லிம் ஒற்றுமைபோன்ற முக்கியமானதும் நம்மை அழுத்துவதுமான பிரச் சினை வேறொன்றும் இல்லை என்று எடுத்துக்கூறினார். இந்து முஸ்லிம் ஒற்றுமை ஏற்பட்டால் சுயராஜ்யம் கிடைத்துவிடும் என்று ஜின்னா சொன்னதை ஒப்புக்கொண்டார். ஆனால், இந்த இரண்டு சமூகங்களும் ஒற்றுமையுடன் இருப்பதற்குப் பதிலாகச் சண்டையிட்டுக்கொண் டிருந்தன. 'பலாத்கார அலை எழும்பி வருவதை நான் உணர்கிறேன்' என்று காந்தி சொன்னார்.

1915ஆம் ஆண்டு காந்தி இந்தியாவிற்குத் திரும்பிவந்து சேர்ந்ததும் இந்தியாவின் வருங்காலம் இந்து முஸ்லிம் உறவைப் பொறுத்திருக்கிறது என்று அறிந்துகொண்டார். அவர் அடிக்கடி இந்து முஸ்லிம் ஒற்றுமையைப்பற்றிப் பேசினார். 1924ஆம் வருடம் மே மாதம் 29ஆம் தேதி 'யங்.இந்தியா' இதழ் முழுவதையும் இந்து முஸ்லிம் பிணக்கமும் அதன் காரணங்களும், பரிகாரமும் என்பதுபற்றி 6,000 சொற்கள் கொண்ட தம்முடைய ஒரு கட்டுரைக்கே ஒதுக்கினார். பிணக்கைத் தீர்ப்பதற்கான பரிகாரங்களைச் சில வார்த்தைகளில் சொன்னார். 'இந்து முஸ்லிம் ஒற்றுமை சாத்தியமானது; ஏனென்றால், அது இயற்கையானது; இரு சமூகங்களின் நலன்களுக்கும் அவசிய மானது; மனித சுபாவம் நல்லது என்பதில் எனக்கு நம்பிக்கை உண்டு.' காந்தியின் குணாதிசயம் முழுவதையும் இந்த ஒரு வாக்கியமே எடுத்துக் காட்டுகிறது. காரியமும் நல்லது; மனிதனும் நல்லவன். ஆகையால், அந்த நல்ல முடிவை அடைந்துவிடலாம் என்று காந்தி சொல்லிக்கொண் டிருந்தார். காந்தியை மகாத்மாவாக உருவாக்கிய நம்பிக்கை இந்த

வாக்கியத்தில் காணப்பட்டது. அவருக்கு வெற்றி கிடைக்காவிட்டால் தான் என்ன? தோல்வியிலும்கூட அவரது பெருமை காணப்பட்டது. தோல்வியைவிட வெற்றியில் ஒருவர் அற்பத்தனமாக இருக்கலாம்; ஒருவர் பெரியவரா சிறியவரா என்பது அவர் என்ன செய்ய முயலுகிறார் என்பதைப் பொறுத்திருக்கிறது.

1946ஆம் வருடம் இந்தியா ஜின்னாவின் பாகிஸ்தானாகவும் நேருவின் குடியரசாகவும் பிரிந்துகொண்டிருந்த சமயத்தில் இரு கட்சியினருக்கும் முடிவில்லாத ஏராளமான பணச்செலவு ஏற்படவிருந்தது. அப்பொழுது நான் ஜின்னாவுடன் வாதாடினேன். ஜின்னா 1920-ல் இருந்ததுபோல் 1946-ல் சீர்திருத்தவாதியாக இல்லை. 'உலகத்திற்கு இப்பொழுது அவசியமானது ஒற்றுமை. புதுப் பிரிவினை அல்ல. இந்தியாவிற்கும் ஒற்றுமை அவசியம். பிரிவினை வேண்டாம்' என்றேன்.

'நான் ஒரு சாத்தியக் காரியவாதி. என்ன இருக்கிறதோ அதை வைத்து வேலைசெய்கிறேன்' என்று அவர் பதிலளித்தார். சமயப் பிரிவினைகளினாலும் ஐரோப்பாவில் ஏற்பட்ட குழப்பத்தைப்பற்றி அவருக்கு எடுத்துரைத்தேன்.

'சமூகத்தைப் பிளக்கும் இயல்புள்ள சக்திகள் இயங்கும்போது அவைகளை அவற்றிற்கேற்ப கையாளவேண்டும்' என்று ஜின்னா கூறினார்.

காந்தியும் ஒரு சாத்தியக் காரியவாதிதான். 'நான் ஓர் அனுபவ சாத்தியக் காரியவாதி' என்று அவர் கூறினார். ஆனால், அவர் தீயவற்றைப் பயன்படுத்தாமல் அவற்றை எதிர்த்துநின்றார். காந்தி பகற் கனவு காண்பவரல்ல. மனிதன் நல்லியல்பு உடையவன் என்பது அவருக்குத் தெரியும். ஆனால், அந்த நல்லியல்பை வெளிப்படுத்த வேண்டும்; இல்லாவிடில் யாராவது அவனிடம் உள்ள தீய குணத்தை சுயநலத்திற்குப் பயன்படுத்திக் கொள்வார்கள். மனிதரிடத்திலுள்ள நல்ல குணத்தை வெளிப்படுத்துவதற்காகவே அவர் இந்து முஸ்லிம் ஒற்றுமையை முன்னிட்டு உண்ணாவிரதம் இருந்தார்.

காந்தியின் உண்ணாவிரதங்கள் தம்முடன் சேர்ந்தவர்களோடு பேசாமல் பேசுவதற்கு உண்டாக்கிக்கொண்ட ஒருவழி. 'நான் சொல்வதும் எழுதுவதும் ஆகிய இரண்டில் எதுவுமே இந்த இரு சமூகங்களையும் ஒற்றுமையுடன் வாழச்செய்ய முடியவில்லை. ஆகையால், உண்ணாவிரதம் இருக்கப் போகிறேன்' என்று காந்தி சொன்னார். ஓர் காரியத்தை எடுத்துச் சொல்லவேண்டுமானால், மேல்நாட்டினர் பேசுகின்றனர்; அல்லது ஓர் இடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குப் போய்ப் பிரசாரம் செய்கின்றனர். ஆனால், கீழ்நாட்டினரோ ஓர் இடத்தில்

உட்கார்ந்துகொண்டு தியானம் செய்து துன்பத்தை அனுபவிக்கின்றனர். காந்தி இரு முறைகளையும் கைக்கொண்டார். பேச்சினால் பலன் இல்லையென்று தெரிந்தபிறகு உண்ணாவிரதம் இருந்தார்.

வாழ்நாள் முழுவதும் விஷயங்களை எடுத்துச் சொல்வதற்கு புதுப் புதுவழிகளைக் கண்டுபிடித்தார். சில சமயங்களில் பெரிய பெரிய கூட்டங்களுக்குப் பேசுவதற்காகப் போவார்; ஆனால், ஒன்றும் பேசாமல் சம்மணம்போட்டு உட்கார்ந்திருப்பார்; அசைவார்; புன்முறுவல் செய்வார்; கைகுவித்து வணங்குவார்; கூட்டத்திலுள்ள மக்கள் மண்டியிட்டு அழுவர். அதோடு அவர் நினைத்ததைச் சொல்லியாகிவிட்டது. அவர்களுடைய உள்ளத்தைத் தொட்டுவிட்டார். பேட்டிகளில் காந்தி விஷயங்களைச் சொல்வதோடும் கேட்பதோடும் நிறுத்திக்கொள்ள மாட்டார். மற்றவர்களோடு நெருங்கிய தொடர்பு வைத்துக்கொள்ள வேண்டுமென்பதே அவருடைய முக்கிய நோக்கம். வெறும் வார்த்தைகளைவிட அந்த உறவுதான் மற்றவர்களைப் புரிந்துகொள்வதற்கு அதிகமாக உதவியது.

உண்ணாவிரதம் மனிதருடைய இதயத்தையும் அறிவையும் தொடுவதற்கு ஒரு வழி. 'என்னை நேசித்தவர்களைச் சீர்திருத்துவதற்காக உண்ணாவிரதம் இருந்தேன்' என்று காந்தி ஒரு தடவை சொன்னார். 'ஒரு கொடுங்கோலனுக்கு எதிராக விரதம் இருக்கமுடியாது' என்பதையும் கூறினார். ஏனென்றால், அவனுக்கு அன்பே கிடையாது. அதனால், அவனை அன்பின் ஆயுதமாகிய உண்ணாவிரதத்தால் அணுக முடியாது. பிரிட்டிஷ் அரசாங்கத்திடமிருந்து நன்மைகளைப் பறிப்பதற்காக அவர் ஒருபோதும் உண்ணாவிரதம் இருந்ததில்லை. விரதமெல்லாம் அவருடைய நாட்டு மக்களுக்காக இருந்தவை. ஏனெனில், அவருக்கும் அவருடைய நாட்டு மக்களுக்கும் இடையே அசைக்க முடியாத பாசம் ஒன்று இருந்தது. அந்தப் பாசம் காந்தியின் உண்ணாவிரதத்தின்போது வெளியானது. உண்ணாவிரதம் சுயநலமற்றதாய் இருக்கவேண்டும். 'நான் என்னுடைய தந்தையின் கெட்ட குணத்தை நீக்குவதற்கு உண்ணாவிரதம் இருக்கலாம். ஆனால், அவரிடமிருந்து சொத்தைப் பெறுவதற்கு இருக்கமுடியாது' என்று மகாத்மா ஒரு சமயம் எழுதினார். உண்ணாவிரதம் ஒருவனுடைய நன்மைக்காக அல்ல, பொது நலத்திற்காக. அதனால், பொதுமக்கள் அதையுணர்ந்து அதற்கேற்ப நடந்துகொள்வார்கள்.

காந்தி மறுத்தபோதிலும், அவருடைய விரதங்களில் சில வேளைகளில் பயமுறுத்தல் காணப்பட்டது. உதாரணமாக, அகமதாபாத் மில் சொந்தக்காரர்கள் அவரிடம் பற்று உடையவர்களாயிருந்தாலும், மில்களில் வேலைநிறுத்தம் ஏற்பட்டபோது அவர்செய்த மத்தியஸ்தத்தை விரும்பவில்லை. அப்பொழுது காந்தி உண்ணாவிரதம் இருந்

தார். உடனே அவர்கள் மத்தியஸ்தத்தை ஏற்றுக்கொண்டனர். ஏனென்றால், காந்தி இறந்துவிடுவார் என்று அவர்கள் பயந்தார்கள். அவர் இறந்திருந்தால் அவர்கள்மீதுதான் பழி விழுந்திருக்கும். ஆனால், இந்து முஸ்லிம் ஒற்றுமைக்காக இருந்த விரதத்தில் நிர்ப்பந்தம் ஒன்றுமில்லை. காந்தி இறக்கும் தறுவாயிலிருக்கிறார் என்பதற்காக அலகாபாத்திலுள்ள இந்துவும் ஆக்ராவிலுள்ள முஸ்லிமும் தங்கள் மதங்களுக்கு இடையேயுள்ள சம்பந்தங்களிலோ, உறவிலோ அபிவிருத்தி ஏற்படுத்திக்கொள்ள நிர்ப்பந்தம் ஏற்படாது. ஒருவேளை அவர்களிடையே அபிவிருத்தி ஏற்பட்டால் அது மகாத்மாவின் தியாகத்தால் அவர்களுக்கும் அவருக்கும் இடையே மின் அலைபோன்ற ஒரு பொதுஉணர்ச்சியால் ஏற்படலாம். மக்களை அடைய அவர்கள் இதயங்களைத் தொட காந்தி கண்ட'வழியே உண்ணாவிரதம். தாம் உணர்ந்ததை அவர்கள் உணரவேண்டும்; அந்த உணர்விற்கேற்ப தாம் நடந்து கொண்டபடியே அவர்களும் நடக்கவேண்டும் என்பதே அவர் எண்ணம். ‘ஆகவே, நான் என்னுடைய விருப்பப்படி 21 நாட்கள் உண்ணாவிரதம் இருக்கப்போகிறேன். அது 1924ஆம் ஆண்டு அக்டோபர் 6ஆம் தேதி முடிவடையும். உப்புபோட்டோ, போடாமலோ நீர் அருந்த எனக்குச் சுதந்திரம் உண்டு’ என்று காந்தி அறிவித்தார். உண்ணாவிரதம் இருக்கும்போது வெறும் நீர் அருந்தினால் அவருக்குக் குமட்டும். அதனால், நீரோடு சிறிது உப்பு அல்லது சோடா உப்பு கலந்து அருந்தினார். விரதத்தின்போது அவர் நீர் அருந்தினார்; ஏனென்றால், அவர் சாக விரும்பவில்லை. அவருக்கு உயிரின்மேல் ஆசை. உடலைப் போற்ற விரும்பினார். அவர் உடம்பைப் பிடித்துத் தேய்த்துவிடச் சொன்னார். ஒழுங்காகத் தூங்கினார். பலத்திற்காக உலாவச்சென்றார். உணவு சம்பந்தமான அவருடைய பைத்தியக்காரச்செயல், மேல் நாட்டினருக்கும் பல இந்தியருக்கும்கூட வேடிக்கையாயிருந்தது. அவை ஆத்மீக லட்சியத்தை அடைவதற்காகத் தம்மை ஒரு பூரண ஜீவ வர்க்கக் கருவியாக ஆக்கிக் கொள்வதற்காக ஏற்படுத்திக் கொண்டவை. குண்டுகளால் கொல்லப்படும்வரை அவர் திடகாத்திரமாக இருந்தார். அவர் சுடப்படாமலிருந்தால் இன்னும் பல வருடங்களுக்கு உயிரோடிருந்திருப்பார். நியாயமான கோரிக்கைகளுக்காக உண்ணாவிரதம் அவசியமாகும்போது மறுப்புச் சொல்ல அவருடைய உடலுக்கு அதிகாரம் கிடையாது. உடல் பலவீனமாயிருந்தால் அது கஷ்டப்படலாம் அல்லது இறந்து போகலாம். ஆனால், ‘முடியாது’ என்று சொல்ல அதற்கு அதிகாரம் இல்லை.

காந்தியின் 21 நாள் உண்ணாவிரதத்தின்போது இரு முஸ்லிம் டாக்டர்கள் அவரைக் கவனித்துவந்தனர். C. F. ஆண்ட்ரூஸ் என்னும் கிறிஸ்தவப் பாதிரியார் அவருக்கு நர்ஸாக இருந்தார். ஷவுகத் அலியின் தம்பி முகமது அலியின் வீட்டில் அவர் விரதமிருக்

கும்போது தங்கியிருந்தார். 21 நாட்களும் இந்தியாவின் கவனம் அந்த வீட்டின்மேல் இருந்தது. மோகன்தாஸும் முகமது அலியும் நண்பர்கள் என்று முஸ்லிம்கள் அறிந்துகொண்டனர். காந்தி அவருடைய உயிரை ஒரு முஸ்லிமிடம் ஒப்படைத்திருக்கிருர் என்று இந்துக்கள் தெரிந்துகொண்டனர். இந்து முஸ்லிம் சகோதரத்துவத்தை எடுத்துக் காட்டுவதற்கு இது ஒரு சிறந்த வழியாயிற்று.

உண்ணுவிரதம் தொடங்கிய இரண்டாம் நாள் காந்தி, 'வேற்றுமையில் ஒற்றுமை' என்னும் பொருள்பற்றி ஒரு பக்கத்தில் ஒரு கட்டுரை எழுதினுர். 'இப்பொழுது அவசியமானது ஒரு மதம் அல்ல. பல மதத்தினரும் ஒருவருக்கொருவர் மரியாதையுடனும் சகிப்புத்தன்மையுடனும் நடந்துகொள்வதே மிகவும் அவசியம்' என்று வற்புறுத்தினுர். அதே பொருள்பற்றி ஆருவது நாளும் ஒரு கட்டுரை எழுதினுர். பன்னிரண்டாவது நாள் 112 வார்த்தைகள் அடங்கிய ஒரு கட்டுரையைப் பிரசுரத்திற்காக எழுதினுர். அது அவருக்கு அரசியலிலிருந்த ஆர்வம் எவ்வளவு குறைந்துவிட்டது என்று காட்டியது. 'இந்திய அரசாங்கத்தை நடத்தும் ஆங்கிலேயரின் மனம் மாறவேண்டும் என்றுதான் இதுவரை மன்ருடினேும்; போராடினேும். அந்த மாறுதல் இதுவரை ஏற்படவில்லை. ஆனுலும், இந்தப் போராட்டத்தை இந்து முஸ்லிம் மக்களிடையே மனமாறுதல் ஏற்படுவதற்காகத் தாற்காலிகமாக நடத்த வேண்டியிருக்கிறது. அவர்கள் சுதந்திரம் அடைவதைப்பற்றி யோசிக்குமுன் ஒருவரையொருவர் நேசிக்கவும், ஒருவருடைய மதத்தையும் தப்பபிப்பிராயங்களையும் மூடபக்தியையும் சகித்துக்கொள்ளவும், ஒருவரை யொருவர் நம்பவும் தைரியமுள்ளவர்களாக இருக்கவேண்டும். இதற்குத் தங்களிடமே தங்களுக்கு நம்பிக்கை வேண்டும். தங்களைத் தாங்களே நம்புவது கடவுளிடம் வைக்கும் நம்பிக்கைக்குச் சமம். நமக்கு அத்தகைய நம்பிக்கை உண்டாகுமாஞல் ஒருவரையொருவர் பார்த்துப் பயப்படுதல் நின்றுவிடும். பயத்தை நம்பிக்கையால் எதிர்ப்பது காந்தியின் குணம். இருபதாம் நாள் அவர் ஒரு பிரார்த்தனையைச் சொல்லி, எழுதச் சொன்ருர். 'இந்த இருபது நாட்களும் அருள் நிறைந்த, பாக்கியமான, அமைதியான நாட்கள்' என்று அதில் கண்டிருந்தது.

அன்று மாலை ஆச்சரியப்படும் விதம் மகாத்மா காந்தி மலர்ச்சியுடனும் மகிழ்ச்சியுடனும் இருந்தார். அடுத்த நாள் காலை நாலு மணிக்குப் பிரார்த்தனைக்கு வரும்படி காந்தி தம்மை அழைத்ததாகவும், அவர் காந்தியை நன்ருகத் தூங்கினுரா என்று விசாரித்ததாகவும், அதற்கு காந்தி நன்ருகத் தூங்கினதாகச் சொன்னதாகவும், முந்தின நாளைவிட அவர்குரல் வலுவாக இருந்ததைக் கண்டு மகிழ்ச்சி அடைந்ததாகவும் ஆண்ட்ரூஸ் எழுதுகிருர்.

இதற்கு ஆறு மணி நேரம் கழித்து, அதாவது உண்ணுவிரதத்தின் இறுதி நாளன்று காலை 10 மணிக்கு காந்தி ஆண்ட்ரூஸிடம், 'எனக்குப் பிரியமான அந்தக் கிறிஸ்தவத் துதிப்பாடல் உமக்கு நினைவிருக்கிறதா?' என்று கேட்டார்.

'ஆம், அதை நான் இப்பொழுது பாடட்டுமா?' 'இப்பொழுது வேண்டாம். நான் என் விரதத்தை முடிக்கும்போது, மதங்களின் ஒற்றுமையை வெளிப்படுத்தும் முறையில் ஒரு சிறிய சடங்கு நடத்தலாம் என்று யோசித்திருக்கிறேன். குரானின் முதல் வசனங்களை இமாம் சாஹிப் ஓதவேண்டும். அப்புறம் நீர் அந்தப் பாட்டைப் பாடலாம். நான் எந்தப் பாட்டைக்குறிப்பிடுகிறேன் என்று தெரிகிறதா?

" அதிசயமான சிலுவை இதை
அடியேன் தரிசனம் செய்கையிலே,

என்று தொடங்கி,

அன்பே பெரிய அற்புதம்
அன்பே பெரிய தெய்வீகம்
அதுவே என்றன் ஆவி உயிர்
அனைத்தும் கொள்ளை கொள்வதே"

என்று முடியும் பாடல். இறுதியில் ஓர் இந்துப் பாடலும் பாடவேண்டும்' என்று காந்தி கூறினார்.

உச்சிவேளையில் காந்தி மெல்லிய குரலில் அவருடன் இருந்த அவர் நண்பர்களிடம், 'இந்து முஸ்லிம் சகோதரத்துவத்திற்காக அவசியமானால் உங்கள் உயிரையும் இழக்கச் சித்தமாயிருக்க வேண்டும்' என்று கூறினார். பின் துதிப்பாடல்கள் பாடப்பட்டன. காந்தி தமது மூன்று வார விரதத்தை முடிப்பதற்கு அறிகுறியாக சிறிது ஆரஞ்சுப் பழச்சாறு பருகினார்.

அவருடைய கடும் விரதத்தினால் அதிகப் பலன் இருந்ததாகத் தெரியவில்லை. காந்தியின் அன்பினால் கருங்கல் பாறைபோன்ற இந்து முஸ்லிம் பகைமையை உடைக்க முடியவில்லை. மதத்தைப் பாதுகாக்கிறோம் என்ற தப்பான அபிப்பிராயந்தான் அதற்குக் காரணம் என்று காந்தி கூறினார். இந்துமத சம்பந்தமான ஊர்வலங்கள், முஸ்லிம்களின் தொழுகை நேரத்தில் பள்ளிவாசல்கள் வழியாகச் செல்லும். அதனால், முஸ்லிம்கள் கோபமடைந்தனர். இவ்வாறு நடத்துவது தங்கள் மதத்திற்கு அவசியம் என்று இந்துக்கள் நினைத்ததும் தவறு; முஸ்லிம்கள் அதை அடி உதையின்மூலம் திருப்பிக்கொடுத்ததும் தவறு. இந்துக்கள் பசுக்களைத் தெய்வமாகப் போற்றினர். முஸ்லிம்கள் அதன் மாமிசத்தை உண்டனர். பசுவைக் காப்பது, கடவுளின் படைப்பிலுள்ள

எல்லா வாயில்லாப் பிராணிகளையும் பாதுகாப்பதற்கு அடையாளம்; இது இந்துமதத்தின் முக்கிய அம்சம் என்பதை காந்தி உணர்ந்தாலும், அதனால் இது எப்படி முஸ்லிம்களுக்கு அவ்வளவு வெறுப்பை ஏற்படுத்தியது என்பது ஒருபொழுதும் அவருக்கு விளங்கவே இல்லை. 'ஆங்கிலேயருக்காகத் தினசரி நடைபெறும் பசுவதையைப்பற்றி நாம் ஒன்றும் சொல்வதில்லை. ஆனால், ஒரு முஸ்லிம் பசுவைக் கொல்லும்போது நம்கோபம் இரத்தக்கனலாகிவிடுகிறது.' 'இருப்பினும், இந்துக்கள் பசுக்களை விற்பதினால்தான் அவைகள் கசாப்புக்கடைக்காரர்களால் கொல்லப்படுகின்றன. இந்தியாவில் நடத்தப்படுவதுபோல உலகத்தின் வேறு எந்தப் பாகத்திலும் ஆடு மாடுகள் இவ்வளவு மோசமாக நடத்தப்படுவதில்லை. அவைகளில் பெரும்பாலானவற்றை அரைப் பட்டினிபோடும் நிலைமை நமக்கு மிக வெட்கக்கேடானது' என்று காந்தி கூறினார்.

பள்ளி வாசல்களுக்குமுன் இந்துக்கள் மேளம் அடிப்பதும் முஸ்லிம்கள் செய்யும் பசுக்கொலையும் இந்து முஸ்லிம் கலகங்களில் முடிந்தன. இவற்றைத்தவிர பெண்களையும் பிள்ளைகளையும் வலுக்கட்டாயமாகத் தூக்கிச்செல்வதும், ஒரு மதத்திலுள்ள ஆண்கள், மற்றொரு மதத்திலுள்ள பெண்களையும் பிள்ளைகளையும் மதம் மாறச்செய்வதும் கலகத்திற்குக் காரணமாயின; அல்லது 1938ஆம் ஆண்டில் பம்பாயில் நடந்ததுபோல் வெறும்வதந்தியும் காரணமாயிற்று. ஒரு தோட்டத்தில் குடித்துவிட்டுச் சீட்டாடிக்கொண்டிருந்த மூன்று இந்துக்களும் ஒரு முஸ்லிமும் சண்டையிட்டுக் கூச்சலிட்டனர். சண்டையைப்பற்றிய கதைகள் பரவி, தெருவில் உண்மையாகவே சண்டைகள் நடந்தன. அச் சண்டையில் 14 பேர் மாண்டனர். 98 பேர் காயமுற்றனர். 2,488 பேர் கைதுசெய்யப்பட்டனர். இவ்விதமான சண்டைகள் சமுதாய, பொருளாதார அடிப்படையிலிருந்தும் எழுந்தன. அவைகளைப்பற்றி மகாத்மா அதிகமாக வாதிக்கவில்லை. அப்படி வாதித்தபோதும் அதன் முக்கியத்துவத்தைக் குறைத்தே மதிப்பிட்டார். '7,00,000 கிராமங்களில் இந்துக்களும் முஸ்லிம்களும் அந்நியோந்நியமாக அடுத்தடுத்து வசித்துவருகிறார்கள். இந்திய சைன்யத்தில் இந்துக்கள், முஸ்லிம்கள், சீக்கியர்கள், கிறிஸ்தவர்கள் எல்லோரும் ஒரே இடத்தில் சாப்பிடுகிறார்கள்; உறங்குகிறார்கள். எந்தவிதமான தகராறும் இல்லாமல் ஒருவர் பக்கத்தில் மற்றவர் நின்று வேறுபாடின்றிப் போர்செய்கிறார்கள். இந்த உண்மைகளிலிருந்து இந்து முஸ்லிம் தகராறுகளுக்கு மூலகாரணம் என்ன என்று தெரிகிறது. இந்து முஸ்லிம் வேற்றுமை, நகர்ப்புறங்களில்மட்டும் காணப்படும் 20ஆம் நூற்றாண்டு வியாதி; இது மனிதனால் உண்டாக்கப்பட்டது; பதவிமோகம் பிடித்த சில அரசியல்வாதிகளைத் தொற்றிக்கொண்ட மத்திய வகுப்பினரிடையே காணப்படும் நோய்' என்று கூறினார்.

இஸ்லாமிய விதிப்படி, முஸ்லிம் ஆஸ்தியில் பெரும்பகுதியை முஸ்லிம்கள் நிலத்தில் செலவிட்டனர். ஆகவே கைத்தொழிலும் வியாபாரமும் இந்துக்களிடமும் பார்ஸிகளிடமும் இருந்தன. இந்துக்களும் பார்ஸிகளும் தங்கள் உதவிக்குத் தங்கள் மதத்தினரையே அமர்த்திக் கொண்டனர். ஆகையால், முஸ்லிம்களில் ‘மத்தியதர’ வகுப்பினர் பின்னர்தான் தோன்றினர். இங்ஙனம் இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் முஸ்லிம் மத்திய வகுப்பினர் தோன்றியபோது, நல்லபடிப்பு, நல்ல தொடர்புகள் முதலிய அனுகூலங்களையுடைய இந்துக்களோடும் பார்ஸிகளோடும் அவர்கள் போட்டியிடமுடியவில்லை. அதுபோலவே அரசாங்க வேலைகளிலும் முஸ்லிம் வாலிபர்களுக்குக் கடும்போட்டி இருந்தது. பொருளாதாரத்துறையில் இந்தியா மிகவும் பின்தங்கிய நாடாக இருந்தபடியால், அரசாங்க ஊழியம் செய்வது பெரிய தொழிலாக இருந்தது. ஆகவே, முஸ்லிம்களுடைய தகுதிகளைப் பார்க்காது, அரசாங்க வேலைகளில் ஒரு குறிப்பிட்ட சதவீதம் அவர்களுக்கு ஒதுக்கப்படவேண்டுமென்று முஸ்லிம்கள் வற்புறுத்தினர். இந்த வேண்டுகோளை முஸ்லிம் தலைவர்கள் ஆதரித்தனர். அதை ஏற்றுக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் அரசாங்கத்துக்கு ஏற்பட்டதாலும் அதை ஏற்றுக்கொள்வது நியாயம் என்று பிரிட்டிஷார் எண்ணியதாலும் அக்கோரிக்கைக்கு அவர்கள் இணங்கினார்கள்.

இந்தியாவின் ஜனத்தொகையில் கால்பங்கான முஸ்லிம்களும் முக்கால் பங்கான இந்துக்களும் நெருங்கிய உறவினர்கள். இந்தியாவிலுள்ள பல முஸ்லிம்கள் மதம் மாற்றப்பட்டவர்கள். எட்டாவது நூற்றாண்டில் இந்தியாவுக்கு வந்த அரேபியர், ஆப்கானியர், பாரசீகர் முதலியவர்கள் இந்துக்களை மதம்மாற்றினர். முஸ்லிம்களில் 75 சதவீதம் மதம் மாற்றப்பட்ட இந்துக்கள் என்று ஜின்னா கூறினார். அதையே நேரு 95 சதவீதம் என்றார். இந்தியாவின் சில பாகங்களில் முஸ்லிம்கள் இந்துக் கோவில்களில் பிரார்த்தனை செய்கிறார்கள். பல பகுதிகளில் இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் தோற்றம், உடை, மொழி, பழக்க வழக்கம் இவற்றில் வேறுபாடு தெரிவதில்லை. முஸ்லிம்களிலும் இந்துக்களைப்போல் சாதி பாகுபாடுகள் உண்டு. இந்துக்களின், முஸ்லிம்களின் பிரதான மொழிகளான இந்தியும் உருதுவும் வெவ்வேறு லிபிகளில் எழுதப்பட்டாலும் இந்தியில் அதிக சமஸ்கிருத சொற்களும் உருதுவில் அதிக பாரசீக சொற்களும் கலந்திருந்தாலும் இரண்டு மொழிகளும் பெரும்பாலும் ஒன்றுபோல் இருக்கின்றன. மேலும், இந்தியாவின் பெரும்பகுதிகளில் முஸ்லிம்களுக்கும் இந்துக்களுக்கும் உருதும் தெரியாது; இந்தியும் தெரியாது. அதற்குப்பதிலாக ஒரு பொதுமொழிதான் தெரியும். உதாரணமாக வங்காளத்திலுள்ளவர்கள் வங்காளி பாஷை பேசுவார்கள். கத்தியவாரிலுள்ள இந்துபரம்பரையைச் சேர்ந்த ஜின்னா காந்தியைப்போன்றே தம்தந்தை வீட்டில் குஜராத்தியே பேசுவார்.

இந்துக்களும் முஸ்லிம்களும் இனத்திலுைம் மொழியினுலும் ஒரே வகுப்பைச் சேர்ந்தவர்களாயினும், அவர்களுடைய மதவேற்றுமை அவர்களைப் பிரித்தது; இந்தியாவில் பொருளாதாரத்துறையில் வாய்ப்புகள் மிகக் குறைவாக இருந்தமையால், இருவகுப்பினருக்கும் உள்ள வேற்றுமை மேலும் விரிந்தது. இந்துக்கள் தனித்திருக்க விரும்பினர். பழையகாலம் முதல் முஸ்லிம்களைவிடத் தாங்கள் உயர்ந்தவர்கள் என்ற அற்ப மனப்பான்மையோடு அவர்களோடு தொடர்பு வைத்துக்கொள்ளவோ, உண்ணவோ மறுத்தனர். வைதீக இந்து, முஸ்லிம் வீட்டிற்குச் செல்வான்; ஆனால், அங்குத் தண்ணீர் குடிக்கவோ, ஆகாரம் உண்ணவோமாட்டான். இந்தக் கசப்பை மனத்தில் வைத்துக்கொண்டு முஸ்லிம் அரசியல்வாதிகள் மற்ற முஸ்லிம்களிடம் சுதந்திரம் என்றால் பெரும்பான்மையான இந்துக்களுடைய கொடுங்கோல் ஆட்சிதான் இருக்கும்; அரசாங்கத்திலும் வியாபாரத்திலும் ஒரு வேலையும் கிடைக்காது; ஒருவேளை பலவந்தப்படுத்தி இந்துக்களாகவும் செய்யலாம் என்றனர். 1917ஆம் ஆண்டில் ஜின்ணு இம் மாதிரி பயமுறுத்தல்களை உண்மையல்ல என்று கூறினுர். 'பயப்படாதீர்கள்; சுய ஆட்சிக்கு அவசியமான ஒற்றுமை, ஒத்துழைப்பு முதலியவைகளிலிருந்து உங்களைப் பிரிப்பதற்காகச் செய்யும் விஷமத்தனம் இது' என்ருர். ஆனால், விஷமத்தனம் என்று தாம் முன்கூறியதையே பின்பு உண்மைதான் என்று முஸ்லிம்களை நம்பச்செய்து, இந்துக்களையும் முஸ்லிம்களையும் பிரிப்பதற்கு அந்தப் பிரசாரத்தைப் பயன்படுத்திக்கொண்டார் ஜின்ணு.

இந்தியாவில் தங்கள்நிலை மோசமாக இருந்ததை உணர்ந்த பிரிட்டிஷாரும் இந்து முஸ்லிம் துவேஷத்தைத் தங்கள் நன்மைக்குப் பயன்படுத்திக்கொண்டனர். இந்தியாவைப் பிரிட்டன் பிரித்து ஆளவில்லை. இந்தியர் தாமாகவே பிளவுபட்டு இருந்தார்கள். எளிதாக இந்தியாவை ஆளுவதற்காக இருந்த பிளவை பிரிட்டிஷார் அதிகப்படுத்தினுர்கள்.

இந்து முஸ்லிம் ஒற்றுமைக்காக உண்ணுவிரதம் இருந்தது பயனில்லாது போகவும், காந்தி குடியேற்ற நாட்டு அந்தஸ்தும் தேசிய விடுதலையும் அடைய அவர் நினைத்ததைவிட அதிக காலம் தாமதமாகும் என்று உணர்ந்தார். 1924 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் முதல் உலக யுத்தத்தின் அமளியெல்லாம் ஓய்ந்தது. எப்பொழுதும்போல் எல்லாம் சாதாரணமாக நடந்துவந்தன. டாஸ் திட்டப்படி (Dawes Plan) ஜெர்மனியின் பொருளாதாரநிலையைக் காப்பாற்ற ஏற்பாடு செய்யப்பட்டது. பெரிய ஐரோப்பிய நாடுகள் ரஷ்யாவின் அரசியல் அந்தஸ்தை அங்கீகரித்தனர். தென் சீனுவில் ஆட்சிசெய்த சியாங்கே ஷேக் மாஸ்கோவோடு ஓர் உடன்படிக்கை செய்துகொண்டார். இதைத்தவிர, மற்ற எல்லா நாடுகளிலும் 'போல்ஷியிஸம்' க்ஷீண நிலையை அடைந்திருந்தது. அமெரிக்காவில் கூலிட்ஜ் (Coolidge) என்பவர் அப்போது ஜனுதிபதியாக இருந்தார். உலகத்தில் எல்லாம்

ஒழுங்காகத்தானிருக்கிறது என்று அமெரிக்கர் அலட்சியமாக இருந்தனர். 1919-லிருந்து 1923 வரை அயர்லாந்து நாட்டு 'சின் ஃபீன்' (Irish Sinn Fein) கட்சியின் கலவரங்களாலும் துருக்கியில் நடந்த அரசியல் மாறுதல்களாலும் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திற்கு ஆபத்து ஏற்படுவதாயிருந்ததாயினும், எல்லாம் இறுதியில் சமாதானமாக முடிந்து அமைதி நிலவியது. இந்தியாவில் அமிர்தசரஸ் சம்பவத்திற்குப்பிறகு ஏற்பட்ட தேசிய உணர்ச்சி வேகம் அடங்கிவிட்டது. சந்தேகங்களும், மனச்சோர்வும், காந்தியின் சாத்வீகக் கொள்கையும் சண்டைசெய்யத் துடித்துக்கொண்டிருந்த உற்சாகத்தைக் குறைத்தன. பிரிட்டிஷாரைப் பகிரங்கமாக எதிர்ப்பதற்கு இது சமயமல்ல. சுதந்திரத்திற்குத் தகுதியுடையவர்களாக்க மக்களைச் சீர்திருத்தும் முறையில் முழு கவனத்தையும் காந்தி செலுத்தினர். மக்களைச் சீர்திருத்த விடுதலைக்குத் தகுதியுடையவர்களாக்கும், பல ஆண்டுகள் செய்யவேண்டிய பணிக்குத் தம்மை அர்ப்பணித்தார் மகாத்மா.

15. மாஸ்கோவுக்கு மறுமொழி

1924ஆம் ஆண்டு முதல் 1929ஆம் ஆண்டு வரை இந்தியாவில் எந்த விதமான அரசியல் நடவடிக்கைகளும் இல்லை. ஆகையால் 1940 ஆம் ஆண்டு முதல் 1949ஆம் ஆண்டு வரை நடந்த சம்பவங்களையும் உலகப் பத்திரிகைகளில் அவைகளைப்பற்றி எழுதினதைப்பற்றியும் அவ் வாண்டுகளில் முன்கூட்டியே மகாத்மா காந்தி அறிந்திருக்க முடியாது. ஏனெனில், பின்நடந்த அரசியல் சம்பவங்களைப்பற்றிய அறிகுறிகள் அப்போது ஒன்றும் காணப்படவில்லை. காந்தி விடுதலை அடைய இருட்டில் வழி தேடிக்கொண்டிருந்தார். இருந்தபோதிலும், இந்தியாவில் தேசிய அரசியல்சோர்வு ஏற்பட்ட அந்தக் காலத்தில் அவர் தடவிச்சென்ற அந்தப் பாதையே தேசிய விடுதலைக்கு வழி காட்டியது. எந்தச் சமயத்திலும் காந்தி அதே வழியைத்தான் பின்பற்றி இருந்திருப்பார். ஏனென்றால், அவர் 1920ஆம் ஆண்டில் பின்பற்றிய முறை சரியானது. முடிவு எதுவானுலும் நல்ல முறையைக் கையாளுவதே சிறந்தது. ஏனெனில், நல்ல முறையே நல்ல முடிவுக்கு ஒப்பாகும் என்று காந்தி திண்ணமாக நம்பினர். சுதந்திரம்பெற வழி இதுதான் என்று தெரியாவிட்டாலும்கூட நல்ல வழியில் நடப்பது நல்ல முடிவைத்தரும் என்ற நம்பிக்கையானது அதே வழியிற் செல்ல அவரை உந்திற்று. எந்தத் திசையில் போகிறோம் என்பது தெரியாவிட்டாலும் இதுதான் சரியானவழி என்று நிச்சயமாக உணர்ந்தார். சரியான முறையை அனுஷ்டித்தால் ஒரு நாளும் நஷ்டம் வராது என்று காந்தி உணர்ந்தார். அதனுல் இரட்டை லாபமும் பெறலாம். நல்ல முறையைக் கைக்கொண்டதால் ஏற்பட்ட நன்மை ஒன்று; முடிவை நிச்சயமாக அடைவது மற்றென்று. அதனுல் அவர் பொறுமையாக

இருந்தார். தாம் விடுதலைப் பாதையில் முன்னேறிப் போவதுபோல் வெளிப்படையாகத் தெரியாவிட்டாலும்கூட, ஏதோ நல்ல பாதையில் முன்னேறிக்கொண்டிருந்தார்.

திலகரும் கோகலேயும் மறைந்துவிட்டனர். ஆகையால், காந்தியை உச்சநிலைக்கு மக்கள் உயர்த்தினர். சபர்மதி ஆசிரமத்திலுள்ள அவருடைய குடிசை இந்தியாவின் தேசிய அரசியல் தலைநகரானது. அவரது சுற்றுப்பயணங்களின்போதும் மக்கள்கூட்டம் அவரைச் சூழ்ந்துகொண்டது. 'நான் குளித்துக்கொண்டிருக்கும்போதுகூட மக்கள் என்னைத் தனியே விடமாட்டார்கள்' என்று காந்தி எழுதினார். ஆண்களும், பெண்களும், குழந்தைகளும் குனிந்து, அவர் பாதத்தைத் தொட்டு வணக்கம் செலுத்திவந்ததால் இரவில் அவருடைய பாதங்களிலும் கெண்டைக்கால்களின் முன்புறத்திலும் சிறு காயங்கள் காணப்பட்டன. மக்கள் அவரைக் கடவுளாகக் கருதத்தொடங்கினர். கோண்டு வகுப்பினர் அவரை வழிபட்டுக்கொண்டிருந்தனர். 'இம் மாதிரி விக்கிரக ஆராதனை கூடாது' என்று வன்மையாகக் கண்டித்துத் தம்முடைய பீதியையும் தெரிவித்தார்.

பல இந்தியர் காந்தியைப் புத்தர், கிருஷ்ணன்போல கடவுளின் அவதாரமாகக் கருதினர். கடவுள் தாற்காலிகமாகப் பூலோகத்திற்கு வந்திருக்கிறார் என்பது மக்களுடைய எண்ணம். அவரைப் பார்ப்பதினாலும் தொடுவதினாலும் புண்ணியம் கிடைக்கும் என்று மக்கள் மலைகளிலிருந்தும் சமவெளிகளிலிருந்தும் வெகுதூரத்திலுள்ள கிராமங்களிலிருந்தும் வந்தனர். வங்காளத்திலுள்ள டாக்கா என்னும் நகரத்திலிருந்து வயதானவன் ஒருவன் காந்தியிடம் வந்து தீராத பக்கவாதத்திலிருந்து காந்தி அவனைக் குணமாக்கியதாகச் சொன்னான். அவன் கழுத்தில் காந்தியின் படமொன்றை அணிந்திருந்தான். 'தயவுசெய்து அந்தப் படத்தை உன் கழுத்திலிருந்து எடு' என்று காந்தி அவனைக் கோபித்தார். 'உன்னை நான் சுகமாக்கவில்லை. கடவுள் சுகமாக்கினார்' என்றார்.

புத்திக்கூர்மையுள்ளவர்களும் படித்தறிந்தவர்களும்கூட இத் தொற்றுநோய்க்கு ஆளானார்கள். ஒரு நாள் ஒரு வழக்கறிஞர் காந்தியோடு புகைவண்டியில் பிரயாணம் செய்துகொண்டிருக்கும் போது, அந்த வழக்கறிஞர் வண்டியைவிட்டு வெளியே முகங்குப்புற விழுந்துவிட்டார். அவரைத் தூக்கி வண்டிக்குள் கொண்டுவந்தபோது, காயம் ஒன்றும் இல்லை என்று தெரியவந்தது. மகாத்மாவோடு பிரயாணம் செய்ததினால்தான் தமக்குக் காயம் ஏற்படவில்லை என்று வழக்கறிஞர் கருதினார். 'அப்படியானால் நீர் கீழே விழுந்திருக்கவே கூடாது' என்று சொல்லி காந்தி நகைத்தார்.

தம்மைப் பிறர் வீணாகப் புகழ்ந்ததால் காந்தி வருத்தமடைந்து எழுதினார். 'நான் மகாத்மா இல்லை. என்னுடைய மகாத்மா பட்டத்

தினுல் ஒரு பயனும் இல்லை.' இந்தியர் தம்முடைய பாதங்களில் விழுந்து வணங்குவதைவிட்டுத் தம் வழியைப் பின்பற்றி நடக்கும்படி கேட்டுக்கொண்டார். அவருக்கு உதவி வேண்டியிருந்தது. ஆர்ப்பரிப்பும் வழிபாடும் அவசியமில்லை. குடிசைத்தொழில்களைச் சிறப்பாக நூல்நூற்றலை நிர்மாணிப்பதற்கு அவருக்கு உதவி தேவை. 'எனக்கு அரசியல் உலகத்தில் இராட்டினத்தைத் தவிர முக்கியமானது வேறென்றுமில்லை' என்ருர்.

1946ஆம் ஆண்டு நான் காந்தியோடு தங்கியிருந்தேன். ஒரு நாள் அவர் நூற்றுக்கொண்டிருந்தபோது, அவருடைய அறைக்குள் நுழைந்துவிட்டேன். அப்பொழுது அவர் நூற்பதில் தமக்கிருந்த ஆர்வத்தை விளக்கிச்சொன்னுர். 'யாருடைய கட்டளைக்கும் பணிவதற்காக அல்லாமல் தாங்களாகவே கொள்கையின் சிறப்பை உணர்ந்து முப்பது கோடி மக்களும் ஒரு நாளைக்கு ஒரு தடவை நூற்ருல் சுதந்திரம் அடைவதற்குரிய ஒற்றுமை உணர்ச்சி கிடைக்கும்' என்ருர். என்னுடன் பேசிக்கொண்டிருந்த ஒருமணி நேரமும் அவர் நூற்பதை நிறுத்திவிட்டபடியால் அவர் சுதந்திரம் அடைவதை ஒரு மணி நேரம் தாமதப்படுத்திவிட்டார் என்று வேடிக்கையாகச் சொன்னேன். 'ஆம், நீர் சுயராஜ்யத்தை ஆறு கெஜத்திற்கு அப்பால் தள்ளிவைத்துவிட்டீர்' என்று சிரித்துக்கொண்டு பதிலளித்தார்.

காந்தியின் அரைவேட்டி, மேலங்கி, துண்டுகள், படுக்கை விரிப்புகள் எல்லாம் கையால் நெய்யப்பட்டவை. வரவர பல இந்தியர் கதர் உடுத்தத்தொடங்கினர். 'எப்பொழுதும் வெறுப்பூட்டுகிற ஒரே மாதிரியான வெள்ளைத்துணி' என்று சிலர் கதர் ஆடையைப்பற்றி நகையாடினர். 'எங்கள் விடுதலைச்சின்ன உடை இது' என்று ஜவஹர்லால் பதில் கூறினுர்.

காந்திக்கு இராட்டினத்தில் அதிக நம்பிக்கை இருந்ததினுல் காங்கிரஸ் கட்சிக் கொடியின் நடுவிலும் அதைப் பொறிக்கச்சொன்னுர். அதுவே பின்னுல் சுதந்திர இந்தியாவின் கொடியானது. பட்டணங்களிலுள்ள அரசியல் மனப்பான்மையுள்ளவர்களுடைய படிப்பிற்கு, காந்தி அளித்த சாதனம் இது; படிப்பில்லாத ஏழை விவசாயிகளைப் பற்றி அவர்கள் உணரச்செய்தார். தலைவர் வேறு, மக்கள் வேறு என்ற வேற்றுமையை ஒழிக்க எடுத்துக்கொண்ட துணிகரமான செயலே இது. ஏனெனில், இந்தியாவின் பொன், வெள்ளி, பட்டு, நகைகள் இவற்ருல் அலங்கரிக்கப்பட்ட யானைகளைக்கொண்ட அரண்மனைகள், அல்லது தற்கால நாகரிகத்தின் சின்னமாகிய இராட்சசப்பொருள் தொழிற்சாலைகள், குடிசைகளிலுள்ள தீயினும் தீய வறுமையை வெளிப் பார்வைக்குத் தெரியாமல் அடியோடு மறைத்துவிடும் மக்களைத் தலைவர்கள் உணரமாட்டார்கள் என்பது அவருக்குத் தெரியும்.

தாழ்ந்தோருக்கு உதவிபுரிய முதலில் நாம் அவர்களைப் புரிந்து கொள்ளவேண்டும். அங்ஙனம் புரிந்துகொள்ள அவர்களோடு நாம் சிறிதுகாலம் கூடிவாழவேண்டும். அவர்கள் செய்கிற வேலையையும் நாம் செய்யவேண்டும் என்று காந்தி எடுத்துக்கூறினர். 'நான் கீழிருந்து மேல்நோக்கி வேலைசெய்ய ஆசைப்படுகிறேன்' என்று காந்தி பகர்ந்தார். அவர் படித்தவர்களை எச்சரித்தார். 'படித்தவர்கள் தமது கதர்க்கொள்கையை ஆதரிக்காவிட்டால், சாதாரண மக்களுக்கும் படித்தவர்களுக்கும் இடையில் வெளிப்படையாகவுள்ள உண்மையான பந்தம் அறுந்துவிடும்' என்று எச்சரித்தார். இவ்வாறு நூல் நூற்றல் ஏழைகளுடன் தொடர்புவைத்துக்கொள்ள ஒரு மார்க்கமாகும். அதுவே அன்பு கலந்த பணியுமாகும்.

நூற்கும் இயக்கத்தை ஒழுங்குபடுத்துவதும் அதற்குப் பணவசதி செய்வதும் காந்தியின் சுற்றுப்பயணத்தின் நோக்கமாகும். ரயில் வண்டியில் அவர் சாதாரணமாக மூன்ருவது வகுப்பில் பிரயாணம் செய்தார். வைஸ்ராய், சேனுதிபதி, மகாராஜாக்கள் முதலியோர் மூன்ருவது வகுப்பில் பிரயாணம் செய்தால், அவ் வகுப்பின் சுகாதார வசதிகள் விருத்தியடையும் என்று அவர் யோசனை கூறினர். அவருடைய வாழ்நாள் முழுவதும் நிதிதிரட்டுவதில் அளவற்ற ஆர்வம் காட்டினர். அப்படித் திரட்டப்பட்ட நிதி, குடியானவர்களுக்காக இராட்டினம் வாங்குவதிலும், நகரங்களில் கிராமத்துக் கதர்த்துணிகளை விற்பதற்குக் கடைகள் திறப்பதிலும், நூற்கவும் நெய்யவும் ஆசிரியர்களைப் பழக்குவதிலும் செலவிடப்பட்டது. அவர் பிரயாணஞ்செய்யும் போது, ரயில் நிற்கும் இடங்களிலெல்லாம் ஜன்னலுக்கு வெளியே கையை நீட்டுவார். உடனே மக்கள் உண்டிகளையும் நாணயங்களையும் அவர் உள்ளங்கையில் வைப்பார்கள். கூட்டங்களின் நடுவில் கதரை விற்றுக்கொண்டு திரிவார். தங்கமோ, நகைகளோ கொடுத்தாலும் ஏற்றுக்கொள்வார். 'என்னுடைய காதலிகளின் சேனை தினசரி அதிகரித்துக்கொண்டு வருகிறது' என்று பெருமைப்பட்டுக்கொண்டார். 'கடைசியாகச் சேர்ந்தது பர்துவான் சமஸ்தானத்தைச் சேர்ந்த ராணி பாலா; அருமையான குழந்தை; பத்து வயதிருக்கலாம். வயதை நான் விசாரிக்கவில்லை. வழக்கம்போல் அவளுடன் விளையாடிக் கொண்டிருந்தேன். அப்பொழுது அவளுடைய ஆறு கனத்த தங்க வளையல்களையும் திருட்டுத்தனமாகப் பார்த்துக்கொண்டிருந்தேன். அவளுடைய மெல்லிய மணிக்கட்டுகள் அவற்றின் பாரத்தைத் தாங்க மாட்டா என்று நயமாக எடுத்துக்கூறினேன். உடனே அவள் கை வளையல்களைக் கழற்றி என்னிடம் கொடுத்துவிட்டாள்' என்ருர். அன்று மாலை நடந்த பெண்கள் கூட்டத்தில் அவருடைய வெற்றியைப் பற்றிக் கூறியபோது, 'ஆறு ஜோடி வளையல்களும் இரண்டு மூன்று ஜோடிக் கம்மல்களும் கேட்காமலே கிடைத்தன. அவைகள் கதருக்காக

உபயோகிக்கப்படும் என்று சொல்லத் தேவை இல்லை’. அவரிடம் அந்த நகைகளைக் கொடுத்ததினுல் அவர்களுடைய அழகு அதிகரிக்கும் என்று விளக்கிக் கூறினுர். ‘அழகான செயல்களைச் செய்வதே அழகு’ என்று மேற்கோள் காட்டினுர். ‘இந்தியப்பெண்கள் அதிக நகைகளைக் கழுத்திலும், காதுகளிலும், மூக்குகளிலும், கைகளிலும், கால்களிலும் அணிந்திருக்கிருர்கள். அவைகள் இல்லாவிட்டால் அவர்கள் சுத்தமாயிருப்பார்கள்’ என்ருர்.

நூற்பதினுல் ஏற்படும் நன்மையைக் காந்தி மிகைப்படுத்திக் கூறுவதாக அவருடைய நெருங்கிய நண்பர்களில் சிலர் அவர்மேல் குற்றஞ்சாட்டினர். ‘இது இயந்திரகாலம். அவருடைய புத்திக் கூர்மை, புனிதத்தன்மை, மற்றும் அவருடைய எல்லா சேவைகளும்கூட காலப்போக்கைப் பின்னே தள்ளமுடியாது’ என்று குறைகூறினுர்கள். அதற்குக் காந்தி, ‘150 வருடங்களுக்கு முன்னுல் நமக்கு வேண்டிய துணியை நாமே உற்பத்தி செய்தோம். நம்முடைய பெண்கள் தங்கள் குடிசைகளிலே நேர்த்தியான நூல்நூற்றனர். தங்களுடைய கணவரின் வருமானத்தை இவ்வாறு நிறைவுபடுத்தினுர்கள். இந்தியாவில் தலைக்கு வருடமொன்றிற்கு 13 கெஜம் துணி வேண்டியிருக்கிறது. அதில் பாதிக்கும் குறைவாகவே இந்தியா உற்பத்தி செய்கிறது என்று நினைக்கிறேன். இந்தியா தனக்குத் தேவையான பருத்தி முழுவதையும் விளைவிக்கிறது. இந்தியாவிற்குத் தேவையான அவ்வளவு நூலையும் துணியையும் இந்திய மக்களின் கைகளாலே நூற்கவும் நெய்யவும் முடியும். என்ருலும் அந்தப் பருத்தியை ஜப்பானுக்கும் லங்காஷயருக்கும் லட்சக்கணக்கான கட்டுகளாக ஏற்றுமதிசெய்து, அதற்குப் பதிலாக நெய்யப்பட்ட துணியைப்பெறுகிறது. மக்கள் நான்கு மாத காலம் வேலை இல்லாமல் இருக்கிருர்கள். அவர்களுக்கு வேலை கொடுப்பதற்காகவே இராட்டினம் அவர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கிறது’ என்று பதில்சொன்னுர்.

வேலை இல்லாத ஏழைகளுக்கு உதவிசெய்வதே காந்திக்கு முக்கியமான காரியம். கடவுள்பக்தி நிறைந்தவர். ஆகையால், தமது பணிகளில் கடவுளின் அருளையும் வேண்டுவார். ‘பட்டினியில் வாடும் மக்களுக்குக் கடவுள் ஒரே வடிவத்தில் காட்சி அளிப்பார். அதுதான் வேலை என்பது. உணவு என்கிற கூலியையும் கொடுப்பார். வறுமை, ஒழுக்கக்குறைவுக்கு இழுத்துச்செல்லும்’ என்ருர் காந்தி. அவர் இந்தியா சுபிட்சமாகவும் மகிழ்ச்சியாகவும் இருக்கவேண்டும் என்று விரும்பினுர். ‘நாம் நம்முடைய ஆஸ்தியையும் சக்தியையும் வீணுக்காவிட்டால் நமது தேசத்தின் தட்பவெப்ப நிலையும் இயற்கை வளங்களும் நம்மை உலகத்திலேயே மிகவும் மகிழ்ச்சியுள்ள மக்களாக ஆக்கலாம்’ என்று வற்புறுத்தினுர்.

தாமே எளிய வாழ்க்கையை மேற்கொண்டதாலும் அதிகப் பொருளுடைமையைக் கண்டித்ததாலும் காந்தி வறுமையை ஆதரித்தார் என்றும் வறுமை பெருகவேண்டும் என்று நினைத்தார் என்றும் தவருன கருத்து நிலவியது. 'தென் ஆப்பிரிக்காவில் ஆயிரக்கணக்கான நம் மக்களுடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அவர்களிடம் செல்வம் அதிகமாக அதிகமாக இழிகுணங்களும் அதிகரிப்பதை நான் பல சமயங்களில் கண்டேன்' என்ருர். பின் இயேசுகிறிஸ்து கூறியதை மேற்கோளாகக் காட்டினுர். 'ஐசுவரியவான்கள் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பதைப் பார்க்கிலும், ஒட்டகமானது ஊசியின் காதில் நுழைவது எளிதாயிருக்கிறது.' காந்தி பணக்காரரை, ஏழைகளுக்குக் கொடுத்து உதவி, தங்கள் செல்வத்தைக் குறைத்துக்கொள்ளச் சொன்னுர்.

ஒருமுறை காந்தி வங்காளத்தில் ஒரு நிலச்சுவான்தாரின் விருந்தாளியாக இருந்தார். அப்பொழுது அவருக்குத் தங்கக் கிண்ணத்தில் பாலும் தங்கத்தட்டுகளில் பழங்களும் கொடுக்கப்பட்டன. பின்னுல் ஒரு சந்தர்ப்பத்தில் காந்தி கேட்டார். 'இந்தத் தட்டுகள் அவருக்கு எங்கிருந்து கிடைத்தன?' என்று கேட்டார். குடியானவர்களின் சொத்திலிருந்து கிடைத்தன என்று அவரே பதில் சொல்லிவிட்டு, 'அவர்களது வாழ்க்கையோ தாங்கொணுத் துயரமாக இருக்கும்போது எப்படி நிலச்சொந்தக்காரரர், இம் மாதிரி தேவைக்கு அதிகமான பொருள்கள் வைத்திருக்கலாம்?' என்ருர்.

இந்தியாவை இயந்திரமயமாக்குவதால், குடியானவர்களுக்கும் மற்றவர்களுக்கும் வேலையில்லாமல் போய்விடும். அதனுல் 'இந்தியாவை வருத்திக்கொண்டிருக்கும் வறுமை' இன்னும் அதிகமாகும் என்று அவர் பயந்தார். அதனுல் அவர், பஞ்சாலைகளுக்குப்பதில் இராட்டினத்தை விரும்பினுர். தனிப்பட்டவர் உற்பத்திசெய்வதைப் பல லட்சக்கணக்கில் பெருக்கினுல் உற்பத்தியும் பெரும் அளவில் கிடைக்காதா என்று கேட்டார். 'நிறைந்த உற்பத்தி என்பது இயந்திரங்களின் துணைகொண்டு குறைந்த ஆட்களை அமர்த்தி, அதிக அளவில் உற்பத்தி செய்வதுதான் என்று எனக்குத் தெரிகிறது' என்ருர். 'அது தவறு என்று நான் எனக்குள்ளே சொல்லிக்கொண்டேன். என்னுடைய இயந்திர சாதனங்கள் எளிமையானவையாயிருக்கவேண்டும். லட்சக்கணக்கான வீடுகளில் அவைகளைக் கொடுக்கவேண்டும்.' 'ஒவ்வொரு வீட்டிலும் ஒரு சிறு இயந்திரம்' என்பது அவருடைய சுலோகம்.

1934ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் காந்தியைப் பேட்டி கண்ட ஒருவர், 'உற்பத்தியும் விநியோகமும் ஒரு சிலர் கையில் குவிந்திருப்பதால்தான் நீர் இயந்திரங்கள் உபயோகித்தலை ஆட்சேபிக்கிறீரா?' என்று கேட்டார். 'நீர் சொல்வது சரி. நான் சலுகையையும் தனி

உரிமையையும் வெறுக்கிறேன். பொதுமக்களோடு பகிர்ந்துகொள்ள முடியாதது எது என்றாலும், எனக்கு அது விலக்கப்பட்ட பொருளாகும்' என்று காந்தி பதில் அளித்தார்.

ஒரு காலத்தில் காந்தியின் போதனைகள் இந்தியாவில் புறக் கணிக்கப்பட்டன. அவருடைய பொருளியல் பிற்போக்கானதும் சாதுரியமில்லாததும் என்று கருதப்பட்டது. ஆனால், இன்று மேல் நாட்டுப் படிப்புள்ளவர்களும், நவீன மனப்பான்மையுடையவர்களும், சமதர்மவாதிகளும் அவரது கருத்துக்களை ஏற்றுக்கொண்டிருக்கின்றனர் என்று அறிய வியப்பாக இருக்கிறது. இயந்திரங்கள் அவசியந்தான். ஆனால், பல ஆசிய ஆப்பிரிக்க நாடுகளில் அவை பொதுமக்களுக்குச் செழிப்பையும் பயனுள்ள ஓய்வையும் கொடுப்பதற்குப் பதிலாக வேலை யில்லாத் திண்டாட்டத்தையும் துன்பத்தையும் கொடுக்கின்றன. இயந்திரத் தொழிற்சாலைகளிலிருந்து நீக்கப்பட்ட ஆட்களுக்கு வேறு வேலைகள் உடனடியாகக் கிடைப்பதில்லை; அவர்கள் பட்டினி கிடக் கிறார்கள். 1952ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் பம்பாய் முதல் மந்திரி, 'இந்தியாவிலுள்ள தொழில்கள் முழுவதும் இயந்திரமயமாக்கப்பட்டால் எங்கள் மக்கள் அனைவருக்கும் வேலைகொடுப்பது சாத்தியமாகாது' என்றார்.

பொசுக்கும் ஆகஸ்டு மாத வெயிலில் சென்னையின் தெருக்களில் மாநிற மனிதர் வெறும் முண்டாசும் இடுப்பில் வேட்டியும் கட்டிக் கொண்டு, இரண்டு டன் எடையுள்ள சக்கரங்கள் உள்ள கைவண்டி களில் பாரங்களை ஏற்றி, இழுத்துச்சென்றதைப் பார்த்தேன். அவர்கள் செய்யும் வேலை, மிருகங்கள் செய்யும் வேலையைவிடச் செலவு குறைந்தது. அவர்களுக்குப் பதிலாக மாடுகளையோ, குதிரைகளையோ உபயோகித்தால் அவர்கள் ஆத்திரமடைவார்கள். அப்படியிருக்க, தானாக இயங்கும் வண்டியை அமர்த்தினால் அவர்கள் என்ன நினைப் பார்கள் என்று சொல்லவேண்டிய அவசியமில்லை. காந்தி இயந்திரத் தொழிலுக்கோ, மேல் நாடுகளுக்கோ எதிரானவர் இல்லை. இந்தியப் பொருளாதாரப் பிரச்சினைகளை உணராது, 'வெறும் மேல்நாட்டுக் கருத்துகளை மாத்திரம் ஏற்றுக்கொண்டு, இந்தியத் தொழில்களை இயந்திர மயமாக்கவேண்டும் என்று சொல்லிவந்த அறிஞர்களைவிட, இந்திய ஆசிய பொருளாதாரப் பிரச்சினைகளை காந்தி நன்கு அறிந் திருந்தார்.

இயந்திரத்தை, 'நீங்கள் ஆட்சேபிக்கிறீர்களா?' என்கிற கேள் விக்குப் பதில் அளிக்கையில் காந்தி சொன்னதாவது: 'நான் எப்படி ஆட்சேபிக்க முடியும்? நம்முடைய தேகமே மிக நுண்மையான இயந்திரமாக இருக்கும்போது, ஒரு சிறு பல்குத்தும் ஊசிகூட ஓர் இயந்திரம்தான். இராட்டினம் ஓர் இயந்திரம். நான் ஆட்சேபிப்பது

இயந்திரங்களை அல்ல. எல்லாம் இயந்திரமயமாக்கப்படவேண்டும் என்ற பைத்தியக்காரத்தனத்தை வெறுக்கிறேன். இன்று பல லட்சம் மக்களின்மேல் ஒரு சிலர் சவாரிசெய்ய இயந்திரம் உதவுகிறது. மனிதனது அவயவங்களை உழைப்புக்குறைவினால் மெலிந்துபோகவிடக் கூடாது. இயந்திரம் உபயோகிக்கக்கூடாது என்பதற்குச் சில விதி விலக்குகளும் உண்டு. உதாரணமாக, சிங்கர் தையல் இயந்திரத்தை எடுத்துக்கொள்ளுங்கள். மிகவும் உபயோகமான பொருள்களில் அது ஒன்று. அது கண்டுபிடிக்கப்பட்ட விதமே ஒரு விசித்திரமான கதை. காந்தி அதில் தைக்கக் கற்றுக்கொண்டார். அதுமாதிரி இயந்திரங்கள் செய்ய பெரிய தொழிற்சாலைகள் வேண்டாமா?

'வேண்டும்' என்று அவர் ஒப்புக்கொண்டார். அவருக்கே உரிய சுற்றிவளைத்துச்செல்லும் முறையில் காந்தி கூறினார். 'மோட்சத்தை அடையப் பயன்படாத இவ்வுடலை ஒதுக்கிவிட்டு ஆன்ம விடுதலையைத் தேடிச்செல்வேன். அதேபோல தனிப்பட்ட லட்சியம் என்ற முறையில் எல்லா இயந்திரங்களையும் ஒதுக்கிவிட முனைவேன். இம் முறையில் இயந்திரங்களை ஒதுக்கிவிடுவேன் என்றாலும் ஆனால், அவை இருந்தே தீரும். ஏனென்றால், இந்த உடலைப்போல அவையும் இன்றியமையாதவை.' இரண்டு அமெரிக்கப்பெண்கள், காந்தியிடம், புகைவண்டிகளும் அவைபோன்று விரைவாகச்செல்லும் சாதனங்களும் கூடாது என்று அவர் ஆட்சேபிக்கிறாரா என்று கேட்டதற்கு, அதே மனநிலையில் அவர் பதிலளித்தார். 'ஒருவிதத்தில் ஆட்சேபிக்கிறேன்; மற்றொரு விதத்தில் ஆட்சேபிக்கவில்லை' என்றார்.

மேல்நாட்டார் ஏற்படுத்திக்கொண்ட வசதிகளையும் அவர்களது தொழில்திறமைகளையும் காந்தி விலக்கவில்லை. அவர் மேடலின் ஸ்லேடுக்குப் பின்வருமாறு எழுதினார். 'அறுவை சிகிச்சைக்குரிய உபாயங்களிலும் அது சம்பந்தமான விஷயங்களிலும் மேனாட்டார் அடைந்திருக்கும் முன்னேற்றத்தைக் கண்டு அவர்களைப் பெரிதும் பாராட்டுகிறேன்.' ஆனால், அவர்களைப்போல் பாவனைசெய்ய விருப்பமில்லாதவர்கள் இந்தியர். ஆதலின், காந்தி கிராம முன்னேற்றத்தில் தான் கவனம்செலுத்த விரும்பினார். ஏனெனில், மிகவும் பிற்போக்கான மக்கள் நிறைந்த இடத்தில் இயந்திரங்களால் அடைந்த வெற்றிகளைக் காண்பித்து, மக்களின் மனத்தைக் கவரச்செய்வதை காந்தி விரும்பவில்லை. விஷயங்கள் தெரிந்தவர்களும் இயந்திரங்களில் விருப்பமுள்ளவர்களுமான அமெரிக்கர்கள்கூட, அதிக மக்கள் தொகையுள்ள கிராமங்களில் இயந்திரங்களைத் திணிப்பது தேவையற்றது என்று கூறுகிறார்கள்.

நினைவுக்குமுற்பட்ட காலத்திலிருந்தே வெளியிலிருந்து படையெடுத்து வருபவர்களுக்கு எதிராக முக்கியப் பாதுகாப்பாக இருந்தவை

இந்தியாவின் கிராமங்களே. மேற்கிலிருந்து அந்நியர், இந்தியாவின் மீது 26 முறை படையெடுத்திருக்கிறார்கள். அதனால் இந்தியாவுக்கு மேல்நாடுகளைப்பற்றிப் பயம். எனவே, எப்பொழுதும் அவைகளோடு வீரம் பேசுவதிலும் அந் நாடுகளைக் கண்டனம் செய்வதிலும் மகிழ்ச்சி அடைகிறது. எனினும் காந்தி தம் நாட்டினரின்மீது வைத்திருந்த அளவுகடந்த நம்பிக்கையின் காரணமாக, பிற நாடுகளோடு உறவு கொள்ளாமல் இந்தியா தனித்து இருக்கவேண்டுமென்று விரும்பவில்லை. ஆனால், ‘பிற நாடுகளிலுள்ள பண்பாடுகள் அனைத்தும் இந்த நாட்டில் வந்துவழங்குவதைப் பெரிதும் வரவேற்கிறேன்’ என்று கூறியுள்ளார். ஆனாலும், இப் பண்பாடுகளால் தாம் அசைந்துகொடுப்பதை அவர் ஏற்றுக்கொள்ளவே இல்லை. அவசரகாலத்தில் ஆயுதங்களுடனே, அல்லாமலோ இந்தியாமீது அந்நியர் படையெடுத்தபோதும், கிராமத்தி லுள்ள குடியானவர்கள்தான் அசைக்கமுடியாத கோட்டைகளாக விளங்கினார்கள். இந்தியாவை வென்ற அந்நியர், மத்திய தலைநகரி லிருந்தோ அல்லது ஜில்லா தலைநகரிலிருந்தோ இந் நாட்டை ஆளலாம்.

ஆனால், கிராமங்கள் தனித்தனியே முக்கியமானதாக இல்லா விட்டாலும் ஒரு கிராமத்திற்கும் மற்றொரு கிராமத்திற்கும் அதிக தூரம் இருந்தாலும் கூடத் தங்களைப் பாதுகாத்துக்கொள்ள ஜிப்ரால்டர் போன்ற கோட்டைகளை உடையனவாக இருந்தன. இந்தக் கோட்டை எதுவெனின் நன்றாகப் பிணைக்கப்பட்ட ஒரு கிராம அமைப்பு ஆகும். அவை எல்லாக் கிராமங்களிலும் இருந்தன. அந்த அமைப்பு அப்படியே இருக்கவேண்டுமென்று காந்தி விரும்பினார். அடிக்கடி பஞ்சாயத்து அல்லது ஐந்துபேர் கொண்ட சபையைப்பற்றிப் பேசினார். இந்தப் பஞ்சாயத்தார் பழைய காலத்திலிருந்து தங்கள் கிராமங்களைச் சுயேச்சையாக ஆண்டனர். காந்தி ஒவ்வொரு கிராமத்திற்கும் பொரு ளாதார சுதந்திரம் வேண்டுமென்று வற்புறுத்தினார். 1942ஆம் ஆண்டு, ஜூலை 25ஆம் தேதி ‘ஹரிஜன்’ என்ற பத்திரிகையில் ஒரு சிறந்த கிராமம் எப்படி இருக்கவேண்டுமென்பதுபற்றி எழுதினார். கிராமம் ஒரு பூரண குடியரசாக இருக்கவேண்டும். அதனுடைய முக்கியமான தேவைகளுக்குப் பக்கத்திலுள்ள குடிகளைச் சார்ந்திருக்கக்கூடாது. சார்ந்திருப்பது சில காரியமான தேவைகளுக்காகப் பிற கிராமங்களைச் சார்ந்திருக்கலாம். அக் கிராமம் தன் உணவுக்கு வேண்டியதைத் தானே உற்பத்தி செய்யவேண்டும். பிறரிடம் விற்பதற்காக வேண்டிய தானி யங்களையும் பயிரிடலாம். ஆனால், அபினைப் பயிர்செய்யக்கூடாது. பள்ளிக்கூடம், சுத்தமான நீர்வசதி, பொதுமண்டபம், கொட்டகை முதலியன இருக்கவேண்டும். ஒவ்வொரு குடிசையிலும் மின்சார விளக்குகள் இருக்கவேண்டும். மக்களின் நன்மைகளைக் கருதும்போது மேல்நாடுகளின் உபாயங்களை காந்தி ஏற்றுக்கொண்டார் என்பதற்கு இது சான்று.

ஆசியாவில் ஜனநாயகம் உருவாகவேண்டுமானால் ஒவ்வொரு கிராமமும் சுயஆட்சி செய்யவேண்டும்; தங்களுக்கு அவசியமானவை களைத் தாங்களே உற்பத்தி செய்யவேண்டும்; சுயதேவைப் பூர்த்தியான கிராமங்களோடு வியாபாரம் நடத்தலாம். குறைந்த அளவில் இயந் திரங்களை இறக்குமதி செய்யவேண்டுமென்று காந்தி அபிப்பிராயப் பட்டார். இங்ஙனம் இச் சிறுகிராமங்கள் கூட்டுறவு அடிப்படையில் சேர்ந்து வாழமுயலுமானால் மேலிருந்தோ, தூரத்திலிருந்தோ சர்வாதி காரம் உருவாக இடமிராது. இந்தியாவிலுள்ள வெப்பமான, அசுத்த மான தொழிற்சாலைகளையும் சேரிகளையுமுடைய பட்டணங்களைவிட இந்தக் கிராமங்களையே அவர் விரும்பினார்.

தொழில்களை இயந்திரமயமாக்குவதற்குமுன் இருந்ததுபோல், சமூகம் திருத்தியமைக்கப்படவேண்டும் என்று காந்தி நினைத்தார் என்று அடிக்கடி சொல்லப்படுவது முற்றிலும் ஆதாரம் அற்றது. மேல் நாட்டு இயந்திர உபாயங்களைக்கொண்டு முன்னேற்றத்திற்கு வழிதேட வேண்டும் என்று விரும்பினார். ஆனால், அந்த முன்னேற்றம் விலங்கு குணங்களும் ஆத்மீக குணங்களும் நிறைந்த மனிதனை அழிப்பதற்கு ஏதுவாக இருக்கக்கூடாது என்று காந்தி நினைத்தார். கீழை நாடுகளில் ஐரோப்பாவின் சுரண்டலும் இயந்திர நாகரிகத்தால் ஏற்பட்ட தீமை களும் இந்தியாவிலும் ஆசியாவின் மற்றப் பகுதிகளும் காணத்தக்க காட்சிகளை அளிக்கவில்லை.

உயர்ந்த தத்துவ நிலையிலிருந்து பார்க்கும்போது, மனிதனை அவனுடைய தொல்லைகளிலிருந்து விடுவிப்பதற்குப் பதிலாக அவனை அடிமையாக்கக்கூடிய இயந்திரமயமான நாகரிகத்தின் தீமைகளையும் தொல்லைகளையும் எல்லோரையும்விட காந்தி முன்கூட்டியே உணர்ந் திருந்தார். 1931ஆம் ஆண்டு லண்டனில் காந்தியைப் பார்க்க வேண்டுமென்று சார்லி சேப்ளின் கேட்டுக்கொண்டார். காந்தி திரைப் படங்கள் பார்த்ததில்லை. அதனால் சார்லி சேப்ளின் பெயரைச் சொன்னதும், யார் என்று தெரியவில்லை. அவர் நடிகர் என்று சொன்னபோது, நடிகர்களைப் பார்ப்பதில் தமக்கு ஆர்வம் இல்லை என்று சொல்லிவிட்டார். பிறகு சார்லி சேப்ளின், லண்டனிலுள்ள லேம்பத் (Lambeth) சேரியிலுள்ள எளிய குடும்பத்தைச் சேர்ந்தவர் என்றதும் அவரைப் பார்க்கச் சம்மதித்தார். மேல்நாட்டாரோடு நடத்தும் எல்லா உரையாடல்களைப்போல இதுவும் இயந்திரங்களைப் பற்றிய காந்தியின் அபிப்பிராயத்தைப்பற்றி இருந்தது. சார்லி சேப்ளின் காந்தியின் கொள்கைகளைப்பற்றித் தப்பாக நினைத்திருந்தார். அதனால் அவர் தினசரி வாழ்க்கையில் மக்களுக்கும் இயந்திரங்களுக் கும் இடையே அன்றாடம் நடக்கும் போட்டியைப்பற்றி ஒரு படம் எடுக்கும் அளவுக்குக் காந்தியின் பதில் அவருக்குத் திருப்தி அளித்தது.

எவ்வளவுக்கு எவ்வளவு இயந்திரம் வேகமாக ஓடுகிறதோ, அவ்வளவுக்கவ்வளவு மனிதனும் வேகமாக வாழ்க்கை நடத்துகிருன். அதற்கேற்ருற்போல் அவனுடைய நரம்புகள் அதிர்ச்சியடைகின்றன. பண்பு, ஓய்வு, வாழ்க்கை முதலியவை இயந்திரக் கருவிகளோடு அதிகமாக இணைக்கப்பட்டிருக்கிறதால், காலப்போக்கில் மனிதன் தன்னுடைய ஆத்ம சக்தியை இழக்கலாம். காட்டுமிராண்டி ஒருவன் ஒரு பொம்மையைச்செய்து, அதற்குப் பணிவிடை செய்வதுபோல், மனிதன் இயந்திரத்தைச்செய்து அதற்கு அடிமையாகிவிடுகிருன். பொருளியல் முன்னேற்றம் என்பது மனிதனுடைய ஆத்ம சக்தியையும் ஒழுக்கத்தையும் உயர்த்தப் பயன்படவேண்டும்; வெறும் இயந்திரமயமாக்குவதோ அல்லது வேறுவிதமான முன்னேற்றம் அடைவதோ ஒரு லட்சியம் அல்ல என்று காந்தி கருதினுர். தனிப்பட்ட மனிதன்தான் காந்தியின் நோக்கத்தின் மையப்புள்ளி. தனிமனிதனே, அவனிடம் என்ன இருந்தது? அவனுடைய வெளி அந்தஸ்து என்ன? அவனுடைய சொத்து சுகம் எவ்வளவு என்பதைக்கொண்டு கணக்கிடாமல், அவன் எப்படி இருந்தான், அவன் எப்படிப்பட்டவன், அவனுடைய உள்ளத்து அழகு எத்தகையது என்பதைக்கொண்டே கணக்கிட்டார். அவருடைய தனிமனிதன் பணத்தால் அல்ல, தகுதியால் பெருமை பெறுபவன். இயந்திர நாகரிகம் மனிதரைப் பணக்காரர்களாக்கியது; ஆனுல், அவர்களே மனிதர்களாக்கியதா? இருபது நூற்ருண்டுகள் இல்லை என்ருலும், இருபதாவது நூற்ருண்டில் தனிமனிதனின் முக்கியத்துவத்தையும் சிறப்பையும் ஆர்வத்துடன் எடுத்துக்கூறிய மிகப்பெரிய தனிமனிதர் காந்தி. வெறும் பொருளாதார முன்னேற்றத்தால், தனிமனிதரின் சிறப்பு எங்ஙனம் உயரும் என்று அவர் வியந்தார். இந்தியா செழிப்பாக இருக்கவேண்டுமென்று விரும்பினுர். ஆனுல், இயந்திரங்களுக்கு அடிமைப்பட்டு ஒரே மாதிரியாகத் தோற்றமளிக்கும் மக்களைக்கொண்ட இந்தியா அன்று அவர் விரும்பியது. உலகம் முழுவதும் நடக்கும் நிகழ்ச்சிகளை ஆராய்ந்து பார்த்துவிட்டு இயந்திரமயமான தொழிலும் உலகத்தில் காணும் வெறும் பொருள்மயமும் ஒன்றே என்று காந்தி நினைத்தார். ஆகவே, இரண்டும் தனிமனிதனின் உண்மையான உயர்வுக்குத் தீமையே என்று அஞ்சினுர். தனிமனிதனின் மனிதத் தன்மைதான் முக்கியம் என்று நினைத்து அதற்காகப் பரிந்துபேசியதால், பொதுவுடைமையை (Communist) வெறுத்தார். அதனுல் பொதுவுடைமை என்பது ஒருவிதமான பொருளாதாரச் சூழ்நிலையின் ஏற்பாடு. அது பொதுவுடைமை இல்லாத நாடுகளையும் நாளடைவில் அரித்துக்கொண்டிருக்கும் ஒரு தீய சக்தி என்று எண்ணினுர். ஆகையால், எந்தக் காரணங்களுக்காகச் சோவியத் முறையை எதிர்த்தாரோ அதே காரணங்களுக்காக மேல்நாடுகளின் நாகரிகத்தையும் கண்டித்தார். அவ் விரண்டிற்கும் அடிப்படையில் வேற்றுமை இல்லை; அளவில்தான் வேற்றுமை என்று காந்தி கூறினுர். போல்ஷிவிஸம்

என்பது 'பொருள் இயலே' ஆதாரமாகக்கொண்ட நாகரிகத்தின் விளைவு என்று காந்தி நினைத்தார். 'வெறும் பருப்பொருளை வணங்கி பொருள்துறையில் அடையும் முன்னேற்றமே வாழ்க்கையின் லட்சியம் என்று சிலர் கருதுகின்றனர். ஆனால், அந்த லட்சியம் வாழ்க்கையின் உயர்ந்த பண்புகளோடு தொடர்பற்றதாகிவிடுகிறது. மனிதனை மனிதனுக்கும் மனித இயல்புகளைப் புறக்கணித்தால், பருப்பொருளைவிட மனித இயல்பே பெரியது, வன்மையைவிட அன்பும் விடுதலையும் உயர்வானவை என்பதை மறந்தால் ஒரு காலத்தில் புனிதமாக இருந்த நாட்டில் போல்ஷிவிஸம் எங்கும் தலை காட்டும்.' இது இந்தியாவைக் குறிக்கிறது; எனினும் மற்ற எல்லா நாடுகளுக்கும்கூட இது பொருந்தும். மேல்நாடுகள் போல்ஷிவிஸம், ஸ்டாலினிஸம், சோவியட்டிஸம் முதலியவைகளுக்கு அஞ்சுகின்றன. ஏனென்றால், அந் நோயின் கிருமிகள் தங்கள் நாடுகளிலும் இருப்பதை அவை உணர்கின்றன.

ஸ்டாலின்கொள்கையை முறியடிக்க, மாற்று மருந்தும் பதிலும் காந்தியிடமிருந்தன. வெறும் பொருளைவிடக் கொள்கையே முக்கியம் என்கிற சித்தாந்தமுடையவன், வெறும் பருப்பொருளின்மீதுள்ள பற்றை ஒழிக்கும் வீரன், தன்னுடைய சுதந்திரத்திற்கு நேரும் இடையூறுகளை எதிர்த்துநிற்பவன்—அவன்தான் அந்த மாற்று மருந்தும் பதிலும் ஆவான். இந்த மருந்து பொதுவுடைமையை அழிக்கும்; ஜனநாயகத்தைக் காக்கவல்லது.

காந்தியின் எல்லாப் பேச்சுகளிலும் எழுத்துகளிலும் உண்ணாவிரதங்களிலும் அரசியல் தருமங்களிலும் தென் ஆப்பிரிக்காவில் மார்ஷல் ஸ்மட்ஸுடன் நடத்திய போராட்டங்களிலும் இந்தியாவில் பிரிட்டிஷாருடன் நடத்திய போராட்டங்களிலும் தம்முடைய சொந்த மக்களாகிய இந்தியருடன் நடத்திய போராட்டங்களிலும் இந்த விதமான எல்லா சந்தர்ப்பங்களிலும் இவ் வுலகத்தில் எல்லோருக்கும் ஏற்படக்கூடிய பிரச்சினை ஒன்றுடன் அவரும் போராடவேண்டியிருந்தது. தற்காலத்தில் தனிமனிதன் எவ்வாறு மன அமைதியையும் வெளிப் பாதுகாப்பையும் காப்பாற்றிக்கொள்ளமுடியும் என்பதே அது. அதிகாரங்கள் நிறைந்த அரசாங்கம் கொடுமையாகச் செலுத்தும் அதிகாரத்தினின்றும் பெரும்பொருளாதார அமைப்புகளின் பொருளியல் பலத்தினின்றும் தீய சக்திகள் நிறைந்த அரசியல் பெரும்பான்மையோர் என்கிற வகுப்பினரின் கொடுங்கோன்மையிலிருந்தும் எப்பொழுதும் சண்டையிடத் தயாராக இருக்கும் சிறுபான்மையோரிடமிருந்தும் அணுவிலிருந்து கிடைக்கும் சக்தியிலிருந்தும் தப்பி எவ்வாறு தனிமனிதன் வாய்மையுடையவனாகவும் சுதந்திரமுடையவனாகவும் வாழமுடியும் என்பதே தற்காலப் பிரச்சினை. பெரும்பாலோர், நிறைய அதிகாரங்கள் குவிந்துஇருக்கும் அரசாங்கங்களைப் பார்த்துப்பிரமித்து, அவர்களுடன் சண்டைசெய்யமுடியாது என்று ஒப்புக்கொண்டு

பணிந்துவிடுகிருர்கள். அதன் விளைவாக எல்லா நாடுகளிலும் கோழை மனிதர்களைக் காண்கிறோம். இது சர்வாதிகாரத்திற்கு வழிவகுக்கிறது. ஜனநாயகத்தையும் பயமுறுத்துகிறது. வரம்புமீறிச் செலுத்தப்படும் அதிகாரத்தை எதிர்த்துத் தன் சுதந்திரத்தைக்காக்க தனிமனிதன் தயாராக இல்லாவிட்டால், சுதந்திரம் ஒழிந்துவிடும்.

அதிகாரத்தை கைக்கொள்வதே லெனின் (Lenin), ஸ்டாலின் (Stalin) ஆகியோர்களின் முக்கிய வேலையாக இருந்தது. தனிமனித னிடம் அவர்களுக்கு நம்பிக்கை கிடையாது. அவர்களுடைய நடவடிக்கைகளைக் கவனித்து, அவர்களுடைய சுதந்திரத்தை ஒழிப்ப தற்காக ஓர் இயக்கமும் தலைவர்கள்தான் ஆட்சி செலுத்தவேண்டும் என்ற அடிப்படைக்கொள்கையில் ஓர் அரசாங்கமும் ஏற்படுத்திஞர்கள். 'சிறந்தவர்கள்' அடங்கிய ஒரு கட்சி ஆரம்பிக்கப்பட்டது. அந்தக் கட்சியில் 'ஏக' தலைவன் ஆதிக்கம் செலுத்திஞன். அவன் சொன்ன படிதான் மக்கள் கீழ்ப்படிந்து நடக்கவேண்டும். இங்ஙனம் மனித இயல்பை ஒழிக்கும் சர்வாதிகாரம் உருவானது. ஆனல், காந்தியின் முக்கியமான நோக்கம் தனிமனிதனைப்பற்றியதே; ஆனல், பிரிட்டி ஷாருக்கு எதிராக மட்டுமல்ல; எந்த சக்திக்கு எதிராகவும் தன் சுய உரிமைக்காகப் போராடும்படி தனிமனிதனைப் பழக்குவதில் காந்தி கவனம் செலுத்திஞர். 'காந்தி நம்முடைய முதுகெலும்பை விறைப் பாக இருக்கும்படி செய்தார்' என்று நேரு ஒருமுறை சொல்லி யிருக்கிருர். நேராக நிமிர்ந்துள்ள முதுகில், அதிகாரம் சவாரி செய்ய முடியாது.

அரசாங்கம், பொருளாதாரம், விஞ்ஞானம் முதலியவற்றின் வலிமை அதிகமாக அதிகமாகத் தனிமனிதனுடைய ஊக்கமும் ஆத்மீக பலமும் அவைகளுக்கேற்ப அதிகமாக வேண்டும். இல்லையேல், மனிதன் சுய உணர்வில்லாத இயந்திர அடிமையாகிவிடுவான். நவீன நாகரிகத்தின் வருங்காலம், தனி மனிதனுக்கும் அதிகாரத்திற்குமுள்ள போட்டியின் முடிவைப் பொறுத்திருக்கிறது.

உணவுப் பரிசோதனையில் காந்தி தம்முடைய வாழ்க்கையில் பெரும்பகுதியைச் செலவிட்டார். உடலை வளர்ப்பதற்கு வேண்டிய சத்துப்பொருள்கள் எவை என்றும் மனிதனைப் பெரியவனுக்குவதற்கு என்ன செய்யவேண்டுமென்றும் ஆராய்ச்சி செய்துகொண்டிருந்தார். தனிமனிதன் பெரியவனுவதற்கு வேண்டியது அஞ்சாமையே. காந்தி அஹிம்சா தருமத்தைப் போதித்துவந்த பெரும் ஞானி என்ற போதிலும், 'பலாத்காரம், கோழைத்தனம்—இவை இரண்டில் எது வேண்டுமென்று கேட்டால், பலாத்காரம்தான் வேண்டும் என்பேன்' என்று சொல்லியிருக்கிருர். ஏனென்ருல், கோழைத்தனம் ஒருவனுடைய சுய மதிப்பைக் குறைக்கிறது. காந்திக்குப் பயம் என்பது கிடையாது.

இருபது முதல் முப்பத்தைந்து வயதுவரை சாதாரண மனிதனை யிருந்த அவரைப் பின்னல் மலைபோன்ற பெரிய மனிதனுக்கியது மற்ற எல்லாப் பண்புகளையும்விட அஞ்சாமை என்ற பண்புதான். அரசாங்கத்தின் அதிகாரம், சிறையின் துன்பம், பசியின் கொடுமை, பிறரால் குறைகூறப்படுதல், பிறரது பழிப்பு, தன்னைப் பிறர் ஏற்றுக் கொள்ளாதது முதலியவைகளுக்குச் சிறிதும் காந்தி அஞ்சவில்லை. சாவுக்கும் அஞ்சவில்லை. ஏனெனில், சாவு கடவுளுடன் ஐக்கியப்படுத்தி விடும் என்று நம்பினர். நோய்க்குப் பயப்படவில்லை. ஏனெனில், அதை காந்தியால் வெல்லமுடியும்.

காந்தியின் சிறந்த பண்புநலன் தைரியத்தால் வளர்க்கப்பட்டது. பலாத்காரத்தைவிட, சாத்வீகத்திற்கு அதிக தைரியம் வேண்டும் என்றார். வேகமாக ஓடும் குதிரையில் ஏறிப் போலீஸ்காரன் பாயும் போது அசையாமல் உட்கார்ந்திருப்பதோ, மோட்டார் வண்டிகள் ஓடும் பாதையில் படுத்திருப்பதோ, போலீஸ்காரர் தன்னைச் சூழ்ந்து வரும்போது நேருக்குநேர் நிற்பதோ கோழை செய்யக்கூடிய செயல் அல்ல; தைரியமுள்ள ஒருவனால்தான் அவ்விதம் செய்யமுடியும். இது வீரம் நிறைந்தவர்களின் வீர எதிர்ப்பு. எதிர்ப்பைக் காட்டுவதற்கு காந்தி அனுசரித்த முறை, கடுமையில்லாத இந்துக்களின் சாந்த குணத்தை வீரமாக மாற்றியது. சாதாரண மக்களின்மீதுள்ள நம்பிக் கையிலிருந்து பிறந்தது இந்த முறை. மிகவும் கடைப்பட்டவர்களும் தம்மோடு சமம் என்று எண்ணினர். ‘ எனது வாழ்க்கையை உருவாக்கிய குறிக்கோள்களை மனித சமுதாயத்தின் முன்னர் படைக்கின்றேன். நான் முயன்றதுபோல் பிறரும் முயல்வார்களாயின், எனக்கிருந்த நம்பிக்கையும் விசுவாசமும் பிறருக்கு இருக்குமாயின், நான் அடைந்த வெற்றியை எந்த ஆணும் பெண்ணும் அடையலாம் என்பதில் எனக்குச் சிறிதும் ஐயம் இல்லை. முழுவதும் நல்லவனாக வேண்டுமென்று முயன்றுகொண்டிருக்கும் ஏழை ஆத்மா நான். நான் கடந்துசெல்லவேண்டிய இடர்மிகுந்த பாதை இன்னும் என் முன் இன்றும் இருக்கிறது என்பதை நான் அறிவேன்’ என்று காந்தி சொன்னார். தம்மிடமும் பிறரிடமுமுள்ள குற்றங்குறைகளை உணர்ந்திருந்தார்; யாரும் குறையற்றவர்களாக இருப்பார்கள் என்று அவர் எதிர்பார்க்கவில்லை. ஆனல், மனிதன் திருந்தமுடியும். உயர்வதற்கு மனிதன் அளவற்ற ஆற்றல் உடையவன் என்று காந்தி நம்பினர். பிறருடைய குறைகளை விடுத்து, அவர்கள் எப்பேர்ப்பட்டவர்கள் என்பதையும் பார்க்காமல், அவர்களுடைய நல்ல குணங்களைமாத்திரம் ஆராய்ந்து, குற்றமே இல்லாதவர்கள் என்று பாவித்து, நல்லவர்கள் ஆகவேண்டும் என்கிற அவர்களுடைய ஆசையைப் பயன்படுத்தி, அவர்களுடைய வாழ்க்கையை மாற்றினர். இங்ஙனம் மனிதனை நல்லவனாக ஆக்க முடியும் என்ற அவரது நம்பிக்கை அவருடன் சேர்ந்து

பழகியவர்களின் குணங்களைப் பெரிதும் உயர்த்தியது. ஓரோவழி அவரைச் சந்தித்தவர்களும் அதன் நன்மையைப் பெற்றனர்.

எப்பொழுதும் மனிதர்களைத் திருத்துவதில் ஈடுபட்டிருந்த காந்தி தம்மிடம் வந்தவர்களை அவர்களது குற்றங் குறைகளோடு ஏற்றுக் கொண்டார். அன்பின் காரணமாக அவர் கடுமையற்றவராக இருந் தார். தம்மைப் பொறுத்தவரை ஒழுங்கு விதிகளைக் கடுமையாக அனு சரித்துவந்தார். ஆனால், மற்றவர்கள் அவ்விதம் அனுசரிக்க வேண்டு மென்று வற்புறுத்தியதுகூட இல்லை. கடவுளிடத்தில் அல்லது காந்தி யிடத்தில் அல்லது அஹிம்சையில் அல்லது தூய நடத்தையில் இவை ஒன்றிலுமே நம்பிக்கை இல்லாதவர்களாக இருந்தாலும், தம்முடைய அழைப்புக்கு இணங்கி ஆசிரமத்திற்கு வந்தவர்களிடம் ஒன்றுபட்டு மகிழ்ச்சியுடன் அவர் வாழ்ந்தார். எந்தவிதமான சமுதாய வாழ்க்கைத் திட்டமாயினும், ஒரு சிறந்த கொள்கையினிடத்து மக்கள் விசுவாசத்தை இழப்பதற்குக் காரணம் அக் கொள்கையைக் கடைப்பிடிப்பதனால் ஏற்படுகின்ற துன்பமேயாகும். உண்மையில் தனி மனிதனது முன் னேற்றத்திற்காகப் பிறருடன் முரண்படுவதையும் வெவ்வேறு கருத்து களை ஏற்றுக்கொள்வதையும் அவர் ஆதரித்தார். அவர்கள் தம்மிடம் விசுவாசமில்லாததைப்பற்றி அவர் கவலைப்படுவதில்லை. ஆனால், கொள் கையில் நம்பிக்கை இல்லாததைப்பற்றி வருந்துவார்.

உலகம் முழுவதும் உயர்ந்த கொள்கைகளின்மீது நம்பிக்கை இல்லாததற்குக் காரணம், அதனால் ஏற்படுகிற கஷ்டங்கள்தான். சர்வாதிகார நாட்டில், உயர்ந்த கொள்கைகள்மீது நம்பிக்கை உள்ளவர் களுக்குக் கிடைப்பது மரணம்; ஜனநாயக நாட்டில் அவர்களுக்குக் கிடைப்பது தோல்வியும் இடையூறுகளுமேயாகும். காந்தியோ இவற் றில் எதையும் 'ஏற்றுக்கொள்ளத் தயாராயிருந்தார். ஒருவனுக்குப் பொருள் குறைவாக இருந்தால் அதிகத் தொல்லைகளைப் பொறுத்துக் கொள்ளமுடியும். அதனால் ஆத்மீக மதிப்பு மிகுதியாக ஏற்படுகிறது. அந்த ஆத்மீக மதிப்பைத்தான் பொருள் என்று நினைத்தார் காந்தி.

இதே மனப்பான்மையைத்தான் அவர் பிறரிடமும் வளர்த்தார். அவருடைய கூட்டாளிகள் அவர்களுடைய சொந்தக் கொள்கைகளுக் காகத் தம்மோடு வைத்திருந்த பந்தத்தையும் தொடர்புகளையும் தியாகம் பண்ணும்படி காந்தி சொன்னார். அவர் ஓர் இயக்கத்தை நடத்தி, அதன் வெற்றிக்காகமட்டும் போராடிக்கொண்டிருக்கவில்லை. அவர் நல்ல மனிதர்களை உருவாக்கி, ஒரே உணர்ச்சி ததும்பும் தேசத்தை உருவாக்கிவந்தார். தாம் நாட்டின் தந்தையாக இருக்க வேண்டுமானால் பெருங் குணங்களைப் படைத்த பிள்ளைகள் வேண்டும் என்று நினைத்தார். காங்கிரஸில் தமக்கு எதிர்ப்பு ஏற்பட்டபோதும், அந்த எதிர்ப்புகளைத் தகர்த்து எறிய முடிந்தாலுங்கூட, சில வேளை

களில் அவர்களுடைய எதிர்ப்புகளுக்கு விட்டுக்கொடுத்தார். ஏனெனில், அவர் கருத்து வேற்றுமைகளை மதித்தார். அதுதான் மனிதனுக்கு லட்சணம். ஒரு தடவை நடந்த ஆதாரக் கல்வி மகாநாட்டில் ஜாகீர் ஹுசைன் என்னும் முஸ்லிம் பள்ளி ஆசிரியரைத் தவிர, அம் மகாநாட்டில் கலந்துகொண்ட அனைவரும் காந்தியின் கொள்கைகளை ஆதரித்தனர். காந்தி ஜாகீர் ஹுசைனை ஆதாரக் கல்விச் சங்கத்தின் தலைவராக நியமித்தார். மகாத்மாவின் மன உறுதியும் கொள்கையில் உள்ள அசைக்க முடியாத நம்பிக்கையும் அவரை ஒரு சர்வாதிகாரி ஆக்கியிருக்கும். சர்வாதிகாரிக்கு உரிய அடையாளங்கள் சில அவரிடம் இருந்தன. ஆனால், தனி மனிதனின் உயர்வின்மேலுள்ள பற்று அவரை ஜனநாயகவாதி ஆக்கிற்று.

ஆதலின், பல்வேறு வகையில் வேறுபட்டவர்களும் மாறுபட்டவர்களும் காந்தியைப் பின்பற்றியவர்களாக இருந்தார்கள். பலதரப்பட்ட தலைவர்களும் காந்தியின் வசப்பட்டனர். பல வருடங்கள் காந்தியின் பிரதம காரியதரிசியாக இருந்த பியரிலால் நய்யர் (Pyarelal Nayyar) 1952ஆம் ஆண்டு மார்ச்சு 15ஆம் தேதி ஹரிஜன் பத்திரிகையில் அவர்களைப்பற்றி விவரமாக எழுதியிருக்கிறார். பிர்லா (G. D. Birla), ஜம்னுலால் பஜாஜ் (Seth Jamnalal Bajaj) போன்ற சூட்சும அறிவு நிறைந்த தொழிலதிபர்களும், ஆச்சாரிய கிருபளானி போன்ற சமுசயவாதிகளும், பண்டித ஜவஹர்லால்போன்ற புரட்சிக்காரர்களும், அறிவாளிகளும், பண்டித மோதிலால் நேரு, வித்தல் பாய் பட்டேல் (Vithalbhai Patel) போன்ற அரசியல்வாதிகளும், விநோபா பாவே (Vinoba Bhave) போன்ற பக்தியும் துறவும் நிறைந்தவர்களும், ராஜகோபாலாச்சாரிபோன்ற கூரிய அறிவு உடையவர்களும், ராஜேந்திர பிரசாத்போன்ற பரோபகாரிகளும், மௌலானு ஆஸாத் (Maulana Azad) போன்ற ஆழ்ந்த படிப்பும் மதநூல் வல்லமையும் உடையவர்களும், சாதாரணமானவர்களும், அவரவர் தொழில்களில் மேதைகளுமாகிய டாக்டர் அன்சாரி (Dr. Ansari), ஹக்கீம் அஜ்மால் கான் சாஹிப் (Hakim Ajmal Khan Saheb) போன்றவர்களும், எதையும் அலட்சியமாகக் கருதும் பான்மையும் பகட்டும் உள்ளவர்களும், இந்தியாவின் நைட்டிங்கேல் என்று அழைக்கப்படும் சரோஜினிபோன்றவர்களும், உயர்ந்த குடும்பத்தில் பிறந்து, சமுதாயத்திற்காக உழைத்த குமாரி ஸ்லேட்போன்றவர்களும், இரும்பு மனிதர், சுதந்திர இந்தியாவின் கருங்கல் தூண் என்று அழைக்கப்படும் சர்தார் பட்டேல் அவர்களும் காந்தியுடன் நெருங்கிய தொடர்பு கொண்டவர்கள். பாவம்—சர்தார் பட்டேல் மறைந்துவிட்டார். இந்தப் பெயர்வரிசை உதாரணத்துக்காகக் கொடுக்கப்பட்டதே ஆகும். காந்தி மனிதர்களின் விசுவாசத்தைப் பெறமுடிந்ததின் இரகசியம்தான் என்ன என்று பியரிலால் கேட்கிறார். ‘அவரது

உலகியல் ஞானம், சாதுரியம், ஆழ்ந்த இரக்கம், பிறர் உணர்ச்சியைப் புண்படுத்தாத தன்மை, உடலின் தெய்வீக ஒளி ' என்பதே அக் கேள்விக்குப் பதில். அன்ருட வாழ்க்கையில் காந்தியிடம் நுட்பமான அறிவையும், உண்மையான உழைப்பையும், தைரியத்தையும் கண்ட தொழிலதிபர்கள் அவரிடம் பற்றுடையவர்களானுர்கள். காந்தியும் தம்மைப்போல் புரட்சிக்காரர், கலகக்காரர் என்று கண்டதும், ஆச்சாரிய கிருபளானி, காந்தியின் ஒரு அடிமைபோல் ஆகிவிட்டார். பண்பும் அறிவும் நிறைந்த ஜவஹர்லால் நேரு காந்தியின் வாழ்க்கையில் ஒரு கலையையும் அவரது செய்கைகளில் ஒரு மும்முரத்தையும் கண்டு, காந்தியின் வசம் ஆனுர். ஒருமுறை காரசாரமாகப் பேசிக்கொண்டிருந்தபோது, பொறுமையை இழந்து நேரு, ' நான் வேண்டுவது புரட்சியே ; இது வெறும் சீர்திருத்தமே ' என்று ஆத்திரத்துடன் சொன்னுர். அதற்கு காந்தி, ' மற்றவர்கள் புரட்சிகளைப்பற்றிப் பேசிக்கொண்டிருக்கும்போது, நான் புரட்சிகளை உண்டுபண்ணியிருக்கிறேன். உம்முடைய உற்சாகம் தணிந்தபின், நீர் உண்மையிலே புரட்சியைப்பற்றி ஆர்வமுடையவராக இருந்தால் என்னிடம் வருவீர் ' என்ருர்.

இதேபோன்று, ஜவஹர்லாலின் தந்தை மோதிலால் நேருவுக்கும் காந்திக்கும் கருத்து வேற்றுமைகள் இருந்தன. மோதிலால் நேரு ஒரு தடவை பியரிலாலிடம், ' மகாத்மாவின் ஆத்மீகக் கொள்கையில் எனக்கு நம்பிக்கை இல்லை ; இந்த வாழ்க்கையில் நான் கடவுளை நம்பப்போவதில்லை என்று மகாத்மாஜியிடமே சொல்லியிருக்கிறேன் ' என்று சொன்னுர். ' அவர் என்ன பதில் சொன்னுர் ?' என்று பியரிலால் ஏக்கத்துடன் கேட்டார். ' அவர் சிரித்தார் ' என்று மோதிலால் பதில் சொன்னுர். பியரிலால் தொடர்ந்து கூறுகிருர். இஸ்லாமிய பண்டிதராகிய மௌலானு ஆஸாத் காந்தியிடம் தம்மைப்போன்ற தெய்வபக்தியுள்ளவரையும், மதத்தில் பரந்த பொதுத்தன்மையைச் செயலில் காட்டுபவரையும் தாம் கண்டதாகச் சொன்னுர். விநோபா, காந்தியைப் பழங்காலத்து இந்திய ரிஷியாகக் கருதினுர். தெளிந்த சிந்தனையும், பிறர் வியக்கும் வண்ணம் மாற்ருரின் வாதத்தை விரைவில் நுணுக்கமாகத் தெரிந்துகொள்ளும் வன்மையும், பெரிய சட்ட நிபுணர்கள் என்று கூறப்படுபவர்களும் வெட்கப்படும்படியான நுண்ணிய சட்ட அறிவும் காந்தியிடம் இருப்பதை ராஜகோபாலாச்சாரி கண்டார். சுகாதாரத்தில் காந்திக்கு இருந்த சிரத்தையைக் கண்ட டாக்டர்கள் அவரைப் போற்றினுர்கள். திருமதி சரோஜினி நாயுடு, அவர் ' செயலில் ஒரு கவி ' என்று கண்டார். வீரர் பட்டம் பெற்ற ஒரு பெரிய பிரிட்டிஷ் மாலுமியின் மகளாகிய குமாரி ஸ்லேட், ' மேல் நாட்டில் பணப்பேயை வணங்கி என் ஆத்மா வாடிப்போயிருந்தது. காந்தியைக் கண்டதும் ஆத்மீக உணர்வைப் பெற்றேன் ' என்று

அவர் கூறியதாகப் பியரிலால் குறிப்பிடுகிருர். தாம் இட்ட ஆணைப்படி காங்கிரஸ் கட்சி நடக்கும்படி செய்தவரும் இயந்திரம்போல் ஆற்றல் நிறைந்தவருமான பட்டேல், 'காந்தி ஒரு பெரும் அரசியல் தலைவர்; வெறும் பேச்சாளர் மட்டுமன்று; கர்மயோகி; சம்பவங்களை உருவாக்க வல்லவர்; தாம் ஏற்றுச் செய்ய முன்வந்த காரியங்களைத் தவருமல் செய்து முடிக்கும் ஆற்றல் நிறைந்தவர் காந்தி என்பதை உணர்ந்தார்' என்று பியரிலால் முடிக்கிருர்.

மேற்கூறியவை பக்தி நிறைந்த ஒரு சீடரின் புகழுரை என்று எடுத்துக்கொண்டாலும், அவை யனைத்தும் ஏறக்குறைய உண்மையே. ஏனெனில், இத்தகைய பெரிய மனிதர்களை காந்தி தம் வசம் இழுத்து உண்மையிலேயே அவர்களுக்குத் தலைமை தாங்கினுர். அவர்களிடம் வேலைவாங்க காந்திக்கு ஆற்றல் இருந்தது. எப்படியென்றும், பியரிலால் விளக்குகிருர். 'ஒருவரின் சொந்த நன்மையை உத்தேசிக்காமல், அவரின் திறமையை காந்தி பயன்படுத்திக்கொண்டதில்லை. ஒருவரின் சிறந்த திறமைகள் வெளியாகும்படியும், அறமுறையின் வழியாக அவர்கள் ஆற்றலும் அந்தஸ்தும் உயரும் விதமாகவும்தான் பிறருடைய ஆற்றல்களைப் பயன்படுத்திக்கொண்டார். அவர் பேச்சில் பிறரை அச்சுறுத்தவோ, நசுக்கவோ முயன்றதில்லை. மாற்ருரும் தம்முடன் சேர்ந்து உண்மை என்னவென்பதை ஆராய்ச்சி செய்யத் தூண்டினுர். அவருடைய நோக்கம் பிறரைப் பலவந்தப்படுத்துவதோ அடக்குவதோ அல்ல. மனந் திருந்தவைப்பதேயாகும். எதிரிகள் காந்தியிடம் அடைந்த தோல்வியினுல் ஏற்பட்ட தாழ்வினுல் வருந்தினதில்லை. ஆனுல், உண்மையைத் தெரிந்து தெளிந்ததினுல் தமக்கு ஏற்பட்ட மகிழ்ச்சியையும் உற்சாகத்தையும் மாற்ருரும் பெற்று மகிழ்வுறச் செய்தார். இதனுல் அவர் சொன்னதை மாற்ருர் எதிர்க்காமல் கூர்ந்து கவனித்துக் கேட்டனர்.' 'நான் பிறவியிலேயே ஜனநாயகவாதி' என்று காந்தி பெருமையாகச் சொல்லிக்கொள்வார்.

மனித வர்க்கத்தைக் கொள்கையளவில்மட்டும் அவர் நேசிக்கவில்லை. ஆண்கள், பெண்கள், குழந்தைகள் எல்லோரையும் நேசித்தார். அவர்களில் தனி ஆளுக்கோ அல்லது குழுவினருக்கோ உதவி செய்யவேண்டுமென்று விரும்பினுர். அவர் அவர்களுக்குரியவர் என்பது அவர்களுக்குத் தெரியும். அதனுல் அவர்கள் அவருக்குரியவர்கள் ஆனுர்கள். விசுவாசமுள்ளவர்களையும் தம்பால் சேர்த்துக் கொள்வதன்மூலம் விசுவாசிகளாக மாற்றினுர். அவருடைய விசுவாசம் அவர்களிடத்திலும் விசுவாசத்தை வளர்த்தது. தோல்வியும் மனச் சோர்வுமுள்ள மோசமான வருடங்களாகிய 1924 முதல் 1926வரை காந்தி இவ்விதமாக மக்களைப் பிற்காலத்து வெற்றிகளுக்கு ஆயத்தப்படுத்தினுர். இந்தியா இப்பொழுது அவரை 'பாபு' என்று அழைத்தது. பாபு என்ருல் தந்தை என்று பொருள்.

16. உப்புச் சத்தியாக்கிரகம்

1928-ல் இந்தியா தொழில், தேசிய இயக்கம் இவற்றுல் அமைதியற்று இருந்தது. அவ் வருடம் டிசம்பர் மாதத்தில் லாகூரில் உதவி போலீஸ் சூப்ரன்டென்டாயிருந்த சாண்டர்ஸ் (Saunders) கொல்லப்பட்டார். ‘கோழைத்தனமான செய்கை’ என்று காந்தி அதைக் கடுமையாகக் கண்டித்தார். அவரைக் கொன்றதாகச் சந்தேகிக்கப்பட்ட பகத்சிங் (Bhagat Singh) கைதுசெய்யப்படாமல் தலைமறைவாக இருந்து வந்தான். விரைவில் அவன் ஒரு வீரன் என்று போற்றவும் பட்டான். 1926 ஏப்ரல் 8ஆம் தேதி, புது டில்லியில் சட்டசபைக் கூட்டம் நடந்து கொண்டிருந்தது. அந்த அறையில் பிரிட்டிஷ் அங்கத்தினர்களும் நிறைந்து இருந்தனர். அச் சமயம் பகத்சிங் அங்குச் சென்று இரு குண்டுகளை வீசினுன். பிறகு ஒரு கைத்துப்பாக்கியால் சுட ஆரம் பித்தான். அதிர்ஷ்டவசமாக ஒரே ஓர் அங்கத்தினருக்குமட்டும்தான் பலத்த காயம் ஏற்பட்டது.

வங்காள மாகாணம் எப்பொழுதும் கொந்தளிப்புக்குத் தாயகம். அங்கு பிரிட்டிஷாருக்கு விரோதமாக மாத்திரமல்லாமல் காங்கிரஸ் கட்சியின் தலைமைக்கும் எதிர்ப்பு இருந்தது. அங்குக் கிளர்ச்சியை விரும்பும் சுபாஷ் சந்திர போஷ் (Subhas Chandra Bose) ‘எனக்கு இரத்தத்தைக் கொடுங்கள் ; உங்களுக்கு விடுதலை வாங்கித் தருகிறேன்’ என்ற சுலோகத்தைக் கூறிக்கொண்டிருந்தார். கலகம் செய்யும் மனப் பான்மையுள்ள பலர் அவரைப் பின்பற்றினுர்கள். ஜவஹர்லால் நேருவின் ‘இப்பொழுதே சுதந்திரம்’ என்ற சொற்பொழிவு அவருக்கு இளைஞரின் ஆதரவையும் நன்மதிப்பையும் கொடுத்தது.

காங்கிரஸுக்கும் பிரிட்டிஷாருக்கும் ஒரு யுத்தம் ஆரம்ப மாகப் போவதுபோலிருந்தது. காந்தி மிகவும் எச்சரிக்கையாக எல்லாவற்றையும் கவனித்துவந்தார். அந்த யுத்தத்தில் அவர் சிறப்பான ஆயுதத்தை உபயோகிக்க வேண்டியிருந்திருக்கும். அந்த ஆயுதந்தான் சட்ட மறுப்பு. அரசாங்க ஆயுத சாலை ஒன்றும் அதை உற்பத்தி செய்யவில்லை. பெரும்பாலான கலகக்காரர்களைப் போல் அல்லாமல் அவர் எதிரிகளிடமிருந்து போருக்குத் தேவையான வெடி மருந்து, துப்பாக்கி ரவை, குண்டு முதலியவற்றை எடுத்துக் கொள்ளவில்லை. 1928ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் கல்கத்தாவில் நடக்கப்போகும் வருடாந்திரக் கூட்டத்திற்கு காந்தி சென்றுகொண் டிருக்கும்பொழுது நாகபுரியில் அவருடைய புகைவண்டி நின்றது. ‘சுதந்திர அரசியல் யுத்தம் ஒன்று தொடங்கினுல் நீங்கள் என்ன செய்வீர்கள் ?’ என்று அவருடைய நண்பர்கள் கேட்டனர். ‘நான் அதில் சேர மறுத்துவிடுவேன். இன்று ஒரு தேசிய நெருக்கடியை

சாத்வீக முறையில் எப்படிச் சமாளிப்பது என்று நான் மக்களுக்குப் போதித்துக்கொண்டிருக்கிறேன்' என்று பதில் சொன்னார்.

காங்கிரஸ் கூட்டத்தில் போஸ், நேரு இவர்களைப் பின்பற்றிய வாலிபர்கள் சுதந்திரத்துக்காகச் செயலில் இறங்கவேண்டும் என்றார்கள். உடனே சுதந்திரச் சண்டை தொடங்கவேண்டுமென்பது அதன் பொருள். காந்தி பிரிட்டிஷாருக்கு அதைப்பற்றி இரண்டு வருட எச்சரிக்கை கொடுக்கவேண்டுமென்று வற்புறுத்தினார். எல்லோருடைய நிர்ப்பந்தத்தின்பேரில் அதை ஒரு வருடமாகக் குறைத்தார். 1929 டிசம்பர் 31ஆம் தேதிக்குள் இந்தியாவுக்குக் குடியேற்ற நாட்டு அந்தஸ்து கொடுக்கப்படாவிட்டால் நான் என்னைச் சுதந்திர மனிதன் என்று சொல்லிக்கொள்வேன். மீளா நெறியை மேற்கொண்டுவிட்டேன் என்று காந்தி அறிவித்தார். இதற்குரிய சோதனை 1930ஆம் ஆண்டில் வரக்கூடும்.

பிற்காலத்தில் லார்ட் ஹாலிபாக்ஸ் (Lord Halifax) என்று அழைக்கப்பட்ட வைஸ்ராய் லார்ட் இர்வின் (Lord Irwin) 1928ஆம் வருடம் முதல் நான்கு மாதங்களில் தொழில் சச்சரவுகளையும் அரசியல் பயங்கர இயக்கத்தால் விளையும் ஆபத்துகளையும் தவிர்க்கவேண்டிய வழிகளை ஆராய்ந்துவந்தார் என்று அவரது சரித்திரத்தை எழுதிய ஆலன் காம்பெல் ஜான்ஸன் (Alan Campbell Johnson) கூறுகிறார். தொழில், வியாபார சங்கங்களின் அதிகாரிகள் பலர் கைதுசெய்யப்பட்டனர். இதற்குப் பரிகாரம் உண்மையில் இந்த அடக்குமுறை நடவடிக்கைகளில் இல்லை; அரசியல் பெருநோக்கம் தான் அதற்கு வழி காணமுடியும். அப்பொழுது பிரிட்டிஷ் தொழிற்கட்சி இங்கிலாந்தில் பதவிக்கு வந்தது. இந்திய சுதந்திரத்திற்காகப் பரிந்து பேசுபவராகிய ராம்சே மெக்டோனல்டு (Ramsay MacDonald) பிரதம மந்திரியானார். அதனால் காந்தியும் உற்சாகமடைந்தார். 1929ஆம் வருடம் மே மாதம் 9ஆம் தேதி 'யங் இந்தியா'வில் பிரிட்டிஷ் அரசாங்கத்தோடு செய்துகொள்ளப் போகும் பெருந்தன்மையான ஒப்பந்தத்தினால், சாத்வீக முறையிலே இந்தியாவிற்குச் சுதந்திரம் கிடைத்துவிடும் என்ற நம்பிக்கையை வெளியிட்டிருந்தார். ஆனால், 'அந்த ஒப்பந்தம் உலக ஆதிக்கத்திற்காக பிரிட்டிஷ் அரசாங்கம் செருக்குடன் செய்யும் ஒரு தந்திரமாக இராது; ஆனால், உலக சமுதாயத்திற்குப் பணியாற்றுவதற்காகப் பணிவுடன் செய்துகொள்ளும் ஓர் உடன்பாடக இருக்கும்' என்று காந்தி எச்சரித்தார். அவ் வருடம் கோடையில் இர்வின் லண்டனுக்குச் சென்றபோது, புது அரசாங்கத்துடன் பல மாதங்களாக ஆலோசனை நடத்தினார். டில்லிக்குத் திரும்பியதும் 1929ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 31ஆம் தேதி அவர் ஓர் அறிக்கை விடுத்தார். பிரிட்டிஷ் அரசாங்கம், பிரிட்டிஷ் பிரதிநிதிகளும் இந்தியப் பிரதிநிதிகளும் அடங்கிய

ஒரு வட்டமேசை மகாநாடு நடத்த உத்திதேசித்திருப்பதை அதில் தெரிவித்தார். 'இந்தியாவில் அரசியல் அமைப்பு முன்னேற்றம் அடைந்து டொமினியன் அந்தஸ்தை இயற்கையில் பெறுவதே அதன் நோக்கம்' என்று அறிவித்தார்.

காந்தியும் வயது முதிர்ந்த மற்ற தேசத் தலைவர்களும் இதை ஆதரித்தனர். ஜவஹர்லால் நேருவும் சுபாஷ் சந்திர போஸும் ஆட்சேபித்தனர்; ஆனால், காந்தியும் அவரோடு சேர்ந்தவர்களும் அதைப் பொருட்படுத்தாமல் பிரிட்டனோடு சமாதான ஒப்பந்தம் ஏற்படுத்த முயன்றனர். டிசம்பர் 23ஆம் தேதி பிற்பகலில் லார்டு இர்வினைப் பேட்டி காண ஏற்பாடு செய்தனர். இதற்கிடையில் முன்னாள் வைஸ்ராயாயிருந்த லார்டு ரீடிங், லார்டு மெக்டோனல்டின் இந்தியக் கொள்கைகளைத் தாக்கி காமன்ஸ் சபையிலும் லார்டு சபையிலும் பேசினார். டோரி (Tory) கட்சியைச் சேர்ந்தவர்களும் லிபரல் (Liberal) கட்சியைச் சேர்ந்தவர்களும் தொழிற் (Labour) கட்சி அரசாங்கம் இந்தியாவுக்குக் குடியேற்ற நாட்டு அந்தஸ்து கொடுப்பதாக முன்னதாகவே வாக்களித்ததைக் கண்டித்தார்கள். ஆகவே, காந்தி, ஜின்னா, மோதிலால் நேரு, விட்டல்பாய் பட்டேல், அரசியல் சட்ட அறிஞராகிய சர் டெஜ் பகதூர் சாப்ரூ (Sir Tej Bahadur Sapru) முதலியவர்களோடு லார்டு இர்வின் நடத்திய பேட்டியில், 'எந்தக் குறிப்பிட்ட பொருள்பற்றி வட்டமேசை மகாநாடு முடிவு செய்யும் என்று தம்மால் முன்னதாக வாக்களிக்க முடியாது' என்று கூறிவிட்டார்.

இதுதான் 1929ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் லாகூரில் நடந்த புகழ்பெற்ற காங்கிரஸ் கூட்டத்திற்குத் தீய சகுனமாக இருந்தது. அக் கூட்டத்திற்கு ஜவஹர்லால் நேரு தலைமை வகித்தார். அதற்கு முந்திய மாதந்தான் அவர் தமது நாற்பதாவது பிறந்த நாளைக் கொண்டாடினார். அக் காங்கிரஸ் கூட்டத்தைப் பின்நின்று நடத்தியவர் காந்தி. காங்கிரஸ் கூட்டம் சுதந்திரக் கொடியை ஏற்றியது. பூரண சுதந்திரம் கோரி பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திலிருந்து பிரிந்துசெல்லும் உரிமை உண்டு என்று காந்தி தீர்மானம் கொண்டுவந்தார். 'இப்பொழுது சுய ராஜ்யம் என்பதற்குப் பூரண சுதந்திரம் என்பது பொருள்' என்றும் காந்தி சொன்னார். காங்கிரஸ் அதன் அங்கத்தினர்களையும் நண்பர்களையும் சட்டசபைகளிலிருந்து விலகிக்கொள்ளும்படி கட்டளையிட்டது. சட்ட மறுப்பையும் வரிகொடா இயக்கத்தையும் அனுமதித்தது. சத்தியாக்கிரக இயக்கத்தை எப்பொழுது ஆரம்பிக்கவேண்டுமென்று சொல்வதற்குக் காங்கிரஸ் நிர்வாகக் கமிட்டிக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டது. 'அந்தக் கடமைக்கு முக்கியமாகப் பொறுப்பு ஏற்க வேண்டியது நான் என்று எனக்குத் தெரியும்' என்று காந்தி சொன்னார். எந்தச் சட்டமறுப்பு இயக்கம் நடத்துவதானாலும், அதன்

மூளையும், உள்ளமும், கொண்டுசெலுத்தும் கையும் காந்தியே என்பது அனைவரும் அறிந்ததே. ஆகவே, அதைத் தொடங்கவேண்டிய நேரத்தையும், இடத்தையும், என்ன காரணத்திற்காகச் சத்தியாக்கிரகம் செய்யவேண்டும் என்கிற பொறுப்பையும் காந்தியிடம் விட்டுவிட்டனர். அவற்றைப்பற்றிச் சிந்திக்க காந்தி ஆசிரமத்திற்குச் சென்றார்.

இனி, நாட்டில் என்ன நடக்கப்போகிறது என்பதை அறிய மக்கள் ஆத்திரத்துடனிருந்தனர். அச் சமயம் ரவீந்திரநாத் தாகூர் சபர்மதி ஆசிரமம் பக்கம் இருந்தார். காந்திக்கு அவரிடம் ஆழ்ந்த மரியாதை உண்டு. ஜனவரி 18ஆம் தேதி தாகூர் காந்தியைப் பார்க்கவந்தார். அவர் 1930-ல் இந்தியாவுக்கு என்ன வைத்திருக்கிறார் என்று காந்தியை ஆவலோடு கேட்டார். 'இரவும் பகலும் நான் அதுபற்றித் தீவிர மாகச் சிந்தித்துக்கொண்டிருக்கிறேன். சுற்றியுள்ள இருளிலிருந்து நான் வெளிச்சம் ஒன்றும் பெறமுடியவில்லை' என்று காந்தி பதிலிறுத் தார்.

'அதிக பலாத்காரம் நடைபெறுகிறது' என்று காந்தி கூறினார். இந்தச் சந்தர்ப்பத்தில் ஆயுதந் தாங்கிய கலகத்திற்குப் பதிலாக சாத்வீகச் சட்ட மறுப்புதான் உகந்தது. ஆகையால், தேசம் முழுவதும் பலாத்காரம் பரவமுடியாதபடி ஒருவித சட்டமறுப்பை ஆரம்பிக்க அவர் ஆராய்ந்துகொண்டிருந்தார். ஆறு வார காலம் அவ்வாறு சிந்தித்துக்கொண்டிருந்தார். தேசம் பொறுமையற்றுக் காத் திருந்தது. இந்தியாவின் கண்கள் காந்தியின் குடிசையை நோக்கி இருந்தன.

விரைவில் காந்திக்குத் தாம் செய்யவேண்டியது என்னவென்று தெரிந்துவிட்டது.

அவர் தம்முடைய திட்டத்தைச் செயல்படுத்துமுன் வைஸ்ராய்க்கு அதைப்பற்றித் தெரிவித்தார். 'இரகசியமாகச் செயலாற்றுவது குடியரசின் கொள்கைகளுக்கு முரண்பட்டது' என்ற கொள்கை உடையவர் காந்தி. அவர் இர்வினுக்கு எழுதிய கடிதத்தைப்போல் சிறப்புமிக்க கடிதம் எந்த அரசாங்கத் தலைவருக்கும் கிடைத்திருக்காது. 'அன்புள்ள நண்பருக்கு' என்று அக் கடிதத்தை ஆரம்பித்து, 'சாத்வீகச் சட்ட மறுப்பில் இறங்குமுன்—இத்தனை வருடங்களாக நான் பயந்துகொண்டிருந்த அபாயத்தில் இறங்குமுன்—அதிலிருந்து விடுபட ஒரு வழி சொல்லுமாறு உம்மைக் கேட்டுக்கொள்கிறேன்' என்று காந்தி எழுதியிருந்தார். காந்திக்கு எப்பொழுதும் சமரசப் பேச்சுவார்த்தை நடத்துவதில் நம்பிக்கை உண்டு. அப் பேச்சு வார்த்தை ஒருவேளை எதிரியின் மனத்தை மாற்றலாம். மேலும் அவ்வாறு இருக்கும்பொழுது, மனிதர்களுக்கு நான் தீங்கிழைப்பதைப்

பற்றிக் கேட்கவே வேண்டியதில்லை. அக்கடிதத்தில் அவர் கூறுவதாவது: 'நான் வேண்டுமென்று எந்த உயிருக்கும் தீமை விளைவிக்கமாட்டேன்; விளைவிக்க முடியாது. எதிரிகள் எனக்கும் என்னைச் சேர்ந்தவர்களுக்கும் எவ்வளவு தீமை இழைத்தபோதிலும் நான் அவர்களுக்குத் தீமை செய்யமாட்டேன். நான் இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சியை ஒரு சாபமென்று கருதியபோதிலும், நான் ஓர் ஆங்கிலேயருக்கும் அவருக்கு இந்தியாவில் இருக்கும் நியாயமான உரிமைக்கும் ஒரு தீமையும் செய்ய நினைக்கமாட்டேன். நான் ஏன் பிரிட்டிஷ் ஆட்சியை ஒரு சாபமாகக் கருதுகிறேன்? கைதேர்ந்த சுரண்டுதல் முறையினாலும் நாசகரமான, அதிகப் பணச்செலவான தாங்கவொண்ணாத மிலிட்டரி, சிவில் நிர்வாக முறைகளினாலும் பேசத் தைரியமில்லாத லட்சக்கணக்கான இந்தியர்களை பிரிட்டன் ஏழைகளாக்கிவிட்டது. இத்தகைய ஆட்சி முறை அரசியல் உரிமை அற்ற எங்களை அடிமைகளாக்கிவிட்டது. எங்கள் பண்பின் அடித்தளத்தையே பெயர்த்துவிட்டது. இந்தியாவுக்குக் குடியேற்ற நாட்டு அந்தஸ்து சமீபத்தில் அளிக்கவேண்டும் என்ற நோக்கம் அதற்கு இருப்பதாகவே தெரியவில்லை' என்று முடித்தார்.

பிறகு காந்தி குறிப்பிட்ட சில விஷயங்களை விளக்கி எழுதினார். 'சுதந்திர இந்தியாவில், குடியானவர்களின் நலனே, முக்கிய நோக்கமாக இருக்கும் வகையில் வருமானமுறை முழுதுமே மாற்றியமைக்கப்படும். ஆனால், பிரிட்டிஷ் ஆட்சி குடியானவனின் உயிரையே அழிக்கத் திட்டமிட்டதாகத் தெரிகிறது. அவன் உயிர்வாழ்வதற்கு உபயோகிக்கும் உப்புக்குக்கூட அதிகமாக வரி விதிக்கப்பட்டிருக்கிறது. அதன் பளு அவனால் தாங்கமுடியாத அளவிற்கு இருக்கிறது. உப்பு ஒன்றே பணக்காரனைவிட ஏழை அதிகமாக உபயோகிக்கும் பொருள் என்பதை நினைக்கும்போது அவன்மேல் இருக்கும் பளு இன்னும் பாரமாகத் தோன்றுகிறது' என்று காந்தி எழுதியிருந்தார். குடியானவனுடைய வருட வருமானத்தில் மூன்று நாள் வருமானம் உப்புவரிக்காகக் கொடுக்கப்படுகிறது என்று காந்தி வேறோர் இடத்தில் விளக்கி இருக்கிறார். வெப்ப மண்டலத்துப் பொசுக்கும் வெயிலில் குடியானவன் வயல்களில் வேலை செய்கிறபடியால் அவனுக்குப் பணக்காரனைவிட அதிகமாக வியர்க்கிறது. அதனால் அவன் அதிக உப்பு உபயோகிக்கவேண்டியிருக்கிறது.

அந்தக் கடிதத்தில் காந்தி இன்னும் பல குறைகளை எடுத்துக் காட்டியிருந்தார். மதுபானம், மற்றும் போதைதரும் வஸ்துக்கள் இவற்றிலிருந்து கிடைக்கும் வருமானம்கூட, ஏழைகளிடமிருந்து பெறும் பணமே ஆகும். குடிவகை அவர்களுடைய பணத்தை ஒழிப்பதுடன் ஆரோக்கியத்தையும் ஒழுக்கத்தையும் அழிக்கிறது.

'உலகத்திலே மிதமிஞ்சிய செலவில் நடைபெற்றுவரும் அந்நிய நிர்வாகத்திற்காகவே மேலே சொல்லப்பட்ட அநீதிகள் நடந்துவருகின் றன என்பதை நிரூபித்துக் காட்டமுடியும். உம்முடைய சம்பளத்தைப் பாரும். உமக்கு மாதத்திற்கு 21,000 ரூபாய்க்குமேல் கிடைக்கிறது. இதைத்தவிர, வேறு வருமானங்களும் உமக்குக் கிடைக்கின்றன. இந்தியாவில் ஒரு மனிதனுக்கு நாள் ஒன்றிற்குச் சராசரி வருமானம் இரண்டு அணுவுக்கும் குறைவு. நீர் ஒரு நாளைக்கு 700 ரூபாய்க்கு மேல் வாங்குகிறீர். ஆகவே, இந்தியாவின் சராசரி வருமானத்தைவிட ஐயாயிரம் மடங்கு அதிகமாக வாங்குகிறீர். பிரிட்டிஷ் பிரதம மந்திரி பிரிட்டனின் சராசரி வருமானத்தைவிட தொண்ணூறு மடங்கு அதிக மான சம்பளத்தைத்தான் பெறுகிறூர். இந்த விஷயத்தைப் பற்றிச் சிந்திக்கும்படி நான் உம்மிடம் மண்டியிட்டுக் கேட்டுக்கொள் கிறேன். வருந்தத்தக்க ஓர் உண்மையை விளக்குவதற்காக உம் முடைய சொந்த உதாரணத்தை எடுத்துக்கொண்டேன். உம்முடைய மனத்தைப் புண்படுத்தவேண்டுமென்று நான் விரும்பவில்லை. தனி மனிதன் என்ற முறையில் நான் உமக்குப் பெரும் மதிப்பு வைத்திருக் கிறேன். நீர் வாங்கும் சம்பளம் உமக்குத் தேவையில்லை என்று நினைக்கிறேன். நீர் வாங்கும் சம்பளம் முழுவதும் ஒருவேளை தர்மத் திற்கே செலவாகலாம். ஆனுல், ஆளப்படுகிறவர்களை இரக்கமின்றிச் சுரண்டுவதை ஆதரிக்கும் இந்த அரசியல் முறையை ஒழிக்கவேண்டும். வைஸ்ராயின் சம்பளத்தைப்பற்றிய இந்த உண்மை பொதுவாக பிரிட்டிஷ் நிர்வாகம் முழுவதற்கும் பொருந்தும்' என்று எழுதினுர்.

மேலும் அவர் கூறியதாவது: 'நன்ருக அமைக்கப்பட்ட பிரிட் டிஷ் அரசாங்கத்தின் பலாத்காரத்தை, நன்ருக அமைக்கப்பட்ட சாத் வீகந்தான் தடுக்கமுடியும். அந்தச் சாத்வீகம் சட்டமறுப்பின்மூலம் வெளியிடப்படும். பிரிட்டிஷ் மக்களைச் சாத்வீகத்தின்மூலம் மனம் மாறச் செய்யவேண்டுமென்பது என் அவா. அப்படிச் செய்வதால் இந்தியாவிற்கு அவர்கள் இழைத்துள்ள தீமையை அவர்கள் உணரச் செய்யவேண்டும்.'

பிறகு அவர் சமரசப் பேச்சுவார்த்தை நடத்தும்படி கேட்டுக் கொண்டார். 'இந்தத் தீமைகளை எல்லாம் உடனே ஒழித்து, சம அந்தஸ்து உடைய இரண்டு கட்சிகள் மகாநாடு கூடிப் பேச்சு வார்த்தை நடத்த ஏற்பாடுசெய்ய வேண்டுகிறேன்' என்ருர்.

'ஆனுல், இந்தத் தீமைகளை ஒழிக்க உம்மால் வழிகாண முடியாவிட் டால், என்னுடைய கடிதம் உம் நெஞ்சை உருக்காவிட்டால், இம் மாதம் 11ஆம் தேதி நானும் ஆசிரமத்திலுள்ள மற்றவர்களும் உப்புச் சட்டத்தை மீறுவோம். அப்பொழுது நீர் என்னைக் கைதுசெய்து என் திட்டத்தை முறியடிப்பீர் என்று எனக்குத் தெரியும். எனக்குப் பிறகு

இவ் வேலையைத் தொடர்ந்து ஒழுங்காகச் செய்யப் பல ஆயிரம் மக்கள் சித்தமாயிருக்கிறார்கள் என்று நம்புகிறேன்' என்று அவருடைய திட்டத்தைப்பற்றியும் எழுதினார்.

இக் கடிதத்திற்கு லார்டு இர்வின் பதில் எழுதவில்லை. அவருடைய காரியதரிசி கடிதத்தைப் பெற்றுக்கொண்டதாக ரசீது அனுப்பினார். இர்வின் காந்தியைப் பார்க்கவும் மறுத்தார். ஆனால், அவரைக் கைதுசெய்யவில்லை.

மார்ச் 11ஆம் தேதி நெருங்கியது. இந்தியா உணர்ச்சிவசப்பட்டிருந்தது. உள்நாட்டு, வெளிநாட்டுப் பத்திரிகைக்காரர் பலர் ஆசிரமத்தில் காந்தியை விடாது பின்தொடர்ந்தனர். அவர் என்ன செய்யப்போகிறார் என்பதைப் பார்ப்பதற்காக ஆயிரக்கணக்கான மக்கள் ஆசிரமத்தைச் சுற்றித் தங்கியிருந்தனர். உலகத்தின் பல பாகங்களிலிருந்தும் தந்திகளும் செய்திகளும் அகமதாபாத் தபால் நிலையத்தில் வந்து குவிந்துகொண்டிருந்தன. நியூயார்க்கிலிருந்து தவத்திரு ஜான் ஹேன்ஸ் ஹோம்ஸ் (Reverend Dr. John Haynes Holmes) 'கடவுள் உம்மைக் காப்பாராக' என்று தந்தி கொடுத்திருந்தார்.

மார்ச் 12ஆம் தேதி பிரார்த்தனையை முடித்துவிட்டு மகாத்மாவும் ஆசிரமத்திலுள்ள 78 ஆண்களும் அந்தக் கிராமத்தைவிட்டுக் கால் நடையாகவே புறப்பட்டனர். போலீஸின் வசதிக்காக அவர்களுடைய பெயர்களும் அவர்களைப்பற்றிய குறிப்புகளும் 'யங் இந்தியா'வில் பிரசுரிக்கப்பட்டிருந்தன. 'கடவுளின் பெயரால் நாங்கள் செல்கிறோம்' என்று காந்தி சொன்னார்.

அவர்கள் நேர்தெற்கே கடலை நோக்கிச் சென்றனர். இருபத்து நான்கு நாட்கள் நடந்தனர். இரும்பு முனையும், ஒரங்குலச் சுற்றளவும், ஐம்பத்து நான்கு அங்குல நீளமுமுள்ள ஒரு மூங்கில் தடியை ஊன்றிக்கொண்டு காந்தி நடந்தார். ஏறிச்செல்வதற்கு ஒரு குதிரை இருந்தது. ஆனால், காந்தி அதைப் பயன்படுத்தவில்லை. அதிகச் சுமை இன்றி, முற்பகல் சிறிது தூரமும், பிற்பகல் சிறிது தூரமும் ஆக மொத்தம் சுமார் 12 மைல் தினமும் நடப்பது சுலபமான காரியந்தான். விளையாட்டுபோல் நடந்துவிடலாமே என்று காந்தி சொன்னார். சில நாட்களில் தினசரி 15 மைல்கள்கூட நடந்தனர். அப்பொழுது காந்திக்கு வயது 61. அவருடன் நடந்துசென்ற அவருடைய ஆசிரமவாசிகள் பெரும்பாலோர் களைப்படைந்தனர். அவர்களது உள்ளங் கால்கள் புண்பட்டன. 'தற்காலத்தினர் உடல்பலமற்றவர்கள்; அதிக செல்வத்தில் வளர்ந்தவர்கள்' என்று காந்தி வேடிக்கையாக அவர்களைப் பார்த்துச் சொன்னார். தினமும் ஒருமணி நேரம் நூல் நூற்றார். அன்றாடம் தாம் செய்தவற்றைக் குறிப்பெழுதிவைத்தார்.

காந்தியும் அவரைப் பின்பற்றிச் சென்றவர்களும் அசுத்தமான சுற்றுப்பாதைகளைக் கடந்து கிராமம் கிராமமாகச் சென்றுகொண்டிருந் தனர். கிராமவாசிகள் பாதைகளில் நீர் தெளித்துப் பச்சை இலைகளைப் பரப்பினர். போகிற வழியில் சத்தியாக்கிரகிகள் தங்கின இடங்களி லெல்லாம் தேசிய வர்ணங்களில் கொடிகள் கட்டியிருந்தன. அவர்கள் அந்த இடத்தைவிட்டுப் போகிறபோது கிராமவாசிகள் மண்டியிட்டு அவர்களை வணங்கினுர்கள். ஒரு நாளைக்கு இரண்டு அல்லது மூன்று முறைதான் சத்தியாக்கிரகிகள் அவர்கள் செல்லும் வழியில் தங்கினுர் கள். அப்பொழுது காந்தி மக்களைப் பார்த்து வீட்டில் நூற்று நெய்த துணிகளைக் கட்டவேண்டுமென்றும், மதுபானங்கள் அருந்துவதை நிறுத்தவேண்டுமென்றும், தூய்மையான வாழ்க்கை வாழவேண்டும் என்றும் அறிவுறுத்தினுர்.

அவர்கள் பிரயாணம் செய்த பிரதேசங்களில் முந்நூறுக்கும் அதிக மான கிராம மணியக்காரர்கள் தங்களுடைய அரசாங்க வேலையை ராஜினுமா செய்தனர். கிராமத்து மக்கள் சத்தியாக்கிரகிகளை அடுத்த கிராமத்துவரை கௌரவக் காவலர்மாதிரி கொண்டுபோய்விட்டுவந்த னர். இளைஞர்களும், ஆண்களும், பெண்களும் ஆசிரமவாசிகளோடு வந்து சேர்ந்துகொண்டனர். ஏப்ரல் 5ஆம் தேதி காந்தி தண்டிக் கடற் கரையை அடைந்தபோது பல ஆயிரம் மக்கள் அடங்கிய ஒரு சாத்வீகச் சேனையே அங்கு இருந்தது.

ஏப்ரல் 5ஆம் தேதி இரவு முழுவதும் ஆசிரமவாசிகள் தூங்காமல் பிரார்த்தித்துக்கொண்டிருந்தனர். அடுத்த நாள் அதிகாலையில் காந்தி யுடன் கடலுக்குச் சென்றனர். காந்தி கடலில் குளித்துக் கரைக்கு வந்தார். அங்கே அலையால் ஒதுக்கப்பட்டிருந்த சிறிது உப்பைக் கையில் அள்ளினுர். அவர் அருகில் நின்றுகொண்டிருந்த திருமதி சரோஜினி நாயுடு, "வாழ்க மீட்பாளர்" என்று ஆரவாரம் செய்தார்.

இவ்விதம் காந்தி பிரிட்டிஷ் உப்புச் சட்டத்தை மீறினுர். அரசினர் ஏகபோக உப்பு உரிமையாளரிடமிருந்து வாங்காத உப்பை வைத் திருப்பது தண்டிக்கப்படும் குற்றம் என்று சட்டம் விதிக்கப்பட்டிருந்தது. காந்தி ஆறு வருடங்களாக உப்பு உபயோகிக்கவில்லை.

காந்தி புகைவண்டியிலாவது காரிலாவது சென்றிருந்தால் அவரது இயக்கம் அவ்வளவு முக்கியத்துவம் பெற்றிராது. ஆனுல், அவர் 'தேசம் செயலில் இறங்குவதற்கு நான் நாள் குறிப்பிடுவேன். எல்லோரும் கவனமாக இருங்கள்' என்று கூறிக்கொண்டு 24 நாட்களில் 241மைல்கள் கிராமங்கள் வழியே நடந்துசென்று, பிறகு உலகமே வியக்குமாறு கடற்கரையில் கைநிறைய உப்பை அள்ளிப் பெரிய அரசாங்கத்தின் உப்புச் சட்டத்தை மீறினுர். இங்ஙனம் மக்களுக்கு விழிப்பை உண்டு

பண்ணிச் சட்டத்தை மீறுவதற்குச் சிந்தனு சக்தியும், பெருந்தன்மை யும், ஒரு காரியத்தைப் பலரும் அறியும்படி செய்யக்கூடிய ஆற்றலும் வேண்டும். இச் சம்பவம் படிக்காத ஏழை'மக்களுக்கு வியப்பு நிறைந்த பக்தியை ஊட்டியது. காந்தி தண்டியில் உப்பு அள்ளினது, 'நெப் போலியன் எல்பா தீவிலிருந்து பாரிஸ் நகருக்குத் திரும்பினதற்கொப் பாகும்' என்று சுபாஸ் சந்திர போஸ் வர்ணித்தார்.

இச் செயலை முடித்துவிட்டு காந்தி வேறென்றிலும் ஈடுபடவில்லை. இந்தியர் இனி என்ன செய்யவேண்டும் என்பதை அறிந்துகொண்டனர். கடற்கரையிலிருந்து காந்தி சிறிது உப்பு எடுத்ததால் அவர் 'இந்தியா வுக்குச் சொல்லவேண்டிய செய்தியைச் சொல்லிவிட்டார்.

இந்தியாவின் நீண்ட கடற்கரையிலும் அதன் எண்ணற்ற வளை குடாக்களிலும் குடியானவர்கள் கஷ்டப்பட்டுக் கடலில் தட்டுகளுடன் இறங்கிச் சட்ட விரோதமாக உப்பு தயாரித்தனர். மக்களைப் போலீஸார் பெருவாரியாகக் கைதுசெய்தனர். காங்கிரஸ் தொண்டர்கள் சட்ட விரோதமாகத் தயாரித்த உப்பைப் பட்டணங்களில் கொண்டுவந்து விற்றனர். பலருக்குக் குறுகியகால சிறைவாசம் கிடைத்தது. பம்பாயி லுள்ள காங்கிரஸ் தலைமைக் காரியாலயத்தைப் போலீஸார் சோதனை போட்டனர். அங்கு மேல் தளத்தில் உப்புக் காய்ச்சப்பட்டது. அதை எதிர்த்து 60,000 மக்கள் கூடினர். நூற்றுக் கணக்கான மக்கள் கைகளில் விலங்கு மாட்டப்பட்டும் கயிறுகளினுல் கட்டப்பட்டும் சிறைக்கு இழுத் துச் செல்லப்பட்டனர். தண்டியில் காந்தி எடுத்த உப்பு 1,600 ரூபாய்க்கு ஏலத்திற்கு விடப்பட்டு அந்தப் பணம் ஒரு பொதுநிதிக்கு வழங்கப் பட்டது. உப்புச் சட்டத்தை மீறியதற்காக ஜவஹர்லால் நேருவுக்கு ஆறுமாதச் சிறைத்தண்டனை அளிக்கப்பட்டது. கல்கத்தா மேயர் ராஜத்துரோகச் செய்தி ஒன்றைப் பொதுமக்களுக்கு வாசித்துக்காட்டி ஞர். இந்தியத் துணிகளைப் பகிஷ்கரிக்குமாறும் வற்புறுத்தினுர். அதற் காக அவருக்கும் ஆறுமாதச் சிறைத்தண்டனை கிடைத்தது. மகாத்மா காந்தியின் மிகவும் உண்மையான சீடர்களில் ஒருவரான கிஷோர்லால் மஷ்ருவாலா (Kishorlal Mashruwala) இரண்டு வருடங்கள் காவ லில் வைக்கப்பட்டார். காங்கிரஸ் தலைவர்கள் சிறைவைக்கப்பட்டதும் பல நகரங்கள் பொது வேலைநிறுத்தத்தை நடத்தின. எல்லா மாகாணங் களிலும் தேசத் தலைவர்கள் கைதுசெய்யப்பட்டனர். ஃபெடரல் சட்ட சபைக்குச் சபாநாயகராக இருந்த விட்டல்பாய் பட்டேல் ராஜினுமா செய்தார். அவர் அரசாங்கத்தைப் பகிஷ்கரிக்கும்படி மக்களுக்கு ஆலோசனை கூறினுர். வடமேற்கு எல்லை மாகாணத்திலுள்ள பெஷா வரில் போலீஸாரும் பட்டாளத்தாரும் நகரத்தைவிட்டுத் துரத்தப்பட் டனர். அதன் விளைவாக இராணுவம் பெஷாவரை மறுபடியும் கைப் பற்றி 70 பேரைக் கொன்றது. 100 பேரைக் காயப்படுத்தியது. அரசாங்கம் எல்லா தேசியப் பத்திரிகைகளையும் தணிக்கை செய்தது.

இர்வின் பிரபுவின் வரலாற்று ஆசிரியர் பின்வருமாறு கூறுகிறுர். 'வைஸ்ராய் ஏறக்குறைய 60,000 அரசாங்கக் கைதிகளைச் சிறைக்கு அனுப்பினுர். காந்தி தண்டிக் கடலில் குளித்த ஒரு மாதத்திற்குப் பிறகு இந்தியா ஆத்திரத்தோடு கொந்தளித்தது. அந்த இயக்கத்தைத் தொடர்ந்து நடத்துவதற்கு இந்தியர் ஆவலுள்ளவர்களாயிருந்தனர். பலாத்காரமாக நடந்துகொண்டால் காந்தி சட்டமறுப்பு இயக்கத்தை நிறுத்திவிடுவார் என்று அவர்களுக்குத் தெரியும். ஆகையால் அடி, உதை, சிறைத்தண்டனை எல்லாம் கிடைத்ததும் அவர்கள் சாத்வீக மாகவே இருந்தனர்.'

உப்புக் குற்றவாளியாகி ஏறக்குறைய ஒரு மாதத்திற்குப் பிறகு மார்ச் 4ஆம் தேதி காந்தி கைதுசெய்யப்பட்டார். அச் சமயம் அவர் குற்றம் நடந்த இடத்திற்குச் சில மைல் தூரத்தில் ஒரு கூடாரத்தில் இரவில் தூங்கிக்கொண்டிருந்தார். சிறை அதிகாரிகள் அவர் உயரத்தை அளந்து ஐந்து அடி ஐந்து அங்குலம் என்று குறித்துக்கொண்டனர். வலது தொடையில் ஒரு சிறு காயத்தின் தழும்பு, வலது கண் இமையின் கீழ்ப்பாகத்தில் ஒரு மச்சம், இடது முழங்கையின் கீழ் ஒரு பட்டாணிக் கடலை அளவு ஒரு தழும்பு—இவை, அவருடைய அங்க அடையாளங்கள். காந்தி சிறையிலிருப்பதை விரும்பினுர். 'நான் மிகவும் மகிழ்ச்சியா யிருக்கிறேன்' என்று குமாரி சிலேடுக்குக் கடிதம் எழுதினுர். சிறை யிலே அவர் முன்னிலையில் ஒரு வெள்ளாடு கொண்டுவந்து பால் கறந்து கொடுக்கப்பட்டது. (காந்தி பசும்பால், எருமைப்பால் குடிக்கமாட்டார். ஒரு தடவை அவர் சாகுந்தறுவாயில் இருக்கும்போது கஸ்தூரிபா அவரை ஆட்டுப்பால் குடிக்கச் சம்மதிக்கும்படி செய்துவிட்டார். ஆட்டுப்பால் அவருக்குக் குணமளித்தது. அதிலிருந்து ஆட்டுப்பாலை விடாமல் குடித்துவந்தார்.)

காந்தி கைதுசெய்யப்படுவதற்குச் சில நாட்களுக்கு முன்பு 'கடவுளுக்குச் சித்தமானுல்' அவரும், அவருடைய நண்பர் சிலரும் பம்பாய்க்கு 150 மைல் வடக்கேயுள்ள 'தர்சனு' உப்பளத்தை சாத்வீக முறையில் படையெடுக்கப்போவதாக வைஸ்ராய்க்குத் தெரிவித்தார். கடவுளுக்கு அது சித்தமில்லை. அவருக்குப் பதில் கவி சரோஜினி நாயுடு தலைமையில் 2,500 தொண்டர்கள் அங்குச் சென்றனர். ஆனுல், புறப்படுமுன் அவர்கள் அடிபட நேரிடுமென்றும், 'ஆனுல், நீங்கள் எதிர்க்கக்கூடாது. கையைத் தூக்கவும் கூடாது. உங்களுக்குக் கொடுக் கும் அடியைத் தடுக்கவும் கூடாது' என்றும் எச்சரித்தார். 'யுனைட்டட் பிரஸ்' (United Press) பத்திரிகையின் நிருபரான வெப் மில்லர் (Webb Miller) இரண்டாவது உலக யுத்தத்தின்போது இறந்து போனுர். அவர் தர்சனு உப்பளப் படையெடுப்பின்போது அந்த இடத் தில் இருந்தார். அவர் தாம் நேரில் பார்த்தவற்றை முதலில் துரிதமான செய்தி அல்லது கடிதங்களாக எழுதினுர். பின் அதைப்பற்றி 'நான்

அமைதியைக் காணவில்லை' என்ற புத்தகமாக எழுதினர். மகாத்மாவின் இரண்டாவது மகனுன மணிலால் அக் கூட்டத்தை வழிநடத்தினர். 'அவர்கள் உப்பளங்களை அணுகியபோது, அவற்றைச்சுற்றி முள் கம்பியால் வேலி போடப்பட்டிருந்தது.' ஆறு பிரிட்டிஷ் அதிகாரிகளின் கீழ் 400 சூரத் போலீஸ்காரர் காவல் புரிந்தனர். 'பூரண அமைதியோடு வேலிக்கு 100 கெஜ தூரத்தில் காந்தியின் ஆட்கள் நின்றுவிட்டனர். அவர்களில் தெரிந்தெடுக்கப்பட்ட சிலர் அகழியிலுள்ள நீரைக் கடந்து கம்பி வேலியைப் போய் அடைந்தனர். அதிகாரிகள் அவர்களைப் பின் வாங்கும்படி கட்டளையிட்டனர். ஆனுல், அவர்கள் முன்னே செல்ல அடியெடுத்துவைத்தனர். திடீரென்று மேல் அதிகாரிகளிடமிருந்து கட்டளை பிறந்தது; சூரத் போலீஸ்காரரில் பலர் முன்னேறிக்கொண்டிருந்த சத்தியாக்கிரகிகள்மேல் பாய்ந்து தங்களுடைய உருக்குப் பிடியுள்ள தடிகளினுல் தொண்டர்களின் தலைகளில் அடித்தனர். அவர்கள் ஒருவர்கூட அந்த அடிமாரியைத் தடுக்கக் கையை உயர்த்தவில்லை. அடிகளைப் பெற்று வலி தாங்காமல் தொண்டர்கள் ஒருவர்பின் ஒருவராக விழுந்தனர். பாதுகாப்பு ஒன்றும் இல்லாதவர்களின் மண்டைகளில் விழுந்த சகிக்கமுடியாத தடியடி ஓசையை நான் நின்ற இடத்திலிருந்து கேட்க முடிந்தது. காத்துக்கொண்டிருந்த தொண்டர்கள் ஒவ்வோர் அடி விழும்போதும் புலம்பினுர்கள். அடிபட்டவர்களின் வேதனையைக் கண்டு, அனுதாபப்பட்டுப் பெருமூச்சு விட்டனர். அடிபட்டவர்களில் சிலர் தன்னறிவு இல்லாமல் கை கால்களை நீட்டிக்கொண்டு கீழே விழுந்தனர். சிலர் மண்டைகள் உடைந்தும் கைகால்கள் முறிந்தும் கீழே விழுந்து துடித்தனர். உயிரோடிருந்தவர்கள் அமைதியாக வரிசைக் கிரமமாக அடிபட்டுக் கீழே விழும்வரை நடந்தனர். முதல் வரிசையிலுள்ளவர்கள் விழுந்ததும், அடுத்த வரிசையிலுள்ளவர்கள் சென்றனர். அவர்களும் அடிபட்டுக் கீழே வீழ்த்தப்படுவார்கள் அல்லது கொல்லப்படுவார்கள் என்பது அவர்களுக்குத் தெரியும். அப்படி இருந்தும், முன்னேறிச்செல்ல அவர்கள் பயப்படுவதையோ, தயங்குவதையோ நான் காணவில்லை. அவர்களை உற்சாகப்படுத்த ஆட்கள் கிடையாது. ராணுவ கீதம் கிடையாது. அவர்களுக்குச் சாவோ, ஆபத்தோ ஏற்படாது என்பதற்கு அறிகுறியும் இல்லை. எனினும், அவர்கள் தலையை நிமிர்த்தி நிதானமாக நடந்துசென்றனர். இயந்திரம்போல, முறையாகப் போலீஸார் பாய்ந்துவந்து இரண்டாவது வரிசையிலுள்ளவர்களையும் அடித்துத் தள்ளினுர்கள். அங்கு ஒரு சண்டையுமில்லை. போராட்டமுமில்லை. அடிபட்டுக் கீழே விழும்வரை தொண்டர்கள் முன்னேறிக்கொண்டிருந்தனர். 25 பேர் அடங்கிய இன்னும் ஒரு பிரிவினர் முன்னே சென்று தரையிலே உட்கார்ந்தனர். போலீஸார் அவர்களுடைய வயிறுகளிலும் உயிர்நிலைகளிலும் முரட்டுத்தனமாக உதைத்தனர். அடுத்த ஒரு பகுதியினர் வந்தனர். கோபமடைந்த போலீஸார் அவர்கள் கைகால்களைப் பிடித்து இழுத்து, அகழி

யில் கொண்டுதள்ளினர். நான் நின்றிருந்த இடத்திற்கு ஒருவன் இழுத்து வரப்பட்டான். அவன் உடல் நீரில் விழுந்ததால் சிதறிய சேறு கலந்த நீர் என்னை நனைத்தது. மற்ருெரு போலீஸ்காரன் ஒரு சத்தியாக்கிரகியை நீரில் தள்ளி தலையில் லத்தியால் அடித்தான். இரத்தம் சிந்திக்கொண்டு உணர்ச்சியற்றிருந்த மனிதரை டோலிகளில் பல மணி நேரம் தூக்கிச் சென்றுகொண்டிருந்தனர்.'

ஒரு பிரிட்டிஷ் அதிகாரி திருமதி நாயுடுவின் கையைப் பிடித்து, 'சரோஜினி நாயுடு, நான் உம்மைக் கைதுசெய்கிறேன்' என்ருர். அவர் அந்த அதிகாரியின் கையை உதறிவிட்டு, 'நான் வருகிறேன். என்னைத் தொடவேண்டாம்' என்ருர். அவ்வாறே மணிலாலும் எதிர்ப்பு ஒன்றும் சொல்லாமல் தம்மைக் கைதுசெய்ய ஒப்புக்கொண்டார். சூறையாடுவதும், மக்களை அடிப்பதும், உதைப்பதும் பல நாட்களாக நடந்தன.

இந்தியா இப்பொழுது சுதந்திர மடைந்துவிட்டது. சட்டபூர்வமாகவோ, பெயரளவிலோ ஒரு மாறுதலும் இல்லை. இந்தியா இன்னும் பிரிட்டிஷாரின் ஒரு குடியேற்ற நாடாகத்தானிருந்தது. ஆனுல், ஒரு வேற்றுமை இருந்தது. 1930ஆம் ஆண்டு மே மாதம் 17ஆம் தேதி 'மான்செஸ்டர் கார்டியன்' (Manchester Guardian) பத்திரிகையில் ரவீந்திரநாத் தாகூர் அதை விளக்கிக்கூறினுர். 'ஆசியாவில் முன்பு தனக்கு இருந்த அறவியல் மதிப்பினை ஐரோப்பா இப்பொழுது முழுவதும் இழந்துவிட்டது. நேர்மையான விவகாரங்களுக்கும் உயர்ந்த கொள்கைகளுக்கும் பரிந்து போராடும் நாடு என்று இனி ஐரோப்பாவை உலகில் யாரும் கருதமாட்டார்கள். மேற்கத்திய ஆதிக்கத்தை நிலைநாட்டுவதிலும் அதன் எல்லைக்கு அப்பாலுள்ள நாடுகளைச் சுரண்டுவதிலும் ஐரோப்பா ஈடுபட்டிருக்கிறது என்று கருதுவர். ஐரோப்பாவிற்கு உண்மையிலே இது ஒரு பெரிய ஆத்மீகத் தோல்வியாகும். தன்னுடைய ஜீவாதார உரிமைகளைப் போற்றிக்கொள்வதற்கும் ஆக்கிரமிப்புகளிலிருந்து தன்னைக் காப்பாற்றிக்கொள்வதற்கும் ஆசியாவுக்கு ஆற்றலில்லையாயினும், ஐரோப்பாவை உயர்வாக மதிக்காமல் குறைவாக நினைக்க ஆசியாவுக்கு உரிமை உண்டு. இம் மாறுதலைச் சாதித்த பெருமை காந்தியைச் சாரும்,' என்ருர் தாகூர்.

உப்புச் சத்தியாக்கிரகமும் அதன்பின் நடந்த சம்பவங்களும் இரண்டு காரியங்களைச் சாதித்தன. தங்கள் தோள்களிலிருந்த அந்நிய நுகத்தடியை அகற்றிவிடலாம் என்ற நம்பிக்கை இந்தியருக்கு ஏற்பட்டது. பிரிட்டிஷார் இந்தியாவை அடக்கி ஆளுகிருர்கள் என்பதை பிரிட்டிஷ் மக்களையே உணரச்செய்தன. 1930ஆம் ஆண்டுக்குப் பிறகு பிரிட்டிஷாரால் ஆளப்படுவதை இந்தியா மறுத்துவிடும் என்ற

உண்மை தவிர்க்க முடியாததாகிவிடும். அதைவிட முக்கியமானது பிரிட்டனே ஒரு நாளைக்கு இந்தியாவை ஆள மறுத்துவிடும் என்பதாகும்.

துப்பாக்கிப் பிடியாலும் லத்தியாலும் இந்தியர் அடிபட்டபொழுது அவர்கள் கெஞ்சவில்லை. இதனால் இங்கிலாந்துக்குச் சக்தியில்லை; இந்தியாவை வன்முறையால் வெல்லமுடியாது என்று இந்தியர் காட்டினர். மற்றவை காலத்தைப் பொறுத்தனவாக இருந்தன.

17. அரை நிர்வாணப் பக்கிரி

காந்தி சிறைபடத் தாம் காரணமாக இருந்ததுபற்றிப் பிரதம மந்திரி ராம்சே மெக்டோனல்டு (Ramsay MacDonald) வேதனைப் பட்டுக்கொண்டிருந்தார். மகாத்மாவை விடுதலை செய்யும்படி தம்முடைய நாட்டிலும் உலகம் முழுவதிலுமிருந்து ஏராளமாகத் தந்திகள் வந்து குவிந்துகொண்டிருந்தன. பிரதம மந்திரி மெக்டோனல்டும் அவருடைய தொழிற்கட்சி மந்திரிகளுள் சிலரும் அவர்கள் பதவிக்கு வருமுன் காந்தியைப் புகழ்ந்தும் இந்திய சுதந்திரத்தை ஆதரித்தும் வெளிப்படையாகப் பேசிவந்தனர். அவர்களுடைய பேச்சுகளையும் கருத்துகளையும் அவர்களுக்கு எதிராக இப்பொழுது மேற்கோளாக எடுத்துக்காட்டமுடிந்தது. லார்டு இர்வினும் இக்கட்டான நிலையில் தான் இருந்தார். சாத்வீகச் சட்டமறுப்பு அவருடைய ஆட்சியை ஊனமாக்கிவிட்டது. சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டும் பெரும் வேலையில் ஈடுபட்டிருந்த போலீசாரும் இராணுவத்தினரும் மிகவும் துன்பப்பட்டனர்.

1930ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தின் பிற்பகுதியில் லண்டனில் வட்டமேசை மாநாடு கூடியது. அம் மாநாட்டிற்கு வைஸ்ராயால் நியமிக்கப்பட்ட இந்தியர்கள் சென்றனர். அக் கூட்டத்தில் நடந்த ஆலோசனைகளினால் ஒரு பயனும் ஏற்படவில்லை. மக்களின் ஆதரவைப் பெற்ற காங்கிரஸ் கட்சி அம் மாநாட்டிற்குப் பிரதிநிதிகளை அனுப்பவில்லை. 1931ஆம் ஆண்டு ஜனவரி 19ஆம் தேதி நடந்த அதன் இறுதிக் கூட்டத்தில் காங்கிரஸ் கட்சி அடுத்த மாநாட்டிற்குப் பிரதிநிதிகளை அனுப்பும் என்று நம்புவதாக மெக்டோனல்டு தெரிவித்தார். ஆனால், அவர்கள் எல்லோரும் அப்பொழுது சிறையில் இருந்தனர். லார்டு இர்வின் அந்தக் குறிப்பினைப் புரிந்துகொண்டார். காந்தி, மோதிலால் நேரு, ஜவஹர்லால் நேரு ஆகியோரையும் மற்றும் முன்னணியிலிருந்த 20 காங்கிரஸ்காரர்களையும் ஜனவரி 25ஆம் தேதி விடுதலை செய்தார். காங்கிரஸ் சுதந்திர தினமாகக் கொண்டாடுமாறு அறிவித்

திருந்த தினத்திற்கு முந்தைய தினமே அவர்கள் எல்லோரும் விடுதலை செய்யப்பட்டனர். இந்தச் சமரச முயற்சியைப் பாராட்டும் வகையில் காந்தி தமக்கு ஒரு பேட்டி தருமாறு வைஸ்ராய்க்குக் கேட்டு எழுதினர்.

இர்வின் சம்மதித்தார். பிப்ரவரி 17ஆம் தேதி பிற்பகல் 2-30 மணிக்கு, முதல் கூட்டம் தொடங்கியது. அக் கூட்டம் 3 மணி 40 நிமிட நேரம் நடந்தது. 'அமைதியற்று இருந்த இந்திய சாம்ராஜ்யத்தின் வரலாற்றில் அரசியல் பிரதிநிதியும் இந்தியத் தலைவரும் நேருக்குநேர் சந்தித்துப் பேசுவதற்கு எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டு இருந்தன' என்று இர்வினுடைய வாழ்க்கை வரலாற்றை எழுதிய ஆசிரியர் குறிப்பிடுகிருர்.

அது வெறும் நாடகம் அல்ல. அது சரித்திரப் புகழ்பெற்ற முக்கிய மான நிகழ்ச்சியாகும். அது திட்டமான ஒரு முடிவை ஏற்படுத்தியது. எல்லாரையும்விட வின்ஸ்டன் சர்ச்சில் (Winston Churchill) இதை நன்ருகத் தெரிந்துகொண்டார். ஒரு காலத்தில் 'இன்னர் டெம்புள்' (Inner Temple) எனப்படும் நீதிமன்றக் கழக வழக்[illegible]ருராக இருந்து, இப்பொழுது ராஜத்துவேஷக் குற்றம் புரியும் அரை நிர் வாணப் பக்கிரி சக்கரவர்த்தியின் பிரதிநிதியிடம் சரிசமானமாகப் பேச்சுவார்த்தை நடத்த வைஸ்ராயின் மாளிகைப் படிகளில் ஏறிவரு கிருர். இந்தக் காட்சி எனக்கு அவமானமும் அருவருப்பும் தருகிறது என்று சர்ச்சில் கூறினர். (இந்தியாவில் ஆண்டியைப் பக்கிரி என்று கூறுவது வழக்கம்.)

சர்ச்சிலுடைய வெளிப்படையான கோபமும் நிந்தனையும் அவரு டைய அறிவையும் சிந்தனையையும் மங்கச்செய்யவில்லை. அடிப்படை யான விஷயம் என்ன என்பதைச் சர்ச்சில் ஒருவாறு புரிந்துகொண் டார். அவருடைய ஆத்திரத்திற்குக் காரணமாயிருந்தது காந்தியின் அரைகுறை உடையோ அல்லது அவர் செய்துவந்த வழக்கறிஞர் தொழிலோ அல்ல. அவர் பெற்ற சம அந்தஸ்தும் இர்விஞேடு நடத்தும் பேச்சுவார்த்தைகளினுல் அதை உறுதிப்படுத்திக் கொண்டதும்தான் சர்ச்சிலுக்கு வெறுப்பை உண்டாக்கிற்று. வைஸ்ராயைப் பார்க்கவருபவர்கள் சலுகைகள் பெறவருவார்கள். ஆனுல், காந்தி சலுகை பெறவரவில்லை. காந்தி ஒரு தேசத்தின் தலைவராக மற்ருெரு தேசத்தின் பிரதிநிதியோடு சரிசமான மாகப் பேசவந்தார். காந்தியை விரோதித்துக்கொண்டு இந்தியாவை இங்கிலாந்து ஆளமுடியாது என்பதை உப்புச் சத்தியாக்கிரகம் நிரு பித்துவிட்டது. பிரிட்டிஷ் பேரரசு அந்த அரை நிர்வாணப் பக்கிரியின் தயவினை நாடி இருக்கிறது. ஆகவே, சர்ச்சிலுக்குக் கோபம் வந்தது. இங்கிலாந்து இந்தியாவின் சுதந்திரத்தைக் கொள்கையளவில் ஒப்புக்

கொண்டுவிட்டது. செயல் முறையில் தற்காலிகமாக ஒப்புக்கொள்ள மறுக்கிறது என்பதைச் சர்ச்சில் உணர்ந்துகொண்டார்.

இருவரும் பலமுறை பேசின பிறகு மார்ச் 5ஆம் தேதி 'டில்லி ஒப்பந்தத்தில்' அவர்கள் கையொப்பமிட்டனர். இரண்டு தேசங்களின் ராஜ தந்திரிகளும் உடன்படிக்கை செய்தனர். சட்டமறுப்பு இயக்கம் நிறுத்தப்படும். கைதிகள் விடுதலை செய்யப்படுவார்கள். காங்கிரஸ் பிரதிநிதி அடுத்த வட்டமேசை மகாநாட்டிற்கு லண்டனுக்குச் செல்வார். ஆனால், சுதந்திரமோ அல்லது குடியேற்ற நாட்டிற்குரிய மதிப்போ இந்தியாவிற்கு அளிக்கப்படும் என்று ஆங்கிலேயர்கள் வாக்களிக்கவில்லை.

பிறகு நடந்த சரித்திர நிகழ்ச்சிகளோடு இதை ஒப்பிடும்போது, இந்த ஒப்பந்தத்தின் நிபந்தனைகள் சரித்திர முக்கியத்துவத்தை இழந்துவிட்டன. பிரிட்டிஷ் சார்பாகப் பேசுகிறவர்கள் அந்த ஒப்பந்தத்தில் இர்வின் வெற்றிபெற்றார் என்று வாதித்தனர். அதற்கு ஆதாரமும் உண்டு. சில காங்கிரஸ்காரர்கள் சுதந்திரத்தில் ஒரு சிறு பாகமாவது அடையச்செய்யவில்லையே என்று காந்தியைக் குறைகூறினர். வேறொர் அரசியல்வாதியாயிருந்தால் அதிகச் சலுகைகளுக்காகப் போராடியிருப்பார். காந்தியோ ஒப்பந்தத்தினுள் இருக்கும் சாரத்தில் திருப்தி அடைந்தார். இந்தியாவுக்கும் பிரிட்டனுக்கும் இடையே ஒரு புது உறவுக்கு அடிக்கல் நாட்டினார். டில்லி ஒப்பந்தம் ஏற்பட்டு 17 வருடங்களுக்குப் பிறகு இந்தியா சுதந்திரமடைந்தது. இந்தியாவைப்போன்ற பழமையான நாட்டின் மக்களின் வாழ்நாளிலே 17 வருடங்கள் ஒரு நிமிடத்திற்குச் சமம். ஆகவே, அந்த ஒப்பந்தம் ஒரு படி; ஒரு வழி—ஆனால் முடிவு அல்ல. ஒரு செயலைச் செய்வதில் முடிவைவிட அதைச் செய்யும் முறையே முக்கியமானது என்று காந்தி வற்புறுத்திவந்தார். இந்த மனப்பான்மையினால் அவருக்குப் பரந்த நோக்கும், பொறுமையும், தன் நிலையில் திரியா உள்ள உறுதியும் உண்டாயிற்று. நல்ல முறையில் ஒரு காரியம் நடப்பின், அதன் பயனைப் பெற எவ்வளவு காலமானாலும் காந்தி காத்திருக்கத் தயாராக இருந்தார்.

18. குறைவான உடைகளுடன் லண்டனில் காந்தி தோன்றினார்

1931ஆம் ஆண்டு ஆகஸ்டு 29ஆம் தேதி நண்பகலில் எஸ். எஸ். ராஜபுதனா என்ற கப்பலில் காந்தி பம்பாயிலிருந்து லண்டனுக்குப் புறப்பட்டார். அவருடைய கடைசி மைந்தன் தேவதாஸ், காந்தியுடைய காரியதரிசி மகாதேவ் தேசாய், (பாஸ்வெலையும் மிஞ்சிவிடும் பாஸ்வெல் (Boswell) என்று காந்தி அவரைப் பற்றிக் கூறினார்.)

குமாரி ஸ்லேடு, பியரிலால் நய்யர், ஆலை முதலாளியும், கோடீஸ் வரருமான பிர்லா, பண்டித மாளவியா ஆகியோரும் அதே கப்பலில் சென்றனர். லண்டனில் நடைபெறும் இரண்டாவது வட்டமேசை மாநாட்டிற்குக் காங்கிரஸின் ஒரே பிரதிநிதியாக காந்தி சென்ருர். அதற்கு . வேறு பிரதிநிதிகள் தேவையில்லை. ஏனென்றல், அவர் காங்கிரஸ் ஸ்தாபனத்திற்காகவும் இந்தியாவில் வாயில்லாப் பூச்சிகளாக இருக்கும் கோடிக்கணக்கான மக்களின் பிரதிநிதியாகவும் சென்று வாதாடினர்.

1936ஆம் ஆண்டில் இந்தியாவில் காந்தியைப் பார்க்க குமாரி மூரியெல் லெஸ்டர் வந்தார் (Muriel Lester). அவருடைய விருந்தாளி யாக காந்தி லண்டனில் இருந்தார். லண்டனில் கிழக்குப் பகுதியில் கிங்ஸ்லி ஹால் (Kingsley Hall) என்னும் அவருடைய இல்லம் இருந்தது. செப்டம்பர் 12ஆம் தேதியிலிருந்து டிசம்பர் 5ஆம் தேதி வரை காந்தி அங்கு தங்கியிருந்தார். அருகிலுள்ள சேரிப் பிரதேசத்தில் அவர் காலையில் உலாவச்சென்ருர். வேலைக்குப் போகும் ஆண்களும் பெண்களும் அவரைப் பார்த்துப் புன்னகை புரிந்தனர். அவர்களுடைய வீடுகளுக்கும் காந்தி சென்ருர். குழந்தைகள் அவரை ‘காந்தி மாமா’ என்று அழைத்தனர். அவர் கையைப் பிடித்துக் கொண்டு அவர் பக்கத்தில் நடந்துசென்றனர். குறும்புக்காரப் பையன் ஒருவன், ‘ஹே மகாத்மா, உம்முடைய கால் சட்டை எங்கே?’ என்று கேட்டான். அவர் குலுங்கக்குலுங்கச் சிரித்தார். அவருடைய படம் பத்திரிகைகளில் வந்தது. பத்திரிகையாளர் இடைவிடாமல் அவரைச் சூழ்ந்திருந்தனர். அவர் பத்திரிகைகளுக்குச் செய்தி சொல்வதில் நிபுணர். ‘நீங்கள் 4 உடைகள் அதிகமாக அணிந்திருக் கிறீர்கள். நான் 4 உடைகள் குறைவாக அணிந்திருக்கிறேன்’ என்று அவரிடம் அவருடைய உடையைப்பற்றிக் கேட்ட பத்திரிகை நிருபருக்குப் பதிலளித்தார். ஐந்தாம் ஜார்ஜ் (George V) மன்னரு டனும் மேரி ராணியுடனும் (Queen Mary) தேநீர் அருந்த பக்கிங்காம் அரண்மனையிலிருந்து அழைப்பு வந்தபோது, இங்கிலாந்து முழுவ திலும் உள்ளவர்கள் காந்தி எந்த விதமான உடை அணிந்துசெல்வார் என்பதை அறிய ஆவலுடையவர்களாயிருந்தனர். அவர் வழக்கம் போல் அரைவேட்டி, செருப்பு, போர்வை இவற்றை அணிந்து டாலர் கடிகாரம் ஊசலாடச் சென்ருர். அவர் போதுமான உடை அணிந் திருந்தாரா என்று பின்பு ஒருவர் அவரைக் கேட்டபோது, ‘எங்கள் இருவருக்கும் வேண்டிய உடையை மன்னர் அணிந்திருந்தார்’ என்று காந்தி பதிலளித்தார். எல்லா இடங்களிலும் அவர் மகிழ்ச்சியாக இருந்தார். லார்டு இர்வின் யுத்த காலப் பிரதம மந்திரி டேவிட் லாயிட் ஜார்ஜ் (David Lloyd George), காண்டர்பரி மதகுரு (Archbishop of Canterbury), ஃபீல்டுமார்ஷல் ஸ்மட்ஸ், பெர்ஞட்ஷா

(Bernard Shaw) போன்ற மற்றும் பலரையும் அவர் சந்தித்துப் பேசினார். பூனாவிலிருக்கும்போது அவருக்கு குடல்வால் அழற்சிக்குச் சிகிச்சைசெய்த கர்னல் மேடாக்கைப் பார்த்துத் தமது மரியாதையைச் செலுத்த ரீடிங் பக்கத்திலுள்ள நாட்டுப்புறத்திற்குச் சென்றார். சர்ச்சில் காந்தியைப் பார்க்க மறுத்துவிட்டார்.

காந்தி பல பொதுக்கூட்டங்களில் பேசினார். இரண்டு வாரங்களின் இறுதியில் அவர் ஆக்ஸ்ஃபோர்டில் (Oxford) கழித்தார். அதை நாம் யாரும் மறக்கமுடியாது. இந்தக் கூட்டங்களிலும் சிறப்பான வேறு உரையாடல்களிலும் எல்லாவற்றையும்விட முக்கியமாக ‘இந்திய சுதந்திரம்’ என்றால் என்ன என்பதை அவர் விளக்கினார். ‘பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திலிருந்து இந்தியாவை முழுவதுமாகப் பிரித்துவிட முடியும். ஆனால், இந்தியா செழிப்பாக இருக்கவேண்டுமானால், பிரிட்டிஷ் மக்களிடமிருந்து இந்தியாவைப் பிரிக்கக் கூடாது’ என்றார். ‘ஏகாதிபத்தியம் ஒழியவேண்டும். நான் பிரிட்டனோடு சம பங்காளி யாக இருந்து அதனுடைய மகிழ்ச்சியிலும் துக்கத்திலும் பங்கு கொள்ளுவேன். அவ்வாறே குடியேற்ற நாடுகளுடனும் சம பங்காளியாக இருப்பேன். ஆனால், பங்காளிகளுக்கு ஒத்த மதிப்புத் தரவேண்டும்’ என்றார். 1948ஆம் ஆண்டில் காமன்வெல்த்தில் இந்தியா பெற்ற மதிப் பினை காந்தி திட்டவட்டமாகவும் ஆச்சரியமான தீர்க்க திருஷ்டி யுடனும் அன்றே விளக்கினார்.

அதைவிட ஒருபடி முன்னேற்றமும் இருந்தது. அவருடன் சேர்ந்தவர்கள் இன்னும் கண்டுகொள்ளாத உண்மைகளை அவர் அன்றே கண்டுகொண்டார். ‘தனியாகப் பிரிந்துபோகும் சுதந்திரம் இந்தியாவின் லட்சியமல்ல. தம் இச்சையாக ஒருவரோடு ஒருவர் சேர்ந்து இருப்பதே இந்தியாவின் இலட்சியம்’ என்றார். விடுதலை பெற்ற நாடுகள் தங்களுக்குப் புதிதாகக் கிடைத்த சுதந்திரத்தைப் பெரிய பொருளாகக் கருதித், தாங்கள் பிறருடன் தொடர்புகொள்ளாமல் தனியாகவே வாழமுடியும் என்று நினைக்கிறார்கள். அன்பு, நட்பு, தொழில், முன்னேற்றம், பாதுகாப்பு முதலியவற்றை அடிப்படையாகக் கொண்டு ஏற்படுவதே சர்வ தேச உறவு என்று காந்தி நினைத்தார்.

தம்முடைய கவர்ச்சிமிக்க பண்பு, கபடமற்ற தன்மை, கருணை, எளிதில் அணுகக்கூடிய இயல்பு முதலியவற்றினால், காந்தி எங்குச் சென்றாலும் தமக்கு நண்பர்களைத் தேடிக்கொண்டார். துணிகள் நெய்து ஏற்றுமதி செய்யும் லங்காஷயருக்குக்கூட அவர் சென்றார். அந்நியத் துணியை எதிர்த்து அவர் இந்தியாவில் செய்த கதர்ப் புரட்சி லங்காஷயரில் மோசமான வேலையில்லாத் திண்டாட்டத்தை ஏற்படுத் தியது. அங்குள்ள நூற்புஆலை ஊழியர் கூட்டத்தில் ஒருவன் ‘நானும்

இந்தியாவில் இருந்தால், காந்தி சொன்னதைத்தான் சொல்வேன்' என்றான். டார்வென் (Darwen) என்னுமிடத்திலுள்ள க்ரீன்ஃபீல்டு (Greenfield) ஆலைக்கு வெளியே காந்தியைப் படம் எடுத்திருக்கிறார்கள். அதில் கழுத்திலிருந்து முழங்கால்வரை வெள்ளைக் கதரினால் மூடிக்கொண்டு காந்தி மகிழ்ச்சியோடு நிற்கிறார். அப்பொழுது குளிர் காலம். கைதட்டி உற்சாகமூட்டும் பெண்கள் கூட்டம் அவரை நெருக்கிக் கொண்டிருக்கிறது. இடிபட்டுக்கொண்டு, கூச்சத்தோடு சங்கடமான நிலையில் அவருடைய கையை ஒரு பெண் பிடித்துக்கொண்டிருக்கிறாள். அவரால் துன்புற்றவர்கள்கூட அவருக்கு நண்பர்களாகி விட்டார்கள்.

லண்டன் பொதுக்கூட்டம் ஒன்றில் காந்தி 'நான் செய்ய வேண்டிய வேலை இந்த வட்டமேசை மாநாட்டிற்கு வெளியே இருக்கிறது என்று தெரிந்துகொண்டேன். இதுதான் உண்மையான வட்ட மேசை மாநாடு. இப்பொழுது விதைக்கப்படும் இந்த விதை பிரிட்டிஷாரின் மனத்தை மாற்றி, மனிதரை மிருகமாக நடத்துவதைத் தவிர்க்கும்' என்று பேசினார்.

மகாதேவ தேசாயின் நாட்குறிப்புகளிலிருந்து சில விவரங்கள் தெரிகின்றன. காந்தி காலையில் 2 மணிக்குப் படுக்கைக்குச் சென்று 3-45 மணிக்குப் பிரார்த்தனைக்கு விழித்தெழுவார். மீண்டும் ஐந்து மணியிலிருந்து ஆறுமணிவரை கடிதம் எழுதுவதிலும், செய்தித்தாள்களைப் படிப்பதிலும், இளைப்பாறுவதிலும் காலத்தைக் கழிப்பார். அதற்குப் பிறகு அடுத்த நாள் காலை ஒன்று அல்லது இரண்டு மணி வரை அவருக்கு ஓய்வு கிடையாது. மாநாட்டுக் கூட்டங்கள் நடக்கும் போது அவர்கள் சில நாட்களில் தூங்கினாரென்றால், அதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை. வட்டமேசை மாநாட்டில் காந்தி தமது சிறந்த கருத்துகளை அதனால்தான் அளிக்கமுடியவில்லை போலும்.

வட்டமேசை மாநாடு தோல்வி அடையும் என்பது திட்டமாகத் தெரியும். பிரிட்டிஷ் பிரதிநிதிகளில் ஒருவராகிய லார்டு ரீடிங் பிரிட்டனின் நோக்கத்தை ஒரே வரியில் விளக்கிவிட்டார். 'இத் தேசத்திலுள்ள நாம், இந்தியருடைய கருத்துகளைச் செயலுக்குக் கொண்டு வரவேண்டும். அதே சமயத்தில் நம்முடைய மதிப்பைக் காப்பாற்றிக் கொள்ளவேண்டும். அதைக் கைவிடக்கூடாது; கைவிட முடியாது. இதுதான் பிரிட்டன் பின்பற்ற வேண்டிய செயல்முறைக் கொள்கை என்று நினைக்கிறேன்' என்றார். சுதந்திரம் அடைந்தே தீருவோம் என்கிற வெல்லமுடியாத சக்தியாகிய இந்தியரின் ஆர்வமும் பிறர்மீது எப்போதும் ஆதிக்கம் செலுத்தவேண்டும் என்கிற அசைக்க முடியாத பிரிட்டிஷாரின் பிடிவாதமும் போரிட நேர்ந்தன. ஆகையால், இந்தியாவுக்கும் பிரிட்டனுக்கும் ஒப்பந்தம் ஏற்படவில்லை.

காந்தி இங்கிலாந்திலிருக்கும்போது அவரைப் பாதுகாப்பதற்கு ஸ்காட்லாந்து யார்டு துப்பறிஞர்கள் இருவரை பிரிட்டிஷ் அரசாங்கம் நியமித்திருந்தது. அவர்கள் விசேஷப் போலீஸ் அதிகாரிகள். பெரும் உருவமுள்ளவர்கள். வழக்கமாக அவர்கள் ராஜ குடும்பத்தினரைப் பாதுகாப்பவர்கள். அவர்களுடைய பாதுகாப்பைப் பெறும் பெரும்பாலான பிரமுகர்களைப்போல காந்தி அவர்களைத் தம்மிடம் அணுகாமல் வைக்கவுமில்லை; அவர்களிடம் அலட்சியமாக நடந்துகொள்ளவும் இல்லை. அவர்களோடு பொது விஷயங்களை விவாதித்தார். அவர்கள் வீடுகளுக்குச் சென்றார். அவர்களை இத்தாலியிலுள்ள பிரிண்டிசி (Brindisi) வரை தம்முடன் வருமாறு கேட்டுக்கொண்டார். இந்த வேண்டுகோளுக்குக் காரணம் என்ன என்று அவர்களின் மேலதிகாரி விசாரித்தார். "ஏனென்றால், இவர்கள் என் குடும்பத்தினராகிவிட்டார்கள்" என்று காந்தி பதில்சொன்னார். காந்தி இந்தியாவிலிருந்து அந்தத் துப்பறிஞர்களுக்கு கைக்கடிகாரங்கள் அனுப்பினார். அவைகளில் "M. K. காந்தியிடமிருந்து அன்புடன்' என்று பொறிக்கப்பட்டிருந்தது.

19. கடவுளின் குழந்தைகள்

டிசம்பர் 28ஆம் தேதி காந்தி பம்பாயில் கப்பலைவிட்டு இறங்கியதும் அவரை வரவேற்க வந்த மாபெரும் கூட்டத்தில் அவர், 'நான் வெறுங்கையோடு வந்திருக்கிறேன்' என்றார். ஆனால், 'மகாத்மாவை வரவேற்பதில் பொதுமக்கள் காட்டிய ஆர்வத்தையும், அன்பையும், உற்சாகத்தையும் பார்த்தால் அவரது வெறுங்கைக்குள் சுயராஜ்யத்தைக் கொண்டுவந்திருப்பார் என்று நினைக்கத் தோன்றுகிறது' என்று சுபாஸ் சந்திர போஸ் குத்தலாகக் கூறினார். காந்தி தம்முடைய நேர்மையைக் காப்பாற்றிக்கொண்டு மிகுந்த நல்லெண்ணத்துடன் நாடு திரும்பினார். 'இங்கிலாந்திலும் ஐரோப்பாவிலும் நான் இருந்த மூன்று மாதங்களிலும் எப்படி இருந்தாலும் கிழக்கு கிழக்குதான், மேற்கு மேற்குதான் என்று கருதும்படி ஓர் அனுபவமும் ஏற்படவில்லை. அதற்கு மாறாக எந்தச் சீதோஷ்ணமாயிருந்தாலும் சரி, மனித சுபாவம் ஒரே மாதிரியாகத்தானிருக்கிறது என்று சந்தேகத்திற்கு இடமில்லாதபடி உணருகிறேன். நீங்கள் மனிதரை அன்போடும் நம்பிக்கையோடும் அணுகினால் அவர்களும் உங்களிடத்தில் அதைவிட 10 மடங்கு நம்பிக்கையும் 1000 மடங்கு அன்பும் காட்டுவார்கள்' என்றார்.

சரியாக ஒரு வாரம் கழித்து காந்தி சிறையில் அடைக்கப்பட்டார். இர்வினுக்குப் பிறகு லார்டு வில்லிங்டன் (Lord Willingdon) வைஸ்ராயாக வந்தார். 1931ஆம் ஆண்டு அக்டோபரில் இங்கிலாந்தில்

ராம்சே மெக்டோனல்டைப் பிரதம மந்திரியாகக் கொண்டு ஒரு புது அரசாங்கம் பதவிக்கு வந்தது. முக்கியமான உத்தியோகங்களில் கன்சர்வேடிவ் (Conservative) கட்சிக்காரர் இருந்தனர். சர் சாமுவேல் ஹோர் (Sir Samuel Hoare) இந்திய மந்திரியாக இருந்தார். சில வாரங்களுக்குள் வடமேற்கு எல்லைப்புற மாகாணம், வங்காளம், ஐக்கிய மாகாணங்கள் முதலிய இடங்களில் அவசரச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது. அவ்விடங்களில் பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு விரோதமாக வேருேர் அரசாங்கம் கொண்டுவர காங்கிரஸ் முயன்றதாகக் குற்றஞ் சாட்டப்பட்டது. இந்திய அரசாங்கத்தில் உள்நாட்டு மந்திரியாக இருந்த சர் ஹேரி ஹேக் (Sir Harry Haig) 'காங்கிரஸ் தன்னுடைய தீர்மானத்தை நாடு முழுவதும் சுமத்தப்போகிறதா என்பதுதான் கேள்வி' என்று இந்திய அசெம்பிளியில் கூறினர்.

ஜவஹர்லால் நேருவும் இன்னும் பலரும் முன்பே சிறையிலிருந்தனர். அப்பொழுது காந்தியை ஏர்வாடா சிறையில் வைத்தனர். அங்கு வல்லபாய் பட்டேலும் அவருடன் வந்துசேர்ந்தார். அவருக்கு காந்தி, சர்தார் (பெருந்தன்மையான மனிதன்) என்று பெயர் சூட்டினர். மகாதேவ தேசாயும் அங்கு அனுப்பப்பட்டார்.

மகாத்மா தாமே ஏற்படுத்திக்கொண்ட விதிகளை எப்படிச் சரிவர அனுசரித்துவந்தாரோ, அதைப்போலவே சிறையிலும் சிறைவிதிகளைச் சரிவர அனுசரித்துவந்தார். சிறையிலிருந்துகொண்டு அரசியல் இயக்கத்தில் ஈடுபடவில்லை. சிறையில் அவர் அரசியல்வாதியாக இருக்கமுடியாததால், அவருடைய கவனத்தை ஆத்மீக விஷயத்தில் செலுத்தினர். காந்தி, வல்லபாய், மகாதேவ் மூவரும் அடிக்கடி ஆத்மீகப் பொருள்பற்றிப் பேசினர். அப் பேச்சுகளில் வேறு சில கைதிகளும், பிரிட்டிஷ் வார்டர்களும், டாக்டர்களும் கலந்துகொண்டனர்.

சில நாட்களுக்குப் பிறகு கடவுளைப்பற்றி அவருடைய எண்ணங்களையும் மனிதனின் லட்சிய ஒழுக்கத்தையும்பற்றி எழுதத் தொடங்கினர். இவை பின்னல் 'ஏர்வாடா மந்திர்' என்று சிறு நூலாகப் பதிப்பிக்கப்பட்டது. மந்திர் என்றால் கோவில். கடவுளைப்பற்றிப் பேசி வணங்கிய சிறை கோவிலாகிறது. 'கடவுள் இருக்கிறர்' என்று காந்தி எழுதினர்.

'சத்தியம்' என்றால் உண்மை என்று பொருள். 'சத்' என்ற மூலச்சொல்லுக்கு 'இருக்கிறது' என்று பொருள். எது இருக்கிறதோ, அது கடவுள். 'அவர்மட்டும் இருக்கிறர். ஐம்புலன்களின் வழியாகப் பார்ப்பது ஒன்றும் நிலைத்திருக்க முடியாது' என்று காந்தி கூறினர். கடவுள் இருக்கிறர் என்பதை நிரூபிக்க காந்தி பல வருடங்களாக முயன்றிருக்கிறர். 'கடவுள் இருக்கிறர் என்று ஓர் அளவுக்

காவது வாதிக்கலாம்' என்று காந்தி துணிந்துசொன்னர். உலகத்தில் ஓர் ஒழுங்கு நிலவுகிறது. இவ் வுலகத்திலுள்ள ஒவ்வொரு பொருளையும் உயிரையும் ஆளுகிற மாற்றமுடியாத நியதி ஒன்று இருக்கிறது. அது ஒரு குருட்டு நியதி அல்ல. ஏனென்ருல், ஒரு குருட்டு நியதி மனிதனை ஆட்டிவைக்க முடியாது. ஆகவே, எல்லா, உயிர்களையும் ஆளும் அந்த நியதி கடவுள். என்னைச் சுற்றியுள்ள எல்லாப் பொருள்களும் மாறிக்கொண்டும் மாய்ந்துகொண்டும் இருக்கின்றன. அந்த மாறுதல்களுக்குள்ளே ஓர் உயிருள்ள சக்தி இருக்கிறது. அது மாருதது. அது எல்லாவற்றையும் ஒன்ருக இணைத்துப்பிடிக்கிறது. அது ஆக்குகிறது ; அழிக்கிறது ; மீண்டும் ஆக்குகிறது. அப்படிச் செயல்படும் சக்திதான் கடவுள்—சாவுக்கு மத்தியில் வாழ்வு நிலைத்திருக்கிறது. பொய்மைக்கு இடையில் வாய்மை நிலைத்திருக்கிறது. இருளுக்கு நடுவில் ஒளி நிலைத்திருக்கிறது. ஆகவே, கடவுள் உயிரும், உண்மையும், அன்புமாக இருக்கிருர் என்று நான் அறிகிறேன். அன்பே கடவுள் ; அவரே மேலான கடவுள்.

ஆனல், இந்தத் துணிவான பகுத்தறிவின் வாதமும் தோல்வியடையலாம் என்று காந்தி சந்தேகித்தார். பகுத்தறிவுக்கு மேம்பட்டது நம்பிக்கை என்று ஒப்புக்கொண்டார். இப் பிரபஞ்சத்திலுள்ள மர்மங்கள் எல்லாவற்றையும் நாம் விடுவித்துவிட்டோமாயின், நாம் கடவுளுக்குச் சமமாகிவிடுவோம். கடலில் உள்ள ஒவ்வொரு நீர்த்துளியும் கடலின் பெருமையில் பங்குகொள்ளுகிறது. ஆனல், அந்த ஒவ்வொரு துளியுமே கடலாகிவிடாது ; ஒப்புமையால் ஒவ்வொரு மனிதனும் கடவுளின் இயற்கையில் பங்கெடுக்கிருன். ஆனல், அவன் கடவுள் ஆகமுடியாது. கடவுளைப்பற்றி அறியவும் அவனல் முடியாது. ஆகையால், சிறந்த வழி என்ன என்ருல் உலகின் ஆத்மீக ஆட்சியில் நம்பிக்கை வைக்கவேண்டும். ஆகவே, சன்மார்க்க நெறியாகிய உண்மை, அன்பு—இவற்றின் மேன்மையை நம்பவேண்டும் என்று கூறினர்.

காந்தி எப்பொழுதும் கடவுளைப்பற்றிய சிந்தனையில் இருந்தாலும், அவருக்குப் புரிந்துகொள்ளமுடியாத அனுபவம் ஒன்றும் ஏற்பட்டதில்லை. அசரீரி பேசக் கேட்டதில்லை. தரிசனமும் கண்டதில்லை. கடவுளைப்பற்றிய அனுபவமும் இல்லை. தியானத்தால் உண்மையையும் பரம்பொருளையும் காணலாம் என்ற நம்பிக்கைகொண்ட இந்தியர் அல்லாதார் சிலர் தங்கள் கொள்கைக்கு ஓர் ஆதாரம் வேண்டும் என்பதற்காகத் தங்களை காந்தியோடு ஒப்பிட்டுக்கொண்டார்கள். காந்தி தாம் ஒரு யோகி அல்ல என்று ஒப்புக்கொண்டிருக்கிருர். 'கடவுளுடைய விருப்பத்தைத் தெரிவிக்க எனக்குச் சிறப்பான ஆற்றல் ஒன்றும் இல்லை' என்ருர். அதற்கு மாருகப் பின்வருமாறு வாதிட்டார்: 'கடவுள் ஒவ்வொரு நாளும் மனிதருக்குத் தம்மை வெளிப்படுத்து

கிறார். ஆனால், அந்தச் சிறிய குரலுக்குச் செவிகொடாமல் நம் காதுகளை அடைத்துக்கொள்கிறோம்; கடவுள் ஒரு நாளும் நேரே தோன்றமாட்டார்; செய்கையில் தோன்றுவார்' என்றார்.

அந்த ஏர்வாடா கோவிலின் அமைதியில் காந்தி அந்தச் சிறிய குரல் தம்மைச் செயலில் இறங்கச்சொல்வதைக் கேட்டார். அதன் பயன்தான் நவீன இந்தியாவின் சரித்திரத்திலே பரபரப்பான இரண்டு வார காலம். '1932ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் ஏற்பட்ட அவ் வேதனைக்குச் சமமாக ஓர் உதாரணம் கூற வேண்டுமானால், 23 நூற்றாண்டுகளுக்குமுன் இருந்த 'ஏதென்ஸ்' (Athens) பட்டணத்திற்குச் செல்லவேண்டும். சாக்ரட்டிஸுடைய நண்பர்கள் அவரைச் சிறையிலிருந்து தப்பிச்செல்லும்படி மன்றாடினார்கள். சாக்ரட்டிஸ் அவர்களைப் பார்த்துப் புன்முறுவல் செய்தார். ஆத்மாவின் சாகாத் தன்மையைப்பற்றி அவர்களுக்குப் போதித்தார்' என்று ராஜகோபாலாச்சாரி எழுதினார்.

மகாத்மா சாகப் பயப்படவில்லை. ஆத்மா ஒரு நாளும் சாகாது என்று நம்பினார். மிகவும் முக்கியமானது என்று அவரால் கருதப்பட்ட ஒரு விஷயத்திற்காகவும் உண்ணாவிரதம் இருந்தார். அது தீண்டாதார் சம்பந்தப்பட்டது. இந்தியாவிலுள்ள துர்ப்பாக்கிய மக்களில், அவர்கள் மிகவும் துர்ப்பாக்கியமானவர்கள்.

ஒரு வைதீக இந்து ஒரு தீண்டாதானைத் தொடக்கூடாது. அவன் தொட்ட பொருளையும் தொடக்கூடாது. தவறுதலாக அவனைத் தொட்டு விட்டால் உடனே அந்த வைதீக இந்து முறைப்படி குளித்துத் தன்னைச் சுத்தம் செய்துகொள்ள வேண்டும். இந்தியாவின் சில பாகங்களில் தீண்டாதானின் நிழல்பட்டால்கூட அசுத்தமாகிவிட்டதாகக் கருதப்பட்டது. ஆகவே, இந்து கோவில்களுக்குள் அவர்கள் நுழையக் கூடாது என்பது வெளிப்படை. உலகத்திலுள்ள மோசமான நகர்ப் புறச் சேரிகளில் மிகவும் மோசமான பகுதிகளில் அவர்கள் வசித்து வந்தனர். அங்குக் கிராமத்துக் குப்பைகளும் கழிவுநீரும் வந்து சேரும். அந்த அசுத்தமான நீரை அவர்கள் உபயோகிக்கவேண்டும். கிணற்று நீரை அவர்கள் உபயோகித்தால் அது தீட்டுப்பட்டுவிடும் என்று அதை எடுக்கக்கூடாது என்று தடுக்கப்பட்டனர்.

இந்துக்களுடைய ஆசாரப்படி தீண்டாதார் மற்ற வகுப்பினருக்குப் புறம்பானவர்கள். இந்துக்களில் 4 பிரிவுகள் உண்டு. அவை மேலிருந்து கீழாக:—பிராமணர் அல்லது புரோகிதர்; க்ஷத்திரியர் அல்லது அரசரும் போர் வீரரும்; வைசியர் அல்லது வியாபாரிகளும் குடியானவர்களும்; சூத்திரர் அல்லது தொழிலாளர் இவர்களுக்கும் கீழே தீண்டாதார். அவர்கள் இந்து சமுதாய ஏணியின் கீழ்ப்படியில்

கூட நிற்கத் தகுதியில்லாதவர்கள்; இந்து சமுதாய வேலிக்குப் புறம்பாக உள்ளவர்களாவர்.

பல நூற்றுண்டுகளுக்குமுன் ஜாதிகளும் ஆயிரக்கணக்கான அதன் உட்பிரிவுகளும் தொழில் பரம்பரைச் சங்கங்களாக இருந்தன. காந்தி வைசிய ஜாதியில் மோத் பனியா உட்பிரிவைச் சேர்ந்தவர். பனியாக்கள் வியாபாரிகள். காந்தியின் மூதாதையர் பலசரக்கு வியாபாரிகள். காந்தி என்பதற்குப் பலசரக்கு வியாபாரி என்பது பொருள். நெடுங்காலப் பழக்க வழக்கங்களை ஒட்டி, அந்தந்த ஊர்ப் பெரியவர்கள் அந்தந்த வகுப்பின் இளைஞர்களை அந்தந்த வகுப்பிலே இருக்கச்செய்தனர். அதனால் தாழ்ந்த வகுப்பினர் உயர்ந்த வகுப்பினரோடு கலந்துவிடாதபடியும் பார்த்துக்கொள்ள முடிந்தது. இந்த ஒழுங்கு ஒவ்வொரு கூட்டத்தாருக்கும் பொருளாதாரப் பாதுகாப்பையும் கொடுத்தது. ஆனால், அதே சமயத்தில் ஒவ்வொரு தனிமனிதனையும் பொருளாதாரக் கட்டுப்பாட்டிற்கு உட்படுத்தியது.

ஜாதிப் பாகுபாடுகள் சமூகப் பொருளாதாரத்தை நிலைபேறுடையதாக ஆக்கியபோதிலும், ஆதியில் ஜாதி அரசியல் அடிப்படையில் ஏற்பட்டது. பிறகு மதத்தின் பெயரால் நிலைபெற்றது. சரித்திர காலத்திற்கு முற்பட்ட வருடங்களிலே ஆரியர்கள் தங்கள் தாய்நாடாகிய மத்திய ஆசியாவிலிருந்து இந்தியாவிற்கு வந்தனர். நாளடைவில் சிந்துநதி தீரம், இமாலயப் பிரதேசம் முதலிய இடங்களிலிருந்து இந்தியத் தீபகற்பத்தின் தென் கோடியிலுள்ள கன்னியாகுமரி முனை வரை உள்ள பிரதேசங்களை வென்றனர். அவர்கள் அவ்வாறு இந்தியாவை வென்ற பிறகு அவர்களது பல பழக்கவழக்கங்களைத் தங்களுடைய பழக்க வழக்கங்களோடு தாராளமாக ஏற்றுக்கொண்டனர். அதனுடைய விளைவு இந்து மதம். எனினும், பயனுடையதும் வசீகரமானதுமான அரசாளும் தொழிலையும் போர்த்தொழிலையும் தங்களுக்கு உரியதாக அவர்கள் வைத்துக்கொண்டனர். தங்களுக்கு வேண்டிய பொருளாதாரத் தேவைகளுக்குப் பிறர் உழைக்க வேண்டும் என்கிற நியதியை ஏற்படுத்தினர். மதத்தின் பெயரால் ஜாதிப் பிரிவினையை உறுதிப்படுத்தி, எல்லோரையும்விட அரசரையும் வீரரையும் உயர்ந்த ஜாதியினர் என்று ஏற்படுத்திக்கொண்டனர். மதம் என்ற போர்வையால் ஜாதிப் பாகுபாட்டைப் புனிதமாக்கி, அதற்கு நிரந்தரமாகப் பாதுகாப்பும் கொடுத்துவந்தனர். அவர்கள் ஜாதிப் பாகுபாட்டுக்கு மாற்ற முடியாத விதி என்று பெயர் கொடுத்தனர். முன் பிறவியில் ஒருவன் செய்த பாவபுண்ணியத்திற்குத் தகுந்தபடி அவன் ஒரு பிராமணனாகவோ, சூத்திரனாகவோ, தீண்டாதவனாகவோ பிறந்திருக்கிறான். ஆகவே, 'ஜாதி' ஒருவன் பிறக்குமுன்பே நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அதனால் விதிக்குத் தணிந்துபோகவேண்டும். இப் பிறவியில்

நல்லவனாக இருந்தால் அடுத்த பிறவியில் உயர்குலத்தில் பிறக்கலாம். கெட்டவனாயிருந்தால் இழிகுலத்தில் பிறக்கவேண்டும். பேராசையுள்ள பிராமணன் வியாபாரியாகப் பிறக்கலாம். ஓர் ஆண் மறுபிறப்பில் பெண்ணாகவும் பிறக்கலாம். பெண் ஆணாகவும் பிறக்கலாம். பக்தியுள்ள வியாபாரி பிராமணனாகப் பிறக்கலாம். சில இந்துக்கள் மறு பிறப்பில் அதே குடும்பத்தில் வெவ்வேறு அங்கத்தினர்களாகப் பிறக்க விரும்புவார்கள். உதாரணமாக, கணவன் மனைவி சகோதரன் சகோதரியாகவோ, சகோதரி சகோதரனாகவோ பிறக்கலாம். பெண் இயல்புள்ள ஆண்கள் பெண்களாகப் பிறக்கலாம். இரத்தவெறி பிடித்த இந்து மறுபிறவியில் விலங்காகப் பிறக்கலாம்.

தங்களுடைய பயங்கரமும் அவமானமும் நிறைந்த நிலையிலிருந்து தப்புவதற்காகச் சில தீண்டாதார் கிறிஸ்தவர்களாகவும் முஸ்லிம்களாகவும் மதம் மாறினர். ஆனால், ஐந்து.ஆறு கோடி தீண்டாதார் தாங்கள் முற்பிறவியில் செய்த பாவங்களுக்குத் தண்டனையை அனுபவிக்கிறோம் என்று தங்கள் விதிக்குப் பணிந்துபோனார்கள். அடுத்த பிறவியிலாவது மேல் ஜாதியில் பிறக்கலாம் என்ற நம்பிக்கையுடனிருந்தார்கள். சில நூறு பேர்களைத் தவிர, மற்றவர்களெல்லோரும் தெருக்களைச் சுத்தம் செய்தல், தோல்வேலை செய்தல், மற்றும் இவைபோன்ற உயர் ஜாதிக்காரர் செய்யத்தகாதவை என்று கருதப்பட்ட இழிவான வேலைகளைத் தொடர்ந்து செய்துவந்தனர். தங்களுக்கென்று ஒதுக்கப்பட்ட இடங்களில் விலகி வசித்துவந்தனர். அந்த நுட்பமான வேலையின் பாகுபாட்டின்படி இன்றுகூட ஆஸ்பத்திரியிலுள்ள ஒரு நர்ஸ் மலம் இருக்கும் பாத்திரத்தைத் தொடமாட்டாள். அதைப்போலவே படுக்கையை விரிப்பவனும் உணவுத்தட்டைக் கொண்டுவருபவனுமான ஆர்ட்லி, நோயாளி கெஞ்சிக் கேட்டாலும், தரையில் கிடக்கும் புண்ணைக் கட்டும் துணியை எடுத்துக் கொடுக்கமாட்டான். குளிக்கும் அறையிலிருக்கும் பொருளைத் தொடவுமாட்டான். ஏனெனில், அவை தீண்டாதாருடைய வேலைகள். பம்பாயிலுள்ள பணக்கார நண்பர் ஒருவர் தீண்டாதான் ஒருவனை நிலையாகத் தம்முடைய வீட்டில் வேலைக்கு வைத்திருக்கிறார். அவன் கக்கூசைச் சுத்தம் செய்ய மாட்டான். அவன் அப்படிச் சுத்தம் செய்வது கிராமத்தில் உள்ளவர்களுக்குத் தெரிந்தால் அவனைப் பங்கப்படுத்திவிடுவார்களாம். அதனால் அவனைவிடக் குறைந்த அந்தஸ்திலுள்ள தீண்டாத வகுப்பைச் சேர்ந்தவனை வேலைக்கு அமர்த்த ஊருக்குள் செல்வான். இங்ஙனம் தீண்டாதாருக்குள்ளே ஒரு சமுதாய அளவுகோல் இருந்தது.

ஒரு பக்கம் தீண்டாதாரை இழிவான நிலையில் வைத்துக் கொடுமையாக நடத்தினர். மறுபக்கத்தில் 19ஆவது நூற்றாண்டிலே, சில இடங்களில் அதற்கு முன்பும்கூட ஜாதி இந்துக்களிடையே இருந்த தடைகள் விரைவாக மறைந்துகொண்டிருந்தன. உதாரணமாக, காந்தியின்

தாத்தாவும் தந்தையும் பிரதம மந்திரிகளாயிருந்தனர். பலசரக்கு வியாபாரம் செய்யவில்லை. இன்று ஒரு பிராமணன் காரோட்டியாக இருக்கலாம். (என்றாலும் சில ஜில்லாக்களில் அவன் விவசாயியாக இருந்தால் அவன் உழுவது இல்லை. ஒரு கீழ் ஜாதிக்காரனுக்குக் கூலி கொடுத்து உழும்படி சொல்வான்.) ஒரு வைசியன் பெரிய அரசாங்க உத்தியோகஸ்தனாக அல்லது ஆசிரியனாக இருக்கலாம். ஒரு க்ஷத்திரியன் குமாஸ்தாவாக இருக்கலாம்.

தற்காலம் பொருளாதார நெருக்கடியின் நிமித்தம் தொழில் பாகுபாட்டினால் ஏற்பட்ட ஜாதி பேதம் மறைந்துவருகிறது. ஆனால், ஜாதிகளுக்குள்ளே சமூக வேற்றுமைகள் பிடிவாதமாக நிலைத்துவருகின்றன. ஒரு பிராமணன் எவ்வளவு சிறிய வேலை செய்தாலும், அவனுடைய பிள்ளைகள் தாழ்ந்த ஜாதியாரை மணம் செய்துகொள்ள விடமாட்டான். தாழ்ந்த ஜாதி இந்துக்களை அவனோடு உண்ணவும் அனுமதிக்க மாட்டான்.

காந்தி ஆரம்பத்தில் (மகாத்மாவான புதிதில்) ஜாதிப் பாகுபாட்டை ஆதரித்தார். 'நான்கு வர்ணங்களும் அடிப்படையானது, இயற்கையானது, முக்கியமானது என்று நான் கருதுகிறேன்' என்று 1920ஆம் ஆண்டு கூறினார். 1921ஆம் ஆண்டு அக்டோபர் 6ஆம் தேதி 'யங் இந்தியா'வில் 'ஆத்மாவின் வேகமான வளர்ச்சிக்குக் கலப்பு மணத்தையும் கலந்து உண்ணுதலையும் தடுத்தல் அவசியம்' என்று எழுதினார். காந்தி இந்து வைதீகத்தின் பெருந்தன்மையற்ற இந்த நிலையை ஆதரித்துப் பேசியதால் அது எப்பொழுதும் அவருக்கு விரோதமான குற்றச்சாட்டாக இருக்கிறது. ஆனால், உண்மையில் பின்னால் அவருடைய சொல்லையும் செயலையும் மாற்றிக்கொண்டார். 1923ஆம் ஆண்டு நவம்பர் 4ஆம் தேதி, 'வெவ்வேறு ஜாதிகளுக்கும் மணம் செய்துகொள்வதற்கோ, உணவருந்தவோ கட்டுப்பாடு ஒன்றும் இந்து மதத்தில் இல்லை. இந்த இரு கட்டுப்பாடுகளும் இன்றைய இந்து சமுதாயத்தைப் பலவீனப்படுத்துகின்றன' என்று கூறினார். 1921ஆம் ஆண்டில் முக்கியமானவை என்று கருதப்பட்டவை 1932ஆம் ஆண்டில் முக்கியமில்லாதவையாகிவிட்டன. காந்தி எதையும் நுணுக்கமான கண்ணோட்டத்துடன் பார்ப்பவர்; வேண்டும்போது விட்டுக்கொடுப்பவர்; தூய்மையான உள்ளத்தினர். ஆதலால், இந்துமதத்தைப் பிளவுபடுத்தி, அதன் சக்தியை அழிவு செய்துவந்த ஜாதி வேற்றுமையை ஏற்றுக் கொள்ளவில்லை.

சொந்த அனுபவம் ஒன்று ஒருவேளை அவருடைய மனத்தை மாறச் செய்திருக்கலாம். காந்தியின் கடைசி மகன் தேவதாஸ், C. ராஜகோபாலாச்சாரியாரின் மகளைக் காதலித்து மணக்க விரும்பினார். ஆனால், ராஜகோபாலாச்சாரி பிராமணர். காந்தி வைசியர். காந்தி கலப்பு

மணத்தையும் காதல் மணத்தையும் ஆட்சேபித்தார். படித்த பல இந்துக்கள் இன்று சொல்வதுபோல காதல் திருமணங்களைவிடப் பெற்றோர் ஒழுங்குசெய்யும் திருமணங்கள்தான் அதிக மகிழ்ச்சியுடையதாயிருக்கும் என்ற கர்நாடகக் கொள்கையை யுடையவர் காந்தி. தேவதாஸும், லட்சுமியும் வற்புறுத்தவே இறுதியில் இரு புகழ்பெற்ற தந்தைகளும் ஐந்து வருடப் பிரிவிற்குப் பிறகு மறுபடியும் அவர்கள் மணந்துகொள்ள விரும்பினால் மணந்து கொள்ளலாம் என்று அனுமதித்தனர். ஆகவே, அவர்கள் வருத்தத்தோடு காத்திருந்தனர். 1933ஆம் ஆண்டு ஜூன் மாதம் 16ஆம் தேதி மகிழ்ச்சியான இரு தந்தைகளின் முன்னிலையில் இருவருக்கும் ஆடம்பரமாகத் திருமணம் நடந்தது.

இதற்குப் பின் காந்தி கலப்பு மணங்களைத் தவிர, மற்ற மணங்களுக்குச் செல்ல மறுத்துவிட்டார். 1946ஆம் ஆண்டு ஜனவரி 4ஆம் தேதி 'இந்துஸ்தான் ஸ்டாண்டர்ட் (Hindustan Standard)' பத்திரிகையில், 'அதனால் நான் மணமாகப்போகும் ஆண்களுக்கும் பெண்களுக்கும் சொல்கிறேன். மணமக்களில் ஒருவர் தீண்டாதாராயிருந்தாலொழிய சேவாக்கிரம ஆசிரமத்தில் மணம் முடிக்க முடியாது' என்று காந்தி எழுதினர். சபர்மதி ஆசிரமத்தைவிட்டபின் காந்தி சேவாக்கிரம ஆசிரமத்திலிருந்தார். ஜாதி முறைப்படி நடந்த திருமணத்தைமட்டும் ஏற்றுக்கொண்ட காந்தி, இப்பொழுது ஜாதிவிட்டு ஜாதி நடந்த திருமணங்களைமாத்திரம் ஏற்றுக்கொண்டார். இங்ஙனம் நாளடைவில் இவ் விஷயத்தில் முற்றிலும் மாறிவிட்டார். வைதீக இந்துக்களைப் பார்த்து அவர் அதிகத் திகிலடைந்தார். ஜாதி இந்துக்களுக்கும் தீண்டாதாருக்கும் நடந்த மணங்களை ஆசீர்வதித்தார். அப்படி இருந்தும் அவரைப் பின்பற்றியவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டிருந்தது. அது அவர் செய்த அற்புதம். சகிப்புத் தன்மையற்ற இந்து சமூகத்தினரின் சகிக்கும் தன்மையைக் காட்டுகிறது இது.

ஜாதி வேற்றுமைகளினால் ஏற்பட்ட தீமைகளை காந்தி பெரியவரானபோது அறிந்தார். ஆனால், தீண்டாமையிடம் அவருக்கிருந்த வெறுப்பு உணர்ச்சிவசப்பட்டது. சிறுவராக இருந்தபோதே அவருக்கு அதில் வெறுப்பு உண்டு. C. F. ஆண்ட்ரூஸுக்கு அவர், 'நானும் என் சகோதரரும் ஒரு பறையனைத் தொட்டுவிட்டால் எங்கள் அம்மா எங்களைக் குளிக்கச்சொல்வார்கள். அதைப் பார்த்து நான் சிரிப்பேன்' என்று எழுதினர். அவருடைய அன்பிற்குரிய புத்லிபாய் (Putlibai) தடுத்தும் அவர் தீண்டாதாரோடு விளையாடினர். தென் ஆப்பிரிக்காவில் அவருடைய நண்பர்களில் சிலரும் கட்சிக்காரரில் சிலரும் தீண்டாதார். அவர்களில் ஒருவருக்கு காந்தி தம் வீட்டிலே தங்க இடம் கொடுத்திருந்தார். இந்தியாவிற்குத் திரும்பியபோது அவர் தீண்டாதார் நிலையை முன்னேறச்செய்வதற்காக ஏற்படுத்தியிருந்த ஒரு கூட்டத்திற்கு

1918ஆம் ஆண்டு மே மாதம் சென்றிருந்தார். 'இங்கு தீண்டாதார் யாராவது இருக்கிருர்களா?' என்று கேட்டார். ஒருவரும் இல்லை என்று தெரிந்ததும் அக் கூட்டத்தில் பேச மறுத்துவிட்டார். அவர் சபர்மதி ஆசிரமத்தை ஸ்தாபித்தவுடன் தீண்டாதார் பெண் லட்சுமியையும் அவள் பெற்ருேரையும் அங்கு வசிக்கச்சொன்னுர். உடனே பம்பாய், அகமதாபாத் முதலிய இடங்களிலுள்ள பெருஞ்செல்வர்கள் இதுவரை அவர்கள் ஆசிரமத்திற்குச் செய்துவந்த பண உதவியை நிறுத்திவிட்டனர். ஆனுல், அவருடைய போக்கிலிருந்து அவரை ஒருவராலும் தடுக்க முடியவில்லை. அவர் தீண்டாதார் வசிக்கும் சேரிகளில் போய் வசிக்கப் போவதாகச் சொன்னுர். ஒருநாள் காலையில் ஒருவர் காரில் வந்து 13,000 ரூபாய்க்கு பில்களைக் கொடுத்துவிட்டுச்சென்ருர். அந்த ஆள் அகமதாபாத்திலுள்ள மிகப்பெரிய ஆலை முதலாளியான அம்பலால் சாராபாய் என்று பின்பு தெரியவந்தது. ஆசிரமத்திலுள்ள பெண்கள் தீண்டாதார் பெண்ணுேடு சமையல் அறையில் வேலைசெய்ய மறுத்தனர். இந்துக்கள் உணவுக்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பர். தீண்டாதார் பெண் சமையல் அறையில் இருந்தால் இந்துக்கள் உண்டது முழுவதும் தீட்டுப் பட்டுப்போனதாகக் கருதப்பட்டது. தம்முடைய கணவனின் விசித்திர குணங்களுக்குப் பழக்கப்பட்டுப்போன கஸ்தூரிபாவினுல்கூட இதைச் சகித்துக்கொள்ள முடியவில்லை. கஸ்தூரிபாவை அவருடைய பகுத்தறிவுக்கும் பெருந்தன்மைக்கும் ஏற்ப நடந்துகொள்ளும்படி காந்தி கேட்டுக்கொண்டார். கஸ்தூரிபாவின் நரம்புகளிலே எங்கோ ஓர் மூலையில் தீண்டாமை உணர்ச்சி ஊறி ஒதுங்கிஇருந்தது. இனப்பெருமை, சமய உபதேசம், நிற அசூயை முதலியன அதற்கு உறுதுணையாக இருந்தன. இந் நிலையில் அவரிடம் பகுத்தறிவு, மனிதத்தன்மை முதலிய வற்றைப்பற்றிப் பேசிப் பயனில்லை. 'தீண்டாதாரைத் தங்களோடு வைத்திருப்பது பாவம் என்ருல், அந்தப் பாவத்திற்கு அவர்தான் பொறுப்பு. அவர் பதிபக்தியுள்ள ஓர் இந்து மனைவியானபடியால் அவருடைய சொல்லுக்குக் கீழ்ப்படிய வேண்டும்' என்று காந்தி எடுத்துச்சொல்லி அவரைச் சமாதானப்படுத்தினுர். பிறகு ஆசிரமத்திலுள்ள மற்ற பெண்களும் இசைந்தனர். ஆனுல், இத்துடன் கஷ்டங்கள் முடிந்துவிடவில்லை. திடீரென்று ஒரு நாள் காந்தி லட்சுமியைத் தம்முடைய மகளாகச் சுவீகாரம் செய்துகொண்டதாக அறிவித்தார். அப்படியானுல் அவள் கஸ்தூரிக்கும் மகளாவாள். பக்தியுள்ள, அரைகுறை படிப்புள்ள கஸ்தூரிபா இதைக் கேட்டு ஒன்றும் புரியாமல் திகைத்து நின்ருர். பலவிதங்களில் அவர் உக்கிரமான யோகியின் குணம் உடையவர். அவர் சிற்றின்பத்தைத் துறந்தபிறகே, விசேஷமாக காந்தியைத் தம் ஆசிரியராக ஏற்றுக்கொண்டார். கடவுள்பக்தி நிறைந்த காந்தியைக் குறைகூற அவருக்கு என்ன தகுதி? ஆயினும், அவருக்குத் தீண்டாமையைப்பற்றி இயற்கையாகவே வெறுப்பு இருந்து வந்தது.

ஆண்டுகள் செல்லச்செல்ல உயர்ந்த ஜாதி இந்துக்கள் பலர் ஆசிரமத்துக்கு வந்து காந்தியுடன் உண்பதையும் பேசுவதையும் பெருமையாக நினைத்தனர். ஆசிரமத்தைவிட்டுச் சென்றபின் சிலர் தங்களைத் தூய்மைப்படுத்தியிருப்பார்கள். ஆனால், பெரும்பாலோர் அப்படிப் பாசாங்கு செய்திருக்கமாட்டார்கள். தீண்டாமையாகிய சாபத்தின் வேகம் சற்றுக் குறைந்தது. மக்கள் காந்தியைப் போற்றினர்கள். ஆனால், தீண்டாதாரை வெறுத்தார்கள்.

தத்துவப்படி பார்த்தால் தீண்டாமை அசுத்தத்திற்கு வேலி போன்றது. ஆனால், தீண்டாமை அதை அனுசரிக்கிறவர்களையும் அசுத்தமாக்குகிறது. அதை அனுமதிக்கிற நாட்டையும் அசுத்தமாக்குகிறது. மற்றவர்களை இழிவுபடுத்துகிறவர்களும் இழிவுபடுத்தப்படுகிறவர்களைப்போல் ஒழுக்கத்திலும், பொருளாதாரத்திலும், சமூகத்திலும் குன்றிவிடுகிறார்கள். தீண்டாதார் பலர் இந்துமதத்தைவிட்டு வேறு மதத்தைத் தழுவுவதால் அவர்களுக்கு ஒரு நன்மையும் இல்லை. ஆனால், அது இந்துக்களின் மனச்சாட்சியை உறுத்தும். அங்ஙனம் மதம் மாறுதல் வேண்டும் என்று சில தலைவர்கள்தான் கூறினார்கள். தீண்டாதார் எல்லோரும் அவ் வழியை ஏற்றுக்கொள்ளவில்லை. மத நம்பிக்கை நிறைந்த தீண்டாதார் பலர் மறுபிறப்பிலாவது தங்கள் வாழ்க்கை உயரும்; அதை இப் பிறவியில் மதம் மாறிக் கெடுத்துக் கொள்ளக்கூடாது என்று நம்பினர். ஆகையால், மதமாறுதலை நிறுத்த, இந்துக்களின் மனச்சாட்சியைச் சுடச்செய்து, சரியான வழியில் அவர்களை நடக்கச் செய்யவேண்டும் என்று காந்தி விரும்பினார். இறக்கும்வரை உண்ணாவிரதம் மேற்கொள்வதற்கும் அதுவே காரணம்.

இனி நடக்கப்போகும் பெரும் நிகழ்ச்சியில் காந்தியும் அம்பேத்காரும் முக்கியமானவர்கள். டாக்டர் பீம்ராவ் ராம்ஜி அம்பேத்கார் (Dr. Bhimrao Ramji Ambedker) தீண்டாதாரின் முதன்மையான தலைவர். கட்டான உடலும் உரமிக்க உள்ளமும் உடையவர்; சிறு குணமுடையவர். மேலும் அவர் கூரிய அறிவுடையவர். அவருடைய தந்தையாரும் பாட்டனாரும் பிரிட்டிஷ் இராணுவத்தில் சேவை செய்து பெயர் வாங்கியவர்கள். அவர்கள்மூலமாக அம்பேத்காருக்கு பரோடா கேக்வாரும் பழக்கம் உண்டு. அம் மகாராஜா அம்பேத்காரை நியூயார்க்கிலுள்ள கொலம்பியா சர்வகலாசாலை சட்டப்பள்ளிக்கு உபகாரச் சம்பளம் கொடுத்து அனுப்பினர். புத்திக் கூர்மையுள்ள வழக்கறிஞராக இருந்தபடியால் விரைவில் உயர்ந்த பதவியை அடைந்தார். தீண்டாதார் சார்பாகப் பேசும் பிரதிநிதியாக இருக்க ஒப்புக்கொண்டார். 1931ஆம் ஆண்டு செப்டம்பர் முதல் டிசம்பர் வரை நடந்த இரண்டாவது வட்டமேசை மாநாட்டிற்குத் தீண்டாதாரின் சார்பில் சென்றார். தாழ்த்தப்பட்டவர்களுக்கு இந்தியச் சட்டசபைகளில்

தனித் தேர்தல்தொகுதி ஒதுக்கப்படவேண்டும் அல்லது இந்துக்களுக் குரிய இடங்களில் சில இடங்களையாகிலும் ஒதுக்கிவைக்கவேண்டு மென்று அவர் கேட்டார். காந்தி, இந்த ஏற்பாடு பிரிவினையை உண்டாக்குவது; பயனில்லாதது; பிற்போக்கானது என்று அதை எதிர்த்தார்.

இதற்குப்பிறகு லண்டனிலுள்ள அதிகாரிகள் இந்தியாவிற்கு ஓர் அரசியல் சட்டத்தை வகுக்கமுயன்றார்கள். பிரிட்டிஷ்காரர் முஸ்லீம் களுக்கு ஒரு தனித்தொகுதி கொடுப்பதோடு, தாழ்த்தப்பட்டவர்களுக் கும் ஒன்று கொடுக்கப்போகிறார்கள் என்ற செய்தி ஏர்வாடா சிறையி லிருந்த காந்திக்கு எட்டியது. தீண்டாதாரை பிரிட்டிஷ்காரர் தாழ்த் தப்பட்டோர் என்று அழைத்தனர். காந்தி அவர்களை ஹரிஜனங்கள் என்று அழைத்தார். அதற்குக் 'கடவுளின் குழந்தைகள்' என்பது பொருளாகும். அவருடைய புதிய வாரப் பத்திரிகையையும் 'ஹரிஜன்' என்னும் பெயரிட்டு நடத்தினார்.

1909ஆம் ஆண்டில் பிரிட்டிஷ்காரர் இந்துக்களுக்கும் முஸ்லிம் களுக்கும் தனித்தனி தேர்தல்தொகுதி ஏற்படுத்தினர். அதன் பயனாக இந்தியாவில் பிரிட்டிஷ் ராஜ்யம் இருக்கும்வரை முஸ்லிம்கள் முஸ்லிம் அபேட்சகருக்கும் இந்துக்கள் இந்து அபேட்சகருக்கும்மட்டும் ஓட்டுப் போடமுடியும். இம் முறையினால் ஏற்பட்ட விஷயத்தை அளவிட்டுச் சொல்லமுடியாது. ஒவ்வோர் அரசியல்போராட்டத்திலும் மத வேற்றுமை முக்கியமான அம்சமாகிவிட்டது. இந்த முறையை விளக்கிச் சொல்ல வேண்டுமானால் இங்கிலாந்து, அமெரிக்க ஐக்கிய மாகாணங்கள், ஃபிரான்ஸ் முதலிய நாடுகளில் பார்லிமென்டுக்கோ மற்ற மதஸ்தாபனங் களுக்கோ போட்டியிடும்போது கத்தோலிக்கர் கத்தோலிக்க அபேட் சகர்களுக்கும், பிராட்டஸ்டாண்டுகள் பிராட்டஸ்டாண்டு அபேட்சகர் களுக்கும், யூதர்கள் யூத அபேட்சகர்களுக்கும் ஓட்டுப்போடுவது போலாகும். இந்துக்களுக்கும் முஸ்லீம்களுக்கும் இடையே உள்ள பிளவை நீக்கி, அவர்களை ஒரே ஜன சமுதாயமாக்க வேண்டுமென்பது முக்கியப் பிரச்சினை. இப்படித் தனித்தொகுதிகள் கொடுத்தமை அவர்கள் அரசியல் விஷயங்களில் கலந்துகொள்வதைத் தவிர்த்து, அவர்களுக்கிடையேயுள்ள ஒற்றுமை என்னும் பாலத்தை அழித்துப், பிளவை விரிவடையச்செய்தது.

அது போதாதென்று இப்பொழுது இங்கிலாந்து, தாழ்த்தப்பட் டோருக்கு என்று தனித்தொகுதி ஏற்படுத்தியது. ஆகவே, காந்தி அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, 1932ஆம் ஆண்டு மார்ச் 11ஆம் தேதி ஸர் சாமுவேல் ஹோருக்கு, 'தாழ்த்தப்பட்டோருக்குத் தேர்தல்களில் தனித்தொகுதி அளிக்கச் சர்க்கார் தீர்மானித்தால் நான் சாகும்வரை உண்ணாவிரதம் இருப்பேன்' என்று கடிதம் எழுதினார். அவர்

இப்படி உண்ணுவிரதம் இருந்தால் அவரைச் சிறையில் வைத்திருக்கும் அதிகாரிகளுக்குச் சங்கடத்தை உண்டுபண்ணும் என்று காந்திக்குத் தெரியும். 'ஆனுலும், நான் செய்ய நினைத்திருக்கும் இந்த நடவடிக்கை ஒரு தந்திரமல்ல. அஃது என் வாழ்க்கையோடு சம்பந்தப்பட்ட ஒரு விஷயம்' என்ருர்.

'இன்னும் தீர்மானமான ஒரு முடிவுக்கு வரவில்லை. அப்படி ஒரு முடிவுக்கு வருவதற்குமுன் உம்மைக் கலந்து ஆலோசிப்போம்' என்று மந்திரி, கைதியாகிய காந்திக்குப் பதில்அளித்தார். சில நாட்கள் ஒன்றும் நடைபெறவில்லை. 1932ஆம் ஆண்டு ஆகஸ்டு 17ஆம் தேதி ராம்சே மெக்டோனுல்டு தனித்தொகுதியை ஆதரித்துப் பேசினுர். அடுத்தநாள் காந்தி அவருக்கு ஒரு கடிதம் எழுதினுர். 'உம்முடைய தீர்மானத்தை என்னுடைய உயிரைக்கொடுத்து எதிர்க்க நேரிடும்' என்ருர். செப்டம்பர் 20ஆம் தேதி நண்பகல் உண்ணுவிரதத்தைத் தொடங்கப்போவதாகவும் அவர் எழுதியிருந்தார்.

1932ஆம் ஆண்டு செப்டம்பர் 10ஆம் தேதி டௌனிங் தெரு 10ஆம் நம்பர் (10, Downing Street) கட்டிடத்திலிருந்து எழுதிய ஒரு நீண்ட கடிதத்தில் மெக்டோனுல்டு தமது ஆச்சரியத்தையும் ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்திருந்தார். மகாத்மா காந்தி தம்மைச் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை என்ருர். தாழ்த்தப்பட்டவர்களிடம் அவருக்கிருந்த ஆர்வத்தையும் ஆராய்ந்து பார்த்ததாகச் சொன்ஞர். புதுச் சட்டம் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் இந்துக்களோடு சமமாக ஒட்டுப்போட உதவியது. காந்தி விரும்பியது அதுதானே? இதுமட்டுமல்லாமல் அடுத்த 20 ஆண்டுகளில் குறிப்பிட்ட சில தொகுகளில் தாழ்த்தப்பட்டோர் என்று ஓட்டுச்செய்து, அவர்களுடைய சாதியைச் சேர்ந்தவர்களைச் சட்டசபை அங்கத்தினராகத் தேர்ந்தெடுக்கலாம். சுருக்கமாகச் சொன்னுல், ஒரு தாழ்த்தப்பட்டவனுக்கு இரண்டு ஓட்டுகள் உண்டு. அவர்களுக்காகப் பரிந்துபேசும் காந்தி நிச்சயமாக இதை எதிர்க்கமாட்டார்.

ஏர்வாடா மத்திய சிறையிலிருந்து காந்தி மெக்டோனுல்டுவுக்குக் கடிதம் எழுதினுர். 'தீண்டாதாருக்கு இரண்டு ஓட்டு கொடுப்பதால் அவர்களையோ, இந்து சமுதாயத்தையோ அழிந்துபோவதிலிருந்து காப்பாற்றமுடியாது. அவர்களுக்கு அளவுக்கு அதிகமாகப் பிரதிநிதித்துவம் கொடுப்பதையும் நான் எதிர்க்கவில்லை. மிகக் குறைந்த அளவாளுலும்கூடச் சட்டத்தின் பேரால் அவர்களை இந்து சமுதாயத்திலிருந்து பிரிப்பதையே நான் எதிர்க்கிறேன். அவர்கள் விரும்பி இந்துக்களாயிருக்கும்வரை அப்படிச் செய்வது தகாது' என்று அக் கடிதத்தில் அவர் குறிப்பிட்டிருந்தார்.

அவர்கள் இருவருக்கும் இடையே நடந்த கடிதப் போக்குவரவு இத்துடன் நின்றுவிட்டது. காந்தி உண்ணாவிரதம் இருக்கத் தீர்மானித்து விட்டார். ஏற்கெனவே, இந்தியாவை இந்து முஸ்லிம் என்று இரண்டு தொகுதிகளாகப் பிரித்திருந்தது கேடு விளைவிக்கப் போதுமானது. மூன்று வகையான இந்தியாவை அவரால் கற்பனைசெய்து பார்க்க முடியவில்லை.

காந்தியை உண்ணாவிரதம் இருக்கவேண்டாம் என்று கேட்டு எல்லாப் பக்கங்களிலிருந்தும் கடிதங்களும், செய்திகளும், தந்திகளும் வந்தன. பல நண்பர்களுக்கு இந்தப் பிரச்சினைக்காக காந்தி ஏன் உயிர்விடத் துணிந்தார் என்பது புரியவில்லை. அப்பொழுது சிறையிலிருந்த நேரு தம்முடைய சுய சரிதையில், 'விடுதலையை நோக்கி' என்னும் பகுதியில் 'காந்தி ஒரு கிளைப் பிரச்சினையை எழுப்பி அதற்காகத் தமது உயிரையே தியாகம்செய்யச் சித்தமாகிவிட்டாரே என்று மனவேதனைப்பட்டேன். இதனால் எனக்கு அவரிடம் கோபம் ஏற்பட்டது' என்று எழுதினார்.

காந்தி ஒன்றுக்கும் அசைந்துகொடுக்கவில்லை. சட்டத்திற்கும் நீதிக்கும் அப்பால் அவர் பார்த்தார். மெக்டோனல்டின் திட்டம் ஹரிஜனங்களுக்குத் தனித்தொகுதி திட்டத்தையும் இந்துக்களோடு சேர்ந்த கூட்டுத்தொகுதி திட்டத்தையும் வகுத்தது. ஆனால், கூட்டுத் தொகுதியினால் ஏற்பட்ட நன்மைகளைத் தனித்தொகுதியினால் விளையும் தீமைகள் அழித்துவிடும். தனித்தொகுதியில் அபேட்சர்களும், சட்ட சபை அங்கத்தினர்களும், இந்துக்களுக்கும் ஹரிஜனங்களுக்குமுள்ள வேற்றுமையைப் பேசுவார்கள். இரு வகுப்பினருக்குமுள்ள வேற்றுமைகளை வளர்க்க ஓர் அரசியல் கட்சியும் தோன்றும். இந்துக்கள் செய்த அநீதிகளைப்பற்றி அந்தக் கட்சியினர் பிரசாரம் செய்வார்கள். இது காந்தியின் கொள்கைக்கு முரணானது. பலவகைப் பிரிவுகளும் வேறுபாடுகளும் இருந்தாலும் அவற்றிற்கிடையே அன்பையும் காண வேண்டுமென்பது காந்தியின் கொள்கை. பிரிவுகள் பூசல்களைத் தோற்றுவிக்கும். பிரிவுகள் எண்ணத்திலும் செயலிலும் வெறுப்பையும், பலாத்காரத்தையும் வளர்க்கின்றன.

பிரிட்டனுக்கு விரோதமாக காந்தி இந்த உபவாசம் இருக்கவில்லை. ஹரிஜனங்களுடைய குறைகளை அகற்றுவதற்காக அவர் உண்ணாவிரதம் இருந்தார். அக் குறைகளை அகற்றினால் ஹரிஜனங்களும், இந்துக்களுடன் சேர்ந்து ஓர் அரசியல் சமுதாயம் ஆகலாம். இந்து சமுதாயம் அமைப்பதுதான் அவருடைய குறிக்கோள். இந்துக்களும் ஹரிஜனங்களும் சேர்ந்து தங்களுக்குத் திருப்திகரமான வேறொரு தேர்தல் முறையை அளிக்கும்படி வேண்டிக்கொண்டால் பிரிட்டன் அதை ஏற்கத் தயாராக இருப்பதாகத் தெரிவித்தது.

செப்டம்பர் 20ஆம் தேதி முற்பகல் 11-30 மணிக்கு எலுமிச்சம் பழ ரசமும் தேனும் கலந்த ஒரு கிண்ணம் வெந்நீரை காந்தி தமது கடைசி உணவாக அருந்தினர்.

20. மந்திரவாதி

உண்ணுவிரதத்தைத் தொடங்கிய அன்று காலை 2-30 மணிக்கு காந்தி எழுந்து, ரவீந்திரநாத் தாகூருக்கு ஒரு கடிதம் எழுதினர். 'இன்று செவ்வாய்க்கிழமை ; அதிகாலை 3 மணி. இன்று நண்பகல் நான் நெருப்பு எரியும் வாசலில் நுழையப் போகிறேன். நீர் என்னுடைய முயற்சியைப்போற்றி வாழ்த்துவீர்களானல், நான் பெரிதும் மகிழ்ச்சியடைவேன். நீர் என்னுடைய செயலைப் பழிப்ப தானல் நான் வெளிப்படையாக என்னுடைய தவற்றை ஒப்புக்கொள் கிறேன். நான் தவறு செய்துவிட்டேன் என்று தெரிந்தால், அதை ஒப்புக்கொள்வதால் ஏற்படும் விளைவு எவ்வளவு பெரிதாயிருந்தாலும் நான் அதை ஏற்கத் தயாராயிருக்கிறேன்' என்று அவர் எழுதினர். ஆனல், காந்தி செய்யத்துணிந்ததைத் தாகூர் வாழ்த்துவாரானல் அந்த வாழ்த்துதலை அளிக்குமாறு காந்தி இறைஞ்சினர். 'அந்த ஆசி எனக்கு வலிமைதந்து என்னைத் தாங்கிநிற்கும்' என்று மகாத்மா பணிவுடன் எழுதினர்.

மற்றவர்களுக்கு விளங்காமலிருக்கலாம். ஆனல், தாகூருக்கு இந்தியாவைத் தெரியும். காந்தி அவருடைய கருத்துகளை மதித்து அவற்றிற்குச் செவிசாய்ப்பார். காந்தி அக் கடிதத்தை ஒட்டப்போகும் போது தாகூரிடமிருந்து ஒரு தந்தி வந்தது. 'இந்தியாவின் ஒற்று மைக்காகவும் இந்திய சமுதாயம் சிதையாமல் பாதுகாக்கப்படுவதற் காகவும் மதித்தற்கரிய ஓர் உயிரைத் தியாகம்செய்வது தகும். இத் தகைய தேசிய துன்ப நிகழ்ச்சி நடக்கும்வரை நாங்கள் அக்கறையில் லாமல் இருக்கமாட்டோம் என ஆர்வத்துடன் நம்புகிறேன்' என்று அத் தந்தி கூறியது.

காந்தி இப்பொழுது அக் கடிதத்தில் ஒரு பிற்குறிப்பு சேர்த்தார். அதில், 'உம்முடைய அன்பான தந்திக்கு நன்றி. நான் நுழையப் போகும் புயலுக்கு மத்தியில் உமது ஆசி எனக்கு வலிமைதந்து தாங்கி நிற்கும்' என்று எழுதியிருந்தார்.

அன்று மாலை தாகூர் சாந்தி நிகேதனத்திலுள்ள தம்முடைய பள்ளி மாணவர்களிடம் பேசினர். 'கிரகணம் பிடித்த சூரியனின் நிழலைப் போன்ற ஒரு நிழல் இன்று இந்தியாவை இருளடையச் செய்துகொண் டிருக்கிறது.......தம்முடைய உயிரையே அர்ப்பணம் செய்வதன்மூலம்

மகாத்மா உண்மையிலேயே இந்தியாவைத் தமக்குச் சொந்தமாக்கிக் கொண்டார். மிக உயர்ந்த தியாகவிரதத்தைத் தொடங்கிவிட்டார்.' பின் அவர் அந்த விரதத்தின் தன்மையை விளக்கிச்சொன்னார். 'ஒவ்வொரு தேசத்திற்கும் அதன் ஆத்மா உறையும் சொந்தமான நிலம் இருக்கிறது. அதில் எந்த விதமான மனித பலமும் ஓர் அங்குல நிலத்தைக்கூட வெல்ல முடியாது. வெளியே இருந்து ஆள வந்தவர்கள் அதன் வாசலுக்கு வெளியேதான் நிற்கவேண்டும்' என்று அவர் கூறினார். ஆனால், பிரிட்டன் இந்தியாவின் ஆத்மாவை ஆளவில்லை. 'அந்தப் 'பெரிய ஆத்மா தன் பூத உடம்பு இந்த உலகத்திலிருந்து மறைந்தபின்பும் தன்னுடைய ஆட்சியைத் தொடர்ந்து நடத்திக் கொண்டிருக்கும். மகாத்மா மேற்கொண்டிருக்கும் இந் நோன்பு வெறும் சடங்கு அன்று. அது அகில இந்தியாவிற்கும் உலகத்திற்கும் இந்தியா அளிக்கும் செய்தியாகும். மனித இயல்புகள் அடியோடு அழிந்து போன ஒரு வகுப்பினரைத் தன்னகத்தே வைத்துக்கொண்டு எந்த நாகரிக சமுதாயமும் வாழமுடியாது. ஆதரவற்ற ஒரு மனிதனை இழிவுசெய்யும்போது நம்மையே நாம் இழிவுசெய்துகொள்ளுகிறோம். நம்முடைய சமுதாயத்தில் ஆழமாகப் பதிந்துள்ள இந்த அநீதியை எதிர்த்து மகாத்மா தம்முடைய இறுதித் திட்டத்தை அறிவித்தார்' என்று தாகூர் மொழிந்தார். அது பிறருடைய கவனத்தை வேறு பக்கம் இழுத்து ஏமாற்றுவதற்கன்று; ஆத்மாவை கடைத்தேறுமாறு செய்வதற்காகவே காந்தி இவ்வாறு உண்ணாவிரதம் மேற்கொண்டார் என்பது விளங்கலாயிற்று.

உடனே இந்து தலைவர்கள் பம்பாயில் ஹரிஜனத் தலைவர்களுடன், சிறப்பாக அம்பேத்காருடன் பேச்சுவார்த்தை நடத்தக் கூடினர். நெடுங்காலமாக ஹரிஜனங்களுக்கு இந்துக்கள் இழைத்த அநீதி அம்பேத்காருக்குக் கோபத்தையும் வெறுப்பையும் ஊட்டியது. அன்று காந்தியின் மரணத்தைப்பற்றிச் சிறிதும் கவலையில்லாமல் ஒருவர் இந்தியாவில் இருந்திருப்பாராயின், அவர் அம்பேத்கார்தான். காந்தியின் உண்ணாவிரதத்தை ஓர் அரசியல்ஜாலம் என்று அவர் கூறினார். அம் மாநாட்டில் அவர் பெரிய இந்து மேதைகளை எதிர்த்துநின்றார். அவர்கள் அன்பிற்குரிய மகாத்மாவை அவர்தான் காப்பாற்றவேண்டும் என்று அவரிடம் கெஞ்சியபொழுது அவருக்கு மிகுந்த மகிழ்ச்சி ஏற்பட்டிருக்கும்.

இந்துக்களுக்கும் ஹரிஜனங்களுக்கும் ஒரு கூட்டுத்தேர்தல் ஏற்படுத்த வேண்டுமென்பது இந்து ஆலோசகர்களின் நோக்கம். சட்டசபையில் தடையேதும் இல்லாத ஹரிஜனப் பிரதிநிதிகள் வேண்டுமென்பது அம்பேத்காரின் ஆசை. ஆதலால், கூட்டுத்தொகுதி அவருக்குத் திருப்தி அளிக்காது என்று தெரியும். காந்தி வற்புறுத்தியது போல இந்துக்களும் ஹரிஜனங்களும் சேர்ந்து, ஹரிஜனங்களைத்

தேர்ந்தெடுத்தால், ஹரிஜனங்கள் இந்துக்களின் கைஆட்களாகிவிடு வார்கள். பிறகு அடுத்த தேர்தலில் இந்துக்கள் அவர்களைத் தோற் கடித்து விடுவார்களோ என்று பயந்து இந்துக்களுக்கு விரோதமாகத் தங்கள் குறைகளை வெளிப்படையாகத் தெரிவிக்கத் தயங்குவார்கள் என்று அவர் கருதினர்.

அம்பேத்காரின் நியாயமான இந்தப் பயத்தைப் போக்க, பிரபல நீதிநூல் வல்லவராகிய சர் டேஜ் பஹதூர் ஸப்ரூ (Sir Tej Bahadur Sapru) இந்தியாவில் ஒரு புதுத் திட்டத்தைக் கொண்டுவந்தார். அது தான் ஆரம்பத் தேர்தல். உண்ணுவிரதம் ஆரம்பிப்பதற்கு முந்தைய தினத்தில் காந்தி ஹரிஜனங்களுக்குத் தனிஇடங்கள் ஒதுக்குவதற்குச் சம்மதித்தார். சட்டசபைகளுக்கு இந்து, ஹரிஜன அங்கத்தினர் அனைவரையும், ஹரிஜன வாக்காளர்களும் இந்து வாக்காளர்களும் சேர்ந்து கூட்டாகவே தேர்ந்தெடுப்பார்கள். ஒரு குறிப்பிட்ட எண் ணிக்கை இந்து, ஹரிஜன ஸ்தாபனங்களை ஹரிஜனங்களுக்கு என்று முன்னதாகவே ஒதுக்கிவைத்துவிடவேண்டும். அப்படி ஒதுக்கி வைத்த ஸ்தாபனங்களில் சிலவற்றிற்கு ஆரம்பத் தேர்தல் நடக்கும். இந்த ஆரம்பத் தேர்தல்களில் மூன்று ஹரிஜன அபேட்சகர்களை ஒதுக்கிவைத்த ஒவ்வொரு ஸ்தாபனத்திற்கும் ஹரிஜனங்களே தேர்ந் தெடுத்துவிடுவார்கள். பின்பு, முடிவான இரண்டாவது தேர்தலில் இந்துக்களும் ஹரிஜனங்களும் சேர்ந்து கூட்டாக ஓட்டுச்செய்து, அந்த மூன்று அபேட்சகர்களுள் ஒருவரைத் தேர்ந்தெடுப்பார்கள். இந்த ஏற்பாட்டின்படி கூட்டுத்தொகுதிமுறை அப்படியே இருந்து வரும். அதே சமயம் சட்டசபைக்கு ஹரிஜனங்கள் தங்களுக்குள்ளே பெரிய தீரர்களையும் சிறந்த முறையில் தங்களுக்காகப் பரிந்துபேசக் கூடியவர்களையும் அனுப்பமுடியும். இந்துக்கள் அவர்களைத் தோற் கடிக்கமுடியாது.

அம்பேத்கார் இதை மிகவும் நிதானமாகவும் நுட்பமாகவும் ஆராய்ந்தார். பிறகு மகாநாட்டைவிட்டு வெளியே சென்று மற்ற தீண்டாத வகுப்புக் கூட்டாளிகளோடு சேர்ந்து பலமணி நேரம் இத் திட்டத்தைப் படித்துப்பார்த்தார். பிறகு அதைத் தற்காலிகமாக ஏற்றுக்கொண்டார்.

காந்தி இந்தத் திட்டத்தைப்பற்றி என்ன சொல்வாரோ என்பது அடுத்த பிரச்சினை. ஸப்ரூ, ஜெயக்கர், ராஜகோபாலாச்சாரி, தேவதாஸ் காந்தி, ராஜேந்திர பிரஸாத், பிர்லா முதலியோர் நடு இரவில் பம்பாயி லிருந்து பூனுவிற்குப் புகைவண்டியில் புறப்பட்டுச்சென்றனர். உண்ணுவிரதம் தொடங்கிய இரண்டாவது நாள் காலையில் 7 மணிக்கு காந்தியைப் பார்த்தனர். காந்தி ஏற்கெனவே பலவீனமாயிருந்தார். திட்டத்தைப்பற்றி விளக்கிச்சொல்லும்போது கவனித்துக்கேட்டார்.

ஆனால், அத் திட்டத்தைப்பற்றி எவ்வித கருத்தும் தெரிவிக்கவில்லை. சொன்னதையெல்லாம் நுணுக்கமாகக் கேட்டுக்கொண்டார். அவர் அத் திட்டத்தை எழுதித்தரும்படி கேட்டார். அவர் அம்பேத்காருட னும் சட்டசபை அங்கத்தினருடனும் காந்தீயக் கொள்கையுடையவரு மான M. C. ராஜாவுடனும் பேச விரும்பினர்.

அடுத்த நாள் காலையில் காந்தி ஸப்ரூ திட்டத்தைக் குறைகூறினர். 'இருவகை ஹரிஜன அபேட்சகர்களுக்குள் ஏன் வேறுபாடு காட்ட வேண்டும்? எல்லா ஹரிஜன அபேட்சகர்களையும், ஏன் ஹரிஜனங்களே ஆரம்பத் தேர்தலில் தெரிந்தெடுக்கக்கூடாது? எதற்காகச் சில ஹரி ஜனங்கள் அரசியலில் இந்துக்களுக்குக் கடமைப்பட்டிருக்கவேண் டும்?' என்னும் வினக்களை எழுப்பினர்.

அம்பேத்கார் அன்று பிற்பகலில் காந்தி இருக்கும் சிறைக்கு வந் தார். காந்தியுடன் நீண்ட நேரம் பேசினர். மகாத்மாவின் உயிரைக் காப்பாற்றத் தாம் சித்தமாயிருப்பதாகவும், ஆனல், தமக்கு வேண்டி யதை நஷ்டஈடாகக் கொடுத்தாகவேண்டுமென்றும் வற்புறுத்தினர்.

காந்தியின் உடல்நிலை மோசமாகத் தொடங்கியது. உண்ணுவிர தத்தினுல் அவர் மிகவும் பாதிக்கப்பட்டார். இதற்கு முந்திய விரதங் களில் மணிப்பிரகாரம் நீர் அருந்தினர். இப்பொழுது ஒழுங்காக அருந்தவில்லை. முந்தின தடவைகளில் அவர் உடம்பைப் பிடித்து விட்டதால் அவருக்கு வலி குறைவாக இருந்தது. இப்பொழுது உடம் பைப் பிடித்துவிட வேண்டாம் என்று சொல்லிவிட்டார். அவருடைய மெலிந்த தேகத்தில் கடுமையாக வலி எடுத்தது. குளிக்கும் அறைக்கு அவரை ஒரு டோலியில் கொண்டுபோக வேண்டியதிருந்தது. சிறிது அசைந்தாலும் சில வேளைகளில் பேசினுலும்கூட அவருக்குக் குமட்டல் உண்டானது.

அம்பேத்கார் 'எனக்கு நஷ்டஈடு வேண்டும்' என்றதும், காந்தி வேதனையோடு ஒரு கையில் முட்டுக்கொடுத்து உட்கார்ந்துகொண்டு பல நிமிடங்கள் பேசினர். ஹரிஜனங்களிடம் தமக்குள்ள ஈடுபாட்டைக் கூறினர். ஸப்ரூ திட்டத்தை ஒவ்வொரு பகுதியாக விவாதித்தார். அதற்குத் தம்முடைய எதிர்ப்பினைத் தெரிவித்தார். எல்லா ஹரிஜன அபேட்சகர்களையும் ஹரிஜனங்களே ஏன் நியமிக்கக் கூடாது என்று கேட்டார். களைத்துப்போய்ப் பேச்சைநிறுத்தித் தலையணையில் சாய்ந்தார்.

அம்பேத்கார் மகிழ்ச்சி அடைந்தார். சாகும் தறுவாயிலிருக்கும் மகாத்மாவின் முன்னிலையில் அம்பேத்காரைக் கட்டாயப்படுத்தி அவர் நிலையிலிருந்து பின்வாங்கச் செய்வார்கள் என்று அம்பேத்கார் எதிர் பார்த்தார். அதற்குப் பதிலாக அவர் பரீட்சார்த்தமாக ஏற்றுக்கொண்

டதைவிட அதிகச் சலுகைகளை காந்தி அளித்தார். ஆகவே, ஸப்ரூ திட்டங்களில் ஏற்பட்ட சீர்திருத்தங்களை அவர் வரவேற்ருர்.

அன்றே கஸ்தூரிபாவும் சபர்மதி சிறையிலிருந்து ஏர்வாடா சிறைக்கு வந்துசேர்ந்தார். உண்ணுவிரதம் இருப்பதைக் கண்டிக்கும் தோரணையில் தலையை வலமும் இடமும் அசைத்துக்கொண்டே கஸ்தூரிபா தன் கணவனை நோக்கி மெல்ல நடந்துவந்தார். அருகில் வந்ததும், ‘மறுபடியும் பழைய கதையா?’ என்று கேட்டார். அவர் இள நகை புரிந்தார். அவர் அருகே வந்ததனுல் காந்தி உற்சாகம் அடைந்தார். அவரை, உடம்பைப் பிடித்துவிடுவதற்கும் அனுமதித்தார். பிறகு வழக்கமாக உடம்பு பிடிக்கிறவர்களைப் பிடித்துவிடச் சம்மதித்தார். அவருக்கு உடம்பைப் பிடித்துவிட விருப்பம் இல்லை. மனைவிக்காக அதற்குச் சம்மதித்தார்.

இருதய வைத்திய நிபுணராகிய டாக்டர் கில்டர் (Dr. Gilder) செப்டம்பர் 23ஆம் தேதி வெள்ளிக்கிழமை பம்பாயிலிருந்து வந்தார். அவரும் சிறைச்சாலை டாக்டர்களும் காந்தியின் உடலைப் பரிசோதித்து அவர் உடல்நிலை அபாயமான நிலையில் இருப்பதாகக் கண்டனர். இரத்த அழுத்தம் அஞ்சக்கூடிய அளவு உயர்ந்திருந்தது; (பெரிய தீர்மானங்கள் முடிவுபெருத நிலையில் இருக்கும்போது காந்தியின் இரத்த அழுத்தம் அதிகமாகும்.) அவர்கள் காந்தி எந்த விநாடியும் மரணமடையலாம் என்று கூறினர்.

பேச்சுவார்த்தை நடத்திய இந்துக்களோடு அம்பேத்கார் நாள் முழுவதும் பேரம் பேசினுர். அவருடைய ‘நஷ்டஈட்டில்’ இப்பொழுது புது உரிமைகளையும் கேட்டிருந்தார்.

கோரிக்கைகள் :

1. பிரதம மந்திரி மெக்டோனுல்டு அளித்த தீர்ப்பு மாகாண சட்டசபைகளில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு மொத்தம் 71 இடங்கள் அளித்தது. அம்பேத்கார் 197 இடங்கள் வேண்டுமென்ருர்.

2. ஆரம்பத் தேர்தலில் ஒவ்வோர் இடத்திற்கும் 3 பேர் அடங்கிய பட்டியல் வேண்டுமென்று ஸப்ரூ கூறினுர். காந்தி 5 பேர் அடங்கிய பட்டியல் வேண்டுமென்ருர். அம்பேத்கார் 2 பேர் நியமித்தால் போதும் என்ருர். நியமிக்கப்பட்டவர்களின் எண்ணிகை குறைவாக இருந்தால் அம்பேத்கார் அவர்களை எளிதில் அடக்கலாம்.

3. இறுதிக் கோரிக்கை பொதுமக்களின் வாக்கெடுப்பு சம்பந்தமானது. அந்த வாக்கெடுப்பில் ஹரிஜன வாக்காளர்களே ஹரிஜனங்களுக்காக ஒதுக்கிய இடங்களையும் மற்ற வேறுபாடுகளையும் எப்பொழுது

ரத்து செய்யப்படவேண்டுமென்பதைத் தீர்மானிக்க வேண்டும் என்பதாகும். இதற்கு காந்தி ஐந்து வருடங்கள் தவணையளிக்குமாறு கேட்டார். ஆனால், அம்பேத்கார் அதற்குப் பதினைந்து வருடங்கள் தவணை அளிக்குமாறு வேண்டினார்.

வெள்ளிக்கிழமை அம்பேத்கார் மறுபடியும் காந்தியைப் பார்த்தார். அன்று மிகவும் வெப்பமாகவும் புழுக்கமாகவும் இருந்தது. காந்தி சிறை முற்றத்தில் ஒரு மாமரத்தின் கீழே ஒரு கட்டிலில் வெள்ளைப்படுக்கையில் படுத்திருந்தார். ஓர் இலைகூட அசையவில்லை. காந்தியின் இரத்த அழுத்தம் முன்னைவிட அதிகரித்திருந்தது. காதோடு காதாய்ப் பேசக்கூடிய மெல்லிய குரலில் காந்தி பேசினார். அம்பேத்கார் கடுமையாகப் பேசினார். ஒரு தீர்மானத்திற்கும் வரமுடியவில்லை.

சனிக்கிழமை உண்ணாவிரதம் தொடங்கிய ஐந்தாவது நாள். அது தான் காந்தியின் வாழ்க்கையில் இறுதி நாளாக இருக்கும் என்று டாக்டர்கள் கருதினார்கள். காலையில் முழுவதும் அம்பேத்கார் இந்துக்களோடு சண்டையிட்டுக்கொண்டிருந்தார். நண்பகலில் அவர் காந்தியிடம் வந்தார். மெக்டோனல்டு கூறிய 71 ஸ்தானங்களுக்கும் தாம் கோரிய 197 ஸ்தானங்களுக்கும் இடையில் ஓர் உடன்படிக்கை ஏற்பட்டது என்று அவர் சொன்னார். அம்பேத்கார் இப்பொழுது 147 இடங்களுக்குச் சம்மதித்தார். காந்தியும் அதை அங்கீகரித்தார். ஆரம்பத் தேர்தல் பட்டியல்பற்றியும் அவர்கள் ஒரு முடிவுக்கு வந்தனர்.

ஒரே ஒரு விஷயத்தில் அவர்களிடையே உடன்பாடு காணப்படவில்லை. தேர்தலில் இந்துக்களுக்கும் ஹரிஜனங்களுக்குமுள்ள வேறுபாடுகள் எவ்வளவு காலம் நீடித்திருக்க வேண்டுமென்பதுபற்றியது அது. அம்பேத்கார் 10 வருடங்களுக்குச் சம்மதித்தார். காந்தி 5 வருடங்களிலிருந்து சிறிதும் நகரவில்லை.

மாநாட்டில் கலந்துகொண்டவர்கள் மறுபடியும் கூடினார்கள். அம்பேத்கார் பிடிவாதமாக இருந்தார். காந்தியின் உயிரைக் காப்பாற்றக்கூடிய ஒரு செயலை இப்பொழுது ராஜகோபாலாச்சாரி செய்தார். காந்தியைக் கேளாமலே அவரும் அம்பேத்காரும் ஆரம்பத் தேர்தலை ஒழிக்கும் காலத்தைப்பற்றிய ஒரு முடிவுக்கு வந்தனர். அதாவது பின்னால் அதைப்பற்றித் தீர்மானித்துக் கொள்ளலாம் என்பதே. இதனால் ஒருவேளை பொதுமக்களின் வாக்கெடுப்பே தேவையில்லாமல் போகலாம் என்று அவர்கள் கருதினார்கள்.

ராஜகோபாலாச்சாரி சிறைக்கு விரைந்துசென்று இந்தப் புது ஒப்பந்தத்தை காந்திக்கு விளக்கிச்சொன்னார்.

'அதை மறுபடியும் சொல்லும்' என்று காந்தி கேட்டார். அவர் மிகவும் பலவீனமாயிருந்தார்.

ராஜகோபாலாச்சாரி மறுபடியும் சொன்னார். 'தலை சிறந்தது' என்று மெல்லிய குரலில் காந்தி சொன்னார்.

சரித்திரத்தில் ஏர்வாடா உடன்படிக்கை என்று வழங்கப்படும் ஒப்பந்தம் சனிக்கிழமை அன்று பேச்சுவார்த்தை நடத்திய இந்து, ஹரிஜனத் தலைவர்களால் கையொப்பமிடப்பட்டது.

பழைய மெக்டோனல்டு திட்டத்திற்குப்பதில் பிரிட்டிஷ் அரசாங்கம் ஏர்வாடா உடன்படிக்கையை ஏற்றுக்கொள்ளும்வரை காந்தி உண்ணாவிரதத்தை நிறுத்த மறுத்துவிட்டார். அதுவரை அது ஒப்பந்தமும் ஆகாது என்றார். அந்த ஒப்பந்தத்தின் வாசகம் தந்திமூலம் லண்டனுக்குத் தெரிவிக்கப்பட்டது. அன்று ஞாயிற்றுக்கிழமை. அரசாங்க அங்கத்தினரில் பெரும்பாலோர் லண்டனைவிட்டு வெளியே சென்றிருந்தனர். மெக்டோனல்டு தமது அத்தையின் சவ அடக்கத்திற்காக ஸஸ்ஸெக்ஸ்குப் (Sussex) போயிருந்தார்.

பூனாவில் ஏற்பட்ட இந்த ஒப்பந்தத்தைப்பற்றிக் கேள்விப்பட்டதும் மெக்டோனல்டு டௌனிங் தெரு, 10ஆம் நம்பர் கட்டிடமாகிய தமது இல்லத்திற்கு விரைந்துவந்தார். சர் சாமுவேல் ஹோர், லார்டு லோதியன் (Lord Lothian), மெக்டோனல்டு மூவரும் நடுநிசி வரை ஒப்பந்தத்தைக் கவனமாகப் படித்தனர்.

இதற்கிடையில் காந்தியின் மரண அபாயம் அதிகரித்தது. அவர் கட்டிலைச் சுற்றியிருந்த அவருடைய சொந்தப் பொருள்களை யாருக்குக் கொடுக்கவேண்டுமென்பதைப்பற்றிக் கஸ்தூரிபாவிடம் கூறினார். கல்கத்தாவிலிருந்து தாகூர் வந்து சில பாடல்களைப் பாடினார். அது காந்திக்கு ஆறுதல் அளித்தது.

திங்கட்கிழமை காலையில் பிரிட்டிஷ் அரசாங்கம் ஏர்வாடா ஒப்பந்தத்தை அங்கீகரித்துக்கொண்டதாக லண்டனிலும் புதுடில்லியிலும் அறிக்கை விடுத்தது. மாலை 5-15 மணிக்குக் கஸ்தூரிபா கொடுத்த ஒரு கிண்ணம் ஆரஞ்சுச் சாற்றைக் குடித்து காந்தி தம்முடைய உண்ணாவிரதத்தை முடித்துக்கொண்டார்.

'காப்பியப்பண்பு வாய்ந்த உண்ணாவிரதம்' என்று பெயர் பெற்ற இந்த உண்ணாவிரதம் இருந்த ஆறு நாட்களிலும் முக்கியமான நிகழ்ச்சிகள் சிறைமுற்றத்தில் நடைபெறவில்லை; லண்டனிலும் நடைபெறவில்லை. இந்தியா முழுவதிலும் அவை நடந்தன. தீண்டாதார் பிரச்சினைக்காக காந்தி உண்ணாவிரதம் இருக்கிறாரே என்று ஆரம்பத்தில் கோபமாயிருந்த நேரு, இப்பொழுது இருளுக்குப்பதில் ஒளியைப் பார்த்தார். நேரு அவருடைய சுய சரிதையில் பின்வருமாறு எழுதியிருக்கிறார். 'நாடு முழுவதும் ஏற்பட்ட பிரமாண்டமான கிளர்ச்சி

யைப் பற்றிய செய்தி பின்பு வந்தது. ஏர்வாடா சிறையில் உட்கார்ந்திருக்கும் இந்தச் சிறிய மனிதர் எத்தகைய மந்திரவாதியாயிருக்கிறார் என்று நினைத்தேன். மனிதரின் உள்ளங்களை இயக்கும் சூத்திரக் கயிறுகளை இழுக்க இவர் எவ்வளவு நன்றாகத் தெரிந்துகொண்டிருக்கிறார்' என்று வியப்புற்றார்.

இந்துக்களுடைய மனத்தை மாற்றவேண்டுமென்பதே காந்தியின் இந்த உண்ணாவிரதத்தின் நோக்கம். உண்ணாவிரதம் தொடங்குவதற்கு ஐந்து நாட்களுக்குமுன் அவர், 'ஜாதி இந்துக்களுக்கும், தாழ்த்தப்பட்டோர் தலைவர்களுக்கும் இடையே விருப்பம் இல்லாமல் செய்துகொண்ட ஒப்பந்தம் நிலைத்திருக்கவேண்டுமானால் அஃது உண்மையானதாக இருக்கவேண்டும். இந்துக்கள் அனைவரும் தங்கள் மனத்திலிருந்து தீண்டாமையைக் கிளையோடும் வேரோடும் அகற்றிவிட்டால் என்னைப் பலிகொடுக்கச் சிறிதும் தயங்கக்கூடாது' என்று சொன்னார். அவர் படுக்கையில் பலவீனமாகிக்கொண்டுவரும்போது இந்தப் பேச்சுவார்த்தைகளுக்கு அப்பாற்பட்ட இந்துக்களுக்கும் தீண்டாதாருக்குமுள்ள தொடர்பைக் கண்கூடாகப் பார்த்தார்.

காந்தி உண்ணாவிரதமிருந்த செய்தி நாடு முழுவதும் பரவியது. படித்தவர்கள் இந்தச் செய்தியைப் படிக்கத்தெரியாதவர்களுக்குச் சொன்னார்கள். 'மகாத்மா உண்ணாவிரதம் இருக்கிறார்.' 'மகாத்மா ஏன் உண்ணாவிரதமிருக்கிறார்? ஏனென்றால், இந்துக்களாகிய நாம் ஹரிஜனங்களைக் கோவிலுக்குள் அனுமதிப்பதில்லை. கேவலமாக நடத்துகிறோம். அதற்காக அவர் உண்ணாவிரதம் இருக்கிறார்' என்றனர்.

நகரங்களில் ஆவேசம் காணப்பட்டது. நகரங்களுக்கு வந்து சென்ற குடியானவர்கள் தங்கள் ஊர்களில் உள்ளவர்களுக்கு காந்தியின் உண்ணாவிரதத்தைப்பற்றிச் சொன்னார்கள். இதைப்பற்றி மேலும் செய்திகளை அறிய இந்தியர் ஆத்திரத்துடன் துடித்துக்கொண்டிருந்தனர். 'மகாத்மா பலவீனமாகிக்கொண்டுவருகிறார். மகாத்மா சாகுந் தறுவாயில் இருக்கிறார். நாம் உடனே கவனிக்கவேண்டும். காந்தியின் வேதனையை நீடிக்கச்செய்வது தீமையே. அவர் கடவுளின் ஓர் அம்சம். பூலோகத்திற்குக் கடவுளால் அனுப்பப்பட்ட தூதர். அவருக்கும் மக்களுக்கும் இருந்த உணர்ச்சித்தொடர்பு வாக்குவாதத்திற்கு அப்பாற்பட்டது. கல்கத்தாவிலுள்ள புகழ்பெற்ற காளிகாட் கோவிலும் காசியிலுள்ள ராம் மந்திரும் இந்து வைதீகத்தின் அரண்கள். பல ஆயிரக் கணக்கான வருடத்திய இந்து சரித்திரத்தில் முதல் தடவையாக இந்து கோவில்கள் ஹரிஜனங்களுக்கு உண்ணாவிரத ஆரம்பத்திலேயே திறந்துவிடப்பட்டன. பம்பாயில் பெண்கள் சங்கத்தினர் ஏழு இந்து கோவில்களுக்குமுன் நின்று ஓட்டுஎடுத்த

னர். வெளியே தொண்டர்கள் ஓட்டுப் பெட்டியைப் பார்த்துக்கொண் டிருந்தனர். கோவிலுக்குச் செல்லும் இந்துக்களில் 24,797 பேர் ஹரிஜன ஆலயப் பிரவேசத்தை ஆதரித்தும் 445 பேர் எதிர்த்தும் ஓட்டுச்செய்தனர். இதுவரை ஒரு ஹரிஜனக் கால்சுவடும் பட்டிராத கோவில்களெல்லாம் அவர்களுக்குத் திறந்துவிடப்பட்டன. சாந்தி உண்ணுவிரதம் தொடங்கிய அன்றே அலகபாத்தில் 12 கோவில்கள் ஹரிஜனங்களுக்குத் திறந்துவிடப்பட்டன. பரோடா, காஷ்மீர், போர், (Bhor) கோல்ஹாப்பூர் முதலிய சமஸ்தானங்களிலும் ஆலயப் பிரவேசம் அனுமதிக்கப்பட்டது. இவ்விதமாக ஹரிஜனங்களுக்குத் திறந்துவிடப்பட்ட நூற்றுக் கணக்கான கோவில்களின் பெயர்கள் பத்திரிகைகளில் வெளிவந்தன.

டில்லியில் ஜாதி இந்துக்களும் ஹரிஜனங்களும் தெருக்களில் பகிரங்கமாகச் சகோதரர்போல் நடந்துகொண்டனர். வைதீகக் காசி இந்து சர்வகலாசாலையின் முதல்வர் துர்வாவும் (Dhruva) மற்ற பிரா மணர்களும் வெளிப்படையாகவே தோட்டிகள், தெருக்கூட்டுகிறவர்கள், செம்மார் முதலியவர்களுடன் சேர்ந்து உணவினை உண்டனர். இதுவரை ஹரிஜன மாணவருக்கென்று ஒதுக்கப்பட்டிருந்த விசுப் பலகைகளில் இந்து மாணவர் உட்கார்ந்தனர். சாலைகளும் தெருக் களும் ஹரிஜனங்களுக்குத் திறந்துவிடப்பட்டன. பல கிராமங்களி லும் சிறு பட்டணங்களிலும் உள்ள கிணறுகளில் ஹரிஜனங்களை நீர் இறைக்க அவ்வூர் மக்கள் அனுமதித்தனர்.

ஜவஹர்லால் நேருவின் வைதீகத் தாயாராகிய சுரூப ராணி ஒரு ஹரிஜன் கையால் உணவு வாங்கிச்சாப்பிட்டார். ஆயிரக் கணக்கான புகழ்மிக்க இந்துப் பெண்கள் அவருடைய உதாரணத்தைப் பின்பற்றி னர். இந்தியா முழுவதிலும் உள்ள கிராமங்களிலும் நகரங்களிலு மிருந்து ஆயிரக் கணக்கான சங்கங்கள் ஹரிஜன வேற்றுமைகளை ஒழிப்பதற்கு வாக்களித்துத் தீர்மானங்கள் கொண்டுவந்தன. இந்தத் தீர்மானத்தின் நகல்கள் காந்தியின் சிறை முற்றத்தில் ஓர் ஆள் உயரத்திற்குக் குவிந்திருந்தன. கடுங் காய்ச்சலில் மோசமான நிலையி ருக்கும் ஒரு குழந்தையின் தொட்டிலைக் கவனித்துக்கொண்டிருக்கும் தாயைவிட மிகக் கவலையோடு வெண் கட்டிலில் சாகுந் தறுவாயில் உண்ணுவிரதத்துடன் கிடந்த காந்தியை இந்தியா முழுவதும் ஆவலு டன் கவனித்துவந்தது. காந்தி ஒரு சித்தர் அல்லர். ஆயினும், அத் தகைய மந்திரசக்தி வாய்ந்தவர்போல் மக்களை ஆட்டிவைத்தார். காரண காரியங்களை ஆராயும் பகுத்தறிவு பின்வாங்கியது. ஏனென்றால், காந்தியின் மரணம் எந்த விநாடியும் நேரிடலாம். இந் நேரத்தில் எல்லா இந்துக்களின் ஒரே விருப்பம் காந்தி இறக்கக்கூடாது என்பதே யாகும்.

காந்தி உண்ணுவிரதமிருந்த அந்த ஆறு நாட்களிலும் திருமணங்கள் ஒத்திவைக்கப்பட்டன. பெரும்பாலான இந்துக்கள் திரைப்படம், நாடகம், உணவுவிடுதி முதலியவற்றிற்குப் போகவில்லை. சீர்திருத்தம், கழுவாய் தேடுதல், அகத்தூய்மை முதலியவற்றைப்பற்றி ஓர் உணர்ச்சி நாடெங்கும் பரவியது. அரசியல் மந்திரவாதியாகிய காந்தி ஓர் அரசியல் கலைஞரும் ஆவர். மனிதனின் உள்ளத்தை உருக்கும் ஆற்றலும் அவரிடமிருந்தது.

ஏர்வாடா ஒப்பந்தத்தின்படி 'பிறப்பு காரணமாக ஒரு மனிதனும் தீண்டாதாஞகக் கருதப்படக்கூடாது.' பெருவாரியாக வைதீக இந்துக்கள் இதற்குக் கையொப்பமிட்டனர். இந்த ஒப்பந்தம் ஆயிரக் கணக்கான ஆண்டுகளாக இந்து மதத்தை வாட்டிய ஒரு பெரும் பிணியை ஒழித்தது. இது மதச் சீர்திருத்தத்தின் ஆரம்பக் கட்டமாகவும் மக்களின் மனத்தில் ஒரு புரட்சியை ஏற்படுத்தத் துணையாகவும் இருந்தது. இந்தியாவின் ஒழுக்கநலத்திற்கு இந்த ஒப்பந்தம் உணவு போன்றது. காந்தி இந்த விரதத்தை மேற்கொள்ளாமல் அவரும், அம்பேத்காரும் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டிருந்தால் அஃது எவ்வித பயனையும் அளித்திருக்காது.

இப் பெரும் விரதம் ஹரிஜனங்களுடைய நிலையை நிலையாக உயர்த்தியது. லட்சக் கணக்கான மக்களைப் பழங்காலத்திலிருந்து அடிமைப்படுத்தியிருந்த சங்கிலியைத் தகர்த்து எறிந்தது. இச் சங்கிலியின் இணைப்புகள் மட்டும் எஞ்சியிருக்கின்றன. 1952ஆம் ஆண்டு ஜூன் மாதம் 14ஆம் தேதி ஹரிஜன் பத்திரிகையில் அறிவிக்கப்பட்டிருந்ததாவது: 'நாதமுக்கு அருகிலுள்ள பார்லியில் ஒரு ஹரிஜன் வாலிபன் சிரட்டையில் தேநீர் அருந்த மறுத்துக் கண்ணுடித் தம்ளரில் கொடுக்கவேண்டுமென்றான். உடனே ஒரு ஜாதி இந்து அவனை உதைத்துச் செருப்பால் அடித்தான். அந்த ஜாதி இந்து தண்டிக்கப்பட்டு அபராதமும் விதிக்கப்பட்டான். கோட்டகுடி என்னும் ஊரில் கிராம நாவிதன் ஒரு ஹரிஜனச் சிறுவனுக்கு முடிவெட்ட மறுத்துவிட்டதற்காகப் போலீஸார் அவன்மேல் குற்றஞ் சாட்டியதன்பேரில் சப் மாஜிஸ்ரேட் அவனைத் தண்டித்தார். ஆனால், ஜாதி இந்துக்கள் பிறகு அவ்வூர் ஹரிஜனங்களைக் கூட்டி, மேற்சொன்ன நாவிதனிடம் அவர்கள் முடிவெட்டினால் அவர்கள் எல்லோருக்கும் அபராதம் விதிக்கப்படும் என்று எச்சரிக்கை செய்தனர். கிடரிப்பட்டியில் ஹரிஜனங்கள் பொது ஒற்றையடிப்பாதை வழியாகப் பிரேதங்களைத் தூக்கிச்செல்ல அனுமதிக்கப்படவில்லை. கிராமத் தெருக்களில் ஹரிஜனங்கள் சைக்கிளிலும் செல்லக்கூடாது. கேளவலூ என்னுமிடத்தில் மனிதரும் ஆடுமாடுகளும் குளிக்கும் ஓர் அழுக்குக் குளத்திலிருந்து ஹரிஜனங்கள் நீர் எடுக்கிறார்கள்., இத்தகைய வழக்குகள் ஏராளம். உடலிலே ஏற்பட்ட துவேஷம் ஒரு நாளிலோ அல்லது பத்து வருடங்களிலோ மறைந்து

விடாது. ஆனுல், தீண்டாமை ஒவ்வொருவரும் அனுசரிக்கவேண்டிய ஒழுக்கநெறி என்பது மாறி, அது ஒரு பாவம் என்று எல்லோரும் உணர்ந்தனர். ஆகையால், இந்துக்கள் ஹரிஜனங்களுடைய உரிமைகளை மதித்து ஒழுக ஆரம்பித்தனர்.

காந்தி மகிழ்ச்சி அடைந்தார். விரதம் முடிந்து ஐந்து நாட்களுக்குப் பிறகு அவர் பல மணி நேரம் நூற்றுக்கொண்டும் எழுதிக்கொண்டும் இருந்தார். அவருடைய நிறையும் 99¾ ராத்தல்களுக்கு உயர்ந்தது. ‘ஹரிஜனங்கள் பல ஆண்டுக் காலமாக அனுபவித்துவந்த இன்னல்களோடு ஒப்பிட்டுப்பார்த்தால், இந்த விரதம் ஒன்றுமில்லை. ஆகவே, கடவுள் பெரியவர், இரக்கமுள்ளவர் என்று நான் எப்பொழுதும் பாடிக்கொண்டிருக்கிறேன்’ என்று குமாரி ஸ்லேடுக்கு ஒரு கடிதத்தில் அவர் எழுதினுர். காந்தி இன்னும் சிறையிலிருந்தார்.

21. சொந்த விஷயம்

1933ஆம் ஆண்டு மே மாதம் எட்டாம் தேதி சிறையிலிருந்துகொண்டே மூன்று வாரங்கள் உண்ணுவிரதம் தொடங்கினுர். ஆசிரமத்தில் ஓர் அழகிய அமெரிக்கப்பெண் ஒழுக்கம் தவறி நடந்துவிட்டதே அவ் விரதத்திற்குக் காரணம். உண்ணுவிரதம் தொடங்கிய முதல் நாளே அரசாங்கத்தார் காந்தியை விடுதலை செய்தனர். முந்தின விரதத்தை நினைவில் வைத்துக்கொண்டு காந்தி தங்களிடம் சிறையிலிருக்கும்போது இறந்துவிடக்கூடாது என்று அஞ்சினர். இம்முறை விரதம் இருந்தபோது ஒரு கஷ்டமும் இல்லை. அவருடைய ஆத்மாவுக்கும் மனத்திற்கும் ஓய்வு கிடைத்தது.

இப்பொழுது அவர் சபர்மதி ஆசிரமத்தைச் சில ஹரிஜனங்களுக்குக் கொடுத்துவிட்டார். இந்தியாவில் மத்தியிலிருக்கும் வார்தா என்னும் சிறிய பட்டணத்தில் தம்முடைய தலைமை இடத்தை நிறுவிக்கொண்டார். பின்னுல் வார்தாவுக்குச் சில மைல் தூரத்திலுள்ள சேவாக் கிராமத்தில் குடியேறினுர். 1933ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் ஹரிஜன நலனுக்காகப் பத்து மாத யாத்திரை ஆரம்பித்தார். இந்தியாவிலுள்ள ஒவ்வொரு மாகாணத்திற்கும் சென்றுர். அந்தப் பத்து மாதங்களில் ஒரு முறைகூட சேவாக் கிராமத்திற்குத் திரும்பவில்லை. 1934ஆம் ஆண்டு முதல் 1939ஆம் ஆண்டுவரை அவர் நூற்றல், ஆதாரக் கல்வி, இந்தி அல்லது இந்துஸ்தானியைத் தேசிய மொழியாக்க முயலுதல், சரியான உணவு, இயற்கை வைத்தியம், ஹரிஜனங்களுக்கு உதவி, காங்கிரஸ் அலுவல்கள்—இவற்றில் கவனம் செலுத்தினுர். அப்பொழுது காங்கிரஸ் கட்சியின் முக்கிய அமைப்

பாளர் சர்தார் வல்லபாய் பட்டேல். அவருடைய மூளை ஓர் உருக்குப் பொறி. அவருக்கு எல்லோருடைய பெயர்களும் நன்றாக நினைவில் இருந்தது. அவர் எல்லோருடனும் கண்டிப்புடனும் நட்புடனும் இருக்கக்கூடியவர். காங்கிரஸில் உள்ள மாகாணப் பூசல், வியாபாரப் போட்டி, சாதி சமயச் சண்டை, அரசியல் சண்டை—முதலிய பல பூசல்களுக்கிடையில், எல்லோரையும் தன்னகத்தே அடக்கிக்கொள்ளும் ஒரு கூடாரம் போன்று அவர் விளங்கினார். இச் சமயம் முக்கியமாகக் காங்கிரஸ் பிரசாரம் செய்தவர் ஜவஹர்லால் நேரு. அவர் அழகானவர்; உணர்ச்சி மிக்கவர்; நகைச்சுவை இல்லாதவர்; தம்மை ஒரு சோஷலிஸ்ட் என்று கூறிக்கொண்டார். வாலிபர்களையும் அறிஞர்களையும் தம்முடைய சொல்வன்மையினாலும். ஒழுக்கத்தினாலும் வசீகரித்தார். காந்தியும் காங்கிரஸ் கட்சி விவகாரங்களில் சிரத்தை காட்டினார். ஆனால், சமூகச் சீர்திருத்தத்தில்தான் காந்தியின் முக்கிய கவனம் இருந்தது. மலஉரம் தயாரிக்கும் முறை, பாம்புக்கடிக்கு மருந்து, மலேரியாவுக்குச் சிகிச்சை முதலியவைகளைப்பற்றித் தம்முடைய பத்திரிகையில் எழுதினார்; அல்லது நிலக்கடலையிலுள்ள உணவுச் சத்தைப் பற்றி விவரித்துக்கூறினார். அரசியலில் எவ்வாறு கட்சிகள், தேர்தல்கள், மகாநாடுகள் முக்கியமோ அப்படி அவருக்கு நிலக்கடலை அரசியலாக இருந்தது. இந்தியாவில் விளைந்த எந்தப் பொருளும் அவருக்கு விருப்பம்தான். அவரே இந்தியா. இந்தியாவும் அவரைத் தன்னுடையதாக உரிமை பாராட்டியது. எல்லாக் கேள்விகளும் பிரச்சினைகளும் அவரிடம் கொண்டுவரப்பட்டன. சட்டத்திற்கும் உயர்நீதி மன்றத்திற்கும் எவ்வளவு அதிகாரம் இருந்ததோ,அவ்வளவு அதிகாரம் அவருடைய கருத்திற்கும் இருந்தது. அவரிடம் யாரும் போகலாம். இடையே வழி மறிக்கும் சுவர் ஒன்றும் கிடையாது. அவர் எல்லோரும் பார்க்கும்படியாக உணவினை உண்டார்; உறங்கினார்; நடந்தார்; வேலைசெய்தார்; படித்தார்; நூல் நூற்றார். அவருடைய எல்லா எண்ணங்களும் செயல்களும் பொதுச் சொத்து. நோயினால் துன்பப்பட்டுக்கொண்டிருந்த ஒரு கன்றுக்குட்டியை அவர் டாக்டரை விட்டு ஊசி போடச் சொல்லிச் சாகவைத்தார். அதனால் அவருக்குப் பலத்த எதிர்ப்பு ஏற்பட்டது. ஆனால், அவர் தாம் செய்தது சரி என்று சொன்னார். ஒரு தடவை துணி உற்பத்தியாளர் ஒருவர் தமது ஆலையைச் சுற்றியுள்ள பகுதியில் அலைந்துதிரிந்த 60 நாய்களைத் தம்முடைய ஆலையின் சுற்றுப்புறத்தில் கட்டிப்போட்டுக் கொன்றுவிட்டார். அதை காந்தியிடம் சொன்னபொழுது அவர், 'வேறு என்ன செய்திருக்க முடியும்?' என்று கேட்டார். அஃது இந்து மதத்திற்கு விரோதமானது என்று அவரைப் பலர் குறைகூறினர். அவருடைய பத்திரிகைகள் முழுவதிலும் அவர்களுடைய கடிதங்கள் பிரசுரிக்கப்பட்டிருந்தன. அவர் மேல்நாட்டு மிருகத்தன்மையை ஏற்றுக்கொண்டுவிட்டார் என்று அவர்மீது குற்றஞ்சாட்டினர். அவரும் சுருக்கென்று பதில்சொன்னார். 'மனிதத்

தன்மையைப்பற்றி மேல் நாட்டினர் கொள்கை குறையுடையதாக இருக்கலாம். ஆனல், நடைமுறையில் அவர்கள் நம்மைவிட உயர்ந்த வர்கள்' என்று பதில் சொன்னர். 'நாம் நமது கொள்கை உயர்ந்தது என்று எண்ணி வெறும் திருப்தியுடனிருக்கிறோம். ஆனல், அதை அனுசரிப்பதில்லை. அப்படி அனுசரித்தாலும் அதிகச் சிரத்தை காண்பிப்பதில்லை' என்று எழுதினர். காந்தி இளம் விதவைகள் பிரச்சினைகளிலும், அதிகச் சிரத்தை காண்பித்தார். பெற்ரேர் தங்களுடைய பெண் குழந்தைகளை மற்றக் குடும்பத்திலுள்ள ஆண் குழந்தைகளுக்கு அல்லது கிழவர்களுக்கு மணம் முடித்துக்கொடுத்தனர். கணவன் இளம்பிராயத்திலோ அல்லது மூப்பினுலோ இறந்தால் 3 வயது அல்லது 6 வயதுள்ள அந்தப் பெண் இந்துமதாசாரப்படி மறுமணம் செய்து கொள்ளக்கூடாது. 'பால்ய விதவைகள் இந்து மதத்திற்கே ஒரு கறை. கன்னி விதவைகளின் மறுமணம் விரும்பத்தக்கது என்று நான் கருதுகிறேன். அப்படிப்பட்ட பெண்களுக்கு மணம் முடித்துவைப்பது பெற்ரேரின் கடமை' என்று அவர் எழுதினர். விதவைகளுக்கு மறுமணம் செய்வது இந்துமதாசாரத்திற்குப் புறம்பானது என்ருர்கள். அதற்கு, 'அந்தப் பெண்களுக்கு முதல் திருமணமே ஆகவில்லை. ஆகையால், மறுமணத்தைப்பற்றிப் பேச்சில்லை' என்று காந்தி பதில் அளித்தார். இளம் விதவைகளுக்குக் காதல் என்ருல் என்ன என்று தெரியாது. ஒவ்வொரு மனிதப் பிறவியும் காதலை அனுபவிக்கவேண்டும் என்பது காந்தியின் வாதம்.

ஆனல், சரீர சம்பந்தமான காதலைக் கட்டுப்படுத்தவேண்டும். ஆணும் பெண்ணும் அடிக்கடி புணர்வதால் இந்தியர் பலவீனமடைந்துவிடுகிருர்கள் என்று காந்தி நினைத்தார். 1935ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் மார்க்கரெட் சேங்கர் (Margaret Sanger) என்னும் மாது இது விஷயத்தில் காந்தியினுடைய தீர்மானமான உதவியைத் தேடிவந்த போது, காந்தி அவரை ஆதரிக்கவில்லை. சில சமயங்களில் செயற்கை முறைகளினல் பிள்ளைப்பேற்றைக் குறைப்பது நியாயம் என்று கருதினலும், ஒரு நாளைக்கு ஒரு பென்னி வருமானம் உள்ள லட்சக் கணக்கான ஏழை மக்களுக்கு, இந்தச் செயற்கைமுறை இயலாத ஒன்று என்ருர். அவர் இந்தியாவின் மக்கள்தொகையைக் குறைக்க வேண்டிய தேவையை உணர்ந்தார். 'இந்தியா இன்றுள்ள வறுமை நிறைந்த நிலையில், பிள்ளை பெறுவதைத் தாங்களே மனமுவந்து நாகரிகமான முறையில் கட்டுப்படுத்திக்கொள்ளும் முறையைக் கண்டுபிடிக்க முடிந்தால் அதை இன்றே நிறைவேற்றுவேன்' என்று C. F. ஆண்ட்ரூஸுக்கு எழுதினர். மன உறுதியை காந்தி விரும்பினர். பிறப்பு விகிதத்தை ஒழுங்குபடுத்தும் உறுதியான ஒரே முறை சுயக் கட்டுப்பாடே. ஜனத்தொகையைக் கட்டுப்படுத்த அவர் சொன்ன நல்ல யோசனை, காலந் தாழ்த்தித் திருமணம் செய்துகொள்ள வேண்டு

மென்பது. பெண்கள் 21 வயதிற்கு மேலும், ஆண்கள் 25 வயதிற்கு மேலும் மணந்துகொள்ளலாம் என்று கருதினர். அவர் தம்முடைய பிள்ளைகள் சீக்கிரம் மணம் செய்து கொள்ளாதவாறு பார்த்துக்கொண்டார். 1940ஆம் ஆண்டிலிருந்து 1959ஆம் ஆண்டுவரை ஆண்டிற்கு 50 லட்சம் வீதம் மக்கள் தொகை பெருகியது. இந்தியாவின் பொருளாதார நிலையில் இஃது அதிகமான மக்கள் பெருக்கமென்றே சொல்ல வேண்டும். ஏனெனில், இந்தியா சுதந்திரத்திற்குப்பிறகு அடைந்த பொருளாதார முன்னேற்றம் அனைத்தும், மக்கள்தொகையின் பெருக்கால் அடிபட்டுவிட்டது. ஆகவே, திருமணம் செய்துகொள்ளும் வயதைச் சிறிது அதிகரிப்பதால் ஆண்டுதோறும் பெருகும் ஐம்பது லட்சம் மக்கள்தொகையை நிறுத்தமுடியாது.

'புணர்ச்சி புணர்ச்சிக்காக; புணர்ச்சி மனிதனுக்குத் தேவை; மக்கள் தொகை பெருகுவதற்காக அல்ல'—என்பதை எதிர்த்துப் பேசுகையில் காந்தி தாம் வாலிபராயிருந்தபோது நடந்ததை மறந்துவிட்டார். 37 வயதிலிருந்து சாகும்வரை பிரம்மச்சரியத்தை காந்தி கடைப்பிடித்தபோதிலும், அவரது காம உணர்ச்சி சிறிதும் மறையவில்லை. 1936ஆம் ஆண்டு டிசம்பர் 26ஆம் தேதி ஹரிஜனில் 67 வயதான பழுத்த மகாத்மா வெளிப்படுத்தியதாவது: 'சில மாதங்களுக்குமுன் நான் பம்பாயிலிருந்தபோது எனக்கு மிகவும் இழிந்த உணர்வு உண்டாயிற்று. அது ஒரு சோதனை உண்டான நேரம். நான் தூங்கிக் கொண்டிருந்தபோது திடீரென்று எனக்கு ஒரு பெண்ணைப் பார்க்க வேண்டுமென்ற உணர்ச்சி ஏற்பட்டது.' 40 வருடங்களுக்கு மேலாக இந்த உணர்ச்சியை அடக்கி ஆண்ட ஒருவருக்கு இப்படி ஒரு பயங்கரமான அனுபவம் ஏற்பட்டது நிச்சயமாக அவருக்கு வேதனையாக இருந்திருக்கும். 'இறுதியில் அந்த உணர்ச்சியை வென்றேன். அந்த நேரம் என் வாழ்க்கையிலே மிக மோசமான நேரம். அந்த உணர்ச்சிக்கு நான் வசப்பட்டிருந்தால், எனது வாழ்க்கை பாழாகி இருக்கும்.' இம்மாதிரி சொந்த அனுபவங்களைப் பலர் வெளிப்படுத்த மாட்டார்கள். அங்ஙனம் வெளிப்படுத்துவது தேவையற்றது என்று கூடக் கருதுவர். ஆனால், உண்மையை உலகம் அறியவேண்டுமென்று காந்தி விரும்பினர். அவருடைய சுய சரிதைக்குச் 'சத்தியசோதனை' என்றே பெயர். அது முழு உண்மை. அவர் கூறிய உண்மை மற்றவர்களுக்கு ஒரு படிப்பினையாக இருக்குமென்று நம்பினர். 'ஒருவரால் செய்ய முடிந்தது மற்றவர்களாலும் செய்யமுடியும் என்று எப்பொழுதும் சொல்லிவந்திருக்கிறேன். என்னுடைய வாழ்க்கை அனுபவங்கள் பிறர் அறியாத தனி இடத்தில் ஏற்பட்டவை அல்ல. எல்லோரும் பார்க்கும் இடத்தில் ஏற்பட்டவை' என்றார். அவருடைய வாழ்க்கையின் இறுதி நாட்களில் தமது இளம் பெண் சீடர்களுடன் ஒரே படுக்கையில் படுத்துத் தூங்கிக், காமத்தைக் கட்டுப்படுத்தும்

சோதனை செய்துவந்தார். இந்தச் சோதனையை அவருடைய ஆண் சீடர்கள் கடுமையாக எதிர்த்தனர். காமத்தை முற்றிலும் அடக்கு வதைவிட இவ்விதம் செய்வது சரிதான். இந்தப் பெரும் முனிவராகிய காந்தி கள்ளமற்ற வெள்ளைச் சிந்தை உடையவர். இங்ஙனம் சூது வாது இல்லாமல் மகிழ்ச்சியாக இருப்பது மனோதத்துவ ஆராய்ச்சி என்று நம்பினார் போலும்.

பலவித சமூகப் பிரச்சினைகளைப்பற்றியும் சொந்தப் பிரச்சினைகளைப் பற்றியும் எப்பொழுதும் மகாத்மா சிந்தித்துவந்ததால், பலவிதமான ஆட்கள்—தவறுதலான நடத்தையுள்ளவர்கள், போலி வைத்தியர்கள், அரைப் பைத்தியக்காரர்கள்—காந்தியின் ஆசிரமத்திற்கு தங்கள் கருத்துகளை காந்தியிடம் தெரிவித்து அவருடைய இணக்கத்தைப் பெறவந்தார்கள். மேலும் அவரைப் பார்க்க நண்பர்கள், தெரிந்த வர்கள், அரசியலில் அவரோடு பழகியவர்கள், அந்நியர் எல்லோரும் வந்தனர். சிலர் திருமணத்திற்கும் சில மணமானவர்கள் பிரிந்து போகவும் அவர் சம்மதத்தைப் பெறவந்தனர். பல இந்தியருக்கு அவர் ஒரு சுவீகாரத் தந்தையாக இருந்தார். காந்தியின் கருத்துகளை ஏற்றுக்கொள்வதால் துன்பமிக்க விளைவுகள் ஏற்பட்டன. எனினும், தங்களுடைய சொந்தப் பிரச்சினைகளை காந்தி நன்கு அறிந்து ஏற்ற யோசனைகளைச் செய்வார் என்று பலர் ஏன் நினைத்தார்கள் என்பது புரியவில்லை. காந்தி ஒரு நல்ல கணவன் என்று சொல்ல முடியாது. நல்ல தந்தையும் அல்ல. 'உம்முடைய குடும்பம் எப்படி இருக்கிறது?' என்று ஒரு தடவை வெளிநாட்டார் ஒருவர் காந்தியைக் கேட்டாராம். அங்ஙனம் வெளிநாட்டார்தான் காந்தியைக் கேட்க முடியும்.

'இந்தியா முழுவதும் என்னுடைய குடும்பம்' என்று அவர் பதில் சொன்னார். தம் சொந்த மனைவியிடமும் குழந்தைகளிடமும் தனிப் பற்றற்று இருந்தார். இளம் வயதில் காந்திக்கும் கஸ்தூரிபாவுக்கும் மனக்கசப்பு இருந்தது. ஆனால், நாளடைவில் அது குறைந்தது. கஸ்தூரிபா காந்திக்குப் பணிவிடைகள் செய்வதில் ஓர் எடுத்துக் காட்டாக இருந்தார். காந்தியும் கஸ்தூரிபாவிடத்தில் மிகுந்த தாராள மனப்பான்மையுடன் நடந்துகொண்டார். பலரும் போற்றும் கணவன் மனைவியாக விளங்கினர். கஸ்தூரிபா காந்தியின் மனைவியாயிருந்தும் எவ்விதச் சலுகையும் பெற்றதில்லை. எவ்வளவு கஷ்டமான வேலையா யிருந்தாலும் அதைச்செய்யத் தயங்கியதில்லை. இளம் பெண்கள் காந்தி யுடன் பழகியதைக் கஸ்தூரிபா சிறிதும் பொருட்படுத்தியதில்லை. 1942ஆம் ஆண்டு நான் காந்தியுடன் இருந்த ஒரு வார காலத்தில் காந்தியும் கஸ்தூரிபாவும் ஒருவருடன் ஒருவர் பேசினதை நான் பார்த்ததில்லை. உண்ணும்போதும் பிரார்த்தனையின்போதும் கஸ்தூரிபா, காந்தியின் இடது தோளுக்குச் சற்றுப் பின்னாலிருந்து

அக்கறையுடன் அவருக்கு விசிறிக்கொண்டும் எப்பொழுதும் அவரைப் பார்த்துக்கொண்டும் இருந்தார். காந்தி அவரை ஏறெடுத்துப் பார்ப்பது மிகவும் அருமை. ஆனால், அவர் கஸ்தூரிபா எப்பொழுதும் தம் பக்கத்திலிருக்க விரும்பினார். அவர்களுக்கிடையே பூரண மன ஒற்றுமை இருந்தது என்று எனக்குத் தோன்றியது. கஸ்தூரிபா காந்தியின் நிழல்போல் இருந்தார். இருந்தாலும், அவர் உறுதியான மனப்பான்மையும் திண்மையும் உடையவர்; எதையும் பற்றற்ற நோக்குடன் உற்றுக் கவனிப்பார்; அவருடைய சுருங்கிய முகம், நேர்க்கோடு போன்ற மெல்லிய வாய், சதுர முகவாய்க்கட்டை அவர் அனுபவித்த துன்பங்களையும், அவர் செய்த தியாகத்தையும், அவருடைய உறுதியையும் எடுத்துக்காட்டின. அவர் ஒரு நாளும் தம் சொந்தக் கருத்தை விட்டுக்கொடுத்ததில்லை. காந்தியும் அதைப் போற்றினார். 'பா என்னுடன் வாழ்ந்துவந்தாலும் தேநீர் அருந்துகிறார்' என்று ஒரு முறை காந்தி சொன்னார். காந்தி சொன்னதை மறுத்துக் கஸ்தூரிபா காப்பி சாப்பிட்டார். 'பா' என்ற சொல்லுக்கு அன்னை என்று பொருள். 'நான் அவருக்காக அன்போடு அதைத் தயார்செய்தும் கொடுப்பேன்' என்றார். காந்திக்கு வயது ஆக ஆக, அவருக்குக் கஸ்தூரிபாவிடமுள்ள அன்பு அதிகரித்தது.

ஆனால், அவர் தம் பிள்ளைகளுக்குச் செய்யவேண்டிய கடமைகளைச் சரிவரச் செய்யவில்லை. தம் பிள்ளைகள் இளம் துறவிகள் என்று நினைத்து, அவர்களுடைய கல்விக்கு ஏற்பாடு செய்யவில்லை. ஏனெனில், படிப்பைவிட ஒழுக்கம் பெரியது; உத்தியோகத்தைவிடப் பொதுப் பணியே சிறந்தது என்று நினைத்தார். அவர்கள் அதை வெறுத்தனர். அவருடைய மூத்தமகன் ஹரிலால் சிற்றின்பப் பிரியர்; குடிகாரன்; தம்முடைய மனைவி மக்களைவிட்டுப் பிரிந்தார். மகாத்மாவைப் புண்படுத்தும் நோக்கத்துடன் முஸ்லிம் ஆகி அப்துல்லா என்ற பெயர் வைத்துக்கொண்டார். இரண்டாவது மகன் மணிலால் தன் தந்தையின் வழியைப் பின்பற்றினார். காந்தி என்ன தண்டனை விதித்தாலும் அத்தனையும் ஏற்றுக்கொண்டார். தென் ஆப்பிரிக்காவில் மலான் (Malan) சர்க்கார் கறுப்பர்களுக்கு இழைத்த அநீதியை எதிர்த்து நடத்திய பொதுமக்களின் இயக்கத்திற்குத் தலைவராக அவர் இருந்துவந்தார். ராம்தாஸ் ஒரு சிறிய பட்டணத்தில் கிளை ஆபீஸ் மானேஜராக வேலை பார்த்துவந்தார். கடைசி மகன் தேவதாஸ்மட்டும் தந்தைக்குப் பக்கத்திலிருந்து அழைத்தபோது காரியதரிசி வேலையைச் செய்து வந்தார். மகாத்மா தம்முடைய பிள்ளைகளைவிடத் தம்முடைய பேரப்பிள்ளைகளிடம் சில வேளைகளில் அதிகப் பிரியமாயிருந்தார் என்று தேவதாஸ் கூறினார். ஒருவருடைய அழிவற்ற தன்மையைப் பேரப் பிள்ளைகள் எடுத்துக்காட்டுகிறார்கள் என்று காந்தி நினைத்தார் போலும். தம்முடைய குழந்தைகள்மூலம் ஒரு கலைஞரோ, கவியோ அல்லது ஒரு

மேதையோ தம்முடைய ஆற்றலையும் அறிவையும் பரம்பரைப் பொரு ளாகச் செய்யமுடியாதா என்று ஒருவர் கேட்டார். 'முடியாது. ஒருவ ருக்குப் பிள்ளைகளைவிடச் சீடர்கள்தான் அதிகமாக இருக்க முடியும்' என்று காந்தி பதிலளித்தார். அவர் குழந்தைகளிடம் மிகவும் பிரிய முள்ளவர். அவர்களுடைய புனிதத்தன்மையிலும் நம்பிக்கை உடையவர். வயதான பிறகுதான் தீமை தலையெடுக்கிறது என்று சொன்னார். ஆசிரமத்தில் உள்ள குழந்தைகளிடம் கண்சிமிட்டி, அவர்களுடைய காதுகளைக் கிள்ளுவார். நான் ஆசிரமத்திலிருந்த போது ஒரு குழந்தையை எடுத்துக்கொண்டு, 'இந்தக் குழந்தைதான் எனக்கு ஓய்வு வேண்டும்போது மன அமைதி அளிக்கிறது' என்றார். ஒரு கைக்குழந்தையின் மூக்கோடு தன்மூக்கை உரசிக்கொண்டிருப் பதுபோல் ஓர் அழகான படம் இருக்கிறது. ராம்தாஸின் மகன் ஒரு கம்பின் முன்பக்கத்தையும் காந்தி பின்பக்கத்தையும் பிடித்துக் கொண்டு வேகமாக நடப்பதுபோல மற்றோர் அழகான படம் இருக் கிறது.

சிறியவர்களும் சரி, பெரியவர்களும் சரி, காந்திக்குப் பயந்ததில்லை. ஆசிரமத்திற்கு உள்ளேயும் வெளியேயும் அவருடைய பழக்கம் நேரிடை யாகவும், நட்பாகவும், எளிதாகவும் இருந்தது. அவருக்கு மிகப் பெரிய கடிதப்போக்குவரத்து இருந்தாலும், அவர் ஒவ்வொரு கடிதத்திற்கும் பதில் எழுதினார். வெறும் கடனுக்காக மட்டுமன்று. சொந்தக் கஷ்டங் களைச் சொல்ல மக்கள் அவரிடம் வந்தால், அவர்கள் சொல்வதைப் பொறுமையாகக் கேட்டு அவர்களுக்கு ஆறுதல் சொல்லி, அவர்களைத் தேற்றுவார். 1946ஆம் ஆண்டில் பிரிட்டிஷ் சர்க்காரோடு இந்தியாவின் வருங்காலத்தை நிர்ணயிக்கும் பேச்சுவார்த்தைகள் நடந்துகொண் டிருந்த சமயம் அவருடன் சேர்ந்தவர்களும் மந்திரிகளும் காந்தியுடன் பேசுவதற்குக் காத்துக்கொண்டிருந்தனர். அப்பொழுது அவர் ஆசிர மத்தின் தலைவாயிலில் நடந்துகொண்டே ஒரு நொண்டிப் பெண்ணுடன் கால்மணி நேரம் பேசிக்கொண்டிருப்பதைப் பார்த்தேன். பிறகு ஒரு வாலிபனோடும் கால் மணி நேரம் பேசிக்கொண்டிருந்தார். அவருடன் இருந்த ஒருவரை விசாரித்ததில் அவர்கள் இருவரும் ஹரிஜன வகுப் பைச் சேர்ந்த கணவன், மனைவி என்றும், அவர்களுக்குள் இப்பொழுது மனவருத்தம் ஏன்றும், காந்தி அவர்களைச் சேர்த்துவைக்க முயன்று கொண்டிருந்தார் என்றும் தெரியவந்தது. அவர் பிறரிடம் அளவற்ற அன்பு காட்டினார். பிறரும் அவரிடம் அளவற்ற அன்பு காட்டினார்கள். அவரிடத்தில் பெண்மைக்குணம் இருந்தது. அவர் அடிக்கடி தம்மை ஒரு தாயோடு ஒப்பிட்டுப் பேசுவதுண்டு. ஒரு சமயம் தாம் விதவை யாகிவிட்டதாகக் கூறிக்கொண்டார். 'என்னிடத்தில் உள்ள பெண் மைக்குணத்தை நீங்கள் அறியாமல் இருந்திருக்க முடியாது என்று நம்புகிறேன்' என்று காந்தி திருமதி நாயுடுவுக்கு ஒரு கடிதத்தில் குறிப்

பிட்டிருந்தார். அவர் எப்பொழுதும் மிகவும் சுத்தமாயிருப்பார். சிக்கன மாகச் செலவுசெய்வார். எல்லோரிடத்திலும் மிகவும் அன்பாக இருப் பார். பிறர் துன்பத்தைத் தம் துன்பம்போல் பாவிப்பது, நூல்நூற்றல், கொல்லாமை முதலிய பண்புகள் அவருடைய பெண்மைக் குணங்களில் சில. நோயாளிகளைக் கவனிக்கவும் பலவீனமானவர்களை ஆதரிக்கவும் அவர் விரும்புவார். ஆனால், தம்மை அம்மாதிரிக் கவனித்துக்கொள்வ தில்லை. அவருடைய தோற்றத்தில் ஆண்மை காணப்பட்டது. ஆணின் உடல் வலிமையும் மன உறுதியும் அவரிடமிருந்தது. எனினும், இனிமையாகவும் சாதுவாகவும் காணப்பட்டார். அவர் மனத்திட்பமும் அன்பும் நிறைந்தவர்; பிடிவாதமுடையவர்; எனினும், விட்டுக்கொடுக் கும் மனப்பான்மையுடையவர். தைரியமுள்ளவர்; ஆனால், பணிவு நிறைந்தவர். சர்வாதிகாரியின் ஆற்றல் நிறைந்தவர்; ஆனால், அவர் ஜனநாயகவாதியின் பண்புடையவர். ஆகையால், அதிகாரத்தால் செய்து முடிப்பதைவிட அன்பால் செய்துமுடிப்பதே இனிது என்று கருதினார். பலாத்காரத்தால் அடைந்த வெற்றியை உதறித்தள்ளினார். காரணத்திற்கப்பாற்பட்ட உள்ளுணர்ச்சி அவருடைய அறிவிற்குத் துணைநின்றது. ஆண், பெண் இருவருக்கும் உள்ள பண்புகள் இவரிடம் ஒருங்கே அமைந்திருந்ததே காந்தியின் தனிப்பெருங் குணாதிசயமாகும். அவருடைய சொந்த வாழ்க்கையையும் பொதுப்பணிகளையும் புரிந்து கொள்ள இதுதான் திறவுகோல் என்றால் அது தவறாகாது.

22. இயேசு கிறிஸ்துவும் மகாத்மா காந்தியும்

காந்தியின் சீடர்களில் கிறிஸ்தவப் பாதிரிமார் பலர் உண்டு. காந்தி இயேசுவிடம் பக்தி நிறைந்தவர். இந்துமத வெறியர்கள் பலர் காந்தி இரகசியமாய்க் கிறிஸ்தவ வழிபாடு செய்கிறார் என்று தூற்றினர். அங்ஙனம் அவர்கள் சொன்னதைப் பழி என்றும் அதே சமயம் பாராட்டு என்றும் காந்தி கருதினார். மறைவாக காந்தி எதுவும் செய் வார் என்று நம்புவது பழி. கிறிஸ்தவ மதத்தின் பெருமையைத் தாம் உணரமுடியும் என்று ஏற்றுக்கொள்ளுதல் பாராட்டு.

காந்தி எப்பொழுதும் சகிப்புத்தன்மையும் நேர்மையும் உடை யவர். அதனால் புனிதமான இந்து வேதங்கள் மட்டும்தானா கடவு ளுடைய வார்த்தையை வெளியிடமுடியும் என்ற வினாவை எழுப்பினார். 'அந்தச் சக்தி பைபிளுக்கும் குரானுக்கும் இல்லையா?' என்று அவர் கேட்டார். சமயச் சச்சரவுகளில் அவருக்குச் சிறிதும் விருப்பம் இல்லை. 1942-ல் காந்தியுடன் நான் தங்கியிருந்தபோது அவருடைய ஆசிரமத் தின் மண்சுவரில் கருமையும் வெண்மையும் கலந்த இயேசு கிறிஸ்து வின் படம் தொங்கினதைப் பார்த்தேன். அப் படத்தின் கீழே, 'இவர்

தான் நமக்குச் சாந்தி அளிப்பவர்' என்று எழுதப்பட்டிருந்தது. இதைப் பார்த்துவிட்டு, 'நீங்கள் கிறிஸ்தவர் இல்லையே?' என்று நான் காந்தியைக் கேட்டேன். 'நான் இந்து, கிறிஸ்தவன், யூதன், முஸ்லிம்' என்று காந்தி பதிலளித்தார். இந்த உயர்ந்த மனப்பண்பு சில கிறிஸ்தவர்களைவிட காந்தியைச் சிறந்த கிறிஸ்தவராக்கியது என்று சொல்லலாம்.

இந்தியாவிலுள்ள கிறிஸ்தவர்களுக்கு காந்தி ஒரு புதிராக இருந்தார். அவர் இந்து. ஆனால், உலகத்திலே அவர்தான் கிறிஸ்துவைப் போன்ற பக்தராக இருந்தார். பல ஆண்டுகள் இந்தியாவில் வாழ்ந்து, பல மணி நேரம் காந்தியுடன் பேசி உணர்ச்சி ஐக்கியம்பெற்று இன்புற்ற டாக்டர் ஸ்டான்லி ஜோன்ஸ் (Dr. E. Stanley Jones) என்னும் சிறப்புமிக்க அமெரிக்க மதபோதகர் சரித்திரத்திலே இயேசு போன்ற காந்தி, கிறிஸ்தவர் என்று அழைக்கப்படவில்லையே என்று வருந்தினர். 'கடவுள் தம் விருப்பத்தை நிறைவேற்றப் பல கருவிகளைப் பயன்படுத்துகிறார். கிறிஸ்தவப் பண்பை மறந்த கிறிஸ்தவரைக் கிறிஸ்தவராக்குவதற்கு காந்தியைக் கடவுள் கருவியாக உபயோகித்திருக்கலாம்' என்று ஜோன்ஸ் பகர்ந்தார். எல்லா இடங்களிலுமுள்ள கிறிஸ்தவர்களுக்கும் காந்தியின் செய்தி என்னவென்றால் இருபதாம் நூற்றாண்டு மனிதனும் கிறிஸ்தவனாக முடியும் என்பதே. கல்கத்தா பிஷப்ஸ் கல்லூரியில் விரிவுரையாளராக இருந்த S. K. ஜார்ஜ் (Mr. S. K. George) இந்தியாவிலுள்ள சிரியன் கிறிஸ்தவர். அவர் கிறிஸ்தவச் சமயத்திற்கு காந்தியின் 'அறைகூவல்' என்று ஒரு புத்தகம் எழுதினர். 'எனக்கு இயேசுவையும் அவருடைய செய்தியையும் உணர்த்திய மகாத்மா காந்திக்கு' என்று எழுதி அதை காந்திக்குச் சமர்ப்பித்தார். மலபாரிலுள்ள கிறிஸ்தவக் கோவிலைச் சேர்ந்த சங்கைக்குரிய K. மத்தேயு சைமன் (Rev. K. Matthew Simon) காந்தியைப் பற்றி பின்வருமாறு கூறியிருக்கிறார். 'இருபதாம் நூற்றாண்டில்கூடக் கிறிஸ்தவம் அனுபவ சாத்தியமான ஓர் மதம் என்பதை எல்லாவற்றையும்விட காந்தியுடைய வாழ்க்கையே நிரூபித்தது.'

பிரிட்டிஷ் மதபோதகராகிய C. F. ஆண்டுரூஸும் மகாத்மா காந்தியும் மிக நெருங்கிய நண்பர்கள். 'இரத்த சம்பந்தமுள்ள சகோதரர்களைவிட எனக்கு மிகவும் நெருங்கியவர்' என்று மகாத்மா அவரைப்பற்றிக் கூறியிருக்கிறார். காந்தி அவரைச் 'சார்லி' என்றும், அவர் காந்தியை 'மோஹன்' என்றும் பரஸ்பரம் அழைத்தனர். 'ஆண்டுரூஸைவிட வேறு யாரிடமும் எனக்குப் பாசம் இருப்பதாகத் தெரியவில்லை' என்று காந்தி எழுதினர். அந்த இந்து துறவிக்குக் கிறிஸ்தவ ஆண்டுரூஸைவிட வேறு நல்ல ஆத்ம நண்பர் கிடைக்கவில்லை. அதேபோல் கிறிஸ்தவப் பாதிரியாகிய ஆண்டுரூஸுக்கும்

இந்துவாகிய காந்தியைவிட வேறு சிறந்த கிறிஸ்தவ நண்பர் கிடைக்க வில்லை.

தென் ஆப்பிரிக்காவில் இருக்கும்போது காந்தி கிறிஸ்தவ மதத்தைத் தழுவ ஒரு முறை நினைத்ததுண்டு. ஆனால், அவருடைய மனத்தில் எழுந்த ஐயங்களுக்கும் கேள்விகளுக்கும் சரியான விடைகள் கிடைக்கவில்லை. கடவுளுக்கு ஏன் ஒரே மகன் இருந்தார்? ஒரு மகன் இருந்தால் இன்னொரு மகனும் ஏன் இருக்கக்கூடாது? இக் கேள்விகளை காந்தி அவரை மதம் மாற்ற முயன்ற கிறிஸ்தவர்களிடமே கேட்டார். இந்துமதத்தில் கடவுளுடைய மனித அவதாரங்களாகப் பலர் தோன்றினர். கிறிஸ்தவனாக மதம் மாறினால்தான் வீடு பெறுவது சாத்தியமா? மதம் மாறாவிட்டால் சாத்தியமில்லையா என்று ஆச்சரியப்பட்டார். கிறிஸ்தவர்களுக்காகமட்டும் பரலோகம் ஒதுக்கிவைக்கப்பட்டிருக்கிறதா? கடவுள் ஒரு கிறிஸ்தவரா? 'மறு உலகத்தில் இந்துக்களோ, கிறிஸ்தவர்களோ, முஸ்லிம்களோ கிடையாது என்று நான் நம்புகிறேன்' என்று பல வருடங்களுக்குப்பிறகு ஒரு முறை காந்தி இந்தியாவில் கூறினர்.

சபர்மதியிலும் சேவாக் கிராமத்திலும் அவருடைய ஆசிரமத்திலிருந்த கிறிஸ்தவப் பாதிரிமார்கள் அவரைக் கிறிஸ்தவராக்க முயன்றனர். அவரும் சாதுர்யமாகப் பேசி அவர்களது மனத்தை மாற்ற முயன்றார். ஆனால், எதற்காக ஒரு துறவியைத் திருச்சபையில் அங்கத்தினராகச் சேர்க்கவேண்டும்?

கிறிஸ்தவப் பாதிரிமார்கள் பசியுள்ள ஏழை இந்தியர்களுக்கு உணவு அளித்தும் நோய்வாய்ப்பட்டவர்களுக்குச் சிகிச்சை செய்தும் அவர்களை மதம் மாறச்செய்யும் முயற்சிகளை ஒரோவழி காந்தி கண்டித்தார். 'எங்களைச் சிறந்த இந்துக்களாகும்படி செய்யுங்கள்' என்று அவர்களை காந்தி பரிந்து கேட்டுக்கொண்டார். காந்தி நினைத்திருந்தால் பல கிறிஸ்தவர்களை இந்துக்களாக மாற்றியிருக்கலாம். அவரிடமிருந்து ஒரு சிறிய குறிப்பு 'வந்திருந்தால் குமாரி ஸ்லேடும் இன்னும் பலரும் இந்துக்களாகி இருப்பார்கள். ஆனால், அவர் அவர்களைச் சிறந்த கிறிஸ்தவர்களாகவே இருக்கும்படி சொன்னார்.

முடிவில் காந்தி கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டார். கிறிஸ்தவத்தை ஏற்கமறுத்தார். 1927ஆம் ஆண்டில் இலங்கையிலுள்ள கொழும்பு நகரக் கிறிஸ்தவ இளைஞர் சங்கத்தில் பேசியபோது அவருடைய கொள்கையைத் திட்டமாகக் கூறினர். 'மலைப்பிரசங்கத்தையும் அதற்கு நான் கூறும் பொருளையும்மட்டும் ஏற்பதாயிருந்தால், 'ஆம்' நானும் ஒரு கிறிஸ்தவன் என்று சொல்லத் தயங்கமாட்டேன். ஆனால், கிறிஸ்துவமதம் என்ற பெயரால் வழங்கும் பல பழக்கங்கள் மலைப்பிரசங்கத்

திற்கு முற்றிலும் முரணானது என்றார். மேலும் விவரித்து அவர் கூறியதாவது: ‘நான் கிறிஸ்தவர் நடத்தையைப்பற்றிச் சொல்ல வில்லை; மேல் நாட்டில் வழங்கிவரும் அவருடைய நம்பிக்கைளைக் குறிப்பிடுகிறேன்’ என்றார்.

1946ஆம் ஆண்டில் நான் அவரோடு இருந்தபோது இதைப்பற்றி இன்னும் தெளிவாகச் சொன்னார். ‘பால் (Paul) ஓர் யூதர் அல்லர். கிரேக்கர். அவர் பெரு நாவலர். சொல்வன்மை யுடையவர். அவர் கிறிஸ்துவத்தைத் திரித்துக்கூறினார். கிறிஸ்துவிடம் பெரும் ஆற்றல் இருந்தது. அதுதான் அன்பும் அருளும். ஆனால், கிறிஸ்தவமதம் மேற்கே பரவியபொழுது அது விகாரமடைந்தது. அஃது அரசர்க ளுடைய மதமாகியது.’ இங்ஙனம் அவர் அழுத்தமாகக் கூறியது மேல் நாட்டு நாகரிகத்தின்மீது அவருக்கிருந்த வருத்தத்தைக் காண்பித் தது. 1930 முதல் 1939 வரை மேல்நாட்டரசுகள் யுத்தத்திற்கு வரிந்து கட்டிக்கொண்டிருந்தபோது அவர் மேல்நாடுகளைக் கண்டித்தார். சமாதான வழியே சிறந்தது என்பதில் அவருக்கு நம்பிக்கை அதிகரித் தது. ஆனால், டால்ஸ்டாயைப்போல் எந்தச் சமயத்திலும் யுத்தம் கூடாது; சமாதான வழியே எப்பொழுதும் சிறந்தது என்று காந்தி கருதவில்லை. முதல் உலக மகாயுத்தத்தை ஆதரித்த காந்தி ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான் முதலிய நாடுகளோடு நியாயமான கார ணங்களுக்காகத் தொடுத்த இரண்டாவது உலக யுத்தத்தை ஏன் ஆத ரிக்கவில்லை என்று கேட்டவர்களுக்கு, ‘அப்பொழுது அவருடைய கருத்துகள் வேறு; உலகமும் வேறாக இருந்தது’ என்று பதிலளித் திருப்பார். அஹிம்சா தர்மத்தில் அவர் அழுத்தமான நம்பிக்கை உடையவர். மேல் நாடுகள் கடைப்பிடித்த பலாத்கார முறையில் அவ ருக்குச் சிறிதும் நம்பிக்கை இல்லை. இத்தாலியில் பலாத்கார முறை யும், ரஷியாவில் ஸ்டாலின் முறையும், மற்றும் உலகத்தில் ஆங்காங்கு ஏற்பட்ட சண்டைகள், பயங்கரமான குற்றங்கள், ஒழுங்கற்ற முறைகள் முதலானவை மேல்நாட்டினர் கடைப்பிடித்த பலாத்கார முறையின் வெற்றியையும் கிறிஸ்து மதத்தின் ஒழுக்கமுறையின் தோல்வியையும் காண்பிக்கிறது என்று காந்தி கருதினார். ஆனால், இந்தியாவை அந்நியர் படையெடுக்கும் சமயத்தில் இதே கருத்துகளை வற்புறுத்தியிருப்பார் என்று சொல்லமுடியாது. அதனால்தான் சுதந்திர இந்தியாவில் பதவி வகிக்க அவர் இசையவில்லை. காந்தி ஒரு தீர்க்கதரிசி. அதனால்தான் சமாதான முறையை அனுசரிக்காமல், பலாத்கார முறையில் பிரச்சினை களைத் தீர்க்க உலகத்தார் இறங்கினால், உலகம் அழிந்துவிடும் என்று காந்தி உணர்ந்தார். யுத்தம் ஆரம்பிப்பதற்குமுன் யுத்தம் தொடுப்ப தற்குப் பல காரணங்கள் சொல்லமுடியும். ஆனால், யுத்தத்திற்கேது வாகிய பேராசை, பகைமை முதலியவை உலகத்தைப் பிடித்து ஆட்டிக் கொண்டிருக்கும்போது, காந்தி சொன்ன வழியை ஏற்றுக்கொள்ளலாம்.

காந்தியின் அஹிம்சா தர்மம் என்பது தனிமனிதன் தன்வாழ்க்கையில் கடைப்பிடித்து ஒழுகவேண்டிய ஓர் ஒழுக்கமுறை எனலாம். அதாவது, உண்மை பேசுதல், பிறரிடம் அன்பு காட்டுதல், பிறருக்குத் தொண்டு புரிதல், எதையும் ஒழுங்கான முறையில் செய்தல், செயலிலும் பிறரைத் துன்புறுத்தாமை, சகிப்புத்தன்மை, அவாவின்மை, பொறுமையுடன் இருத்தல் ஆகியவற்றை அன்றாட வாழ்க்கையில் கடைப்பிடித்து ஒழுகுவதாகும்.

மேலும், நாடுகளிடையே ஏற்படும் யுத்தங்களையும் பெரும் சமுதாயங்களிடையே ஏற்படும் தீராப் பிணக்குகளையும் தவிர்ப்பதற்கு காந்தியின்வழி ஒரு சிறந்த வழி எனலாம். 'உங்கள் நெஞ்சைத் தொட்டுப் பாருங்கள்' என்று அவர் அடிக்கடி சொல்லிவந்தார். குற்றத்திற்கு நீங்களும் பொறுப்பு; தகராறு ஏற்படும்பொழுது பிறரிடம் நியாயம் கேளுங்கள்? பேச்சுவார்த்தை நடத்துங்கள். பிறரை உங்களுக்கு நியாயம் கூறச்சொல்லுங்கள் என்று காந்தி கூறிவந்தார். இல்லையேல், ஒரு சமயப் பூசலோ, ஒரு சமுதாயச் சண்டையோ வேறொரு தகராறுக்கு ஏதுவாகும். அதற்குரிய பயம், பகை முதலியவை ஏற்படும். ஹிம்சைமுறை, ஹிம்சைமுறையை வளர்த்துக்கொண்டுபோகும். அதற்கு முடிவே இல்லை.

இவை பலரும் அறிந்த உண்மைகளே. அது காந்திக்குத் தெரியும். மேல்நாட்டாருக்கு இந்த உண்மைகளை எடுத்துச்சொல்லி, சமாதான முறையைப் போதிக்கும்படி, 1946-ல் காந்தியிடம் நான் சொன்னேன். 'இரண்டும், இரண்டும் நான்கு என்று சொல்வதற்கு மேல்நாடுகள் என்னை ஏன் நாடுகின்றன?' என்று காந்தி வியந்தார். இந்த உண்மையை மேல்நாட்டு அறிஞர்கள் புரிந்துகொண்டனர். ஆனால், அவர்களுடைய மனம் இந்த உண்மையின் தத்துவத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. அதனால் கிறிஸ்தவ உலகத்தைப்பற்றி காந்தி குறைகூறினார். இந்தியாவின் குறைகளையும் அவர் அறியாமல் இல்லை. மேல்நாடுகளுக்குப் போகவேண்டும் என்பதைப்பற்றி ஒரு முறை பேசிக்கொண்டிருந்தபோது, 'இங்கேயே நான் செய்து முடிக்காத வேலைகள் பல உள்ளன' என்று காந்தி குறிப்பிட்டார்.

'நம்மிடையே அறிஞர் பலர் இருக்கின்றனர். ஆனால், ஆண்டவன் வழி நிற்போர் மிகச்சிலரே. அணுவின் சக்தியைப் புரிந்துகொண்டோம். ஆனால், மலைப்பிரசங்கத்தின் தத்துவத்தைப் புறக்கணித்துவிட்டோம்'. இவ்வாறு கூறியது காந்தி அல்ல. அமெரிக்கத் தளபதி ஓமர் பிராட்லி (General Omar N. Bradley, Chairman of the Joint Chiefs of Staff of the United States Armed Forces) 1948ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 10ஆம் தேதி பாஸ்டன் என்ற இடத்தில் அவர் நிகழ்த்திய சொற்பொழிவாகும். மேலும், அவர் கூறியதாவது:

'உலகத்தில் இப்பொழுது மக்கள் அணுசக்தியைப்பற்றி அறிந்த அளவில் அரக்கர்களைப்போலவும் ஆனால், அறநெறியில் ஒன்றும் அறியாத குழந்தைகளைப்போலவும் இருக்கிறார்கள். நாம் சமாதானத்தைவிடச் சண்டையைப்பற்றி நன்கு அறிந்திருக்கிறோம். வாழ்வதைவிட அழித்தலைப்பற்றி அதிகம் தெரிந்துகொண்டிருக்கிறோம்' என்றார்.

காந்திக்கு ஹிம்சைமுறையைப்பற்றி ஒன்றும் தெரியாது. ஆனால், மகிழ்ச்சியாகவும் பிறருக்குப் பயன்படும்படியாகவும் வாழத்தெரியும். அவருக்கு அணுவின் சக்தியைப்பற்றி ஒன்றும் தெரியாது. ஆனால், அறவழி நின்றொழுகிய பெரியார். அவர் கிறிஸ்துவின் மலைப் பிரசங்கத்தை ஏற்றுக்கொண்டார். அதனால் அணுசக்தியின் ஹிம்சை முறையைத் தள்ளிவிட்டார். ஒழுக்கநெறியில் அவரைக் கிறிஸ்தவர் என்றும், யூதர் என்றும், இசுலாமியர் என்றும், இந்து என்றும் கூறலாம். அவ்வளவு உயர்ந்த மனப்பக்குவம் உடையவர் வேறு யார் இருக்கிறார்கள்? அதனால்தான் அவர் இந்துவாக இருந்தும் மனித இனத்தின் மனச்சாட்சிக்குப் பிரதிநிதியாக விளங்கினார். அவர் எப்பொழுதும் தமது மனச்சாட்சியின் ஆணைப்படி நடப்பவர். ஆதலால், பிறருடைய மனச்சாட்சியையும் ஏற்றுக்கொள்ளும்படி பேசுவார்; பிறருடைய மனச்சாட்சிக்காகவும் மற்றவர்களிடம் அவர் பரிந்து பேசுவார்.

23. வின்ஸ்டன் சர்ச்சிலும் மகாத்மா காந்தியும்

இரண்டாவது உலக யுத்தம் தொடங்கிய அன்றே இந்தியாவின் சம்மதமில்லாமல் ஒரு பிரகடனத்தின்மூலமாக இந்தியாவையும், இங்கிலாந்து யுத்தத்தில் சேர்த்துக்கொண்டது. இந்தியா ஒன்றும் செய்ய இயலாமைக்கு இதுவும் ஒரு சான்று என்று இந்தியர் இதை எதிர்த்தனர். இதை இழிவாகவும் கருதினர். அடுத்த நாள் காந்தி கோடைக்காலத்தின் இந்தியத் தலைநகராகிய சிம்லாவுக்குப் புகைவண்டியில் சென்றார். வைஸ்ராய் லார்டு லின்லித்கோவுடன் நடத்திய ஒரு பேட்டியில் காந்தி அழுதுவிட்டார். 'பார்லிமென்ட் கட்டடத்திற்கும் வெஸ்ட்மினிஸ்டர் தேவாலயத்திற்கும் அழிவு ஏற்படுமோ என்று நினைத்தபோது நான் மனம் சோர்ந்துவிட்டேன். இம்மாதிரி அநியாயங்கள் நடக்கிறதே என்று ஆண்டவன்மீது எனக்கு வருத்தந்தான்' என்று காந்தி கூறினார்.

'சிறிதும் கலப்படமில்லாத குரூரமான பலாத்காரமே ஹிட்லரின் தத்துவம். அந்தப் பலாத்காரத்தை விஞ்ஞான முறையில் சிறிதும்

பழுதுபடாமல் வகுத்த விஞ்ஞான வித்தையாக ஹிட்லர் அதை உருவாக்கிக்கொண்டிருந்தார். இந்த யுத்தத்திற்கு ஹெர் ஹிட்லர் (Herr Hitler) தான் பொறுப்பாளி என்ற முடிவுக்கும் வந்துவிட்டேன். இங்கிலாந்தின்மீதும் பிரான்சின்மீதும் எனக்கு அச் சமயம் உண்டாகிய அனுதாபம் உணர்ச்சியால் ஏற்பட்டதன்று' என்று காந்தி கூறினர். நாஜிகளிடம் ஃபிரான்ஸ் சரண் அடைந்ததும், இங்கிலாந்தின் உயிர் அதன் விமானப்படையிடம் ஊசலாடிக்கொண்டிருந்தபோதும், 'பிரிட்டனுக்குச் சாக வேண்டியநிலை வந்தால்கூட அது எளிதில் சாகாது. அப்படிச் சாக நேரிட்டாலும் வீரத்துடன் சாகும். நாம் பிரிட்டனின் தோல்விகளைப்பற்றிக் கேள்விப்படலாம். ஆனால், அதன் வீர ஒழுக்கக் குறைவுகளைப்பற்றிக் கேள்விப்படமுடியாது' என்ருர் காந்தி. யுத்த காலம் முழுவதும் பிரிட்டிஷ்காரருடைய ஒழுக்க முறையை காந்தி அதிகமாக மதித்துவந்தார். 'இங்கிலாந்து தோல்வியடையவோ, இழிவுபடவோ நான் விரும்பவில்லை' என்று 1940ஆம் ஆண்டு செப்டம்பர் 15ஆம் தேதி நடந்த அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் காந்தி பேசினர். 'ஆகையால், உங்களுடைய நாட்டிற்கும் கிரேட் பிரிட்டனுக்கும் என்னுடைய நல்ல வாழ்த்துக்களைத் தவிர, என்னிடம் வேறொன்றுமில்லை' என்று 1942ஆம் ஆண்டு ஜுலை முதல் தேதி ஜனதிபதி ரூஸ்வெல்டுக்கு காந்தி எழுதிய கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. அதை ரூஸ்வெல்டிடம் சேர்க்கும்படி காந்தி என்னிடம் கொடுத்தார்.

1942ஆம் ஆண்டில் ஜப்பானியர் தென்கிழக்கு ஆசியா முழுவதும் கைப்பற்றி இந்தியாவின் எல்லைக்கு வந்து அதைத் தாக்கப்போவதாக பயமுறுத்தினர். காந்தி அவர்களை வன்மையாகக் கண்டித்தார். 'ஜப்பானியர் வந்தால், அவர்களை நாம் சாத்வீக முறையில் எதிர்ப்பது எப்படி?' என்று அவரிடம் கேட்கப்பட்டது. 1942ஆம் ஆண்டு ஜுன் 14ஆம் தேதி ஹரிஜனில் அவர் பதில்சொன்னர். 'உணவும் தங்க இடமும் கொடுக்கக்கூடாது. அவர்களை ஒருவரும் விரும்பவில்லை என்று அவர்கள் உணரச் செய்யவேண்டும். அவர்களுக்குக் கட்டாய சேவை செய்வதைத் தடுப்பதற்காக, அவர்களால் ஆக்கிரமிக்கப்பட்ட இடங்களிலிருந்து வெளியேறவேண்டும்.' ஒரு முறை ஜப்பானியப் பார்லிமெண்டில் அங்கத்தினராயிருந்த திரு. டக்காவோக்கா (Mr. Takoaka) ஜப்பானியக் கட்சிக்கு காந்தியை ஒரு செய்தி அனுப்பச்சொன்னர். 'ஆசியா ஆசியருக்கே' என்பதே அக் கட்சியின் சுலோகம். 'இக் கொள்கை ஆசிய நாடுகள், ஐரோப்பிய நாடுகளுக்கு எதிராகக் கூட்டுச்சேர வேண்டுமென்று பொருள்படுமானல், நான் ஒரு செய்தியும் அனுப்பமுடியாது' என்று மறுத்துவிட்டார்.

யுத்தம் முடியும்வரை காந்தி ஜப்பானியருக்கும், நாஜிகளுக்கும், முஸோலினிக்கும் விரோதமாக இருந்தார். பிரிட்டிஷ்காரருக்கும்,

ஃபிரெஞ்சுக்காரருக்கும், அமெரிக்கருக்கும் ஆதாரவாக இருந்தார். யுத்த காலத்தில் நேரு, ஜெனரலிஸ்மோ, மேடம் சியாங்கே ஷேக், (Generalissimo, Madame Chiang Kai-Shek) ஸோவியத் யூனியன் முதலியவர்களிடம் காட்டிய ஈடுபாட்டினால் பாதிக்கப்பட்டு காந்தி சீனவையும் ரஷியாவையும் ஆதரித்துப்பேசினர். 'நான் இப்படி ஆதரிப்பது பிரிட்டிஷ்காரரை நேசிப்பதாலும் ஜெர்மானியரை வெறுப்பதாலும் அன்று. ஜெர்மானியர் பிரிட்டிஷ்காரரைவிடவோ, இத்தாலியரைவிடவோ மோசமானவர்கள் என்று நான் நினைக்கவில்லை. 'நாம் எல்லோரும் சமமே. பெரிய மனித குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். நமக்குள் வேறுபாடு ஒன்றுமில்லை. இந்தியர்கள் உயர்ந்தவர்கள் என்று சொல்லவும் நான் தயாராகவும் இல்லை' என்றார். பிற நாடுகளை ஆக்கிரமிக்கும் அரசாங்கங்களை அவர் எதிர்த்தார். அதனால் அவர் யுத்தம் தொடங்கிய மறுநாள் பிரிட்டனைச் சிக்கலான சூழ்நிலையில் திகைக்கவைக்க விரும்பவில்லை என்று வெளிப்படையாக ஒரு சபதம் செய்தார். அவர் பிரிட்டனுக்கும் நேசநாடுகளுக்கும் தம்முடைய தார்மீக ஆதரவை அளித்தார். இதற்குமேல் அவர் ஒன்றும் செய்ய மாட்டார். தமது கொள்கைக்கு முரணாக யுத்த முயற்சியில் அவர் பங்கு எடுக்கமுடியாது. ஆனால், காங்கிரஸ் கட்சிக்கோ அந்த மாதிரி மனச் சங்கடங்கள் ஒன்றும் இல்லை. காந்தியின்கூட இருந்த சீடர்களில் எல்லைப்புற காந்தி, கான் அப்துல் கபார்கான்போன்றவர்கள் தவிர, அஹிம்சா தர்மம், சமாதானக்கொள்கை இவற்றில் நம்பிக்கையுடையவர்கள் காங்கிரஸ் கட்சியில் மிகச் சிலரேயாவர். அஹிம்சை அடிப்படையில் காந்தி நடத்திய இயக்கங்களில் காங்கிரஸ் தலைவர்கள் அவர்களைப் பின்பற்றியதற்குக் காரணம் யாதெனின், அவர்களுக்கு காந்தியின் தலைமை இன்றியமையாததாயிருந்தது என்பதே. மேலும், இந்தியர்களிடம் ஆயுதம் இல்லை. ஆதலின், அஹிம்சைமுறையைக் கடைப்பிடிப்பதைத் தவிர, வேறு வழியில்லை. காந்திக்கும் இது தெரியும். காந்திக்கு அஹிம்சை என்பது ஒரு சமயக் கோட்பாடு. காங்கிரஸுக்கோ எனின், அது வெறும் சடங்கு. ஒரு காரியத்தைச் சாதிப்பதற்கு அஹிம்சையையும் ஒரு முறையாக ஏற்றுக்கொண்டார். யுத்தத்தில் நேச நாடுகளோடு சேர்வதால் இந்தியாவிற்கு நன்மை ஏற்படுமானல், யுத்தத்தில் சேர காங்கிரஸ் தயாராக இருந்தது. 'சுதந்திர ஜனநாயக இந்தியா பிற நாடுகளுடன் தற்காப்புக்காகவும் பொருளாதாரத்துறையில் ஒத்துழைக்கவும் கூட்டு ஒப்பந்தம் செய்ய இந்தியா சித்தமாயிருக்கிறது' என்று காங்கிரஸ் கட்சியின் அறிக்கையில் அவர்கள் குறிப்பிட்டார்கள். இவ் வறிக்கை நேருவால் எழுதப்பட்டது. 'நான் ஜப்பானுடன் கையில் வாளுடன் சண்டை செய்வேன். ஆனால், ஒரு சுதந்திர புருஷனாகத் தான் நான் அப்படிச் செய்யமுடியும்.' என்று பின்னால் ஒரு சந்தர்ப்பத்தில் நேரு கூறினர். காங்கிரஸ்காரர்கள் போக்கு காந்திக்குத் தெரிந்தும் அவர் அவர்களைக் கண்டிக்கவில்லை.

ஆனால், பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு, இந்தியாவிற்கு விடுதலையோ, சுதந்திரமோ, குடியேற்ற நாட்டு அந்தஸ்தோ அல்லது அதைவிடக் குறைந்த உரிமைகளோ கொடுக்கவேண்டுமென்ற எண்ணம் இல்லை. வின்ஸ்டன் சர்ச்சில், அப்பொழுது இங்கிலாந்தின் பிரதம மந்திரியாக இருந்தார். ‘பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தைக் கலைப்பதற்காக நான் அரசரின் முதல் மந்திரி ஆகவில்லை’ என்று 1943ஆம் ஆண்டு நவம்பர் மாதம் சர்ச்சில் சொன்னார். இந்தியா விஷயத்தில் இதுதான் அவர் பின்பற்றிய கொள்கை. அரை நிர்வாண காந்தி இங்கிலாந்துமீது பற்று உடையவர். ஆனால், பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தை அழித்துவிடுவார் என்று சர்ச்சில் அஞ்சினார். அவரை வெறுக்கவும் செய்தார். ‘காந்தீயத்துடன் எதிர்த்துப்போராடி அதை ஒழித்துக்கட்டவேண்டும்’ என்று சர்ச்சில் 1935-ல் ஒரு முறை கூறினார். 1935-க்குப் பிறகு இப்பொழுது தான் முதல் தடவையாகப் பதவி வகித்தார். அது மிகவும் உயர்ந்த பதவி. தமது இங்கிலாந்தைக் காக்க இந்தியாவை நசுக்கவேண்டுமென்று அவர் எண்ணியதில் வியப்பில்லை.

நல்ல சிற்பம் எப்படி ஒரே கல்லில் செதுக்கப்பட்டிருக்கிறதோ, அதைப்போல் பெரிய மனிதரும் ஒரே தன்மையில் உருவாகியிருப்பார்கள். காந்தியும் சர்ச்சிலும் ஒரேமாதிரி புருஷர்கள். ஒவ்வொருவரும் ஒரு லட்சியத்திற்காக உயிரைக்கொடுக்கத் தயாராயிருந்தனர். சர்ச்சிலின் ஒரே நோக்கம் பிரிட்டன் ஒரு முதல்தர ஏகாதிபத்திய நாடாக இருந்துவருவதைப் பாதுகாப்பதேயாகும். அவர் 19ஆம் நூற்றாண்டின் பழக்க வழக்கங்கள்படி வளர்ந்தவர். அவர் பழைய பழக்க வழக்கங்களையும் கொள்கைகளையும் மிகவும் போற்றிவந்தார். அவர் ராஜரீகம், சாதி, சாம்ராஜ்யம் முதலியவற்றைப் பெரிதும் விரும்பினார். லாயிட் ஜார்ஜ், பிரிட்டிஷ் மேல் வகுப்பினரையும் தளபதிகளையும் வெறுத்தார். அதனால் அவர்களோடு போராடினார். சர்ச்சிலோ மேல் வகுப்பினரும், பிரபுக்களும், தளபதிகளும் பரம்பரையாக இருக்கவேண்டும் என்று விரும்பினார். அவருக்குப் பரம்பரை வகுப்பினரைவிட அவர்களைத் தோற்றுவித்த பத்தொன்பதாம் நூற்றாண்டில்தான் அதிக ஈடுபாடு. பத்தொன்பதாம் நூற்றாண்டில் பிரிட்டிஷ்காரரின் செல்வாக்கு மிகவும் உயர்ந்து விளங்கியது எனலாம். பிரிட்டன் தனது ஆதிக்கத்துக்கு உட்பட்ட எந்த நாட்டின்மீதும் பிற வல்லரசுகள் போர்தொடுக்காமல் தடுத்து, பலம் நிறைந்து விளங்கிய காலம் அது. ஃபிரான்சில் நெப்போலியன் தோல்விக்குப் பின்னும் ஜெர்மனியில் கெய்சர் தோன்றுவதற்கு முன்னும் பிரிட்டனின் சாம்ராஜ்யம் மலர்ந்துவிளங்கிய விக்டோரியா ராணியின் காலம் அது. பிரிட்டனின் பழம் பெருமையே சர்ச்சில் வணங்கும் தெய்வம். தம் நாட்டு மேல்வகுப்பு மக்களே தேசத்தின் பெருமைக்குச் சின்னங்கள் என்று அவர் மதித்தார். பார்லிமெண்டரி

ஜனநாயகமும், இந்தியாமீது பிரிட்டன் செலுத்திவந்த ஆதிக்கமும் அத்தகையதே என்று அவர் கருதினர்.

பிரிட்டனின் பழம் பெருமையைக் காப்பாற்றவே சர்ச்சில் இரண்டாவது உலக யுத்தத்தில் கலந்துகொண்டார். ஆதலால், இந்தியாமீது பிரிட்டன் செலுத்திவந்த ஆதிக்கத்தை ஒரு அரை நிர்வாணப் பக்கிரி பறிக்கும்படி அவர் விடுவாரா? நாங்கள் வைத்திருப்பதை விட்டுக்கொடுக்கமாட்டோம்' என்று பகிரங்கமாகச் சர்ச்சில் சொல்லி வந்தார். இந்தியா இங்கிலாந்தினுடைய சொத்து; அதைவிட்டுக் கொடுக்க அவர் மறுத்தார். 1940ஆம் ஆண்டு சர்ச்சில் பிரிட்டிஷ் அரசரின் பிரதம மந்திரியானதிலிருந்து 1945ஆம் ஆண்டு அவர் பதவியை விட்டு வெளியேறும்வரை இந்தியப் பிரச்சினைக்காகச் சர்ச்சில் காந்தியுடன் ஓயாத சண்டையிட்டுவந்தார். அஃது இங்கிலாந்தின் பழங் காலத்திற்கும் இந்தியாவின் வருங்காலத்திற்கும் இடையே நிகழ்ந்த போராட்டமாகும்.

ஆட்சிசெலுத்துவது சர்ச்சிலுக்குக் கவிதை பாடுவதுபோலாகும். கவி பைரன், வீரன் நெப்போலியன் என்ற இருவருடைய குணதிசயங்களை ஒருங்கே உடையவர் சர்ச்சில். இங்கிலாந்தின் அடிப்படை ஜனநாயக அரசியலுக்கு ஆபத்து விளைவிக்கக்கூடிய அந்நிய நாட்டுக் கொடுங்கோலாட்சிகளை வெறுத்தார். அவர்களுக்கு எதிராகத் தம்மாலியன்ற எல்லாச் சக்திகளையும் ஏவிவிட்டார். ஆனல், இந்தியாவிற்காக பிரிட்டனுடன் சாத்வீக முறையில் போராட்டம் நடத்திவந்த காந்திமீது அவருக்குச் சிறிதும் இரக்கம் கிடையாது. இங்கிலாந்து சுதந்திரமாக இருக்கத் தமது உயிரையும் தியாகம்செய்யச் சர்ச்சில் தயாராக இருந்தார். ஆனல், இந்தியாவின் சுதந்திரத்திற்காகப் பாடுபட்டவர்களை வெறுத்தார். அவர் இந்தியாவை பிரிட்டிஷ் சிங்காசனத்தின் ஒரு படியாக மதித்தார்.

1942ஆம் ஆண்டின் மத்தியில் சர் ஸ்டாஃப்போர்டு கிரிப்ஸ் (Sir Stafford Crips) பிரிட்டிஷ் அரசாங்கத்தின் சார்பில் இந்தியாவிற்குத் தூதுவந்து பேச்சுவார்த்தை நடத்தியபோது, அவருடைய திட்டம் தோல்வியடைந்ததற்கு இதுவே காரணம்.

கிரிப்ஸ் மெலிந்த உருவம் உடைவர். காய்கறி உணவுகளை உண்பதைக் கண்டிப்பான விரதமாகக் கொண்டவர். செல்வர்களின் தொழிற்கட்சி பிரமுகர். இந்தியர் கிரிப்ஸோடு ஓர் ஒப்பந்தத்திற்கு வந்திருக்கலாம். அது கைக்கு எட்டிய தூரத்தில்தானிருந்தது. ஆனல், சர்ச்சில், காந்தி வைஸ்ராயின் மாளிகையின் படியேறி சக்கரவர்த்தியின் அதிகாரத்தில் பங்கு எடுக்கச் சந்தர்ப்பம் அளிப்பதை அவர் நினைக்கக்கூடப் பொறுக்கவில்லை. அது தவறு என்று எண்ணினர். ஆதலால், அம்மாதிரி ஏற்பாடு எதுவும் நடக்காமல் தடுத்துவிட்டார்.

பின்னால் நடந்த சம்பவங்களைக் கவனித்தால் 1942ஆம் ஆண்டு தான் பட்டேல், நேரு, ராஜகோபாலாச்சாரி, ஆஸாத் மற்றுமுள்ள அவர்களுடைய கூட்டாளிகள் வைஸ்ராயின் மாளிகைப்படிகளில் ஏறி, சித்திர அலங்காரமான, அசைவில்லாத, வர்ணஜால, நீண்ட ஈட்டிகளுடன் நின்ற இந்தியக் காவலாளிகளைக் கடந்து அதிகாரம் வகிக்கப்படும் உள் அறைகளுக்குள் செல்வதற்கு ஏற்ற காலம் எனத் தெரியவருகிறது. இம்முறையில் சுதந்திரம் அடைந்து, காமன்வெல்த்தில் தற்சமயம் இருப்பது போலத் தாமாகவே அங்கத்தினராக இருந்திருக்கலாம். அப்பொழுது பிரிட்டிஷ் சேனையும் போலீசும் பிரிட்டிஷ் அதிகாரத்தை இந்தியரிடம் சச்சரவு ஒன்றும் இல்லாமல் நல்ல முறையில் ஒப்புவிக்க உதவியிருக்கும். அப்படிச் செய்திருந்தால் பாகிஸ்தான், இந்தியக் குடியரசு என்று இரு கூறுபோட்டதைத் தவிர்த்திருக்கலாம். பிரிவினையினால் ஏற்பட்ட ஏராளமான உயிர் இழப்பும், பொருள் இழப்பும், வெறுப்பும், உள்நாட்டுப் போர்களும் ஏற்பட்டிருக்காது. இதைச் சிலர் அப்பொழுதே உணர்ந்தனர். வைஸ்ராயின் சபையில் உள்நாட்டு மந்திரியாக இருந்த சர் ரெஜினால்டு மாக்ஸ்வெல் (Sir Reginald Maxwell) 1942ஆம் ஆண்டில் என்னிடம் ‘யுத்தம் முடிந்து இரண்டு வருடங்களில் நாங்கள் இங்கிருந்து வெளியேற வேண்டியிருக்கும்’ என்று சொன்னார். ‘நாங்கள் இந்தியாவில் தங்கியிருக்கப்போவதில்லை’ என்று வைஸ்ராய் ஒரு பேட்டியில் என்னிடம் சொன்னார். சர்ச்சிலுக்கும் இது தெரிந்திருக்கலாம். ஹிட்லரிடம் தோல்வி அடைவது நிச்சயம் என்று தோன்றியபோதும், மனந்தளராமல் தொடர்ந்து போரிட்ட சர்ச்சிலின் நெஞ்சம், இந்தியாவின் சுதந்திரத்திற்கு அசைக்கமுடியாத ஒரு முட்டுக்கட்டையாக இருந்தது. பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தைக் கலைக்க சர்ச்சில் உடந்தையாக இருக்க மாட்டார். அப் பெரும் பணியை வேறொரு பிரிட்டிஷ் சர்க்கார் ஏற்றுக் கொண்டது. வெற்றியில் பெருந்தன்மையும், ஆனால், அதன் விளைவாகப் பொருளாதாரத் தாழ்ச்சியுமுற்றிருந்த இங்கிலாந்து அம் மாபெரும் பணியைச் செய்துமுடித்தது.

24. காந்தியுடன் நான் கழித்த ஒரு வாரம்

ஒற்றைக் குதிரை பூட்டிய இரண்டு சக்கரங்கள் உள்ள ஒரு வண்டிக்கு 'டோங்கா என்று பெயர். அவ் வண்டிக்குள் குதிரைக்கு முதுகைக் காட்டிக்கொண்டு பிரயாணிகள் உட்காரவேண்டும். அப்படிப்பட்ட ஒரு டோங்காவில் நானும் காந்தியின் பல் வைத்தியரும் சேவாக் கிராமத்திற்குப் போனோம். அந்தத் தூசி நிறைந்த 5 மைல் பிரயாணத்திலும் நான் நோயாளி காந்தியைப்பற்றி அந்த வைத்தியரைப் பேச வைக்கமுயன்றேன். ஆனால், அவர் இந்தியாவிலுள்ள பிரிட்டிஷ்காரரைப்பற்றியே பேசினார்.

சாலை கிராமத்தை அடையும் இடத்தில் காந்தி எங்களுக்காகக் காத்திருந்தார். அதுதான் முதல் தடவையாக நான் அவரைப் பார்த்தது. அவர் என்னை நோக்கி நீட்டிய கையுடன் வந்து, 'திரு ஃபிஷர் வாரும்' என்றார். நான் நினைத்திருந்ததைவிட அவர் உயரமாக இருந்தார். எல்லோரும் அறிந்த அரை வேஷ்டியும் செருப்புகளும் அணிந்திருந்தார். தூய வெண்ணிற ஆடையும் மாநிறமான அவருடைய உடலும் எடுப்பாகத் தெரிந்தன. நல்ல உடல்கட்டும், பெரிய மார்பும், சிறிய இடுப்பும், நீண்ட மெலிந்த பலமான கால்களும், உப்பிய முழங்கால்களும் உடையவராகக் காட்சிதந்தார். அவருக்கு 73 வயது. என்னை ஒரு பெஞ்சு அருகில் வருமாறு சைகை காட்டினார். முதலில் அவர் உட்கார்ந்துகொண்டு, பிறகு தம் கையை பெஞ்சில் வைத்து நான் உட்கார வேண்டிய இடத்தைக் காட்டினார். அவர் அப்படிச் செய்தது, 'இது என்னுடைய வீடு. உள்ளே வந்து இரும்' என்று சொன்ன மாதிரி இருந்தது. உடனே எனக்கு என் சொந்த வீட்டில் இருப்பதுபோன்ற உணர்ச்சி ஏற்பட்டது.

நான் வந்த காரியத்தைச் செய்துமுடிக்க ஆவலாக இருக்கிறேன் என்பதை அறிந்த காந்தி, 'பகல் உணவுக்குப் பிறகு ஒரு மணி நேரம் பேசலாம். பிறகு உலாவப்போகலாம்' என்று சொன்னார். என்னைக் கவனித்துக்கொள்ளும்படி புகழ்பெற்ற தேசியத் தலைவர் தாதாபாய் நவரோஜியின் பேத்தி குர்ஷித்திடம் சொல்லிவைத்தார். குர்ஷித் ஐரோப்பாவில் தான் படித்துக்கொண்டிருந்த சங்கீதக் கலையை விட்டுவிட்டு காந்தியிடம் பணிசெய்ய அவருடைய ஆசிரமத்தில் இருந்துவந்தார். அவள் உடனே வந்து என்னை விருந்தாளி தங்கும் குடிசைக்கு அழைத்துச்சென்றாள். அக் குடிசையின் சுவர்கள் மண்ணால் கட்டப்பட்டு இருந்தன. கூரை மூங்கிலால் வேயப்பட்டிருந்தது. அங்கே மண் தளமுள்ள ஓர் அறையும் சிமெண்டு தளமுள்ள குளிக்கும் அறையும் இருந்தன. குளிக்கும் அறையில் தகரத்தொட்டிகள், வாளிகள், தண்ணீர்ப் பானைகள் முதலியவற்றில் நிறைய தண்ணீர் இருந்தது. அப்பொழுது வெளியே 110° வெப்பம். குடிசைக்குள்ளும் அப்படித்தானிருந்தது. ஒரு நாளைக்கு ஐந்து அல்லது ஆறு தடவை குளித்தால்தான் இதமாக இருக்கும். அந்தக் கிராமத்திலும் ஆசிரமத்திலும் ஓடும் நீர்வசதி இல்லை. மின்சாரம், மின்சார விசிறிகள், ரேடியோ, தொலைபேசி ஒன்றும் இல்லை. அதுதான் உண்மையான இந்தியா.

11 மணிக்குக் குர்ஷித் என்னை காந்தியின் அறைக்கு அழைத்துச் சென்றாள். என்னுடைய செருப்புகளை குடிசைக்கு வெளியே கழற்றிவிட்டு காந்தியிருந்த அறைக்குச் சென்றேன். அவர் மண் தரையில் வைக்கோல் மெத்தையில் படுத்திருந்தார். அவருக்கு அருகில் சில

கைப்பிரதிகளும், மர ஸ்டாண்டும் இருந்தன. அந்த ஸ்டாண்டு 10 அங்குல உயரம் இருந்தது. அதில் பல வட்ட வடிவமான துவாரங்கள் இருந்தன. அவைகளில் அவருடைய ஊற்றுப் பேனாவும் பென்சிலும் இருந்தன. மகாதேவ தேசாய், பியரிலால், மாஷ்ரூவாலா ஆகிய காந்தியின் காரியதரிசிகளுக்கு நான் அறிமுகப்படுத்தப்பட்டேன். ஒரு விநாடிக்குப்பின் அவர் வளைந்து எழுந்து, ஆணையிடும் முறையில் என்னிடம் தமாஷாக 'வாரும்' என்றார். அது சாப்பாட்டு வேளை. 'உம்முடைய தொப்பிகளையும் செருப்புகளையும் அணிந்துகொள்ளும். அவை இங்கு இன்றியமையாதன. வெயிலின் கடுமையால் உமக்கு ஒன்றும் நேர்ந்துவிடக்கூடாது' என்று கூறினார்.

சாப்பாட்டுக் கூடத்தின் மூன்று சுவர்களும் கூரையும் பாய்களால் ஆனவை. சிறுவர், சிறுமியர்களையும் சேர்த்து ஏறக்குறைய 30 பேர் அங்கிருந்தனர். எல்லோரும் வைக்கோல் பாயில் உட்கார்ந்திருந்தனர். காந்தி ஒரு தலையணையின்மேல் உட்கார்ந்திருந்தார். அருகிலிருந்த தட்டுகளிலிருந்தும் பானைகளிலிருந்தும் ஆண்களும் பெண்களும் உணவு கொண்டுவந்து பரிமாறத்தொடங்கினர். காந்தி என்னிடம் ஒரு வெண்கலக் கிண்ணம் நிறைய வேகவைத்த காய்கறி கொடுத்தார். அதில் கீரையும் பழத்துண்டுகளும் இருந்ததாக நான் நினைத்தேன். ஒரு பெண் என் தட்டில் சிறிது உப்பு வைத்தாள். இன்னொரு பெண் ஓர் உலோகத் தம்ளரில் வெதுவெதுப்பான நீரும் இரண்டாவது தம்ளரில் வெதுவெதுப்பான பாலும் வைத்தாள். பிறகு எனக்குத் தோல் உரிக்காத இரண்டு உருளைக்கிழங்குகளும் மெதுவான, தட்டையான, வட்டமான சில கோதுமை ரொட்டிகளும் கிடைத்தன. மகாத்மாவுக்கும் எனக்கும் நடுவில் ஒருவர் இருந்தார். மகாத்மா அவருக்கு முன்னிருந்த பாத்திரத்திலிருந்து கடினமான காகித அளவு கனமுள்ள கோதுமை ரொட்டியை எடுத்துக்கொடுத்தார்.

மணி அடித்ததும், அரை நிஜார் அணிந்த திடகாத்திரமான ஒரு வாலிபன் பரிமாறுவதை நிறுத்திவிட்டுக் கண்களை மூடி உயர்ந்த தொனியில் பாடத்தொடங்கினான். எல்லோரும் அவனோடு சேர்ந்து பாடினார்கள். 'சாந்தி, சாந்தி, சாந்தி' என்று அந்தப் பிரார்த்தனை முடிந்தது. சாந்தி என்பதற்கு அமைதி என்பது பொருள். கோதுமை ரொட்டியை முக்கோண வடிவத்தில் மடித்துக் காய்கறியில் தோய்த்து விரல்களால் சாப்பிடத்தொடங்கினர். எனக்கு ஒரு கரண்டி கொடுக்கப் பட்டது. காந்தி விரைவாகச் சாப்பிட்டார். தம் மனைவிக்கும் அருகிலுள்ளவர்களுக்கும் காந்தியே பரிமாறும்பொழுது, நான் சிறிது நேரம் சாப்பிடாமலிருந்தேன். 'நீர் 14 ஆண்டுகள் சோவியத் ரஷியா வில் இருந்திருக்கிறீரே, ஸ்டாலினைப்பற்றி உம்முடைய அபிப்பிராயம் என்ன?' இதுதான் காந்தி என்னிடம் கேட்ட முதல் அரசியல் கேள்வி.

எனக்கு அதிகப் புழுக்கமாயிருந்தது. கைகள் பிசுபிசுவென்று ஒட்டின. சம்மணம் போட்டிருந்ததால் கால்களும், கணுக்கால்களும் வலிக்கத்தொடங்கின. நான் சுருக்கமாகப் பதில்சொன்னேன்.

'ஹிட்லரைப்போல இரக்கமற்றவரா?' என்று அவர் கேட்டார்.

'ஏறக்குறைய அப்படித்தான்' என்றேன்.

சிறிது நேரம் கழித்து காந்தி என் பக்கம் திரும்பிக்கேட்டார். 'நீர் வைஸ்ராயைப் பார்த்திருக்கிறீரா?' நான், 'ஆம்' என்றேன். 'அந்தக் கிழவர் இந்தியாவிலே மிகப் பெரியவர். அதைப்பற்றிச் சந்தேகம் வேண்டாம்' என்று வைஸ்ராய் என்னிடம் சொல்லியிருந்தார்.

பரிமாறுகிறவர்கள் மறுபடியும் அதே உணவு வகைகளைக்கொண்டு வந்தனர். 'உமக்குத் தேவையான நீரை எடுத்துக்கொள்ளலாம்; நாங்கள் அதை நன்ருகக் காய்ச்சிவைக்கிருேம்' என்று காந்தி சொன்னுர். பிறகு மாம்பழத்தைச் சாப்பிடச்சொன்னுர். நான் மாம் பழத்தின் தோலை நறுக்க ஆரம்பித்தபோது, அவரும் மற்றவர்களும் சிரித்தனர். வழக்கமாக அவர்கள் மாம்பழத்தைக் கையில்எடுத்து மிருதுவாகும்வரை கசக்கிப் பிறகு ஒரு பக்கத்தில் துவாரமிட்டுப், பிறகு உள்ளிருப்பதை உறிஞ்சிச்சாப்பிடுவார்கள் என்று காந்தி விளக்கிச்சொன்னுர். ஆனுல், நான் அதை உரித்து நல்ல பழமா என்ன என்று பார்க்கலாம் என்ருர்.

இதேவகை உணவுதான் இரவிலும் பரிமாறப்பட்டது. ஆனுல், சூரியன் மறைவதற்குமுன்பே சாப்பாடு முடிந்துவிட்டது. காலை ஆகாரத்தை நான் விருந்தாளி குடிசையில் தனியே சாப்பிட்டேன். தேநீர், பிஸ்கட், ரொட்டி, வெண்ணெய், மாம்பழம்—இவை காலை உணவு. அடுத்த நாள் நடுப்பகல் சாப்பிடும்போது காந்தி எனக்குத் தேக்கரண்டிக்குப்பதில் மேசைக்கரண்டி கொடுத்தார். 'உம்முடைய பருமனுக்கு ஏற்ற கரண்டி' என்று அவர் கேலிசெய்தார். அவர் எனக்கு வேகவைத்த வெங்காயம் ஒன்று கொடுத்தார். ஒரேவகை உணவிலிருந்து சிறிது மாறுதலுக்காக ஒரு பச்சை வெங்காயம் கேட் டேன். மூன்ருவது நாள் மதியம் காந்தி, 'ஃபிஷர், உம்முடைய கிண்ணத்தை என்னிடம் கொடும். அது நிறைய காய்கறி தரு கிறேன்' என்ருர். 'ஒரே விதமான காய்கனிகளையும் கீரையையும் இரண்டு நாட்களுக்குள் நான்கு தடவை சாப்பிட்டபிறகு எனக்கு அவைகளில் விருப்பமில்லை' என்றேன். 'உமக்குக் காய்கனி விருப்ப மில்லையா?' என்ருர். 'மூன்று நாட்கள் தொடர்ந்து இக் காய்கறிகளைச் சாப்பிட்டதிஞல் இதன் ருசி எனக்குப் பிடிக்கவில்லை' என்றேன். 'ஆம். நீர் நிறைய உப்பும் எலுமிச்சைச்சாறும் சேர்த்துக்கொள்ள வேண்டும்' என்று காந்தி யோசனை கூறினுர். 'என்னுடைய

ருசியைக்கெடுக்கநினைக்கிறீரா ?' என்றேன். 'இல்லை. அதை அதிகரிக்கவிரும்புகிறேன்' என்றார். 'ருசியைக்கூடக் கொல்ல விரும் பாதபடி நீர் அவ்வளவு கருணையுள்ளவராகவா இருக்கிறீர்?' என்று கேட்டேன். 'மனிதன் அதைமாத்திரம் கொல்வதாயிருந்தால் நான் அவ்வளவு பொருட்படுத்தமாட்டேன்' என்றார். என்னுடைய கழுத்தி லும் முகத்திலுமுள்ள வியர்வையைத் துடைத்தேன். 'அடுத்த தடவை நான் இந்தியாவில் இருக்கும்போது—' என்று நான் தொடங்கி னேன். காந்தி அதைக் கவனித்ததாகத் தெரியவில்லை. நான் பேச்சை நிறுத்திவிட்டேன். 'ஆம். அடுத்த தடவை நீர் இந்தியாவிலிருக்கும் போது' என்று தொடர்ந்து பேசச்சொன்னார். 'நீர் சேவாக் கிராமத் தில் குளிர்ச்சி சாதனம் வைத்திருக்கவேண்டும். அல்லது வைஸ்ரா யின் மாளிகையில் இருக்கவேண்டும்' என்றேன். எதை அவர் விரும்புகிறார் என்று சொல்லாமல் 'சரி' என்று சம்மதித்தார்.

காந்தி கேலி, வேடிக்கைப் பேச்சுகளை உற்சாகப்படுத்தினார். அவர் லண்டனிலிருந்தபோது லார்டு சங்கேயிடம் (Lord Sankey) கூறிய தைச் சொன்னார். 'என்னைப்பற்றி நான் கவனிக்காதிருந்தால், இந்தப் பழுத்த வயதை நான் அடைந்திருக்க முடியுமா? இஃது என்னுடைய குற்றங்களில் ஒன்று, என்றார். 'நீர் குறையே இல்லாதவர் என்று நான் நினைத்தேன்' என்று நான் பரிகாசம் செய்தேன்.

அவர் சிரித்தார். வழக்கமாக அவருடைய பிற்பகல் பேச்சுகளில் கலந்துகொள்ளும் 8 ஆசிரமவாசிகளும் சிரித்தனர். (நான் அவர்கள் அங்கு இருக்கிறதற்கு ஆட்சேபிக்கிறேனா என்று காந்தி கேட்டுக் கொண்டார்.) 'இல்லை. நான் அதிகத் தவறுகள் உள்ளவன். நீர் இங்கிருந்து போகுமுன் என்னிடம் 100 தவறுகள் கண்டுபிடிப்பீர். அப்படி உம்மால் கண்டுபிடிக்க முடியாவிட்டால் அவைகளைக் கண்டு பிடிக்க நான் உமக்கு உதவி செய்கிறேன்' என்றார்.

வழக்கமாகப் பேச்சுத் தொடங்குமுன் அவர் நான் தரையில் உட் காருவதற்கு மிகவும் குளிர்ச்சியான இடத்தைக் கண்டுபிடித்துத் தரு வார். 'இப்பொழுது நீர் உமது பேச்சை ஆரம்பிக்கலாம்' என்று சிரித்துக்கொண்டே சொல்வார். ஒரு தடவை ஒரு முஸ்லிம் பெண் அவர் வயிற்றுக்குப் பற்றுப்போட மண் கொண்டுவந்தாள். 'உம்மோடு படுத்துக்கொண்டே பேசுகிறேன்' என்று சொல்லி காந்தி படுத்துக் கொண்டார். அந்த ஒரு மணி நேர முடிவில் தமது டாலர் கடியாரத் தைப் பார்த்துவிட்டு, 'உம்முடைய ஒரு மணி நேரம் முடிந்துவிட்டது' என்றார். அவர் எப்பொழுதும் குறித்த காலம் தவறமாட்டார்.

ஒரு தடவை அவரிடம் பேசிவிட்டு வெளியே வரும்போது, 'போய்த் தொட்டியில் உட்காரும்' (Go sit in a tub) என்றார். 'கஷ்டங்களை

அனுபவி' (Go sit on a tack) என்பதற்கு இந்திய மொழியோ என்று நினைத்துக்கொண்டேன். அவர் இருந்த குடிசைக்கும் நான் இருந்த குடிசைக்கும் இடையிலுள்ள அந்த வெப்பமான இடைவெளியைக் கடந்துவருவதற்குள் என் தலை வறண்டுவிட்டது. ஆகவே, தொட்டிக்குள் உட்காரச்சொல்லியது ஒரு சிறந்த யோசனை என்றே நான் நினைத்தேன். அந்த யோசனையின்மேல் சில அபிவிருத்திகள் செய்யவேண்டுமென்று நினைத்தேன். ஒவ்வொரு பேச்சும் முடிந்தபிறகு, அதை 'டைப்' அடிப்பேன். அதுதான் ஒவ்வொரு நாளின் கடும் சோதனை. ஏனென்றால், ஐந்து நிமிஷம் டைப் அடிப்பதற்குள் நான் வியர்த்துக் களைத்துப்போவேன். காந்தியின் யோசனையால் தூண்டப்பெற்று நான் ஒரு சிறு மரப்பெட்டியைத் தண்ணீருள்ள தொட்டிக்குள் வைத்தேன். அதன்மேல் ஒரு தேங்காய்த் துவாலையை மடித்துப்போட்டேன். பிறகு அதைவிட உயரமான ஒரு மரப்பெட்டியைத் தொட்டிக்கு வெளியே வைத்தேன். தூக்கிச் செல்லக்கூடிய என்னுடைய 'டைப் ரைட்டரை' அதன்மீது வைத்து, என் உடைகளை அகற்றிவிட்டுத் தொட்டிமேல் உட்கார்ந்து டைப் அடித்தேன். சில நிமிஷங்களுக்குள் எனக்கு வியர்க்கத் தொடங்கியது. உடனே வெண்கலக் கிண்ணத்தால் தொட்டியிலிருந்து தண்ணீர் மொண்டு என் கழுத்து, முதுகு, கால்களில் ஊற்றிக்கொண்டேன். இவ்விதமாக நான் ஒரு மணி நேரம் களைப்படையாமல் டைப் அடித்தேன். இந்தப் புதுமையைக் கேட்டு ஆசிரமவாசிகள் நகைத்தனர். நான் வேலைசெய்யும் முறையைக் கண்டு தமாஷாகப் பேசிக்கொண்டிருந்தனர். ஆசிரமவாசிகள் மகிழ்ச்சியின்றி எப்பொழுதும் வேலையை மாத்திரம் கவனித்துக்கொண்டிராமல் அவ்வப்போது தமாஷாகவும் இருக்க காந்தி பார்த்துக்கொண்டார்.

காலநிலை இரவில் நன்ருக இருந்தது. புத்துணர்ச்சியையும் அளித்தது. ஒவ்வொருவரும் அவரவருடைய குடிசைக்கு வெளியே கயிற்றுக் கட்டிலில் படுத்துத்தூங்கினர். பல வருஷங்களுக்குப்பிறகு நான் இப்பொழுதுதான் நன்ருகத் தூங்கினேன். இரவு அமைதியாயிருந்தது. இருளில் செருப்பில்லாமல் தரையில் கால் வைக்கக்கூடாது என்று குர்ஷித் எனக்கு எச்சரிக்கை செய்திருந்தாள். அங்கு தேள் உண்டு.

காலையில் ஐந்து மணிக்கு நான் காந்தியின் குடிசைக்குப் போகும்பொழுது அவர் திறந்த வெளியில் உட்கார்ந்து காலை உணவாகிய மாம்பழத்தைக் கரண்டியால் எடுத்துச் சாப்பிட்டுக்கொண்டிருந்தார். இந்த எளிய உணவை உண்டபின் கஸ்தூரிபாவிடமிருந்து ஒரு துண்டை வாங்கினுர். அவளிடமிருந்து நீண்ட ஒடுங்கிய சிறு கழுத்துள்ள புட்டி நீரையும் வாங்கிக் கைகளைக் கழுவினுர். பிறகு அருகிலுள்ள வயல்வெளிகளுக்கு உலாவப்புறப்பட்டார். ஒரு முறை ஒரு

சொட்டு மாம்பழச்சாறு வெள்ளை அரை வேஷ்டியில் பட்டு மஞ்சள் நிற மாகிவிட்டது. அந்தக் கறையைப் பல நிமிடங்கள் சுரண்டிக்கொண் ருந்தார். காலையிலும் மாலையிலும் உலாவச்செல்லும்பொழுது இரண்டு வாலிபப் பையன்களின் அல்லது பெண்களின் தோள்கள் மீது சாய்ந்துசென்றார். இந்தப் பெருமைக்காக அந்த இளைஞர்களி டத்தில் அடிக்கடி போட்டி ஏற்படும். காந்தி மிக விரைவாக நடந்தார். இந்த அரை மணி நேரமும் சிறிதும் களைப்படையாமலும் மூச்சு வாங்காமலும் பேசிக்கொண்டே சென்றார்.

அவர் உடலில் முதுமை தெரியவில்லை. அவருடைய தோல் மென்மையாகவும் பளபளப்பாகவும் இருந்தது. எழுதும்போதும் அருந்தும்போதும் அவருடைய கைகள் நடுங்கியதில்லை. அவர் பழைய நிகழ்ச்சிகளைப்பற்றிப் பேசுவதில்லை. லாயிட் ஜார்ஜ் எழுபது வயதில் தற்கால நிகழ்ச்சிகளைப்பற்றிய கேள்விகளுக்குப் பதில்சொல்லிக் கொண்டிருக்கும்போதே முதல் உலக யுத்தத்தில் தாம் நடத்திய ஒரு முற்றுகையைப்பற்றியாவது, அல்லது இந்த நூற்றாண்டின் ஆரம்பத் தில் ஒரு சமூகச் சீர்திருத்தத்திற்காக அவர் நடத்திய போராட்டத் தைப்பற்றியாவது பேசத்தொடங்கிவிடுவார். காந்தி வருங்காலத்திற் குரிய திட்டங்களிலும் இன்றையப் போராட்டங்களிலும் கவனத்தைச் செலுத்தினர். சமுதாய நலனைப்பற்றி அவர் காட்டிய தீவிரம் அவரு டைய அறிவின் இளமையைக் காட்டியது. வயது ஆக ஆக அவரது வைதீகம் குறைந்தது. உதாரணமாக, 1920ஆம் ஆண்டிலிருந்து 1930ஆம் ஆண்டுவரை நிலச்சுவான்தார்களைக் குடியானவர்களுக்கு நிலங்களை நன்கொடையாகக் கொடுக்கச்சொன்னர். பத்து வருடங் களுக்குப் பிறகு நிலப்பிரச்சினையைப்பற்றி நான் கேட்டபோது நிலச் சொந்தக்காரர் தாமாக நிலங்களைக் குடியானவர்களுக்குக் கொடுக்க வேண்டும் என்கிற கொள்கை மாறவில்லை. எனினும், இப்பொழுது புரட்சிகரமான அபிப்பிராயம் தெரிவித்தார். 'நிலங்களைக் குடியான வர்கள் எடுத்துக்கொள்வார்கள். நிலத்திற்குப் பணஈடு கொடுப்பது இயலாது' என்று சொன்னர். பழைய கருத்துகளை மாற்றிப் புதிய வற்றை ஏற்றுக்கொண்டு செயலாற்றும் சக்தியை அவரது முதுமை சிறிதும் குறைக்கவில்லை.

அவர் முகத்தைப் பார்த்தால்மட்டும் வயது தெரியும். கலயம் போன்ற உயர்ந்த தலையில் ஒரு சிறு பகுதியாக முகம் அமைந்திருந் தது. முகத்திலிருந்து காதுகள் நேர்கோணத்தில் அமைந்திருந்தன. அவருடைய மேல் உதட்டில் வெள்ளையும் கறுப்பும் கலந்த கதிர் அறுத்த தாள்போல் மீசை இருந்தது. மேல்உதடு மிகவும் குறுகலாயிருந்த தால் தடித்த கீழ்நோக்கிய உதட்டைக் கிட்டத்தட்டத் தொட்டது. அவருடைய முகக்குறி அவருடைய சாதுவான, மென்மையான, அமைதியான கண்களிலிருந்து வெளிப்பட்டது. உணர்ச்சி மிகுந்த

அவருடைய கீழ்உதடு தன்னடக்கம், பலம், துன்பங்களைப் பொறுத்தல், பொக்கைவாயைக் காட்டும் புன்சிரிப்பு முதலியவற்றைப் படம் வரைந்து காட்டியது போலிருந்தது. சாப்பிடும்போதுமட்டும் செயற்கைப் பற்களை வைத்திருப்பார். சாப்பிட்டு முடிந்ததும் எல்லோர் முன்னிலையிலும் அவைகளை எடுத்துக் கழுவிவிடுவார். கண்களைத் தவிர, அவருடைய முகச்சாயல் அழகற்றதாயிருந்தது. தூங்கும்போது அவருடைய முகம் அழகற்றதாய் இருந்திருக்கும். ஆனால், அது ஓய்வில் இருந்ததில்லை. அவர் பேசிக்கொண்டிருந்தாலும், கவனித்துக் கொண்டிருந்தாலும், யோசித்துக்கொண்டிருந்தாலும் அது பல சிறு முகங்களைக் காட்டும் மின்னும் கண்ணாடியாக விளங்கியது. அவை அம் முகத்திற்குள் என்ன நடந்தது என்பதைப் பிரதிபலித்தது. அவர் தமது எண்ணங்களைத் திட்டவட்டமாகக் கூறுவதில்லை. அவ்வப்போது பலரும் அறிய தம் மனத்தில் ஏற்படும் கருத்துகளை வெளியிடுவார். அப்போது அவர் எந்த முறையில் சிந்திக்கிறார் என்பதை எல்லோரும் அறியமுடியும். அவர் பேசுவது வெறும் வார்த்தைகளன்று. அவருடைய கருத்துகள் எப்படி உருவாகிறது என்பதையே பார்க்கலாம். அரசியல்வாதிகள் பலர் முன் கூட்டியே தீர யோசனைசெய்து தமது கருத்துகளைத் திட்டவட்டமாகப் பலர் அறியும்படி பேசுவதுபோல் காந்தி செய்வதில்லை. அவர் தமது கருத்துகளை வெளியிடும்போது, அச் சமயம் உள்ள அவரது மனோநிலையையும் எந்த முறையில் அது வேலைசெய்கிறது என்பதையும் காட்டிவிடும். அவரது அறிவு ஓர் ஆக்க வேலையில் ஈடுபட்டிருப்பது நன்கு தெரியும்.

லாயிட் ஜார்ஜ் ஒரு பெரியார் என்பதை அவரது உருவமே எடுத்துக்காட்டியது. ரூஸ்வெல்டும் சர்ச்சிலும் தனிச் சிறப்புடையவர்களாகக் காட்சியளித்தனர். காந்திக்கு அம்மாதிரி சிறப்பொன்றும் வெளிப்படையாகத் தெரியவில்லை. அரை நிர்வாணமாயிருந்த அவருடன் பேசும்போதும், உலாவப்போகும்போதும், உண்ணும்போதும் கவனித்தால், பிறருக்கு இவரிடம் பயமோ, பக்தியோ ஏற்படக்கூடிய குணாதிசயங்கள் ஒன்றும் காணப்படவில்லை. அதே காரணத்தால்தான் அவருடைய அற்புத குணாதிசயங்கள் வெளியாயின. பிறரையும் கவர்ந்தார். அரண்மனைபோன்ற மாளிகை, வருகிறவர்கள் காத்திருக்க எதிரே தனிஅறை, தான் உட்கார்ந்திருக்கும் அறையில் நுழையும்போதுமாத்திரம் திறக்கக்கூடிய கதவுகள், எல்லாவற்றிற்கும் மேலாக அதிகாரம்—இவைபோன்ற பெரிய மனிதர்களுக்குரிய வசதிகள் காந்திக்கு இல்லை. அதிகாரமோ, அதிகாரத்தின் வெளித்தோற்றமோ இல்லாது அவர் எளிதில் பழகியது அவருக்குள்ள அதிகாரத்தின் சிறப்பை எடுத்துக்காட்டியது. எதையும் செய்துமுடிக்க வல்ல சர்வாதிகாரிக்குச் செல்வாக்கு எதுவும் இராது. பிறரைக் கட்டுப்படுத்தவோ, தண்டிக்கவோ அல்லது நல்ல வேலையைப் போற்றிப்

பரிசளிக்கவோ காந்தியிடம் எந்தவித அதிகாரமும் இல்லை. ஆனால், நிறைந்த செல்வாக்கு இருந்தது. அந்தச் செல்வாக்கு அன்பினால் ஏற்பட்டது. அவருடன்கூட இருந்தால், அவரை ஏன் பிறர் நேசித்தார்கள் என்பது புலனாகும். அவர் பிறரை நேசித்ததே காரணம். பிறரிடம் தமக்குள்ள அன்பைச் சிற்சில நிகழ்ச்சிகளில்மாத்திரம் அவர் காட்டவில்லை. தாம் செய்த ஒவ்வொரு செயலிலும், சொல்லிலும், இரவும், பகலும் எப்பொழுதும் பல ஆண்டுகளாகத் தமக்குப் பிறரிடம் உள்ள அன்பை எடுத்துக்காட்டினார். காரியத்தின் முடிவைவிட அதைச் செய்யும் முறையே பெரிது; அஹிம்சை, வாய்மையின் பெருமை, பிறரை நம்புவதால் உண்டாகும் நன்மைகள், பிறர் மனத்தில் உண்மையாகவே ஏற்படும் சந்தேகங்களுக்கும், அவர்களுடைய சூழ்நிலைகளுக்கும், மனச்சங்கடங்களுக்கும் காட்டும் இரக்கம்—இந்தக் கொள்கைகளை அவர் ஒருநாளும் கைவிடவில்லை என்பதை அவருடைய சொல்லிலும் செயலிலுமிருந்தும் காணலாம். ஒவ்வொரு நாளும் எழுந்த பிரச்சினைகளை முக்காலத்திற்கும்ஏற்ற உண்மைகளை வைத்தே ஆராய்ந்தார். ஒவ்வொரு பிரச்சினையையும் ஆராயும்போது அறநெறியைக் கடைப்பிடித்ததால், நிலையில்லாதவற்றிலும் நிலையுள்ள உண்மைகளைக் கண்டார். அதனால் அணுசக்தி நிறைந்த சமூகத்தைத் தட்டி எழுப்பி, ஒரு புது சக்தியை உண்டாக்கினார். சிலர் காந்தியைப் போலவும், சிலர் அவரைவிட நன்றாகவும் பேசியும், எழுதியும் இருக்கிறார்கள். பிறர் செய்ய முடிந்தது, ஆனால், அவர்கள் செய்யாததைச் செய்ததே காந்தியின் பிறப்பிற்கும் பெருமைக்கும் காரணமாகும். செயற்கரிய செயல்களை காந்தியடிகள் செய்தது ஓர் அற்புதமாகவே இருந்தது. அவர் செய்த அற்புதம் எந்த விதமான முயற்சியும் இன்றித், தாமாகவே செய்ததொன்றாகும்.

'காந்தி தமது முயற்சியில் வெற்றிபெறமாட்டார். புத்தரும் கிறிஸ்துவும் மக்களைப் பாவ வழிகளிலிருந்து காப்பாற்றத் தவறியது போல காந்தியும் தவறுவார். ஆனால், தமது வாழ்க்கையை ஒரு நல்ல எடுத்துக்காட்டாகச் செய்ததற்காகப் பல ஆயிரம் வருடங்கள் அவரை உலகத்தார் நினைப்பார்கள்' என்று தாகூர் கூறினார். அவர் தாம் செய்யும் செயல்களினால் உண்டாகும் பயனைப்பற்றிச் சிறிதும் கருதுவதில்லை. கருமத்தைக் கருமத்திற்காகச் செய்தார். அவர் கடமையைக் கடமைக்காகச் செய்தார். வெற்றியோ, தோல்வியோ அவரைச் சிறிதும் பாதிக்கவில்லை. அவருடைய சொற்களோ, செயல்களோ முக்கியம் இல்லை; அவர்தான் முக்கியம். அதனால்தான் பலர் அவருடைய கருத்துகளை ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் தோல்வியுற்றோம் என்று வருந்தாமல் அவருடைய தலைமையை ஏற்றுக்கொண்டனர்.

ஒரு நாள் நான் மகாதேவ தேசாய் குடிசைக்குப்போய் அவர் நூற்பதைக் கவனித்துக்கொண்டிருந்தேன். 'நான் காந்தி பேசுவதைக்

கவனித்துக்கொண்டிருந்தேன் ; நான் எழுதிய குறிப்புகளையும் படித்தேன். காந்திக்கு மக்கள்மீது அவ்வளவு செல்வாக்கு இருப்பதற்குக் காரணம் என்ன என்று வியப்படைந்தேன். இறுதியாக அவருடைய செல்வாக்குக் காரணம் அவரது ஆர்வம் என்றுதான் கருதுகிறேன்' என்று மகாதேவ தேசாயிடம் சொன்னேன். 'அது சரி' என்றார் தேசாய். 'அந்த ஆர்வத்திற்கு மூலாதாரம் என்ன ?' என்று கேட்டேன். 'வெறும் மனித சரீரத்தில் ஏற்படும் ஆர்வங்களை அடக்குவதின் விளைவே அது' என்று மகாதேவ தேசாய் சொன்னார். 'மனித சரீரத்தின் ஆர்வம் என்றால் காம உணர்ச்சியா ?' என்று கேட்டேன். 'அது காம உணர்ச்சிமாத்திரமல்ல ; கோபம், வாழ்க்கையில் ஏற்படும் ஆசை முதலியவை அதில் அடங்கும். காந்தி தம்மையே தாம் அடக்கி ஆளுகிறார். அதன் விளைவாக அவருக்கு நிறைந்த ஆற்றலும் ஆர்வமும் உண்டாகிறது' என்றார் தேசாய். நான் காந்தியின் ஆசிரமத்தில் தங்கியிருந்தபோது, சட்டமறுப்பு இயக்கம் ஆரம்பிப்பதற்காக அவருடைய ஆர்வமும் சக்தியும் அவரை உந்தித் தள்ளிக்கொண்டிருந்தன. சர் ஸ்டாபோர்ட் கிரிப்ஸ் வந்தார். அவரது முயற்சிகள் வீணானதும் இங்கிலாந்திற்குத் திரும்பிவிட்டார். இந்தியாவிற்குச் சுதந்திரம் கொடுக்கக்கூடாது என்று சர்ச்சில் போராடினார். கிருஷ்ண பரமாத்மாவைப்போல் எப்பொழுதும் ஏதாவது செய்துகொண்டிருக்க விரும்பும் காந்தி 1942ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் பிரிட்டிஷ்காரரை இந்தியாவை விட்டு வெளியேற்றுவதற்காகச் சர்க்காருக்கு எதிராக ஒரு இயக்கம் ஆரம்பிக்க எண்ணிக்கொண்டிருந்தார். மனத்தில் கலக்கம் உண்டாகின்றபொழுது செயலில் இறங்குவதே காந்திக்கு மருந்தாக இருந்தது.

இந்தியாவிற்குச் சுதந்திரம் கொடுக்காவிட்டால் யுத்தத்தில் ஈடுபட்டிருந்த ஜனநாயக நாடுகளின்போக்கு நியாயமானதாகக் கருத முடியாது என்று காந்தி எண்ணினார். ஒருநாள் பிற்பகல் அவர் என்னிடம் சொன்னார். 'உங்களுடைய ஜனாதிபதி 4 வகையான சுதந்திரங்களைப்பற்றிப் பேசுகிறார். அவற்றில் சுதந்திரமாயிருக்க விரும்பும் சுதந்திரமும் அடங்கியிருக்கிறதா ?' என்று கேட்டார். ரூஸ்வெல்ட் இந்தியாவிற்குச் சுதந்திரம் கொடுத்து அவர்களை யுத்த முயற்சியில் ஈடுபடச் செய்வதற்காகக் கிரிப்ஸின் முயற்சியை ஆதரிக்கவேண்டுமென்று சர்ச்சிலிடம் சொன்னார். ஆனால், அரசரின் முதல் மந்திரியாகிய சர்ச்சில் பிடிவாதமாக இருந்தார்.

காந்தி நடத்தஇருந்த சட்டமறுப்பு இயக்கத்தை நேருவும் காங்கிரஸ் கட்சியின் தலைவருமான ஆஸாதும் எதிர்த்தனர். நான் ஆசிரமத்தில் தங்கியிருந்தபோது மூன்று நாட்கள் நேரு இதைப்பற்றி காந்தியுடன் ஆர்வத்துடன் வாதாடினார். ஹரிஜன் பத்திரிகையில் இதைப்பற்றிக் குறிப்பிடும்போது, 'நான் செய்யப்போவதை எதிர்த்து,

வார்த்தைகளால் வர்ணிக்கமுடியாத ஆர்வத்துடன் நேரு என்னுடன் வாதாடினார்' என்று எழுதினார். 'சொந்த அனுபவத்தைக்கொண்டு, சீனாவுக்கும் ரஷியாவுக்கும் நேர இருக்கும் துன்பங்களை நினைத்து பிரிட்டிஷ் அரசாங்கத்துடன் தனக்கு உண்டாகியிருந்த மனக்கசப்பை மறைக்கமுயன்றார் நேரு. ஆனால், ஆசிரமத்தைவிட்டு வெளிவருவதற்குள் அவருக்கு உண்மைகள் தெளிவாயின' என்று காந்தி குறிப்பிட்டார். காந்தி அவரது மனத்தை மாற்றிவிட்டார். நேரு சேர்ந்தாலும் சேராவிட்டாலும் சட்ட மறுப்பு இயக்கத்தைத் தாம் ஆரம்பிக்கப் போவதாக என் முன்னிலையில் காந்தி நேருவிடம் சொன்னார்.

சரண் அடைவது என்பது நேருவின் இயல்புக்கு முரணானது. காந்தி சொன்னதை எல்லாம் இந்தியர் சிறிதும் சிந்தனையின்றி ஏற்றுக்கொண்டதை நேரு வெறுத்தார். எல்லாரையும் இயக்கிவந்த மாபெருந் தலைவரிடம் ஓரோவழி கருத்து வேறுபாடு காட்டினதால் அவருக்குச் சுதந்திர உணர்ச்சி ஏற்பட்டது. காந்தி சொல்வதை ஏற்றுக்கொள்ளாததால், தம்மிடம் ஆற்றல் இருப்பதாக நேரு எண்ணிக்கொண்டார். பொதுமேடைகளில் சீற்றத்துடன் பேசுதல், மாற்றுக்கருத்துகளை எதிர்த்துச் சொற்பொழிவாற்றல் முதலியவை பலமில்லாதவர் பலமுள்ளவர்போல் காட்சியளித்துப், பலமுள்ளவர்போல் தங்களைப் பாவித்துக் கொள்ளும் முறையாகும். இந்த விஷயத்தில்மாத்திரம் அவர் இந்தியாவைப்போல் காணப்பட்டார். காந்தி மாதிரி இல்லை. பலம் இருப்பவர்போல் நேரு நடித்தார். பலவீனமானவன் பலமுள்ளவனைப் போன்று ஆரவாரம் செய்வான். பலவீனமான தேசமும் அப்படியே செய்யும். ஆனால், காந்தியோ பலவீனமானவர்களுக்குப் பக்க பலமாக இருந்தார்.

உடனே ஏதாவது நடவடிக்கை எடுத்தாகவேண்டும் என்று காந்தி எடுத்துக்கூறியதை நேரு முற்றிலும் ஏற்றுக்கொண்டார். அதுமாத்திரமன்று. சட்டமறுப்பு இயக்கம் ஆரம்பிக்கவேண்டுமென்று துடிதுடித்துக்கொண்டிருந்தார். ஒருநாள் பிற்பகல் பேட்டியில், 'பிரிட்டிஷ்காரர் இந்தியாவை முழுவதுமாக விட்டுவிட்டுப் போகமாட்டார்கள். அப்படிச் செய்வதானால் இந்தியாவை ஜப்பானுக்கு அன்பு அளிப்பாக விட்டுப்போனது போலிருக்கும். அதற்கு இங்கிலாந்து சம்மதிக்காது. அதை அமெரிக்க ஐக்கிய நாடுகளும் அங்கீகரிக்காது. பிரிட்டிஷ்காரர் மூட்டை முடிச்சுகளுடன் வெளியேறவேண்டுமென்று நீங்கள் கேட்டால் அது நடக்கக்கூடாத காரியமாகும். நீங்கள் அம்மாதிரி கேட்கக்கூடாது. அவர்கள் சேனையையும் இங்கிருந்து வெளியேற்றவேண்டுமென்று நினைக்கிறீர்களா?' என்று நான் காந்தியிடம் கேட்டேன்.

இரண்டு நிமிடங்களுக்கு அக் குடிசையில் ஆழ்ந்த அமைதி நிலவியது. இதுவரை நான் சொன்னதை காந்தி கேட்டுக்கொண்டிருந்தார்.

இப்பொழுது ஆழ்ந்து யோசித்தார். இறுதியில் அவர் 'நீர் கூறியது சரி. பிரிட்டன், அமெரிக்கா இன்னும் மற்ற நாடுகள் அவைகளுடைய சேனைகளை இங்கே வைத்துக்கொண்டு, இந்தியாவைப் போர் நடவடிக்கைகளுக்கு ஒரு தளமாக வைத்துக்கொள்ளலாம்' என்றார். பிறகு மாஷ்ருவாலா இதை உக்கிரமாக எதிர்த்ததாக காந்தி என்னிடம் கூறினார். ஆனால், காந்தி சமாதானப்பேச்சு நடத்த ஆயத்தமாக இருந்தார். அவர் ஜனாதிபதி ரூஸ்வெல்டுக்கு எழுதினார். 'நேச நாடுகள் தேவையென்று நினைத்தால் அவர்களுடைய சொந்தச் செலவில் இந்தியாவில் அவர்களுடைய சேனைகளை வைத்துக்கொள்ளலாம்' என்று காந்தி என்னிடம் கூறினார். மேலும், 'நான் செய்யப்போவதைச் செய்யாமல் தவிர்க்க விரும்புகிறேன் என்று உம்முடைய ஜனாதிபதியிடம் கூறும்' என்றார். சட்டமறுப்புத் திட்டங்களை ரத்து செய்ய காந்தி தயாராக இருந்தார். அதைப்பற்றி வைஸ்ராயிடமும் பேசத் தயாராக இருந்தார். நான் ஆசிரமத்தைவிட்டுப் புறப்படுமுன் தேசாய் என்னிடம் வைஸ்ராயை காந்திக்கு ஒரு பேட்டி கொடுக்கும்படி குறிப்பாகச் சொல்லச்சொன்னார். ஆனால், நேருவுக்கு இதைத் தெரிவிக்க வேண்டாமென்றார். நான் டில்லிக்குப்போகும் வழியில் பம்பாயில் நேருவின் தங்கை கிருஷ்ணா ஹத்தீசிங் வீட்டில் நேருவைச் சந்தித்தேன். 'காந்தி வைஸ்ராயைச் சந்திக்கவேண்டுமா?' என்று கேட்டேன். 'எதற்கு? வேண்டாம்' என்றார். எப்பொழுதும் அவர் சரணாகதி அடைவதை வெறுத்தார். வைஸ்ராயும் தாமும் சேர்ந்து ஒரு தீர்மானத்திற்கு வரமுடியும் என்று காந்தி இன்னும் நம்பிக்கையோடு இருந்தார். காந்தி கொள்கையில் விட்டுக்கொடுக்கமாட்டார். ஆனால், கொள்கையை நிறைவேற்றுவதில் இடம், காலம், வேகம் முதலியவற்றை விட்டுக் கொடுக்க ஆயத்தமாக இருந்தார். லார்டு லின்லித்கோ காந்தியைப் பார்க்க மறுத்துவிட்டார்.

25. ஏமாற்றமும் அழற்சியும்

1942ஆம் ஆண்டு மே, ஜூன், ஜூலை மாதங்களில் இந்திய அரசியல் உலகில் காற்று அசைவற்று இருந்து மூச்சு அடைப்பது போலிருந்தது. ஜப்பானிய ஆக்கிரமிப்பாளர் பக்கத்து நாடாகிய பர்மாவில் இருந்தனர். இந்தியாவை ஜப்பானியப் படையெடுப்பிலிருந்து பாதுகாக்க இங்கிலாந்துக்கு வலிமையில்லாததுபோல் தோன்றியது. தங்களால் ஒன்றும் செய்யமுடியவில்லையே என்று கிளர்ச்சியில் ஈடுபட்டிருந்த அரசியல்வாதிகள் பெரிதும் மனம்வெதும்பினர்; இந்தியாவின் இக்கட்டான நிலையை இந்தியாவின் நன்மைக்காகப் பயன்படுத்திக் கொள்ளவும் முடியவில்லை.

இத்தகைய ஓர் இக்கட்டான சமயத்தில்தான் ஆகஸ்டு 7ஆம் தேதி அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி உறுப்பினர்கள் தாங்கள் நடத்த இருக்கும் சாத்வீகச் சட்டமறுப்பு இயக்கத்தைப்பற்றி விவாதிப்பதற்காகக் கூடினர். 'பிரிட்டனின் யுத்த முயற்சிகள் தடைபடாமல் இந்தியாவிற்குச் சுதந்திரம் கொடுக்கமுடியாது என்று என்னிடம் யாரேனும் எடுத்துக்கூறினால், நான் அதை வரவேற்பதற்குச் சித்தமாயிருக்கிறேன்' என்று மிகவும் சமாதான முறையில் நியூயார்க் ஹெரால்டின் அதிபர் ஸ்டீல் (A. T. Steele of the New York Herald Tribune) என்பவரிடம் காந்தி கூறினார்.

'நீங்கள் ஏற்றுக்கொள்ளும் முறையில் அதை எடுத்துச் சொன்னால், நீங்கள் சட்டமறுப்பு இயக்கத்தை நிறுத்திவிடுவீர்களா?' என்று ஸ்டீல் கேட்டார்.

'அப்படியே நிறுத்துவேன். இவர்கள் நான் சொல்வதைக் கண்டித்துப்பேசுகிறார்கள்; நிந்திக்கவும் செய்கிறார்கள். என்னிடம் வந்து நேரில் அதைப்பற்றிப் பேசுவதில்லை என்பதே அவர்கள்மீது நாம் சுமத்தும் குற்றமாகும்' என்றார்.

ஆகஸ்டு 8ஆம் தேதி நடு இரவுக்கு மேல் காந்தி காங்கிரஸ் பிரதிநிதிகளிடம் பேசினார். சாத்வீகச் சட்டமறுப்பை அங்கீகரித்து ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. உண்மையான போராட்டம் இந்த நேரத்திலிருந்து ஆரம்பித்துவிட்டது என்று கருதக்கூடாது என்று காந்தி எல்லோரையும் எச்சரித்தார். இதற்குமுன் நடந்த இயக்கங்களை நினைவுபடுத்தி, 'நீங்கள் எனக்குச் சில அதிகாரங்களைக் கொடுத்திருக்கிறீர்கள்' என்றார். தொல்லைகள் ஒன்றும் இல்லாமல் தவிர்க்கமுயல்வதாகவும் சொன்னார். 'இப்பொழுது என்னுடைய முதல் வேலை என்னவெனில், வைஸ்ராயைப் பார்ப்பது' என்றார். இதற்கிடையில் இரண்டு மூன்று வாரங்கள் ஆகும். அப்பொழுது மற்றவர்கள் என்ன செய்ய வேண்டும் என்கிற பிரச்சினையும் எழுந்தது. 'இராட்டினம் இருக்கிறது. அதையும்விட முக்கியமான விஷயம் வேறொன்று இருக்கிறது. இந்த நேரத்திலிருந்து நீங்கள் ஒவ்வொருவரும் விடுதலைபெற்றவர்கள் என்று பாவித்துக்கொள்ளவேண்டும். நீங்கள் ஏகாதிபத்தியத்தின் குடிமக்கள் இல்லை; சுதந்திர வீரர்களென்று கருதி அங்ஙனமே நடந்து கொள்ள வேண்டும்' என்று காந்தி கூறினார். சூழ்நிலைப்படிதான் மனோநிலை உருவாகிறது என்கிற தத்துவத்திற்கு இஃது முற்றிலும் முரணானது. மனிதர் தம் மனோநிலையை மாற்றிச், சூழ்நிலையை உருவாக்க முடியும் என்று எப்பொழுதும் காந்தி கூறுவதுண்டு. 'நீ என்ன நினைக்கிறாயோ, அதுவே நீ ஆகிறாய்' என்று ஒரு முறை காந்தி வற்புறுத்தினார்.

தேச மக்களின் அப்போதைய மனநிலையை நன்றாக அறிந்து, ஏதாவது செயலில் இறங்கவேண்டும் என்று காந்தி உணர்ந்தார்.

ஆனால், பலாத்கார முறையில் மக்கள் ஈடுபட்டுவிடுவார்களோ என்று அஞ்சினார். ஆகையால், வைஸ்ராயைக் கண்டு மறுபடியும் பேசவேண்டுமென்று திட்டமிட்டார். ஆனால், அரை நிர்வாண கலகக்காரரிடம் எவ்விதமான பேச்சுவார்த்தையும் நடத்தக்கூடாது என்று வைஸ்ராய்க்கு மேலிடத்திலிருந்து கட்டளை வந்திருந்தது. 9ஆம் தேதி சூரியோதயத்திற்குமுன் காந்தி, நேரு, மற்றுமுள்ள முக்கியமான காங்கிரஸ் தலைவர்கள் சிறையில் அடைக்கப்பட்டனர். பூனாவிற்கு அருகிலுள்ள ஏர்வாடாவில் ஆகாகான் அரண்மனையில் காந்தி, திருமதி நாயுடு, மகாதேவ தேசாய், குமாரி சிலேடு, பியரிலால் ஆகியோர் சிறைவைக்கப்பட்டனர். அடுத்த நாள் கஸ்தூரிபாவும் சுசீலா நய்யரும் அங்குக் கொண்டுவரப்பட்டனர்.

காந்தியைச் சிறையில் வைத்துக் கதவுகள் அடைக்கப்பட்டதும், பலாத்கார மதகுகள் திறக்கப்பட்டன. போலீஸ் நிலையங்களும் அரசாங்கக் கட்டிடங்களும் தீயிடப்பட்டன. தண்டவாளங்கள் அகற்றப்பட்டன. தந்திக்கம்பிகள் அறுக்கப்பட்டன. பிரிட்டிஷ் அதிகாரிகள் தாக்கப்பட்டுக் கொல்லப்பட்டனர். சக்தி நிறைந்த இரகசிய இயக்கம் ஒன்று இரகசியமாக ஏற்பட்டது. அப்பொழுது காங்கிரஸில் ஒரு பகுதியாக இருந்த சோஷலிஸ்டுகளால் அது நடத்தப்பட்டது. சில இடங்களில் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் ஆணை செல்லவில்லை. பல பட்டணங்களிலும் ஜில்லாக்களிலும் சுதந்திர அரசாங்கம் ஏற்பட்டது.

இக் கலகத்திற்கு காந்திதான் காரணம் என்று பிரிட்டிஷ் அறிக்கைகள் குறைகூறின. சிறையிலிருந்து காந்தி வைஸ்ராய்க்கு ஒரு கடிதம் எழுதினார். தம்மீது கூறப்படும் குறைகள் தவறானது என்றும், அரசாங்கம் உண்மையைத் திரித்துத் தவறான விவரங்கள் கொடுப்பதாகவும் பிரிட்டிஷ்காரர்மீது காந்தி குற்றஞ் சாட்டினார்.

வைஸ்ராய் இதை ஒப்புக்கொள்ளவில்லை. அஹிம்சையைப் பரப்ப அவதாரம் எடுத்த காந்திக்கு அவர் நாட்டில் பலாத்காரம் நிறைந்த கலகத்திற்குக் காரணம் காந்தி என்று கூறியது அவருக்குக் கோபத்தை உண்டாக்கியது. 1942ஆம் ஆண்டு டிசம்பர் 31ஆம் தேதி காந்தி மறுபடியும் வைஸ்ராய்க்கு எழுதினார். 'இஃது நான் உமக்கு நேர்முகமாக எழுதும் கடிதம். என் நெஞ்சத்தில் கொதித்துக்கொண்டிருக்கும் வருத்தத்தை எடுத்துச்சொல்லாமல் இந்த ஆண்டு கழிவதற்கு விடமாட்டேன். நாம் இருவரும் நண்பர்களென்று நினைத்தேன். கடுமையான நடவடிக்கை எடுக்குமுன், நீர் ஏன் என்னைக் கூப்பிட்டனுப்பி இருக்கக் கூடாது? என் குற்றங்களைப் பிறர் காண்பதுபோல் நானும் காணமுடியும். நிரபராதிகளுக்கு அரசாங்கம் தீங்கு இழைத்துவிட்டது. நாட்டில் நடந்த கொலைக்கும் பலாத்காரத்திற்கும் அரசாங்கம்தான் காரணம். நான் இல்லை. ஆனால், அரசாங்கம் என்மீது விடாமல் பொய்க்

குற்றம் கூறுவதால் உண்ணுவிரதம் இருந்து, இந்த உடலை வேதனைக் குள்ளாக்குவேன்' என்று அக் கடிதத்தில் எழுதினுர்.

வைஸ்ராயிடமிருந்து காந்திக்கு வந்த கடிதத்தில் காந்தி அரசாங்கத்தைப் பயமுறுத்துகிருர் என்று எழுதியிருந்தது. எனினும், உண்ணுவிரதம் தொடங்குவதற்கு இரண்டு நாட்களுக்குமுன் காந்தியையும் அவருடைய தோழர்களையும் விடுதலை செய்துவிடுவதாக அரசாங்கம் தெரிவித்தது. காந்தி அதற்குச் சம்மதிக்கவில்லை. விடுதலைக்காக அவர் உண்ணுவிரதம் மேற்கொள்ளவில்லை. 'உம்மிடமிருந்து நியாயம் கிடைக்காததால், எல்லாருக்கும் மேலான ஆண்டவனிடம் நியாயம் வேண்டி உண்ணுவிரதம் மேற்கொள்கிறேன்' என்று வைஸ்ராய்க்குத் தெரிவித்தார். நாட்டில் நடந்த கலவரங்களைப்பற்றி அவருக்கு ஒன்றும் தெரியாது. காந்திக்கும் அவற்றிற்கும் சம்பந்தம் இல்லை. தம் மீது சுமத்திய வீண்பழியைப் போக்கவே விரும்பினுர்.

காந்தி 21 நாட்கள் இருந்த உபவாசம் அவரைக் கொன்றுவிட்டதென்றே சொல்லலாம். கஸ்தூரிபா துளசிச்செடிக்குமுன் நின்று பிரார்த்தித்தாள். அவர் இறந்துவிட்டதாகவே கஸ்தூரிபா நினைத்தார். அவருடைய நாடி மிகவும் பலவீனமாயிருந்தது. அவருடைய உடல் குளிர்ந்துவிட்டது. ஆனுல், அவர் பிழைத்துக்கொண்டார். காந்திக்கு ஓய்வு இல்லை. 'என்னுடைய வேதனைக்கு ஆறுதல் தரும் மருந்து' வேண்டுமென்ருர். இரகசிய இயக்கத்தார் நடத்திய பலாத்காரங்களுக்கும், அதனுல் பலர் இறந்ததற்கும், அந்த இயக்கத்தை நசுக்க எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளால் ஏற்பட்ட கஷ்டங்களுக்கும் அவர் பொறுப்பல்ல என்று கூறி, இங்கிலாந்திலும் இந்தியாவிலுமுள்ள உத்தியோகஸ்தர்களைக் கடுமையாக எச்சரித்தார். அச் சமயத்தில் அவர் சிறையில் இல்லாமல் இருந்திருந்தால், அக் கலவரங்களைத் தவிர்த்திருப்பார். அக் கலவரங்களில் தொடர்புகொண்ட காங்கிரஸ்காரர்களுக்கு எதிராக உண்ணுவிரதமும் இருந்திருப்பார். அவருடைய கடிதங்கள் ஒன்றும் அச் சமயம் பிரசுரிக்கப்படவில்லை. பத்திரிகைகளை அணுக அவருக்கு ஒரு வசதியும் இல்லை. அவர்மேல் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளைப் பொய் என்று நிரூபிக்கவும் முடியவில்லை. அவருடைய நெஞ்சிலே கோபமாகிய புயல் உக்கிரமாக இருந்தது. அவர் கடும் வேதனை அடைந்தார். ஒரு பரிபூரண யோகி அதைப் பொருட்படுத்தி இருக்கமாட்டார். ஆனுல், மகாத்மா உலகத்தை முழுவதும் துறக்கவில்லை.

இச் சோகத்தை அதிகப்படுத்துவதுபோல, சிறையில் மகாதேவ தேசாய் மாரடைப்பினுல் மாண்டார். அவர் காந்தியின் தோழர்; ஆலோசகர். அவருடைய வரலாற்றின் குறிப்பை அவ்வப்போது குறித்துவைத்து எழுதிவந்தார். தம் சொந்த மகனைவிட தேசாயை

அதிகமாக நேசித்தார். 1944ஆம் ஆண்டு பிப்ரவரி 22ஆம் தேதி கஸ்தூரிபா தம் கணவனின் மடியில் தலையை வைத்தவாறே இறந்தார். மகாத்மா ஆறுதலின்றி இருந்தார். இப்பொழுதும்கூட அவர் பற்றற்ற வராகக் காணப்படவில்லை. இறந்தவர்களுக்காக வருத்தப்பட்டார். அதிலிருந்து காந்தி தாம் இறக்கும்வரை ஒவ்வொரு மாதமும் இருபத்திரண்டாம் தேதி தம் மனைவிக்காக நினைவுக்கூட்டம் நடத்தினுர். அந்த நினைவுக்கூட்டத்தில் தோத்திரப்பாடல்கள் பாடப்பட்டன. கீதை முழுவதும் ஒப்புவிக்கப்பட்டது.

கஸ்தூரிபா இறந்து ஆறு வாரங்களுக்குப்பிறகு காந்திக்கு மூன்ரும் முறை காய்ச்சல் கண்டது. அவர் நினைவு இழந்து பிதற்றினுர். இந்தியா முழுவதும் அவர் விடுதலைக்காகக் கிளர்ச்சி நடந்தது. எந்த நேரத்திலும் அவர் இறந்து விடுவார் என்று பயந்தனர். காந்தி இருந்த சிறையைச்சுற்றி ஆயுதந் தாங்கிய காவலாளர் இருந்தனர். 1944ஆம் ஆண்டு மே 6ஆம் தேதி காலை எட்டு மணிக்கு காந்தியும் அவரோடு சேர்ந்தவர்களும் விடுதலை செய்யப்பட்டனர். அதுதான் அவர் இறுதியாகச் சிறையிலிருந்தது. இந்தியச் சிறையில் அவர் இருந்த மொத்த நாட்கள் 2,089 (ஏறக்குறைய 6 வருடங்கள்). தென் ஆப்பிரிக்கா சிறையில் 249 நாட்கள் இருந்தார்.

காந்தி பம்பாயில் கடலுக்கருகே இருந்த ஒரு நண்பர் வீட்டிலிருந்து குணமடைந்துவந்தார். அந்த வீட்டு அம்மா அவரைப் பேசாத திரைப்படம் ஒன்றைப் பார்க்கச்சொல்லி யோசனை கூறினுள். அதுவரை காந்தி பேசும்படமோ, பேசாப்படமோ பார்த்ததில்லை. அவர் விருப்பமில்லாமல் அதற்கு ஒப்புக் கொண்டார். பக்கத்துக் கிராமத்தில் ஓடிக்கொண்டிருந்த 'மாஸ்கோவுக்குத் தூது' என்னும் படம் கொண்டுவந்து காட்டப்பட்டது. அவர் அதை விரும்பினுரா? 'நான் அதை விரும்பவில்லை' என்ருர்.

அதில் அரைகுறை உடையில் பல பெண்கள் சேர்ந்து நடனமாடுவது அவருக்குப் பிடிக்கவில்லை. அவர் பல வாரங்கள் ஓய்வெடுத்து உடலைத் தேற்றிக்கொண்டுவந்தார்.

26. ஜின்னுவும் காந்தியும்

1944ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் காந்தி மறுபடியும் அரசியல் அரங்கத்தில் நுழைந்துவிட்டதால், புது வைஸ்ராய் (Wavel) வேவலோடு காந்தி பேச்சுவார்த்தை நடத்த முயன்றுகொண்டிருந்தார். வேவல் பண்பு நிறைந்த ஒரு ஜெனரல்; கவியும்கூட. அவர் காந்தியைப் பார்க்க மறுத்துவிட்டார். ராஜகோபாலாச்சாரியாரின் தூண்டுதலின்பேரில் காந்தி, முஸ்லிம் லீக் தலைவராகிய முகமத் அலி ஜின்னுவைத்

தம்முடன் பேச்சுவார்த்தை நடத்தவரும்படி எழுதினர். சமாதான முறையில் காரியத்தைச் சாதிப்பதில் ராஜகோபாலாச்சாரி சில சமயங்களில் காந்தியையும் மிஞ்சிவிடுவார். காங்கிரசும் லீகும் ஒருவித உடன்படிக்கைக்கு வந்தால், பிரிட்டிஷ்காரர் தமது அதிகாரத்தை விட்டுக் கொடுக்க அது ஒரு தூண்டுகோலாக இருக்கும் என்று காந்தி எண்ணினர். 'சகோதரர் ஜின்ஞு' என்று காந்தி ஜின்ஞுவுக்கு எழுதிய கடிதத்தை ஆரம்பித்தார். 'உமது சகோதரர் காந்தி' என்று கடிதத்தை முடித்திருந்தார். ஜின்ஞுவின் பதில் கடிதத்தில் 'அன்புள்ள திரு காந்திக்கு' என்று தொடங்கி, 'M. A. ஜின்ஞு, என்று கையொப்பமிடப் பட்டிருந்தது. பின்னல் எழுதிய கடிதங்களில் காந்தி 'பிரியமுள்ள பெரிய தலைவரே' என்று தொடங்கியிருந்தார். அப் பட்டம் ஜின்ஞு சமீப காலத்தில் வைத்துக்கொண்டது. ஆனல், ஜின்ஞு எழுதும்போது 'அன்புள்ள திரு காந்திக்கு' என்றுதான் எழுதினர். அவர்களுடைய பேச்சு 17 நாட்கள் நடந்தது. பலன் ஒன்றும் ஏற்படவில்லை.

1945ஆம் ஆண்டு மே மாதத்தில் ஜெர்மனி சரண் அடைந்தது. 1946ஆம் ஆண்டு ஜுன் 26ஆம் தேதி கன்சர்வேட்டிவ் (Conservative) கட்சியைத் தொழிற்கட்சி முற்றிலும் தோற்கடித்தது. சர்ச்சிலுக்குப் பதில் அட்லி (Atlee) முதல் மந்திரியானர். 1845ஆம் ஆண்டு ஆகஸ்டு 14ஆம் தேதி ஜப்பானும் சரண் அடைந்தது. 'புதுக் கட்சியினர் அமைத்த அரசாங்கம் இந்தியாவிற்கு விரைவில் சுய ஆட்சி கொடுக்கமுயலும்' என்று அறிக்கை வெளியிட்டது. வேவலை இங்கிலாந்திற்கு அழைத்தனர். அவர் டில்லிக்குத் திரும்பியதும் மாகாணங்களில் இந்தியருடைய ஆட்சியைப் புதுப்பிக்கப் போவதாகவும் கூட்டாட்சி அரசாங்கம் ஒன்றை ஏற்படுத்த ஒரு சபையைக் கூட்டப்போவதாகவும் அவர் வாக்களித்தார். மேலும் காங்கிரஸ், முஸ்லிம் லீக் பிரதிநிதிகள் அடங்கிய நிர்வாகசபை ஒன்று அமைக்கப்போவதாகவும் அவர் கூறினர். அச் சபை கூட்டாட்சித் தலைநகரில் பிரிட்டிஷ் மேற்பார்வையில் ஒருவகை மந்திரிசபையாக இருக்கும். ஆனல், ஜின்ஞு இந்தியாவைப் பிரிக்கும் திட்டத்தைமாத்திரம் தாம் ஏற்றுக்கொள்வதாகச் சொன்னர். 1945ஆம் வருடம் டிசம்பர் மாதம் பம்பாயில் ஜின்ஞு பேசும்போது 'பாகிஸ்தான் பிரிவினைக்கு காந்தி சம்மதிப்பாராயின், இந்தியப் பிரச்சினையைப் பத்து நிமிடங்களில் தீர்த்துவிடலாம். இந்தியாவில் நாலில் ஒரு பாகமாகிய சிந்து, பலுசிஸ்தான், பஞ்சாப், எல்லைப் புற மாகாணம், வங்காளம், அஸ்ஸாம் ஆகிய ஆறு மாகாணங்களையும் அவற்றின் எல்லைகளையும் அப்படியே வைத்துக்கொண்டு பாகிஸ்தான் நாடாக அமைக்க ஒப்புக்கொள்கிறேன்' என்று ஜின்ஞு கூறினர்.

காந்தி அதை ஒப்புக்கொள்ளவில்லை. அங்ஙனம் இந்தியாவைத் துண்டுபோடுவது ஆண்டவனுக்கே அடுக்காத செயல் என்று எழுதினர். ஜின்ஞு கேட்ட மாதிரி இந்தியாவைத் துண்டுபோடுவது முடியாத

காரியம். நேர்மைக்கு முரணானதுமாகும். இந்துக்கள் முஸ்லிம்களை ஆளக்கூடாது என்பதற்காக ஜின்னா பாகிஸ்தான் கேட்டார். ஆனால், அவர் பாகிஸ்தானோடு இணைத்துக்கொள்ளக்கேட்ட அஸ்ஸாமில் 3,422,479 முஸ்லிம்களும் 6,762,254 முஸ்லிம் அல்லாதார்களும் இருந்தனர். பெரிய பஞ்சாப் மாகாணத்தில் முஸ்லிம்களின் எண்ணிக்கை 16,217,242. முஸ்லிம் அல்லாதாரின் எண்ணிக்கை 12,201,577. ஆறு கோடி ஜனத்தொகையுள்ள வங்காளத்தில் முஸ்லிம் 52 சதவீதமிருந்தனர். பாதி ஜனத்தொகையைவிடச், சற்று அதிகம். இந்த மூன்று மாகாணங்களிலுமே அவை பாகிஸ்தானோடு இணைக்கப்பட்டால் 5 கோடி முஸ்லிம்கள் 4·7 கோடி இந்துக்களையும் சீக்கியர்களையும் ஆளுவார்கள். இங்ஙனம் பாகிஸ்தான் ஏற்படும்போதே பெருஞ்சிக்கல் நிறைந்த சிறுபான்மையோர் பிரச்சினை ஒன்று உண்டாகும். அதே சமயத்தில் 2 கோடி முஸ்லிம்கள் (மொத்த முஸ்லிம்களில் $\frac{1}{5}$ பாகம்) இந்துக்களின் ஆட்சியிலிருப்பார்கள். ஆனால், ஜின்னா தர்க்க சாஸ்திரத்திற்குச் செவிடராகவும் கணக்குக் குருடராகவும் இருந்தார். விவேகமற்ற பிடிவாதத்தனம் தன் சொந்த நலத்திற்கு முரண்பட்டதாயிருந்தாலும் சில சமயங்களில் சரித்திரத்தில் முக்கியமான நிகழ்ச்சிக்குத் துணை போகிறது.

முகமது அலி ஜின்னா பெரிய மனிதர். ஆறு அடிக்கு மேல் உயரமும், 120 ராத்தல் நிறையும், மிகவும் மெலிந்த உடலும் உடையவர். அவர், தடித்து நீண்ட நரைத்த முடியைப் பின்னால் வாரி விட்டிருந்தார். அவருக்கு நல்ல வடிவமுள்ள தலை. சவரம் செய்யப்பட்ட அவர் முகம் சதையில்லாமல் ஒட்டியிருந்தது. அவருக்கு நீண்ட வளைந்த கழுகுமூக்கு. அவருடைய நெற்றிப்பொட்டுகள் அமுங்கியிருந்தன. கன்னங்களில் ஆழ்ந்த குழிகள் விழுந்திருந்தன. இதனால் அவருடைய தாடை எலும்புகள் உயர்ந்து படுக்கை வாட்டிலிருக்கும் இருமுகடுகளைப்போல் தோன்றின. அவர் பேசாமல் இருக்கும் பொழுது மோவாயை இழுத்துவிட்டுக்கொண்டு, உதடுகளை இறுக மூடிவிடுவார். பெரிய புருவங்களை நெரிப்பார். பார்த்தால் நம்மை வெறுத்து ஒதுக்குவதில் அக்கறை கொண்டதாகத் தோன்றுவார். அவர் அதிகமாய்ச் சிரிப்பதே இல்லை. அவர் பெரும்பாலும் மேல் நாட்டு உடைகளே அணிந்திருந்தார். ஆனால், பொதுக்கூட்டங்களிலும் சில சொந்த வைபவங்களிலும் முஸ்லீம்உடை அணிந்திருந்தார். வைக்கோல் நிறமுள்ள முழங்கால்வரை தொங்கும் மேல்அங்கியும், இறுகலான வெள்ளை இந்தியக் கால்சட்டையும், (அது அவருடைய எலும்பும் தோலுமாயிருந்த கால்களில் ஒட்டிக்கொண்டிருந்தது. பாலிஷ்செய்த பளபளப்பான முடிப்பில்லாத ஜோடுகளும் அணிந்திருந்தார். ஒற்றைக்கண் மூக்குக்கண்ணாடி ஒரு கறுப்புக் கயிற்றில் தொங்கிக்கொண்டிருந்தது. 1946ஆம் ஆண்டு மே மாதம் 5ஆம் தேதி

நியூயார்க் டைம்ஸ் பத்திரிகையில் ஜார்ஜ் E. ஜோன்ஸ் (George E. Jones) பின்வருமாறு எழுதியிருக்கிறார். 'பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் மிகச் சிறந்த உடை உடுத்தியவர்களில் சந்தேகமில்லாமல் ஜின்னாவும் ஒருவர்.' ஜோன்ஸ் ஜின்னாவைப் பல தடவைகளில் பேட்டி கண்டிருக்கிறார். 'இந்தியாவில் கொந்தளிப்பு' என்னும் அவருடைய புத்தகத்தில் ஜின்னாவைப்பற்றிக் கூறியிருப்பதாவது : 'அரசியல் ஞானி. சாணக்கிய தந்திரம் நிறைந்தவர் அவர். ஜின்னாவிடம் சில குறைகள் உண்டு. எல்லோரையும் எதிரிபோல் பாவித்து மனம்விட்டுப் பேசமாட்டார். செருக்கும் குறுகிய நோக்கும் உள்ளவர். பிறரிடம் சந்தேகம் கொண்டவர். தம் வாழ்க்கையில் தமக்குப் பிறர் பல முறை தீங்கிழைத்துவிட்டதாக நினைத்துக்கொள்வார். வெளிவிட்டுப்பேசாது உள் உணர்ச்சிகளையெல்லாம் அடக்கியதால், அவர் மனநோய் பிடித்தவர்போல் இருந்தார் என்றே சொல்லலாம். பிறருடன் கலவாது தனியே வாழ்ந்துவந்தார். அவரது அகம்பாவம் பிறரிடம் மரியாதைக் குறைவாக நடந்துகொள்ளும் அளவுக்குப்போய்விடும் என்றே சொல்லலாம்.'

ஜின்னா பக்தி நிறைந்த ஒரு முஸ்லிம் என்று சொல்ல முடியாது. மதுபானம் அருந்தியதாலும், பன்றி மாமிசம் சாப்பிட்டதாலும், பள்ளி வாசலுக்குச் செல்லாததாலும் அவர் இஸ்லாமிய ஒழுக்கத்தை மீறியவராவர். அவருக்கு உருது சிறிது தெரியும். அரபி பாஷை தெரியாது. அவர் நாற்பது வயதுக்குமேலே வேறு மதத்தைச் சேர்ந்த பதினெட்டு வயது பார்ஸிப்பெண்ணை மணந்தார். மத ஆசாரமற்ற ஜின்னா மத அடிப்படையில் இரண்டு ராஜ்யங்களை வகுக்கவேண்டுமென்று கேட்டார். சமயப்பற்று நிறைந்த காந்தி மதச்சார்பற்ற ஒன்றுபட்ட ராஜ்யத்தைமட்டும் ஆதரித்தார்.

ஜின்னாவின் தந்தை தோல், அரக்கு வியாபாரி ; செல்வந்தர் ; ஜின்னா அவருக்கு மூத்த பிள்ளை ; அவர் கோஜா முஸ்லிம். கோஜா முஸ்லிம்கள் சமீபத்தில் அம் மதத்தைத் தழுவியவர்கள். அநேக கோஜாக்கள் இந்துக்களைப்போல் ஒரே கூட்டுக் குடும்பமாயிருந்து, இந்துப்பெயர்கள் வைத்திருந்தனர். ஜின்னா என்பது ஒரு இந்துப் பெயர். பதினெட்டாவது, பத்தொன்பதாவது நூற்றாண்டுகளில் அவர்கள் மறுபடியும் இந்துமதத்தைத் தழுவமுயன்றனர். ஆனால், திரும்பத்திரும்பத் தடைசெய்யப்பட்டனர். அவர் அறியாமலே இந்துக்களிடம் அவருக்கிருந்த மனக்கசப்புக்கு அது ஒரு காரணமாக இருந்திருக்கலாம். அதற்குச் சொந்த காரணமும் உண்டு. 1942ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் பம்பாயிலுள்ள அவருடைய பெரியமாளிகையில் முதல் தடவையாக நான் அவரைச் சந்திக்கும்பொழுது சொன்னார். 'நான் இந்த இயக்கத்தில் 35 வருஷங்களாகப் பாடுபட்டிருக்கிறேன். சுய ஆட்சிச் சங்கத்தில் நேரு எனக்குக் கீழ் வேலைபார்த்தார். அப்பொழுது

நான் காங்கிரஸ் கட்சியில் தீவிரமாய் வேலைசெய்துவந்தேன். என்னுடைய குறிக்கோள் இந்து முஸ்லிம் ஒற்றுமையே. 1920ஆம் ஆண்டில் காந்தி அரசியலில் முன்னுக்கு வரும்வரை எனது அரசியல் சேவை இவ்விதமாக இருந்தது. அதன்பின் இந்து முஸ்லிம் ஒற்றுமை சாத்தியமில்லை என்றும் அந்த மாதிரி ஒற்றுமையைக் காந்தி விரும்பவில்லை என்றும் நான் தெளிவாக உணர்ந்தேன். நான் ஏமாற்றம் அடைந்தேன். நான் இங்கிலாந்திலேயே தங்கிவிடத் தீர்மானித்தேன். என்னுடைய சொத்துக்களை விற்கக்கூட நான் இந்தியாவிற்கு வரவில்லை. ஏஜென்டுமூலமாகவே விற்றேன். 1935ஆம் ஆண்டு வரை நான் இங்கிலாந்தில் இருந்தேன். பிரிவிகவுன்சிலில் சட்டத்தொழில் செய்தேன். நான் எதிர்பாராத விதத்தில் வெற்றி கிடைத்தது.'

1949 ஆம் ஆண்டு செப்டம்பர் 17ஆம் தேதி 'லண்டன் எக்கானமிஸ்டு' (London Economist) என்னும் பத்திரிகையில் ஜின்னுவைப் பற்றி ஒரு கட்டுரை வெளிவந்தது. அந்த ஆசிரியருக்கு ஜின்னுவை நன்ருகத் தெரியும். "ஒரு சிறப்புக் கூட்டத்தில் ஜவஹர்லால் நேரு, ஜின்னுவை அரசியல் உலகத்திலிருந்து தீர்த்துக் கட்டிவிட்டதாக விவேகமற்ற முறையில் கூறினுராம். அதை லண்டனில் வழக்கறிஞராக இருந்த ஜின்னுவிடம் யாரோ திரும்பத்திரும்பச் சொன்னுராம். 'அப்படியா நேரு சொல்லிவிட்டார்' என்று கோபத்துடன் இங்கிலாந்திலிருந்து மூட்டை முடிச்சுகளுடன் தாம் இருப்பது 'நேருவுக்குத் தெரிய வேண்டும்' என்பதற்காக ஜின்னு இந்தியாவிற்கு வந்தார்.... கிளியோபேட்ராவின்மூக்கு சரித்திர முக்கியத்துவம் பெற்றதுபோல் ஜின்னுவின் செருக்கும் சரித்திர முக்கியத்துவம் பெற்றது என்று சொல்லலாம்' என்று எழுதியுள்ளமை இங்குக் குறிப்பிடத்தக்கதாகும்.

பங்கப்படுத்தப்பட்ட கர்வம் கொடிய விலங்கைப்போன்றது. தன் கீழே இருந்தவர் முன்னேற்றப்படியில் மேலே ஏறுவதைக்கண்டு தாங்கமுடியாத பொருமை, தான் அதிகாரம்பெற்று தன் எதிரியையும் பிறரையும் ஒழிக்க ஒரு தூண்டுகோலாகும். அம்மாதிரி எண்ணங்களால் சரித்திரப் புகழ்பெற்ற நிகழ்ச்சிகள் பல நிகழ்ந்துள்ளன. அவை நிகழ வாய்ப்புவேண்டும். வாய்ப்புக்கும் ஒரு சூழ்நிலை வாய்க்க வேண்டும். அப்பொழுது நிகழ்ந்த வரலாற்றின் நிகழ்ச்சிகள் ஜின்னுவின் அரசியல் முன்னேற்றத்திற்குத் துணையாக இருந்தன. மேல்வகுப்பைச் சேர்ந்த முஸ்லிம்கள் இந்துஆட்சி ஏற்படுமோ என்று அஞ்சினர். 1920ஆம் ஆண்டிலிருந்து 1939ஆம் ஆண்டுவரை காந்தி நடத்திய இயக்கங்களால் 'இந்தியாவிற்குக் கூடிய விரைவில் சுயராஜ்யம் கிடைப்பது நிச்சயம் என்று எல்லோரும் கருதினர். அங்ஙனம் இந்தியா விடுதலையடைவதைத் தடுக்க முஸ்லிம்கள் ஏற்பாடுசெய்தனர். சுதந்திர இந்தியா என்பது இந்துக்கள் ஆதிக்கம்பெற்ற இந்தியாவாக இருக்குமென்று அவர்கள் நம்பினர். சுதந்திர இந்தியாவை

'இந்துராஜ்' என்றும் அழைத்தனர். மதச்சார்புள்ள மனோபாவம் அரசியலை உருவாக்குமானால் 30 கோடி முஸ்லிம் அல்லாதார் (இந்துக்கள், சீக்கியர், பார்ஸியர், கிறிஸ்தவர்கள்) இடையில் 10 கோடி முஸ்லிம்கள் எப்பொழுதும் சிறுபான்மையராக இருப்பார்கள் என்பது உண்மையே. செல்வந்த முஸ்லிம்களும், படித்துக்கொண்டிருக்கும் மத்தியவகுப்பு முஸ்லிம்களும், வியாபாரிகளும் சுதந்திர இந்தியாவில் இந்துக்களே பெரும்பாலான அரசாங்க உத்தியோகங்களையும் மற்றப் பொருளாதாரப் பலன்களையும் பறித்துக்கொள்வார்கள் என்று நினைத்தனர். அதனால் அவர்களுக்கு அரசாங்க உத்தியோகங்களும் போதுமான அரசியல் பிரதிநிதித்துவமும் கொடுத்துவந்த பிரிட்டிஷ் காரர் இந்தியாவைவிட்டு வெளியேறுவதை அவர்கள் விரும்பவில்லை.

தாங்கள் வேண்டிய பாகிஸ்தானில் தங்களுக்கு எல்லா அரசியல் அதிகாரமும் வேலைகளும் கிடைக்கும்; அங்குள்ள தொழில், வியாபாரம் முதலியவை தங்கள் கட்டுப்பாட்டுக்கு அடங்கியிருக்கும் என்று முஸ்லிம்கள் எண்ணினார்கள். அதைவிட முக்கியமானது குடியான வர்கள் பிரச்சினை. ஜின்னா ஒருவர் தவிர, மற்ற முஸ்லிம் லீக் தலைவர்கள் எல்லாரும் பெரிய நிலச்சுவான்தார்கள். நேரு தலைமையில் ஆளப்படும் இந்தியாவில் நிலச்சுவான்தார்களுடைய நிலங்கள் குடியானவர்களுக்குப் பிரித்துக்கொடுக்கப்பட்டுவிடும் என்று அவர்கள் எண்ணினார்கள். எல்லைப்புற மாகாணத்தில் உள்ளவர்கள் அனைவரும் முஸ்லிம்கள். அங்கே குடியானவர்களை ஒன்று சேர்த்து, காங்கிரஸ் கட்சி அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றியது. ஆனால், மதத்தை அடிப்படையாகக் கொண்ட பாகிஸ்தான் அம்மாதிரி தீவிர சோஷலிஸத்திற்கு ஒரு அணைக் கட்டாக இருக்கும் என்று இஸ்லாமியச் செல்வந்தர்கள் நம்பினார்கள். எனினும், நிலத்தைவிட நாடே முக்கியமானது என்று முஸ்லிம் குடி யானவர்களை நம்பச்செய்துவிடலாம் என்று அவர்கள் எண்ணினார்கள்.

ஆகவே, பாகிஸ்தான் என்பது செல்வந்த முஸ்லிம்களுக்குக் கிடைத்த ஒரு வரம்; முஸ்லிம் மத்தியவகுப்பினர் கண்ட ஒரு கன வாகும். மதத்தை அடிப்படையாகக் கொண்ட பாகிஸ்தானில் அவர் களுக்குச் சமுதாயத்தில் ஒரு ஸ்திரமான நிலைமையும் அரசியல் பொருளாதாரத்துறையில் ஏக போக உரிமைகளும் கிடைக்கும் என்று அவர்கள் நம்பினர்.

வெறும் நில ஆசையோ, உத்தியோக உயர்வு அல்லது உத்தியோகம் தேட வேண்டுமென்ற ஆசையோ, அல்லது முஸ்லிம்களின் குறுகிய மனப்பான்மையுள்ள மதவெறியோ பாகிஸ்தான் தேசிய உணர்ச்சியை உண்டாக்கி யிருக்கமுடியாது. கிழக்குப் பிரஷியா நிலச்சுவான்தார்கள், ஜெர்மானிய வணிகப் பிரபுக்கள் முதலியோருடைய லாபக்குறிக் கோளுக்கு அப்பால் நின்று, ஜெர்மனியில் தேசிய உணர்ச்சியை உரு

வாக்கிய ஹிட்லர்போல் ஒரு பெருந் தலைவரால்தான் பாகிஸ்தான் வேண்டும் என்கிற ஒரு தேசிய உணர்ச்சியை உண்டாக்க முடியும். அந்தப் பெரும் தலைவர் ஜின்னு. பணத்தைக் கொடுத்து அவரை எதற்கும் இசையச் செய்யமுடியாது. பெரும் செல்வர். தமது பொருளாதார நன்மைகளில் பற்றற்றவர். தமக்குக் கீழே வேலைபார்த்த காந்தியும் நேருவும் தம்மை அரசியலிலிருந்து விரட்டிவிட்டதாலும், 'தான்' என்கிற செருக்கின் விளைவாலும், மனத்தை வெளியிட்டுப்பேசாது அடக்கிவைத்த மனக்கொதிப்பாலும் அவர் தம் அறுபதாவது வயதில் மீண்டும் அரசியலில் ஈடுபட்டுக் கொள்கையின்றி, வெற்றி ஒன்றைமாத்திரம் மனத்தில் கொண்டு ஊக்கத்துடன் உழைத்தார். ஜின்னுவைப் பேட்டி காண்பது கீறல் விழுந்த இசைத்தட்டுக் கேட்பது மாதிரி. அவர் பேசும்போது தமது கருத்துகளுக்குக் காரணம் எதுவும் காட்டுவதில்லை. 'இந்துக்களும், முஸ்லிம்களும் வெவ்வேறு நாட்டினர்; காந்தி இந்துராஜ்யம் வேண்டுமென்கிருர். பாகிஸ்தான் ஏற்பட்டுத்தான் ஆகவேண்டும்'—இவைபோன்ற ஆதாரமற்ற சுலோகங்களை அடிக்கடி சொல்வார். முஸ்லிம்களுக்குப் பாகிஸ்தான்வேண்டும் என்ற ஒரே குறிக்கோள், ஆதாரமற்ற உணர்ச்சி வேகம், அளவற்ற வெறுப்பு ஆனல், தலைவரது சுயநலமின்மை—இவை தொல்லைகள் நிறைந்த வாழ்க்கை நடத்தும் முஸ்லிம் பாமர மக்களுக்கு ஆர்வம் ஊட்டியது. முஸ்லிம்களுக்கெனத் தனிநாடு ஏற்படும். இந்துக்கள் முஸ்லிம்களை ஆளமாட்டார்கள். ஆனல், முஸ்லிம்கள் இந்துக்களையும் சீக்கியர்களையும் ஆளுவார்கள். இந்துவகுப்பைச் சேர்ந்த வியாபாரிகள், தொழிலாளிகள், நிலச்சுவான்தார்கள், உத்தியோகஸ்தர்கள் முதலியவர்கள் போய் விடுவார்கள். இந்தக் கொள்கைகளைப் பரப்பிவந்த ஜின்னுவும், அக் கொள்கைகளை ஏற்றுக்கொண்ட பாமர மக்களும், தீர்க்கமுடியாத 'சிறுபான்மையோர் பிரச்சினையும்' அக் கொள்கைகளை நிறைவேற்றுவதிலுள்ள கஷ்டங்களையும் சிறிதும் உணரவில்லை. உணர்ச்சிவெள்ளத்தைப் பெருக்கெடுக்கவைக்கும் கொடி ஒன்றை—பாகிஸ்தான் என்ற லட்சியத்தை—முஸ்லிம்கள் கையில் கொடுத்தார். பாகிஸ்தான் என்கிற நாடு ஒன்றை நிறுவவேண்டும் என்ற ஒரே நோக்கத்தோடு உழைத்தாரே தவிர, அப் பாகிஸ்தான் நாட்டில் எழும் பிரச்சினைகளைப்பற்றிச் சிறிதும் சிந்தனை செய்யவில்லை. பாகிஸ்தான் என்ற பிரச்னையை எழுப்பிச் சில ஆண்டுகள்வரை, பாகிஸ்தான் நாட்டு எல்லைகள் எவை என்று குறிப்பிட மறுத்துவிட்டார். கூறிய யோசனை தெளிவாக இல்லாவிட்டால், அதைக் குற்றம் கூறுபவர்கள் கண்டிக்கமுடியாது. இந்த மாதிரி சூழ்நிலை வெறியர்களின் சுவர்க்கம் போன்றது என்றே சொல்லலாம்.

காந்திக்கு ஜின்னு பிரமாண்டமான பிரச்சினை ஆகிவிட்டார்.

மடல் III

வெற்றியும் சோகமும்

1946ஆம் ஆண்டு மார்ச் 24ஆம் தேதிமுதல்
1948ஆம் ஆண்டு ஜனவரி 30ஆம் தேதிவரை

27. மனிதனிடம் தெய்வீகத்தைக் காண முயல்வது

காந்தி 125 வருடங்கள் வாழவேண்டுமென்று விரும்பினுர். ஆனுல், 'உயிருள்ள பிணம்'போலத் தமது உறவினருக்கும் சமுதாயத்தாருக்கும் ஒரு சுமையாக இல்லாமல், நல்ல ஆரோக்கியத்துடன், சுறுசுறுப்புள்ளவராகவும் இருக்க விரும்பினுர். இயற்கை வைத்தியத்தினுல் எல்லாரும் அந்த வயதுவரை வாழலாம் என்று அவர் கூறினுர். மருந்துகள் தேவையில்லை. சரியான உணவு, மண்பற்று, குளிப்பு, ஒழுங்கான தூக்கம், தேவையானபோது பேதிக்குச் சாப்பிடுதல், மது அருந்தாமை, தேநீர், காப்பிபோன்ற ஊக்கம் ஊட்டும் பானம் குடியாமை முதலிய வற்ருேடு பற்றற்ற மனநிலையும் இருக்கவேண்டும். சேவையும் அதன் பயனைத் துறத்தலுமே உயிரை ஓம்பும் மருந்து. அந்த மனுேநிலை கவலைக்கும் பொறுமையின்மைக்கும் இடந்தராது. சுயநலமின்மை உயிரை நிலைக்கச்செய்கிறது. ஆனுல், 'யான்', 'எனது' என்னும் செருக்கு உயிரை அழித்துவிடுகிறது. இன்னும் அரை நூற்ருண்டு காந்தி வாழவேண்டும் என்று நினைத்தது அகங்காரம் என்றும் சொல்லலாம். வேருெரு விதத்தில் பார்த்தால் அவரது நம்பிக்கையும் எதெல்லாம் சாத்தியமாகும் என்று அவர் நினைத்தார் என்பதையும் காண்பிக்கிறது. அவர் செய்துமுடிக்கவேண்டிய வேலைகளைச் செய்து முடிக்கலாம். ஆனுல், அவை ஒரு சாதாரண மனிதனின் வாழ்நாளில் செய்ய இயலாத செயலாகும்.

1946ஆம் ஆண்டு ஜூன் இறுதியில் நான் மகாத்மாவை மறுபடியும் சந்தித்தபோது அவர் மிகவும் சுறுசுறுப்பாக இருந்தார். நான் புது டில்லி வந்துசேர்ந்ததும், அவர் தங்கியிருந்த ஹரிஜனச் சேரிக்கு விரைந்தேன். மாலைப் பிரார்த்தனைக் கூட்டம் நடந்துகொண்டிருந்தது. பிரார்த்தனை மேடையிலிருந்து இறங்குவதற்கு மூன்று படிகளுள்ள ஏணி வைக்கப்பட்டிருந்தது. நான் அந்த ஏணியின் அடிப்பாகத்தில் நின்றுகொண்டேன். 'நீர் வந்திருக்கிறீரா? நான் இந்த நான்கு ஆண்டுகளில் தோற்றத்தில் ஒன்றும் மாறவில்லை' என்றார்.

'நீர் சொல்வதை மறுக்கத் துணியமாட்டேன்' என்றேன். உடனே அவர் தலையைத் திருப்பிச் சிரித்தார். எனது முழங்கையைப் பிடித்துக் கொண்டு, கல்லால் அமைக்கப்பட்ட அவரது குடிசைக்கு என்னை அழைத்துச்சென்றார். எனது உடல்நிலை, பிரயாணம், குடும்பம் முதலியவற்றைப்பற்றி விசாரித்தார். மறுநாள் காலை 5½ மணிக்கு அவரோடு உலாவப்போவதற்கு அழைத்தார். அதற்கடுத்த மூன்று வாரங்களிலும் இந்தியாவின் பல பாகங்களிலும் 8 நாட்கள் காந்தியுடன் தங்கியிருந்தேன். அவரது உடல்ஆரோக்கியம் மிகவும் நன்றாக இருந்தது. அவர் உண்ணும்போது அவருடைய கைகள் சிறிது நடுங்கின. நான்கு வருடங்களுக்குமுன்னால் நடந்ததுபோல அவ்வளவு சுறுசுறுப்போடு நடக்கவில்லை. அவருடைய குரலும் அவ்வளவு பலமாக இல்லை. ஆனால், அவருடைய நடை வேகமாக இருந்தது. தேகப் பயிற்சியும் ஒழுங்காகச் செய்துவந்தார். பூனாவிலுள்ள டாக்டர் தின்ஷா மேத்தாவின் (Dr. Dinshah Mehta) இயற்கை வைத்தியநிலையத்தில் உணவு அருந்தியபின் என்னை உலாவக்கூப்பிட்டார்.

'உண்மையாகவே இந்த மழையில் உலாவப்போகிறீர்களா?' என்று கேட்டேன். 'கிழவரே, வாரும்' என்று அவர் கையை நீட்டிக் கூப்பிட்டார். அவரது சிரிப்பும் நகைச்சுவையும் சிறிதும் குறைய வில்லை.

ஆயினும், அப்போது இந்தியாவில் நடந்த சோகம் நிறைந்த சம்பவங்கள் அவரது வாழ்க்கையின் ஜோதியை மங்கச்செய்தன. 'இந்தியாவிற்கு இன்னும் அஹிம்சா தர்மத்தில் நம்பிக்கை ஏற்படச் செய்யமுடியவில்லை. நம்மைச்சுற்றிப் பலாத்காரச் செயல்கள் நடந்து வருகின்றன. நான் வெடிமருந்து இல்லாத ஒரு துப்பாக்கியாகி விட்டேன்' என்று காந்தி என்னிடம் கூறினார். அஹிம்சையின் பெருமையை எடுத்துக்கூறி, இந்திய மக்களைத் தம் கொள்கையில் நம்பிக்கையுடையவர்களாகச் செய்யமுடியும் என்று அவர் இன்னும் நினைத்தார். ஆகையால், பல ஆண்டுகள் உயிரோடிருக்க வேண்டு மென்று அவர் விரும்பினார். ஆனால், அவரது தசைகள், எலும்புகளைப்

போன்று அவருக்கு இயற்கையாக அமைந்த தன்னம்பிக்கை குறைந்தது ; ஐயம் மிகுந்தது.

ஒரு முக்கியமான விஷயத்தில்மாத்திரம் அவர் மாறவில்லை. அவர் கர்மயோகி. எப்பொழுதும் கர்மத்தில் கண்ணுடையவராய்த் தமது லட்சியத்தை அடைவதற்குரிய செயல்களைத் தவருது செய்துவந்தார். அயராது தம்மால் இயன்றமட்டும் உழைப்பதே அவரது குறிக்கோள். ஹரிஜனங்களின் நன்மைக்காகவும், கல்விக்காகவும், நூல் நூற்றல், கிராம முன்னேற்றம் முதலியவற்றிற்காகவும் தாம் ஏற்படுத்திய வெவ்வேறு ஸ்தாபனங்களின் அலுவல்களை அயராது கவனித்துவந்தார். இப்பொழுது இயற்கை வைத்தியத்திற்காக ஒரு நிலையத்தை அவர் ஏற்படுத்திஞர். ஒவ்வொரு வாரமும் அவருடைய ஆங்கிலேய, குஜராத்தியப் பத்திரிகைகளுக்குப் பல கட்டுரைகளை எழுதிஞர். பொதுக் கூட்டங்களில் மக்களிடமும், தனிப்பட்டவர்களிடமும், சிறப்பாக செல்வந்த நண்பர்களிடமும் பணம் வசூலித்தார். இப்படி அவர் பணம் வசூலிப்பதைத் திருமதி நாயுடு, 'காந்தியை ஏழையாக வைத்திருக்க நிறையப் பணம் வேண்டியதிருக்கிறது' என்று கேலியாகக் கூறிஞர். 1935ஆம் ஆண்டுக்குப் பிறகு ஜி. டி. பிர்லா என்னும் கோடீஸ்வரர் காந்தியின் ஆசிரமத்திற்கும், அதைச் சேர்ந்த ஆஸ்பத்தரிக்கும், பால் பண்ணைக்கும் வேண்டிய செலவைக் கொடுத்துவந்தார். வருடத்திற்கு ஏறக்குறைய 17,000 டாலர் செலவானது.

மக்கள் பொதுநலச் சேவைகளுக்காக மட்டுமின்றிக் காங்கிரஸ் கட்சிக்காகவும் காந்தி உழைத்தார். காங்கிரஸ் கட்சியில் மிகவும் செல்வாக்கு நிறைந்தவர் சர்தார் வல்லபாய் பட்டேல். காங்கிரஸுடைய கொள்கைகளோடு பலமுறை கருத்து வேறுபாடுகள் கொண்டிருந்தாலும்கூட எல்லோராலும் ராஜாஜி என்று அழைக்கப்பட்ட ராஜகோபாலாச்சாரிதான் அக் கட்சியின் அரசியல் தந்திரி. ஆனல், ஜவஹர்லால் நேருதான் காந்தியின் வாரிசு. ஜவஹர்லால் நேருவிடம் காந்தியின் குணதிசயங்கள் மிகக் குறைவாகத்தான் காணப்பட்டன. ஆனல், காந்திக்கும் நேருவுக்கும் இடையே தந்தைக்கும் மகனுக்கு முள்ள பாசம் இருந்தது. எந்த விதமான வேற்றுமைகளும் அவர்களைப் பிரிக்கமுடியாது.

1942ஆம் ஆண்டு ஜனவரி 15ஆம் தேதி காங்கிரஸ் நிர்வாகக் கமிட்டிக் கூட்டத்தில் காந்தி பின்வருமாறு கூறிஞர். 'நானும் பண்டித ஜவஹர்லாலும் கருத்து வேற்றுமையால் பிரிந்துவிட்டோம் என்று ஒருவர் கூறிஞர். கருத்து வேற்றுமை எங்களைப் பிரிக்க முடியாது. எங்களைப் பிரிப்பதற்கு முக்கியமான வேறு காரணம் வேண்டும். நாங்கள் சேர்ந்து வேலைசெய்யத் தொடங்கிய காலத்திலிருந்து எங்களுக்குள் கருத்து வேற்றுமை இருந்துவந்திருக்கிறது.

எனினும், பல ஆண்டுகளாகச் சொல்லிவந்ததை மீண்டும் வலியுறுத்து கிறேன். அதாவது நேருதான் எனக்குப்பின் தலைவர். ராஜாஜி அல்ல. நான் பேசுவது அவருக்கு விளங்கவில்லை என்கிறார். நான் அறியாத மொழியை அவர் பேசுவதாகவும் கூறுகிறார். இஃது உண்மை யாகவும் இருக்கலாம். மொழி வேற்றுமை ஒற்றுமையைக் குலைக்க முடியாது. நான் மறைந்தபிறகு, அவர் நான் பேசிவந்தவைகளைப் பேசுவார் என்று எனக்கு நன்றாகத் தெரியும்.'

1946-ல் காந்தி என்னிடம் கூறினார். 'நேருவுக்கு நாவன்மை உண்டு. தாம் 'காந்தியின் ஆம் மனிதன்' என்று பட்டேல் பெருமைப் பட்டுக்கொண்டார். ஆனால், நேருவோ, காந்தி சொல்வதைச் சிலவேளை களில் ஏற்றுக்கொள்வார்; சில சமயம் ஏற்றுக்கொள்ளமாட்டார்; ஆகையால், தாம் இறந்தபிறகு, தம்மைப்போல் நேரு காந்தியின் உள்ளம் பேசும் வழிகளில் பேசுவார் என்று நம்பினார்.

தேசிய சுதந்திர நாள் நெருங்கியதும், அரசியலில் முக்கியமான நடவடிக்கைகள் காணப்பட்டன. அவற்றில் காந்திதான் முதன்மை வாய்ந்த தலைவராக இருந்தார். தங்கள் யோசனைகளுக்கும் திட்டங் களுக்கும் காந்தியின் சம்மதத்தைப் பெறவும், அவரது ஆலோசனை களையும், அறிவுரைகளையும் கேட்கவும், நேரு, பட்டேல், ராஜாஜி முதலியோர் தினமும் காந்தி தங்கியிருந்த ஹரிஜன் சேரிக்கு வந்தனர். காந்தியின் சம்மதம் பெறவில்லையானால், தலைவர்களின் திட்டங்களும் ஆலோசனைகளும் பயன்படா. பொதுமக்கள் அவைகளை ஏற்கமாட் டார்கள். இந்தியத் தலைவர்கள் காந்தியின் உள்ளத்தில் கிளம்பும் உணர்ச்சிகளை அறியவேண்டி நின்றனர். அந்த உள்ளுணர்ச்சி என்பது தெளிவில்லாத பெயர் ஒன்றாகும். ஆனால், இந்திய விடுதலைப் போராட்டக் காலத்தில் பேச்சுவார்த்தை நடந்தபோது அவரது உள்ளத்திலிருந்து எழும் உணர்ச்சிதான் முக்கியமான பிரச்சினை ஆகி விட்டது.

1946ஆம் ஆண்டு மார்ச் 23-ஆம் தேதி இந்தியா விடுதலை அடையும் முறைகளைப்பற்றிப் பேசுவதற்காக பிரிட்டிஷ் அமைச்சர் குழு ஒன்று வந்தது. இந்திய மந்திரி லார்டு பெதிக் லாரென்சும் (Lord Pethick-Lawrence) அரசாங்க வாணிகக் கழகத் தலைவரான சர் ஸ்டாபோர்டு கிரிப்சும் (Sir Stafford Cripps) கடற்படைத் தலைவராகிய ஆல்பர்ட் வி. அலெக்ஸாந்தரும் (Albert V. Alexander) அக் குழுவின் அங்கத் தினர்களாவார்கள். அந்நிய ஆட்சிக்குப் பதிலாக இந்தியர் சுதந்திர ஆட்சியை எப்படி நிறுவுவது என்பதைப்பற்றி இந்தியத் தலைவர்களை அவர்கள் கலந்து ஆலோசித்தனர். முஸ்லிம் லீக் தலைவர்களுக்கும் காங்கிரஸ் கட்சித் தலைவர்களுக்கும் இடையே அதைப்பற்றி ஒருமைப் பாடான கருத்துகள் காணப்படவில்லை. ஆகையால், அவ் வாண்டு மே

மாதம் 16ஆம் தேதி தூது கோஷ்டியினரே ஒரு திட்டத்தை அறிவித்தனர். அத் திட்டத்தை நுணுக்கமாகப் பார்த்து, 'இந்தச் சூழ்நிலையில் பிரிட்டிஷ் அரசாங்கம் இதற்குமேல் ஒன்றும் செய்திருக்கமுடியாது. இங்கிலாந்தின் ஒரே நோக்கம் 'இந்தியாவிற்குக் கூடியவிரைவில் சுதந்திரம் அளிப்பதே' என்று காந்தி கூறினர்.

இந்திய முஸ்லிம் லீகை ஆதரிப்பவர்கள் தவிர, மற்றவர்கள் எல்லோரும் இந்தியா ஒரே நாடாக இருக்கவேண்டுமென்று விரும்பினர் என்பதற்குச் சான்றுகள் நிறைய உள்ளன என்று பிரிட்டிஷ் கோஷ்டியினர் அவர்களுடைய திட்டத்தில் குறிப்பிட்டிருந்தனர். அதே சமயத்தில் தாங்கள் அப்பொழுதும் பெரும்பான்மை வகுப்பினரான இந்துக்களால் ஆளப்படவேண்டியிருக்குமோ என்று முஸ்லிம்களுக்கு மெய்யாகவே ஓர் அச்சம் இருந்தது. ஆகையால், தூது கோஷ்டியினர் இந்தியாவைத் துண்டுபோட முடியுமா என்று நடுநிலைமையாகச் சிந்தித்தனர். ஆனல், இந்தியாவைத் துண்டுபோடக்கூடாது என்று அவர்கள் தீர்மானித்தனர். 'பாகிஸ்தான் என்கிற நாடு கிழக்கே ஒரு பாகமாகவும் மேற்கே ஒரு பாகமாகவும் இருக்கும். இரண்டுக்கும் இடையே 700 மைல் தூரம். சமாதான காலத்திலும் யுத்த காலத்திலும் இரண்டு பாகங்களுக்கும் இடையே போக்குவரத்து சிரமமாகத்தானிருக்கும்' என்று பிரிட்டிஷ் தூது கோஷ்டியினர் கூறினர். மேற்கு பாகிஸ்தானில் முஸ்லிம் அல்லாதார் நூற்றுக்கு 37 பேர். கிழக்கு பாகிஸ்தானில் நூற்றுக்கு 48 பேர் முஸ்லிம் அல்லாதார். 2 கோடி முஸ்லிம்கள் பாகிஸ்தானுக்கு வெளியே இந்துஸ்தானில் சிறுபான்மையராகவே இருப்பார்கள். பாகிஸ்தான் ஏற்படுத்தவேண்டும் என்று முஸ்லிம்கள் கேட்டதற்குக் காரணம் சிறுபான்மையோர் பிரச்சினையைத் தீர்ப்பதற்காகவேயாகும். ஆனல், அங்ஙனம் பாகிஸ்தான் ஏற்படுத்துவதால் அப் பிரச்சினை தீரமுடியாது என்பதற்குப் புள்ளி விவரங்கள் உள்ளன என்று தூது கோஷ்டியினர் அறிவித்தனர்.

ஆகையால், மேலேகண்ட யோசனையை விடுத்து, இந்துக்களும் சீக்கியர்களும் இல்லாத இடங்களைச் சேர்த்து பாகிஸ்தான் அமைப்பதைப்பற்றி பிரிட்டிஷ் மந்திரிகள் சிந்தித்தனர். அத்தகைய முறையில் பாகிஸ்தானை அமைக்கமுடியாது என்று முஸ்லிம் லீக் கட்சியினர் நினைத்தனர் என்று பிரிட்டிஷ் குழுவினர் சொன்னர்கள். (ஆனல் இப்பொழுது இருப்பது அத்தகைய பாகிஸ்தான்தான்) 'இந்தச் சிறு பாகிஸ்தான்களை அமைப்பதற்கு அஸ்ஸாம், வங்காளம், பஞ்சாப் மாகாணங்களைக் கூறுபோட வேண்டிநேரிடும். அதை அம் மாகாணங்களிலுள்ள பெரும்பாலோர் விரும்பமாட்டார்கள் என்பது மந்திரிகளுடைய கருத்தாகும். வங்காளம், பஞ்சாப்—இந்த இரண்டு மாகாணங்கள் ஒவ்வொன்றிற்கும் பொது மொழியும், பொதுக் கலாச்சாரமும், பழங்கால சரித்திமுரம் உண்டு. மேலும், பஞ்சாபை இரண்டாகப் பிரித்தால் இரு

பக்கங்களிலும் நிறைய சீக்கியர்கள் இருப்பார்கள் என்று அந்தக் குழுவினர் கூறினர்.

மேற்கூறிய காரணங்களுக்காக இந்தியாவைப் பிரிக்கவேண்டாம் என்று தூது கோஷ்டி பிரிட்டிஷ் அரசாங்கத்திடம் தெரிவித்தது. அதற்குப்பதிலாக பின்வருவனவற்றைச் சிபார்சுசெய்தது. (1) பிரிட்டிஷ் இந்தியாவும் சுதேச சமஸ்தானங்களும் சேர்ந்து ஒரே இந்தியாவாக இருக்கவேண்டும். அதற்கு ஒரு கூட்டாட்சி அரசாங்கம் ஏற்படுத்த வேண்டும். பாதுகாப்பு, அந்நிய நாட்டு விவரங்கள், போக்குவரத்து அதனுடைய பொறுப்பில் இருக்வேண்டும். (2) பெரும்பான்மை இந்துக்களும் முஸ்லிம்களும் சேர்ந்து ஓட்டுக்கொடுத்தாலன்றி, ஜாதி, மத சம்பந்தமான முக்கியமான சட்டம் எதுவும் கூட்டாட்சிப் பார்லிமென்டு நிறைவேற்றக்கூடாது. (3) மாகாண அரசாங்கங்களுக்குப் பரவலான அதிகாரங்கள் வேண்டும். மிகத் தேவையான தேசிய வேலைகளில்மட்டும் ஈடுபடவேண்டும். மற்ற அதிகாரங்களை மாகாண அரசாங்கங்களுக்குக் கொடுத்துவிடவேண்டும். முஸ்லீம்கள் பெரும்பான்மையோராக இருக்குமிடங்களில் அந்த அரசாங்கத்தில் முஸ்லிம்களின் எண்ணிக்கையும் அதிகமாயிருக்கவேண்டும்.

அரசியலை வகுக்கக் கூட்டப்பட்ட அரசியல் நிர்ணயசபை மேற்கூறிய மூன்று கொள்கைகளின் அடிப்படையில் அரசியல் வகுக்கவேண்டும். முதலில் அது புது டில்லியில் சிறிது காலம் கூடி யோசித்துப் பின் மூன்று பிரிவுகளாகப் பிரிந்துகொள்ளவேண்டும். முதற்பிரிவு இந்துக்கள் பெரும்பான்மையாகவுள்ள மத்திய இந்தியாவிலுள்ள பிரதிநிதிகள் அடங்கியது. இரண்டாம் பிரிவு—முஸ்லிம்கள் பெரும்பான்மையாகவுள்ள வடமேற்கு எல்லை மாகாணம், சிந்து, பஞ்சாப் மாகாணங்கள் உட்பட்ட மேற்கு இந்தியாவிலுள்ள பிரதிநிதிகள் அடங்கியது. மூன்றும் பிரிவு—வங்காளம், அஸ்ஸாம் மாகாணங்களின் பிரதிநிதிகள் அடங்கியது. இந்தியா மூன்று துணைக் கூட்டாட்சிகளாகப் பிரிக்கப்படும். அதற்குத்தக்க அரசியல் அமைப்பதற்காகவே இந்த மூன்று அரசியல் அமைப்புக்குழுக்கள் ஏற்படுத்தப்பட்டன.

(1) பிரிட்டிஷ் தூது கோஷ்டியின் திட்டத்தில் இந்த ஓர் அம்சம் தான் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. வெவ்வேறு அரசியல் அமைப்புக் குழுக்கள் ஏற்படுத்தும் யோசனையை காந்தி ஏற்றுக்கொள்ளவில்லை. வடமேற்கு எல்லை மாகாணம் எப்பொழுதும் காங்கிரஸை ஆதரிப்பது. அதனால் அது முதல் பிரிவில் இருக்க விரும்பலாம். அப்படியிருக்க, அதை ஏன் இரண்டாவது பிரிவில் இருக்கும்படி கட்டாயப்படுத்த வேண்டும்? அஸ்ஸாமில் பெரும்பாலோர் இந்துக்கள். அவர்களை ஏன் முஸ்லிம்கள் பெரும்பாலோராகஉள்ள வங்காளத்தோடு இணைக்க வேண்டும்? அந்த மாகாணங்களை அவர்களது விருப்பத்திற்கு முரணாக

வேறு பிரிவுகளோடு சேரச்செய்வது வன்முறைச் செயலாகும் என்று காந்தி கூறினர். ஆனல், பிரிட்டிஷ்காரர் அது வன்முறைச் செயலாகாது என்றனர். அரசியல் அமைப்புச் சபைகளில் இவை கலந்துகொள்கின்றன. பிறகு அவர்கள் அரசியல் அமைப்பை விரும்பாவிடில், வேறு பிரிவினர்களுடன் சேர்ந்துகொள்ளலாம். அரசியல் சட்டம் எழுதி முடித்தபின், அதிலிருந்து பிரிவது மிகவும் தாமதமாகிவிடுமென்று காந்தி அஞ்சினர். உதாரணமாக, அஸ்ஸாமோ, வடமேற்கு எல்லை மாகாணமோ சட்டரீதியில் அவர்களோடு இணைக்கப்பட்டபின், அவற்றிலிருந்து விலகமுடியாது. விஷயம் என்னவென்ருல், முதல் தடவையாக முக்கியமான நேரத்தில் அவரது சந்தேகங்கள் அவரைப் பிடித்து ஆட்டின. பிரிட்டிஷ்காரரின் நோக்கம் நல்லதே என்று பகிரங்கமாகச் சொல்லிவிட்டார். ஆனல், மேலேகண்டபடி மாகாணங்களை மூன்று பிரிவுகளாகப் பிரித்துத் துணைக் கூட்டாட்சிகளை அமைப்பது பாகிஸ்தானை மறைமுகமாக ஏற்படுத்தும் ஒரு தந்திரமாக இருக்குமோ என்று காந்தி அஞ்சினர்.

பாகிஸ்தான் அமைக்கக்கூடாது என்பதற்குப் பலமுறை கூறிவந்த பயனற்ற வாதங்களை பிரிட்டிஷ் தூதர்குழுவினர் அவர்கள் திட்டத்தில் கூறியதை ஜின்ன கடுமையாகக் கண்டித்தார். பிறகு ஜூன் 4ஆம் தேதி அதை ஏற்றுக்கொண்டார். இதனல் அரசியல் பிரச்சினை சிறிது சிக்கலாகியது. முஸ்லிம் லீகினர் ஏற்றுக்கொண்ட திட்டம் தவருகத்தான் இருக்குமென்பது பல காங்கிரஸ்காரர்கள் கருத்தாகும். ஆகவே, மேற்கூறிய திட்டத்தை ஜின்ன ஏற்றுக்கொண்டது ஒரு திறமையான செயல் என்றே சொல்லவேண்டும். காங்கிரஸ் இந்தப் பிரச்சினையைப் பல வாரங்களாக விவாதித்தது. சந்தேகங்கள் காந்தியைப் பிடித்து ஆட்டின. டாக்டர் மேதாவின் இயற்கை வைத்தியசாலையில் என்னுடைய படுக்கையில் நேரு சம்மணம் போட்டு உட்கார்ந்துகொண்டு பிரிட்டிஷ்காரரின் நோக்கங்களை ஆராய்ந்து, ‘அவர்கள் இந்தியாவைவிட்டு வெளியே செல்லத் தயாராவதுபோல் தெரியவில்லை’ என்ருர். இந்தியா சுதந்திரம் அடைந்தபிறகு லண்டனில் ஹைகமிஷனராகவும் ஐக்கிய நாட்டு ஸ்தாபனத்தில் பிரதிநிதியாகவும் விளங்கிய கிருஷ்ணமேனன் அக்காலத்தில் நேருவின் அருகிலிருந்துகொண்டு பிரிட்டிஷ் திட்டத்தைப் பற்றி நேருவுக் கேற்பட்ட சந்தேகங்களை மேலும் வளர்த்துவந்தார். அப்பொழுது நான் பல மாதங்கள் இந்தியாவில் இருந்தேன். பிரிட்டிஷ்காரர் இந்தியருக்கு அரசியல் சுதந்திரம் கொடுப்பார்கள் என்பதை ஒரு இந்தியனுவது நம்பவில்லை. அது நடக்காத விஷயம்; அவ்வளவு நல்ல காரியம் ஒருபோதும் நடவாது; தேவையற்றது என்று பலரும் நினைத்தனர். 1942, 1943ஆம் ஆண்டுகளில் பலாத்காரத்தில் ஈடுபட்ட சோஷலிஸ்டுகள் பிரிட்டிஷ்காரரைச் சண்டையிட்டு விரட்டினுல்தான் சுதந்திரம் உறுதியாகவும் நிரந்தரமாகவும் இருக்குமென்று நினைத்

தனர். இம்மாதிரி சந்தேகங்கள் நிரம்பிய அரசியல் சூழ்நிலை, அரசியல் வாதிகளின் இரகசியக் கூட்டங்களிலும் மூடுபனிபோல் பரவியது. அவர்களது தீர்மானங்களையும் அது பாதித்தது.

காந்தியின் சந்தேகங்கள் அந்த மூடுபனியை அதிகப்படுத்தின. என்றாலும், அவர் பிரிட்டிஷ் திட்டத்தை காங்கிரஸ் நிராகரிக்க அனுமதிக்கவில்லை. அதற்குப் பதிலாக அதை ஏற்றுக்கொள்ளச் சொன்னார். ஏனெனில், அவருடைய சந்தேகங்கள் ஆதாரமற்றவை என்று சொன்னார். ஆகவே, காங்கிரஸ் அரசியல் நிர்ணயசபையில் கலந்துகொள்ளச் சம்மதித்தது. ஆனால், மகாத்மாவின் சந்தேகங்களை மற்ற காங்கிரஸ்காரர்கள் மறக்கவில்லை. மூன்று துணைக் கூட்டாட்சி களுக்கு அரசியல் நிர்ணயச்சட்டம் இயற்றுவதில் காங்கிரஸ் கலந்து கொள்ளாது என்று பம்பாயில் அந்த வருடம் ஜூலை மாதம் நடந்த பத்திரிகை நிருபர் கூட்டத்தில் நேரு அறிவித்தார். ஆகவே, 1946ஆம் ஆண்டு மே மாதம் 16ஆம் தேதி அறிவித்த பிரிட்டிஷ் அரசியல்திட்டம் இத்துடன் நிராகரிக்கப்பட்டது. ஜின்னாவுக்கும் இந்தத் திட்டத்தை நிராகரிக்க இனி எவ்விதத் தடங்கலும் இல்லாமல் போய்விட்டது.

பிற்காலத்தில் இதைப்பற்றிச் சிந்திக்கும்போது, உண்மையில் நடந்த இந்தியப் பிரிவினையைவிட பிரிட்டிஷ் திட்டம்தான் காந்தி, காங்கிரஸ், நேரு ஏற்றுக்கொள்ளக்கூடிய நல்ல திட்டம் என்று சொல்ல லாம். ஆனால், பிரிட்டிஷ் திட்டம் நடைமுறையில் நல்லதாக இருந் திருக்காது ; அல்லது பாகிஸ்தான் ஏற்படுவதற்கு அத் திட்டம் வழி வகுத்திருக்கலாம் என்று சொல்லலாம். ஆனால், நடக்காத விஷயத்தை நடந்திருக்க முடியும் என்று அரசியல் காரியங்களில் நிரூபிக்க முடியாது. எனினும், பிரிட்டிஷ் திட்டத்தை ஏற்றுக்கொண்டிருந்தால், அதை ஆங்காங்கு திருத்தியோ, மாற்றியோ அமைத்துக் கூட்டாட்சி அரசாங்கம் ஏற்படவும் ஏக இந்தியா அரசியல் அமைப்பு உருவாகவும் சாத்தியமாயிருந்திருக்கும். பிறகு இந்தியாவைப் பிரிவினைசெய்து, அதனால் ஏற்பட்ட பலவித பயங்கர விளைவுகளைத் தவிர்த்திருக்கலாம்.

கூட்டாட்சி அரசாங்கத்தைக்கொண்ட ஏக இந்தியா அரசியல் அமைப்புக்கு ஜின்னா சம்மதித்திருப்பாரா என்பது ஐயத்திற்குரிய தாகும். எனினும், காங்கிரஸ் கட்சியும் முஸ்லிம் லீக் கட்சியும் அடங்கிய ஒரு தற்காலிகக் கூட்டாட்சி அரசாங்கம் ஏற்படுத்த வேவல் பிரபு முயன்றார். மந்திரி சபையிலுள்ள முஸ்லிம்களை நியமிக்கத் தமக்கு அதிகாரம் கொடுத்தால் ஜின்னா அதை ஏற்றுக்கொள்ளச் சம்மதித்தார். காங்கிரஸ் கட்சிக்குப் பெரும் ஏமாற்றம் ஏற்பட்டது. ஏனெனில், காங்கிரஸ் கட்சி தன்னை இந்துக்களின் கட்சி என்றோ, அல்லது வேறு சமயச்சார்பு உடையது என்றோ கருதவில்லை. மேலும், காங்கிரஸ் கட்சியில் அபுல்கலாம் ஆசாத் போன்ற பெருந்தலைவர்கள் அங்கத்தின

ராக இருந்தனர். மந்திரிசபையில் முஸ்லிம்களை நியமிப்பதற்கு ஜின்னுவுக்கு உரிமை கொடுத்தால், முஸ்லிம் லீக் இந்திய முஸ்லிம்களின் கட்சி என்று பொருள்படுகிறது. இந்தியாவில் இரண்டு மதப்பிரிவுகள் உள்ளன. ஆகையால், இந்தியாவைத் துண்டுபோடவேண்டும் என்பதுதான் இதன் பொருளாகும்.

இந்த நியாயமான ஆட்சேபனையைக் கேட்டதும் வேவல் அதை ஏற்றுக்கொண்டார். காங்கிரஸும் முஸ்லிம் லீகும் மந்திரிசபைக்கு அனுப்பவேண்டிய ஆட்களின் பட்டியலை அனுப்பவேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார். ஆனால், ஒரு கட்சி நியமிக்கும் ஆட்களை மற்ற கட்சி ஆட்சேபிக்க உரிமை கிடையாது என்று கூறினர். இந்தத் திட்டப்படி மந்திரிசபையில் கலந்துகொள்ள ஜின்னு மறுத்தார். 1946ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 12ஆம் தேதி மந்திரிசபை அமைக்கும்படி வேவல் நேருவைக் கேட்டுக்கொண்டார். உடனே நேரு ஜின்னுவிடம் சென்று, அவர் மந்திரிசபையில் கலந்துகொண்டு, அவர் விரும்பிய மந்திரிப் பதவியை வகிக்கும்படி கேட்டுக்கொண்டார். ஜின்னு பிரதம மந்திரியாகவோ, பாதுகாப்பு மந்திரியாகவோ இருக்கலாம் என்று காந்தி சொன்னுர். ஜின்னு மறுத்து விட்டார். பிறகு காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ஐந்து மேல்வகுப்பு இந்துக்கள், ஒரு ஹரிஜன், இரண்டு முஸ்லிம்கள், ஒரு சீக்கியர், ஒரு கிறிஸ்தவர், ஒரு பார்ஸி கொண்ட மந்திரிசபை ஒன்றை நேரு அமைத்தார்.

ஜின்னு இதற்குப் பதில்கூறுவதுபோல ஆகஸ்டு 16ஆம் தேதியை 'நேரடி நடவடிக்கை தினம்' என்று அறிவித்தார். கல்கத்தாவில் 4 நாட்கள் கலகம் நடந்தது. அதில் 5000 பேர் மாண்டனர். 15,000 பேர் காயமடைந்தனர் என்று பெதிக் லாரென்ஸ் அறிவித்தார். அது நடந்து பல நாட்களுக்குப்பிறகு நேருவால் மந்திரி சபையில் நியமிக்கப் பட்ட ஒருவர் சிம்லாவில் ஒரு தனி இடத்தில் மறிக்கப்பட்டு ஏழு தடவை குத்தப்பட்டாராம். பெரிய பிரிட்டிஷ் அதிகாரிகள் அத் தாக்குதலை 'அரசியல் சம்பந்தமானது' என்றனர்.

செப்டம்பர் 2ஆம் தேதி நேரு இந்தியாவின் பிரதம மந்திரியானுர். ஜின்னு அதை ஒரு துக்க நாளென்று அறிவித்தார். முஸ்லிம்களைக் கறுப்புக்கொடி பிடிக்கும்படி சொன்னுர். 'இந்திய விவகாரங்களில் ரஷியர்களுக்கு வெறும் வேடிக்கை பார்க்கிறவர்களுக்குள்ள சிரத்தைக்கு மேல் அதிகம் உண்டு. அவர்கள் இந்தியாவிலிருந்து அதிக தூரத்தில் இல்லை' என்று ஜின்னு அடுத்த நாள் பம்பாயில் சொன்னுர். காங்கிரஸ் பதவியேற்றது ஜின்னுவுக்கு மனக்கசப்பை ஏற்படுத்தியது. தான் கருதியதை எந்த விதத்திலும் சாதிக்கவேண்டுமென்ற வெறியுடனிருந் தார். முஸ்லிம்களின் கறுப்புக்கொடிகள் இந்துக்களுக்கு ஆத்திர

மூட்டின. கத்தியால் குத்துவது, துப்பாக்கியால் சுடுவதுபோன்ற நிகழ்ச்சிகள் பம்பாயில் நடந்தன. அவை பஞ்சாப், பீஹார், வங்காளம் முதலிய மாகாணங்களுக்கும் பரவின. அரசியல் சட்டநிர்ணய சபையில் கலந்துகொள்வதாக முன்னர் ஒப்புக்கொண்டிருப்பினும், இனி அச் சபையில் கலந்துகொள்ள இயலாது என்று லீக் தலைவர்கள் கூறினார்கள்.

தேசத்தில் உள்நாட்டுக் கலகம் உருவாகிக்கொண்டிருக்கிறது என்று காந்தி கூறினார். வேவல் திகிலடைந்து ஜின்னாவின் ஆட்களை நேருவின் மந்திரிசபையில் சேர்ப்பதற்கு இரட்டிப்பு முயற்சிஎடுத்தார். ஜின்னா இறுதியில் ஒப்புக்கொண்டு மந்திரிசபையில் ஐந்து பேரை நியமித்தார். அவர்களில் நான்கு பேர் முஸ்லிம்கள். ஒருவர் காந்திக்கு விரோதமான ஹரிஜன். ஜின்னா எப்பொழுதும் முஸ்லிம் லீக் முஸ்லிம்களுடைய கட்சி என்று சொல்லிவந்தார். அப்படியிருக்க, இப்பொழுது ஏன் ஓர் இந்துவை, அதிலும் ஓர் ஹரிஜனைத் தேர்ந்தெடுக்கவேண்டும்? அதன் நோக்கம் காங்கிரஸுக்கும் மேல்வகுப்பு இந்துக்களுக்கும் தொல்லை கொடுப்பதற்காகவேயாகும். லியாகத் அலிகான் (Liaquat Ali Khan) என்பவர் மந்திரிசபையிலிருந்த முஸ்லிம் லீக் அங்கத்தினரில் மிகவும் முக்கியமானவர். நேரு தலைமையில் நடக்கும் அரசாங்கம் இந்திய அரசாங்கம் என்பதைத் தாம் ஒப்புக்கொள்ளவில்லை; அந்த அரசாங்கத்தோடு ஒத்துழைக்கவேண்டும் என்று தாம் கடமைப்படவுமில்லை என்று லியாகத் அலி கூறினார். அதைப்போல அந்த அரசாங்கத்துடன் அவர்கள் ஒத்துழைக்கவும் இல்லை. அந்த அரசாங்கத்தைக் கவிழ்க்கவே மந்திரிசபையில் சேர்ந்தனர். அரசாங்கம் சமய சச்சரவுகளினால் பிளவுபட்ட ஒரு குடும்பமாகக் காணப்பட்டது.

மந்திரிசபையிலுள்ள காங்கிரஸ்காரர்களும் அவர்களைச் சேர்ந்த பலரும் சேரியிலுள்ள காந்தியின் குடிசைக்கு யோசனை கேட்க வந்தனர். அவர் பிரதம மந்திரிக்கும் மேற்பட்ட பிரதம மந்திரியாக இருந்தார். என்றாலும், மிக முக்கியமான பிரச்சினையாகிய இந்திய முஸ்லிம் ஒற்றுமையைப்பற்றியே அவர் மிகவும் கண்ணாயிருந்தார். மேலும் மேலும் நடந்துவந்த கொலைகளைப் பார்த்துப், 'பழிக்குப் பழி வாங்காமல் இந்துக்கள் இறப்பதையே நான் விரும்புகிறேன்' என்று காந்தி சொன்னார். அரசியல்நிலை கபடம் நிறைந்ததாக இருப்பினும், மிக முக்கியமான ஜீவாதாரப் பிரச்சினைகளிலும் கவனம் செலுத்தி வந்தார். தொற்றுநோய் பெருவாரியாக நடந்தபோது ஹரிஜனங்கள் கிணறுகளிலிருந்து நீர் இறைக்கக்கூடாது என்று இந்துக்கள் அவர்களைத் தடுத்துத் துன்புறுத்தியபோது காந்தி அதை வன்மையாகக் கண்டித்தார். உப்புவரியை நீக்குமாறு அரசாங்கத்தை வேண்டினார். அதே சமயத்தில் அனுபவமற்ற மந்திரிகளிடம் பொறுமை காட்டும்படி

மக்களை வேண்டிக்கொண்டார். அவர் குஷ்டரோகத்தைப்பற்றியும், கூட்டுப் பிரார்த்தனையின் அவசியத்தைப்பற்றியும் எழுதினார். ஒரு தடவை அவரிடம் உதவிக்கு வந்த ஒரு குஷ்டரோகிக்குக் கை, கால் பிடித்து விட்டார்.

'நெருப்புப்போல் பரவிவந்த இந்து முஸ்லிம் துவேஷம்' காந்திக்கு மிகவும் வேதனையை அளித்தது. 'இந்த வேதனையை நான் ஏன் சிறிதும் கலங்காத உள்ளத்துடன் பொறுத்துக்கொள்ள முடியவில்லை? 120 வயதுவரை வாழ்வதற்குத் தேவையான பற்றற்றநிலை என்னிடத்தில் இல்லை என்று நினைக்கிறேன். எனினும், மனிதர்களிடம் அவருக்கிருந்த நம்பிக்கை சிறிதும் குறையவில்லை. அற்ப சம்பவங்கள் கூட, காந்திக்கு மனிதர்களிடமுள்ள நம்பிக்கையைப் பலப்படுத்தின. அவருடைய பத்திரிகையில் பின்வரும் சம்பவத்தை காந்தி எழுதினார். 'பம்பாயில் ஒரு நாள் ஓர் இந்து, ஒரு முஸ்லிம் நண்பருக்கு அடைக்கலம் கொடுத்தார். அது இந்துக்களுக்கு ஆத்திரத்தையும் கோபத்தையும் மூட்டியது. ஆகவே, அந்த முஸ்லிமைக் கொல்லவேண்டுமென்று அவர்கள் ஆரவாரம் செய்தனர். அந்த இந்து அதற்கு இணங்கவில்லை. அவரும் அவருடைய முஸ்லிம் நண்பரும் ஒருவரை ஒருவர் அணைத்தபடியே இந்துக்களின் வெறிக்குப் பலியானார்கள்.' அப்பொழுது நடந்துகொண்டிருந்த சொல்லொணாத வெறிச்செயல்களுக்கு இடையே வீரச்செயல்களும் நடந்தன. கல்கத்தாவில் அண்மையில் பயங்கரமான கொலைச்செயல்கள் நடந்தபோது இந்துக்கள் முஸ்லிம்களுக்கும் முஸ்லிம்கள் இந்துக்களுக்கும் ஆதரவு கொடுத்துக் காப்பாற்றினார்கள். இவை காந்திக்கு மிகவும் நம்பிக்கையும் ஊக்கமும் கொடுக்கும் நிகழ்ச்சிகளாக விளங்கின. 'எப்பொழுதாவது, எங்காவது, மனித வர்க்கத்தினிடம் ஆண்டவனின் அருள்தன்மையைக் காணுவிட்டால் மனித குலம் அழிந்தேவிடும்' என்று காந்தி தமது பத்திரிகையில் குறிப்பிட்டிருந்தார்.

அதுமுதல் இறக்கும்வரை மனிதனிடம் தெய்வ சக்தியையும் இந்தியாவில் விவேகமானவர்களையும் காண காந்தி முயன்றுகொண்டிருந்தார். கிழக்கு வங்காளத்தில் நவகாளி, திப்ரா என்னுமிடங்களில் முஸ்லிம்கள் இந்துக்களை மதம் மாறும்படி பலாத்காரம் செய்ததாகவும், அங்ஙனம் மதம் மாற மறுத்தவர்களைக் கொன்றுகுவித்ததாகவும், இந்துப் பெண்களைக் கற்பழித்ததாகவும் காந்தி கேள்விப்பட்டார். இந்தக் கலகம் கிராமங்களுக்கும் பரவினபோது காந்தியின் அமைதி குலைந்தது. அவர் நவகாளிக்குச் செல்லத்தீர்மானித்தார். அவருடைய நண்பர்கள் அதைத் தடுக்கமுயன்றனர். அவருக்கு உடல் நலமில்லை என்றும், அரசாங்கத்திலுள்ள காங்கிரஸ் அங்கத்தினர்களுக்குப் புதுடில்லியில் அவருடைய உதவி இன்றியமையாத தேவை என்றும் காந்தியிடம் கூறினர். 'அங்கு போகும்வரை எனக்கு மனநிம்மதி

இராது என்பது மட்டும்தான் எனக்குத் தெரியும்' என்று அவர் பதிலளித்தார். அவருடைய ஆசியைப்பெற ஒருவரும் ரயில் நிலையத்திற்கு வரவேண்டாம் என்றும் அவர் ஆசீர்வதிக்கக்கூடிய மனநிலையில் இல்லை என்றும் கூறினார். ஆனால், மக்கள் அவரைப் பார்க்கக் கும்பல் கும்பலாக வந்தார்கள். வழியில் ஏராளமான மக்கள் ரயில் நிலையங்களிலும் முற்றுகையிட்டனர். பாதைகளிலும் இருந்தனர். ரயில் சந்திப்புகளின் கூரைகளில் ஏறிக், கதவு, ஜன்னல்களை உடைத்துக் காது செவிடுபடும்படியாக ஆரவாரம் செய்தனர். ரயில் புறப்படுவதற்கு நேரமாகிவிட்டதென்று ரயில்வே கார்டு தெரிவித்தார். உடனே சிலர் அபாயச் சங்கிலியைப் பிடித்து இழுத்தார்கள். அதனால் ரயில் குலுங்கி நின்றது. ஒரு ரயில் நிலையத்தில் ரயில்வே அதிகாரிகள் வழியிலும் காந்தியின் பெட்டியைச் சுற்றிலுமிருந்த மக்கள்மீது நீர்க்குழாயைத் திருப்பினார்கள். அதனால் காந்தி பிரயாணம்செய்த பெட்டி முழுவதும் ஒரே வெள்ளமாகிவிட்டது. மக்கள் போட்ட இரைச்சலின் தொந்தரவினால் காந்தி மிகவும் களைப்படைந்திருந்தார்; விசனமாகவும் இருந்தார். அவர் கல்கத்தாவுக்கு வந்த ரயில் ஐந்து மணி நேரம் தாமதமாக வந்தது.

காந்தி கல்கத்தா வந்துசேர்வதற்குச் சிலநாட்களுக்குமுன்பு அங்கு நடந்த சமய கலவரத்தில் 32 பேர் கொல்லப்பட்டனர். அப்பொழுது வங்காளத்தில் H. S. சுஹ்ரவர்த்தி (H. S. Suhrawardy) என்ற முஸ்லிம் முதல்மந்திரியாக இருந்தார். அவரும் காந்தியும் கல்கத்தா நகரில் பாதிக்கப்பட்ட இடங்களைச் சுற்றிப்பார்த்தனர். ஆட்கள் நடமாட்டமில்லாத தெருக்களில் இரண்டடி உயரத்திற்குக் குப்பை குவிந்துகிடந்தது. நெருப்புக்கு இரையான வீடுகளும் மூடப்பட்ட கடைகளும் காட்சியளித்தன. மக்களுக்கு வெறிபிடிக்கும் போது, அவர்கள் மிருகங்களையும்விடக் கேவலமாக மாறிவிடுகிறார்கள் என்பதைக் கண்டு, காந்தி தாம் மிகவும் வருந்துவதாகச் சொன்னார். எனினும், தாம் எடுத்துக்கொண்ட காரியத்தில் அவர் கண்ணும் கருத்துமாக இருந்தார். கல்கத்தாவிலும் நவகாளியிலும் தாம் தங்கியிருக்கப் போவதாக முடிவுசெய்துவிட்டார். ஒரு பிரார்த்தனைக் கூட்டத்தில் பேசும்போது, 'கலவரத்தின் கடைசி அனல் அணையும்வரை நான் வங்காளத்தைவிட்டு அகலப்போவதில்லை. நான் ஓர் ஆண்டு அல்லது இன்னும் அதிக காலத்திற்கு வேண்டுமானாலும் இங்கு தங்கியிருக்கப் போகிறேன். அவசியம் ஏற்படுமாயின், இங்கேயே உயிர் துறப்பேன். ஆனால், நான் தோல்வியைமட்டும் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை. நான் இங்கு இருப்பதால் மக்களுக்கு உதவிசெய்யமுடியும் என்று அவர்கள் எதிர்பார்க்கிறார்கள். நான் உதவிசெய்யமுடியாவிட்டால், இந்த உடலில் உயிரை வைத்திருப்பதைவிட நான் சாவதே எனக்குச் சாந்தி அளிக்கும்' என்று கூறினார்.

28. பிரிவினைக்குமுன்

நவகாளிக்குப்போய் அங்கு காந்தி மக்களுக்குச் செய்த சேவை தான் காந்தியின் அற்புதமான வாழ்க்கையில் அற்புதங்கள் நிறைந்தன வாகும். நவகாளிக்குச் செல்ல காந்தி புறப்பட்டுக்கொண்டிருந்த போது, பீகார் மாகாணத்திலிருந்து மிகவும் வருத்தத்தை உண்டாக்கும் செய்திகள் வந்துகொண்டிருந்தன. பீகார் மாகாணத்தில் 31,000,000 இந்துக்களும், 5,000,000 முஸ்லிம்களும் இருந்தனர். நவகாளியில் முஸ்லிம்கள் இந்துக்களை ஹிம்சைசெய்தது, பீகாரிலுள்ள இந்துக் களுக்கு ஆத்திரமூட்டியது. காந்தியின் காலடியில் விழுந்து வணங்கும் காங்கிரஸ்காரர்கள் செய்த ஆத்திரமூட்டும் பேச்சுகளாலும், உணர்ச்சியைக் கிளறும் பத்திரிகைச் செய்திகளாலும் இந்துக்களுக்கு அடக்கமுடியாத வெறி ஏற்பட்டது. ‘இரத்தத்திற்கு இரத்தம் பழி வாங்கவேண்டும்’ என்று இந்துக்கள் கூக்குரலிட்டுக்கொண்டு தெருக் களிலும் சந்துகளிலும் ஆரவாரம் செய்தனர். அடுத்த வாரம் 4,580 ஆட்கள் பீகார் மாகாணத்தில் கலகக்காரர்களால் கொல்லப்பட்டதாக ‘லண்டன் டைம்ஸ்’ பத்திரிகைகளின் டில்லி நிருபர் தெரிவித்தார். இறந்தவர்கள் பதினாயிரத்திற்கு மேலிருக்கும் என்று காந்தி மதிப் பிட்டார். இறந்தவர்களில் பலர் முஸ்லிம்கள். மக்கள் நெருக்கம் நிறைந்த சூழ்நிலைகளில் சிறு உணர்ச்சிகள் பிடித்து உந்தும்போது, கொலைகள் ஆயிரக் கணக்கில்தான் நடந்து இருக்கவேண்டும்.

வருத்த மேலீட்டால் மனமுடைந்து காந்தி பீகார் மக்களுக்குப் பின்வருமாறு ஓர் அறிக்கை விடுத்தார். அதில், ‘பீகார் இந்துக் களின் அடாத செயல்கள் காங்கிரஸ், இந்துஸ்தாபனம் என்று ஜின்னு போன்றவர்கள் பழிப்பதற்கு இடம்தரும். காங்கிரஸின் புகழை உயர்த்த எவ்வளவோ பாடுபட்ட பீகார் அதற்குக் குழிதோண்ட மூல காரணமாக இருக்கக்கூடாது’ என்று குறிப்பிடப்பட்டிருந்தலை பீகார் கொலைகளுக்குப் பிராயச்சித்தமாக காந்தி, ‘மிகக் குறைந்த அளவு உணவே’ உண்ணப்போவதாகத் தெரிவித்தார். தவறுசெய்த பீகாரிகள் மனம் திரும்பாவிட்டால் இந்த உணவுக் கட்டுப்பாடு சாகும் வரை உண்ணுவிரதமாகிவிடும் என்றார். இச் சந்தர்ப்பத்தில் பிரதம மந்திரி நேரு, பட்டேல், நேரு மந்திரிசபையிலுள்ள முஸ்லிம்களாகிய லியாகத் அலி கான், அப்துர் ராப் நிஷ்டர் (Abdur Rab Nishtar) முதலியோர் பீகாருக்கு விமானத்தில் சென்றனர். அவர் பார்த்ததை யும் கேள்விப்பட்டதையும் அறிந்த நேரு ஆத்திரமடைந்து, பீகாரில் இந்தக் கொலைப் பாதகங்களை நிறுத்தாவிட்டால், ஆகாயத்திலிருந்து பீகார்மீது குண்டு வீசப்போவதாகப் பயமுறுத்தினர். ஆனால், அது பிரிட்டிஷ் அரசாங்கம் கையாளும் முறை என்று காந்தி சொன்னார்.

சில நாட்களுக்குப்பிறகு பீகாரில் கலவரநிலை தணிந்தது. கல்கத்தாவில் உணர்ச்சிவேகம் மெல்லத் தணிந்துகொண்டிருந்தது. ஆகவே, காந்தி நவகாளிக்குப் புறப்பட்டார். அங்குள்ள பெரும்பான்மையரான முஸ்லிம்களுடைய பலாத்காரத்துக்குப் பயந்து, இந்துக்கள் அங்கிருந்து ஓடிக்கொண்டிருந்தனர்.

கங்கை, பிரமபுத்ரா நதிகளுக்கு இடையிலே நீர்தேங்கிய கழிமுகப் பிரதேசத்திலே நவகாளி இருக்கிறது. இந்தியாவில் எளிதில் அணுகக்கூடாத பகுதிகளில் அது ஒன்று. கையினால் தண்டு வலிக்கும் படகுகளில்தான் சில கிராமங்களுக்குச் செல்லமுடியும். ஃபிலிப்ஸ் டால்பட் (Phillips Talbot) என்னும் அமெரிக்க ஆராய்ச்சித்துறை மாணவர் கல்கத்தாவிலிருந்து நவகாளிக்கு நான்கு நாட்கள் புகைவண்டி, கப்பல், சைக்கிள், கையினால் தண்டு வலிக்கும் படகு முதலியவற்றில் பிரயாணம்செய்தும் நடந்தும் காந்தியைப் பார்க்கச்சென்றார். காந்தி காலையில் நான்கு மணிக்கு எழுந்துவிடுவார். சில வேளைகளில் வெறுங்காலோடு மூன்று அல்லது நான்கு மைல்கள் நடந்து பக்கத்துக் கிராமத்துக்குச் சென்றார். அங்கு ஒரு நாளோ, இரண்டு நாட்களோ அல்லது மூன்று நாட்களோ தங்கி, அந்தக் கிராமத்து மக்களுடன் இடைவிடாது பேசிக்கொண்டும் பிரார்த்தித்துக்கொண்டும் இருந்தார். பிறகு அங்கிருந்து நடந்து வேறு கிராமத்திற்குச் சென்றார். அவருக்குப் புகலிடம் அளிக்கச்சம்மதித்த குடியானவன் குடிசையில் தங்கினார். உள்ளூரில் கிடைத்த பழங்களையும் காய்கறிகளையும் உண்டார். 1946ஆம் ஆண்டு நவம்பர் 7ஆம் தேதியிலிருந்து 1947ஆம் ஆண்டு மார்ச் 2ஆம் தேதி வரை இதுதான் அவருடைய வாழ்க்கை. அப்பொழுது அவருக்கு 77 வயது முடிந்திருந்தது. நான்கு மாத காலத்தில் 47 கிராமங்களில் வசித்துவந்தார்.

அவருக்கு நடப்பது கஷ்டமாயிருந்தது. அவருக்குக் குளிர் காலத்தில் உண்டாகும் சேற்றுப்புண் ஏற்பட்டது. விரோதிகள் அவர் போகும்வழியில் அழுக்கையும் மூங்கில்களையும் பரப்பிவைத்திருந்தனர். காந்தி அவர்களைக் குறைகூறவில்லை. அவர்களுடைய அரசியல் தலைவர்கள் அவர்களுக்குத் தவறாக வழிகாட்டியிருக்கிறார்கள் என்றார். பல இடங்களில் ஒரு கிராமத்திலிருந்து மற்றொரு கிராமத்திற்குப் போக மூங்கில் பாலங்களைக் கடக்க நேரிடும். நான்கு அங்குல பருமனுள்ள 4 அல்லது 5 மூங்கில்கழிகள் சணலினாலாவது, திராட்சைக் கொடியினாலாவது ஒன்றாகக் கட்டப்பட்டிருக்கும். அவைகளைத் தாங்கி நிற்பதும் 10 அல்லது 15 அடி உயரமுள்ள மூங்கில் கழிகள். அவைகள் அந்தச் சதுப்பு நிலத்தில் தோண்டி நடப்பட்டிருக்கும். இந்த மோசமான ஆடும் பாலங்களுக்குச் சில இடங்களில் கைப்பிடியே கிடையாது. ஒரு தடவை காந்தி கால்வழுக்கி, ஆழத்திலிருந்த சேற்றில் விழப்பார்த்தார். நல்ல வேளை விழாமல் தப்பித்துக்கொண்டார். இம்மாதிரி

பாலங்களில் நிதானமாகக் கால்வைத்துப் பயமில்லாமல் நடக்க உயரம் குறைந்த சிறு பாலங்களில் முதலில் நடந்து பழகிக்கொண்டார்.

வெகு தூரத்திலுள்ள இந்த நவகாளியும் அங்கு வசிக்கும் 2,500,000 மக்களும் காந்தியின் ஆத்ம சக்திக்கும் சரீர சக்திக்கும் விடுத்த ஒரு சோதனை என்று அவர் கருதி, அதை ஏற்றுக்கொண்டார். அங்குள்ளவர்களில் 80 சதவீதம் முஸ்லிம்கள். மாதக் கணக்கில் அவர் விடாமுயற்சியுடன் உழைத்தார். டிசம்பர் 5ஆம் தேதி நவகாளியிலிருந்து அவர் பின்வருமாறு எழுதினார். 'நான் இப்பொழுது செய்யும் வேலைதான் என்னுடைய வாழ்விலே மிகவும் கடினமானதும் சிக்கலானதும்கூட. நான் எதற்கும் தயாராக இருக்கிறேன். 'செய்ய வேண்டும், அல்லது செத்து மடியவேண்டும்' என்கிற கொள்கையை இங்குச் செயலாற்றவேண்டும். இங்குச் செய்யவேண்டும் என்பதற்குப் பொருள் என்னவென்றால் இந்துக்களும் முஸ்லிம்களும் சமாதானமாகவும் அன்பாகவும் சேர்ந்துவாழப் பழகச்செய்யவேண்டும் என்பதே. இல்லாவிட்டால் இந்த முயற்சியில் நான் சாகவேண்டும்.'

தம்முடனிருந்த டாக்டர் சுசீலா நய்யர், சுசேதா கிருபளானி (ஒரு வங்காளி) (Sucheta Kripalani) கானு காந்தி, கானு காந்தியின் மனைவி ஆபா (Abha) மற்றும் பலரையும் வெவ்வேறு கிராமங்களுக்கு அனுப்பிவிட்டார். அந்தக் கிராமங்களில் சிலவற்றில் பாதைகள் இல்லை. சில கிராமங்கள் காந்திக்கு விரோதமான மனப்பான்மை உள்ளவை. அந்தக் கிராமங்களுக்குச் சென்ற காந்தியின் சீடர்கள் அங்கங்கே தங்கிவிடவேண்டுமென்று காந்தி ஆணையிட்டிருந்தார். பியரிலால் மலேரியாக் காய்ச்சலினால் கஷ்டப்படும்போது, அவருடைய சகோதரி சுசீலா நய்யர் வந்து அவருக்கு வைத்தியம் செய்யச்சொல்லிக் கேட்டதற்கு காந்தி, 'கிராமங்களுக்குப் போகிறவர்களுக்கு வியாதி வந்தால், ஒன்று அவர்கள் சுகமாக வேண்டும்; அல்லது அங்கே மடிய வேண்டும். அதாவது அவர்கள் வீட்டுவைத்தியத்தில் குணமடைய வேண்டும்; அல்லது பஞ்ச பூதங்களாகிய இயற்கைவைத்தியத்தில் குணமாக வேண்டும். டாக்டர் சுசீலாவுக்கு அவருடைய சொந்தக் கிராமத்தைக் கவனிக்க வேண்டியதிருக்கிறது' என்று எழுதியிருந்தார். தம்மையும் காந்தி அதே விதமான கஷ்டத்திற்கும் கட்டுப்பாட்டுக்கும் உள்ளாக்கிக்கொண்டார். நிர்மல் குமார் போஸ் (Nirmal Kumar Bose) என்ற மனித இயல் பேராசிரியர் முன் காந்தியுடன் ஆசிரமத்தில் இருந்திருக்கிறார். நிர்மல் குமார் போஸ், பரசுராம், குமாரி மனு காந்தி முதலியோர் காந்தியுடன் இருந்தனர். போஸ் அவருக்கு வங்காள மொழிபெயர்ப்பாளராக உதவினார். பரசுராம் அவருடைய நிரந்தர சுருக்கெழுத்தாளர். காந்தியின் தபால் முழுவதையும் அவர் கவனித்துக்கொண்டார். அந்தத் தபாலில் மந்திரிசபையின் தபாலும் அடங்கியிருந்தது. அவர் போகுமிடமெல்லாம் மந்திரிசபை தபாலும்

வந்தது. மகாத்மா காந்தி, மனு காந்திக்கு உணவு தயாரிக்கவும் குடிசையைச் சுத்தமாக வைத்திருக்கவும் உதவிசெய்தார். சில வேளைகளில் அவரே தமக்கு உடம்புப் பிடித்துவிட்டுக்கொண்டார்.

சில சமயங்களில் அவர் பொறுமை இழந்துவிடுவார். 'நான் என்ன செய்வது? நான் என்ன செய்வது?' என்று காந்தி தமக்குள்ளே சொல்லிக்கொண்டதைப் பேராசிரியர் போஸ் கேட்டிருக்கிறார்.

வங்காளத்து முஸ்லின் அரசாங்கத்துக் கணக்குப்படி நவகாளியிலும் அதை அடுத்த திபெரா ஜில்லாவிலும் இறந்தவர்களின் எண்ணிக்கை 216. பதினாயிரத்துக்கு மேற்பட்ட வீடுகள் சூறையாடப்பட்டன. திபெராவில் 9,895 இந்துக்கள் பலவந்தமாக மதம் மாற்றப்பட்டனர். நவகாளியில் மதம் மாற்றப்பட்டவர்களின் எண்ணிக்கை இதைவிட அதிகம். ஆயிரக் கணக்கான இந்துப் பெண்கள் கற்பழிக்கப்பட்டு, முஸ்லிம்களுக்குப் பலவந்தமாக மணம் செய்துவைக்கப்பட்டனர். அப்படிச் செய்தால் இந்துக்கள் அவர்களை மறுபடியும் சேர்த்துக்கொள்ள மாட்டார்கள் என்பதே அவர்கள் கருத்து. அதே நோக்கத்தோடு இந்துக்களைப் பலவந்தப்படுத்திப், பசுக்களைக் கொல்லச்செய்து, அவைகளின் இறைச்சியை அவர்களை உண்ணவைத்தனர். இந்து ஆண்கள் தாடி வளர்க்குமாறும், வேட்டிகளை முஸ்லிம்களைப்போல் மடித்துக்கட்டுமாறும், குரானை ஓதுமாறும் வற்புறுத்தப்பட்டனர்.

காந்தியின் நவகாளி, திபெரா யாத்திரையின் ஆரம்பத்தில் ஒருவர் காந்தியிடம் இந்துக்களை அந்த இடத்திலிருந்து வேறு இடத்திற்குப் போய்க் குடியேறச்சொல்லி யோசனை கூறினார். காந்தி அது தோல்வி மனப்பான்மையைக் காட்டுகிறது என்று கூறி, அந்த யோசனையைத் தீவிரமாக எதிர்த்தார். ஏனெனின், அவ்வாறு மக்களை மதத்தின் பெயரால் ஒரு மாகாணத்திலிருந்து மற்றொரு மாகாணத்திற்குக் குடியேறச்சொல்வதினால் இந்தியாவை ஒரு பொழுதும் 'ஒற்றுமையாக வைத்திருக்கமுடியாது என்பதை ஒப்புக்கொள்வதாகும். மேலும், அது காந்தியின் அடிப்படைக்கொள்கைக்கு முரண்பட்டதாகும். தாங்கள் வேறுபட்டவர்கள் என்று நினைக்கிறவர்களிடையேயும் அன்பு இருக்கிறது அல்லது அன்பை உண்டாக்க முடியும் என்பதே காந்தியின் கொள்கை. இதுதான் இப்பொழுது அவருடைய வேலி. 'நான் உங்களுக்குச் சொல்கிறேன். உங்கள் பகைவரை நேசியுங்கள். உங்களை வைபவர்களை வாழ்த்துங்கள். உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள். உங்களை நிந்திக்கிறவர்களுக்காக வழிபாடு செய்யுங்கள்......உங்களை நேசிப்பவர்களையே நீங்கள் நேசிப்பீர்களானால், உங்களுக்குப் பலன் என்ன?' இவ்வாறு இயேசு சொன்னார். இதே மாதிரி காந்தி வாழ்ந்துவந்தார். மற்றவர்களையும் அவ்வாறே வாழும்படி சொன்னார். ஒரு முறை அவர் ஒரு முஸ்லி

முடைய குடிசையில் கீழே உட்கார்ந்துகொண்டு சாத்வீகத்தின் உயர்ந்த பண்புகளைப்பற்றிக் கூறிக்கொண்டிருந்தார். அப்பொழுது ஒருவர் அவருக்கு ஒரு குறிப்பு அனுப்பினர். அதில் காந்திக்கு வலது கைப்பக்கத்தில் இருந்தவர் பல இந்துக்களைக் கொன்றவர் என்று எழுதியிருந்தது. காந்தி இலேசாகச் சிரித்துவிட்டுத் தொடர்ந்து பேசினர். சிறிது நேரத்திற்குப்பிறகு பல முஸ்லிம்கள் தங்களுடைய பயங்கரமான ஆயுதங்களை அவர் காலடியில் வைத்தனர். ஏழை முஸ்லிம்கள் அவருடைய பிரார்த்தனைக் கூட்டத்திற்குத் திரள்திரளாக வந்தனர். ஆனல், செல்வந்த முஸ்லிம்கள் ஏழை முஸ்லிம்களைப் பலவிதங்களிலும் ஹிம்சித்தும் பயமுறுத்தியும் வந்தனர். காந்தியுடன் நவகாளி முஸ்லிம்கள் நெருங்கிய தொடர்பு வைத்துக்கொள்ளக்கூடாது என்று கல்கத்தாவிலுள்ள முஸ்லிம் அரசியல்வாதிகள் சொன்னர்கள். ஆனல், நாராயண்பூர் கிராமத்தில் ஒரு முஸ்லிம் அவருக்குத் தங்க இடமும் உண்ண உணவும் கொடுத்தான். காந்தி அவருக்குப் பகிரங்கமாக நன்றி தெரிவித்தார். இம்மாதிரி விருந்தோம்பல் அடிக்கடி நடந்தது. ஜனவரி 22ஆம் தேதி பனியாலா கிராமத்தில் நடந்த பிரார்த்தனைக் கூட்டத்திற்கு 5000 இந்துக்களும் முஸ்லிம்களும் வந்திருந்தனர். முஸ்லிம்கள் கூட்டத்தின் ஓரத்திற்குச் சென்று மேற்கு முகமாய் மெக்காவை நோக்கி வணங்குவதற்கு காந்தி பிரார்த்தனையைச் சிறிது நேரம் நிறுத்தினர். ஒரு ஞாயிற்றுக்கிழமை ராஜ்புராவில் ஒரு விருந்திற்கு அவர் போயிருந்தார். ஜாதி இந்துக்கள், ஹரிஜனங்கள், முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள் அடங்கிய 2000 பேருக்கு இந்து வியாபாரிகளால் அந்த விருந்து அளிக்கப்பட்டது. காந்தி மகிழ்ச்சி அடைந்தார். முஸ்லிம் மதகுரு காந்தியை அவ் வூரிலுள்ள பள்ளிவாசலுக்கு அழைத்துச்சென்றார். அவரைப் பார்த்து ஆறுதலடையவும் தாங்கள் செய்த குற்றங்களை ஒப்புக்கொண்டு மன்னிப்புக் கேட்கவும் ஏராளமான குடியானவர்கள் பிரார்த்தனைக் கூட்டத்திற்கு வந்திருந்தார்கள். 'தங்கள் நன்னடத்தையே தங்களுக்குப் பாதுகாப்பு; போலீஸும் ராணுவமும் அல்ல; குடியரசையும், போலீஸையும், ராணுவத்தையும் நம்பிவாழ்தலும் முற்றும் 'முரண்பட்டது' என்று காந்தி இந்துக்களுக்கு எடுத்துரைத்தார். சாந்திப்பூர் கிராமத்தில் கலகம் நடந்த சமயம் வெளியிடங்களுக்கு ஓடிப்போயிருந்த இந்துக்கள் கிராமத்திற்கு வருவதாகக் கேள்விப்பட்டார். இம்மாதிரி ஓடிப் போனவர்களைத் தங்கள் ஊருக்குத் திரும்பிவரச்செய்து சமாதானமாக வாழச்செய்யவேண்டுமென்பதே அவரது யாத்திரையின் நோக்கமாகும்.

அவர் பேச்சைக் கேட்டவர்கள், 'அவர் ஏன் அவ்வளவு தூரம் வந்தார்? இவ்வளவு கஷ்டமான யாத்திரையே மேற்கொள்வதற்குப் பதிலாக ஏன் ஜின்னுவுடன் ஓர் உடன்பாட்டிற்கு வந்திருக்கக் கூடாது?'

என்று கேட்டனர். மக்கள்தான் தலைவர்களை உண்டாக்குகிறார்கள். மக்கள் தங்களுக்குள் சச்சரவு இல்லாமல் சமாதானமாக வாழவேண்டும். அப்பொழுதுதான் மக்கள் சமாதானப்பிரியர்கள் என்பதை அவர்களுடைய தலைவர்கள் அறிந்து, அதற்கேற்ப நடந்துகொள்வார்கள். அரசியலும் சட்டமும் இந்துக்களையும் முஸ்லிம்களையும் வெவ்வேறாகப் பிரிப்பதற்குமுன் காந்தி இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையே ஒரே விதமான பந்தம் ஏற்படுத்தவேண்டுமென்ற நோக்கத்துடன் நவகாளிக்குச் சென்றார். உண்மையில் அரசியல்வாதிகள் செய்துவந்த நாச வேலைக்கு எதிராகப் பணிபுரிவதில் அவர் ஈடுபட்டிருந்தார். நாடு பிரிக்கப்படுவதற்குமுன் அவரது பணி வெற்றிபெறுமா என்பதே அப்போதைய கேள்வி.

இந்தியாவைத் துண்டுபோடுவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் எல்லாம் தயாராக இருந்தன. 1946ஆம் வருடம் நவம்பர் மாதத்தின் பிற்பகுதியில் பலதேவ சிங், லியாகத் அலி கான் முதலியோரை பிரிட்டிஷ் பிரதம மந்திரி டௌனிங் தெரு 10ஆம் நம்பர் கட்டிடத்திற்கு வரும்படி அழைத்திருந்தார். டிசம்பர் 9ஆம் தேதி புது டில்லியில் கூடப்போகும் அரசியல் நிர்ணயசபையைப்பற்றி ஒரு மகாநாடு அங்கு நடக்க இருந்தது. மூவகை மாகாணங்களில் அவர்கள் பிரதிநிதிகள் மூன்று துணைக் கூட்டாட்சிகளுக்கு உரிய அரசியலை வகுக்க அரசியல் அமைப்புக் கூட்டங்கள் நடத்துவதைக் காங்கிரஸ் நிராகரித்ததால், அகில இந்திய அரசியல் நிர்ணயசபையில் சேரமுடியாதென்று ஜின்னா தெரிவித்திருந்தார். சுதந்திர இந்தியாவில் அரசியல் சட்டத்தை எழுதும்போது முஸ்லிம் லீக் சேர்ந்துகொள்ள மறுத்தால் இங்கிலாந்து எப்படி இந்தியாவிற்குச் சுதந்திரம் கொடுக்கமுடியும்? யாரிடத்தில் அதிகாரத்தை மாற்றுவது? இந்தக் கேள்விகளுக்கு விடைகளைப் பெறவே அவர் இந்தியத் தலைவர்களை இங்கிலாந்துக்கு அழைத்தார்.

லண்டனில் ஜின்னா இருந்தபோது இந்தியா ஓர் இந்துராஜ்யமாகவும் முஸ்லிம்ராஜ்யமாகவும் பிரிக்கப்படும் என்று தான் எதிர்பார்ப்பதைத் தெரிவித்தார். சர்ச்சிலைப்போல் தாமும் இந்தியாவில் உள்நாட்டுக் கலகம் ஏற்படலாம் என்று அஞ்சியதாகவும் அறிவித்தார். பாகிஸ்தான் கொடுக்கப்படாவிட்டால் உள்நாட்டுக் கலகம் ஏற்படும் என்று பயமுறுத்துவதாகத்தான் இதற்குப் பொருள். ஆகவே, டௌனிங் தெரு 10ஆம் நம்பர் கட்டிடத்தில் நடந்துகொண்டிருந்த பேச்சுவார்த்தை முறிந்துவிட்டது.

இந்தியா திரும்பியதும் நேரு நீண்ட பிரயாணம்செய்து நவகாளியிலுள்ள ஸ்ரீராம்பூரில் இருந்த காந்தியைச் சந்தித்து, லண்டன் பேச்சுவார்த்தை முறிந்ததைப்பற்றிக் கூறினார். துணைக் கூட்டாட்சிகளுக்குச்

சட்டங்கள் இயற்றச்செய்வது, இந்தியாவைப் பிரிப்பதற்கு ஒரு தந்திரம் என்று காந்தி கருதினார். ஆகவே, காங்கிரஸ் அத் திட்டத்தில் சேரக் கூடாது என்று வற்புறுத்தினார். எனினும், 1947ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ஆறும் தேதி அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் 151 அங்கத்தினர்களில் 99 பேர் துணைக் கூட்டாட்சித் திட்டத்தில் சேர வேண்டுமென்று தீர்மானித்தனர். 1946ஆம் வருடம் மே மாதம் 16ஆம் தேதி அறிவித்த பிரிட்டிஷ் திட்டத்தை மறுபடியும் உயிர்ப்பிக்கச்செய்த இந்த யோசனை மிகவும் காலதாமதமானது; பயனற்றதுங்கூட. நிலைமை மிகவும் மோசமாகப்போய்விட்டது. 1948ஆம் வருடம் ஜூன் மாதத்திற்குள் ஆங்கிலேயர் இந்தியாவைவிட்டு வெளியேறுவார்கள் என்று 1947ஆம் வருடம் பிப்ரவரி மாதம் 20ஆம் தேதி பிரிட்டிஷ் பார்லிமென்டில் பிரிட்டிஷ் பிரதம மந்திரி அட்லி (Attlee) அறிவித்தார். விக்டோரியா ராணியின் (Queen Victoria) கொள்ளுப்பேரனாகிய மவுண்ட்பேட்டன் பிரபு (Lord (Admiral Louis) Mountbatten) வேவலுக்குப் பதிலாக வைஸ்ராயாக அனுப்பப்படுவார் என்றும் தெரிவித்தார். அவர் இருபதாவது வைஸ்ராய். அவரே இந்தியாவிலிருந்த கடைசி ஆங்கிலேய வைஸ்ராயாவார்.

இந்தியா பிரிவினை செய்யப்படும் என்று அட்லி சொல்லவில்லை. ஆனால், நிகழ்ச்சிகள் விரைவாக நிகழ்ந்துகொண்டிருந்தன. முஸ்லிம்கள், சீக்கியர்கள், இந்துக்கள் நிறைந்த பஞ்சாபில் கலவரங்கள் நடந்துகொண்டிருந்தன. உத்தேச பாகிஸ்தானின் இருதயம்போன்ற பஞ்சாபிலும் அதன் கிழக்குப் பாகமாகிய வங்காளத்திலும் பாகிஸ்தான் பிரச்சினைக்குச் சிறிதும் ஆதரவு கிடையாது. ஏனெனில், அந்தப் பாகங்களில் முஸ்லிம்கள் பெரும்பகுதியினராக இருந்ததால் இந்து ஆதிக்கம் ஏற்படுமென்று அவர்களுக்குச் சிறிதும் அச்சம் ஏற்படவில்லை. மேலும், பஞ்சாப் முஸ்லிம்களும் வங்காள முஸ்லிம்களும் ஒன்று சேர்ந்து ஒரே நாட்டினராக வாழவிரும்புவதற்கு வேண்டிய உணர்ச்சியும் இல்லை. எனினும், செயலில் இறங்கும்படி ஜின்னா விடுத்த வேண்டுகோள், இரு பிரதேசங்களிலுமுள்ள மக்களின் அறிவை மயக்கி, வெறியைக் கிளறிவிட்டது. பஞ்சாபில் இரத்தவெள்ளம் ஓடிக்கொண்டிருந்தது. பஞ்சாபை முஸ்லிம் அதிகமுள்ள பாகம், முஸ்லிம் அல்லாதார் அதிகம் உள்ள பாகம் என்று இரு பாகங்களாகப் பிரிக்கக் காங்கிரஸ் நிர்வாகக்கமிட்டி மார்ச் முதல் வாரத்தில் முடிவு செய்தது. இந்தத் தீர்மானம் அன்றைய அரசியலில் மிக முக்கியமான நிகழ்ச்சியாகும். தொடர்ந்து பஞ்சாபில் கலவரம் நடந்தால் மாகாணம் இரண்டாகப் பிரிக்கப்படும் என்று ஒருபுறம் அந்தத் தீர்மானம் கூறியது. அதே சமயத்தில், இன்று பாகிஸ்தான் அமைந்துள்ளவாறு இந்தியாவை இரண்டாகப் பிரிக்கும் யோசனையைக் காங்கிரஸ் நிர்வாகக் கமிட்டி மறைமுகமாக ஏற்றுக்கொண்டது.

காந்தி நவகாளியில் சிறிதளவு அமைதியை உண்டாக்கினார். ஆனால், பஞ்சாபில் நடந்தவற்றை அறிந்து திடுக்கிட்டுப் பஞ்சாபுக்குச் செல்லப்புறப்பட்டார். வழியில் பீகாரில் நடந்த கலவரத்தால், பீகாரில் சில நாட்கள் தங்கினார். சிறிதும் ஓய்வின்றி பீகார் மாகாணத்தில் சுற்றுப்பிரயாணம் செய்தார். ஏதோ வெறிபிடித்தவர்கள்போல் பீகாரில் உள்ளவர்கள் தாங்கள் மனித குலத்தைச் சேர்ந்தவர்கள் என்பதையே மறந்துவிட்டார்கள் என்று காந்தி மனமுடைந்துபோனார். பஞ்சாபில் உள்ள இந்துக்களை முஸ்லிம்கள் கொன்றதற்குப் பழிவாங்க முயலுதல் கூடாது என்று பீஹார் இந்துக்களை காந்தி எச்சரித்தார். அங்ஙனம் பழிக்குப் பழிவாங்க எண்ணுவது அகில இந்தியாவும் நாசமடைய ஏது வாகும் என்றார். இந்தக் கலவரங்களில் சம்பந்தப்பட்டவர்களைப் போலீஸார் தேடினால், அவர்கள் போலீஸாரிடமாவது, தம்மிடமாவது சரணடையவேண்டுமென்று சொன்னார். நூற்றுக் கணக்கானவர் சரணடைந்தனர். இந்துக்கள் செய்ததைக் கண்டனம் செய்யக்கூடாது என்று காந்தியைக் கண்டித்து ஓர் இந்துவிடமிருந்து அவருக்குத் தந்தி வந்தது. அந்தத் தந்தியை காந்தி பிரார்த்தனைக் கூட்டத்தில் படித்துக்காட்டினார். 'நான் இந்துக்கள் செய்த தவறுகளைக் கண்டிக் காமல், அவர்கள் செய்தது சரி என்று ஏற்றுக்கொண்டேனானால், இந்து என்று சொல்லிக்கொள்வதற்கு எனக்கு உரிமை இல்லை' என்று அந்தத் தந்திக்கு காந்தி பதில்சொன்னார். முஸ்லிம்களைப் பொருளாதாரத் துறையில் புறக்கணிக்கக்கூடாது என்று காந்தி வேண்டிக்கொண்டார். அந்தக் கூட்டத்தில் ஓர் இந்துகூட எழுந்து காந்தி கேட்டுக்கொண்டது போல் முஸ்லிம்களைப் பொருளாதாரத் துறையில் புறக்கணிக்கமாட்டேன் என்று உறுதிகூற முன்வரவில்லை. 'ஆகையால், ஓடிப்போன முஸ்லிம்கள் தங்கள் கிராமத்திற்குத் திரும்பிவரப் பயப்படுவதில் வியப்பொன்றும் இல்லை' என்றார். கலவரம் தொடர்ந்துநடந்தால் தங்கப்பழம்போன்ற சுதந்திரம் பறிபோகும் என்று அவர்களை காந்தி எச்சரித்தார்.

இதுதான் 1947ஆம் ஆண்டு மார்ச் 20ஆம் தேதி இருந்த நிலைமை. அன்று லார்டு மவுன்ட்பேட்டன் அழகான வெள்ளைக் கடற்படை உடை அணிந்து, தம் மனைவி எட்வினாவுடன் புது டில்லியில் வந்து இறங் கினார். அவர்களுடைய அழகும் எல்லோருடனும் ஆடம்பரமின்றிப் பழகும் குணமும் எல்லா வகுப்பினருடைய உள்ளத்தையும் கொள்ளை கொண்டன. பாகிஸ்தான் அமைக்கப்படாவிட்டால் இந்தியாவில் கொடுமையான நிகழ்ச்சிகள் நடைபெறும் என்று மவுன்ட்பேட்டன் பிரபு வந்து சேர்ந்த 24 மணி நேரத்திற்குள் வைஸ்ராய்க்கு ஜின்னா அறிவித்தார். அவர் வந்த நான்கு நாட்களுக்குப்பிறகு ஜின்னா வையும் காந்தியையும் தம்மை வந்து பார்க்கும்படி அழைப்பு அனுப் பினார். அச் சமயம் காந்தி பீஹார் விஷயங்களில் சூழ்ந்திருந்தார். மவுன்ட்பேட்டன் ஒரு விமானம் அனுப்புவதாகச் சொன்னார். ஆனால்,

காந்தி கோடிக் கணக்கான மக்கள் பிரயாணம்செய்யும் வாகனத்தையே விரும்பினார். பாட்னா நிலையத்தில் வண்டி புறப்படுமுன் ஹரிஜன முன்னேற்றத்திற்காக அவர் பணம் வசூலித்தார். மார்ச் 31ஆம் தேதி அவர் லார்டு லூயி மவுன்ட்பேட்டனுடன் $2\frac{1}{2}$ மணி நேரம் பேசினார். அதிலிருந்து ஏப்ரல் 12ஆம் தேதிவரை அவருடன் இன்னும் ஐந்து முறை நீண்ட பேச்சுவார்த்தை நடத்தினார். அதே காலத்தில் ஜின்னாவும் வைஸ்ராயுடன் ஆறு தடவை பேசினார். இந்த இரண்டு வாரங்களும் அதற்கடுத்த இரண்டு மாதங்களும் நவீன கால இந்திய சரித்திரத்தில் மிகவும் முக்கியமான காலம். இந்தியாவைப் பிரிவினை செய்தபிறகு, பிரிவினை சம்பந்தமான விஷயங்களை மவுன்ட்பேட்டன் வெளிப்படுத்தினார்.

29. கூறியது கூறல்

1948ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 6ஆம் தேதி லார்டு மவுன்ட்பேட்டன் லண்டனிலுள்ள ராயல் எம்பையர் சொசைட்டியில் (Royal Empire Society) பேசினார். அப்பொழுது இந்தியாவில் அவர் முன்பு என்ன செய்தார் என்பதை விளக்கிக்கூறினார். இந்தியாவில் காந்தியை ரூஸ்வெல்டு அல்லது சர்ச்சில்போன்ற பெரிய ராஜதந்திரிகளோடு ஒப்பிட்டுப்பேசுவதில்லை. அவர்கள் காந்தியை முகமது நபியோடும் கிறிஸ்துவோடும்தான் ஒப்பிட்டனர். அவர் காந்தியை முதல்முறை சந்தித்தபோது அவருடைய தென் ஆப்பிரிக்கா அனுபவங்களைப்பற்றிக் கூறச்சொன்னார். ஜின்னாவிடம் லண்டனில் அவருடைய ஆரம்ப வாழ்க்கை எப்படி இருந்தது என்று கேட்டார். 'அவர்களை நன்றாகத் தெரிந்துகொள்வதற்காகத்தான், அவர்களோடு கூடிப்பேச விரும்பினேன்' என்றார். 'நான் யாருடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டுமோ, அவர்களை நன்றாகத் தெரிந்துகொண்டேன் என்று எனக்குத் தெரிந்தபிறகு, நான் சமாளிக்கவேண்டிய பிரச்சினையைப் பற்றி அவர்களிடம் பேச ஆரம்பித்தேன்' என்றார்.

1948ஆம் வருடம் ஜுன் மாதத்திற்குள் இந்தியாவிலுள்ள பிரிட்டிஷ் அரசியல் அதிகாரத்தையும் பொறுப்பையும் நீக்கவேண்டும் என்பதே மவுன்ட்பேட்டனுக்குக் கொடுக்கப்பட்ட வேலை. அதற்கேற்ற சட்ட திட்டங்களை இயற்றி, அவற்றை பிரிட்டிஷ் பார்லிமென்டில் விவாதிப்பதற்குப் போதிய காலம் கொடுக்கவேண்டுமாயின், இந்தியப் பிரச்சினையைத் தீர்க்க 1947ஆம் ஆண்டு முடிவதற்குள் ஒரு வழி காண வேண்டும். ஆனால், சம்பவங்கள் மிக விரைவாக நடந்துகொண்டிருந்தன. ஆகையால், மவுன்ட்பேட்டனும் அவருடைய ஆலோசகர்களும் மேற்கண்ட திட்டம் சரியில்லை. இன்னும் துரிதமாகச் செய்ய

வேண்டும் என்று எண்ணினுர்கள். 1946 ஆம் வருடம் ஆகஸ்டு மாதம் 16ஆம் தேதி முஸ்லிம்களை நேரடியாகச் செயலில் இறங்கச்சொன்ன நாளிலிருந்து, இந்திய அரசியல்தொல்லைகள் ஆரம்பித்தன என்று மவுன்ட்பேட்டன் கூறினுர். அதன் பிறகு நவகாளியில் இந்துக்கள் கொலைசெய்யப்பட்டார்கள்; பிறகு பீகாரில் இந்துக்கள் பழிவாங்கினுர்கள். அதன்பிறகு ராவல்பிண்டியில் முஸ்லிம்கள் சீக்கியர்களைக் கொன்ருர்கள். வடமேற்கு எல்லை மாகாணத்தில் ஒரு கலகம் நடந்தது. ‘நான் இந்தியாவிற்குப் போய்ச்சேர்ந்த சமயம் இந்தக் கொலை என்ற பெண்டுலம் வரவர விரிவாக ஆடிக்கொண்டிருந்தது’ என்று அங்குக் கூடியிருந்தவர்களிடம் மவுன்ட்பேட்டன் கூறினுர்.

‘பிரிட்டிஷ் அரசாங்கத்தார் மே மாதம் 16ஆம் தேதி அறிவித்த திட்டத்தின்படி இந்தியாவை ஒற்றுமையுள்ள ஏக இந்தியாவாக அமைப்பதுதான் சரியான வழி என்று எனக்கு அப்பொழுது தோன்றியது. இப்பொழுதும் என் அபிப்பிராயம் அதுவே’ என்று மவுன்ட்பேட்டன் வெளியிட்டார். ஆனுல், இதற்கு இரண்டு கட்சிகளுடைய ஒத்துழைப்பும் தேவை. ஆனுல், ஜின்னு ஆரம்பத்திலிருந்தே, தாம் உயிரோடிருக்கும்வரை ஒன்றுபட்ட ஐக்கிய இந்தியாவை ஏற்றுக்கொள்ளப்போவதில்லை என்று மிகத் தெளிவாகத் தெரிவித்துவிட்டார் என்று மவுன்ட்பேட்டன் கூறினுர். ‘இந்தியாவைப் பிரிக்கவேண்டும்; முஸ்லீம்களுக்குப் பாகிஸ்தான் கொடுக்கவேண்டும்’ என்று ஜின்னு வற்புறுத்தினுர். ‘இந்தியாவைப் பிரிக்க காங்கிரஸ் விரும்பவில்லை. ஆயினும், காங்கிரஸ் தலைவர்கள் உள்நாட்டுப் போரைத் தவிர்ப்பதற்காகப் பிரிவினையை ஏற்கச் சம்மதித்தனர். பாகிஸ்தான் பெறுவதற்காக முஸ்லிம் லீக் கட்டாயம் போரிடும்’ என்று தமக்குத் தோன்றியதாக மவுன்ட்பேட்டன் சொன்னுர். முஸ்லிம் அல்லாதார் பெரும்பாலோராக இருந்த பிரதேசங்களைப் பாகிஸ்தானேடு சேர அனுமதிப்பதற்கு காங்கிரஸ் கட்சியினர் மறுத்தனர். அதாவது முஸ்லிம் அல்லாதார் பாகிஸ்தானேடு சேராமலிருக்க வங்காளத்தையும் பஞ்சாபையும் பிரிக்கவேண்டுமென்றுதான் இதற்குப் பொருள். ராயல் எம்பயர் சொசைட்டியில் பேசும்போது மவுன்ட்பேட்டன் மேலும் சொன்னதாவது: ‘இந்தியாவைப் பிரிக்க காங்கிரஸின் சம்மதத்தைத் தற்காலிகமாகப் பெற்றிருக்கிறேன், என்று ஜின்னுவிடம் சொன்னபோது அவர் மிகவும் மகிழ்ச்சி அடைந்தார். அங்ஙனம் இந்தியாவைப் பிரித்தால், வங்காளம், பஞ்சாப் என்ற இரண்டு மாகாணங்களையும் நியாயப்படி பிரிக்கவேண்டும் என்று சொன்னபோது அவர் மிகவும் திடுக்கிட்டுப் போனுர். இந்த மாகாணங்களைப் பிரிக்கக்கூடாது என்பதற்குப் பலமான காரணங்களைச் சொன்னுர். அம் மாகாணங்களில் உள்ளவர்களுக்கு ஒத்த தேசிய இனப்பண்புகள் உண்டு. அதனுல் அவற்றின் பிரிவினை நாசத்தை விளைவிக்கும் என்று சொன்னுர். அவர் சொன்னதை ஏற்றுக்

கொண்டேன். ஆனால், இந்தியாவைப் பிரிக்காமல் இருப்பதற்கு இதே காரணங்கள் பொருந்தும் என்று நான் சொன்னேன். அதை அவர் விரும்பவில்லை. அதனால் இந்தியாவை ஏன் பிரிக்கவேண்டும் என்று மறுபடியும் சொன்னார். ஆகவே நாங்கள் சொன்னதையே திரும்பத் திரும்பச் சொல்லிக்கொண்டிருந்தோம்.

இறுதியில் அம் மாகாணங்களைப் பிரிக்காமல் ஐக்கிய இந்தியாவாக இருக்கவேண்டும் அல்லது அம் மாகாணங்களையும் பிரித்து இந்தியாவையும் பிரிக்கவேண்டுமென்று ஜின்னாவுக்கு விளங்கிவிட்டது. இறுதியில் அவர் பிரிக்கப்பட்ட பஞ்சாப், வங்காள மாகாணங்களையுடைய பாகிஸ்தானை ஏற்றுக்கொண்டார். ஆகவே 400,000,000 மக்களையுடைய இந்தியாவைக் கூறுபோடுவதெனத் தீர்மானம் செய்யப்பட்டது. காந்தி அதற்குச் சம்மதிக்கவே இல்லை. உண்மையில் இந்தத் தீர்மானத்தை மாற்றிவிடலாமென்று அவர் நம்பினார்.

30. இரு நாடுகளின் தோற்றம்

லார்டு மவுன்ட்பேட்டன் மகாத்மாவோடு ஆறுதடவை பேச்சு வார்த்தை நடத்திய சந்தர்ப்பங்களில் பின்வருமாறு கூறினார். 'திரு. காந்தி! இன்று காங்கிரஸ் என் பக்கம் இருக்கிறது' என்று மவுன்ட்பேட்டன் கூறினார். 'ஆனால், இந்தியா இன்று என் பக்கம் இருக்கிறது' என்று காந்தி பதில்அளித்தார். இதை காந்தி பேராசிரியர் நிர்மல் குமார் போஸிடம் கூறியபோது, மவுன்ட் பேட்டனின் தற்புகழ்ச்சி 'அகம்பாவம்' என்று குறிப்பிட்டார். ஆனால், மவுன்ட்பேட்டன் கூறியது உண்மையாகிவிட்டது. இந்தியப் பாகப் பிரிவினைக்கு அதுதான் மூலகாரணமாக இருந்தது. காந்தி சொன்னது வெறும் நம்பிக்கையே. இந்தியா அப்பொழுது காந்தியை ஆதரித்து இருந்தால் அவர் காங்கிரஸின்போக்கை மாற்றியிருப்பார்.

நேரு மந்திரிசபையில், காங்கிரஸ் மந்திரிகள் சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்துக்கொண்டிருந்தனர். ஆனால், முஸ்லிம் லீகைச் சேர்ந்தவர்கள் வாய்ப்புக் கிடைக்கும்போதெல்லாம் அரசாங்கத் துக்கு இடையூறு செய்துவந்தார்கள். இங்ஙனம் அரசாங்க வேலையை லீக் கட்சியினர் எப்பொழுதும் நேர்முகமாகத் தடங்கல்செய்து வருவதைக் கண்டு காங்கிரஸ் அங்கத்தினர்களுக்குச் சலிப்பு ஏற்பட்டது. 'வேண்டுமானால் பாகிஸ்தானை எடுத்துக்கொள்ளுங்கள்' என்று சொல்லக்கூடிய ஒரு நிலைக்கு வந்துவிட்டனர். இந்த மனப் பான்மையைத்தான் 1947ஆம் ஆண்டு ஏப்ரல் 27ஆம் தேதி ஜவஹர்லால் நேரு பாகிஸ்தானோடு சேரவிரும்பாத பாகங்களை விட்டுவிட்டு முஸ்லிம் லீக் பாகிஸ்தானைப் பெற்றுக்கொள்ளட்டும் என்று சொன்னார்.

இந்தியப் பிரிவினையால் ஏற்படும் பெருந்தீமைகளை முன்பே அறியாததால்தான் இன்றைக்கு இருக்கும் பாகிஸ்தான் பிரிவினைக்கு மனமார விருப்பம் இல்லாமல் காங்கிரஸ் ஏற்றுக்கொண்டது. 1949ம் ஆண்டு அக்டோபர் மாதம் 16ம் தேதி நியூயார்க்கில் பேசும்போது, 'நாட்டின் பிரிவினையால் விளைந்த பெருந்தீமைகளை நான் முன் கூட்டியே அறிந்திருந்தால், பாகிஸ்தான் ஏற்படுத்தக்கூடாது என்று இறுதிவரை போராடியிருப்பேன்' என்று நேரு சொன்னார். பிரிவினையினால் பல லட்சம் மக்கள் இறந்தனர். 1½ கோடி மக்கள் தங்கள் இருப்பிடங்களைவிட்டு ஓடிவந்ததால் அகதிகளாயினர். அதனால் காஷ்மீரில் போர்மூண்டது. இந்தியாவிற்குப் பொருளாதார இழப்பும் ஏற்பட்டது. சமயச் சார்புள்ள தேசிய மனக்கசப்பு உண்டா கியது. அதனால் பெருத்த இழப்புகள் ஏற்பட்டதுமன்றி, மேலும் துன்பங்களை விளைவிக்கக்கூடிய சக்திகளும் தோன்றின. இந்தத் தீய விளைவுகளை காந்தி முன்கூட்டியே உணர்ந்தாரா இல்லையா என்பதை நாம் இங்கு ஆராயவேண்டியதில்லை. பிரிவினையினால் ஏற்படும் விளைவு களைமாத்திரம் அறிந்து அதை வேண்டாம் என்று காந்தி சொல்ல வில்லை. பிரிவினையே தீயது என்று அவர் உணர்ந்தார். அதனால் பிரிவினைக் கெதிராகப் போராட அவருக்கு ஊக்கம் ஏற்பட்டது. அவருடைய ஆசிரமவாசிகளில் ஒருவர் சொன்னதுபோல, மற்ற இளைய காங்கிரஸ் தலைவர்கள் பொறுமையை இழந்தனர். வருங்காலத்தினால் இதனால் விளையக்கூடிய நன்மை தீமைகளைச் சீர்தூக்கிப்பார்க்கத் தவறிவிட்டனர்.

ஐக்கிய சுதந்திர இந்தியா வேண்டுமென்று பிரிவினையை எதிர்த் திருந்தால் சுயராஜ்யம் கிடைப்பது கால தாமதமாகியிருக்கும். காங்கிரஸ் கட்சியிலுள்ள தலைவர்கள் சிலர் அதிகாரத்தில் இருந்தவர்கள்; சிலர் உத்தியோகத்தில் இருந்தவர்கள்; ஆகையால், மறுபடியும் போராட்டத் தில் இறங்குவதற்கு அவர்களுக்கு விருப்பம் இல்லை; அப்படியும் போராட்டத்தில் இறங்கினால் சிறைக்குத்தான் போகவேண்டியிருக்கும். ஆகையால், மறுபடியும் போராட்டத்தில் இறங்குவதற்கு அவர்களுக்கு விருப்பம் இல்லை. சிறைக்குப் போவதென்றால் காந்திக்கு ஓய்வும் வெற்றியுமாகும். மற்றவர்களுக்கு அது துன்பத்தைத்தரும். 1934ஆம் ஆண்டு ஆகஸ்டு 13ஆம் தேதி காந்திக்கு நேரு எழுதும்போது, 'முந்திய சிறைவாசத்தைவிட இந்த முறை சிறைவாசம் எனக்கு மிகவும் சிர மத்தை அளித்தது. 1942ஆம் ஆண்டு 9ஆம் தேதியிலிருந்து 1945ஆம் ஆண்டு ஜூலை 14ஆம் தேதிவரை மூன்று வருடங்கள் நேரு அனுபவித்த சிறைத்தண்டனை மறுபடியும் அவரைச் சிறைக்குப்போகத் தூண்டி யிருக்காது. அன்றியும் தொடர்ந்து போராடுவது நல்லதல்ல என்றும் அவருக்குத் தோன்றியது. உள்நாட்டுக் கலகம் ஏற்படும் என்று ஜின்னா பயமுறுத்தினதற்கேற்ப அங்கங்கே இந்தியாவின் பல பாகங்

களில் கலகங்களும் குழப்பங்களும் உண்டாயின. அன்றியும், இரண்டாவது உலக யுத்தம் முடிந்த அவ்வளவு சீக்கிரம் இந்திய முஸ்லிம்களோடு போராடுவதற்கு ஆங்கிலேயர்களும் விரும்பவில்லை. நாட்டைப் பிரிவினைசெய்வது தவிர்க்கமுடியாதது என்றும் சுயராஜ்யம் நாட்டிற்கு உகந்தது என்றும் மவுண்ட்பேட்டன் கருதினர். அவர் காங்கிரஸுக்குப் பதவியளிப்பதாகச் சொன்னர். ஆனல், காந்தி அவர்கள் பிரிவினைக்கு எதிராகப் போராடிச், சிறைக்குப் போகவேண்டும் என்று சொன்னர். இந்தச் சூழ்நிலையில், 'இந்தியர் ஒரே தேசத்தினர். அவர்களைப் பிரிப்பது பாவம்' என்று 'கூறுவதைவிட காந்தி வேறென்றும் செய்யமுடியவில்லை. அந்த நிலையை காந்தி நன்கு உணர்ந்திருந்தார். 'இந்தியா என் பக்கம் இருக்கிறது' என்று காந்தி மவுன்ட்பேட்டனிடம் சொன்னது அவருக்கு இந்தியாவின் மேலிருந்த நம்பிக்கையைக் காட்டியது. அவர் சொன்னது சரி என்று பிறர் நம்பவேண்டுமென்று அவர் எதிர்பார்த்திருக்கமாட்டார். அவர் சொன்னது சரி என்பதை அவர்தான் நிரூபிக்கவேண்டும் என்று அவர் நன்கு உணர்ந்திருந்தார்.

ஆகவே, வைஸ்ராயுடன் பேச்சுவார்த்தைகள் முடிந்ததும், காந்தி உடனே பீகாருக்குத் திரும்பிவிட்டார். அம் மாகாணம் ஏப்ரலில் அதிக வெப்பமாயிருக்கும். கிராமங்களில் ,வெகுதூரம் பிரயாணம்செய்த அலுப்பை அவரால் தாங்கமுடியவில்லை. ஆனல், அவர் தம் உடலைப் பற்றிச் சிறிதும் கவலைப்படவில்லை. பீகாரில் அமைதி ஏற்பட்டால் கல்கத்தாவிலும் மற்ற பாகங்களிலுமுள்ள தொல்லைகள் நீங்கிவிடும். காந்தியின் சிறுவயதில் அவரது தாயார், 'அணுவின் அமைப்பு உலக அமைப்பைப் போன்றது' என்று கூறியதாக காந்தி சொன்னர். 'ஒவ்வொருவரும் தன்னைச் சுற்றியுள்ளதைச் சரியாகக் கவனித்துக்கொண்டால், இந்த உலகம் வாழ்வதற்கு மிகவும் நன்ருகயிருக்கும்' என்ருர். அவர் டில்லிக்குச் சென்றிருந்தபோது ஜெனரல் ஷா நவாஸ் (General Shah Nawaz) என்ற முஸ்லிமை பீகாரில் தங்கியிருக்கச் சொல்லி இருந்தார். காந்தி பீகாருக்குத் திரும்பிவந்ததும் ஷா நவாஸ் முஸ்லிம்கள் தங்கள் கிராமங்களுக்குத் திரும்பிக்கொண்டிருப்பதாகச் சொன்னர். காந்தி மகிழ்ச்சி அடைந்தார்.

இந்தச் சமயத்தில் காந்தியை டில்லிக்கு வரும்படி நேரு தந்தி கொடுத்தார். சரித்திர முக்கியமான ஒரு தீர்மானத்தைப்பற்றிச் சிந்திப்பதற்காகக் காங்கிரஸ் நிர்வாகக்கமிட்டி கூடியது. பாகிஸ்தானை ஏற்றுக் கொள்ளலாமா? வேண்டாமா? என்பதைப்பற்றி அக் குழு ஆராய்ந்தது. அதற்கு காந்தி தூசிபடிந்த ரயிலில் மூச்சுதிணறும் வெயிலில் 500 மைல் பிரயாணம்செய்தார்.

பொறுக்கமுடியாத ஒரு நிலையிலிருந்து தப்புவதற்கு ஒரே வழி பாகிஸ்தானை ஏற்றுக்கொள்வதுதான் என்று நேரு சொன்னர்.

வல்லபாய் பட்டேல் தயங்கினூர். உள்நாட்டுப்போர் நடக்கும் என்று ஜின்னுவின் மிரட்டலுக்கு எதிராகப் படைபலத்தை உபயோகித்துச் சோதித்துப் பார்த்துவிடவேண்டும் என்று அவர் விரும்பினூர். இதற்கிடையில் அங்கங்கே நடந்த கலவரங்களைத் தயை தாட்சண்யமின்றிப் படைபலத்தை உபயோகித்து அடக்கினூர். ஆனுல், இறுதியில் அவரும் நாட்டுப் பிரிவினைக்கு இணங்கிவிட்டார். இஃது நடந்து 2½ ஆண்டுகளுக்குப் பிறகு, 'எல்லாவற்றையும் இழந்துவிடுவோம் என்ற இறுதிக் கட்டத்திற்கு வந்ததற்குப்பிறகு நாட்டின் பிரிவினையை நான் ஏற்றுக் கொண்டேன்' என்று அவர் சொன்னூர். பிரிட்டிஷ் திட்டத்தை ஏற்றுக்கொள்ளாவிட்டால், பிரிட்டிஷ் அரசாங்கம் இந்தியாவில் தொடர்ந்து ஆட்சிசெலுத்தும் என்று அப்பொழுது தோன்றியது.

காங்கிரஸ் தீர்மானத்தில் தமது ஏமாற்றத்தை காந்தி பகிரங்கமாக வெளியிட்டார். மே மாதம் 7ஆம் தேதி டில்லி ஹரிஜனச்சேரியில் நடந்த ஒரு பிரார்த்தனைக் கூட்டத்தில் அவர் கூறினூர். 'காங்கிரஸ் பாகிஸ்தான் திட்டத்தை ஏற்றுக்கொண்டு, பஞ்சாபும்' வங்காளமும் பிரிக்கப்படவேண்டும் என்று கோருகிறது. நான் எப்பொழுதும்போல் இப்பொழுதும் இந்தியாவைப் பிரிக்கக்கூடாது என்று எதிர்க்கிறேன். ஆனுல், நான் என்ன செய்யமுடியும்? இம்மாதிரித் திட்டத்திலிருந்து விலகிக்கொள்வதுதான் நான் செய்யக்கூடியது. கடவுளைத்தவிர, வேறு ஒருவரும் பிரிவினைத் திட்டத்தை ஏற்றுக்கொள்ளும்படி என்னைக் கட்டாயப்படுத்தமுடியாது.' கடவுள் இதில் தலையிடவில்லை என்பது தெளிவு.

முக்கியமான விஷயத்தைப்பற்றிப் பேச காந்தி மவுன்பேட்டனிடம் சென்றூர். இந்தியாவில் குழப்பமும் அராஜகமும் ஏற்படும்போல் தோன்றினூலும், ஆங்கிலேயர் தங்கள் சேனைகளுடன் இந்தியாவைவிட்டு வெளியேறவேண்டும் என்று காந்தி பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு யோசனை கூறினூர். மேல்வாரியாகப் பார்த்தால் இது முட்டாள்தனமாகத் தெரியலாம். ஆனுல், அதில் வெகு நுட்பமான உண்மையைக் காணலாம். பிரிட்டிஷ்காரர் இந்தியாவில் ஓர் அரசாங்கமும் இல்லாமல் அதைக் கைவிட்டுப்போகமாட்டார்களென்பது வெளிப்படை. இந்திய அரசாங்கம் காங்கிரஸ் அரசாங்கமாகத்தானிருக்கும் என்று மவுன்ட்பேட்டனிடம் சொன்னூர். இங்கிலாந்து அதற்கு மறுத்தால் காங்கிரஸ் தற்காலிகமாகவுள்ள மந்திரிசபையிலிருந்து விலகிக்கொள்ளும். சிறுபான்மையினராகிய முஸ்லிம் லீக் கட்சியினர் காங்கிரஸ் கட்சி எதிர்ப்பைச் சமாளித்து இந்தியாவைச் சுயஆட்சி செய்யமுடியாது. அப்பொழுது இந்தியாவைவிட்டு வெளியேற வேண்டும் என்று பிரிட்டிஷ்காரர் விரும்பினூலும், இந்தியாவில் சரியான அரசாங்கம் ஏற்படும் வரை அவர்கள் இந்தியாவில் இருக்கும்படி நேரிடும்.

சிறுபான்மையோருக்காகப் பெரும்பான்மையோரை பிரிட்டன் பகைத்துக்கொள்ள முடியாது என்று காந்தி உணர்ந்தார். ஆகையால், காங்கிரஸ் பாகிஸ்தானை அங்கீகரிக்காவிட்டால் இங்கிலாந்து பாகிஸ் தானை உருவாக்காது. இங்கிலாந்து பாகிஸ்தானை உருவாக்காவிட்டால் பாகிஸ்தான் ஏற்படமுடியாது என்று அவர் நம்பினர்.

இந்த ஏற்பாடு செயற்படவேண்டுமானல் பிரிட்டிஷ் சர்க்கார் காங்கிரஸ் ஆதரவுடன் ஜின்னுவின் பலாத்காரத்தை எதிர்க்கநேரிடும். அதை பிரிட்டிஷ் சர்க்கார் செய்ய விரும்பவில்லை. அல்லது பிரிட்டிஷ் சர்க்கார் இந்தியாவைவிட்டு வெளியேறினல் காங்கிரஸ்மாத்திரம் முஸ்லிம் லீகை எதிர்க்க நேரிடும். பிரிட்டிஷ் சர்க்கார் அதையும் விரும்பவில்லை.

இந்தக் கசப்பான உண்மைகளைப் புரிந்துகொண்ட காந்தி கல்கத் தாவுக்கு விரைந்தார். வங்காளம் பிரிவினைக்குச் சம்மதிக்காவிட்டால் பாகிஸ்தான் ஏற்படமுடியாது. இந்த அறுவை அதன் தசைகளை அதன் எலும்புகளிலிருந்தும், இருதயத்தை மூளையிலிருந்தும், மேற்குப் பகுதியை கிழக்குப் பகுதியிலிருந்தும் பிரிக்கும். 'மேலே உள்ளவர்கள் தவறு செய்யும்போது, கீழே உள்ள நல்ல மக்களாவது அதை எதிர்க்கக்கூடாதா?' என்று ஒரு கூட்டத்தில் காந்தி கேட்டார். இது அவருடைய வெறும் பகற்கனவு. வங்காளத்திற்கு ஒரே மொழி, ஒரே பாண்பாடு இருக்கிறது. இந்த நூற்றுண்டின் ஆரம்பத்தில் பிரிட் டிஷ்காரர் வங்காளத்தைப் பிரித்தபோது அதை மும்மரமாக எதிர்த்த வரலாறும் உள்ளது. அப்பேர்ப்பட்ட வங்காளம் ஜின்னு கேட்கும் பிரிவினையை இப்பொழுது எதிர்க்காதா?

கல்கத்தாவில் ஆறு நாட்கள் இடைவிடாது வேலைசெய்தபின், காந்தி பீகாருக்குச் சென்றுர். கொளுத்தும் வெயிலையும் பொருட்படுத் தாமல் அவர் பல கிராமங்களுக்குச் சென்றுர். அதே பல்லவியைத்தான் காந்தி பாடினர். 'இந்துக்கள் சகோதர அன்பைக் காட்டவேண்டும். அதனுல் பீகார் நன்மை அடையும்; இந்தியா நன்மை அடையும்; உலகமும் நன்மை அடையும்' என்றுர்.

'காந்தி மெழுகுவர்த்தியின் இரு பாகங்களையும் ஒரே சமயத்தில் எரிக்கிறுர்' என்று டாக்டர் சுசீலா நய்யர் சொன்னர். 'அவர் பிரி வினையைத் தடுக்கப்போராடினர். அந்த முயற்சி அவரைக் கொன் றுலும் அவர் அதைப் பொருட்படுத்தமாட்டார்.' 'இன்று உருவாகி வரும் இந்தியாவில் எனக்கு இடமில்லை. 125 வயதுவரை வாழ வேண்டும் என்கிற நம்பிக்கையை விட்டுவிட்டேன். நான் இன்னும் ஒன்று, இரண்டு வருடங்கள் வரை உயிரோடிருக்கலாம்' என்று உணர்ச்சி ததும்பும் குரலில் காந்தி கூறினர்.

இதற்கிடையில் பிரிட்டிஷ் அரசாங்கம் ஒரு தீர்மானத்திற்கு வந்து விட்டது. பஞ்சாபும் வங்காளமும் கூறுபோடுவதற்குச் சம்மதித்தால், பிரிட்டிஷ் அரசாங்கமும் பிரிவினையை ஏற்றுக்கொள்ளும். புது டில்லியில் வானொலிப் 'பேச்சில் மவுன்ட்பேட்டன், 'இந்தியப் பிரிவினையை நான் எப்படி ஆட்சேபிக்கிறேனோ, அதேபோல் மாகாணங்களின் பிரிவினைகளையும் ஆட்சேபிக்கிறேன். ஐக்கிய இந்தியாவை ஸ்தாபிக்க இந்த இரண்டு சமூகத்தாருக்கும் இடையே நடக்கும் பேச்சுவார்த்தைகளையும் நான் தடை செய்யவில்லை' என்று கூறினார்.

லண்டனிலிருந்து ஹெர்பட் எல். மேத்யூஸ் (Herbert L. Mathews) 'நியூயார்க் டைம்ஸ்' பத்திரிகைக்கு 'திரு. காந்தி உண்மையிலேயே பெருந்தொல்லை கொடுப்பார். அவர் சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கத் தீர்மானித்துவிட்டால், அது இந்தத் திட்டத்தைப் பாழாக்கிவிடும், என்று தந்தி கொடுத்திருந்தார்.

1947ஆம் ஆண்டு ஜூன் 15ஆம் தேதி அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி இந்தத் திட்டத்தை ஏற்றுக்கொண்டது. 153 பேர் அதற்குச் சாதகமாகவும் 25 பேர் அதற்குப் பாதகமாகவும் ஓட்டுச்செய்தனர். சிலர் ஓட்டளிக்கவில்லை. காங்கிரஸ் காந்தியைக் கைவிட்டது. காங்கிரஸ் தலைவர் J. B. கிருபளானி ஒரு பேச்சில் அதன் காரணத்தை விளக்கிக்கூறினார். 'பெண்களும் குழந்தைகளும் சேர்ந்து 107 பேர் தங்கள் மானத்தைக் காப்பாற்றுவதற்காக ஒரு கிணற்றில் விழுந்து கிடந்ததை நானே பார்த்திருக்கிறேன். ஒரு கோவிலில் அதே காரணத்திற்காக 50 பெண்களை அவர்கள் கணவரே கொன்றனர். இந்தக் கொடூரமான நிகழ்ச்சிகள் எனது கருத்துகளை உருவாக்கின. நாங்கள் பயத்தினால் இத் தீர்மானத்திற்கு வந்ததாகச் சில அங்கத்தினர் குற்றஞ் சாட்டுகின்றனர். நான் இந்தக் குற்றச்சாட்டை ஒப்புக்கொள்கிறேன். ஆனால், அவர்கள் கூறும் அந்தப் பொருளில் அல்ல. இழக்கப்பட்ட உயிர்களுக்காகவோ, அநாதைகளின் குரலுக்காகவோ, எரிக்கப்பட்ட வீடுகளுக்காகவோ நாங்கள் பயப்படவில்லை. உண்மையான பயம் என்னவென்றால், நாம் பழிக்குப்பழி வாங்கிக்கொண்டு குற்றங்களையும் கேவலமான செயல்களையும் செய்துகொண்டேபோனால் இறுதியில் நரமாமிசம் தின்னும் நிலைக்கோ அல்லது அதைவிட மோசமான நிலைக்கோ வந்து சேருவோம் என்பதேயாகும் ...'

'சென்ற 30 வருடங்களாக நான் காந்தி அடிகளோடு இருந்து வருகிறேன். நான் சம்பரானில் அவரோடு சேர்ந்தேன். நான் அவரிடம் கொண்ட ஈடுபாட்டில் ஒருசிறிதும் மாறியதில்லை. கொள்கையில் எனக்கு அவரிடம் கருத்து வேறுபாடிருந்தால்கூடக் காரணங்கள் காட்டும் என் கருத்துகளைவிட உள்ளுணர்ச்சி நிறைந்த அவரது கருத்துகளே மேல் என்று நான் நம்பி வந்திருக்கிறேன். இப்பொழுதும்

அச்சமற்ற அவருடைய கருத்துகள் சரி; என்னுடையவை சரி இல்லை என்றுதான் உணருகிறேன்.' காந்தியின் எதிர்ப்பாளர்களில் பெரும் பாலாரும் அவ்வாறே உணர்ந்தனர்.

'இப்படி இருந்தும் நான் ஏன் அவரோடு சேரவில்லை' என்று கிருபளானி கேட்டார். காந்தி செய்வது சரிஎன்று தெரியும்போது அவர் காந்தியை ஏன் பின்பற்றக்கூடாது? 'இந்தப் பிரச்சினையைத் தீர்க்கப் பெருவாரியான அடிப்படையில் அவர் ஒரு வழி கண்டு பிடிக்காததுதான் காரணம் என்றார். சமதானத்திற்காகவும் சகோ தரத்துவத்திற்காகவும் அவர் விடுத்த வேண்டுகோளை மக்கள் ஏற்றுக் கொள்ளவில்லை.

இதே காரணத்தினால்தான் காந்தி உண்ணாவிரதம் இருக்கவில்லை. அங்ஙனம் சாகும்வரை காந்தி உண்ணாவிரதம் இருந்திருந்தால், பிரி வினைத் திட்டத்தைக் காங்கிரஸ் ஏற்றுக்கொண்டிருக்காது. பின் ஏன் காந்தி அவ்வாறு செய்யவில்லை? இந்தியாவை ஆளுவதற்கு அவர் உருவாக்கிய காங்கிரஸ் முறிந்துபோயிருக்கும். மக்கள் அவரை ஆதரித் திருந்தால் காந்தி உண்ணாவிரதம் இருந்திருப்பார். 'முஸ்லிம்கள் அல்லாதார் என்னை ஆதரித்தால் பிரிவினையைத்தடுக்க வழிகூறி யிருப்பேன்' என்றார் காந்தி. முஸ்லிம்கள் அல்லாதார் அவரைக் கைவிட்டனர். 'இது விஷயமாக எனது நெருங்கிய நண்பர்கள் செய்து வருவதை நான் சிறிதும் ஏற்றுக்கொள்ளவில்லை' என்று காந்தி கூறினார்.

'முப்பத்திரண்டு வருடங்களாகச் செய்துவந்த நற்பணி புகழற்ற ஒரு முடிவிற்கு வந்தது' என்று காந்தி சொன்னார். தமது தோல்வியை இவ்வாறு வெளிப்படையாக ஒப்புக்கொள்ளுவதற்கு உள்ளஉரம் வேண்டும். வாழ்நாள் முழுவதும் பாடுபட்ட உழைப்பு வீணானபிறகும், தொடர்ந்து அதே லட்சியத்துக்காக உழைக்க அதைவிட மனவலிமை வேண்டும். இப்பொழுது காந்தி, கீர்த்தி என்னும் குன்றின்மேல் நின்று காட்சியளித்தார்.

31. காந்தி அவருடைய தோட்டத்தில் களைபறித்தல்

மகாத்மா காந்தி இந்தியப் பிரிவினையைத் தடுப்பதில் தோல்வி அடைந்தார். ஏனென்றால், தேசிய ஒற்றுமையைவிடச் சமய ஒற்றுமைகள் பலம் பொருந்தியவையாயிருந்தன. இந்துக்களையும் முஸ்லிம்களையும் சேர்க்கும் கொள்கைகளைவிட அவர்களைப் பிரிக்கும் கொள்கைகளையே மக்கள் ஏற்றுக்கொண்டனர். மதம் என்கிற கோடரி

தேசியம் என்கிற உணர்ச்சியை வெட்டித்துண்டாக்க முடியாதபடி தேசியம் உருவாகவில்லை. ஓரின உணர்ச்சி நிறைந்த நாடாவதற்கு முன் ஆங்கிலேயர் இந்தியருக்குத் தேசிய சுதந்திரம் வழங்கினர். ஆகையால், இந்தியா இரண்டு நாடுகளாகியது. இவற்றில் பாகிஸ்தான் சமய உணர்ச்சி நிறைந்த நாடு; தேசிய உணர்ச்சிபெற முயன்று கொண்டிருந்தது. இந்தியா பெரிதும் தேசிய உணர்ச்சியுள்ள நாடு என்று சொல்லலாம். ஆனால், மாகாண வேறுபாடுகளும், மொழிப்பூசல் களும், மதவெறிகளும் நிறைந்த நாடு. இன்னும் தேசிய உணர்வு நன்கு வளர்ச்சியடையாத ஒரு நாட்டின் உண்மைத் தந்தை காந்தி யாவார்.

எல்லா மனிதரையும்போல், எந்த லட்சியத்தை அடைய காந்தி விரும்பினாரோ, அதுவே அவரது பெருமையை அளக்கும் கோலாக அமைகிறது. பெரியவர்கள் நிறைந்து, பெரியவர்களால் ஆட்சிசெய்யப் பட்டு, எவர்க்கும் அஞ்சாத சுதந்திர இந்தியாதான் காந்தி வேண்டியது. அதைவிடக் குறைந்தது எதையும் அவர் ஏற்றுக்கொள்ளமாட்டார். அவரது வாழ்நாள் இறுதியில் எதை அவர் விரும்பவில்லையோ, அதுவே அவரது கீர்த்தியை அளக்கும் ஒரு கோலாகும். பிரிட்டிஷ்காரரை விரட்டிவிட்டு இந்தியாவில் நடத்தப்படும் ஓர் அரசாங்கத்தை ஏற்படுத்துவது அவரது லட்சியமன்று. மதவெறியினாலும், பதவி மோகத்தினாலும் இரத்தவெள்ளத்தில் இரண்டு சுதந்திர நாடுகள் ஏற்பட்டது அவருக்கு மகிழ்ச்சியை அளிக்கவில்லை. அதை வேண்டா மென்று சொல்வதற்கு அவருக்குத் தைரியமும், மனோபலமும் இருந்தன. அதுதான் அவரது பெருமை. 1947ஆம் வருடம் ஆகஸ்டு 15ஆம் தேதி இந்தியா சுதந்திரம் அடைந்தது. ஆனால், அந்த விழாவில் கலந்து கொள்ளமுடியாது என்று காந்தி அறிவித்துவிட்டார். கல்கத்தாவில் சமயக் கலவரங்களுக்கு எதிராகப் போராடிக்கொண்டிருந்தார். தேசிய சுதந்திர விழாவில் கலந்துகொள்வதற்கு அவர் அழைக்கப்பட்டார். ஆனால், அவர் வருவதற்கு மறுத்துவிட்டார். எந்த விதமான வாழ்த்துச் செய்தியும் அனுப்பவில்லை. அன்று முழுவதும் உண்ணாவிரதம் இருந்து, பிரார்த்தனை செய்துகொண்டிருந்தார். மறுநாள் ராஜ்குமாரி அமிர்த கௌரிக்குக் கடிதம் எழுதும்போது மனத்தில் நிம்மதி இல்லை என்று குறிப்பிட்டிருந்தார். இந்தச் சுதந்திர விழாவின்போது அவரது மனம் துன்பம் நிறைந்த பெருஞ்சுமையைத் தாங்கி இருந்தது. 'என்னிடத்தில் ஏதேனும் தவறு இருக்கிறதா அல்லது உண்மையிலேயே நிகழ்ச்சிகள் தவறாக நடந்துகொண்டிருக்கின்றனவா?' என்று காந்தி கேட்டார். 'என் மனஅமைதி என்னைவிட்டு நெடுந்தொலைவிற்கு விலகிச்சென்று விட்டது'. கீதை கூறும் பற்றற்றநிலை அவரிடத்தில் இல்லை. இருந்தா லும், நம்பிக்கை அவரை விட்டுச்செல்லவில்லை. 'நியாயமான காரியம் ஆதரவற்றுப்போகாது' என்று காந்தி சொன்னார்.

ஆகஸ்டு 29ஆம் தேதி அவர் ராஜ்குமாரிக்கு இன்னொரு கடிதம் எழுதினார். 'மனித இனம் கடலைப்போன்றது. கடலிலுள்ள சிறு துளி நீர் அசுத்தமாகிவிட்டால், கடல் முழுவதும் அசுத்தமாகிவிடாது' என்று அக் கடிதத்தில் அவர் குறிப்பிட்டிருந்தார். அவர் மனித இனத் திடத்திலும் தம்மிடத்திலும் நம்பிக்கை வைத்திருந்தார். கல்கத்தா பிரார்த்தனைக் கூட்டத்தில் அவர் பேசும்போது, 'நான் தோல்வியே அறியாத பிறவிப் போர்வீரன். எனக்குத் தோல்வி என்றால் என்ன என்று தெரியாது. பிரிவினை ஓர் உண்மையாகிவிட்டது. ஆனால், நேர்மையான குணத்தினால் ஒரு தீமையின் கொடுமையைக் குறைக்க முடியும். முடிவில் அத் தீமையிலிருந்து நன்மையும் அடையலாம்' என்று சொன்னார்.

அவர் தம்மையும் சோதித்துப்பார்த்துக்கொண்டார். 'நான் இன்று இருளில் வழிதேடிக்கொண்டிருக்கிறேன்' என்றார். அவர் தம்மைத்தாமே பல கேள்விகள் கேட்டுக்கொண்டார். 'மனநிம்மதி அடைந்து என்னை நானே அறிந்துகொள்ளுமாறு, நானும் உன்னைப் போல் பிரார்த்திக்கிறேன். கடவுளே! எங்களை இருளிலிருந்து வெளிச்சத்துக்குவர வழிகாட்டுக!' என்று குர்ஷித் நவரோஜிக்கு எழுதினார். அப்பொழுது அவருடைய 78ஆவது பிறந்தநாள் அணுகிக் கொண்டிருந்தது. அவர் எவற்றிற்காக உழைத்தாரோ அவை அனைத் தும் பாழாகிவிட்டன. எனினும், அவர் வருங்காலம் எப்படி இருக்க வேண்டும் என்பதற்குத் திட்டமிட்டுக்கொண்டிருந்தார்.

அஸிஸி என்ற இடத்தில் பிறந்த ஃபிரான்ஸிஸ் மகான் (St. Francis of Assisi) தம்முடைய தோட்டத்தில் களைபறித்துக்கொண் டிருந்தார். அப்பொழுது ஒருவர் அவரிடம் வந்து அன்று சூரியன் மறைவதற்குள் அவர் இறந்துபோவதாக அறிந்தால் என்ன செய்வார் என்று கேட்டார். 'நான் என் தோட்டத்தில் களைபறித்து முடித்து விடுவேன்' என்று அவர் பதிலளித்தார். அதேபோல் காந்தியும் அவர் தோட்டத்தில் தொடர்ந்து களைபறித்துவந்தார்.

32. வெறுப்புக்கிடையே அன்பு

1947ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் வங்காளத்தில் ஏற்பட்ட மதவெறி எனும் புயல் காந்தி அங்கிருந்ததால் ஓய்ந்தது. பத்திரிகைகள் அரை வேட்டி உடுத்த அந்த மந்திரவாதியாகிய காந்தியைப் புகழ்ந்தன. ஆனால், வங்காளப்பிரிவினை முஸ்லிம்களுக்கும் இந்துக்களுக்கும் தீமையை விளைவித்தது. அதனால் அவர்கள் மறுபடியும் வெறிபிடித்தவர் கள்போல் நடக்க ஆரம்பித்தனர். பிரிவினையால் தீர்க்கப்பட்ட பிரச்சினை களைவிட, அதனால் புதிதாக ஏற்பட்ட பிரச்சினைகளே அதிகம். அந்த

மாத முடிவில் வெறியாகிய கடல் பொங்கி காந்தியின் குடிசைக்குள்ளும் சென்றது. ஆகஸ்டு மாதம் 31ஆம் தேதி காந்தி இரவில் படுக்கைக்குப் போனபிறகு, முஸ்லிம்களால் தாக்கப்பட்ட ஓர் இந்துவின் பிரேதத்தைத் தூக்கிக்கொண்டு, இரைச்சலிட்டுக்கொண்டு, கட்டுப்பாடில்லாத சில இந்துக்கள் காந்தியின் வீட்டில் நுழைந்தனர். ஜன்னல், கதவுகளிலுள்ள கண்ணாடிகளைக் கற்களினாலும் கைகளினாலும் அடித்து நொறுக்கினார்கள். கதவுகளை உடைத்துத்தள்ளி, மின்சாரக் கம்பிகளையும் பழுதுபடுத்த முயன்றனர். காந்தி படுக்கையிலிருந்து எழுந்து, அவர்களைச் சமாதானப்படுத்த முயன்றார். அடுத்த நாள் சர்தார் பட்டேலுக்கு அவர் எழுதிய கடிதத்தில் கூறினார் : 'நான் அவர்களிடம் உரக்கப் பேசத்தொடங்கினேன். ஆனால், செவிமடுத்தது யார்? அவரைக் காப்பாற்றுவதற்காக முஸ்லிம்கள் அவரைச்சுற்றி வட்டமாக நின்றனர். அவர்மேல் செங்கல் எறியப்பட்டது. கலகக்காரர்களில் ஒருவன் ஒரு நீள தடியை அவர்மேல் எறிந்தான். அது மகாத்மா தலையில் படாமல் சிறிது விலகி விழுந்தது. அவர் தலையை வருத்தத்தோடு ஆட்டினார். இறுதியில் போலீஸ் வந்துசேர்ந்தது. போலீஸ் தலைமை அதிகாரி காந்தியை அவருடைய அறைக்குள் செல்லுமாறு வேண்டிக்கொண்டார். வெளியே கூட்டத்தைப் போலீஸ்காரர் கண்ணீர்ப்புகை உபயோகித்துக் கலைத்தனர்.

காந்தி உண்ணாவிரதம் இருக்கத்தீர்மானித்தார். செப்டம்பர் முதல் தேதி அவர் பத்திரிகைகளுக்கு விடுத்த ஓர் அறிக்கையில், 'கூச்சலிடும் கூட்டத்திற்குள் சென்று அவர்களோடு பேசமுயல்வது பயனற்றது. முந்தின இரவு அங்ஙனம் நான் செய்ததால் ஒரு பயனும் ஏற்படவில்லை. எனது வார்த்தைகள் சாதிக்க முடியாததை எனது உண்ணாவிரதம் சாதிக்க முடியும். எனது விரதம் கல்கத்தாவிலுள்ள கலகக்காரர்களின் நெஞ்சை உருக்கினால், பஞ்சாபிலுள்ள கலகக்காரர்களின் நெஞ்சமும் உருகும். ஆததால், இன்று இரவு 8–15 மணிக்கு நான் உண்ணாவிரதம் ஆரம்பிக்கிறேன். கல்கத்தாவில் வெறி ஒழிந்து நெறி திரும்பிய பிறகு இவ் விரதத்தைக் கைவிடுவேன். இது சாகும் வரை எடுத்துக்கொண்ட விரதம்' என்று குறிப்பிட்டார்.

செப்டம்பர் 2ஆம் தேதி காந்தியின் வீட்டிற்குள் கூட்டங் கூட்டமாக மக்கள் வரத்தொடங்கினர். காந்தியின் உயிரைக் காப்பாற்ற என்ன வேண்டுமானாலும் அவர்கள் செய்வதாக அறிவித்தனர். அது சரியான முறை அல்ல என்று காந்தி எடுத்துச்சொல்லி விளக்கினார். மனச்சாட்சியைத் தூண்டி, அறிவின் சோம்பலை அகற்றுவதே அவருடைய விரதங்களின் நோக்கம் என்று காந்தி கூறினார். அவரது உயிரைக் காப்பாற்றுவதைவிட மக்களிடத்தில் மனமாற்றத்தை உண்டாக்குவதே முக்கியம். புகழ்மிக்க முஸ்லிம்களும் பாகிஸ்தான் கடற்படைச் சங்கத்தின் அதிகாரி ஒருவரும் இந்து முஸ்லிம் ஒற்றுமைக்

காகத் தாங்கள் பாடுபடப்போவதாக உறுதிகூறினர். செப்டம்பர் 4ஆம் தேதி கல்கத்தாவில் 24 மணி நேரமாகப் பூரண அமைதி நிலவியது என்று நகராண்மை அதிகாரி ஓர் அறிக்கை விடுத்தார். 500 போலீஸ்காரரும் அவர்களுடைய பிரிட்டிஷ் அதிகாரிகளும் ஒரு நாள் காந்திக்காக அனுதாபவிரதம் இருந்தனர். கொலைக்காரர்களும் போக்கிரிக்கும்பல்களின் தலைவர்களும் காந்தியின் படுக்கையருகில் வந்து, மெலிந்துகொண்டிருந்த அவருடைய உடலைப்பார்த்து அழுதனர். இனிமேல் அவர்கள் அழிவுவேலையை நிறுத்திவிடுவதாக வாக்களித்தனர். வியாபாரிகள், தொழிலாளிகள் முதலியோரின் இந்து, முஸ்லிம், கிறிஸ்தவப் பிரதிநிதிகளும் கல்கத்தாவில் இனி ஒரு கலவரமும் நேராது பார்த்துக்கொள்வோம் என்று காந்தியின் முன்னிலையில் சபதம் செய்தனர். காந்தி அவர்களை நம்பினார். ஆனால், இம்முறை அவ் வாக்குறுதியை எழுதிக்கொடுக்கும்படி சொன்னார். அவர்கள் அதில் கையெழுத்திடுமுன், அவர்களுடைய வாக்குறுதியைக் காப்பாற்ற விட்டால், மறுமுறை சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கப்போவதாக வும் அவர் எச்சரித்தார். அவர்கள் வெளியே சென்று தீர யோசித்துக் கையெழுத்திட்டனர். அப்புறம் அவர் தமது 79 மணி நேர விரதத்தை முடித்துக்கொண்டார்.

அன்றுமுதல் பஞ்சாபிலும், மற்ற மாகாணங்களிலும் பல மாதங்கள் மதவெறியால் இரத்தவெள்ளம் ஓடிக்கொண்டிருக்கும்போது, வங்காளத்திலுள்ள இந்துக்களும் முஸ்லிம்களும் கலவரமின்றி அமைதி யாக இருந்தனர். மகாத்மாவுக்குக் கொடுத்த வாக்கை அவர்கள் காப்பாற்றினர்.

செப்டம்பர் 7ஆம் தேதி கல்கத்தாவிலிருந்து காந்தி பஞ்சாபிற்குப் புறப்பட்டார். அவர் இந்தியத் தோட்டத்தின் மற்றொரு பகுதியில் களை எடுக்க வேண்டியதிருந்தது. போகும்வழியில் புகைவண்டி டில்லியில் நின்றது. அங்கே சர்தார் பட்டேல், சுகாதார மந்திரி ராஜ்குமாரி அமிர்த கௌரி, மற்றும் அவருடைய தோழர்கள் பலர் காந்தியைச் சந்தித்தனர். டில்லி முழுவதும் கலவரங்கள் நடந்துகொண்டிருக்கும் துன்பச் செய்தியை அவர்கள் காந்தியிடம் கூறினர். அவர்களுடைய நண்பர்கள் அவர் ஹரிஜனச்சேரியில் தங்குவது ஆபத்து; திடீரென்று போக்கிரிகள் அதை முற்றுகையிடலாம் என்று சொன்னார்கள். ஆகவே, அவர் அரண்மனைபோன்ற பிர்லா மாளிகையில் தங்கினார்.

இந்தக் கலகங்களினால் புது டில்லியிலும் பழைய டில்லியிலும் முக்கியமான வேலைகள் தடைபட்டுப்போயின. காய்கறி, பால், புதுப் பழங்கள் கிடைக்கவில்லை. ‘டில்லி இறந்தவர்களின் நகரம்’போல் தோற்றமளித்தது. பஞ்சாபிலிருந்து டில்லியில் வந்து குவிந்து கொண்டிருந்த ஆயிரக் கணக்கான இந்து, சீக்கிய அகதிகள் முஸ்லிம்

அட்டூழியங்கள்பற்றிப் பல கதைகள் சொன்னூர்கள். அவைகளில் சில உண்மையானவை. சில மிகைப்படுத்திக் கூறப்பட்டவை. இஃது டில்லியிலுள்ள முஸ்லிம்கள்மீது பழிவாங்குமாறு இந்துக்களுக்கு ஆத்திரத்தை மூட்டியது. அந்தப் பழிவாங்கும் செயலில் அகதிகளும் உற்சாகமாகக் கலந்துகொண்டனர். தெருக்கள் கொலைமயமா யிருந்தன. தெருக்களில் சென்றவர்கள் யாரும் தப்பமுடியாது என்ற நிலை உண்டாயிற்று.

டில்லியிலிருந்து 14 மைல் தூரத்தில் ஒக்லா (Okla) என்னும் கிராமம் இருக்கிறது. அங்கே மொகலாயர் காலத்தில் கட்டப்பட்ட இடிந்த கோட்டைகளும் மசூதிகளும் இருக்கின்றன. அவ்விடத்தில் ஜாமியா மில்லியா இஸ்லாமியா (Jamia, Millia, Islamia) என்ற ஸ்தாபனம் இருந்தது. அதில் ஆரம்பப்பள்ளிமுதல் கல்லூரிவரை இருந்தது. அதற்குத் தலைவர் காந்தியின் நண்பரான ஜாகிர் ஹுஸைன். தாடியும் கம்பீரமான தோற்றமும் உடையவர். நிறைந்த மனமும் பரந்த நோக்கும் உடையவர். 1947ஆம் வருடம் ஆகஸ்டு மாதத்திலிருந்து சீக்கிய அகதிகளும் இந்து அகதிகளும் மற்றும் இஸ்லாமியத்தை வெறுத்த இந்துக் குடியானவர்களும் இந்தக் கல்லூரிக்கு அண்மையில் வாழ்ந்துவந்தனர். தங்கள் கல்லூரி எந்த நேரமும் தாக்கப்படலாம் என்று அஞ்சி, மாணவர்களும் ஆசிரியரும் கல்லூரியைக் காவல் புரிந்துவந்தனர். அங்கிருந்துகொண்டே முஸ்லிம் கிராமங்களும் முஸ்லிம் வீடுகளும் தீக்கிரையாவதை அவர்கள் பார்க்கமுடியும். அருகில் யமுனை நதி பாய்கிறது. ஒவ்வோர் இரவிலும் தங்களைத் துரத்திக்கொண்டு வருபவர்களிடமிருந்து தப்பித்துக்கொள்ள அலறிக்கொண்டு முஸ்லிம்கள் ஆற்றில் குதித்தனர். இருதரப்பினருக் கும் சண்டை நடந்தது. நீரில் மூழ்கும்வரை இந்து முஸ்லிமை அமுக்கி விடுவான் அல்லது அவனுடைய தொண்டையில் கத்தியால் குத்துவான். முஸ்லிம் வேதனையில் அலறிக்கொண்டு மடிவான். இந்தச் சத்தத்தைக் கல்லூரியிலிருந்தவர்கள் நாள்தோறும் கேட்டனர். விரைவில் இந்த வெறிபிடித்த நிகழ்ச்சிகள் கல்லூரிக்கு அண்மையிலும் நடக்க ஆரம் பித்தன. டாக்டர் ஜாகிர் ஹுஸைனுடன் ஓரிரவு தங்கிக் கல்லூரிக்குப் பாதுகாப்பு அளிப்பதற்காக ஒரு நாள் இரவில் ஜவஹர்லால் தமது காரைத் தாமே ஓட்டிக்கொண்டு வெறிபிடித்த இந்துக்கள் நிறைந்த வழியாக அந்தக் கல்லூரிக்கு வந்தார். காந்தி இந்தக் கழகத்திற்கு ஏற்பட்ட ஆபத்தைக் கேள்விப்பட்டவுடன், அங்கே சென்று டாக்டர் ஹுஸைனோடு ஒரு மணி நேரம் தங்கி மாணவர்களிடம் பேசினூர். அவர் வருகையினால் அந்த இடமும் புனிதமாகியது. அதன்பின் அதற்கு ஆபத்து நீங்கியது.

பிர்லா மாளிகைக்குத் திரும்புமுன், காந்தி பல அகதிகள்முகாமைப் பார்வையிட்டார். அவர் ஆயுதம் அணிந்த காவல்காரரை வைத்துக்

துக்கொள்ளும்படி பலர் வேண்டிக்கொண்டனர். நெருங்கியவர்கள் பலர் கொல்லப்பட்டதாலும், பெண்கள் கடத்தப்பட்டதாலும் வெறி கொண்ட பல இந்துக்களும் சீக்கியர்களும் அவரை முஸ்லிம் அனுதாபி என்று நினைத்து அவரைத் தாக்கலாம். ஆனால், மெய்க்காப்பாளர் இல்லாமலே அவர் அங்குச் சென்றார். அவரிடம் இப்பொழுது அளவுக்கு மீறிய ஊக்கம் காணப்பட்டது. பக்கத்திலுள்ள அகதிமுகாம்களுக்கு நாள்தோறும் சென்றுவந்தார். கலகப் பகுதிகளுக்கு ஒரு நாளைக்குப் பலமுறை சென்றார். செப்டம்பர் 20-ஆம் தேதி மழைபெய்தது. அன்று பிரார்த்தனைக் கூட்டத்தில் 'மழை பெய்துகொண்டிருக்கும் இச் சமயத்தில் டில்லி, கிழக்கு பஞ்சாப், மேற்கு பஞ்சாப் முதலியவற்றி லுள்ள ஏழைஅகதிகளைப்பற்றி நினைக்கிறேன். 57 மைல் நீளமுள்ள அகதிப்படை மேற்குப் பஞ்சாபிலிருந்து இந்திய யூனியனை நோக்கி வருகிறது என்று கேள்விப்பட்டதும் என் தலை சுற்றுகிறது. இம்மாதிரி ஒரு நிகழ்ச்சி உலக சரித்திரத்திலேயே நடந்ததில்லை. அது என்னையும் உங்களையும் வெட்கத்தினால் தலைகுனியச்செய்கிறது' என்று காந்தி கூறினார். இங்ஙனம் அவர் கூறியது மிகைப்படுத்திக் கூறியதன்று. அவர் கூறிய 57 மைல் அகதிக்கூட்டம் என்பது பல அகதிக்கூட்டங் களில் ஒன்று. ஒன்றரைக் கோடி மக்கள் தாங்கள் வசித்த பழைய இடங்களைவிட்டு வெளியே கிளம்பினர். வழியில் துன்பங்களும் நோய் களும் அவர்களுக்காகக் காத்திருந்தன. பலர் வழியில் இறந்தனர். பாகிஸ்தானுக்குக் கொடுக்கப்பட்ட பஞ்சாபின் பகுதியிலிருந்து, கிழக்கே டில்லியை நோக்கி லட்சக் கணக்கான இந்துக்களும் சீக்கியர் களும் முஸ்லிம்களின் இம்சைக்கும் அவர்களது கொலைகாரச் செயல் களுக்கும் பயந்து ஓடிவந்தனர். இந்திய யூனியனிலிருந்து லட்சக் கணக்கான முஸ்லிம்கள் இந்துக்களின் ஈட்டிகளுக்கும் தடிகளுக்கும் பயந்துகொண்டு பாகிஸ்தானை நோக்கிஓடினர். அந்த அகதிக் கூட்டங்களில் அயர்ந்துபோன சில போலீஸ்காரர்களும் வாலிபத் தொண்டர்களும் காணப்பட்டனர். பயந்துகொண்டு ஓடிய அந்த அகதிகள் சிறிதளவாவது ஒழுங்காக நடந்துகொள்ளுமாறு அவர்கள் பார்த்துக்கொண்டனர். வண்டியுள்ளவர்கள் வண்டியிலும், வண்டி யில்லாதவர்கள் அல்லது வண்டியைப் பறிகொடுத்தவர்கள் குழந்தை களையும் நடக்க முடியாதவர்களையும் தூக்கிக்கொண்டு பல நாட்கள் நெடுந்தூரம் நடந்தும் சென்றனர். நோயாளிகளையும் மிகவும் வயது முதிர்ந்தவர்களையும் வழியில் விட்டுவிட்டுச்சென்றனர். அவர்கள் அங்கே சாகவேண்டியதுதான். காலரா, பெரியம்மைபோன்ற தொற்று நோய்கள் இந்த அகதிகளைப் பீடித்தன. அவர்கள் சென்ற பாதையில் பிணங்களும் அவைகளைச்சுற்றிக் கழுகுகளும் வட்டமிட்டுக்கொண்டிருந் தன. சில வேளைகளில் விரோதிக் கூட்டங்கள் அதாவது இந்துஅகதி களும், முஸ்லிம்அகதிகளும் எதிர் எதிரே சந்தித்துக்கொண்டால், அவர்களது எண்ணற்ற கவலைகளையும் சோர்வுற்ற நிலையையும் மறந்து,

அங்குள்ள வயல்களில் ஒருவரை ஒருவர் தாக்கிப் பழிக்குப்பழி வாங்கிக் கொண்டனர். இந்தியாவின் தானியக் களஞ்சியமாகிய பஞ்சாப் பட்டினியால் வாடியது. 'லட்சக் கணக்கான அகதிகளின் காலடிகளில் மிதிபட்டு தானியக்கதிர்கள் மண்ணில் புதைந்தன. இந்திய யூனியனைப் பசி கிள்ளத்தொடங்கியது. டில்லி அகதிவெள்ளத்தால் மூடிவிடாதபடி நேருஅரசாங்கம் நகரத்திற்கு வெளியே அவர்களுக்காக முகாம்களை ஏற்படுத்தியிருந்தது. ஆனால், பல ஆயிரக் கணக்கான அகதிகள் காவல் வளையங்களுக்குத் தப்பி நகருக்குள் புகுந்து கடைகளைக் கொள்ளை யடித்தனர். வீடுகளின் வாயிற்படிகளிலும், வெளிமுற்றங்களிலும், சாக்கடைகளிலும், கோவில்களிலும், புறக்கணிக்கப்பட்ட வீடுகளிலும் படுத்து உறங்கினர்; அரசாங்க அலுவல்களையும் டில்லி நகர வாழ்க்கை யின்போக்கையும் சீர்குலைத்தனர். மிகவும் கேவலமான வாழ்க்கை நடத்தவேண்டிய நிலைக்கு அவர்கள் கெட்டுவிட்டார்கள். ஆகவே, அவர்கள் அநாகரிக வாழ்க்கையை மேற்கொண்டனர். இஃது மற்றவர் களையும் பாதித்தது.

வெறியர்களும் பிணங்களும் நிறைந்த டில்லி நகரில் மகாத்மா காந்தி அன்பையும் சாந்தியையும் மக்களுக்கு உபதேசித்துவந்தார். பொங்கி எழும் உணர்ச்சிவேகத்தின் குறுக்கே நின்றுகொண்டு நிதான மான பகுத்தறிவோடு பேசினார். தொல்லைகளுக்கு ஆளாகிய முஸ்லிம்கள் அங்கே தங்கியிருக்கவேண்டுமென்று காந்தி சொன்னார். 'முஸ்லிம் களைத் துன்புறுத்திய இந்துக்களும் சீக்கியர்களும் தங்கள் மதங்களுக் குப் பெரிய பழியைத் தேடுவது மாத்திரமன்றி, ஈடுசெய்ய முடியாத தீங்கும் செய்கிறார்கள்' என்று காந்தி கூறினார். ஆயுதங்கள் வைத் திருப்பவர்கள் அவற்றை அவரிடம் கொடுத்துவிடவேண்டுமென்றார். 'சிறு பகுதிகளாக அவை என்னிடம் தம்மிச்சையாக வந்துகொண் டிருக்கின்றன' என்று தெரிவித்தார். ராஷ்டிரிய சேவா சங்கத்தின் அங்கத்தினர்கள் 500 பேர் நடத்திய கூட்டத்திற்கு காந்தி தைரிய மாகச் சென்றார். அவர்கள் முஸ்லிம்களுக்குப் பெரிய விரோதிகள்; அதிகக் கட்டுப்பாடு உள்ளவர்கள்; அச் சங்கம் ஒருவகை இராணுவம் போன்றது. எப்பொழுதும் யுத்தம் செய்யத் தயாராக இருந்தது. அவர்களது சகிப்பின்மை இந்துமதத்தை நாசப்படுத்திவிடுமென்று சொன்னார். 'பாகிஸ்தானில் நடந்த அக்கிரமத்திற்கு இந்தியாவில் இந்துக்களும் அக்கிரமம் செய்யவேண்டுமென்பது நேர்மை இல்லை' என்றார். உண்மையிலேயே காந்தி முஸ்லிம்களுக்கும், இந்துக் களுக்கும், சீக்கியர்களுக்கும் நண்பர். 'இரண்டு சமூகத்தாருக்கும் வெறிபிடிப்பதுபோல் தோன்றுகிறது' என்றார் காந்தி.

இப்படிப் பேசிமுடித்ததும், அவர்களுக்கு விருப்பமானால் கேள்விகள் கேட்கலாம் என்று காந்தி சொன்னார். 'தீமை செய்தவனைக் கொல்ல இந்துமதம் அனுமதிக்குமா?' என்று ஒரு R. S. S. அங்கத்

தினர் கேட்டார். 'தீயவன் ஒருவன் மற்ருெரு தீயவனைக் கண்டிக்க முடியாது' என்று காந்தி பதிலளித்தார்.

நாள் முழுவதும் அவர் ஊரைச் சுற்றிவந்தார். வெறிபிடித்த கூட்டங்கள் எங்கெல்லாம் இருப்பதாகக் கேள்விப்பட்டாரோ அங்கெல்லாம் காந்தி ஓடினுர். கோபமாயிருந்த அந்த மனிதக் கூட்டம், அவர் சென்றதும், சிரித்த முகத்துடன் கைகூப்பி, வணக்கஞ் செலுத்திப் பிரிந்துவிடும். கோப அலிகள் தணிந்தன. தாடி வளர்த்த சீக்கியர்களும் அவர்கள் குடும்பத்தினருமடங்கிய லட்சம் பேர் குழுமியிருந்த ஒரு விழாவிற்கு காந்தி சென்று முஸ்லிம்களுக்கு விரோதமாக அவர்கள் செய்யும் பலாத்காரச் செயல்களைக் கண்டித்தார். சீக்கியர்கள் குடித்துக்கொண்டும் கலகம் செய்துகொண்டும் இருந்ததாகக் குற்றஞ் சாட்டினுர். 'உங்களுடைய ஆத்மாவைத் தூய்மையாக வைத்துக் கொள்ளுங்கள். அப்பொழுது மற்ற சமூகங்களும் உங்களைப் பின் பற்றுவதைப் பார்ப்பீர்கள்' என்ருர். பிரார்த்தனைக் கூட்டங்களில் அவர் அகதிகளுக்குப் போர்வைகள் வழங்குவதற்காகப் பணம் வசூலித்தார். அகதிமுகாம்களில் அவர் அகதிகளை நூல்நூற்கவும், அவர்கள் இடங்களைச் சுத்தமாக வைத்துக்கொள்ளவும் சொன்ருர். ஒவ்வொரு மாலையிலும் அவர் பிரார்த்தனைக் கூட்டத்திலுள்ளவர்களிடம் குரானை வாசிப்பதற்கு ஆட்சேபனை உண்டா என்று கேட்டார். பிரார்த்தனைக் கூட்டங்களிலுள்ளவர்களில் பெரும்பாலோர் இந்துக்கள். வழக்கமாக அதை ஆட்சேபிக்கிறவர்கள் இருவர் அல்லது மூவர்தான் இருந்தனர். ஆட்சேபிக்காத சிறுபான்மையினர்மீது அவர்களுக்குக் கோபம் ஏற்படாதா? அவர்கள் கோபப்படமாட்டார்கள். பிறகு குரானிலிருந்து சில செய்யுட்களை அவர் படிப்பார். சகிப்புத்தன்மைக்கும் கட்டுப்பாட்டுக்கும் இஃது ஓர் உதாரணம். எல்லோரும் மற்றவர்களுடன் ஒத்துப்போகமுடியாது. ஆனுல், கருத்து வேற்றுமை இருப்பினும் அதைப் பொறுத்துக்கொண்டு இருக்கலாம்.

இதற்கிடையில் அவர் வருங்கால அரசியலையும் மறந்துவிடவில்லை. ஹரிஜன நலன், நூல்நூற்றல், ஆதாரக்கல்வி, இயற்கை வைத்தியம் போன்றவைகளில் தம்முடன் நெருங்கித் தொண்டாற்றியவர்கள் அடங்கிய கூட்டங்கள் பல 1947ஆம் வருடம் டிசம்பர் மாதம் முதல் இரண்டு வாரங்கள் காந்தி நடத்தினுர். 'அவர்கள் எல்லோரும் ஒன்றுசேர்ந்து ஆக்க வேலைக்காகவும் அரசியலுக்காகவும் பாடுபட வேண்டும். ஆனுல், கட்சி அரசியலில் ஈடுபடக்கூடாது. ஏனெனில், அப்படி ஈடுபட்டால் அரசாங்கம் நாசமாகிவிடும். பதவியைத் துறந்து மக்களுக்காகச் சுயநலமின்றி உழைத்தால் அவர்களுக்கு நாம் வழிகாட்ட முடியும்; அவர்களிடத்தில் நமக்குச் செல்வாக்கும் இருக்கும்' என்ருர் காந்தி. காங்கிரஸ் கட்சியைத் தாம் நடத்திச்செல்ல முடியாததால் அரசாங்கத்தை வேலைசெய்யத் தூண்டவும் வேண்டும்போது அரசாங்

கத்தின் பொறுப்பை ஏற்றுக்கொள்ளவும் சக்தியுள்ள ஒரு புதிய சங்கத்தை ஸ்தாபிக்க முன்வந்தார்.

'காங்கிரஸாவது, அரசாங்கமாவது ஏன் ஆக்க வேலையைச் செய்யக் கூடாது?' என்று ஒரு பிரதிநிதி கேட்டார்.

'ஏனென்றால், காங்கிரஸ்காரருக்குப் பொதுநல சேவையில் போது போதுமான சிரத்தை இல்லை' என்று காந்தி பதில்கூறினார். 'நாம் கனவு காணும் சமுதாயம் இன்றையக் கட்சியினால் வரமுடியாது என்பதை நாம் உணரவேண்டும். இப்பொழுது லஞ்ச ஊழல் அதிகமாக இருக்கிறது. எல்லோரும் தங்கள் சட்டைப்பையில் நிறைய ஓட்டுகள் வைத்துக்கொள்ள வேண்டுமென்று விரும்புகின்றனர். ஏனென்றால், ஓட்டுகள் அதிகாரத்தைக் கொடுக்கின்றன.' கிருபளானி இந்தத் தொல்லைகளை அதிகாரிகளின் ஊழல், ஆர்ப்பாட்டம், பதவிச்சலுகை, லஞ்சம், கள்ள வியாபாரம், கொள்ளை லாபம் என்று வர்ணித்தார்.

காங்கிரஸின் போக்கும் அரசாங்கத்தின் போக்கும் காந்திக்கு பெரும் ஏமாற்றத்தை உண்டாக்கியது. எனினும், இந்தியாவின் அரசியலில் காந்தி தான் முக்கியமானவர். நேருவும் அவருக்குக் கீழ்ப்பட்ட எல்லோரும் அடிக்கடி காந்தியிடம் வந்து கலந்து ஆலோசித்தனர். ஆனால், அவர் பரந்த துறைகளில் செயல்புரிய விரும்பினார். பஞ்சாபிலுள்ளவர்களையும் பாகிஸ்தானிலுள்ளவர்களையும் நேரில் கண்டு சமாதானப்படுத்த நினைத்தார். பாகிஸ்தான் பிரயாணத்திற்குரிய திட்டங்கள் உருவாகத்தொடங்கின. ஆனால், அவர் டில்லியை விட்டுச் செல்லத் தயங்கினார். ஏனெனில், எங்காவது கொடுஞ்செயல்கள் நடந்து கொண்டே இருந்தன. கலகங்கள் ஓய்ந்து விட்டன என்று நினைத்துக் கொண்டு ஒரு முஸ்லிம் வியாபாரி அவருடைய கடை ஜன்னலைத் திறந்தார். ஒரு குண்டு அவரை வீழ்த்தியது. முஸ்லிம்களுக்கு நகரத்தின் பலபகுதிகளில் வெளிவருவது இன்னும் அபாயமாக இருந்தது. திரும்பவும் கலகங்கள் நடக்கக்கூடும் என்று காந்தி உள்ளூற உணர்ந்தார். ஆகையால், அவர் விரதம் இருக்கத்தீர்மானித்தார். 'அந்த யோசனை மின்னல்வேகத்தில் எனக்குத் தோன்றியது' என்று அவர் சொன்னார். நேருவையும், பட்டேலையும், டாக்டர் ஒருவரையும் கலந்து யோசிக்காமல் தான் உண்ணாவிரதம் இருக்கப்போவதாக காந்தி வெளியிட்டார். இதுவே அவருடைய இறுதி உண்ணாவிரதம். காந்தியின் பெருந்தன்மை வாய்ந்த பண்பு எவ்வளவு உயர்ந்தது என்பதை இவ் விரதம் இந்தியருக்கு எடுத்துக்காட்டியது.

33. சாகத் துணிந்தவருக்கே வெற்றி

1948ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 13ஆம் தேதி காலையில் காந்தி தம்முடைய விரதத்தை ஆரம்பித்தார். இந்த விரதம் எல்லோருடைய

மனத்தையும் உருக்க மேற்கொண்ட விரதம் என்றார். பிரிக்கப்பட்ட இந்தியாவின் இருபாகங்களிலுமுள்ள இந்துக்கள், முஸ்லிம்கள் ஆகிய எல்லா மக்களின் மனச்சாட்சியையும் நோக்கி, காந்தி இவ் விரதம் இருந்தார். தேவையானால் சாகும்வரை விரதமிருக்கப்போவதாகவும் அவர் சொன்னார். எல்லோரும் அவருடைய வேண்டுகோளை ஏற்றுக்கொண்டால் அவருக்கு மகிழ்ச்சி ஏற்படும். ஒரு பிரிவினர் மட்டும், உதாரணமாக, சீக்கியர் மட்டும் ஏற்றுக்கொண்டால் அதை அவர் ஓர் அற்புதம் என்று நினைத்து அவர்களிடையேபோய்த் தங்கியிருக்கப்போவதாகச் சொன்னார். அவர் சாகநேரிடலாம் என்பதும் அவருக்குத் தெரியும். 'ஒன்றும் செய்யமுடியாமல் இந்தியாவும், இந்து சமயமும், சீக்கிய சமயமும், இஸ்லாமும் அழிவதைப் பார்த்துக்கொண்டிருப்பதைவிடச் சாவதே எனக்கு மேலான விடுதலையாகும்' என்றார். அவருடைய நண்பர்கள் அவருக்காக கவலைப்படக்கூடாது என்றார். 'நான் கடவுளுடைய கைகளில் இருக்கிறேன்' என்று காந்தி சொன்னார்.

விரதத்தின் முதல்நாள் பிர்லா மாளிகையின் முற்றத்தில் நடந்த பிரார்த்தனைக் கூட்டத்திற்கு காந்தி நடந்துசென்று பிரார்த்தனையை நடத்தினார். முஸ்லிம்களுக்காக அவர் விரதம் இருப்பதாகச் சிலர் அவரைப் பரிகாசம் செய்ததாக அவர் கூறினார். அவர்கள் சொன்னது சரிதான் என்றார். 'என் வாழ்நாள் முழுவதும் சிறுபான்மையோருக்காகவும் என் உதவி வேண்டியவர்களுக்கும் துணைநின்றேன். எல்லோரும் அவ்விதமே துணைசெய்யவேண்டும். எல்லோருடைய ஆத்மாக்களும் மாசற்றவையாக விளங்க விரும்புகிறேன். பாகிஸ்தானிலுள்ள முஸ்லிம்கள் என்ன செய்தார்கள் என்பதுபற்றி நமக்குக் கவலை இல்லை. இந்துக்களும் சீக்கியர்களும் "உன் அழைப்பை ஏற்று ஒருவரும் வராவிட்டால், நீ தனியே போவாயாக; தனியே போவாயாக" என்னும் தாகூருடைய பாடலை நினைவில் வைத்துக்கொள்ளவேண்டும்', என்று வேண்டுகோள் விடுத்தார்.

இரண்டாவது நாள் பிரார்த்தனைக் கூட்டத்திற்குப் போகவேண்டாமென்று டாக்டர்கள் காந்தியிடம் கூறினார்கள். பிரார்த்தனைக் கூட்டத்தில் வாசிக்கவேண்டிய செய்தியை காந்தி சொன்னார். ஆனால், பிரார்த்தனைநேரம் நெருங்கியதும், அவரால் போகாமல்இருக்க முடியவில்லை. கூட்டத்திற்குப் போனார். அந்த விரதம் எல்லாருடைய தூய்மைக்காகவும் முதலாவது அவருடைய தூய்மைக்காகவும் மேற்கொள்ளப்பட்டது என்றார். 'இந்தியாவின் இருபாகங்களிலும் சுயத் தூய்மை ஏற்படுகிறது என்று வைத்துக்கொண்டால்' என்று அவர் நம்பிக்கையோடு தமது பேச்சை ஆரம்பித்தார். இரு மதத்தினருக்குள்ளே உண்மையான நட்பு ஏற்படுமாயின், அது அவரைக் குழந்தையைப்போல் துள்ளிக்குதிக்கச்செய்யும். அப்பொழுது 125 வயதுவரை வாழவேண்டுமென்ற அவருடைய ஆசையும் மறுபடியும் துளிர்க்கும்.

டாக்டர்கள் சொன்னதை அவர் கேட்கவில்லை. அவர் உடல் நிலையைச் சோதிக்கவிரும்பவில்லை. உப்பு கலந்தோ, கலவாமலோ நீர்குடிக்க மறுத்தார். அவருடைய நிறையில் தினம் இரண்டு ராத்தல்கள் குறைந்தன. அவருடைய சிறுநீரகங்கள் சரியாக வேலைசெய்ய வில்லை. அவர் மெலிந்துகொண்டேவந்தார். அவர் அதைப் பொருட்படுத்தவில்லை. 'நான் கடவுளிடம் என்னை ஒப்படைத்துவிட்டேன்' என்றார்.

மூன்றாவது நாள் அவர் பெருங்குடலில் நீர்பாய்ச்சிக் கழுவச் சம்மதித்தார். அதிகாலை 2-30 மணிக்கு எழுந்து குளிக்க வெந்நீர் கேட்டார். தொட்டியிலிருக்கும்போது பியரிலாலிடம் ஓர் அறிக்கையை எழுதச்சொன்னார். பழைய ஐக்கிய இந்தியாவில் பாகிஸ்தானுக்குச் சொந்தமான ஆஸ்திகளின் ஈடுதொகையாக 550,000,000 ரூபாயை நேரு அரசாங்கம் பாகிஸ்தான் அரசாங்கத்திற்குக் கொடுக்கவேண்டுமென்றார். அன்று பிற்பகலில் நிதிமந்திரி டாக்டர் ஜான் மத்தாய், நேரு, வல்லபாய் பட்டேல் மூவரும் காந்தியிடம் வந்து இந்தத் தொகையை எதனால் பாகிஸ்தானுக்கு அளிக்கக்கூடாது என்று காபினெட் ஓட்டுச்செய்தது என்பதை விளக்கினார்கள். முதலில் மத்தாயும் நேருவும் காரணங்களை விளக்கிச்சொன்னார்கள். பிறகு ஒன்றரை மணி நேரம் பட்டேல் காபினெட் மறுத்ததற்குக் காரணங்கள் கூறினார். பட்டேல் பேசி முடித்ததும், காந்தி கட்டிலில் எழுந்து உட்கார்ந்துகொண்டு, 'சர்தார், நீர் இனிமேல் யான் அறிந்த பட்டேல் இல்லை' என்று கூறிஅழுதார். உடனே அம் மூவரும் கலந்து ஆலோசித்துக் காபினெட்டை மறுபடியும் கூட்டி, அந்தத் தொகையை மறுத்ததினால் காந்திக்கு ஏற்பட்ட உணர்ச்சிகளைக் கூறினர். உடனே காபினெட் அத் தொகையைப் பாகிஸ்தானுக்குக் கொடுத்துவிடும்படி ஓட்டு அளித்தது.

அன்று பிர்லா மாளிகையின் அடைப்புப்போட்ட முன்வாயிலில் காந்தி படுத்திருந்தார். எண்ணற்ற இந்தியரும் அயல்நாட்டாரும் வரிசை வரிசையாக அவருடைய படுக்கைக்குப் பத்தடி தூரத்தில் நின்று அவரைப் பார்த்துச்சென்றனர். அதிக நேரம் அவர் கருப்பையில் இருக்கும் குழந்தையைப்போல் குறுகி வளைந்து படுத்திருந்தார். முழங்கால்கள் இரண்டும் வயிற்றுப்பக்கம் மடங்கி இருந்தன. கை முட்டிகள் இரண்டும் மார்புக்கடியில் இருந்தன. அவர் உடலும் தலையும் வெள்ளைக் கதரால் மூடப்பட்டிருந்தன. முகம்மட்டும் அந்தத் துணியால் சட்டமிட்ட சித்திரம்போல் திறந்திருந்தது. அவர் கண்கள் மூடியிருந்தன. அவர் தூங்குவதுபோலவும் இருந்தது. சிறிது தன்னுணர்ச்சி அற்றவர்போலவும் தோன்றியது. அவர் கடுமையான வேதனையால் துன்பப்படுவதாக அவருடைய முகம் அறிவித்தது. அவருடைய அந்த நிலையிலும், அந்த வேதனை புடமிட்ட தங்கம் போலிருந்தது. ஆனால்,. தூக்கத்திலும் அரை குறையாகத்

தன்னுணர்ச்சியற்றுக்கிடந்த அந் நிலையிலும் அவரது துன்பம் வேறு வழியில் திருப்பப்பட்டது. பொதுப்பணியில் ஈடுபட்டிருக்கிறோம் என்ற நினைவு வேதனையின் அளவைக் குறைந்தது. அவர் மனஅமைதி அடைந்தவர்போல் தோன்றினார். அவர் எழுந்ததும் புன்னகைசெய் தார். அவர் எழுந்து பிரார்த்தனைக் கூட்டத்திற்குச் செல்லமுயன்றார். ஆனால், முடியவில்லை. அவர் ஒலிபெருக்கியில் பேசினார். அது பிரார்த் தனைக் கூட்டத்திலிருந்த ஒலிபெருக்கியுடனும் அகில இந்திய ரேடியோ வுடனும் இணைக்கப்பட்டிருந்தது. ரேடியோ அவர் பேசியதை நாடு முழுவதும் பரப்பியது. மெல்லிய குரலில் அவர் பேசஆரம்பித்தார். 'மற்றவர்கள் என்ன செய்துகொண்டிருக்கிறார்கள் என்பதைப்பற்றி நீங்கள் கவலைப்படவேண்டாம். நாம் ஒவ்வொருவரும் சோதனை விளக்கை நம்முன்னே திருப்பி, நம்முடைய ஆத்மாவை நம்மால் முடிந்த அளவு தூய்மையாக்கிக்கொள்ள வேண்டும். நீங்கள் உங்களைப் போதுமான அளவு தூய்மையாக்கிக்கொண்டு, இந்தியாவுக்கு உதவி புரிந்து, நான் விரதம் இருக்கவேண்டிய காலத்தையும் குறைத்து விடுவீர்கள் என்று நம்புகிறேன்' என்றார். அவருடைய விரதத்தையும் அவரது விரதத்தின் விளைவையும் முக்கியமாகக் கருதக்கூடாது என்றார். 'ஒருவரும் இறப்பிலிருந்து தப்பமுடியாது. பின் ஏன் அதற்குப் பயப்படவேண்டும்? உண்மையில், மரணம் துன்பத்தி லிருந்து விடுதலைசெய்யும் ஒரு நண்பன்.' அதற்குமேல் அவரால் பேசமுடியவில்லை. மீதிச் செய்தி வாசிக்கப்பட்டது. நாலாவது உபவாச நாளில் டாக்டர்கள் அவரை எச்சரித்தனர். அவர் பிழைத் தாலும் அவருக்கு நிரந்தரமான ஓர் ஊனம் ஏற்படுமென்றனர். அவர் நீரும் குடிக்கவில்லை. சிறுநீரும் கழிக்கவில்லை. அவர்கள் சொல்லிக் கேட்காமல் இரண்டு நிமிடங்கள் ஒலிபெருக்கியிலும் பேசினார். 'நாலாவது விரத நாளில் நான் இவ்வளவு நன்றாக ஒருபோதும் இருந்த தில்லை' என்று பெருமைப்பட்டுக்கொண்டார். அவர் குரலும் வலுவாக இருந்தது.

ஜனவரி 17ஆம் தேதி அவர் நிறை குறையாமல் 107 ராத்தலில் இருந்தது. அவர் பியரிலாலை நகருக்குள் அனுப்பி முஸ்லிம்கள் நகருக்குள் திரும்பிவந்தால் பத்திரமாக இருப்பார்களா என்று பார்த்து வரச்சொன்னார். மகாராஜாக்களிடமிருந்தும் இந்தியாவின் பல பாகங் களிலிருந்தும் அவருக்குத் தந்திகள் வந்துகுவிந்தன. அவர் திருப்தி அடைந்தார். ஆனால், அவர் ஒரு எச்சரிக்கையும் விடுத்தார். 'எனக்கு மிகவும் புனிதமான இந்தச் சந்தர்ப்பத்தில் நான் விரதத்தை முடிக்க வேண்டும் என்பதற்காக என்னைத் தப்பாக வழிநடத்தினால் அவர்கள் அரசர்களாயிருந்தாலும் சரி, பேரரசர்களாயிருந்தாலும், இந்துக்களா யிருந்தாலும், சீக்கியர்களாயிருந்தாலும் சரி, அவர்கள் தங்களுக்கோ இந்தியா முழுவதற்குமோ நன்மை செய்தவர்கள் ஆகமாட்டார்கள்.

ஆத்மத் தூய்மைக்காக விரதம் இருக்கும்போதுதான் நான் அதிக மகிழ்ச்சி அடைகிறேன். இந்த விரதம் எனக்கு இதுவரை கிட்டாத பெருமகிழ்ச்சியைக் கொடுத்திருக்கிறது. ஒருவன் தன்னுடைய வாழ்க் கைப் பயணத்தில் திட்டமாக சாத்தானிடமிருந்து விலகிக், கடவுளை நோக்கிப் போகிறான் என்று உண்மையாக அறிந்தாலொழிய ஒருவரும் என்னைத் தொந்தரவு செய்யவேண்டாம்' என்றார். அதாவது ஒருவன் ஆண்டவனால் .தூண்டப்பட்டாலொழிய, அவரைத் தொந்தரவு செய்யக் கூடாது. ஜனவரி 18ஆம் தேதி அவருக்குச் சிறிது சுகமாக இருந்தது. அவர் சிறிது நேரம் உடம்பைப் பிடித்துவிடச்சொன்னார். அவருடைய நிறை 107 ராத்தலாகவே இருந்தது.

ஜனவரி 13ஆம் தேதி காலை 11 மணிக்கு காந்தி உண்ணாவிரதம் ஆரம்பித்ததிலிருந்து, புதிய காங்கிரஸ் தலைவர் ராஜேந்திர பிரஸாத்தின் வீட்டில் பல கூட்டங்கள் கூடிப் பலாத்காரமாக ஒருவரை ஒருவர் தாக்கு வதை நிறுத்துவதுமன்றிப், பலதிறப்பட்ட வகுப்பினரிடமும் உண்மை யான சமாதானம் நிலவவேண்டும் என்பதைப்பற்றியும் ஆலோசித்து வந்தன. ஒழுங்காக நடந்துகொள்வதாகக் காகிதத்தில் எழுதிக் கொடுத்தால்மாத்திரம் போதாது. அந்த வெறும் உறுதிமொழி சாகும் வரை உண்ணாவிரதம் இருக்கத்துணிந்ததை மாற்றமுடியாது என்று கூறினார். வாக்குறுதிகளும் அவ் வாக்குறுதிகளை நிறைவேற்ற திட்டங் களும் யாவை என்று அவர்கள் காந்தியைக் கேட்டனர். அவர்களைப் பின்பற்றும் தோழர்கள் செய்யமுடியாததைச் செய்வதாகத் தலைவர்கள் உறுதிகூறக்கூடாது என்று காந்தி கண்டித்தார். கூட்டத்திற்கு வந்திருந்தவர்கள் ஐந்து நாட்கள் இதைப்பற்றிப் பேசியும், கலந்து ஆலோசித்தும், உறுதிமொழிகள் எழுதியும் தங்கள் மனச்சாட்சி என்ன சொல்கிறது என்பதையும் ஆராய்ந்துவந்தனர். இறுதியில் ஜனவரி 18ஆம் தேதி காலையில் மகாநாட்டில் கலந்துகொண்ட இந்துக்கள், சீக்கியர்கள், முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள், யூதர்கள் அடங்கிய 100 பேர் ராஷ்ட்ரீய ஸ்வயம் சேவா சங்கத்தினர், இந்துமகாசபைப் பிரதிநிதிகள் சிலர், பாகிஸ்தான் ஹை கமிஷனர், பிரசாத், நேரு, ஆஸாத் எல்லோரும் காந்தியிடம் சென்றனர். முஸ்லிம்களின் உயிர், சொத்து, மதம் எல்லா வற்றையும் பாதுகாப்பதாக உறுதிமொழி எழுதிக்கொடுத்தனர். இது வரை முஸ்லிம்கள் செல்லப்பயந்துகொண்டிருந்த இடங்களுக்கு அவர்கள் தாராளமாகப்போய்வர வசதிசெய்து தருவதாக வாக்களித் தனர். பள்ளிவாசலில் அடைக்கலம் புகுந்த இந்துஅகதிகளை அங்கிருந்து வெளியேற்றிப் பள்ளிவாசல்களை முஸ்லிம்களிடம் ஒப் படைப்பதாகச் சொன்னார்கள். பயந்து ஒளிந்தோ, ஓடியோபோயிருந்த முஸ்லிம்கள் திரும்பிவந்து தங்கள் தொழில்களைத் தொடங்கலாம். இந்த ஏற்பாடுகளெல்லாம், இராணுவம், போலீஸ் முதலியவற்றின் உதவி யல்லாமலே நடக்கவேண்டும். மக்களே அவைகளைக் கவனித்துக்

கொள்வார்கள். இந்த மாறுதலுக்குமுன்பே இந்து முஸ்லிம் ஒற்றுமையைக் காட்டும் மனத்தை உருக்கக்கூடிய காட்சிகள் நடந்தன. அவற்றை விரதத்தால் மெலிந்துபோன காந்தியிடம் சொன்னார்கள்.

அவர் இப்பொழுது கட்டிலில் எழுந்து உட்கார்ந்து, பலவீனமாயிருந்தாலும், எல்லாருக்கும் கேட்கக்கூடிய குரலில் பேசினார். அலகபாத்தில் அட்டூழியங்கள் நடந்ததாகப் பத்திரிகைகளில் செய்திகள் வெளிவந்திருந்தன. காந்தி அந்த அறையிலிருந்த R.S.S., இந்து மகாசபை அங்கத்தினர்களைச் சுட்டிக்காட்டி, அதற்குரிய பொறுப்பு அவர்களுடையது என்றார். 'இந்துக்கள், சீக்கியர்கள், முஸ்லிம்கள் எல்லோரும் சகோதரர்கள் என்று உங்களால் உணரமுடியச் செய்யாவிட்டால் அது இரண்டு தேசங்களுக்கும் தீமையை விளைவிக்கும். சண்டையிட்டுக்கொண்டிருந்தால் இந்தியாவின் கதி என்ன? இந்த நினைவு அவரை நடுங்கவைத்தது. அவருடைய குழிவிழுந்த கன்னங்களில் கண்ணீர் வழிந்தோடியது. பார்த்துக்கொண்டிருந்தவர்களும் ஏங்கி, ஏங்கி அழுதனர். அவர் அழுகையை நிறுத்திப் பேசத்தொடங்கியதும் அவர் குரலைக் கேட்கமுடியவில்லை. டாக்டர் சுசீலா நய்யரின் காதில் அவர் மெதுவாகச் சொன்னதை அவள் எல்லோருக்கும் உரக்கச் சொன்னாள். அவர்கள் அவரை ஏமாற்றுகிறார்களா? அவர் உயிரைக் காப்பாற்ற முயன்றுகொண்டிருக்கிறார்களா? அவர் பாகிஸ்தானுக்குப் போக விரும்பினார். எல்லாரும் சமாதானமாக வாழ்ந்து, அவரது கவலையை நீக்குவார்களா? எல்லாரும் சமாதானமாக வாழ்வார்கள் என்று காங்கிரஸைச் சேர்ந்த முஸ்லிம் தலைவரான மௌலானா ஆஸாத், ராஷ்ட்ரீய ஸ்வயம் சேவா சங்கத்தின் பிரதிநிதி, பாகிஸ்தானின் ராஜதூதர், ஒரு சீக்கியர் முதலியோர் காந்தியிடம் உறுதிமொழி கூறினார்கள். அப்பொழுது ஆழ்ந்த யோசனையில் காந்தி தமது கட்டிலில் அமர்ந்திருந்தார். சாகவேண்டுமா என்று அவர் அப்பொழுது தமக்குள் ஆலோசனை செய்துகொண்டிருந்தார். அவர் விரதத்தை அப்பொழுது முடித்துவிடுவதாகத் தெரிவித்தார். முதலாவது பார்ஸி, முஸ்லிம், ஜப்பானிய வேதங்கள் வாசிக்கப்பட்டன. இறுதியாக இந்துசமயப் பாடல் ஒன்று ஓதப்பட்டது. அதன் கருத்து:

'என்னைப் பொய்யிலிருந்து வாய்மைக்கும்,
இருளிலிருந்து ஒளிக்கும்,
சாவிலிருந்து சாவாமைக்கும்
வழிநடத்திச் செல்.'

ஆசிரமத்திலிருந்த பெண்கள் ஓர் இந்துசமய கீதம் பாடினார்கள். பிறகு காந்திக்கு விருப்பமான கிறிஸ்தவ கீதமாகிய, 'அந்த அற்புதச் சிலுவையை நான் பார்க்கும்போது' என்ற பாடல் பாடப்பட்டது. இறுதியில் மகாத்மா ஒரு கண்ணாடிக் கிண்ணத்தில் எட்டு அவுன்ஸ்

ஆரஞ்சுரசம் வாங்கி மெதுவாகப் பருகினார். நடுவில் அந்த அமைதி வாக்குறுதிகள் காப்பாற்றப்பட்டால் 125 வயதுவரை வாழவேண்டு மென்ற அவருடைய விருப்பம் மறுபடியும் உண்டாகும் என்றார். ஒரு வேளை 133 வயதுவரைகூட இருக்கலாம் என்றார். அன்று பிற்பகல் பிரிட்டிஷ்காரர் நடத்திய தினப்பத்திரிகை ஸ்டேட்ஸ்மேனின் (Statesman) பழைய பதிப்பாசிரியராகிய ஆர்தர் மூர் (Arthur Moore) என்பவர் காந்தியோடு பேசிவிட்டு, 'காந்தி உல்லாசமாகவும் மகிழ்ச்சி யாகவும் இருந்தார். அவர் என்னுடன் பேசும்போது அவரைப் பற்றி அவருக்குக் கவலை இல்லை. என்னைப்பற்றித்தானிருந்தது. என்னிடம்தான் துருவித்துருவிப் பல கேள்விகள் கேட்டார்' என்று எழுதினார்.

அன்று மாலை பிரார்த்தனைக் கூட்டத்தில் காந்தி அந்த வாக்குறுதி களுக்குப் பின்வருமாறு பொருள் கூறினார். 'என்ன வந்தாலும் வரட்டும். இந்துக்கள், முஸ்லிம்கள், சீக்கியர்கள், கிறிஸ்தவர்கள், யூதர்கள் இவர்களுக்கிடையே பூரண நட்பு இருக்குமானால், அதை ஒருவராலும் அழிக்கமுடியாது.' இது வீண் ஆசைகொண்ட ஒரு மனி தரின் மனமயக்கம் அன்று என்பதற்குப் பாகிஸ்தானின் அயல்நாட்டு விவகாரமந்திரியாகிய சர் முகமது ஜாபருல்லா கான் (Sir Mohamed Zafrulla Khan) லேக் ஸக்ஸஸ் (Lake Success) என்ற இடத்தில் ஐக்கியநாட்டுப் பாதுகாப்புச்சபைக் கூட்டத்தில், 'காந்தியின் விரதத்தின் பயனாக இந்த இரண்டு டொமினியன்களுக்கும் இடையே நட்பு நிலவவேண்டுமென்ற உணர்ச்சியும் ஆசையும் இந்திய உபகண்டம் முழுவதும் பிரமாண்டமான அலைகள்போல் வீசத்தொடங்கி யிருக்கின்றன' என்று பேசியதே இதற்குப் போதிய சான்றாகும். உண்ணாவிரதம் முடிந்ததும் அவருக்கு எப்பொழுதும்போல் மகிழ்ச்சி கரமான உணர்ச்சி பிறந்தது. அவர் புது பலத்தோடு வேலைக்குத் திரும்பினார். நமனை அஞ்சாது மரணத்தை எதிர்த்ததால் அவருக்குப் புதுவாழ்வு கிடைத்தது.

34. பிரார்த்தனைக்குமுன் மரணம்

விரதம் முடிந்த அடுத்த நாள் காந்தியை ஒரு நாற்காலியில் வைத்துப் பிரார்த்தனைக் கூட்டத்திற்குத் தூக்கிச்சென்றனர். ராஷ்டிரீய சேவா சங்கத்தின் மூலகர்த்தாவும், இந்தியாவில் இந்துக் களே ஆதிக்கம் செலுத்தவேண்டுமென்று வற்புறுத்தியும்வந்த இந்து மகா சபையினர், சமூக சமாதானத்தை நிலைநாட்டுவோம் என்று டில்லி யில் தமக்கு அளித்த வாக்குறுதியை மீறிவிட்டனர் என்று தமது பிரசங்கத்தில் காந்தி குறிப்பிட்டு வருத்தப்பட்டார். அந்தப் பிரசங்கத் தில் பேசும்போது அவர் குரல் மிகவும் கம்மியிருந்தது. அடுத்த நாள்

மாலை மகாத்மா பிரார்த்தனைக் கூட்டத்தை நடத்திக்கொண்டிருக்கும் போது ஒரு குண்டு வெடித்த சப்தம் கேட்டது. கூடியிருந்த மக்கள் பரபரப்பு அடைந்தனர். 'அதைப்பற்றிக் கவலைப்படாதீர்கள்' என்று காந்தி வற்புறுத்தினார். 'என் பேச்சைக் கேளுங்கள்' என்றார். அருகிலுள்ள தோட்டச் சுவரிலிருந்த ஒருவன் கையால் செய்த வெடி குண்டை காந்திமீது வீசியிருக்கிறான்.

அடுத்த நாள் காந்தி பிரார்த்தனை மைதானத்திற்கு நடந்து சென்றார். உண்ணாவிரதத்திற்குப் பிறகு இதுதான் அவர் முதல் தடவையாக நடந்துசென்றது. குண்டு வீசியபோது அவர் நிதானமாக இருந்ததற்குப் பாராட்டுரைகள் வந்துகுவிந்தன என்று கூறினார். அவர் அப் பாராட்டுரைகளைப் பொருட்படுத்தவில்லை. 'அம் மாதிரி ஒரு குண்டினால் நான் கொல்லப்படும்போது, முகத்தில் புன்சிரிப் போடும் குண்டு வீசியவன்மேல் விரோதம் காட்டாமலும் இருந்தால் நான் புகழ்ச்சிக்குரியவன். குண்டை எறிந்தவன் அறியாமல் செய் திருக்கிறான். அவனை ஒருவரும் இழிவாக நினைக்கக்கூடாது' என்றார்.

'அவன் என்னை இந்துமதத்தின் விரோதி என்று நினைத்திருக்க லாம்' என்றார். 'மாறுபட்ட கொள்கைகளையுடைய மற்றவர்கள் எல்லாரும் தீயவர்களாகத்தானிருப்பார்கள் என்று அவன் நினைக்கக் கூடாது' என்று அந்த வாலிபனைக் கேட்டுக்கொண்டார். கூடியிருந்த வர்களிடம் அந்தத் தவறு செய்தவன்மேல் இரக்கம்வைத்து அவனைத் திருத்த முயலவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

அந்த வாலிபனின் பெயர் மதன்லால். அவன் பஞ்சாபிலிருந்து ஓடிவந்த அகதி. காந்திக்குக் கொடுத்த வாக்குறுதிப்படி பள்ளிவாசல் களைப் போலீஸார் வந்து காலி செய்யும்வரை அவன் டில்லி மசூதியில் வசித்துவந்தான். 'பாகிஸ்தானில் நடந்த பயங்கரச் சம்பவங்களை என் கண்களினால் பார்த்திருக்கிறேன். பஞ்சாபிலுள்ள இந்துக்களைச் சுட்டுத்தள்ளியதையும் நேரில் பார்த்திருக்கிறேன்' என்று அவ னுடைய விசாரணையின்போது கூறினான். இச் சம்பவங்களினால் ஆத்திரம் அடைந்து காந்தியைக் கொல்ல, சதி ஆலோசனைசெய்த ராஷ்டிரீய சேவா சங்கக் கூட்டத்தில் சேர்ந்துகொண்டான். அவன் கைதுசெய்யப்பட்டபின் நாதுராம் விநாயக கோட்ஸே என்னும் அவ னுடைய சதிகாரத் தோழன் பம்பாயிலிருந்து டில்லிக்கு வந்தான். அவனுக்கு 35 வயது. பூனாவிலுள்ள இந்து மகாசபை வாரப்பத்திரிகை யின் ஆசிரியனாகவும் பிரசுரகர்த்தனாகவும் இருந்தான். மிக உயர்ந்த ஜாதிப் பிரமாணன். பின்னால் அவனும், மதன்லாலும், மற்றும் ஏழு சதிகாரர்களும் ஒன்றாக விசாரிக்கப்பட்டனர். விசாரணை ஆறு மாதங் களுக்கு மேலாக நடந்தது. 'இந்துமதத்திற்கு எத்தனை அக்கிரமங்கள் இழைத்து வருகிறார்கள். இந்துமதத்திற்குள்ளே காந்தியும் வெளியே இஸ்லாமும் இருந்துகொண்டு இந்துசமுதாயத்துக்குத் தீங்கிழைக்க

இடங்கொடுத்து வந்தால், இந்துசமயத்தின் வருங்காலம் மோசமாகத் தானிருக்கும். அதற்கு அழிவுதான் நேரும். இப்படியெல்லாம் நான் ஆழ்ந்து சிந்தித்துக்கொண்டிருந்தேன். திடீரென்று காந்திக்கு விரோதமாகக் கடுமையான நடவடிக்கை எடுக்கத் தீர்மானித்தேன்' என்று சாட்சிக்கூண்டில் நின்று கோட்ஸே கூறினான். சிறப்பாக, காந்தியின் இறுதி உண்ணாவிரதத்தின் வெற்றி மதன்லாலுக்கும் கோட்ஸேவிற்கும் கோபமூட்டியது. மகாத்மாவின் செல்வாக்கைக் கண்டு அவர்கள் திகைத்துப்போனார்கள். அதைஎதிர்க்க அவர்களுக்கு வேறு ஆயுதங்கள் கிடைக்கவில்லை. இந்திய யூனியன் பாகிஸ்தானுக்கு 550,000,000 ரூபாய் கொடுத்ததே அவனுக்குக் கோபமூட்டியதாக லால் அவன் விசாரணையின்போது சொன்னான்.

போலீஸ் வரும்வரை படிக்காத வயதான மாது ஒருத்தி லாலைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டாள். லால் கைதானபின் கோட்ஸே பிர்லா மாளிகையைச்சுற்றி வட்டமிட்டுக்கொண்டிருந்தான். அவனுடைய காக்கிச் சட்டையின் பையில் ஒரு சிறிய கைத்துப்பாக்கியை மறைத்துவைத்திருந்தான்.

1948ஆம் ஆண்டு ஜனவரி 25ஆம் தேதி மாலைப் பிரார்த்தனைக்குப் பிரமாண்டமான கூட்டம் வந்திருந்தது. காந்தி மிகவும் மகிழ்ச்சி அடைந்தார். குளிர்காலமானதால் தரை குளிர்ந்தும் ஈரமாகவும் இருந்தது. இனிமேல் உட்காருவதற்கு வைக்கோல் பாயாவது, முரட்டுக் கதர்விரிப்பாவது கொண்டுவரும்படி காந்தி வந்திருந்தவர்களிடம் சொன்னார். இந்துக்களும் முஸ்லிம்களும் மறுபடியும் ஒற்றுமையாக இருப்பதைக் கேள்விப்பட மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது என்று அவர் கூறினார். 'பிரார்த்தனைக்கு வரும் ஒவ்வோர் இந்துவும், ஒவ்வொரு சீக்கியரும் இனிமேல் தங்களுடன் ஒரு முஸ்லிமைப் பிரார்த்தனைக் கூட்டத்திற்கு அழைத்துவந்து தங்களது சகோதர மனப்பான்மையைக் காட்டமுடியுமா?' என்று கேட்டார். கூட்டத்தில் பதுங்கிக்கொண்டிருந்த கோட்ஸே அதற்குச் சம்மதித்திருக்க முடியாது. அவனும் அவனோடு சேர்ந்த மற்ற சதிகாரர்களும் இந்து பிரார்த்தனைக் கூட்டத்திற்கு ஏன் முஸ்லிம்கள் வரவேண்டும் என்று விவாதித்தனர். இந்துமதத்தைச் சேர்ந்த மகாத்மாவால் ஏன் குரான் வாசிக்கப்பட வேண்டும்? காந்தியை ஒழித்துவிட்டால் முஸ்லிம்கள் பாதுகாப்பு இல்லாமல் போவார்கள். அப்பொழுது இந்துக்கள் சுதந்திரமாகப் பாகிஸ்தானைத் தாக்கி, மறுபடியும் இந்தியாவுடன் சேர்த்துக் கொள்ளலாம்.

கோட்ஸே ஆத்திரமாக இருந்தான். ஆனால், சரியான சமயத்திற்காகக் காத்திருந்தான். மந்திரிகள் காந்தியைப் பாதுகாப்பாளர்களை ஏற்றுக்கொள்ளச்சொல்லி வற்புறுத்திவந்தனர். பிரார்த்தனைக்கு

வருகிறவர்களைச் சோதித்துப்பார்க்கவேண்டுமென்று கூறினர். அந்த யோசனையை காந்தி ஏற்றுக்கொள்ள மறுத்தார்.

பிரதம மந்திரி நேருவும் துணைப் பிரதமர் பட்டேலும் பல விஷயங்களில் கருத்து வேறுபாடு உள்ளவர்கள். சுபாவத்திலும் அவர்கள் நேர் விரோதம். அவர்களுக்குள்ளிருந்த விரோத மனப் பான்மை காந்திக்குக் கவலையைக் கொடுத்தது. ஒரே மந்திரிசபையில் அவர்கள் இருவரும் இருக்கமுடியுமா என்று ஆச்சரியப்பட்டார். அவர் களில் ஒருவரை வைத்துக்கொண்டு அடுத்தவரை விலகுமாறு செய்ய வேண்டிய நெருக்கடி வரும்போல் தோன்றியது. இதுபற்றித் தீர்மானிக்கும் பொறுப்பை அவர்கள் அவரிடம் விட்டுவிட்டனர். காந்தி நேருவிடம் பற்று உடையவர். இந்துக்கள், சீக்கியர்கள், முஸ்லிம்கள் எல்லாரிடத்திலும் பாரபட்சமற்ற நட்பு நேருவுக்கு உண்டு என்று காந்திக்கு நன்ருகத் தெரியும். ஆனுல், பட்டேல் ராஜதந்திரி; திறமை யுள்ள நிர்வாகி. அவர் விலகினுல் அரசாங்கத்தின் திறமை குறைந்து விடும். ஆகையால், ஒருவரும் விலகக்கூடாது என்று காந்தி முடிவுசெய் தார். ஒருவருக்கு மற்றொருவரின் உதவி இன்றியமையாதது என்று காந்தி உணர்ந்தார். நேருவுக்கு ஆங்கிலத்தில், 'நீங்கள் இருவரும் சேர்ந்துதான் வேலை செய்யவேண்டும்' என்று காந்தி குறிப்பு எழுதி அனுப்பினுர். ஜனவரி 30ஆம் தேதி 4 மணிக்கு இந்தச் செய்தியை காந்தியின் வாயினுலே கேட்கப் பட்டேல் வந்தார். காந்தியின் இறுதி உணவு 4–30 மணிக்கு வந்தது. ஆட்டுப்பால், வேகவைத்ததும் வேகவைக்காததுமான காய்கறிகள், ஆரஞ்சுப்பழங்கள், இஞ்சி, புளித்த எலுமிச்சை, கற்ருழைச்சாறு கலந்த வெண்ணெய்ப் பச்சடி— இவைதான் அந்த உணவு.

காந்தி சாப்பிட்டுக்கொண்டிருக்கும்போதே அவர்கள் பேசினுர்கள். மணி ஐந்து அடித்தது. காந்தி நேரம் தவருதவர் என்பதை அறிந்த ஆபா அவருடைய நிக்கல்முலாம் பூசிய கைக்கடிகாரத்தைத் தூக்கி அவருக்குக் காட்டினுள். 'நான் போகவேண்டும்' என்று காந்தி பட்டேலிடம் சொல்லிவிட்டுப் பிரார்த்தனை மைதானத்திற்கு விரைவாக நடந்து சென்ருர். 500 ஆண்களும் பெண்களும் அவருக்காகக் காத்துக் கொண்டிருந்தனர். 'நான் இன்று 10 நிமிடம் காலம் தாழ்த்தி விட்டேன்' என்று ஆபாவிடமும் மனுவிடமும் சொன்னுர். அவர்கள் தோள்களில் கைகளைப்போட்டுக்கொண்டு சாய்ந்துகொண்டு நடந் தார். 'நான் காலம் தாழ்த்தி வருவதை வெறுக்கிறேன். ஐந்து அடிக்கும்போது நான் இங்கு இருக்கவேண்டும். அப்படிச் சொல்லிக் கொண்டே விரைவாக ஐந்து அடிகள் எடுத்துவைத்து நடந்தார். பிரார்த்தனை நடக்கும்போது அவர் வழக்கம்போல் உட்கார்ந்திருக்கும் மரமேடையை அடைவதற்குச் சிறிது தூரம்தான் இருந்தது.

மக்களுள் பெரும்பாலோர் எழுந்தனர். பலர் சுவருக்குப் பக்கத் ் இருப்பதற்காக முன்னே நகர்ந்துவந்தனர். அவருக்கு மிகவும் கத்திலுள்ளவர்கள் அவருடைய பாதங்களைத் தொட்டுவணங் றர்கள். காந்தி புன்முறுவல் பூத்துக் கைகளைக்கூப்பி, வழக்கப்படி ணங்கினர்.

கோட்ஸே முன்வரிசைக்கு நகர்ந்துவிட்டான். அவனுடைய க, பையிலிருந்த துப்பாக்கியின்மேலிருந்தது. அவனைத் தூக்குப் ாடுவதற்குமுன் நடந்த விசாரணையின்போது தனக்கு காந்தியிடம் ந்தவிதமான வெறுப்பும் கிடையாது என்று சொன்னான். 'நான் வரைச் சுடுவதற்குமுன் அவர் நன்றாயிருக்க வேண்டுமென்று ண்மையாகவே விரும்பினேன். மரியாதையுடன் அவரை வணங் னேன்' என்றான். அவன் மகாத்மா செல்லும் வழியில் நின்று ணங்கினான். காந்தி இன்னும் தாமதம் எதுவுமில்லாமல் பிரார்த் னையைத் தொடங்கவேண்டுமென்று நினைத்து, மனு அவனைப் க்கத்தில் தள்ளிவிட முயன்றாள். கோட்ஸே அவளைத் தள்ளிவிட்டு ந்திக்கு இரண்டடி முன்னால் நின்றுகொண்டு மும்முறை சுட்டான். ந்தியின் முகத்திலிருந்த புன்முறுவல் மங்கியது. கைகள் பக்கங் ரில் சாய்ந்தன. 'ஹே ராமா!' என்று முணுமுணுத்தார். அந்த டியே இறந்தார்.

அண்ணல் காந்தியடிகள் இறுதியாக உலகத்திற்கு விட்டுவிட்டுச் சன்ற பரம்பரைச் சொத்து 'அஞ்சாமை'.

அவர் கற்பித்த பாடம் 'உண்மை' நெறி!

அவருடைய போர்க்கருவி 'அன்பு' நெறி!

அவருடைய வாழ்க்கையே அவரது மாபெரும் நினைவுச்சின்னம்!

இப்பொழுது அவர் மனித இனத்தின் மாபெரும் தலைவர்!

பொருள் அட்டவணை

அகதி முகாம்கள், 231 - 232
அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி, 118, 172, 188, 215, 223
அட்லி, கிளமண்ட், 192 - 218
அடால்ஃப் ஹிட்லர், 172, 173, 179
அம்பேத்கார், டாக்டர் பீம்ராவ் ராம்ஜி, 145, 150, 151, 152
அன்னிபெசன்ட் அம்மையார், 11, 76
அஹிம்சை, 67, 86, 119, 123, 170, 173
அலெக்ஸாந்தர், லார்டு A. V., 101

ஆக்கிரமிக்கும் அரசாங்கங்களை எதிர்த்தல், 178
ஆசிரமும் துறவிகளும், 64
ஆசியா ரெஜிஸ்திரேஷன் சட்டம், 39
ஆசியா ரெஜிஸ்திரேஷன் சட்டத்திற்கு, எதிர்ப்பும் அதன் விளைவும், 39
ஆஸாத், மௌலானா, 115, 116, 185, 239, 240

இந்தியாவைத் தூய்மைப்படுத்துவதன் அவசியம், 91
இந்திய அரசாங்கம், 205
இந்திய அரசாங்கம் சமய சச்சரவுகளினால் பிளவுபடுகின்றது, 207
இந்தியப் பிரிவினை, 147, 195, 202 - 204, 217, 223, 229
இந்தியாவுக்குத் தேசீய விடுதலைத் திட்டம், 201
இந்திய தேசீய காங்கிரஸ், 68, 82, 118, 137, 159, 200, 204, 220, 223, 224
இந்து துறவறம், 15
இந்து முஸ்லிம் பிரச்னை, 91, 92, 96 - 100, 113
இந்தியாவில் முதல் வெற்றி, 69, 78
இந்தியாவிலுள்ள பிரிட்டிஷ் அரசாங்கம், 6, 174
இந்தியாவுக்கு உண்மையான சுதந்திரம் என்றால் என்ன, 60, 61
இந்துக் கொள்கைப்படி ஆத்மாவின் மறுபிறப்பு, 13
இயந்திரமயமாக்குதல், 104 - 107
இயேசு, 105
இரண்டாவது உலக யுத்தத்தில் இந்தியாவைச் சேர வைத்தது, 101
இரண்டாவது வட்டமேசை மகாநாடு, 133, 135
இராட்டின நூற்பு இயக்கம், 82, 89, 103, 106 [162
இளம் விதவைகள் பிரச்னை, 161,

உப்புச் சத்யாக்கிரகிகள் அடிபடுதல், 127 - 128
உப்புச் சத்யாக்கிரகத்தின் பயன், 129
உப்புச் சட்டத்தை மீறுதல் (ஏப்ரல் 6, 1930), 125
உப்பைச் சட்ட விரோதமாகக் காய்ச்சுதலும், வைத்திருத்தலும், 124 - 126

'எக்கானமிஸ்டு' பத்திரிகை, 195
எமெர்சன், ரால்ஃப் வால்டர், 42

ஏர்வாடா ஒப்பந்தம், 150 - 155

ஐக்கிய இந்தியா வேண்டுமென்று தூதுகோஷ்டி சிபார்சு, 203
ஐரோப்பா அறவியல் மதிப்பினை இழக்கிறது, 129
ஒற்றுமை, 91
ஒத்துழையாமை, 83, 84, 87, 169
கதர், 102
கத்தியவார் தீபகற்பம், 4
கர்மயோகி, 15, 200
கல்வி, 5 - 7, 16, 17
கல்வி, சமூகநல அபிவிருத்தி, 161
கலகங்கள், 79, 80, 86, 128, 129, 209, 210, 219, 225 - 226, 231, 235
காசி இந்து சர்வகலாசாலையைச் சேர்ந்த மத்தியக் கல்லூரி, 63
காட்டிஸ் லையனல், 22
காங்கிரஸ் நிர்வாகக் கமிட்டி, 216
காங்கிரஸ் முஸ்லிம் லீக் பிரதிநிதிகள் அடங்கிய நிர்வாக சபை, 192
காந்தி, கரம்சந்த் (தந்தை), 4, 8, 34
காந்தி, கஸ்தூரிபா (மனைவி), 5 - 6, 17, 25, 29, 30, 34, 50, 55, 127, 144, 153, 155, 164, 181, 189, 191
காந்தி, தேவதாஸ் (மகன்), 132, 142, 151, 164
காந்தி, ஹரிலால் (மகன்), 9, 17, 25, 164
காந்தி லட்சுமி (மருமகள்), 142
காந்தி, லட்சுமி தாஸ் (சகோதரர்), 18
காந்தி, மணிலால் (மகன்), 26, 128, 129, 164
காந்தி, மோஹன்தாஸ் கரம்சந்த் பூர்வீகம், 4 - 5
பிறப்பு, 4
குழந்தைப் பருவம், 5
சாத்வீகப் போராட்டம், 41, 56, 69, 70, 76, 78, 85, 119, 189
மரணம், 1, 245
கொள்கை, அதன் பொருள், 138
குடும்ப வாழ்க்கை, 5 - 7
உண்ணாவிரதங்கள், 77, 92 - 95, 148 - 149, 155, 156, 159, 190, 229, 235
காந்தி, புத்லிபாய் (அன்னை), 4
காந்தி, ராமதாஸ் (மகன்), 1, 28, 164
காந்தி, உத்தமசந்த் (தாத்தா), 18
காந்தியின் தலைமையில் இந்தியத் தலைவர்கள் வைஸ்ராயுடன் சரி சமானமாகப் பேசுதல், 131
காந்தியின் எதிரிகளுடைய உணர்ச்சி, 224 - 226
கான் அப்துல் காபர்கான், 1, 73
காம இச்சையைக் கைவிட்டது, 31, 34, 61
கிறிஸ்துவின் மலைப்பிரசங்கத்தை ஏற்றுக்கொண்டது, 171
கிராம முன்னேற்றத்தின் முக்கியம், 63 - 64
கிருபளானி, 115, 225, 235
கிருஷ்ணனைப்பற்றிய கதை, 12 - 13 [185, 211
கிரிப்ஸ், ஸ்டாஃபோர்டு, 8, 175,
குமாரி மேடலின் ஸ்லேடு, 115, 116, 127, 133, 154 [228
குர்ஷித் நவரோஜி, 177, 181, 189,
குரான், 96, 234
கூட்டுறவுப் பொதுப்பண்ணை, 46
கைத்தொழில்கள், 105, 106
கோட்ஸே, நாத்ராம் விநாயக் (கொலையாளி), 242, 243, 245
கோபாலகிருஷ்ண கோக்கலே, 48, 49, 62, 101

சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார், 76, 81, 175, 185, 192
சபதம், 9, 33, 82
சட்டப்படி சம அந்தஸ்திற்காகச் சண்டை, 24 - 28
சபர்மதி ஆசிரமத்தின் வர்ணனை, 60 - 65
சத்தியாக்கிரகம், 38, 42, 60
சர்ச்சில் (வின்ஸ்டன்), 131, 134, 174, 175, 185, 192
சர் எட்வின் மாண்டேகு, 72 - 75
சர் சர்வபள்ளி ராதாகிருஷ்ணன், 12
சர் ரெஜினல்டு மேக்ஸ்வெல், 176
சர் சாமுவேல் ஹோர், 146, 155
சர் ஸ்டாஃபோர்டு கிரிப்ஸ், 81, 175, 185, 201
சர் ஹேரி ஹேக், 137
சங்கைக்குரிய K. மத்தேயு சைமன், 167
சம்பரான், 68 - 71
சமயம், 84, 95, 101, 105, 137 - 139, 142, 166, 177
சாத்விகப் போராட்டத்தின் வெற்றி, 55
சார்லி சேப்ளின், 109
சார்ல்ஸ் ஃப்ரீயர் ஆண்ட்ரூஸ், 71, 94, 96, 161, 167
சிதை இருந்த இடமும், அதன் விபரமும், 1
சிறு வயதில் திருமணம் முடிப்பதைப்பற்றிய அபிப்பிராயம், 6
சிறைவாசம், 51, 52, 57
சுதந்திரத்துக்குத் தகுதியுள்ளவர்களாக தேச மக்களைச் சீர்திருத்துவது, 100
சுதந்திரக் கொடி ஏற்றியது, 120
சுபாஷ் சந்திரபோஸ், 118, 120, 136
சுய ஆட்சி, 99
சுய ஆட்சியும், சுய நம்பிக்கையுமுள்ள லட்சியக் கிராமங்கள், 109
சுயராஜ்யத்தின் பொருள், 60, 91, 102, 120, 136
திட்டம் (1930ஆம் வருஷம்), 121
துருக்கி, 82
தென் ஆப்பிரிக்கா இந்தியருக்கு ஒரு நிதி ஏற்படுத்தியது, 30
தென் ஆப்பிரிக்கா இந்தியாவின் சுதந்திர சாஸனம், 55
தென் ஆப்பிரிக்காவிலுள்ள இந்திய மக்கள் மீது ஐரோப்பியருக்கு இருந்த நிறத் துவேஷத்தைப்பற்றிப் பொதுக் கூட்டத்தில் பேச்சு, 21
தென் ஆப்பிரிக்காவில் வெற்றிக்குக் காரணங்கள், 56 - 57
தென் ஆப்பிரிக்கா இந்திய வேலை நிறுத்தக்காரர்களைப் பெருவாரியாகக் கைதுசெய்தல், 52
தென் ஆப்பிரிக்காவில் சத்தியாக்கிரகம், 48
தென் ஆப்பிரிக்காவில் சட்டப்படி சம அந்தஸ்துக்குச் சண்டை, 24 - 25
தென் ஆப்பிரிக்காவில் மக்கள் வாழ்க்கை நிலை, 23
தென் ஆப்பிரிக்காவில் மக்கள் எண்ணிக்கை, 22
தென் ஆப்பிரிக்காவில் இந்தியருக்குச் சட்டங்கள், ஒழுங்குகள், கட்டுப்பாடுகள், 23 - 24
பகத்சிங், 118
பகவத்கீதை (தெய்வீக நூல்), 12 - 13, 14, 15, 16, 31, 32, 42
பட்டேல், சர்தார் வல்லபாய், 83, 115, 117

படித்த இந்தியரின் எண்ணிக்கை அதிகரிக்கத் தொடங்கியது, 73
பற்றின்மை, 4
பஞ்சாப், 78, 230
பண்டித மாளவியா, 133
பர்தோலி சாத்வீகச் சட்டமறுப்பு இயக்கம், 85 - 86
பம்பாய், 13, 30, 85, 136, 191, 206
பலதேவ் சிங், 215
பலாத்காரத்தைக் கைவிடுதல், 84, [85
பாகிஸ்தான், 192, 193, 196, 197, 202, 215, 216, 217, 223, 232, 233, 235, 241
பார்ஸிகளுக்கு இருந்த அனுகூலங் [கள், 98
பாலகங்காதர திலகர், 75, 101
பால்ய விவாகத்தைப் பற்றிய கொள்கை, 6
பிரம்மச்சரியம் என்றால் என்ன, 34
பிரிட்டன், 172, 173, 174, 175
பிரிட்டிஷ் தூதுகோஷ்டியின் திட்டம், 203
பிரிவினை, 147, 195, 202 - 204, 217, 223, 229
பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம், 61 - 62
பிராங்கிளின் ரூஸ்வெல்ட் ஜனாதிபதி, 172, 185, 187
பிரஸாத், டாக்டர் ராஜேந்திர, 71, 115, 151, 239
பிளாவட்ஸ்கி அம்மையார், 11
புது டில்லி ஏகாதிபத்திய லெஜிஸ்லேட்டிவ் கவுன்சில், 76
பூனா, 90, 151, 155
பெர்னாட்ஷா, 133
பேச்சர்ஜி சுவாமி சத்தியம் செய்யச் சொன்னதற்குக் காரணம், 9
போதா, ஜெனரல் லூயி, 24
போதா ஸ்மட்ஸ் வாக்குறுதி, 49
ஃபோனிக்ஸ் பண்ணை, 31, 32
போயர் யுத்தம், 24, 26, 27
போர்பந்தர், 4, 18
போலக், ஹென்றி, 31, 37, 45
நட்டால் சகோதரிகளின் சேவைகள், 27
'நவஜீவன்' பத்திரிகை, 90
நவகாளி, 210, 211, 212, 213, 215, 217
நிலச்சுவான்கள் தாமாக நிலங்களைக் கொடுப்பதை ஆதரித்தல், 182
நேரடி நடவடிக்கை தினம், 206
நேரு, மோதிலால், 83, 85, 90, 115 116, 120
நேரு ஜவஹர்லால், 90, 98, 102, 112, 115, 118, 119, 120, 126, 130, 137, 148, 155, 160, 173, 176, 185, 186, 195, 200, 201, 206, 210, 215, 221, 222, 227, 244
மக்கள்தொகையைக் கட்டுப்படுத்தவேண்டிய அவசியம், 161, 162
'மகாத்மா' என்பதன் விளக்கம், 58
மகாதேவதேசாய், 12, 132, 135, 137, 190
மதன்லால் 242, 243
மனோதத்துவ மாற்றம், 158 - 159
மார்க்ரெட் சேங்கர், 161
மாரிட்ஸ்பர்க், 19, 20
மகமது அலி ஜின்னா, 72, 82, 91, 98, 99, 120, 191, 192, 193, 194, 195, 197, 204, 205, 206, 207, 210, 215, 219, 223
மணம், 5, 6
மனிதன் இயந்திரத்துக்கு அடிமையாவதால் உண்டாகும் ஆபத்து, 105 - 107

முதல் உலக யுத்தத்தின்போது அவருடைய கொள்கை, 67
முதல் பொதுக்கூட்டத்தில் மகாத்மாவின் பேச்சு, 21
முதல் உலக யுத்தத்தின்போது அவருடைய சேவை, 66
முஸ்லிம் லீக், 202, 205, 220
முகமது அலி, 76, 84, 94
முப்பத்து இரண்டு வருட நற்பணியின் புகழ்ற்ற முடிவு, 226
மூரியல் லெஸ்டர், 133
'யங் இந்தியா' பத்திரிகை, 12, 16, 87, 90, 91, 119, 124, 162
யோகி, 15, 16
ராம்சே மேக்டொனல்டு, 119, 120, 130, 137, 147, 148, 153, 155
ரவ்லட் சட்டம், 76
ரவீந்திரநாத் தாகூர், 58, 59, 63, 85, 121, 129, 149, 150, 155, 184
ரஸ்கின், ஜான், 31, 44
ராஜா, M.C., 15
ராஜ்குமார் சுக்லா, 68
ரீடிங்பிரபு, 87, 120, 135
ரோமெயின் ரோலண்ட், 44
லட்சுமணபுரி ஒப்பந்தம், 68, 71, 72
லண்டன் செல்தல், 9 - 17, 45, 55, 132, 133, 135
லண்டன் ஹைகோர்ட்டில் பாரிஸ்டராகப் பதிவுசெய்தல், 16
லண்டன் சர்வகலாசாலை, 16
லார்டு இர்வின், 119, 130, 132
லார்டு லின்லித்கோ, 73, 171, 187, 189, 190
லார்டு லோதியன், 185
லார்டு வில்லிங்டன், 136
லார்டு வேவல், 192, 206
வக்கீல் வேலை, 16, 17, 28
வங்காளம், 59, 118, 137
வருங்காலத்திற்காகப் பிரார்த்தனை, 228
வார்தா, 159
விடுதலைச் சின்ன உடை, 102
வேலைநிறுத்தம், 77, 78
ஷவுகத் அலி, 76, 84, 94
ஜப்பானியர், 172
ஜான் ஹேன்ஸ் ஹோம்ஸ், 124
ஜார்ஜ் S. K., 167
ஜைன மதம், 8
ஜோகனஸ்பர்க், 31, 38, 39
ஹண்டர் கமிஷன், 74, 79, 81
ஹண்டர் அறிக்கை, 79 - 81
ஹமீதியா மசூதியில் பதிவுப் பத்திரங்களை எரித்தல், 41
ஹமீதியா மசூதி, 41
'ஹரிஜன்' பத்திரிகை, ஹரிஜனங்கள், 115, 145, 148, 149, 150, 151, 152, 155, 158, 172, 185, 218
ஹெர்மன் காலன்பர்க், 46, 55

பிழை திருத்தம்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
56	31	இந்திய	இந்திரிய
217	58	சூழ்ந்திருந்தார்	ஆழ்ந்திருந்தார்